கலைஞரின்
கடிதங்கள்



45

12.03.2011 - முதல்
27.09.2011 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 45

12.03.2011 - 27.09.2011

தி.மு.க. அறக்கட்டளை
பொருளாளர்
அண்ணா நூலகம்
தேனாம்பேட்டை
சென்னை-18

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2252
894.811
கலை-கா



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
தலைமை அறிவாலயம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

“கலைஞரின் கடிதங்கள்” அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், “கலைஞரின் கடிதங்கள்” தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் “அணி”யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

"படமும் பாடமும்"
"மூலவர் மூவர் முரசொலி"

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?"
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! "யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!"

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
3537. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஐந்தாண்டு சாதனைகள்! (நேற்றைய தொடர்ச்சி)(2)	12-03-2011	23
3538. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஐந்தாண்டு சாதனைகள் (3)	13-03-2011	33
3539. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!(1)	14-3-2011	41
3540. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!(2)	15-03-2011	49
3541. நானும் உன்னுடன்தான் என்பதை மறந்துவிடாதே!	15-3-2011	56
3542. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் ஐந்தாண்டு சாதனைகள் (3)	16-03-2011	60
3543. நகராட்சி நிர்வாகத் துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!	17-3-2011	68
3544. நகராட்சி நிர்வாகத் துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!	18-3-2011	79

3545. நகராட்சி நிர்வாகத் துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!	19-03-2011	88
3546. கவசங்களையும் கேடயங்களையும் - என்றும் பிரிந்திடேன்!	19-3-2011	98
3547. நகராட்சி நிர்வாகத் துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!	20-03-2011	103
3548. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை ஐந்தாண்டு சாதனைகள்!	21-3-2011	110
3549. வருக! வருக! வரிப்புலி வரிசையே வருக!	22-3-2011	118
3550. தேவர் திருமகனின் பொன்மொழி என்ன?	23-3-2011	122
3551. நாடு வாழ நாம் புரிந்த சாதனைகள்!	28-03-2011	128
3552. பாரா உஷார்! பதுங்கி வருகிறது பணநாயகம்!	30-3-2011	141
3553. "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை"!	5-4-2011	144
3554. மதிப்பிற்குரிய மதிப்பெண் என்ன?	13-4-2011	149
3555. அன்றைக்கே எழுதியது; இன்றைக்கும் பொருந்துகிறதே!	17-4-2011	154
3556. பார்த்தும் மறந்தாரே "காரத்"!	21-4-2011	159
3557. பொது மன்னிப்பு கேட்க வேண்டியவர் யார்?	24-04-2011	163
3558. திரைப்படத்துறையும் - தி.மு.க.வும்!	30-04-2011	169

3559. கத்தியைத் தீட்டாதே; புத்தியைத் தீட்டு!	4-5-2011	175
3560. மேலோர் பாராட்ட; கீழோர் பழிக்கின்றாரே!	5-5-2011	180
3561. உனக்கும், எனக்கும் - உலகத் தமிழர்க்கும் பொன்னாள்!	7-5-2011	188
3562. “சில நேரங்களில் சில மனிதர்கள்!”	13-5-2011	196
3563. இறுதிப் போரில் நாம் வெல்வது திண்ணம்!	22-5-2011	200
3564. “ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை!”	3-6-2011	208
3565. இன்று நடப்பது; அன்றே நடந்ததுதான்!	11-6-2011	217
3566. அதுவே ஓர் ஆறுதல்தான்!	13-6-2011	222
3567. எடுகள் சில ஏங்குகின்றன; கோடுகள் வராதா என்று!	14-06-2011	230
3568. வென்றவர் சொல்வதெல்லாம் வேதம் ஆகுமா?	15-6-2011	235
3569. வருமா; எதிர்காலத்தில் மின் பற்றாக்குறை?	18-6-2011	241
3570. நம்பிக்கையின் ஒரு துளிதான் இந்தக் கடிதம்!	19-6-2011	248
3571. ஒன்று போதுமே; உதாரணம்!	30-6-2011	255
3572. “100” கருணாநிதிகளால் முடியாதுதான்!	19-7-2011	260

3573. அல்லல் நீங்கும்; தொல்லை குறையும்!	21-7-2011	265
3574. அமைதி வழி - அறவழி - அதுவே அண்ணா வழி!	28-7-2011	268
3575. அந்த நாள் முதல் இந்த நாள் வரையில்...!	30-7-2011	274
3576. உலகப் புகழ் உத்தமத் தமிழச்சி, பாரீர்!	31-7-2011	283
3577. மூன்று மாத ஆட்சிப் பட்டியலே மூச்சு முட்டுகிறதே!	3-8-2011	289
3578. உனக்கொரு நீதி; ஊருக்கொரு நீதியா?	5-8-2011	305
3579. வரியில்லா பட்ஜெட் என்பது வடிகட்டிய பொய்யல்லவா?	6-8-2011	312
3580. பரவாயில்லை; ஆடும் வரை ஆடட்டும்!	12-08-2011	319
3581. மந்தி அறியுமா; மலர்மாலை மணமும் அழகும்!	13-8-2011	327
3582. இனிய விழா; நமது இனத்தின் விழா!	25-08-2011	337
3583. அதிகாரம் இல்லை? அந்தநாள் ஞாபகம் இல்லையா?	1-9-2011	344
3584. அடிநாதமே; அறுக்கப்படுவதா?	8-9-2011	351
3585. அய்யோ பாவம்! அ.தி.மு.க. அமைச்சர்கள்!!	10-9-2011	357

3586. கழக அரசு கடைப்பிடித்த வழியில் காத்திடுக மூவர் உயிர்!	12-9-2011	364
3587. மாமியார் உடைத்ததும்; மருமகள் உடைத்ததும்!	13-9-2011	369
3588. கல்வி; கருகிடும் மொட்டாவதா?	14-9-2011	376
3589. எத்தனை காலமோ; இந்த ஏட்டிக்குப் போட்டி?	19-9-2011	382
3590. விரைந்தெழுவீர்; வெற்றிக்கனி பறித்திட!	24-9-2011	390
3591. அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்!	27-9-2011	396

3537. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஐந்தாண்டு சாதனைகள்!

(நேற்றைய தொடர்ச்சி)(2)

உடன்பிறப்பே,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கழக ஆட்சி கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் - திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம்

பிப்ரவரி 2006-ல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் 13.05.2006 வரையில் 3 னகோடி ரூபாயாக இருந்த செலவினம், ஜனவரி 2007-ல் ரூபாய் 111 கோடியாகவும், தற்போது ரூபாய் 5440.98 கோடிக்கு மேலாகவும் உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 66.29 கோடி மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு, 76,312 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் பயன்பெறுவோரில், 82 சதவீதம் பெண்கள் ஆவர். மேலும், 56 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் குடும்பங்களைச் சார்ந்த பயனாளிகள் ஆவார்கள். ஊரகப் பகுதிகளில் பெண் தொழிலாளர்களுக்கான ஊதியம் கணிசமாக உயர்ந்துள்ளது. மகாத்மாகாந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தினை தமிழ்நாடு சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்று உச்சநீதிமன்றம் பாராட்டியுள்ளதோடு, மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளது. தேசிய அளவில் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தியதில் சிறந்த 22 மாவட்டங்களில் கடலூர், சிவகங்கை மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்கள் இடம் பெற்று 2.2.2009 அன்று புதுடில்லியில் 2007-08-ம் ஆண்டிற்கான விருதைப் பெற்றுள்ளன. நாகப்பட்டினம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களைப் போன்ற 26 மாவட்டங்கள் தேசிய அளவில் 2008-09-ம் ஆண்டிற்கான

விருதினை 2.2.2010 அன்று புதுடில்லியில் பெற்றுள்ளன. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தேசிய விருதினை திருவண்ணாமலை மாவட்டம் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் செயல்பாட்டிற்கென 5098 புதிய பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

சமூக நீதியை மேம்படுத்தவும், சாதி சமயமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும் மக்கள் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டும் என்ற தந்தை பெரியார் அவர்களின் செய்தியை பரப்பவும், இந்த அரசு 1997-98 ஆம் ஆண்டு முதல் 145 சமத்துவ புரங்களை அமைத்துள்ளது. 2006இல் இத்திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தி, புதிதாக 95 சமத்துவபுரங்கள் அமைக்கவும்; புதிதாக கட்டப்படும் 95 சமத்துவபுரங்கள் மற்றும் ஏற்கெனவே கட்டப்பட்ட 145 சமத்துவபுரங்களின் நுழைவாயிலிலும் தந்தை பெரியாரின் திருவுருவச் சிலைகளை நிறுவிடவும் திட்டமிடப்பட்டது. மொத்தம் 240 சமத்துவபுரங்களில் இதுவரை 210 சமத்துவபுரங்கள் திறக்கப்பட்டுள்ளன; எஞ்சிய சமத்துவபுரங்களின் கட்டுமானப் பணிகளும் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

2010-2011ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு குடியிருப்பையும் மத்திய அரசு வழங்கும் 33 ஆயிரத்து 750 ரூபாயுடன், தமிழக அரசு வழங்கும் 26 ஆயிரத்து 250 ரூபாயையும் சேர்த்து, 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி அலகுத் தொகை நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு குடியிருப்புக்கு தமிழக அரசு வழங்கும் நிதி 26 ஆயிரத்து 250 ரூபாய் என்பதில், மேலும் 15 ஆயிரம் ரூபாய் கூடுதலாகச் சேர்த்து, 41 ஆயிரத்து 250 ரூபாய் என உயர்த்தி வழங்கப்படுமென 27.8.2010 அன்று சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் அறிவித்தபடி, ஆணை பிறப்பிக்கப்பட்டு, ஒவ்வொரு குடியிருப்பும் 75 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு தமிழக அரசு வழி வகுத்தது.

2006ஆம் ஆண்டுக்குப் பின் இத்திட்டத்தின் கீழ், 2,337 கோடியே 42 இலட்சம் ரூபாய்ச் செலவில் 4 இலட்சத்து 26 ஆயிரத்து 527 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இவற்றோடு, 79 ஆயிரத்து 481 கச்சா வீடுகள் 113 கோடியே 22 இலட்சம் ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டுள்ளன.

2007-2008 முதல் இவ்வரசால் தொடங்கப்பட்ட

இத்திட்டத்தின்கீழ் பல ஆண்டுகளாக இம்மாநிலத்தில் பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையிலிருந்த ஏறத்தாழ 22,000 ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிகள் மற்றும் 4,500 நடுநிலைப் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள அரசு ஆணையிட்டு; 24 ஆயிரத்து 649 பள்ளிகளில் 353 கோடியே 11 இலட்சம் ரூபாய்ச் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நமக்கு நாமே திட்டத்தின்கீழ் 2007-2008 முதல் 106 கோடியே 42 இலட்சம் ரூபாய் மக்கள் பங்களிப்புடன் 239 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 8 ஆயிரத்து 132 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு; 7 ஆயிரத்து 254 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சாலைகள் - 13.5.2006-க்குப் பிறகு பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம், நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி, 12வது நிதிக்குழு மானியம் மற்றும் இதரத் திட்டங்களின்கீழ், 3 **ஆயிரத்து 854 கோடியே 29 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய்** மதிப்பீட்டில் 33,066 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைப்பணிகள் எடுக்கப்பட்டு; 29 ஆயிரத்து 235 கிலோ மீட்டர் நீளச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டு எஞ்சிய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

1.4.2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதால், சிறு கட்டடங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காகவும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்தவும், அவைகளை நீடித்து நிலைத்திருக்கக் கூடியதாக மாற்றவும் 2008-2009ஆம் ஆண்டு, "ஊரக கட்டமைப்புத் திட்டம்" என்ற புதிய திட்டம் 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் 380 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு அடிப்படை வசதிகளான சிமெண்ட் சாலைகள், தார் சாலைகள், மயான வசதி, தெரு விளக்குகள், கட்டடப் பணிகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2010-2011ஆம் ஆண்டில் 380 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 47 ஆயிரத்து 478 பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

2010-2011ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் ஊராட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கட்டடங்களை பழுதுபார்க்கவும், பராமரிக்கவும், புதுப்பிக்கவும் 100 கோடி ரூபாயினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி, 10 ஆயிரத்து 907 பணிகள் நடப்பாண்டில் எடுக்கப்பட்டு ஊராட்சிகள் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

உடன்பிறப்பே, தமிழக சட்டமன்ற உறுப்பினர்கள் தமது தொகுதி மக்கள் கோரும் மேம்பாட்டுத் திட்டங்களை அனுமதித்துச் செயல்படுத்துவதற்காக 1997ஆம் ஆண்டில் அன்றைய கழக அரசு தலா 25 இலட்ச ரூபாய் வீதம் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் அனுமதித்து சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதி மேம்பாட்டிற்கு பாடுபடும் வாய்ப்பை உருவாக்கியது. 2006-2007இல் 1 கோடி ரூபாயாக இருந்த இத்திட்ட நிதி படிப்படியாக உயர்த்தப் பட்டு, 2010-2011 ஆம் ஆண்டில் 1.75 கோடியாக இந்த அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 2006-க்குப்பின் 1727 கோடியே 25 இலட்சம் ரூபாய்ச் செலவில் 1,59,583 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 1 இலட்சத்து 50 ஆயிரத்து 263 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்றத் தொகுதி உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 570 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 18,500 பணிகள் மேற்கொள்ளப்பட்டு; 17,055 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

முழு சுகாதார இயக்கம் தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டமைக்காக 2006-2007 முதல் நான்காண்டுகளில் 2213 கிராம ஊராட்சிகளில் நிர்மல் கிராம் புரஸ்கார் விருதுகளைப் பெற்றன. இத்திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றிச் சாதனை படைத்ததில் 2007-2008இல் தமிழகம் இந்தியாவில் இரண்டாம் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டிலுள்ள 5 பிற்படுத்தப்பட்ட மாவட்டங்களில் மத்திய திட்டக் குழுவால் செயல்படுத்தப்பட்ட ராஸ்ட்ரிய சம்விகாஸ் யோஜனா, மத்திய ஊராட்சித் துறை அமைச்சகத்திற்கு 2006-2007இல் மாற்றப்பட்டு அத்திட்டம் பிற்படுத்தப்பட்ட

பகுதிகளுக்கான மான்யநிதி என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் பல்வேறு பகுதிகளின் வளர்ச்சியில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைச் சரிசெய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அத்தியாவசியமான பணிகளை உள்ளாட்சி நிறுவனங்கள் சிறப்பாக செயல் ரீதியாக நடைமுறைப்படுத்தத்தக்கவகையில் இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பின் தங்கிய மாவட்டங்களாகக் கருதப்படும். கடலூர், நாகப்பட்டினம், திருவண்ணாமலை, சிவகங்கை, திண்டுக்கல், விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2007-2008ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 108 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெற்று பல்வேறு அடிப்படை வசதிகள் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

உதவி இயக்குநர் முதல் மக்கள் நலப் பணியாளர்கள் பணியிடம் வரை இருந்த 17,819 காலிப்பணியிடங்களை நிரப்பிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு; 17,549 காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. மீதமுள்ள 270 காலிப் பணி இடங்களை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் - வேலை வாய்ப்பகம் மூலம் விரைவில் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சித் துறையில் தொழில்நுட்பப் பிரிவை வலுவூட்டும் வகையில் மொத்தம் 3380 அலுவலர்கள் தொழில்நுட்பப் பிரிவில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் முழு நேர ஊராட்சி உதவியாளர்களுக்கு ரூ.1300-20-1500-25-2000 என்ற காலமுறை ஊதியத்தையும், பகுதிநேர ஊராட்சி எழுத்தர்களுக்கு ரூ.625-10-725-20-925 என்ற காலமுறை ஊதியத்தையும் 5.12.2006 அன்று அரசு ஆணையிட்டுள்ளது. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள் நிலை 2 பணியிடங்களை ரூ.2500-5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.500 தர ஊதியத்துடன் ஊராட்சி உதவியாளர் பணியிடங்களாக உயர்த்தி 1.6.2009 அன்று அரசு ஆணை பிறப்பித்தது. ஏறத்தாழ 11,000 இரண்டாம் நிலை ஊராட்சி உதவியாளர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்துறையின் 2,544 விரிவாக்க அலுவலர் பணியிடங்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் அதற்கு இணையான பதவிகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களில் 50 சதவீதம் மக்கள் நலப் பணியாளர்களை ஈர்த்துக் கொள்ளுதல் குறித்து 27.11.2008 அன்று ஆணை வெளியிடப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் இதுவரை 280 அலுவலக உதவியாளர் பணியிடங்களும், 56 இரவுக் காவலர் பணியிடங்களும் மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டுள்ளன.

385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு புதிதாக ஈப்பு ஓட்டுநர் பணியிடங்களைத் தோற்றுவித்து 12.05.2008 அன்று ஆணை வெளியிடப்பட்டுள்ளது. 385 ஓட்டுநர் பணியிடங்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகவும் மற்றும் பதிவறை எழுத்தர் - அலுவலக உதவியாளர் - இரவுக் காவலர் ஆகிய பிரிவுகளிலிருந்து பதவி உயர்வின் மூலமாகவும் நிரப்பப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி - விசைப் பம்பு இயக்குபவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், மக்கள்நலப் பணியாளர்களுக்கு 2007-08 ஆம் ஆண்டு முதல் போனஸ் தொகையாக ரூபாய் 300லிருந்து ரூபாய் 1,000/- ஆக உயர்த்தி வழங்க 12.1.2009இல் ஆணையிடப்பட்டுள்ளது. அதேபோல, 2008-09-ம் ஆண்டிற்கும் 2009 -2010ஆம் ஆண்டிற்கும் தலா 1000 ரூபாய் வீதம் போனஸ் வழங்கப்பட்டுள்ளது.

முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் டிஸ்மிஸ் செய்யப்பட்ட 12,653 மக்கள் நலப் பணியாளர்களும், 1.6.2006 முதல் மீண்டும் இந்த அரசினால் நியமனம் செய்யப்பட்டனர். மக்கள் நலப்பணியாளர்கள் ரூ.950/- தொகுப்பூதியமாகவும், ரூ.50/- பயணப் படியாகவும் பெற்று வந்தனர். இவர்கள் 1.6.2009 முதல் ரூ.2500-5000 மற்றும் ரூ.500 தர ஊதியம் என்ற காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வரப்பட்டனர். அரசின் சிறப்பான நடவடிக்கை மூலம் ஏறத்தாழ 12,653 மக்கள் நலப் பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

2007-08 ஆம் ஆண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் (ஊராட்சி), உதவி இயக்குநர்கள் (தணிக்கை) ஆகியோர்களுக்கு 121 புதிய ஈப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

2007-2008-ம் ஆண்டு, ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்படைக்கப்பட்ட வருவாய் திட்டக் கூறு நிதியிலிருந்து ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு 385 புதிய ஈப்புகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் புதியதாக தோற்று விக்கப்பட்ட உட்கோட்ட உதவி செயற் பொறியாளர்களுக்கு 664 ஈப்புகள் வழங்கப் பட்டுள்ளன. மேலும், மொத்தம் 1170 ஈப்புகள் 52 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் வாங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கானப் பல்வேறு மேம்பாட்டிற்கான திட்டங்களைச் சிறப்பாகவும் நல்ல ஒருங்கிணைப்புடனும் செயல்படுத்தும் வகையில் சூலை 2006 முதல் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 31.12.2010வரை 75,66,497 மகளிரை உறுப்பினராகக் கொண்ட 4,88,970 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு உள்ளன. இவர்களின் மொத்த சேமிப்பு ரூபாய் 2658 கோடி ஆகும். இவற்றுள் 26,94,682 மகளிரை உறுப்பினராகக் கொண்ட 1,75,493 புதிய சுயஉதவிக் குழுக்கள் சூலை 2006-க்குப்பின் உருவாக்கப்பட்டன.

இதுவரை, சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படாத பகுதிகளில் குழுக்கள் அமைப்பதும் சுய உதவிக் குழுவில் இதுவரை இணைக்கப்படாத மகளிரை குழுக்களில் இணைப்பதும் அரசின் குறிக்கோளாக உள்ளது. மேலும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் அனைத்துப் பெண்களையும் குறிப்பாக விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள் ஆகியோரை சுய உதவிக் குழுவில் சேர்ப்பதே முக்கிய நோக்கமாகும்.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு 2006-07 மற்றும் 2007-08 ஆம் ஆண்டுகளில் புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் 43,304 சுயஉதவிக் குழுக்கள் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தில் வேலை செய்யும் பெண் தொழிலாளர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. 23,886 சுயஉதவிக் குழுக்கள்; குழுக்கள் அதிகம் அமைக்கப்படாத கிராம ஊராட்சிகளிலும், 41,373 சுயஉதவிக் குழுக்கள் நகர்ப்புறத்தில் குடிசைப்பகுதிகளில் வசிப்பவர்களைக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளன.

2006-07ஆம் ஆண்டு முதல், நகர்ப்புற சுயஉதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, 5 ஆண்டுகளில் 96,699 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 96.70 கோடி சுழல்நிதி மானியமாக வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் பொதுவாக 25,000 முதல் 30,000 சுய உதவிக் குழுக்களுக்கு மட்டுமே சுழல்நிதி வழங்கப்பட்டது. ஆனால்,

2008-09ஆம் ஆண்டில் அதுவரை சுழல்நிதி பெறாத தகுதி வாய்ந்த ஒன்றரை இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல்நிதி மானியம் வழங்க அரசு முடிவு செய்து அதன்படி, சுழல் நிதி மானியம் பெறாத, அனைத்து 1,50,000 சுயஉதவிக் குழுக்களுக்கும் வங்கிக் கடனுடன் 150 கோடி ரூபாய் சுழல்நிதி வழங்கப்பட்டது.

2009-10 ஆம் ஆண்டில் 70,000 சுய உதவிக் குழுக்களுக்கு 70 கோடி ரூபாய் சுழல்நிதி மானியமாக வழங்க அனுமதி தந்து, 69,000 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்பட்டது.

2010-11 ஆம் ஆண்டில் 50,000 ஊரக சுயஉதவிக் குழுக்களுக்கும் 20,000 நகர்ப்புற சுயஉதவிக் குழுக்களுக்கும், சுழல்நிதி மானியம் வழங்க 70 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டு; இதுவரை, 63,967 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்பட்டுள்ளது.

30.9.2010 அன்றைய அளவில், சுயஉதவிக் குழுக்களுக்கு 1989ஆம் ஆண்டு முதல் ரூபாய் 9521.37 கோடி வங்கிக்கடனாக வழங்கப்பட் டுள்ளது. இதில் சூன் 2006-க்குப் பின் ரூபாய் 7756.13 கோடி வழங்கப்பட்டுள்ளது. இது வழங்கப்பட்ட மொத்தக் கடனில் 81 சதவீதமாகும்.

அரசின் முயற்சியினால் 25.3.2008 அன்று கூடிய மாநில அளவிலான வங்கியாளர்களின் குழுமம் சுயஉதவிக்

குழுக்களுக்குக் கடன் இணைப்பு வழங்கும்போது மானியம் நீங்கலாக பின்வரும் அளவில் கடன் தொகையினை வழங்கிட வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கியது.

முதல் இணைப்பு : சுய உதவிக் குழு ஒன்றிற்கு ரூ.50,000

இரண்டாவது இணைப்பு: சுயஉதவிக் குழு ஒன்றிற்கு ரூ.1,00,000

மூன்றாவது இணைப்பு: சுயஉதவிக் குழு ஒன்றிற்கு ரூ.1,50,000

நான்காவது மற்றும் பிந்தைய கடன் இணைப்புகள்: சுயஉதவிக் குழுக்களின் தேவையின் அடிப்படையில் உயர்ந்ததொகை.

இம்மாநிலத்தின் வரலாற்றில் முதன் முறையாக சுய உதவிக் குழுக்களுக்கு கடன் இணைப்பு வழங்க மாநில அளவில் இலக்கு நிர்ணயிக்கப் பட்டு முறையாகக் கண்காணிக்கப்படுகிறது.

2010-11 ஆம் ஆண்டில் 62 மாவட்ட அளவிலான பொருட்காட்சிகளும், 134 வட்டார அளவிலான பொருட் காட்சிகளும் நடைபெற்றது. இதில் மொத்த சுய உதவிக் குழுக்களும் தயாரித்த பொருட்களின் விற்பனைத் தொகை ரூ.34.88 இலட்சம் 2 மாவட்ட அளவிலும், 165 இலட்சம் 51 வட்டார அளவிலும் விற்பனைகள் செய்யப்பட்டன. மேலும், மாநில அளவில் 2 சுய உதவிக் குழு பொருட்காட்சி நவராத்திரி, கிறிஸ்துமஸ், பொங்கல் ஆகிய பண்டிகைகளில் நடைபெறும்.

சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் ரூ.15.33 கோடி செலவில் சுய உதவிக்குழுக்களின் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு நிரந்தர சந்தை வளாகம் கட்டப்பட்டு அதற்கு அன்னைதெரசா மகளிர்வளாகம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் இதைப்போல சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்குச் சிறந்த முறையில் ஊரகப் பகுதியில் ஒரு மாவட்டத்திற்கு மூன்று என்ற விகிதத்தில் 86 கிராம விற்பனை மையங்கள் ரூ. 12.90 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன.

2006-07 ஆம் ஆண்டில், பயிற்சிக்கு வருகை தரும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நாளைக்கு அளிக்கப்படும் பயிற்சித்தொகை ரூபாய் 7.50 லிருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஊக்குநர் மற்றும் பிரதிநிதிகளுக்கான பயிற்சித்தொகை ரூபாய் 20-ல் இருந்து ரூபாய் 45 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களையும், ஊராட்சி அளவிலான கூட்ட மைப்புகளையும் ஊக்குவிக்கும் வகையில் மாநில மற்றும் மாவட்ட அளவிலான மணிமேகலை விருதுகளை அரசு அறிவித்துள்ளது. மாநில அளவில் ஐந்து சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், 10 சிறந்த சுயஉதவிக் குழுக்களுக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட அளவில் ஒரு சிறந்த சுயஉதவிக் குழு கூட்டமைப்பு மற்றும் 3 சிறந்த சுயஉதவிக்குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு, அவற்றிற்கு இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. வட்டார அளவில் சிறப்பாக செயல்படும் ஒரு சுயஉதவிக் குழுவிற்கு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

2006-07 முதல் நான்கு ஆண்டுகளுக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

2009-10 ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருதுத் தொகையினை அரசு உயர்த்தியுள்ளது. மாநில அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான விருதுத் தொகை ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து ரூபாய் 3 இலட்சமாகவும், சிறந்த சுய உதவிக் குழுக்களுக்கான விருதுத் தொகை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சமாகவும் உயர்த்தப்பட்டு உள்ளது. மாவட்ட அளவில் சிறந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கான விருதுத் தொகை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் ஒரு இலட்சம் ஆகவும், சிறந்த சுயஉதவிக் குழுக்களுக்கான விருதுத் தொகை ரூபாய் 10 ஆயிரத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

(தொடர்ச்சி நாளை)

அன்புள்ள,

மு.க.

12-03-2011

3538. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை ஐந்தாண்டு சாதனைகள் (3)

உடன்பிறப்பே,

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் கழக ஆட்சி கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் - திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக் கிடையே ஒற்றுமை மற்றும் குழு உணர்வை உருவாக்கும் நோக்கத்தில் வட்டார மற்றும் மாவட்ட அளவில் பல்வேறு போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் நடத்த 2007-08 முதல் ஆண்டுதோறும் ரூபாய் 1.60 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இப் போட்டிகள் சுய உதவிக் குழுக்களுக்கிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

மகளிர் சுய உதவிக்குழுக்கள் சமுதாயத்தில் அங்கீகாரம் பெறவும், வங்கிகள் மற்றும் அரசுத் துறை நிறுவனங்களை எளிதில் அணுகி பயன் பெறவும், மகளிர் திட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு படிப்படியாக அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன.

2008-09ஆம் ஆண்டு 25,000 இளைஞர்கள் பயிற்சி பெறுவதற்காக ரூ.20 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், நோக்கியா, டி.வி.எஸ், மற்றும் ஐ எல் அண்டு எப் எஸ், போன்ற சிறந்த நிறுவனங்கள் மூலம் இதுவரை 40,123 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி அளித்துள்ளது.

2009-10 ஆம் ஆண்டு 25,000 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க உத்தேசித்து 31.3.2010 வரை 25,386 இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெற்று வருகின்றனர்.

2010-11ஆம் ஆண்டு 25,000 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க உத்தேசித்து 30.9.2010 வரை 14,134 இளைஞர்கள் தொழிற்பயிற்சி பெற்று வருகின்றனர்.

வாழ்ந்து காட்டுவோம் திட்டம் உலக வங்கி உதவியுடன் ரூ.717.00 கோடி செலவில் 6 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும் ஓர் ஆற்றலளிப்பு மற்றும் வறுமை ஒழிப்புத் திட்டமாகும். இத்திட்டம் 16 மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களிலுள்ள 2,509 ஊராட்சிகளில் அக்டோபர் 2006 முதல் 15 வட்டாரங்களில் உள்ள 578 கிராம ஊராட்சிகளில் முதற்கட்டமாகவும், ஏப்ரல் 2007 முதல் 15 வட்டாரங்களில் உள்ள 584 கிராம ஊராட்சிகளில் இரண்டாம் கட்டமாகவும், நவம்பர் 2008 முதல் 20 வட்டாரங்களில் உள்ள 635 கிராம ஊராட்சிகளில் மூன்றாவது கட்டமாகவும், பிப்ரவரி 2009 முதல் நான்காம் கட்டமாக 712 கிராம ஊராட்சிகளிலும் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூடுதலாக 50 வட்டாரங்களுக்குட்பட்ட 1661 கிராம ஊராட்சிகளில் இத்திட்டம் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. அத்துடன் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள ஊராட்சிகளில் இத்திட்டம் 2014 ஆம் ஆண்டுவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் இளைஞர்களை வளர்ச்சிப் பணிகளில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்தவும், அவர்களின் திறன்களை வளர்த்து வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு; புகழ்பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் உதவியுடன் 1,15,838 இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு 95,120 இளைஞர்கள் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இவைதவிர 24,352 இளைஞர்கள் தொழிற் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இளைஞர்களுக்கு தொழில் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு அளித்திட நோக்கியா, பாக்ஸ்கான், எம்.ஆர்.எப்., அசோக் லேலாண்ட், இன்டிமேட் பேஷன்ஸ் போன்ற புகழ்பெற்ற தொழில் நிறுவனங்களுடன் இத்திட்டம் தொடர்பு வைத்துள்ளது.

2,736 கிராம ஊராட்சிகளில் இளைஞர் துணை குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு வழங்கப்படும் நிதியில் 20 சதவீதம் இளைஞர் மேம்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டு; அதன்மூலம் இளைஞர்களை ஈடுபடுத்தி கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் பயனுள்ள செயல்பாடுகளைத் தொடங்கியுள்ளன. கல்வி மையங்கள்,

வேலைவாய்ப்பு ஆலோசனை மையங்கள், கிராம தகவல் மையங்கள், உடற் பயிற்சி கூடங்கள் ஆகியவை இந்த செயல் பாடுகளில் அடங்கும்.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் சுனாமி அவசரகால உதவித் திட்டம் (TEAP)

இத்திட்டம் 06.04.2005ல் தொடங்கப்பட்டது. எனினும் 13.5.2006 வரை 4.95 கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டிருந்தது. ஆனால் இத்திட்டம் 31.10.2009 அன்று நிறைவு பெற்றபோது 292.94 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளது. இத்திட்டம் மாநிலத்தின் 12 ஊரக கடலோர மாவட்டங்களில் 1602 குடியிருப்புகள் அடங்கிய 257 கடலோர கிராம ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ், சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி, பொருளாதார மேம்பாட்டு உதவி மாற்றுத் திறனாளிகள் சுயதொழில் தொடங்க மானிய உதவி ஆகியவை வழங்குவதில் இலக்கீடு 100 விழுக்காடு எய்தப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகளுக்கான நிதி உதவி 70,655 பேருக்கு 154 கோடியே 99 இலட்சத்து

49 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறனாளிகள் தங்களது வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வங்கிகளில் கடன் பெறுவது கடினமானதாக உள்ளது. கடலோர மாவட்டங்களில் உள்ள மாற்றுத் திறனாளிகள் ஒவ்வொருவருக்கும் 10,000/-ரூபாய் மான்யமாக அளித்து அதன் மூலம் தொடர் வருமானம் தரக்கூடிய ஒரு சுயதொழிலை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 34, 634 மாற்றுத் திறனாளிகளுக்கு ஏறத்தாழ 34.63 கோடி ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது.

கடலோர மாவட்டங்களில் உள்ள சுய உதவிக் குழுக்கள், மீனவர்கள், கைவினைஞர்கள், நெசவாளர்கள் போன்ற பல்வேறு பிரிவினருக்கும் தேவையான திறன் வளர்ப்பு பயிற்சி அளித்திடவும், உள்கட்டமைப்புகளை ஏற்படுத்தவும் 15.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகில் சுய உதவிக் குழுக்களுக்கென கட்டப்பட்டுள்ள ‘‘அன்னை தெரசா மகளிர்

வளாகம்" மற்றும் 6 திட்டங்கள் ஏறத்தாழ 26.38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கடல் பாதுகாப்பு பயிற்சித் திட்டத்தின் கீழ் மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு கடல் பாதுகாப்பு முறைகளில் ரூ.1.13 கோடி மதிப்பீட்டில் பயிற்சிகள் துவங்கப்பட்டு இதுவரை 31,959 மகளிருக்கும், 36,890 மீனவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

ஏழு கடலோர மாவட்டங்களில் உள்ள 93 மீனவர் சங்கங்களுக்கு 2.96 கோடி ரூபாய் நடைமுறை மூலதனம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் தென்னிந்திய மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு மூலம் வங்கிக் கடனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் வட்டிக் கடைக்காரர்களிடமிருந்து அதிக வட்டிக்கு கடன் பெறுவது தடுக்கப்பட்டு, இச்சங்கங்கள் சுயமாகச் செயல்பட வழிவகுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 5,000 மீனவர் சங்க உறுப்பினர்கள் நேரடியாகவும் சுமார் 20,000 மீனவர்கள் பயனாளிகளைச் சார்ந்தும் பயன்பெற்றுள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 4 நேரடி கொள்முதல் நிலையங்களும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 11 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களும் 1 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு அவை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

4.06 கோடி ரூபாய் செலவில் 11 கடலோர மாவட்டங்களில் 9 பால் குளிரூட்டும் நிலையங்கள், 37 பால் விநியோகிக்கும் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. மேலும் 160 பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டும் புதுப்பிக்கப்பட்டும் உள்ளன. இந்த தொழிலில் ஈடுபடும் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை 3,645 நபர்களுக்கு பால் உற்பத்தி மற்றும் கறவை மாடுகள் பராமரித்தல் குறித்த பயிற்சியும், 400 நபர்களுக்கு பால் மற்றும் பாலிலிருந்து தயார் செய்யப்படும் பொருட்கள் விற்பனை குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 160 பால் கூட்டுறவு சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு அவற்றிற்கு 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கைத்தறி ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் 250 நெசவாளர்களுக்கு 61.09 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திறன்வளர்ப்பு பயிற்சி மற்றும் அவர்களது கைத்தறிகளை மேம்பாடு செய்து புதுப்பித்தல், ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 8 பணி மையக் கட்டிடங்களில் சீரமைப்புப் பணிகள் முடிவுற்றுள்ளன.

விழுப்புரம் மாவட்டத்தில் 67.49 இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 1000 கைவினைஞர்கள் பயன்பெறும் கைவினைஞர் கிராமம் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

கடலோர ஊராட்சிகளில் சுமார் 699 கி.மீ. நீளத்திற்கு 610 சாலைப் பணிகள் 89 கோடி ரூபாய்ச் செலவில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன.

கடலோர ஊராட்சி மன்றக் கட்டிடங்களைப் புதுப்பித்தல், கூட்ட அரங்குகள் கட்டுதல், ஆகிய 196 பணிகள் 5 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

ஊரக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த தனிநபர் கழிப்பறை பயன்பாடு, தன் சுத்தம், சுகாதாரம் குறித்த 21 விழிப்புணர்வு விளம்பரப் படங்கள் ரூ.67.28 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன.

ராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கட்டாமல் விலகிய 2,687 வீடுகள் கட்டும் பணி சுமார் 65.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசின் மூலம் மேற்கொள்ளப்பட்டு 2,687 வீடுகளும் முடிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதிகளில் அடிப்படை வசதிகளான சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், தெரு விளக்குகள், பொதுக் கட்டிடங்கள், வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குதல் ஆகியவை சுமார் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொண்டு நிறுவனங்கள் வீடுகள் கட்டிய பகுதிகளில் அடிப்படை வசதிகள் ராஜீவ்காந்தி மறுவாழ்வுத் திட்டத்தில் 57.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

40.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 133 உட்புற சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், 5.49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5,495 சுகாதார கழிப்பறை வசதிகளும், 2.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாழ்வான நிலப்பகுதிகளில் மண் நிரப்பும் பணிகளும், 5.47 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தெருவிளக்குகள் மற்றும் வீடுகளுக்கு மின் இணைப்புகள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிவு பெற்றுள்ளன.

11 கடலோர மாவட்டங்களில் அலை ஏற்றத்திலிருந்து 0-200 மீட்டருக்குள் உள்ள எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள்,

1000 மீட்டருக்குள் உள்ள இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் மற்றும் மீனவர் குடியிருப்புத் திட்டங்களின்கீழ் அரசால் கட்டப்பட்ட 1.1.2006ல் 10 ஆண்டுகள் பழமையான வீடுகள் உட்பட ஏறத்தாழ 18,299 வீடுகளை ராஜீவ்காந்தி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.499.22 கோடி செலவில் மீளக் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இதுவரை, 17,094 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 1,205 வீடுகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

மேற்கண்ட வீடுகள் கட்டும் பகுதிகளில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட நெறிமுறைகளின்படி அடிப்படை வசதிகளான சிமெண்ட் சாலைகள், தார்ச் சாலைகள், குடிநீர் வழங்கல், தெரு விளக்குகள், குளம் சீரமைத்தல், மயானம் சீரமைப்பு, அங்கன்வாடி மையங்கள்/சமையல் கூடங்கள் கட்டுதல் போன்ற பணிகள் 68.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3,251 பணிகள் எடுக்கப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்வாதாரங்களை மீளப் பெறவும், பாதிப்படைந்த வீடுகளை மீளக் கட்டிடவும் தமிழ்நாடு அரசு உலக வங்கியின் தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவியுடன் அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசு, இத்திட்டத்தின் கீழ் கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் தொலைவிற்குள் உள்ள எளிதில் பாதிக்கக் கூடியவையாக அறியப்பட்ட வீடுகளை எதிர்காலத்தில் சுனாமி போன்ற பேரிடர்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் மீண்டும் கட்டித் தர முடிவு செய்துள்ளது. அதன் மூலம்

பேரிடலிருந்து மீளும் தன்மை கொண்ட கடலோர சமுதாயத்தை உருவாக்க வழி வகை செய்துள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்பந்தத்தில் தமிழக அரசும் உலக வங்கியும் 13.8.2009-ல் கையொப்பமிட்டுள்ளன.

அவசரகால சுனாமி மறுகட்டமைப்புத் திட்டத்தின்கீழ் இத்துறை பின்வரும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளது. (ETRP-VRCCP)

I. கடல் உயர் அலை ஏற்றத்திலிருந்து 200 மீட்டர் முதல் 1000 மீட்டர் வரையிலுள்ள கடலோரப் பகுதிகளில் உள்ள எளிதில் பாதிப்புக்கு உள்ளாகும் எனக் கண்டறியப்பட்ட ஏறத்தாழ 17,000 வீடுகளை மீளக் கட்டித் தருதல்.

II. அவசர காலத்தில் எளிதாக வெளியேறி தப்பித்து செல்லத் தேவையான வெளியேறும் சாலைகளை அமைத்தல். மேலும் வெளியேறும் சாலைகளில் பாதுகாப்பானப் பகுதியினைச் சென்றடைய ஏதுவாக வழிகாட்டுப் பலகைகள் அமைத்துத் தருதல்.

11 கடலோர மாவட்டங்களில் வருவாய்த் துறையினரால் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியல் மூன்றாம் நிலை எளிதாக்குநர்களாக நியமனம் செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள் மூலம் மறுஆய்வு செய்யப்பட்டனர். அதன்படி 15,056 வீடுகள் மீளக்கட்ட தகுதியுடையவைகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. 15,056 வீடுகள் புதியதாக கட்டுவதற்காக 157 தொகுப்புகளாக எடுக்கப்பட்டு இதுவரை 14,429 எளிதில் பாதிப்புக்குள்ளாகும் வீடுகள் அகற்றப்பட்டு, 13,070 வீடுகள் கட்டுமானப்பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்து வீடுகளும் திட்ட செயலாக்க காலமான டிசம்பர் 2011க்குள் கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உடன்பிறப்பே!

மாநில அரசிலும், மைய அரசிலும் பங்கு பெற்று மகத்தான தொண்டு புரிவதற்கு ஏற்றவர்களாக இளைஞர்களை உருவாக்கும் பாசறைகள் போல விளங்கிடும் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள், உறுப்பினர்கள் உதவியோடு இந்த அரசு துணை முதலமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின் அவர்களின் இடைவிடாத முயற்சிகளின் காரணமாக கிராமப்புறங்களில் சாலைகள்,

குடிநீர் வசதி, மின் வசதி, கல்வி வசதி, விளையாட்டு வசதி, போக்குவரத்து வசதி, சுகாதார வசதி, கால்நடை மருத்துவ வசதி போன்றவைகளையும் இன்னபிறவற்றையும் உருவாக்கி, "எல்லா வசதிகளும் எங்கும் உள்ளன" என்று சொல்லும் நிலையை ஏற்படுத்தியுள்ளது; தொடர்ந்து ஏற்படுத்தி வருகிறது என்பதனை கடந்த 5 ஆண்டுகளில் நீ அனுபவப் பூர்வமாக நன்கறிவாய்! வரவிருக்கின்ற இந்தப் பொதுத் தேர்தலின் போது மக்களிடம் செல்கின்ற நீ இந்தச் சாதனைகளைக் காட்டி தலை நிமிர்ந்து சென்று வாக்கு கேட்கலாம் அல்லவா?

அன்புள்ள,

மு.க.

13-03-2011

3539. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!(1)

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழக அரசு அமையும் போதெல்லாம் மக்கள் நல்வாழ்வுத் துறைக்குத் தனி முக்கியத்துவம் அளித்து, தமிழகத்தில் வாழும் மக்கள் அனைவர்க்கும், குறிப்பாக ஏழை எளிய நலிந்த பிரிவினர் அனைவர்க்கும் தரமான, உயரிய மருத்துவ வசதிகள் எளிதில் கிடைப்பதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் உருவாக்கப்படுகின்றன; பல்வேறு புதிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன. அந்த வகையில், 2006ல் இந்த அரசு அமைந்தபின் இந்திய மத்திய அரசும், இதர மாநில அரசுகளும் பாராட்டிப் பின்பற்ற விழைந்திடும் பல்வேறு மருத்துவ நலத்திட்டங்களைப் புதிது புதிதாக அறிமுகம் செய்து அவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்த அரசு எடுத்துவரும் தொடர் நடவடிக்கைகளின் பயனாக மக்கள் நல்வாழ்வுத் துறையில் தமிழகம் இந்திய அளவில் பல சாதனைகளை நிகழ்த்தி முன்னேற்றம் கண்டு வருகிறது. குடும்ப நலக் கருத்தடை அறுவை சிகிச்சைக்குப்பின் மரணம் ஏற்பட்டால், அக்குடும்பத்திற்கு இழப்பீடு வழங்கவும் 2006-07 ஆம் ஆண்டு முதல் குடும்பநலக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

நிதி ஒதுக்கீடு

இவ்வரசு பொறுப்பேற்றபிறகு மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2005-2006ஆம் ஆண்டு இந்தத் துறைக்கான நிதி ஒதுக்கீடு 1487 கோடி ரூபாய் என்பதற்கு மாறாக 2010-2011ல் நிதி ஒதுக்கீடு 3889 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது.

அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படும் மருத்துவர் காலிப்பணியிடங்களை உடனுக்குடன் இந்த அரசு நிரப்பி வருகிறது. வேலைவாய்ப்பகம் மற்றும் தமிழ்நாடு தேர்வாணையம் மூலம் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2006க்குப்பின், 7 ஆயிரத்து 438 மருத்துவர்கள்; 9 ஆயிரத்து 744 செவிலியர்கள்; 1,799 கிராம சுகாதார செவிலியர்கள், 703 மருந்தாளுநர்கள், 433 இரண்டாம் நிலை ஆய்வக நுட்புனர்கள், 129 மூன்றாம் நிலை ஆய்வக நுட்புனர்கள் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்யப்பட்டு தொகுப்பூதியத்தில் பணியாற்றி வந்த 1,249 மருத்துவர்கள், 5 ஆயிரத்து 478 செவிலியர்கள் உட்பட இதுவரை மொத்தம் 34 ஆயிரத்து 854 பேர் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்

மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள் “சுகாதார நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முன்மாதிரியாக விளங்குகிறது” என்று பாராட்டி, உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை 2009ஆம் ஆண்டு ஜூலை 23 அன்று தொடங்கி வைத்தார். ஏழை எளிய மக்களின் நலன் கருதி, இந்த அரசு செயல்படுத்திவரும் பல்வேறு மருத்துவ நலத் திட்டங்களில் பலராலும் பாராட்டப்படும் இந்தத் திட்டத்தில் ஒரு கோடியே 35 இலட்சம் குடும்பங்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. உயிருக்கு ஆபத்தான 51 நோய்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் உயர்தர தனியார் மருத்துவமனைகளில் இலவசமாகச் சிறப்புச் சிகிச்சைகள் அளிக்க உதவும் இத்திட்டத்திற்கான காப்பீட்டுத் தொகை முழுவதையும் கழக அரசே செலுத்துகிறது. இத்திட்டத்தில் 7.3.2011 வரை 2 இலட்சத்து 90 ஆயிரத்து 291 நோயாளிகளுக்கு 750 கோடியே 28 இலட்ச ரூபாய் செலவில் அங்கீகரிக்கப்பட்ட 702 மருத்துவமனைகளில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு அவர்கள் பயனடைந்துள்ளனர்.

'108' அவசர கால மருத்துவ ஊர்தி சேவைத் திட்டம்

கிராமப்புற ஏழை மக்களுக்கு அவசர காலங்களில் உடனடி மருத்துவ வசதி கிடைத்திட வேண்டும் என்பதற்காக "அவசரகால மருத்துவ ஊர்தி-108 சேவைத் திட்டம்", இ.எம். ஆர்.ஐ. என்னும் தனியார் நிறுவனத்துடன் இணைந்து அனைத்து மாவட்டங்களிலும் 24 மணிநேர இலவச சேவையாக 415 ஊர்திகளுடன் 365 நாட்களும் செயல்படுத்தப்படுகிறது. உலக வங்கி நிதி உதவியில் இந்த திட்டத்திற்கு மேலும் 31 கோடி ரூபாய் செலவில், 200 ஊர்திகளைக் கொண்டு விரிவாக்கப்படும். மொத்தம் 632 வாகனங்கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் செயல்படும். உடனடி மருத்துவ உதவி தேவைப்படும் அவசர காலத்தில் - குறிப்பாக தாய்மார்கள் பேறுகாலம், விபத்து நேரங்கள் ஆகிய வேளைகளில் தொலைபேசி எண் 108-ஐ சுழற்றினால் மருத்துவ உதவி தேவைப்படுவோர் இருக்குமிடம் தேடி ஏறத்தாழ 20 நிமிடங்களில் மருத்துவ ஊர்தி உரிய மருத்துவப் பணியாளர் களுடன் வந்து, முதலுதவி செய்து, அவர்களை ஏற்றிக் கொண்டு, அருகில் உள்ள அரசு மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவ மனையில் அவர்களை அனுமதித்து, தேவைப்படும் அவசர சிகிச்சைகளை உடனடியாக அளிக்க உதவுகிறது. அண்ணா பிறந்த நாளான 15.9.2008 அன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் 7.3.2011 வரை 8 இலட்சத்து 62ஆயிரத்து 576 நோயாளிகளை அரசு மருத்துவமனைகள் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அவசர சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆபத்தான நிலையிலிருந்த 34 ஆயிரத்து 407 உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளது. இவற்றில், 2,20,294 பிரசவங்களும் அடங்கும். இதுவரை 143.64 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம்

ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச்சத்து உட்கொள்ளவும், கருவுற்றிருக்கும் காலத்தில் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டவும் அவர்களுக்குத் தலா 6000 ரூபாய் நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம். ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு அவர்கள் கருவுற்ற ஏழாவது மாதத்தில் முதல் தவணையாக 3000 ரூபாயும்,

குழந்தை பிறந்தவுடன் இரண்டாவது தவணையாக 3 ஆயிரம் ரூபாயுமாக வழங்கும் இத்திட்டத்தில் இதுவரை 25 இலட்சத்து 76 ஆயிரத்து 612 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 1,389 கோடியே 42 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு, இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படுகிறது.

வருமுன் காப்போம் திட்டம்

கிராமப்பகுதி மற்றும் நகரப்பகுதிகளில், மக்களின் நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய சிகிச்சை அளிக்க ஏதுவாக வருமுன் காப்போம் திட்டம் 1997 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டது.

பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் கைவிடப்பட்ட இத்திட்டம் 30.12.2006 அன்று மீண்டும் தொடங்கப்பட்டு, 28.02.2011 வரை தமிழகம் முழுவதிலும் 19 ஆயிரத்து 272 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 1 கோடியே 81 இலட்சத்து 66 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளனர். தொடர்ந்து நடைபெற்றுவரும் இத்திட்டத்தின் மருத்துவ முகாம்களில் உயர் சிகிச்சைகள் தேவை எனக் கண்டறியப்படுபவர்களுக்கு "கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தில்" இலவச அறுவை சிகிச்சைகள் முற்றிலும் இலவச மாகவே அளிக்கப்படுகின்றன.

கண்ணொளி காப்போம் திட்டம்

கண்ணொளி காப்போம் திட்டத்தின்படி அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் 14 ஆயிரத்து 801 பள்ளிகளில் பயிலும் 6 முதல் 8-ஆம் வகுப்புப் படிக்கும் மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள். இந்தத் திட்டத்தில் 30 இலட்சத்து 4 ஆயிரத்து 749 மாணவர்களுக்கு உரிய மருத்துவ வல்லுநர்களுடனும், மருத்துவ சாதனங்களுடனும் கண் பரிசோதனைகள் செய்யப்பட்டு, அவர்களில் பார்வைக் குறைபாடு கண்டறியப்பட்ட

1 இலட்சத்து 60 ஆயிரத்து 903 மாணவ மாணவியர்க்கு இலவச கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 2010-2011 முதல் 6 மற்றும் 10-ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியர்க்கும் விரிவுபடுத்தப்பட்ட இத்திட்டம் 28.2.2011 வரை 39 இலட்சத்து 60 ஆயிரத்து 467 மாணவ மாணவியர்களுக்குப் பரிசோதனைகள் செய்து, 1 இலட்சத்து 70 ஆயிரத்து 803

மாணவர்களின் கண் குறைபாடுகளைக் கண்டறிந்து அவர்களில் 1 இலட்சத்து 2 ஆயிரத்து 779 மாணவர்களுக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

இளம் சிறார் மற்றும் பள்ளிச் சிறார் இருதய பாதுகாப்புத் திட்டம்

ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த சிறார்கள் மற்றும் பள்ளி மாணவர்களை இதய நோய்களிலிருந்து காத்திட, "இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம்"

2007-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இருந்தும், பள்ளி மாணவர்களுக்காக "பள்ளிச் சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம்" 3.6.2008 முதற்கொண்டும் செயல்படுத்தப்படுகின்றன. இந்த இரண்டு திட்டங்களின்கீழும் புகழ்பெற்ற 27 தனியார் மருத்துவமனைகளில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டங்களின் கீழ், சென்னை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் இதுவரை 1,800 குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சைகள் இலவசமாகச் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள் அல்லாமல், வறுமைக் கோட்டிற்குக் கீழ்வாழும் குழந்தைகளுக்கு உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 4,700 குழந்தைகளுக்கு இலவசமாக அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது.

கலைஞர் காப்பீட்டுத்திட்டம், இளம்சிறார் மற்றும் பள்ளி சிறார் இருதய பாதுகாப்புத்திட்டம் ஆகிய அனைத்து திட்டங்களையும் உள்ளடக்கி இதுவரை இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ள குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 9,800 ஆகும்.

இரண்டு முன்னோடித் திட்டங்கள்

இருதய நோய் தடுப்புத் திட்டம்

சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் கடந்த 3 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்படும், "இருதய நோய் தடுப்புத் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட ஏறத்தாழ 8 இலட்சம் மக்களுக்கு விருதுநகர் மாவட்டத்திலும், ஏறத்தாழ 5 இலட்சம் மக்களுக்கு

சிவகங்கை மாவட்டத்திலும் உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் குறித்த பரிசோதனைகள் செய்யப்பட்டு இதய நோய் வராமல் தடுக்கும் வாழ்க்கை நடைமுறைகள் பற்றிய ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் இதய நோய் உள்ளவர்களுக்கு உரிய சிகிச்சைகளும் அளிக்கப்படுகின்றன. உலகவங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் தமிழகத்தின் இதர மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது.

தஞ்சாவூர் மற்றும் தேனி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்ட, "கருப்பை வாய் புற்றுநோய் தடுப்புத் திட்டம்" எனும் மற்றுமொரு முன்னோடித் திட்டம் 100 கோடி ரூபாய்ச் செலவில் எல்லா மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு மாநில நலவாழ்வுச் சங்கம் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் வீடு வீடாகச் சென்று 30 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் உள்ளதா என்பது குறித்து, சுகாதார ஆய்வாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள் ஆகியோரைக் கொண்டுபரிசோதனை செய்து சிகிச்சை வழங்க வழிவகை செய்யும் "நலமான தமிழகம்" என்ற புதுமையான திட்டம் 26.11.2010 அன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் போன்றவை இருப்பது கண்டறியப்பட்டால் அவர்களுக்கு ஆரம்ப சுகாதார நிலையங்களில், சிகிச்சைகள் அளிக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. இதுவரை 45,982 முகாம்கள் நடைபெற்றுள்ளன. இதில் 21 இலட்சத்து 75 நபர்கள் பங்கேற்றனர். 3.18 இலட்சம் இரத்த அழுத்த நோயாளிகளும், 2.90 இலட்சம் சர்க்கரை நோயாளிகளும், 1.82 இலட்சம் பேர்களில் இரண்டு நோய்களும் பாதிக்கப்பட்டவர்களிடம் கண்டறியப்பட்டு, ஆக மொத்தம் 7.90 இலட்சம் பேர்களை ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே சிறப்பாகச் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

கிராமப்புற மக்களுக்கு எல்லா நேரத்திலும் மகப்பேறு உதவிகள் இலவசமாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தமிழகத்தில்

உள்ள 1,589 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் 24 மணிநேர பிரசவ சேவைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் மூன்று செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த நான்கரை ஆண்டுகளில் தேசிய ஊரக நலவாழ்வு இயக்கத்தின் நிதியில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் கட்டமைப்புகள் மற்றும் அறுவை அரங்குகள் வலுப்படுத்தப்பட்டு; நவீன மருத்துவக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த அரசு எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளால், ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து தற்போது மூன்று மடங்கிற்கு மேலாக அதிகரித்துள்ளது. இதன் காரணமாக தனியார் மருத்துவமனைகளில் நிகழும் பிரசவங்களின் எண்ணிக்கை கணிச மாகக் குறைந்து வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் 2005-06ஆம் ஆண்டில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடந்த பிரசவங் களின் எண்ணிக்கை 82 ஆயிரத்து 532 மட்டுமே. ஆனால், இந்த எண்ணிக்கை 2009-10ஆம் ஆண்டில் 2 இலட்சத்து 98 ஆயிரத்து 253 ஆக உயர்ந்துள்ளது. 2010-11ஆம் ஆண்டில் பிப்ரவரி மாதம் முடிய 2 இலட்சத்து 55 ஆயிரத்து 877 பிரசவங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 10 இலட்சத்து 49 ஆயிரத்து 988 பிரசவங்கள் நிகழ்ந்துள்ளன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களில் அதிக அளவில் பிரசவங்களும், சிசேரியன் அறுவை சிகிச்சையும் நடைபெறுகின்றது. 2009-10ஆம் ஆண்டில் 2,694 சிசேரியன் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. 2010-11ஆம் ஆண்டில் பிப்ரவரி-2011 வரை 4,363 சிசேரியன் அறுவை சிகிச்சைகள் நடந்துள்ளன. இதுவரை கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் 8,708 சிசேரியன் அறுவை சிகிச்சைகள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்தம் அளிக்கும் வசதி இல்லாமல் இருந்தது. தற்போது, இரத்தம் சேமித்து வைக்கும் வசதிகளையும் ஏற்படுத்திட ஆணையிட்டு; இதுவரை, 255 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரத்த சேமிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்நோயாளிகளுக்கு சுத்தமாக சலவை செய்து துணிகள் வழங்க 9 கோடியே 66 இலட்ச ரூபாய்ச் செலவில் சலவை இயந்திரங்கள்

வழங்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் பெண்கள் ஆகியோர்க்குத் தினமும் மூன்று வேளை உணவு, மூன்று நாட்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. 15.9.2008இல் தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில் 28.2.2011 வரை 20 இலட்சத்து 94 ஆயிரத்து 23 தாய்மார்கள் பயனடைந்துள்ளனர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்பிணிப் பெண்களுக்குக் கர்ப்பகாலச் சர்க்கரை நோய் உள்ளதா எனப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிப்பதும் தமிழகத்தில் மட்டும்தான்.

கிராமப்பகுதி மக்களுக்கு எளிதில் மருத்துவ வசதிகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக 2006க்குப் பின் 66 கோடியே 42 இலட்ச ரூபாய்ச் செலவில் 166 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி நாளை)

அன்புள்ள,

மு.க.

14-3-2011

3540. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!(2)

உடன்பிறப்பே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் கழக ஆட்சி கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் - திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

மேம்படுத்தப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனை கட்டாயம் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் 104 கோடியே 53 இலட்ச ரூபாய் செலவில் கடந்த 5 ஆண்டுகளில் 165 ஆரம்ப சுகாதார நிலையங் களில் கூடுதல் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு; 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மேம்படுத்தப் பட்டுள்ளன; நவீன மருத்துவக் கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார நிலையங்களின் செயல்பாடு களை ஊக்கப்படுத்தி ஆதரிக்கும் நோக்கத் துடன், மாவட்ட நலவாழ்வு சங்கங்கள் வழியாக 16 கோடியே 8 இலட்ச ரூபாய்ச் செலவில் 213 ஆரம்ப சுகாதார நிலையங்கள் பழுதுபார்க்கப் பட்டு கர்ப்பிணிகள், பிரசவித்த தாய்மார்கள் தங்கிச் சிகிச்சை பெறும் வார்டுகள், பிரசவ அறைகள், அறுவை அரங்குகள் ஆகியவைகள் புதுப்பிக்கப்பட்டு அவை விரிவுபடுத்தப் பட்டுள்ளன. 20 கோடியே 38 இலட்ச ரூபாய்ச் செலவில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நடப்பு நிதிஆண்டில் மேலும் 300 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 18 கோடி ரூபாய் செலவில் கட்டுமானப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. சொந்தக் கட்டடங் கள் இல்லாத 20 ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கு 4 கோடி ரூபாய்ச் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங் களுக்கும் 5 கோடியே 74 இலட்ச ரூபாய் செலவில் கணினிகள் வழங்கப்பட்டு; இணைய தளம் வாயிலான தகவல்கள் தினந்தோறும் பெறப்படுவதுடன் ஆரம்ப சுகாதார நிலையம் எவ்வாறு செயல்படுகிறது என்பதும் கண் காணிக்கப்படுகின்றன. அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் தொலைபேசி இணைப்புகளும், கிராம சுகாதார செவிலியர்கள் அனைவருக்கும் செல்போன்களும் வழங்கப் பட்டு; கிராம மக்கள் அவசர காலங்களில் எளிதில் தொடர்பு கொண்டு உரிய சிகிச்சைகள் பெறவும் வகை செய்யப்பட் டுள்ளது. காணொலி காட்சி அரங்கு (ஏனைநடி ஊடிகேநசநஉந) மூலமாக நேரடியாக மாவட்ட அலுவலர் களுடன் தொடர்பு கொண்டு துறை செயல் பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நடமாடும் மருத்துவக் குழுக்கள்

ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு நடமாடும் மருத்துவக் குழு என்ற அளவில் 385 நடமாடும் மருத்துவக் குழுக்கள் 37 கோடியே 18 இலட்ச ரூபாய்ச் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மருத்துவக் குழுவிற்கும் ஒரு வாகனம் வழங்கப்பட்டுள்ளது. மருத்துவர், செவிலியர், உதவியாளர், ஓட்டுநர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இக்குழு தொலைதூரக் கிராமங்களுக்குச் சென்று, அங்கு வாழும் மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சைகள் அளித்து வருகிறது. 28.02.2011 வரை 3 இலட்சத்து 98 ஆயிரத்து 800 முகாம்கள் நடத்தப்பட்டு, 2 கோடியே 74 இலட்சத்து 8 ஆயிரத்து 896 பேர் பயனடைந் துள்ளனர்.

மருந்துகள்

ஐந்து ஆண்டுகளில் ரூ.1,282 கோடி மதிப்பிலான தரமான மருந்துகளை வாங்கி அரசு மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கி மக்கள் பயனடைந் துள்ளனர்.

நவீன மருத்துவக் கருவிகள்

600 கோடி ரூபாய்க்கும் மேலான செலவில், புகழ்வாய்ந்த தனியார் மருத்துவ மனைகளுக்கு இணையாக எம்.ஆர்.ஐ. ஸ்கேன்கள், 64 கூறு சி.டி.ஸ்கேன், லித்தோஸ்ட்ராப்ஸி, கலர் டாப்லர், செமி ஆட்டோ அனலைசர், கோபால்ட் தெரபி,

லீனியர் ஆக்ஸலரேட்டர், பி.சி.ஆர். கருவி, டயாலிசிஸ் கருவி, கேத்லேப் போன்ற பல அதிநவீன மருத்துவக் கருவிகள் அரசு மருத்துவமனைகளுக்கும், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

புதிதாக அரசு மருத்துவக் கல்லூரிகள்

மருத்துவக் கல்லூரிகள் இல்லாத மாவட்டங்களில் அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட வேண்டும் என்னும் இந்த அரசின் கொள்கைக்கேற்ப தர்மபுரி, விழுப்புரம், திருவாரூர் ஆகிய மூன்று மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டுள்ளன. சிவகங்கை, பெரம்பலூர், திருவண்ணாமலை ஆகிய மூன்று மருத்துவக் கல்லூரிகள் இந்த கல்வி ஆண்டில் தொடங்கப்படவுள்ளன. மேலும், அடுத்த கல்வியாண்டில் கடலூர், விருதுநகர், திண்டுக்கல், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில், புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படவுள்ளன.

மைய அரசு 100 கோடி ரூபாயும், மாநில அரசு 54 கோடி ரூபாயும் வழங்கிட மொத்தம் 154 கோடி ரூபாய்ச் செலவில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை பல சிறப்புப் பிரிவுகள் கொண்ட உயர்தர மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட் டுள்ளது; இந்த மருத்துவமனையில் ஒரு செவிலியர் கல்லூரியும் நடப்பு ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.

மைய அரசின் நிதி உதவியுடன் 150 கோடி ரூபாய்ச் செலவில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையையும் பல சிறப்புப் பிரிவுகள் கொண்ட உயர்தர மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந்த மருத்துவமனையில் உள்ள மயக்க மருந்தியல் துறை, இந்தியாவில் உள்ள மிகப் பெரிய மயக்கவியல் துறைகளில் ஒன்றாகும். நடப்பு நிதி ஆண்டில் இத்துறை 2 கோடியே 60 இலட்சம் ரூபாய்ச் செலவில் உயர் மையமாகத் தரம் உயர்த்தப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இங்கு 28 கோடியே 64 இலட்ச ரூபாய்ச் செலவில் விபத்து சிகிச்சைப் பிரிவு ஒன்றைத் தொடங்கிக் கட்டடப்பணிகள் முடிவடைந்துள்ளது. விரைவில் இந்தப் பிரிவு செயல்படத் தொடங்கும்.

மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் மேம்பாடு

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையை 100 கோடி ரூபாய்ச் செலவில் மேம்படுத்திடத் திட்டமிடப்பட்டு கூடுதல் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெறுகின்றன.

கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை, செங்கல்பட்டு அரசு மருத்துவமனை, சென்னை அரசு பல் மருத்துவமனை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, இராயப்பேட்டை அரசு மருத்துவமனை, திருவல்லிக்கேணி அரசு கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை, எழும்பூர் அரசு மகப்பேறு மருத்துவமனை ஆகியவற்றில் 395 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

சென்னை மருத்துவக் கல்லூரிக்குப் புதிய கட்டடம், கூட்ட அரங்கம், மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குத் தங்கும் விடுதிகள் போன்றவை 76 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடப்படுவதையொட்டி, அம்மருத்துவ மனையில் 50 கோடி ரூபாய்ச் செலவில் அடுக்கு மாடிக் கட்டடம் கட்ட ஆணைகள் வெளியிடப் பட்டு கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளன. கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 12 கோடியே 82 இலட்ச ரூபாய்ச் செலவில் புற்றுநோய்ப் பிரிவு, தேனி நகரில் 10 கோடி ரூபாய்ச் செலவில் ஒரு சிறப்பு அரசு மனநல மருத்துவமனை, செங்கல்பட்டு அரசு மருத்துவ மனையில் புதிதாக ஒரு செவிலியர் பள்ளி ஆகியவை தொடங்கப்பட உள்ளன. விழுப்புரம், திருவாரூர் மாவட்ட மருத்துவமனைகள் ஏற்கனவே செயல்பட்டு வந்த கட்டடங்களில் செவிலியர் பள்ளி, நகர நல மையம் ஆகியவை நடப்பு ஆண்டில் தொடங்கிடவும் நடவடிக்கை கள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பல் மருத்துவ வசதி

கிராமப் பகுதி மக்களுக்குப் பல் தொடர்பான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் வசதிகள் 148 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

52 அரசு வட்ட மருத்துவமனைகளிலும் பல் சிகிச்சைப் பிரிவுகள் புதிதாகத் தொடங்கப்பட்டு, பல் மருத்துவர்கள், பல் டெக்னீசியன்கள் நியமனம் செய்யப்பட்டு உள்ளதுடன், மேலும் புதிய உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

விபத்து மற்றும் அவசர சிகிச்சை வசதிகள்:-

தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்படுவோருக்கு உடனடி சிகிச்சை அளிக்க ஏதுவாக விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் இதுவரை நாமக்கல், கடலூர், பத்மநாபபுரம், வாலாஜா பேட்டை, மேலூர், தென்காசி, தாம்பரம், பெரம்பலூர், ஓமலூர் ஆகிய 9 மருத்துவ மனைகளில் விபத்து மற்றும் அவரச சிகிச்சை பிரிவுகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி, திண்டுக்கல், கோவில் பட்டி, கரூர் மாவட்ட தலைமை மருத்துவமனை கள், வேலூர், கீழ்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள், மதுரை இராஜாஜி மருத்துவமனை, சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவமனை, கன்னியாகுமரி, திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றில் அமைக்கப்பட்டு வருகின்றன.

அரசு மருத்துவமனைகளில் உள்கட்ட மைப்பு வசதி மேம்பாடு

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப் படும் தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தில், 198 அரசு மருத்துவமனைகளில் 285 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டடங்கள் கட்டப் பட்டுள்ளன. வட்ட மருத்துவமனை மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகளின் உள்கட்ட மைப்பு வசதிகள் தேசிய சுகாதார நலவாழ்வு இயக்க நிதி 75 கோடி ரூபாய் மூலம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தைத் தமிழகம் மட்டுமே குறிப்பிட்ட காலத்திற்குள் செயல் படுத்தி இலக்கை முடித்துள்ளதால், உலக வங்கி மேலும் மூன்று ஆண்டுகளுக்கு 627 கோடி ரூபாய் நிதி உதவியில் இத்திட்டத்தை நீட்டித்திட இசைவு தெரிவித்து பல்வேறு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இளம் சிசு தீவிர கவனிப்பு மையங்கள்

இளம் சிசு மரணம் அதிகம் நிகழும் 15 மாவட்டங்களில், கூடுதலாக மருத்துவர்கள் மற்றும் பயிற்சி பெற்ற

செவிலியர்கள் நியமனம் செய்யப்பட்டு தேவையான மருத்துவ உபகரணங்களுடன் 11 கோடியே 48 இலட்ச ரூபாய்ச் செலவில் இளம் சிசு தீவிர கவனிப்பு மையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் மேலும் 10 மாவட்டங்களில் இம்மையங்களை அமைத்திட 26 கோடியே 84 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

பச்சிளங் குழந்தைகளின் உயிர் காக்கும் அவசர கால சிகிச்சை திட்டம்

0-1 வயது வரையுள்ள பச்சிளங் குழந்தைகளின் உயிர் காக்கும் அவசர கால சிகிச்சை திட்டம், கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் அடையாள அட்டை பெற்றுள்ள அனைத்து குடும்பங்களுக்கும் பொருந்தும். இத்திட்டத்திற்கான விளக்க அட்டை 26.02.2011 அன்று வழங்கப்பட்டுள்ளது. 2010-11ஆம் நிதியாண்டில் ரூ. 10 கோடியும், 2011-12ல் ரூ.15 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

பள்ளி மாணவர்களுக்கான பல் பாதுகாப்புத்திட்டம்

பள்ளி மாணவர்களுக்கான பல் பாதுகாப்புத் திட்டம் ரூ. 5.66 கோடியில் 26.02.2011 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 3ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர் களுக்கு செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் 55 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவர்.

மேம்படுத்தப்பட்ட பள்ளி சுகாதாரத் திட்டம்

இத்திட்டம் 26.02.2011 அன்று ரூ. 6.18 கோடி செலவில் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டுள்ளது. இதனால் 32.06 மாணவர்கள் பயனடைகிறார்கள். ஒவ்வொரு பள்ளியிலும், சுகாதாரக் குழுக்கள் அமைத்து புதிய சுகாதார அட்டை வழங்கப்பட்டுள்ளது.

இந்திய முறை மருத்துவம்

479 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் ஏற்கனவே செயல்பட்டு வந்தன. 2006க்குப்பின், 444 ஆரம்ப சுகாதார நிலையங்களில் இந்திய முறை மருத்துவப் பிரிவுகள் தொடங்கப்பட்டு 54 கோடியே 90 இலட்சம்

ரூபாய் மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியோடு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன. சித்தா பிரிவு உள்ள 31 ஆரம்ப சுகாதார நிலையங்களில் யோகா மற்றும் இயற்கை மருத்துவ முறை மகப்பேறு பிரிவுகள் 59 இலட்சத்து 19 ஆயிரம் ரூபாய்ச் செலவில் தொடங்கப்பட்டுள்ளன. சென்னை அரசு யோகா மற்றும் இயற்கைக் கல்லூரி 90 இலட்சம் ரூபாய்ச் செலவிலும், சென்னை அரசு யுனானி மருத்துவக் கல்லூரி 92.50 இலட்சம் ரூபாய்ச் செலவிலும் மேம்படுத்தப்பட்டுள்ளது. பாளையங்கோட்டை அரசினர் சித்த மருத்துவக் கல்லூரியில் நர்சிங் தெரபி ஒரு மருந்தாளுநர் என்ற பட்டப் படிப்புக்கு தலா 3 கோடி ரூபாய்ச் செலவிலும், சென்னை அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவ மனையில் நர்சிங் தெரபி, மருந்தாளுநர் பட்டயப் படிப்புகள் தலா 3 கோடி ரூபாய்ச் செலவிலும் தொடங்கப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி நாளை)

அன்புள்ள,

மு.க.

15-03-2011

3541. நானும் உன்னுடன்தான் என்பதை மறந்துவிடாதே!

உடன்பிறப்பே,

அன்றாடம் கழக அரசின் பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட சாதனைகளை உனக்குத் தொகுத்து எழுதவும் - பகல் நேரங்களில் அண்ணா அறிவாலயத்தில் காலை முதல் இரவு வரையில், ஏன் சில நாட்களில் நள்ளிரவு வரையில் அமர்ந்து நேர்காணலுக்கு வரும் உடன்பிறப்புகளைச் சந்திப்பதிலுமே நேரம் செலவழிப்பதால் பல விவரங்களை உனக்கு எழுதுவதற்கு எனக்கு நேரம் கிடைக்க வில்லை. நேர்காணலுக்கு வருகின்ற உடன்பிறப்புகளை சந்திக்கும்போது - அதிலே பலபேர் "நாங்கள் வேட்பாளராக நிற்பதற்காக பணம் கட்டி இங்கே வரவில்லை, உங்களை நெருக்கத்தில் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமே என்பதற்காகத்தான் வந்தோம்" என்று சொல்வதைக் கேட்கும்போது - இவர்களை உடன்பிறப்புகளாகப் பெற நாம் என்ன பாக்கியம் செய்தோம் என்று எண்ணிடத்தான் தோன்றியது! அதிலும் இந்த முறை எந்தத் தேர்தலுக்கும் வராத அளவிற்கு நேர்காணலுக்குக் கூட்டம். முன்பெல்லாம் ஒரு தொகுதிக்கு இருபது அல்லது இருபத்தைந்து பேர்கள்தான் நேர்காணலுக்கு வருவார்கள். இந்த முறை ஒவ்வொரு தொகுதிக்கும் சராசரியாக எவ்வளவு பேர் மனு செய்திருக்கிறார்கள் என்று கேட்கும்போது - எண்பது பேர், தொன்னூறு பேர் என்று பதில் வரும். ஒவ்வொருவராக அழைத்து நேர்காணலை நடத்தினால் அனைவரையும் பார்த்து முடிப்பதற்குள் தேர்தல் நாளே வந்துவிடும். எனவேதான் முதல் நாள் ஒவ்வொருவரையும் அழைத்துப் பார்த்தபோது, அந்த நாளில் 7 மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை பார்க்க நிச்சயிக்கப்பட்டிருந்த போதிலும், இரண்டு மாவட்டங்களைச் சேர்ந்தவர்களைக் கூடப் பார்த்து முடிக்க முடியவில்லை. எனவே தான் இரண்டாவது நாளிலிருந்து ஒவ்வொரு தொகுதிக்கும் மனு செய்தவர்களை

இரண்டு மூன்று குழுக்களாகப் பிரித்து நேர்காணலை நடத்தி முடித்தோம்.

நேர்காணலுக்கு வந்திருப்பவர்களைக் காண அண்ணா அறிவாலயத்திற்குள் ஒவ்வொரு நாளும் நுழையும்போதே ஒரு திருவிழா கூட்டம். என்னைக் காண்பதிலே தான் அவர்களுக்கு எத்தனை இன்பம்! எவ்வளவு ஆர்வம்! போட்டியிடுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறதோ இல்லையோ - வாய்ப்பு கேட்பவர்களுடன் உடன் வந்தவர்கள்தான் எத்தனை பேர்?

நேர்காணலுக்கு வந்தவர்கள் சிலபேர் பழைய நினைவுகளையெல்லாம் எடுத்துக் கூறினர். ஒரு சிலர் அந்தக் காலத்தில் அண்ணா அவர்களோடும், என்.வி.என். போன்றவர்களோடும், தளபதி அண்ணன் அழகிரியோடும் நான் அமர்ந்திருந்தபோது எடுத்த புகைப்படங்களையெல்லாம் கொண்டு வந்து காட்டியபோது - நான் அந்தக் காலத்தில் அவர்களோடு அமர்ந்திருந்த அந்த பழைய நினைவுகள் எல்லாம் என் சிந்தனையிலே மிதந்தன.

இதோ ஒரு கடிதம்! 9-8-1968 அன்று நான் கையெழுத்திட்டு அனுப்பிய கடிதம். அந்தக் கடிதத்தை நண்பர் ஒருவர் பொக்கிஷம் போல எடுத்து வந்து காட்டினார். அந்தக் கடிதம் இங்கே அப்படியே வெளியிடப்பட்டுள்ளது, ஆம்; நீயும் காண்பதற்காக! அந்தக் கடிதத்தில் தஞ்சை மாவட்டக் கழகத் தேர்தலில் பொதுக்குழுவிற்கு போட்டியிட்ட நான், எனக்கு வாக்களிக்க வேண்டுமென்று கேட்டு எழுதிய கடிதம்தான் அது!

அத்தனை தொகுதியிலிருந்தும் வந்தவர்களை அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களோடு அமர்ந்திருந்து நேர்காணலை முடித்து விட்டோம். இடையிடையே தோழமைக் கட்சியின் தலைவர்களுடனும், குழுவினருடனும் எந்தெந்த தொகுதிகளை யார் யார் பங்கிட்டுக் கொள்வதென்று நமது கழகக் குழுவினர் சந்தித்து, என்னோடும் அதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். நானும் பொதுச் செயலாளர் பேராசிரியரும் எங்கள் அறைக்குள் இருந்தவாறு அவர்களுக்கு யோசனைகளைத் தெரிவித்தோம்.

தற்போது அநேகமாக நமது தோழமைக் கட்சிகளுடன் எல்லாம் பேசி யார் யாருக்கு எந்தெந்த தொகுதிகள் என்பது இறுதியாக்கப்

பட்டுவிட்ட நிலை. இன்று அல்லது நாளைக்குள் அந்தப் பட்டியலை நீ ஏடுகளிலே காணலாம். அனைத்துக் கட்சியினரும் தங்கள் தங்களுக்குள் விட்டுக் கொடுத்து தொகுதிகளை பரிமாறிக் கொண்டிருக்கின்றோம். ஒரு சில தொகுதிகளை குறிப்பிட்டு இரண்டு மூன்று கட்சிகள் கேட்டதால் பேசி முடிக்க சில நாட்களாகி விட்டன. தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியதன் காரணமாக அந்தப் பிரச்சினைகள் எல்லாம் ஓரிரு தொகுதிகளைத் தவிர மற்றவையெல்லாம் தீர்க்கப்பட்டுவிட்டன.

இதனையடுத்து கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிவிக்கப்பட வேண்டும். நான் முன்பே எழுதியது போல ஒவ்வொரு தொகுதிக்கும் சராசரியாக எண்பது பேர் போட்டியிடுகின்ற நிலையில் அவர்களில் கழகத்தின் சார்பாக போட்டியிட ஒருவரைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுபற்றி மாவட்டக் கழகச் செயலாளர்களுடன் கலந்து பேச வேண்டும். அதற்கு உதவியாக மாவட்டக் கழகச் செயலாளர்கள் இன்றும் நாளையும் சென்னையில் இருப்பது நல்லது. ஏனென்றால் கழகத்தின் சார்பில் இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் 16-3-2011 புதன்கிழமை மாலை 5 மணி அளவில் அண்ணா அறிவாலயத்தில் என்னால் செய்தியாளர்கள் மத்தியில் அறிவிக்கப்படவுள்ளது. வேட்பு மனுத் தாக்கல் 19-3-2011 அன்று தொடங்குகிறது. அதற்கு முதல் நாள் 18-3-2011 அன்று மாலை 5 மணியளவில் அண்ணா அறிவாலயத்திலேயே நமது தோழமைக் கட்சித் தலைவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

கழகத்தின் சார்பில் தேர்தல் அறிக்கையினை 19-3-2011 அன்று மாலையில் அண்ணா அறிவாலயத்தில் பத்திரிகையாளர்கள் மத்தியில் வெளியிடவுள்ளேன். அதன் பின்னர் வேட்பாளர்களாக அறிவிக்கப்படுபவர்கள் அவரவர் தொகுதிகளில் வேட்பு மனு தாக்கல் செய்தாக வேண்டும். அதன் பின்னர் தேர்தல் பிரச்சாரம் தொடங்கப்பட வேண்டும். இடையிலே இருப்பதோ ஒரு சில நாட்கள்தான். அந்த நாட்களில் உன்னுடைய உழைப்பு மிகவும் அவசியம். இந்த வயதில் நான் இந்த அளவிற்கு உழைப்பதைப் பார்க்கும் நீ உழைக்கத் தயங்க மாட்டாய் என்பதை நான் அறிவேன்.

ஒவ்வொரு முறையும் நான் தேர்தல் சுற்றுப்பயணத்தில் ஈடுபடுகின்ற அளவிற்கு இந்த முறை நீயும் எதிர்பார்க்க

மாட்டாய் - என்னாலும் முடியாது என்பதை நீயே அறிவாய்! எனினும் உடல் ஒத்துழைக்காவிட்டாலும் உள்ள உறுதியோடு முடிந்த வரை தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவேன். என்னைப் போலவே நமது பொதுச் செயலாளரும், பொருளாளரும், கழக முன்னோடிகளும், கழகக் கலைஞர்களும், தோழமைக் கட்சிகளின் தலைவர்களும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவார்கள். தொகுதிகளில் கழகம் போட்டியிட்டாலும், நமது அணியிலே உள்ள கட்சிகள் போட்டியிட்டாலும் அங்கெல்லாம் கழகத் தோழர்களின் பணி சிறப்பாக அமைந்திட வேண்டும். கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் நமது அமைச்சர்களின் துறைகள் வாயிலாக என்னென்ன சாதனைகளை செய்திருக்கிறோம் என்பதை நள்ளிரவிலும் கண் விழித்து உனக்காக அன்றாடம் முரசொலியில் எழுதிக் கொண்டிருக்கின்றேன். அந்தச் சாதனைகளை வாக்காளப் பெருமக்களிடம் எடுத்துக் கூறத் தவறி விடாதே! நமது சாதனைகளைச் சொல்லி தைரியமாக மக்களிடம் வாக்கு கேட்கக் கூடிய அளவிற்கு கழக அரசு பாடுபட்டிருக்கிறது என்பதை நீ அறிவாய்! இடையிடையே நேரம் கிடைக்கும் போது உனக்கு எழுதுகிறேன். தேர்தல் களத்தில் நீ சுழன்று பணிபுரியும் போது; நானும் உன்னுடன்தான் இருப்பேன் என்பதை மறந்து விடாதே!

அன்புள்ள,

மு.க.

15-3-2011

3542. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் ஐந்தாண்டு சாதனைகள் (3)

உடன்பிறப்பே,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் கழக ஆட்சி கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் - திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

எச்.ஐ.வி / எய்ட்ஸ் கட்டுப்பாடு

2001ஆம் ஆண்டில் எய்ட்ஸ் நோயின் தாக்கம் 1.13 சதவீதமாக இருந்ததால் தமிழகம் எச்.ஐ.வி/எய்ட்ஸ் தாக்கம் அதிகம் உள்ள மாநிலமாக வகைப்படுத்தப்பட்டது; 2006இல் இந்த அரசு எடுத்த விழிப்புணர்வு மற்றும் தடுப்புப்பணிகளால் தற்போது 0.25 சதவீத மாகக் குறைந்து எச்.ஐ.வி. பாதித்தோரின் எண்ணிக்கை வீழ்ச்சி அடைந்து சீராக நிலைநிறுத்தப்பட்டிருப்பது இந்தியாவி லேயே தமிழ்நாட்டில் மட்டும்தான். எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனுக்காகத் தமிழக அரசு 6.4.2009 அன்று 5 கோடி ரூபாய் முதலீட்டில் அறக்கட்டளை ஒன்றைத் தொடங்கி, அவர்களுக்கு உதவித் தொகை வழங்கி வருகிறது. எய்ட்ஸ் நோயால் பெற்றோரை இழந்து ஆதரவற்ற நிலையில் இருந்த 1,549 பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு 2009-10-ஆம் நிதி ஆண்டில் 44 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. மனநலக் காப்பகத்தில் சிகிச்சை பெற்றுவரும் மனநோயாளிகளுக்குத் தரமான உணவு வழங்கும் பொருட்டு, இதுவரை வழங்கி வந்த தினசரி உணவுப்படி 13.70 ரூபாயை 20 ரூபாயாக 18.6.2009 முதல் உயர்த்தியதுடன், 28.8.2010 முதல்

20 ரூபாயிலிருந்து 40 ரூபாயாகவும் உயர்த்தி வழங்குகிறது இந்த அரசு.

தமிழகத்தில் எச்.ஐ.வி. நோயாளிகளுக்கு முதல்நிலை சிகிச்சை 12,961 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒரு நபருக்கான

மாத்திரைகளின் விலை ஆண்டொன்றுக்கு 6,000 செலவாகும். தற்பொழுது இரண்டாம் நிலை கூட்டு மருத்துவ சிகிச்சையானது 700 நபர்களுக்கு தாம்பரத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக ஒரு நோயாளிக்கு வருடத்திற்கு 36,000 செலவிடப்படுகிறது. மேலும், சேலத்திலும் இரண்டாம் நிலை கூட்டு மருத்துவ சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விரைவில் மதுரையிலும் இச்சிகிச்சை அளிக்கப்பட உள்ளது.

தமிழகத்திலும் HIV நோயின் தாக்கம் வேகமாக குறைந்ததற்கான காரணங்கள்:

❖ இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் அதிகமாக 874 ஒருங்கிணைந்த ஆற்றுப்படுத்துதல் மற்றும் பரிசோதனை மையங்கள் (ICTC) செயல்பட்டு வருகிறது.

❖ 41 கூட்டு மருத்துவ சிகிச்சை மையங்கள் (ART) செயல்பட்டு வருகிறது.

❖ இம்மையத்தில் பதிவானவர்களின் எண்ணிக்கை 1,62,029

❖ சிகிச்சை ஆரம்பித்தவர்கள் - 73,850

❖ தற்பொழுது சிகிச்சை பெறுபவர்கள் - 47,279

மருத்துவ பயனாளிகள் நலச்சங்கங்கள்

1,539 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 264 அரசு மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகள், 15 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அவற்றைச் சார்ந்த பிற மருத்துவமனைகள் ஆகியவற்றில் "மருத்துவப் பயனாளிகள் நலச்சங்கங்கள்" அமைக்கப்பட்டு, அச்சங்கங்களுக்கு அளிக்கப்பட்ட 81 கோடியே 12 இலட்ச ரூபாய் நிதியின் துணைகொண்டு அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பழுது பார்க்கவும், உடனடித் தேவையான கருவிகள், உபகரணங்கள் வாங்கிக்கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ள தால், மக்களுக்குத் தரமான மருத்துவ சேவையைத் தடையின்றி அளிக்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், தேசிய சுகாதாரத் திட்டத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், துணை சுகாதார நிலையங்களுக்கும் ஆண்டு பராமரிப்பு நிதியாக 60 கோடியே 86 இலட்ச ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது; ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களுக்கு

55 கோடியே 57 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 12,618 கிராம ஊராட்சிகளில் கிராம சுகாதாரம் மற்றும் குடிநீர் துப்புரவு குழுக்களும், 561 நகர பஞ்சாயத்துகளில் 2540 கிராம சுகாதார மற்றும் குடிநீர்த் துப்புரவுக் குழுக்களும் அமைக்கப்பட்டு சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள 2007ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு ஆண்டும் 10 ஆயிரம் ரூபாய் வீதம் இதுவரை 60 கோடியே 63 இலட்ச ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறப்பு - இறப்பு பதிவு

அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் பிறப்பு இறப்புப் பதிவு மையங்களாக அறிவிக்கப்பட்டு, அங்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு உடனடியாகப் பிறப்புச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அவர்கள் இல்லங்களுக்கே சென்று சுகாதார ஆய்வாளர்களால் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

போலி மருந்து மற்றும் காலாவதி மருந்து தடுப்பு நடவடிக்கைகள்

மருந்துக் கட்டுப்பாட்டுத் துறை, அண்மையில் 'ரிநர்வ்' என்ற போலி மருந்தையும், 'பென்னாட்ரல் காப் பார்முலா' என்ற பெயரால் போலி கலப்பட இருமல் மருந்தையும் திடீர் ஆய்வு செய்தபோது, காலாவதியான மருந்துகள் மீண்டும் விற்பனைக்கு அனுப்பப்படுவது கண்டுபிடிக்கப்பட்டு; அரசின் உடனடி உத்தரவின் பேரில் மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையும் காவல் துறையும் இணைந்து, இத்தகைய செயல்களில் ஈடுபட்டுள்ளவர்களைக் கைது செய்து வருகின்றன. மேலும், போலி மருந்து மற்றும் காலாவதி மருந்துகளைக் கண்டுபிடித்து அவைகளைப் பறிமுதல் செய்வதுடன், அவை தொடர்பாக 41 பேரைக் கைது செய்து; அவர்களில் 19 பேரைக் குண்டர் சட்டத்திலும் அடைத்துள்ளனர்.

பொதுமக்களுக்கு மருந்துகளின் தன்மை அவற்றைப் பயன்படுத்தும் முறை, அளவு, ஒவ்வாமை போன்ற விவரங்களைத் தெரிவிக்கும் வகையில் மருந்துக் கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலகத்தில் இந்தியாவிலேயே முதன்முதலாக மருந்தியல்

விழிப்புணர்வு மையம் 7.12.2007 அன்று தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மருந்துக் கட்டுப்பாட்டுத் துறையை மேலும் வலுப்படுத்திட வேண்டும் என்பதற்காக 50 மருந்து ஆய்வாளர்களும், 10 இளநிலை பகுப்பாய்வாளர்களும் நியமனம் செய்யப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழக அரசு மூளை இறப்பு உறுப்பு தானப் பிரிவு என்னும் புதிய பிரிவை அக்டோபர் 2008ஆம் ஆண்டில் தொடங்கி; 'மூளைச்சாவு' அடைபவர்களிடம் இருந்து, சட்டப்படி சான்றிதழ் பெற்று அவர்களின் சிறுநீரகம், கல்லீரல், இதயம், கண் போன்ற உறுப்புகளை எடுத்து, அந்த உறுப்புகள் தேவைப்படும் நோயாளிகளுக்கு உடனடியாகப் பொருத்த வழிவகை செய்துள்ளது. இதுவரை மூளைச்சாவு ஏற்பட்ட 163 பேரிடமிருந்து 29 இதயம், 4 நுரையீரல்,

143 கல்லீரல், 304 சிறுநீரகம், 196 இதய வால்வு, ஆகியவை தானமாகப் பெறப்பட்டு, அவற்றை 942 பேருக்கு வெற்றிகர மாகப் பொருத்தப்பட்டு அவர்கள் பயனடைந்துள்ளனர். இந்தியா விலேயே தமிழ்நாட்டில் தான் மூளைச் சாவு அடைவோரிடமிருந்து உடல் உறுப்புகள் பெறப்பட்டு, தேவைப்படு வோர்க்குப் பொருத்தும் திட்டம் வெற்றிகரமாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய கண்பார்வை இழப்புத் தடுப்புத் திட்டம்

கண்பார்வை இழப்புத் தடுப்புத் திட்டத்தின் கீழ், 2006க்குப்பின் 27.48 இலட்சம் பேர் கண்புரை அறுவை சிகிச்சை பெற்றுள்ளனர். 84.54 இலட்சம் பள்ளிச் சிறார்களுக்குக் கண்பார்வைப் பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களில் 3.88 இலட்சம் சிறார்க்குக் கண்பார்வைக் குறைபாடு கண்டறியப்பட்டு, 1.39 இலட்சம் பேருக்கு இலவசக் கண் கண்ணாடிகள் வழங்கப்பட் டுள்ளன.

சுகாதாரத் துறையில் அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சி

ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளின் பயன்பாட்டை அதிகரிக் கும் வகையில், தனியார் பங்களிப்பை இந்த அரசு ஊக்குவிக்கிறது. 'கேடலிஸ்ட் டிரஸ்ட்' என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியுடன், மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையம்

ரூ.2 கோடி செலவில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மதுரை வடமலையான் மருத்துவ மனை, மேலக்கால் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 12 இலட்சம் ரூபாய்ச் செலவில் மகப்பேறு வார்டு ஒன்றினைக் கட்டிக் கொடுத்துள்ளது. நந்திவரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் எழில்மிகு பூங்காவும், பிரசவ நாற்காலியும் ரூ.5 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. வேலூர் மாவட்டத்தில் 4 இலட்சம் ரூபாய்ச் செலவில் இயந்திர சலவையகம் அமைக்கப்பட்டுள்ளது. பானாவரம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு விப்ரோ ஜி ஹெல்த்கேர் என்ற நிறுவனம் ரூ.40 இலட்சம் செலவில் மருத்துவ உபகரணங்களை வழங்கி உள்ளது. "டைம்ஸ் பவுன்டேசன்" நிறுவனம் 10 கோடி ரூபாய்ச் செலவில் காஞ்சிபுரம் மாவட்டம் செம்மஞ்சேரியில் 30 படுக்கைகள் கொண்ட ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தைக் கட்டி ஒப்படைத்துள்ளதுடன், ரூ. 5 கோடி செலவில் திருவொற்றியூரில் 50 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையையும் நிறுவப்பட்டுள்ளது.

அமரர் ஊர்தி சேவை

ரூ. 10 கோடி செலவில், ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த உறுப்பினர் எவரேனும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காகச் சேர்ந்து இறந்துவிட்டால் அவர்களின் உடலை வீட்டிற்கு எடுத்துச் செல்ல, அவரது உறவினர்கள் தனியார் ஊர்திகளுக்கு அதிக கட்டணம் செலுத்தவேண்டிய நிலை ஏற்படு கிறது. இதனைப் போக்க இலவச அமரர் ஊர்தி சேவைத் திட்டம் 180 அமரர் ஊர்திகளுடன் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் மூலம் தமிழ்நாடு இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுகிறது. முதல் கட்டமாக 10 அமரர் ஊர்திகளுடன் 26.02.2011 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக தொலைபேசி அழைப்பு எண் 155377.

மருத்துவ மாணவர்களுக்கு உதவித் தொகை

அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் பட்டப் படிப்பிற்கான பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மாத உதவித்தொகை 4 ஆயிரத்து 500 ரூபாய் என்பதை 7 ஆயிரம் ரூபாய் என்றும்; அரசுப் பணிசாரா மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் முதலாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்

தொகை 8 ஆயிரம் ரூபாய் என்பதை 15 ஆயிரம் ரூபாய் என்றும்;

இரண்டாமாண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 8 ஆயிரம் ரூபாய் மற்றும் ஆய்வுப்படி 500 ரூபாய் என்பதை 16 ஆயிரம் ரூபாய் என்றும்;

மூன்றாம் ஆண்டு பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 8 ஆயிரம் ரூபாய் மற்றும் ஆய்வுப்படி 1000 ரூபாய் என்பதை 17 ஆயிரம் ரூபாய் என்றும்;

சிறப்பு மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் முதலாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 9,500 என்பதை 18,000 ரூபாய் என்றும்;

சிறப்பு மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 10,000 ரூபாய் என்பதை 19,000 ரூபாய் என்றும்;

சிறப்பு மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் மூன்றாமாண்டு மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை 10,000 ரூபாய் என்பதை 20,000 ரூபாய் என்றும்;

நான்காம் ஆண்டு நரம்பியல் அறுவை மருத்துவ பட்ட மேற்படிப்பு பயிலும் மருத்துவ மாணவர்களுக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை 9 ஆயிரம் ரூபாய் மற்றும் ஆய்வுப்படி 1000 ரூபாய் என்பதை 18 ஆயிரம் ரூபாய் என்றும்;

ஐந்தாம் ஆண்டில் 19 ஆயிரம் ரூபாய் என்றும் ஆண்டுக்கு 9 கோடியே 60 இலட்ச ரூபாய் செலவில் 1.7.2009 முதல் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறை பெற்றுள்ள விருதுகள்

மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள், “சுகாதாரத் திட்டங்களைச் செயல் படுத்துவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முன்மாதிரியாக விளங்குகிறது” எனப் பல நேரங்களில் பாராட்டியுள்ளார். தேசிய ஊரக நல்வாழ்வுத் திட்டங்களைத் தமிழகத்தில் சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக மத்திய அரசு தமிழ்நாட்டை முதல் மாநிலமாகத் தேர்ந்தெடுத்து, அதற்கான விருதினை, மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

திரு. குலாம்நபி ஆசாத் அவர்கள் முன்னிலையில், 12.4.2010 அன்று புதுடெல்லியில் நடந்த விழாவில் இந்தியாவின் துணை ஜனாதிபதி மூலம் வழங்கியது. இவ்விருதினை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை முதன்மைச் செயலாளர் பெற்று வந்தார்.

மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் மாநில அளவில் சிறப்பாகச் செயல்படும் மாநிலம் என்ற அடிப்படையில் சுகாதாரத் துறையில் தமிழக அரசு செய்து வரும் பல்வேறு சீர்திருத்தங்களுக்காகவும், உன்னதமான பல புதிய திட்டங்களை நிறைவேற்றி வருவதற்காகவும், தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அரசு கூட்டு முயற்சியில் பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருவதற்காகவும் தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப்பின் (FICCI) 2009ஆம் ஆண்டிற்கான முதல் பரிசு வழங்கப்பட்டது;

2009ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசால் கொண்டுவரப்பட்ட திட்டங்களுக்காக, அறிவியல் மேம்பாடு மற்றும் ஊடகக் கல்வி மையம் "ஈ இந்தியா 2009" என்ற விருதினை வழங்கியது. பிறப்பு இறப்புகளைப் பதிவு செய்வதில் தமிழகம் இரண்டாவது விருதினைப் பெற்றுள்ளது.

கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தி வருவதற்காக "ஈ - இந்தியா 2010" என்ற விருது தமிழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு நன்கு சேவை செய்து வருவதற்காக கிண்டி, கிங் நோய் தடுப்பு மருந்து நிலையம் இந்திய வர்த்தக தொழில் கூட்டமைப் பின் (FICCI) 2010ஆம் ஆண்டிற்கான விருதினைப் பெற்றுள்ளது.

48 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ISO தரச்சான்றிதழ்

ரூ. 4.86 கோடி செலவில் 48 ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, இந்திய தர நிறுவன அலுவலர்களின் முன்னிலையில் 26.02.2011 அன்று 48 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ISO சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

அமெரிக்க தூதரக அதிகாரி திரு. ஆன்ட்ரியூ டி. சிம்கின், 1.8.2009 அன்று காஞ்சிபுரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில்

சில ஆரம்ப சுகாதார நிலையங்களை பார்வையிட்டு, தமிழ்நாடு அரசு, கிராமப்புற மக்களுக்கு, சிறந்த மருத்துவ சிகிச்சைகளை அளித்து வருகிறது என்று பாராட்டி, தமிழ்நாட்டில் வழங்கப்படும் சுகாதார வசதிகளை அமெரிக்க அரசிடம் தெரிவித்து அங்குள்ள கிராமப் பகுதி மக்களுக்கு இங்குள்ளதுபோல் சுகாதார வசதிகளை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

சிறப்பான பொது சுகாதாரச் சேவையை மக்களுக்கு வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன் உதாரணமாக விளங்குகிறது என்றும், மாவட்ட மற்றும் வட்ட அளவிலான மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களை ஒருங்கிணைத்து கிராமப் பகுதிகளில் சுகாதாரச் சேவையைச் சிறப்பாக விரிவுபடுத்தியுள்ளது என்றும் உலக வங்கி தனது "World Bank" செப்டம்பர் 2010 இதழில் தலைப்புச் செய்தியாக "Tamil Nadu Shows the way in Tackling Some of India's Pertinent Health Issues" என்ற தலைப்பில் எழுதி தமிழ்நாட்டைப் பாராட்டி கட்டுரை வெளியிட்டுள்ளது.

உடன்பிறப்பே, மக்கள்நல்வாழ்வுத் துறையின் சார்பில் இவ்வளவு சிறப்பான திட்டங்களையும் கழக அரசு நிறைவேற்றி வருகிறது. இந்த துறையின் அமைச்சர் தம்பி எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்தின் அரிய உழைப்பின் காரணமாக இந்தத் திட்டங்கள் எல்லாம் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின் றன. இந்தத் திட்டங்கள் தொடர்ந்து நிறைவேறிட மீண்டும் தி.மு. கழக அரசே தேர்ந்தெடுக்கப்பட இத்திட்டங்களையெல்லாம் மக்களிடம் எடுத்துக் கூறிடுவீர்! நமது அணியின் வெற்றியை உறுதி செய்திடுவீர்!

அன்புள்ள,

மு.க.

16-03-2011

3543. நகராட்சி நிர்வாகத் துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்கும் காலங்களிலெல்லாம் உருவாக்கிச் செயல்படுத்திவரும் திட்டங்கள் மூலம் ஒட்டு மொத்த தமிழகமும், பல்வேறு துறைகளிலும்-பல்வேறு வகையிலும் வளர்ச்சிபெற்று மக்களின் வாழ்க்கைத் தரம் வெகுவாக உயர்ந்து வருவதைக் கண்டு நடுநிலையாளர்கள் எல்லோரும் இந்த அரசைப் பாராட்டி வருகின்றனர் என்பதை நீ அறிவாய். கழக அரசு திட்டங்கள் காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகள் கடந்த ஐந்தாண்டுகளில் அடைந்துள்ள முன்னேற்றங்களை இந்தக் கடிதத்தின் வாயிலாக உனக்கும் தமிழகமக்களுக்கும் தெரிவித்திட விரும்புகிறேன்.

உள்ளாட்சித் தேர்தல்

2006-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6 மாநகராட்சிகள் மற்றும் 152 நகராட்சிகளுக்கு நடைபெற்ற தேர்தலில் 2 பெண்கள் உட்பட 6 மாநகராட்சி மேயர்கள், 34 பெண்கள் உட்பட 102 நகரமன்றத் தலைவர்கள், 17 பெண்கள் உட்பட 50 மூன்றாம் நிலை நகராட்சிகளின் நகரமன்றத் தலைவர்கள், 107 பெண்கள் உட்பட 319 மாநகராட்சி உறுப்பினர்கள், 1132 பெண்கள் உட்பட 3392 நகராட்சி உறுப்பினர்கள்

329 பெண்கள் உட்பட 987 மூன்றாம் நிலை நகராட்சி உறுப்பினர்கள் என மொத்தம் 4855 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி நகராட்சிகள் மாநகராட்சி களாகத் தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து தற்போது 4 மேயர், 34 நகராட்சித் தலைவர்கள் உட்பட 1621 பேர் மகளிர் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்றுள்ளனர்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரப் பரவலாக்கம்

உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் பொறுப்புகள், அதிகாரங்கள் வழங்குவது குறித்து விரிவாக ஆராய்ந்து, தக்க பரிந்துரைகள் அளிக்க ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில் வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டு; அக்குழு 10.12.2007 அன்று அரசுக்கு அளித்த 68 பரிந்துரைகளில் 42 பரிந்துரைகளுக்கு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன. ஏனைய பரிந்துரைகள் பல்வேறு நிலைகளில் பரிசீலனை யில் உள்ளன.

நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி தொடர்பான வரம்பு உயர்வு

நகராட்சி அமைப்புகள் திட்டங்களை விரைந்து செயல்படுத்திட உதவும் வகையில் அரசு தனது 30.1.2008 நாளிட்ட அரசாணைப்படி, சிறப்பு நிலை நகராட்சிகள் நிர்வாக அனுமதி வழங்கும் வரம்பு 10 இலட்சம் ரூபாயிலிருந்து 40 இலட்சம் ரூபாயாகவும்; தேர்வு நிலை நகராட்சிகள் நிர்வாக அனுமதி வழங்கும் வரம்பு 10 இலட்சம் ரூபாயிலிருந்து 35 இலட்சம் ரூபாயாகவும்; முதல் நிலை நகராட்சிகள் நிர்வாக அனுமதி வழங்கும் வரம்பு 7 இலட்சம் ரூபாயிலிருந்து 30 இலட்சம் ரூபாயாகவும்; இரண்டாம் நிலை நகராட்சிகள் நிர்வாக அனுமதி வழங்கும் வரம்பு 5 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாகவும் ; மூன்றாம் நிலை நகராட்சிகள் நிர்வாக அனுமதி வழங்கும் வரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 15 இலட்சம் ரூபாயாகவும்; மண்டல நிர்வாக இயக்குநர் நிர்வாக அனுமதி வழங்கும் வரம்பு 40 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாகவும்; நகராட்சி நிர்வாக ஆணையர் நிர்வாக அனுமதி வழங்கும் வரம்பு

1 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மாநகராட்சிகளைப் பொறுத்தவரையில் ரூ.1 கோடிக்கு மேல் ரூ.5 கோடி வரையுள்ள பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது. இதனால் பணிகளுக்கு ஒப்புதல் அளிப்பது விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று, நகராட்சி நிர்வாக ஆணையரகக் கண்காணிப்புப் பொறியாளர் வழங்கும் தொழில்நுட்ப அனுமதி வரம்பு பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளருக்கு உள்ள வரம்பு நீடிப்பதுடன்; மாநகராட்சிகள் நகரப் பொறியாளர்களின் அனுமதி வரம்பு 50 இலட்சம் ரூபாயிலிருந்து 75 இலட்சம் ரூபாயாகவும்; மண்டல செயற்பொறியாளரின் அனுமதி வரம்பு 30 இலட்சம் ரூபாயிலிருந்து 50 இலட்சம் ரூபாயாகவும்; செயற் பொறியாளர் - நகராட்சிப் பொறியாளர் நிலை-1 அனுமதி வரம்பு 30 இலட்சம் ரூபாயிலிருந்து 40 இலட்சம் ரூபாயாகவும்; உதவி செயற்பொறியாளர் - நகராட்சிப் பொறியாளர் நிலை-2 அனுமதி வரம்பு 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாகவும் ; உதவி பொறியாளர் - நகராட்சிப் பொறியாளர் நிலை-3 அனுமதி வரம்பு 5 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் பணிகளுக்கு விரைந்து அவரவர் மட்டத்தில் ஒப்புதல் வழங்குவது எளிமையாக்கப்பட்டுள்ளது.

புதிய மாநகராட்சிகள் உருவாக்கம்

1.1.2008 முதல் திருப்பூர் மற்றும் ஈரோடு நகராட்சிகளும், 1.8.2008 முதல் வேலூர், தூத்துக்குடி நகராட்சிகளும் புதிய மாநகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன.

இந்த நான்கு மாநகராட்சிகளிலும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ஒவ்வொரு மாநகராட்சிக்கும் தலா 5 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டது. வேலூர் மாநகராட்சியில் 14 கோடியே 44 இலட்சம் ரூபாயிலும், தூத்துக்குடி மாநகராட்சியில் 16 கோடியே 49 இலட்சம் ரூபாயிலும் உள்கட்டமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

நகராட்சிகள் தரம் உயர்வு

நகராட்சிகள், மக்கள் தொகை - ஆண்டு வருமானம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றன. அந்தவகையில், 10 கோடி ரூபாய்க்குமேல் ஆண்டு வருமானமுள்ள 22 நகராட்சிகள் சிறப்பு நிலை நகராட்சிகள் எனவும், 6 கோடி ரூபாய்க்கு மேல் 10 கோடி ரூபாய் வரை வருமானமுள்ள 35 நகராட்சிகள் தேர்வுநிலை நகராட்சிகள் என்றும், 4 கோடி ரூபாய்க்கு மேல் 6 கோடி ரூபாய் வரை வருமானமுள்ள 36 நகராட்சிகள் முதல் நிலை நகராட்சிகள்

என்றும், 4 கோடி ரூபாய்க்குக்கீழ் வருமானமுள்ள 44 நகராட்சிகள் இரண்டாம் நிலை நகராட்சிகள் என்றும், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை உள்ள 13 நகராட்சிகள் மூன்றாம் நிலை நகராட்சிகள் என்றும் மொத்தம் 150 நகராட்சிகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் போதிய நிதியுதவிகள் பெற்றுப் பணிகள் மேற்கொள்ளும் திறன் அதிகரித்துள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகள் விரிவாக்கம்

திருப்பூர், ஈரோடு, வேலூர், தூத்துக்குடி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாநகராட்சிகளிலும், புதுக்கோட்டை, ஓசூர், நாமக்கல், நாகர்கோயில், காஞ்சிபுரம், கரூர், திருப்பத்தூர், விழுப்புரம் ஆகிய நகராட்சிகளிலும் எல்லைகளை விரிவாக்கம் செய்திடவும், அதன் காரணமாக இணைக்கப் படவுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவையான கூடுதல் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

உள்கட்டமைப்பு மேம்பாடு

மத்திய அரசின் நிதி உதவி பெறும் திட்டங்கள்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம்

பெருநகரங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டம் தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மூன்று மாநகரங்களில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மதுரை மாநகராட்சி

மதுரை மாநகராட்சியில் 623 கோடியே 91 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப் பட்ட இரண்டாம் வைகைக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், திடக்கழிவு மேலாண்மை, மழை நீர் வடிகால் அமைத்தல், பாதாளச் சாக்கடைத் திட்டம், வைகை ஆற்றின் குறுக்கே மூன்று இடங்களில் தடுப்பணைகள் கட்டுதல் ஆகிய 5 பணிகளில் இரண்டாம் வைகைக் குடிநீர் அபிவிருத்தித் திட்டப்பணி முடிவடைந்துள்ளது. இதர நான்கு திட்டங்களும் முன்னேற்றத்தில் உள்ளன.

மதுரை மாநகருக்கு அருகிலுள்ள நகர்ப்புற தொகுப்புப் பகுதி

மதுரை மாநகருக்கு அருகிலுள்ள நகராட்சிகளுக்கு 146 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டதில் திருப்பரங்குன்றம் குடிநீர்த் திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளன; திருமங்கலம், அவனியாபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் தொடங்கியுள்ளன.

கோயம்புத்தூர் மாநகராட்சி

கோயம்புத்தூர் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை, இரண்டாவது பில்லூர் குடிநீர் திட்டம், பாதாள சாக்கடைத் திட்டம், மழைநீர் வடிகால் அமைத்தல் ஆகிய 4 திட்டங்கள் 767 கோடியே 38 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் அனுமதியளிக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளன.

திடக்கழிவு நிரப்புமிடம்

சென்னைப் பெரு நகருக்கு அருகிலுள்ள நகர்ப்புறத் தொகுப்புப் பகுதி

சென்னைப் பெருநகருக்கு அருகிலுள்ள நகராட்சிகளுக்கு 13 திட்டங்கள் ரூ.1180.26 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளன.

தாம்பரம், ஆவடி, மதுரவாயல், உள்ளகரம்-புழுதிவாக்கம், திருவொற்றியூர், ஆலந்தூர், அம்பத்தூர் ஆகிய 7 குடிநீர்த் திட்டப் பணிகள் 600 கோடியே 59 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலும், உள்ளகரம்-புழுதிவாக்கம், ஆவடி, அம்பத்தூர், மதுரவாயல் மற்றும் தாம்பரம் ஆகிய 5 பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் 535 கோடியே 46 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலும், பல்லவபுரத்தில் ஒரு திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ரூ.44.21 கோடி மதிப்பீட்டிலும் அனுமதிக்கப்பட்டு, தாம்பரம் நகராட்சி குடிநீர்த் திட்டப்பணிகள் முடிவுற்றுள்ளன; மீதமுள்ள 12 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமைத் திட்டத்தில் சேர்க்கப்படாத அனைத்து நகரங்களிலும் குடிநீர் வழங்கல், மழைநீர்

வடிகால், திடக்கழிவு மேலாண்மை, சாலைகளை மேம்படுத்துதல், பொது மக்கள் தனியார் பங்கேற்புத் திட்டத்தின்கீழ் வாகனங்கள் நிறுத்துமிடங்கள், புராதனப் பகுதிகளின் மேம்பாடு, நீர் நிலைகளைப் பேணுதல் போன்ற நகர்ப்புற உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களில் 497 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 475 பணிகள் முடிவடைந்துள்ளன; மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

சாலை மற்றும் மழை நீர் வடிகால்

16 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 467 சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் ரூ.69.413 கோடி மதிப்பீட்டில்

மேற்கொள்ளப்பட்டு, 453 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள், மணப்பாறையில் 2 பாலங்கள் 2 கோடியே 20 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலும், ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணி 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் நிறைவேற்றப்பட்டு; கரூர் நகராட்சியில் ரெட்டை வாய்க்கால் புனரமைக்கும் பணி 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, முன்னேற்றத்திலுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநரகம் மூலம் ரூ.436.37 கோடி திட்ட மதிப்பீட்டில் 58 திட்டங்களாக 31,603 குடியிருப்பு அலகுகள் கட்ட அனுமதியளிக்கப்பட்டு; 9,533 அலகுகள் கட்டி முடிக்கப்பட்டு, 13,534 அலகுகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. எஞ்சியுள்ள பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு உள்ளன. பேரூராட்சிகளின் இயக்குநரகம் மூலமாக ரூ.59.44 கோடி திட்ட மதிப்பீட்டில் 4,542 குடியிருப்பு அலகுகள் கட்ட 25 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, 2,576 அலகுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 1,966 அலகுகள் முன்னேற்ற நிலையில் உள்ளன. இத்திட்டத்தின்கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநரகக் கட்டுப்பாட்டில் உள்ள 6 உள்ளாட்சி அமைப்புகளான குமாரபாளையம், தர்மபுரி, திருப்பத்தூர், சீர்காழி, நாகப்பட்டினம், கொடைக்கானல் ஆகிய நகராட்சிகளில் குடியிருப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளன.

நவீன எரிவாயு தகன மேடைகள் மற்றும் நவீன இறைச்சிக் கூடங்கள்

31.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 61 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 30 பணிகள் முடிக்கப்பட்டு; மீதமுள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இறைச்சிக்கூடங்களை நவீனப்படுத்த 26 கோடியே 20 இலட்ச ரூபாய்ச் செலவில் 120 நகராட்சிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளில், 11 நகராட்சிகளில் பணிகள் முடிவடைந்துள்ளன. 7 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இடமின்மை மற்றும் மற்றும் பிற காரணங்களால் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. எஞ்சிய நகராட்சிகளில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தாய் சேய் நல விடுதிகள்

2007-2008இல் 42 நகராட்சிகளில் 45 தாய் சேய் நல விடுதிகள்கட்ட ரூ.2.53 கோடி மானியமாக அனுமதிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளன. 2008-2009இல் 19 நகராட்சிகளில் 20 தாய் சேய் நல விடுதிகளை மேம்படுத்த ரூ.2.00 கோடி அனுமதிக்கப்பட்டு, திண்டுக்கல் நகராட்சியைத் தவிர மற்ற அனைத்து நகராட்சிகளிலும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

மாநகராட்சி, நகராட்சிகளில் நவீன பேருந்து நிலையங்கள்

கிருஷ்ணகிரி, இராஜபாளையம், உள்ளகரம்-புழுதிவாக்கம், நெல்லிக்குப்பம், கொடைக்கானல், அனகாபுத்தூர், பூவிருந்த வல்லி (பகுதி-1), கோவில்பட்டி, பொள்ளாச்சி, பழனி, நாகர் கோவில் (வடசேரி), திருவண்ணாமலை, வெள்ளக்கோயில், சத்தியமங்கலம், ஓசூர், தேவக்கோட்டை, வந்தவாசி, ஈரோடு, கோயம்புத்தூர் மாநகராட்சி (மேட்டுப்பாளையம் சாலை) ஆகிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.53.67 கோடி செலவில் பேருந்து நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மறைமலைநகர், குழித்துறை, பூவிருந்த வல்லி (பகுதி2), தாம்பரம், மணலி, வாணியம்பாடி ஆகிய நகராட்சிகளில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகள் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன.

சாத்தூர், திண்டிவனம், திண்டுக்கல், ஆரணி, நாகர்கோவில், தேனி, திருவாரூர், சிவகங்கை போன்ற நகராட்சிகளில் ரூ.29.50

கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிகளும், மதுராந்தகம், செங்கற்பட்டு, கொமாரப் பாளையம், இராசிபுரம், மேட்டூர், போடிநாயக்கனூர், காரைக்குடி, இராமநாதபுரம், பத்மநாபபுரம், அருப்புக் கோட்டை, திருப்பூர் ஆகிய நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.6.97 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையங்களை மேம்படுத்தும் பணிகளும் நடைபெறுகின்றன.

பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்கள்

2010-11ம் ஆண்டு 22 பேரூராட்சிகளில் உள்ள பேருந்து நிலையங்களில் பழுதடைந்த ஓடுதளங்கள் ரூ. 350.00 லட்சம் செலவில் சிமெண்ட் கான்கிரீட் தளங்களாக மாற்றப் பட்டுள்ளன. திருப்பெரும்புதூர், ஆலங்காயம், சேத்துப்பட்டு, சங்ககிரி, காங்கேயம், பெருந்துறை வடலூர், செஞ்சி, திருவையாறு, வேளாங்கண்ணி, தரங்கம்பாடி, வைத்தீஸ்வரன் கோவில், உடையார்பாளையம், ஒட்டன்சத்திரம், நான்குநேரி, திசையன்விளை, திருச்செந்தூர், திற்பரப்பு வாழப்பாடி போன்ற 49 பேரூராட்சிகளில் 19 கோடியே 94 இலட்ச ரூபாய்ச் செலவில் நவீன பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மண்சாலைகளை தார் - சிமெண்ட் சாலைகளாக மாற்றுதல்

2006 முதல் 2010வரை ரூ.241.56 கோடி செலவில் பல்வேறு திட்டங்களின் கீழ் 1723.255 கிலோ மீட்டர் சாலைகள் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றப்பட்டன.

2010-11ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் மண் சாலைகளைத் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்ற உத்தேசிக்கப்பட்ட பணிகளில், இதுவரை ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் 60 கிலோ மீட்டர் நீள மண் சாலைகள் தார் மற்றும் சிமெண்ட் சாலைகளாக மாற்றும் பணிகளின் செயலாக்கம் பல்வேறு நிலைகளில் உள்ளன.

மழையினால் பாதிக்கப்பட்ட சாலைகளைப் பழுதுபார்த்தல்

2006 முதல் 2009 வரை நான்கு ஆண்டுகளில் பெய்த மழை மற்றும் வெள்ளத்தினால் பாதிப்படைந்த சாலைகள் ரூ.68.62 கோடி செலவில் சீரமைக்கப்பட்டுள்ளன.

பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம்

நகர்ப்புற சுய வேலை வாய்ப்புத்திட்டத்தின்கீழ் ரூ.21.81 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு, 18,615 பேர் சிறு தொழில்கள்

தொடங்கிப் பயன் அடைந்துள்ளனர். ரூ.29.60 கோடி செலவில் 61,403 பேருக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. நகர்ப்புறப் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.34.83 கோடி செலவில் வறுமைக் கோட்டின்கீழ் உள்ள 4,282 பேர் பயன் அடைந்துள்ளனர். சிக்கன மற்றும் நாணய சங்கத்தின்கீழ் ரூ.20.83 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டு 2,44,833 பேர் பயனடைந்துள்ளனர்.

நகர்ப்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.7.37 கோடி செலவில் 11,004 பேர் பயனடைந்துள்ளனர்.

பன்னாட்டுத் தரச் சான்றிதழ்

தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் சீரிய நிர்வாகமுறை, சிறந்த மேலாண்மை அமைப்பு ஆகியவற்றிற்காக நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு

2008-ஆம் ஆண்டில் பன்னாட்டுத் தரச் சான்றிதழ் ISO 9000-2000 வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாநகராட்சி - திருமண மண்டபத்திற்கு 16.7.2007 அன்றும்; மதுரை மாநகராட்சி - ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு 17.7.2007 அன்றும்; திண்டுக்கல் நகராட்சி - நவீன இறைச்சிக் கூடத்திற்கு 29.9.2008 அன்றும்; திருச்சிராப்பள்ளி மாநகராட்சி - நவீன எரிவாயு தகன மேடைக்கு 14.2.2009 அன்றும் பன்னாட்டுத் தரச் சான்றிதழ் வழங்கும் நிறுவனம் (ISO) 9001:2001 சான்றிதழ் வழங்கியுள்ளது.

சிறப்புத் திட்டங்கள்

கல்வி உதவித் தொகைத் திட்டம் - நகராட்சி - மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவித்தல் திட்டம்

நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், நகராட்சி மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயின்று 10வது மற்றும் 12வது பள்ளி இறுதித் தேர்வுகளில் தேர்ச்சிபெறும் மாணவர்களில் முதலாவதாக வரும் 25 மாணவர்களுக்கு தலா ரூ.10,000/- ரொக்கப்பரிசும் ஒரு தகுதிச் சான்றிதழும் வழங்கும் புதிய திட்டமும்; மேலும், 12வது வகுப்புப்பள்ளி இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்று பரிசுபெற்ற 25 மாணவர்களில் பொருளாதாரரீதியில் பின்தங்கிய

மாணவர்களுக்கு அவர்கள் விரும்பும் மேற்படிப்பினைப் படித்திட கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டமும் 2007-2008இல் அறிமுகப்படுத்தப்பட்டு; 2008-09ம் ஆண்டில் 10-வது மற்றும் 12-வது வகுப்பில் முதலாவதாகத் தேர்ச்சிபெற்ற 26 மாணவர்களுக்கு ரூ.10,000/- பரிசுத் தொகையும் தகுதிச் சான்றிதழும் வழங்கப்பட்டது. 12-வது வகுப்புத் தேர்வில் தேர்ச்சியடைந்து பரிசுபெற்ற மாணவ மாணவியரில் பொருளாதார நீதியில் பின்தங்கிய 65 மாணவர்கள் இக்கல்வி உதவித் தொகைத் திட்டத்தில் பயன் பெற்று மேற்படிப்பு படிக்க வாய்ப்புப் பெற்றுள்ளனர்.

இதன்மூலம் நகராட்சி - மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஊக்குவிக் கப்பட்டுள்ளனர். சென்ற கல்வியாண்டில், திருநெல்வேலி மாநகராட்சிப் பள்ளியில் பயின்ற மாணவி பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 495/500 மதிப்பெண்கள் குவித்து மாநில அளவில் முதலிடம் பெற்று நகராட்சிப் பள்ளிகளின் கல்வித்தரம் உயர்ந்துள்ளமைக்குச் சான்றாகத் திகழ்ந்தார்.

அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன் முறை செய்தல்

தமிழ்நாட்டில், சென்னை மாநகராட்சி தவிர மற்ற மாநகராட்சிகளில் 1663 அனுமதியற்ற மனைப்பிரிவுகளும் 86,393 அனுமதியற்ற மனைகளும்;

நகராட்சிப் பகுதிகளில் 2921 அனுமதியற்ற மனைப்பிரிவுகளும் 1,20,488 அனுமதியற்ற மனைகளுமாக மொத்தம் 4584 அனுமதியற்ற மனைப்பிரிவுகளும், 2,06,882 அனுமதியற்ற மனைகளும் இருப்பதாக மதிப்பீடு செய்யப்பட்டது.

அவற்றுள் சென்னை தவிர மற்ற மாநகராட்சிப் பகுதிகளில் சதுர அடி ஒன்றுக்கு ரூ.5/-ம் மற்ற நகராட்சிப் பகுதிகளில் சதுர அடி ஒன்றுக்கு ரூ.2-ம் பெற்றுக்கொண்டு அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் மனைகளை 31.12.06 வரை வரன்முறைப்படுத்தலாமென 25.7.2006 அன்று அரசு ஆணையிட்டது. இந்தக் கால வரம்பு 31.12.2007 வரையும், பின்னர் 30.6.2008 வரையும் நீட்டிக்கப்பட்டு;

அனைத்து மாநகராட்சிகளிலும் இதுவரை 69,746 மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளும், நகராட்சிகளில் 53,947 மனைகள் மற்றும் மனைப்பிரிவுகளும் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளன.

அதன் மூலம் அரசுக்கு 97.94 கோடி ரூபாய் வரன்முறைக் கட்டணமாகக் கிடைத்தது.

25.7.2006 நாள் ஆணையின்படி பேரூராட்சிப் பகுதிகளிலுள்ள அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு மற்றும் மனைகளைச் சதுர அடிக்கு ரூ. 1/-வீதம் செலுத்திக் கொள்ள முதலில் 31.12.2006 வரையும், பின்னர் படிப்படியாக நீட்டிக்கப்பட்டு, இதுவரை 64,147 அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் 30,900 மனைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் அரசுக்கு ரூ.7.70 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

சிறப்புத் திட்டங்கள்

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு - கோவை மேம்பாட்டுத் திட்டங்கள்

கோயம்புத்தூர் மாநகரில் 2010ம் ஆண்டு சூன் 23-27 வரை நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டினையொட்டி, அங்கு அரசு நிதி உட்பட பல்வேறு துறைகள் மூலமாக மொத்தம் 65 கோடியே 96 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய்ச் செலவில் பல உட்கட்டமைப்பு மேம்பாட்டு வசதிகள் செய்யப்பட்டன.

மாநாட்டு நிறைவுவிழாவில் அறிவிக்கப்பட்ட படி, 165 ஏக்கர் நிலப்பரப்பில் செம்மொழிப் பூங்காவும், காந்திபுரத்தில் 1 கிலோ மீட்டர் நீளத்திற்கு மேலான மேம்பாலமும் அமைக்கப் பட அடிக்கல் நாட்டப்பட்டுப் பணிகள் தொடங்கியுள்ளன.

அண்ணா நூற்றாண்டு நிறைவு விழா - காஞ்சிபுரம் நகர் மேம்பாட்டுத் திட்டம்

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நிறைவு விழாவினை யொட்டி 25, 26 செப்டம்பர் 2009-ல் காஞ்சிபுரம் நகராட்சிக்கு சிறப்பு ஒதுக்கீடு செய்து சில வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்தப்படும் என அரசு அறிவித்ததையொட்டி 6 கோடியே 34 இலட்ச ரூபாய் செலவில் 11 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(தொடர்ச்சி நாளை)

அன்புள்ள,

மு.க.

17-3-2011

3544. நகராட்சி நிர்வாகத் துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!

உடன்பிறப்பே,

நகராட்சி நிர்வாகத் துறையில் கழக ஆட்சி கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் - திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

தஞ்சை பெரியகோவில் 1000 ஆண்டு நிறைவு - தஞ்சை நகர் மேம்பாட்டுத் திட்டம்

தஞ்சைப் பெரிய கோவில் கட்டப்பட்டு 1000 ஆண்டு நிறைவு விழாவையொட்டி அரசு சார்பில் விழா எடுக்கப்பட்டு, 25.19 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் தஞ்சை நகரில் பல அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

பேரூராட்சிகள் இயக்ககம்

பேரூராட்சிகள் நிர்வாகம்

"பேரூராட்சிகள்" எனும் உள்ளாட்சி அமைப்பு வகையினை உருவாக்கிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

நிதி அதிகார வரம்பு உயர்வு

சிறப்பு நிலை, தேர்வு நிலைப் பேரூராட்சி மன்றம் அனுமதி வழங்கும் திட்டத்திற்கான அதிகார வரம்பு 2 இலட்ச ரூபாய் என்பது 8 இலட்சம் ரூபாய் என்றும், முதல்நிலை மற்றும் இரண்டாம்நிலைப் பேரூராட்சிகளுக்கான அதிகார வரம்பு 1 இலட்சம் ரூபாய் என்பது 4 இலட்சம் ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டது. அதுபோலவே, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அதிகார வரம்பு 5 இலட்ச ரூபாய் என்பது 20 இலட்சம் ரூபாய் என்றும், மாவட்ட ஆட்சியர்களுக்கான அதிகார வரம்பு 10 இலட்சம் ரூபாய் என்பது 30 இலட்ச ரூபாய்

என்றும், பேரூராட்சிகளின் இயக்குநர் அதிகார வரம்பு 1 கோடி என்பது 3 கோடி ரூபாய் என்றும் 12.4.2008 இல் உயர்த்தப்பட்டது. அதேபோல, தொழில் நுட்ப அனுமதி வழங்கும் அதிகார வரம்பும் செயற்பொறியாளருக்கிருந்த 30 இலட்ச ரூபாய் 40 இலட்ச ரூபாய் என்றும், உதவி செயற்பொறியாளர் அனுமதி வழங்கும் அதிகார வரம்பும் 15 இலட்ச ரூபாய் என்பது 20 இலட்ச ரூபாய் என்றும் உயர்த்தப்பட்டுள்ளது. பேரூராட்சிகளில் செயற்பொறியாளர் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கும் நிதிவரம்பு 40 லட்சம் ரூபாயிலிருந்து 50 லட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

பேரூராட்சிகளுக்கு தேவையான உள் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த "அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" எனும் ஒரு சிறப்புத் திட்டம் நான்கு ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்படும் என 11.4.2007ல் சட்டமன்றத் தில் அறிவிக்கப்பட்டு; 6.7.2007 அன்று ஆணைகள் வெளியிடப்பட்டு, 3.9.2007 அன்று மாமல்லபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்டது. அதுமுதல் ரூ.280.50 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் அனைத்துப் பேரூராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.31.84 கோடி மதிப்பீட்டில் 28 பேரூராட்சிகளில் 479 சாலை மற்றும் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த வீடுகள் (ம) குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த வீடுகள் மற்றும் குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதி திட்டம் ஆகியவற்றின் கீழ், விளாங்குடி, பெரிய நாயக்கன்பாளையம், நெ.4.வீரபாண்டி, வீரகேரளம், கண்ணம் பாளையம், இடிகரை, மதுக்கரை, வேடப்பட்டி, சரவணம்பட்டி, வெள்ளாலூர், கெங்கவல்லி, மோகனூர், சீராப்பள்ளி, ஆலம்பாளையம், தெடாவூர், வீரகனூர், ஆர்.புதுப்பட்டி, அவல் பூந்துறை, ஊத்துக்குளி, பள்ளபாளையம், கொடு முடி, லக்கம்பட்டி,

பி.மேட்டுப்பாளையம், கூகலூர், பி.என்.பட்டி, கருப்பூர் உட்பட 42 பேரூராட்சிகளில் ரூ.81.44 கோடி மதிப்பீட்டில் 7248 வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டு இதுவரை 4190 வீடுகள் கட்டப் பட்டுள்ளன; எஞ்சிய வீடுகளின் கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

நகர்ப்புற வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள்

சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம்

சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் 1.12.1997 முதல் அறிமுகப்படுத்தப்பட்டு மத்திய மாநில அரசுகளின் நிதிப்பங்கீட்டில் **நகர்ப்புர சுய வேலைவாய்ப்புத் திட்டம் நகர்ப்புற மகளிர் சுயஉதவித் திட்டம்,** நகர்ப்புற ஏழைகளுக்கு வேலை வாய்ப்பு உருவாக்குவதற் குரிய திறன் மேம் பாட்டுப் பயிற்சி, நகர்ப்புற சமுதாய மேம்பாட்டுக் கட்டமைப்பு, நகர்ப்புற கூலி வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய துணைத் திட்டங்கள் 55.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு உள்ளன.

சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு

சுனாமி அவசர கால உதவித் திட்டம்

சுனாமி பாதித்த 5 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 19 பேரூராட்சிகளில் ரூ.63.67 கோடி செலவில் சாலைகள் மறு சீரமைத்தல் மற்றும் கட்டடங்கள் பழுதுபார்த்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டன.

வாழ்வாதார செயல்பாடுகள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் 12.78 கோடி ரூபாய்ச் செலவில் 19 பேரூராட்சிகளில் 60,966 உறுப்பினர்கள் அடங்கிய 3387 சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு குழு உறுப்பினர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் **பயிற்சிகள் அளிக்கப்பட்டு** நிலையான சொத்துகளை உருவாக்க பொருளாதார உதவிகள் வழங்கப்பட்டு உள்ளன. மேலும் 969 மாற்றுத் திறனாளிகளுக்கு வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட ரூ.96.90 லட்சம் மானியம் அளிக்கப்பட்டு பயன் அடைந்துள்ளனர். இத்திட்டத்தின் கீழ் பொருளாதார உதவி மற்றும் சுழல்நிதி பெற்ற

22,891 பயனாளிகளுக்கு உயிர்க்கூறு அங்க அடையாள அட்டை வழங்குவதற்கு இந்த அரசு ரூ.24.33 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்து, அதில் ரூ. 11.42 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2006-2011 வரை நிறைவேற்றப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டங்கள்

365.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 16.71 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கரூர், இனாம் - கரூர் நகராட்சியில் 38.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.21 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும்; தஞ்சாவூர் நகராட்சியில் 77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.16 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையிலும்; மயிலாடுதுறை நகராட்சியில் 46.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 84,290 மக்கள் பயன்பெறும் வகையிலும், திருச்சி மாநகராட்சியில் 132 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7.46 இலட்சம் மக்கள் பயன் பெறும் வகையிலும்; திருநெல்வேலி மாநகராட்சியில் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4.10 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும்; உதகமண்டலம் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு 5.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 94 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையிலும் 6 பாதாள சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இவை தவிர, கும்பகோணம், ஆலந்தூர், வளசரவாக்கம், மதுரை ஆகிய நகரங்களிலும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும், நடப்பு நிதியாண்டில் 23 பாதாள சாக்கடைத் திட்டங்கள் 806.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 136 கோடியே 14 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 4 நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட அனுமதிக்கப்பட்டு; மறைமலைநகர் பாதாள சாக்கடைத் திட்டம் முடிவடையும் நிலையில் உள்ளது. அரியலூர், உடுமலைப்பேட்டை நகராட்சிகளில் 66 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயலாக்கத்திற்கு அனுமதிக்கப்பட்டு ஆரம்பகட்ட நிலையில் உள்ளன.

ரூபாய் 158.05 கோடி மதிப்பீட்டிலான இந்த அரசினால் அனுமதிக்கப்பட்டு தற்போது நடைபெற்று வரும் ஆவடி நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் 2011 ஆகஸ்டிலும்; ரூபாய் 160.97 கோடி மதிப்பீட்டிலான தாம்பரம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் 2012 மே திங்களிலும்; ரூபாய் 60.01 கோடி மதிப்பீட்டிலான மதுரவாயல் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் 2012 ஆகஸ்டிலும்; ரூபாய் 20.47 கோடி மதிப்பீட்டிலான திருமழிசை பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் 2012 பிப்ரவரியிலும்; ரூபாய் 38.29 கோடி மதிப்பீட்டிலான போரூர் பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 2012 ஜூலையிலும் முடிவடையும்.

அம்பத்தூர் பாதாள சாக்கடைத் திட்டம்

அம்பத்தூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம், இரண்டாம் கட்டப் பணியின் கீழ் கழிவு நீரேற்று நிலையம் மற்றும் கழிவுநீர் கொண்டு செல்லும் விசைக் குழாய்கள் அமைக்கும் பணிகள் ரூ.7.50 கோடி மதிப்பீட்டில் ஆகஸ்ட் 2007ல் தொடங்கப்பட்டன. இப்பணிகள் முடிவடைந்து ஆகஸ்ட் 2009ல் திட்டம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

முதற்கட்ட அம்பத்தூர் பாதாள சாக்கடைத் திட்டத்தில் விடுபட்ட பகுதிகளுக்கு ரூ.35.86 கோடி மதிப்பீட்டில் 22.6.2010 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு நடைபெற்றுவரும் பணிகள் 2012 ஜூலையில் முடிவடையும்.

திருவொற்றியூர் பாதாள சாக்கடைத் திட்டம்

திருவொற்றியூர் நகராட்சிப் பகுதியில் கழிவுநீர் அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்தும் பணி தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிதி உதவியுடன் 5 சிப்பங்களில் ரூபாய் 87.63 கோடி திருத்திய திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2007 மே திங்களில் தொடங்கப்பட்ட இப்பணிகள் 2012 டிசம்பரில் முடிவுறும்.

பல்லவபுரம் பாதாள சாக்கடைத் திட்டம்

பல்லவபுரம் நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் ரூபாய் 72.10 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாதவரம் பாதாள சாக்கடைத் திட்டம்

மாதவரம் நகராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் ரூபாய் 37.81 கோடி மதிப்பீட்டில் மார்ச் 2012ல் முடிக்கத் திட்டமிடப் பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவை தவிர, ரூபாய் 155.22 கோடி திருத்திய மதிப்பீட்டில் நடைபெறும் அம்பத்தூர் (பிரிவு 3) நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் 2012 ஜூலையிலும்; ரூபாய் 28.08 கோடி மதிப்பீட்டிலான உள்ளகரம் புழுதிவாக்கம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் 2013 ஜனவரியிலும்; ரூபாய் 20.19 கோடி மதிப்பீட்டிலான பெருங்குடி பேரூராட்சி பாதாள சாக்கடைத் திட்டம் 2012 நவம்பரிலும்; ரூபாய் 58.61 கோடி மதிப்பீட்டிலான பள்ளிக்கரணை பேரூராட்சிக்கான பாதாள சாக்கடைத் திட்டம் 2013 ஜனவரியிலும் முடிவடையும்.

ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்குட்பட்ட போரூர், திருமழிசை ஆகிய பேரூராட்சிகளில் ரூ.58.76 கோடி மதிப்பீட்டிலும், பெருங்குடி பேரூராட்சியில் ரூ.20.19 கோடி மதிப்பீட்டிலும், பள்ளிக்கரணை பேரூராட்சியில் 58.61 கோடி மதிப்பீட்டிலும் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. மேலும், நந்தம்பாக்கம், சோழிங்கநல்லூர், மீனம்பாக்கம், சின்ன சேக்காடு, புழல் ஆகிய பேரூராட்சிகளில் நிறைவேற்றபட விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

மாமல்லபுரம் பேரூராட்சியில் ரூ. 6.08 கோடி மதிப்பீட்டிலும், திருச்செந்தூர் பேரூராட்சியில் ரூ 14.48 கோடி மதிப்பீட்டிலும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

வீடுகளுக்குப் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குதல்

இதுவரை முடிக்கப்பட்டுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்களின் மூலம் 1,70,477 வீடுகளுக்குப் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் - நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமைக்கான திட்டம்

இத்திட்டத்தில் 47 திட்டங்களுக்கு ரூ.5134.05 கோடி சென்னை, மதுரை கோயம்புத்தூர் ஆகிய நகரங்களுக்கு

ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இந்த 47 திட்டங்களுக்கான மத்திய அரசின் பங்கீடு ரூ.2162.72 கோடி. மாநில அரசின் பங்கீடு ரூ.881.78 கோடி. இந்தப் பங்கீட்டில் இதுவரை மத்திய அரசு ரூ.933.16 கோடியும் மாநில அரசு ரூ.373.88 கோடியும் ஆக மொத்தம் ரூ.1307.04 கோடி நிதி மத்திய மற்றும் மாநில அரசுகளால் விடுவிக்கப்பட்டுள்ளது. ஒப்பளிக்கப்பட்ட 47 திட்டங்களில் இதுவரை 9 திட்டங்கள் முடிவுற்றன. மற்ற திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்ற நிலையில் உள்ளன.

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற கட்டமைப்புத் திட்டம்

மாநில அளவிலான ஒப்பளிப்புக் குழு 122 திட்டங்களுக்கு ரூ.882.72 கோடி திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்பளிப்பு செய்துள்ளது. இத்திட்டங்களில் மத்திய அரசின் பங்கீடு ரூ.706.18 கோடியும், மாநில அரசின் பங்கீடு ரூ.88.27 கோடியும் ஆகும். இந்தப் பங்கீட்டில் இதுவரை மத்திய அரசு ரூ.559.64 கோடியும் மாநில அரசு ரூ.69.96 கோடியும் ஆக மொத்தம் ரூ.629.60 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த 122 திட்டங்களில் இதுவரை 88 திட்டங்கள் முடிவுற்றன; மற்ற திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

பெரு நகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் 28 திட்டங்களுக்கு ரூ.662.42 கோடி அனுமதி அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட ரூ.198.88 கோடியில் 5 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு; மற்ற திட்டங்கள் பல்வேறு நிலைகளில் முன்னேற்ற நிலையில் உள்ளன.

சென்னை மாநகராட்சி

மேம்பாலங்கள்:

சென்னை நகரில் பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக, ரூ.9.72 கோடி செலவில் வடக்கு உஸ்மான் சாலை மற்றும் மகாலிங்கபுரம் சாலை சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலம் 30.3.2008 அன்றும்; ரூ.19.80 கோடி செலவில் உஸ்மான் சாலை மற்றும் துரைசாமி சாலை சந்திப்பில் கட்டப்பட்ட மேம்பாலம் 14.8.2008 அன்றும்; ரூ.16.50 கோடி செலவில் கோபதி நாராயணா சாலை மற்றும் திருமலை சாலை சந்திப்பில் கட்டப்பட்ட

கலைவாணர் மேம்பாலம் 29.12.2008 அன்றும்; ரூ.19.93 கோடி செலவில் டர்ன்புல்ஸ் சாலை மற்றும் செனடாப் சாலை சந்திப்பில் கட்டப்பட்ட ஜி.கே.மூப்பனார் மேம்பாலம் 11.12.2009 அன்றும்; ரூ.6.03 கோடி செலவில் அடையாறு ஆற்றின் குறுக்கே ஆலந்தூர் சாலையில் கட்டப்பட்ட ஆலந்தூர் அபிரகாம் மேம்பாலம் 11.12.2009 அன்றும்; ரூ.4.33 கோடி செலவில் ஜோன்ஸ் சாலையில் கட்டப்பட்ட சி.பி.பவளவண்ணன் வாகனச் சுரங்கப்பாதை 11.12.2009 அன்றும் திறந்து வைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

முரசொலி மாறன் மேம்பாலம் - பெரம்பூர்

வடசென்னை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பெரம்பூர் ரயில்வே மேம்பாலப் பணி 1999ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டிருந்த போதிலும், முந்தைய அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் இப்பணி முடக்கப்பட்டு, பெரம்பூர் பகுதி வாழ்மக்கள் பெரும் வேதனைகளுக்கு ஆட்பட்டு வந்தனர். 2006ஆம் ஆண்டில் இந்த அரசு அமைந்தபின் 51 கோடி ரூபாய்ச் செலவில் 2008 ஜூன் திங்களில் இந்தப் பாலத்தை மீண்டும் கட்டத் தொடங்கி 21 மாத காலத்தில் பணிகள் முடிந்து, 28.3.2010 அன்று திறந்து வைக்கப் பட்டது.

மேலும், ரூ.15.75 கோடி செலவில் ரங்கராஜபுரம் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே மேம்பாலம், ரூ.13.39 கோடி செலவில் வில்லிவாக்கம் இரயில்வே சந்திக்கடவு - 2ல் வாகன சுரங்கப்பாதை, ரூ.10.55 கோடி செலவில் மணியக்கார சத்திரத் தெருவில் இரயில்வே சந்திக்கடவின் குறுக்கே வாகனச் சுரங்கப் பாதை ஆகிய பணிகள் நடைபெறுகின்றன; இப்பணிகள் விரைவில் முடிவடையும்,

மழைநீர் வடிகால்வாய்

சென்னை மாநகராட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் மழைநீர்த் தேக்கம் உள்ள பல்வேறு பகுதிகளில் மழைநீர் வடிகால் துறை மூலம், 158.61 கி.மீ. நீளத்திற்கு ரூ.89.68 கோடியில் மழைநீர் வடிகால்வாய்கள் கட்டப்பட்டுள்ளன.

சென்னைவாழ் மக்களுக்கு மழைக்காலத்தில் உண்டாகும் வெள்ள பாதிப்பினால் ஏற்படும் துன்பத்தைத் தவிர்க்கும் விதமாக ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்

மூலமாக சிறிய மற்றும் பெரிய மழைநீர் வடிகால்வாய்கள் அமைப்பதற்கு ரூ.1447.91 கோடி திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்நாள் வரை சென்னை மாநகராட்சி செயல்படுத்திட அனுமதிக்கப்பட்ட திட்டங்களில் இதுவே பெருந்திட்டமாகும்.

இத்திட்டத்தின்கீழ் சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட ரூ.814.88 கோடி மதிப்பீட்டுத் தொகையில் 320.82 கி.மீ. நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால்வாய்கள் கட்டுதல், 183.08 கி.மீ. நீளத்திற்குப் பழுதடைந்த கால்வாய்களைப் புதுப்பித்தல், 28.64 கி.மீ. நீளத்திற்கு கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் அடங்கிய கொளத்தூர், வேளச்சேரி, இராயபுரம், கேப்டன் காட்டன் கால்வாய், கூவம், மாம்பலம் - நந்தனம், வடக்கு பக்கிங்காம் கால்வாய், மத்திய பக்கிங்காம் கால்வாய், தெற்கு பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, அடையாறு, விருகம்பாக்கம், அரும்பாக்கம் ஆகிய 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளுக்குப் பணி ஆணைகள் வழங்கப்பட்டுப் பணிகள் தற்போது நடைபெறுகின்றன.

மெரினா அழகுபடுத்தும் திட்டத்தின்கீழ் நடைபாதையைச் சுத்தம் செய்வதற்கு, அழுக்கைத் தேய்த்து சுத்தப்படுத்தும் இயந்திரம், புல்தரையைச் சமப்படுத்துவதற்கான உபகரணம், மெரினா கடற்கரையில் முதன்முதலாக மணற்பரப்பில் மணலை ஜலித்து சுத்தம் செய்வதற்கான இயந்திரம், மெரினா கடற்கரையின் நடைபாதையைச் சுத்தம் செய்வதற்கு அமர்ந்து இயக்கும் சிறிய வகையிலான 2 இயந்திரப் பெருக்கிகள் ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு மெரினா கடற்கரைப்பகுதி எழிலூட்டும் பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(தொடர்ச்சி நாளை)

அன்புள்ள,

மு.க.

18-3-2011

3545. நகராட்சி நிர்வாகத் துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!

உடன்பிறப்பே,

நகராட்சி நிர்வாகத் துறையில் கழக ஆட்சி கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் - திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

சுகாதாரம்

தொற்றுநோய் மருத்துவமனையை நவீனமயமாக்குதல்

சென்னை தொற்றுநோய் மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் ரூ.18 கோடி செலவில் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு; கட்டுமானப் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

இணைய தளம் மூலம் பிறப்பு, இறப்பு பதிவுகள் மற்றும் சான்றிதழ் வழங்குதல்

இந்தியாவிலேயே முதன் முறையாக பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் இணைய தளத்தில் பதிவு செய்யப்பட்டு உலகம் எங்கும் உள்ள மக்கள், சான்றிதழ்களை இலவசமாக எடுக்கும் வகையில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை 17,13,130 பொதுமக்கள் பயன் பெற்றுள்ளனர். ரூ.1.5 கோடி செலவில் 75 ஆண்டு பழைய பதிவேடுகள் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. மேலும் பழைய பதிவேடுகள் அனைத்தும் கணினி மயமாக்கும் பணி

குளிரூட்டும் பெட்டி அமரர் ஊர்தி போன்ற வசதிகள்

இந்தியாவிலேயே முதன்முறையாக, இறந்தோரின் அனைத்து அடக்க செலவினங்களையும் (வீடு முதல் மயான பூமி வரை) முழுமையாக சென்னை மாநகராட்சியே ஏற்றுக் கொண்டுள்ளது. (குளிரூட்டும் பெட்டி, அமரர் ஊர்தி, எரித்தல், புதைத்தல்) இதற்காக ஆண்டிற்கு ரூ.1.5 கோடி செலவிடப்படுகிறது.

இறைச்சிக்கூடம் நவீனமயமாக்குதல்

100 ஆண்டு பழமை வாய்ந்த பெரம்பூர் இறைச்சிக் கூடம் 48 கோடி ரூபாய்ச் செலவில் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஒரு கோடி ரூபாய்ச் செலவில் வில்லிவாக்கம், சைதாப்பேட்டை இறைச்சிக் கூடங்கள் நவீனப்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

கல்வித்துறை

தொடக்கக் கல்வியை ஓர் இனிமையான அனுபவமாக மாற்ற சென்னைப் பள்ளிகளில் செயல் வழிக் கற்றல் முறை மூலம் கற்றலையும், கற்பித்தலையும் சிறப்பான அனுபவமாக மாற்ற, வகுப்பறைகள் தேவையான உபகரணங்களோடு நவீன முறையில் மேம்படுத்தப்பட்டுள்ளன. சென்னைப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவ மாணவியரின் கல்வித் தரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த, 10ம் மற்றும் 12ம் வகுப்பில் சிறப்பாகத் தேர்ச்சியடைந்த மாணவ மாணவிகளுக்கு ஊக்கத் தொகையும், மேற்படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகையும், 12-ம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு மடிக்கணினியும், சிறப்பாகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகையும் தொடர்ந்து வழங்கப்படுகின்றன.

செயல்வழிகற்றல் பள்ளி அறைகள்

மேலும், மாணவ மாணவியர்க்குப் பள்ளிகளில் பயின்று வரும் காலங்களில் மனதளவிலும், உடலளவிலும் தன்னம்பிக்கை ஊட்டும் வகையில், அவர்களின் உடல் ஆரோக்கியம் காத்திட விளையாட்டில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்குச் சீருடை, பரிசுத் தொகை, மாணவிகளுக்கு இலவசமாக சானிட்டரி நாப்கின்கள் ஆகியவை வழங்கப்படுகின்றன. தொடக்கப் பள்ளி முதல் மேல்நிலைப் பள்ளி வரை பயிலும் மாணவ மாணவியருக்கு இலவசப் பல் பரிசோதனை, முழு உடல் பரிசோதனை, சீருடை மற்றும் காலணி வழங்குதல் போன்ற பணிகள் நடைமுறைபடுத்தப்படுகின்றன. மேலும், மாணவ மாணவியர்க்கு வாழ்வாதாரம் அளிக்கும் பொருட்டு வேலையுடன்கூடிய கல்வித் தொகுதிகள், நான்கு சமுதாயக் கல்லூரிகளிலும், சென்னை மாநகராட்சி தொழிற்பயிற்சி நிலையத்திலும் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இத்திட்டங்கள் அனைத்தும் உள்ளாட்சித் துறையால் முதன்முறையாகச் செயல்படுத்தப்படும் திட்டங்களாகும்.

வருவாய்

சொத்து வரி

சென்னை மாநகராட்சியின் 2006-07 ஆம் ஆண்டில் ரூ.231.00 கோடியாக இருந்த சொத்து வரி வசூல், 2007-08 ஆம் ஆண்டு 26 விழுக்காடு உயர்ந்து ரூ. 291.00 கோடி; 2008-09 ஆம் ஆண்டில் மேலும் 11 விழுக்காடுகள் உயர்ந்து ரூ. 323.80 கோடி; 2009-10 ஆம் ஆண்டு ரூ. 365.54 கோடி என வசூலிக்கப்பட்டு, வரி வசூல் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. இது 2006-07 ஆம் ஆண்டை விட 57 விழுக்காடுகள் கூடுதல் ஆகும். நடப்பு நிதியாண்டில் இதுவரை ரூ.330.16 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

தொழில் வரி

2006-07 ஆம் ஆண்டில் ரூ. 63.82 கோடியும், 2007-08 ஆம் ஆண்டில் ரூ.75.00 கோடியும், 2008-09 ஆம் ஆண்டில் ரூ.89.91 கோடியும், 2009-10 ஆம் ஆண்டில் ரூ.126.21 கோடியும் தொழில் வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் ரூ.113.91 கோடி தொழில் வரி மூலமாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

தொழில் வரி உரிமம்

தொழில் வரி உரிமம் வழங்கும் முறை எளிமையாக்கப்பட்டு 2006-07 ஆம் ஆண்டு ரூ.3.22 கோடியாக இருந்த தொழில்வரி, படிப்படியாக உயர்ந்து நடப்பு நிதியாண்டில் இன்றைய தேதி வரை ரூ.5.41 கோடி என வசூல் செய்யப்பட்டுள்ளது. சொத்து வரி செலுத்தப்பட்ட தொகை, நிலுவை போன்ற விவரங்களை அறிந்து கொள்ள குறுந்தகவல் சேவையும், கைபேசி மூலம் சொத்து வரி வசூல் செய்யும் முறையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பூங்காக்கள்

சென்னையில் செம்மொழிப் பூங்கா

சென்னை அண்ணா மேம்பாலம் அருகே, 8 ஏக்கர் பரப்பில் 20 கோடி ரூபாய்ச் செலவில் செம்மொழிப் பூங்கா அமைக்கப்பட்டு மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது. சென்னை மாநகரை எழிலூட்டி சிங்காரச் சென்னையாக மேம்படுத்தும் முயற்சியில்

பூங்கா மேம்பாட்டுப் பணிகள் 45 கோடியே 28 இலட்சம் ரூபாய்ச் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

பனகல் பூங்கா, டாக்டர் நடேசன் பூங்கா, திரு.வி.க பூங்கா, டாக்டர். விஸ்வேஸ்வரய்யா கோபுரப் பூங்கா ஆகியவை பல்வேறு நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

இதேபோல் இராஜாஜி சாலைப் பூங்கா, ஜெய் நகர் பூங்கா, அசோக் நகர் முதல் அவின்யூ பூங்கா, நெசப்பாக்கம் பூங்கா, காந்தி இர்வின் சாலை பூங்கா ஆகியவை புதிதாக உருவாக்கப்பட்ட பூங்காக்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

மெரினா கடற்கரையில் 3.1 கி.மீ. நீளமுள்ள கடற்கரைப் பகுதி அமர்விடம், நீரூற்றுகள், நடைபாதைகள் ஆகியவை உள்ளடக்கிய பசுமையான புல்வெளித் தளங்களாக ரூ. 17.00 கோடி செலவில் அழகுபடுத்தப்பட்டுள்ளது.

அடையாறு பூங்கா

தமிழக அரசு, சுற்றுச் சூழல் பூங்கா உருவாக்கும் நோக்கத்துடன், 11.10.2006 அன்று அடையாறு பூங்கா அறக்கட்டளை (Adyar Poonga Trust) அமைத்தது. தற்போது, அது சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை எனப் பெயரிடப்பட்டுள்ளது. 58 ஏக்கர் பரப்பளவு கொண்ட அடையாறு சிற்றோடை நிலப் பகுதியும் இப்பணிக்காக ஒப்படைக்கப்பட்டு ஏறத்தாழ 22.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்பூங்கா உருவாக்கப்பட்டுத் திறக்கப்பட்டுள்ளது.

கோவையில் செம்மொழிப் பூங்கா

கோயம்புத்தூரில், 'செம்மொழிப் பூங்கா' என்னும் பெயரில் தாவர மரபணு வங்கி மற்றும் அது தொடர்பான ஆய்வு மையம் ஆகியவைகளைக் கொண்ட ஒரு உலகத்தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா ஒன்றினை அமைப்பதற்கு 26.3.2010 அன்று ஒப்புதல் அளித்தது, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை, இப்பூங்கா விற்கான பெருந்திட்டம் தயாரித்தல் மற்றும் ஆலோசகர்களை நியமித்தல், ஒப்பந்தங்கள் நிறைவேற்றுதல் ஆகியவற்றைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான கருத்துருவாக்கம் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் போது 27.6.2010 அன்று வெளிடப்பட்டது; 163.08 ஏக்கரில் அமையவிருக்கும் இப்பூங்கா முதற்கட்டமாக 45.25

ஏக்கரில் அமைக்கப்பட 12.12.2010 அன்று அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டது.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் குடிநீர் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் இல்லாத தெருக்களுக்குக் குழாய்கள் அமைக்கும் பணி

சென்னை மாநகரில் ஜூலை 2006 நிலவரப்படி குடிநீர்க் குழாய்கள் இல்லாமலிருந்த 336 தெருக்களுக்கும், கழிவுநீர்க் குழாய்கள் இல்லாமலிருந்த 177 தெருக்களுக்கும் குடிநீர்க் குழாய்கள் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

குடிநீர் வழங்கும் ஆதாரங்கள் :

சென்னையைச் சுற்றியுள்ள நீர் ஆதாரங்களான பூண்டி, சோழவரம், புழல், போரூர், செம்பரம்பாக்கம், கிணற்றுத் தளங்களிலுள்ள நிலத்தடிநீர் ஆதாரங்கள் (மீஞ்சூர், பஞ்செட்டி, தாமரைப்பாக்கம், பூண்டி, கொசத்தலையாற்றுப் படுகை, கன்னிகைப்பேர் மற்றும் தென் கடற்கரை நிலநீர் தாங்கி), கடலூர் மாவட்டத்தில் உள்ள வீராணம் ஏரி, நெய்வேலி நிலநீர்ப் படுகை, கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தின்கீழ் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கண்டலேறு ஏரி ஆகியவை சென்னைக்குக் குடிநீர் வழங்கும் முக்கிய ஆதாரங்களாகும். தற்போது வாரியம் நாளொன்றுக்கு 775 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்கி வருகின்றது. இதில், ஏறத்தாழ 695 மில்லியன் லிட்டர் நகரின் வீட்டு உபயோகிப் பாளர்களுக்கும், ஏறத்தாழ 80 மில்லியன் லிட்டர் சென்னைப் பெருநகர் பகுதியிலுள்ள தொழிற் சாலைகள், வணிக வளாகங்கள், ஊராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது.

கிருஷ்ணா குடிநீர் திட்டத்தின்கீழ், ஆந்திரப்பிரதேசத்திலுள்ள கண்டலேறு நீர்த் தேக்கத்திலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்கு நீர்ப் பெறப்படுகிறது. பூண்டி நீர்த் தேக்கத்திலிருந்து, இணைப்புக் கால்வாய்கள் வழியாகப் புழல், செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு நீர் அனுப்பப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட பின்னர், சென்னைப் பெரு நகருக்கு விநியோகிக்கப்படுகிறது. 2010-2011ல், 27.01.2011 வரை 4.663 டி.எம்.சி. நீர் பெறப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக 2009-2010ல் தான் 7.011 டி.எம்.சி. நீர்

பெறப்பட்டது.

செம்பரம்பாக்கத்தில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கும் திறனுடைய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்:

கிருஷ்ணா குடிநீர் திட்டத்தின் மூலம் பெறப்படும் கிருஷ்ணா நீரைச் சுத்திகரிக்க, சென்னை நகருக்கு அருகிலுள்ள செம்பரம் பாக்கத்தில் 296 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்தியாவின் இரண்டாவது பெரிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையமாக நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் குடிநீர் சுத்திகரிக்கும் நிலையம் மற்றும் நீர் கொண்டு செல்லும் குழாய்கள் அமைப்பதற்கு 1996ஆம் ஆண்டு தமிழக அரசால் அனுமதி அளிக்கப்பட்டு, 19.7.2007 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிலையத்திலிருந்து தற்பொழுது நாளொன்றுக்கு சுமார் 260 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிக்கப்பட்டு சென்னை நகருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள்

மீஞ்சூரில் அமைக்கப்பட்டுள்ள கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையம்:

சென்னைக் குடிநீர் வாரியம் மீஞ்சூரை அடுத்த காட்டுப்பள்ளியில் வடிவமைத்து, சொந்தமாக நிறுவி, இயக்கி, திருப்பி ஒப்படைக்கும் (DBOOT) அடிப்படையில் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையத்தை அமைத்துள்ளது. இந்நிலையம் 25.7.2010 முதல் வர்த்தக ரீதியில் செயலாக்கத்தைத் தொடங் கியது. 31.7.2010 அன்று இத்திட்டம் சென்னை மாநகர மக்களுக்குப் பயன்படும் வகையில் இந்நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு ஏறத்தாழ 100 மில்லியன் லிட்டர் குடிநீர் மணலி, மாதவரம், புழல் நீரேற்று நிலையங்கள் மூலம் சென்னை நகர மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் நெம்மேலி என்ற இடத்தில் அமைக்கப்பட்டு வரும் கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம்

வளர்ந்து வரும் சென்னை மாநகரின் குடிநீர்த் தேவையைச் சமாளிக்க, நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட மேலும் ஒரு கடல்நீரைக் குடிநீராக்கும் நிலையம் கிழக்குக்

கடற்கரைச் சாலையில் நெம்மேலியில் ரூ.1033.68 கோடி செலவில் அமைக்கப்பட மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 23.2.2010 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2011 டிசம்பரில் முடிவடையும்.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகரில் நடைபெற்றுவரும் பணிகள்

சென்னை மற்றும் சென்னைப் புறநகர்ப் பகுதிகளில் உள்ள உள்ளாட்சிப் பகுதிகளுக்கு இதுவரை இல்லாத அளவிற்கு ரூ.2032 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றும் 28 திட்டங்கள் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை நகரின் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் போதுமான அழுத்தத்தில் சமமான அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட சென்னைக் குடிநீர் வாரியம் சென்னை மாநகரில் குடிநீர் விநியோக மண்டலங்களை 16 ஆகப் பிரித்து, அதற்கு ஈடாகக் குடிநீர் பகிர்ந்தளிப்பு நிலையங்களை உருவாக்கியுள்ளது. ஏற்கனவே, 12 குடிநீர் பகிர்மான நிலையங்கள் மற்றும் 11 குடிநீர் பகிர்மான மண்டலங்களின் மேம்படுத்தும் பணிகள் உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள கீழ்ப்பாக்கம், அண்ணா பூங்கா, தென் சென்னை நீரேற்று நிலையம், கலைஞர் கருணாநிதி நகர் ஆகிய 4 குடிநீர் பகிர்மான நிலையங்களை மேம்படுத்தும் பணிகள் மற்றும் கீழ்ப்பாக்கம், கலைஞர் கருணாநிதிநகர், திருவல்லிக்கேணி, அண்ணா பூங்கா, தென்சென்னை ஆகிய 5 குடிநீர் பகிர்மான மண்டலங்களை மேம்படுத்தும் பணிகள், இதர சில மேம்பாட்டுப் பணிகள் ஆகியவற்றுக்கு ரூபாய் 337.48 கோடி அனுமதிக்கப்பட்டு, 2007 அக்டோபரில் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அவற்றுள் தென்சென்னை நீரேற்றுக் குடிநீர்ப் பகிர்மான நிலையப் பணிகள் (Southern Headworks) முடிவுற்றுப் பயன்பாட்டில் உள்ளது; மற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்துப் பணிகளும் 2011 ஆம் ஆண்டு இறுதியில் முடிவடையும்.

தகவல் தொழில் நுட்ப விரைவு சாலையில் (இராஜீவ் காந்தி சாலை) குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றுதலுக்கான உள் கட்டமைப்புப் பணி:

இராஜீவ் காந்தி (தகவல் தொழில் நுட்ப விரைவு சாலை) சாலையில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் கட்டமைப்புப் பணிகள் ரூ.41.77 கோடி மதிப்பீட்டில் 2007-ல் மேற்கொள்ளப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ளன. இதனைத் தொடர்ந்து தகவல் தொழில் நுட்ப சாலை நெடுகிலும் உள்ள நுகர்வோர்க்கு நாள் ஒன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்படும். அவ்வாறே, கழிவுநீரைச் சேகரிக்கும் அமைப்புப் பணிகள் நாவலூரில் ஒன்றும் (6 MLD), சோழிங்க நல்லூரில் ஒன்றும் (18 MLD) ஆக 2 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான நடவடிக்கையை வாரியம் மேற்கொண்டுள்ளது. 14 கழிவு நீரகற்று நிலையங்களுக்கான கட்டுமானப்பணி, கழிவுநீர் குழாய்கள் பதித்தல் பணி, விசைக் குழாய் பதித்தல் பணி ஆகியவற்றுக்கு ஆணைகள் 20.09.2010 அன்று வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகரிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று திட்டங்கள்

ரூபாய் 12.36 கோடி மதிப்பீட்டில் 2008 மார்ச்சில் தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் போரூர்ப் பேரூராட்சிக்கான குடிநீர் வழங்கல் அபிவிருத்தித் திட்டம் மார்ச் 2011லிலும்; ரூபாய் 23.30 கோடி மதிப்பீட்டில் 2008 ஆகஸ்டில் தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் மதுரவாயல் நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் 2012 ஏப்ரலிலும்; ரூபாய் 103.84 கோடி மதிப்பீட்டில் 2009 பிப்ரவரியில் தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் ஆவடி நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் 2011 நவம்பரிலும்; ரூபாய் 64.39 கோடி மதிப்பீட்டில் 2009 டிசம்பரில் தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் ஆலந்தூர் நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் 2011 டிசம்பரிலும்; ரூபாய் 267.08 கோடி மதிப்பீட்டில் 2009 செப்டம்பரில் தொடங்கப்பட்டு நடைபெற்று வரும் அம்பத்தூர் நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் 2011 நவம்பரிலும், ரூபாய் 19.17 கோடி மதிப்பீட்டில் 2011 ஜனவரியில் தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் நெற்குன்றம் ஊராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் 2012 ஏப்ரலிலும்; ரூபாய் 24.24 கோடி மதிப்பீட்டில் 2010 ஜூலையில் தொடங்கப்பட்டு

நடைபெற்றுவரும் உள்ளகரம்-புழுதிவாக்கம் நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் 2012 ஜூலையிலும்; ரூபாய் 85.11 கோடி மதிப்பீட்டில் 2010 ஆகஸ்டில் தொடங்கப்பட்டு நடைபெற்றுவரும் திருவொற்றியூர் நகராட்சிக்கான குடிநீர் வழங்கல் திட்டம் 2012 ஆகஸ்டிலும் முடிவடைந்து மக்களுக்குப் பயனளிக்கும்.

கழிவுநீரகற்றலில் இயந்திரங்கள் பயன்படுத்துதல்

மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றிச் சுமக்கும் இழி நிலையை நீக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன்படி, சென்னைக் குடிநீர் வாரியம் கழிவுநீர் அமைப்புகளைப் பராமரிக்க உயர் அழுத்த விசையுடன் நீரைப் பீய்ச்சும் இயந்திரங்கள், நீர்விசையால் இயங்கும் தூர்வாரும் இயந்திரங்கள் மற்றும் கையினால் இயக்கப்படும் வாளியாலான தூர்வாரும் இயந்திரங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி வருகிறது. தற்போது வாரியத்தில் 56 உயர் அழுத்த விசையுடன் நீரைப் பீய்ச்சும் இயந்திரங்களும், 53 நீர்விசையால் இயங்கும் தூர்வாரும் இயந்திரங்களும் பயன்பாட்டில் உள்ளன. இது தவிர 25 உயர் அழுத்த விசையுடன் நீரைப் பீய்ச்சும் இயந்திரங்கள் (Jet Rodding Machines), 3 கழிவுநீர் உறிஞ்சும் இயந்திரங்கள் (Super Suction Machines) மற்றும் 17 நீர் விசையால் இயங்கும் தூர்வாரும் இயந்திரங்கள் (Hydraulically Operated Desilting Machines) ஆகியவை கொள்முதல் செய்யப்பட்டு உபயோகத்தில் உள்ளன. மேலும் 17 நீர் விசையால் இயங்கும் தூர்வாரும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளன.

நலிவடைந்த பிரிவினருக்கான குடிநீர் இணைப்பு சலுகைகள்

நலிவடைந்த பிரிவினரும் எளிதில் குடிநீர் இணைப்புப் பெற தற்போது 500 சதுர அடி வரையுள்ள குடியிருப்புகளுக்கு ரூபாய் 100 மட்டுமே இணைப்புக் கட்டணமாகப் பெற்றுக் கொண்டு குடிநீர் இணைப்பு வழங்கப்படுகிறது. இதுவரை 21,435 இணைப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

தமிழகத்திலுள்ள கிராம மற்றும் நகரப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி வழங்கும் நோக்கத்துடன் 1971 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால்

வாரியம் நாட்டில் முன்னோடி நிறுவனமாகத் திகழ்கிறது.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

திருச்சி மாவட்டம் முத்தரசநல்லூர் மற்றும் கடியாகுறிச்சி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த 5 நகராட்சிகள், 11 பேரூராட்சிகள் மற்றும் 18 ஒன்றியங்களைச் சார்ந்த 3,163 ஊரக குடியிருப்புகளைச் சார்ந்த 15.75 இலட்சம் மக்கள் பயன் பெறக்கூடிய இராமநாதபுரம் மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் 112.2006-ல் ரூ.616.00 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்திட்டம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு ஓராண்டுக்கு முன்னதாகவே இரண்டாண்டுகளில் முடிக்கப்பட்டு, 11.6.2009 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தினால் இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை ஆகிய மூன்று மாவட்டங்கள் பெரிதும் பயனடைந்துள்ளன.

(தொடர்ச்சி நாளை)

அன்புள்ள,

மு.க.

19-03-2011

3546. கவசங்களையும் கேடயங்களையும் - என்றும் பிரிந்திடேன்!

உடன்பிறப்பே,

வரவிருக்கின்ற சட்டப் பேரவை பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் - களத்திலே நிற்க விருக்கும் - வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டு விட்டன. கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள 119 பெயர்களில் 58 பேர் புது முகங்கள் என்றும் 70 பேர் பட்டதாரிகள் என்றும் அதிலே வழக்கறிஞர்கள் 24 பேர் என்றும், டாக்டர்கள் 3 பேர் என்றும், முதுகலைப் பட்டதாரிகள் 27 பேர் என்றும் செய்தியாளர்கள் என்னைக் கேட்டபோது கூறியிருக்கிறேன்.

அறிவிக்கப்பட்ட வேட்பாளர்களில் சென்னையிலே தங்கியிருந்தோரும் - கழக மாவட்டச் செயலாளர்களும் நேற்றையதினம் இரவே என்னை சந்தித்து வாழ்த்தினைப் பெற்றுக் கொண்டு தொகுதிகளுக்கு சென்று விட்டார்கள். இதுவரை பொறுப்பிலே இருந்த ஒரு சிலருக்கு இந்தமுறை வாய்ப்பளிக்கப்படவில்லை. ஏன் அமைச்சர்களாக இருந்தவர்களான - எனக்கு மிகவும் நெருங்கிய - கழகத்தின் முதன்மைச் செயலாளர் ஆர்க்காடு வீராசாமியும், என்னுடைய தளகர்த்தர்களில் ஒருவர் என்று சொல்லத்தக்க அளவிற்கு என் வாழ்வோடு நெருங்கிய தொடர்புடைய தம்பி கோ.சி. மணியும் இந்தமுறை தேர்தலில் போட்டியிடவில்லை.

இன்னும் சொல்லப்போனால், நான் கழக வேட்பாளர்களை அறிவிப்பதற்கு முன்பே ஆர்க்காடு வீராசாமி என்னைச் சந்தித்து தனது உடல் நிலையைப் பற்றிக் கூறி தனக்கு இந்த முறை வாய்ப்பளிக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டார். வேட்பாளர்களை அறிவிப்பதற்கு முன்பாகவே அண்ணா அறிவாலயம் வந்து, என் பக்கத்திலே இருந்து வேட்பாளர்களை

அறிவித்தவுடன், அவரும் என்னை வாழ்த்தி பொன்னாடை அணிவித்தார். இந்த இரண்டு அமைச்சர்களுக்கும் வாய்ப்பு அளிக்காதது பற்றி செய்தியாளர்கள் என்னைக் கேள்வி கேட்டபோது அவர்கள் உடல் நிலை கருதி வாய்ப்பு தரப்படவில்லை என்று நான் அப்போதே கூறி, அதுவும் ஏடுகளிலே வெளி வந்துள்ளது. அதைப்போலவே தம்பி கோ.சி. மணிக்கு வாய்ப்பு தராவிட்டாலும், அவரால் வளர்க்கப்பட்ட மற்றொரு தம்பிக்குத்தான் அந்தத் தொகுதியிலே வாய்ப்பு தரப்பட்டுள்ளது. கோ.சி.மணி இளமை முதல் எப்பொழுதும் எனக்கு கவசமாகவும் எதிர்ப்புக் கணைகளி லிருந்து என்னைக் காத்திடும் கேடயமாகவும் விளங்குபவர். நானும் அவரும் வாழும்வரை இந்த உணர்வு நிரந்தரமாகவே இருக்கும்!

வட சென்னை மாவட்டக் கழகச் செயலாளராக அரும்பணியாற்றி - சுழன்று சுழன்று உழைத்து வரும் தம்பி வி.எஸ். பாபு அவர்களுக்கு - அவருடைய தொகுதி இந்தத் தேர்தலில் சீரமைப்பு காரணமாக பிரிந்துவிட்ட காரணத்தினால் - வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்ற போதிலும் - அவருடைய பட்டாளத்தோடு அறிவாலயம் வந்து எனக்கு பொன்னாடை அணிவித்து, அவருடைய மாவட்டத்தில் போட்டியிடும் கூட்டணியினரையெல்லாம் வெற்றி பெறச் செய்து அழைத்து வருவதாக சூளுரை கூறிவிட்டுச் சென்றபோது, என் மனத்திற்கு என்னாலேயே ஆறுதல் கூற முடியவில்லை. எப்படிப்பட்ட தம்பிமார்களை என் உடன்பிறப்புகளாகப் பெற்றிருக்கிறேன் என்பதை எண்ணி நான் பெருமிதம் கொண்டேன்.

ஆனால் ஒருசிலர் வாய்ப்பு கிடைக்காதவர்கள் - அல்லது அவர்களுடைய ஆதரவாளர்கள் வருத்தப்படத்தான் செய்கிறார்கள். ஒரு உதாரணம் கூறுகிறேன், கேளேன். கடலூர் சட்டமன்றத் தொகுதியில் என்னுடைய அருமை நண்பராக இருந்தவர் கடலூர் இளம்வழுதி.

அண்ணா அவர்கள் இருந்த காலத்திலிருந்து கழகத்தை வளர்த்தவர். அவர் இப்போது இல்லை, மறைந்துவிட்டார். ஆனாலும் அவருடைய குடும்பமே கழகக் குடும்பம். அவருடைய வீட்டிலே உள்ள பிள்ளை குட்டிகள் எல்லாம் கோபாலபுரம் வீட்டைத்தான் தங்கள் சொந்த வீடாகக் கருதுபவர்கள். அந்த கடலூர் இளம்வழுதியின் புதல்வன்தான் இள. புகழேந்தி. வழக்கறிஞரும் கூட. அவர் அந்தத் தொகுதியின் சட்டப் பேரவை

உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். ஆனால் கடந்த முறை அந்தத் தொகுதிக்கான வேட்பாளராக அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. கழகத்திலே வேறொரு வருக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று கருதி, புகழேந்தியை அழைத்து நிலைமையை நான் கூறியபோது அதனையேற்றுக் கொண்டு - மிகப் பொறுமையாக இந்த ஐந்தாண்டு காலமும் அவர் கழகப் பணிகளை ஆற்றி வந்தார். கடந்த முறை அவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்ட போது, தனக்கு வாய்ப்பு தராமல் விட்டு விட்டார்களே என்று அவர் எந்த தவறான செயல்களிலும் ஈடுபடவில்லை. யாரையும் தூண்டிவிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தக் கூறவில்லை. கழக மாணவர் அணியிலே பொறுப்பேற்று ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவ இயக்கங்களைத் தொடங்கிட உழைத்தார். எனவே இந்த ஐந்தாண்டுகள் சட்டமன்றத்திலே நல்ல பணி ஆற்றிய நண்பருக்கு வாய்ப்பு அளிக்க இயலாமல், கழகப்பணியை ஆற்றி வந்த இள. புகழேந்திக்கு வாய்ப்பு தரப்பட்டது என்றதும், இந்த ஐந்தாண்டுகள் சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றியவரின் ஆதரவாளர்கள் சிலபேர் அங்கே எதிர்ப்புகளைத் தெரிவித்ததாக ஏடுகளிலே செய்தி வந்துள்ளது. வாய்ப்பு கிடைக்காதவர்கள் பொறுமையாக இருந்த போதிலும், அவருடைய ஆதரவாளர்கள் என்போர், அவருடைய பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முனைகிறார்கள்.

இத்தகைய போக்குகள் நமது கழகத்திற்கு ஏற்றதல்ல. மாற்று முகாம்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளையெல்லாம் ஏடுகளில் கண்டு வருகிறோம். அதைப் பற்றிக்கூட செய்தியாளர்கள் என்னிடம் கேட்டபோது மற்றவர்களுக்கு ஏற்படுகின்ற சிக்கலைப் பார்த்து மகிழ்ச்சி அடையக் கூடியவன் நான் அல்ல என்றுதான் பதில் அளித்திருக்கிறேன். எனவே மற்றவர்களைப் பற்றியே நாம் நினைத்துக் கொண்டிராமல் நமது பணியினைத் தொடங்கிட வேண்டும்.

முறைப்படி தோழமைக் கட்சிகளோடெல்லாம் கலந்து பேசி எந்தெந்த கட்சிகள் எத்தனை தொகுதிகளிலே போட்டியிடுவது என்பது உறுதியாகிவிட்டது. அவைகள் எந்தெந்த தொகுதிகள் என்பது பற்றியும் தோழமைக் கட்சிகளோடு கலந்து பேசி மணிக்கணக்கிலே விவாதித்து, அவைகளும் அறிவிக்கப்பட்டுவிட்டன. அதன் பின்னர் கழகத்தின் சார்பில் வேட்பு மனு தாக்கல் செய்தவர்களையெல்லாம் நேர்காணலுக்கு

அழைத்து, இரவும் பகலுமாக கழகத்தின் தலைமை அவர்களோடு கலந்து பேசி, வேட்பாளர்களும் அறிவிக்கப்பட்டு விட்டார்கள். இதைத் தொடர்ந்து 19-3-2011 அன்று கழகத்தின் சார்பில் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட வுள்ளது. அந்தத் தேர்தல் அறிக்கையினைத் தயாரிப்பதற்காக கழகத்தின் சார்பில் நியமிக்கப் பட்ட குழுவினர் அளித்த விவரங்களை வைத்துக் கொண்டு தேர்தல் அறிக்கை தயாராகி, அச்சுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. அதைப்பற்றிக் கூட செய்தியாளர் ஒருவர் கடந்தமுறை கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையை அந்தத் தேர்தலிலேயே அதுதான் "கதாநாயகன்" என்று வர்ணிக்கப்பட்டதே, இந்த முறை தி.மு. கழகத்தின் தேர்தல் அறிக்கை எப்படி இருக்குமென்று கேட்டபோது - நான் சிரித்துக் கொண்டே "கதாநாயகி"யாக இருக்குமென்று சொன்னேன். அந்தத் தேர்தல் அறிக்கையிலே கூறப்படும் கருத்துக்களையெல்லாம் வாக்காளப் பெருமக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டிய பெரும் பொறுப்பு உனக்கு இருக்கிறது. கழகத்தின் சார்பில் கடந்த ஐந்தாண்டுகளில் செய்யப்பட்ட சாதனைகளை யெல்லாம் எடுத்துச் சொல்லி, இதைப் போன்ற சாதனைகளில் மீண்டும் தொடர்ந்து பெற்றிட நமது அணியினை ஆதரிக்க வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக்கொள்ள வேண்டியதும் உன்னுடைய கடமைதான்.

கழகத்தின் பொதுச் செயலாளரும், பொருளாளர் தம்பி ஸ்டாலினும், தென் மண்டலத்தின் அமைப்புச் செயலாளர் தம்பி மு.க. அழகிரியும், கழக முன்னணியினரும், பிரச்சாரகர்களும், கழகக் கலைஞர்களும் தேர்தல் சுற்றுப்பயணத்தில் ஈடுபடுவது பற்றிய விவரங்கள் அடுத்தடுத்து வரவுள்ளன. இதற்கு முன்பெல்லாம் நான் விடிய விடிய தேர்தல் பிரச்சாரம் செய்வேனே, வேனிலே அமர்ந்து கொஞ்சம் தயிர் சாதத்தை சாப்பிட்டுவிட்டு ஒவ்வொரு தொகுதியாக வலம் வருவேனே, அந்த அளவிற்கு பிரச்சாரம் செய்ய எனது உடல் நிலை இடம் கொடுக்காவிட்டாலும், வரா விட்டால் நீ கோபித்துக் கொள்வாயே என்பதற்காக என்னால் முடிந்த அளவிற்கு ஆங்காங்கு வருவதற்கு முயற்சி செய்கிறேன். அதுபற்றிய விவரங்களையும் இரண்டொரு நாட்களில் தெரிவிக்கின்றேன்.

உடன்பிறப்பே, நாளை (19.3.2011) முதல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன. தேர்தலுக்கு இன்னும்

ஒருமாதம் கூட இல்லை. எண்ணி 24 நாட்கள்தான் உள்ளன. அதற்குள் நமக்கு எண்ணிலடங்கா பணிகள் உள்ளன. நேரம் கிடைக்கும்போதெல்லாம் கடிதம் மூலமாக உன்னுடன் தொடர்பு கொள்கிறேன். மாற்றார் முகாமிலே என்ன நடக்கிறது என்றெல்லாம் பார்த்துக் கொண்டிராமல், மக்களை நேரில் சந்தித்து நாம் செய்தவைகளைச் சொல்லி, செய்யப் போவதையும் சொல்லி உண்மை உழைப்புக்கான அங்கீகாரத்தை அளிக்கச் செய்திடுக!

அன்புள்ள,

மு.க.

19-3-2011

3547. நகராட்சி நிர்வாகத் துறையின் ஐந்தாண்டு சாதனைகள்!

உடன்பிறப்பே,

நகராட்சி நிர்வாகத் துறையில் கழக ஆட்சி கடந்த ஐந்தாண்டு காலத்தில் நிறைவேற்றிய சாதனைகள் - திட்டங்களின் தொடர்ச்சியினை எழுதுகிறேன்.

ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டம்

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள குடிநீர் ஆதாரங்கள் புளோரைடு உப்பால் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட மற்றும் தரமான குடிநீர் வழங்குவதற்காக ஒகேனக்கல் குடிநீர் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டம் தமிழ்நாடு அரசால் 1,928.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினைச் செவ்வனே செயல்படுத்துவதற்காக 5 தொகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் டிசம்பர் 2012-ல் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற் குக் கொண்டுவர இலக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டம் நிறைவடையும்பொழுது இவ்விரு மாவட்டங்களிலுமுள்ள 3 நகராட்சிகள், 17 பேரூராட்சிகள் மற்றும் 18 ஊராட்சி ஒன்றியங் களிலுள்ள 6,755 ஊரகக் குடியிருப்புகளிலுள்ள ஏறத்தாழ 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவர்.

அனுமதிக்கப்பட்டுள்ள முக்கிய கூட்டுக் குடிநீர் திட்டங்கள்

இவை தவிர, குடிநீர் வசதி தேவைப்படும் சில முக்கிய நகரங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள குடிநீர்த் திட்டங்கள்:

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோவில் மற்றும் மயிலாடுதுறை ஊராட்சி

ஒன்றியங்களிலுள்ள 295 குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட குடியிருப்புகள் மற்றும் 315 வழியோர குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 1 கோடியே 6 இலட்சம் மதிப்பீட்டில் 3.08 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் சாத்தூர், வெம்பக்கோட்டை, சிவகாசி, விருதுநகர், வத்திராயிருப்பு (பகுதி), திருவில்லிபுத்தூர் (பகுதி) மற்றும் அருப்புக்கோட்டை (பகுதி) ஒன்றியங்களிலுள்ள 755 குடியிருப்புகளுக் கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 234 கோடி மதிப்பீட்டில் 5.43 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் 7 பேரூராட்சிகள் மற்றும் இராசபாளையம், திருவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு மற்றும் சிவகாசி (பகுதி) ஒன்றியங்களிலுள்ள 395 ஊரகக் குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 173 கோடி மதிப்பீட்டில் 3.84 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை, காரியாப்பட்டி, திருச்சுழி, நரிக்குடி மற்றும் விருதுநகர் (பகுதி) ஒன்றியங்களிலுள்ள 637 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 190 கோடி மதிப்பீட்டில் 3.53 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப் பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங் களிலுள்ள பல்லம் நகராட்சி, 23 பேரூராட்சிகள் மற்றும் 6 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 965 குடியிருப்புகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் 225 கோடி மதிப்பீட்டில் 9.88 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது.

மதுரை மாவட்டத்தில் மேலூர், அவனியாபுரம், திருமங்கலம் நகராட்சிகள், அ.வெள்ளாளப்பட்டி, விளாங்குடி, பரவை, திருநகர், அலங்காநல்லூர், பாலமேடு பேரூராட்சிகள், 8 ஊராட்சி ஒன்றியங் களிலுள்ள 1,430 ஊரகக் குடியிருப்பு கள் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் சிங்கம்புணரி பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூபாய் 784 கோடி மதிப்பீட்டில் 12.15 இலட்சம் மக்கள்

பயன்பெறும் வகையில் வடிவமைக்கப் பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

வேலூர் மாவட்டத்தில் வேலூர் மாநகராட்சி, 11 நகராட்சிகள், 5 பேரூராட்சிகள் மற்றும் 944 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.1,295 கோடி மதிப்பீட்டில் 18.68 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப் பட்டு நிர்வாக ஒப்புதல் வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் 25.1.2011 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

2006-2010 வரை நிறைவேற்றப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை உருவாக்கி நிறைவேற்று வதில் நாட்டிலேயே முன்னோடியாகத் திகழ்கிறது.

2006க்குப்பின் ரூ.1,734.68 கோடி மதிப்பீட்டி லான 201 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் மூலம் 16 நகராட்சிகள், 87 பேரூராட்சிகள், 13,469 ஊரகக் குடியிருப்புகளில் வாழும் 89.35 இலட்சம் மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

98.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.34 இலட்சம் மக்கள் பயன்பெறும், நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் நகராட்சி, கீழ்வேளூர், வேளாங்கண்ணி பேரூராட்சிகள் மற்றும் 890 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

68 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.31 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் தூத்துக்குடி மாவட்டத்தில் 239 கடலோர மற்றும் ஊரகக் குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தி லுள்ள அருப்புக்கோட்டை, விருதுநகர் நகராட்சிகள், மல்லாங்கிணறு, காரியாப்பட்டி பேரூராட்சிகள் மற்றும் 67 ஊரகக் குடியிருப்பு களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

49.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,41,849 மக்கள் பயன்பெறும், கோவை மாவட்டம் குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக் கடவு பேரூராட்சிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

29.92 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1.86 இலட்சம் மக்கள் பயன்பெறும் திருநெல்வேலி மாவட்டம் ஆயக்குடி, அச்சம்புதூர், பண்மொழி, வடகரை, கீழ்பிடாகை பேருராட்சிகள், கீழப்பாவூர், செங்கோட்டை தென்காசி ஊராட்சி ஒன்றியங் களைச் சேர்ந்த 151 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

23.04 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 92,553 மக்கள் பயன்பெறும் ஈரோடு மாவட்டம் சென்னிமலை, கே.சி.பாளையம், சித்தோடு, நசியனூர் பேரூராட்சிகள் ஈரோடு, சென்னிமலை, பெருந் துறை ஒன்றியங்களைச் சேர்ந்த 69 குடியிருப்பு கள் ஆகியவற்றுக்கான கூட்டுக்குடிநீர்த் திட்டம்;

13.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,23,082 மக்கள் பயன்பெறும் வேலூர், திருவள்ளூர் மாவட்டங்களைச் சேர்ந்த அரக்கோணம், திருத்தணி நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன.

நகரக குடிநீர்த் திட்டங்கள்

தமிழகம் முழுவதும் 134 நகரகக் குடிநீர்த் திட்டங்கள் 201.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

ரூ.32.61 கோடி மதிப்பீட்டில் 1,37,933 மக்கள் பயன்பெறும் தாம்பரம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம்; ரூ.7.90 கோடி மதிப்பீட்டில் 82,689 மக்கள் பயன்பெறும் திருச்சி மாநகராட்சியிலுள்ள திருவரங்கம் குடிநீர் அபிவிருத்தி திட்டம்; ரூ.6.48 கோடி மதிப்பீட்டில் 60,876 மக்கள் பயன்பெறும் வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம்; ரூ.4.89 கோடி மதிப்பீட்டில் 72,168 பயன்பெறும் விருதுநகர் மாவட்டம் சிவகாசி நகராட்சி குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஆகிய நகர்ப்புற குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

சிறிய நடுத்தர நகரங்களுக்கான குடிநீர்த் திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 6 கட்டங்களாக ரூ.493.54 கோடி மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட 32 குடிநீர்த் திட்டப்பணிகளில் திருப்பத்தூர், வால்பாறை, கரூர், தேவக்கோட்டை அரக்கோணம், திருத்தணி, இராமநாதபுரம்,

பரமக்குடி, கீழக்கரை, இராமேஸ்வரம், அறந்தாங்கி, மறைமலைநகர், சிவகங்கை, நாமக்கல், கூடலூர் மற்றும் விக்கிரம சிங்கபுரம் ஆகிய நகராட்சிகளில் பணிகள் முடிவடைந்துள்ளன; பல்லடம் நகராட்சியில் உட்கட்டமைப்புப் பணிகள் முடிவடைந்து கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்குத் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. திருவில்லிபுத்தூர், இராசிபுரம், தஞ்சாவூர், விழுப்புரம் நகராட்சிகளி லும், ஈரோடு மாநகராட்சியிலும் பணிகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளக்கோயில், மேட்டூர், சிதம்பரம் ஆகிய 3 நகராட்சிகளில் பணிகள் ஆரம்ப நிலையில் உள்ளன.

புதிய நியமனங்கள்

நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவல கத்தில் ஒரு கண்காணிப்பு பொறியாளர் முதற்கொண்டு 3 ஓட்டுநர்கள் வரை 24 பேரும், 7 நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகங்களில் ஒரு செயற்பொறியாளர் முதல் 2 ஓட்டுநர் வரை 19 பேரும், 7 உதவி செயற் பொறியாளர்களும், 7 இரண்டாம்நிலை பட வரைவாளர்களுமாக 14 பேரும் நியமிக்கப் பட்டுள்ளனர்.

மேலும், மாநகராட்சி மற்றும் நகராட்சி களில், நேரடி நியமனம் மூலம் 2799 பேரும், கருணை அடிப்படையில் 1701 பேரும், தினக்கூலிப் பணியாளர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கி பணி வரன்முறை செய்து 3074 பேரும், அரசு பொதுத்துறையில் பணிபுரிந்து பணியிழந்தவர் களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு வழங்கல் மூலம் 134 பேரும் ஆக 7708 பேருக்கு நிரந்தரப் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நகராட்சிகளில் தொகுப்பூதிய விகிதத்தின் கீழ் பணி நியமனம் செய்யப்பட்ட 170 சமுதாய அமைப்பாளர்கள் 1.9.2006 முதல் ரூ.3200-85-4900 என்ற காலமுறை ஊதிய விகிதத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளனர். மேலும், 133 சமுதாய அமைப்பாளர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மயான உதவியாளர்கள்

நகராட்சி, மாநகராட்சிகளில் பணிபுரியும் வெட்டியான்கள் 'மயான உதவியாளர்கள்' என அழைக்கப்பட வேண்டுமென ஆணையிடப் பட்டு, 55 வெட்டியான்கள் மயான உதவியாளர் களாகக் காலமுறை ஊதியத்தில் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

சென்னை மாநகராட்சியில் 1266 பேருக்குக் கருணை அடிப்படையிலும், 1042 பேருக்கு நேரடியாகவும் பணி நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

328 பணியாளர்களுக்கு அவர்களது பணிவரன்முறைப்படுத்தப்பட்டு காலமுறை ஊதியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. 10 ஆண்டு காலத்திற்கு மேல் பணிபுரிந்த 2025 தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்குப் பணி நிரந்தர ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வகையாக 2006 முதல் 2010 வரை சென்னை மாநகராட்சியில் மொத்தம் 4661 பணியாளர்கள் பயன்பெற்றுள்ளனர்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தில் கருணை அடிப்படையில் பணி வழங்கும் திட்டம் மூலம் 13.05.2006 முதல் 30.9.2010 வரை 416 வாரிசுதாரர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதே காலகட்டத் தில் ஒரு துணை நிதிக்கட்டுப்பாட்டு அலுவலர், 128 உதவிப் பொறியாளர்கள், 3 ஆய்வக தொழில்நுட்ப பணியாளர்கள், 3 வரைவாளர்கள், 21 ஓட்டுநர்கள், 33 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 34 பணிமனை மேலாளர் ஆக மொத்தம் 223 அலுவலர் மற்றும் பணியாளர்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் நேரடியாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் கருணை அடிப்படையில் 48 இளநிலை உதவியாளர்கள்/தட்டச்சர் / இளநிலை வரைவு அலுவலர்/பதிவுறு எழுத்தர்/அலுவலக உதவி யாளர்/ காவலர்/ துப்புரவாளர் ஆகியோர் பணி நியமனம் செய்யப்பட்டனர். 858 தொகுப்பூதியப் பணியாளர்கள் காலமுறை பணியாளர்களாக நியமிக்கப்பட்டனர். 178 மதிப்பூதிய பணியாளர் கள் தொகுப்பூதியப் பணியாளர்களாகப் பணிமாற்றம் செய்யப்பட்டனர். 310 உதவிப் பொறியாளர்கள் / இளநிலை பொறியாளர்கள்/ இளநிலை உதவியாளர்கள் / இளநிலை நீராய்வாளர்கள்/ மின் கண்காணிப்பாளர்கள்/ ஓட்டுநர்கள் ஆகியோர் கீழ்நிலைப் பணியில் இருந்து பணியமர்வு வழங்கப்பட்டது.

52 உதவிப் பொறியாளர்கள்/உதவி நிலநீர் வல்லுநர் நேரடி பணி நியமனம் செய்யப்பட்டனர்.

உடன்பிறப்பே, நகராட்சி நிர்வாகத் துறையில் நாள்தோறும் நல்ல திட்டங்களும், பணிகளும் நடைபெற்று வருவது கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அந்த மகிழ்ச்சிக்கு காரணம் நாடு அவற்றின் மூலம் பெற்று வரும் நன்மைகள்தான். நகராட்சி நிர்வாகத் துறையின் சிறப்பான பணிகளுக்கெல்லாம் மூல காரணமாக இருப்பது - தம்பி துணை முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் சுறுசுறுப்பான முனைப்புதான் என்பதை என்னைப் போலவே நீயும் அறிவாய்! அந்தப் பணிகள் தொடர உன் பணிகள் தொடரட்டும்!

அன்புள்ள,

மு.க.

20-03-2011

3548. சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை ஐந்தாண்டு சாதனைகள்!

உடன்பிறப்பே,

திராவிட இயக்கத்தின் முக்கிய கோட்பாடுகளில் ஒன்று மகளிர் முன்னேற்றம். 1929ஆம் ஆண்டில் நடைபெற்ற செங்கல்பட்டு சுயமரியாதை மாநாட்டில் மகளிர் முன்னேற்றம் குறித்து தந்தை பெரியார் அவர்கள் வடித்தெடுத்த தீர்மானங்களின் அடிப்படையில் தமிழகத்தில் 1967ஆம் ஆண்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் அமைந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், அதனைத் தொடர்ந்து 1969இல் எனது தலைமையில் அமைந்த திராவிட முன்னேற்றக் கழக அரசும், பெண்கள் முன்னேற்றம் குறித்த பல சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றி பெண்கள் அரசியல் சமூக பொருளாதார நிலைகளில் விடுதலைபெற்று வாழ்வில் படிப்படியாக முன்னேறவும், பட்டம் பதவிகள் பெற்றுச் சமுதாயத்தில் உயர்நிலை பெறவும் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன.

1973இல் தமிழகக் காவல் துறையில் முதல் முதலாக பெண்கள் நியமனம்; இன்று இலட்சக்கணக்கான ஏழை எளிய மகளிர் வாழ்வில் பொருளாதார விடுதலைக்கு வழி வகுத்துள்ள சுயஉதவிக் குழுக்களை உருவாக்கி - 1989இல் தருமபுரியில் தொடங்கி வைத்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம்; ஏழைப் பெண்களுக்கு ஈ.வெ.ரா. நாகம்மையார் பெயரில் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம்; ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச்சத்து உட்கொள்ள தற்போது 6000 ரூபாய் நிதியுதவி வழங்கும் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு நிதி உதவித் திட்டம்; 1990இல் அரசுப் பணிகளில் பெண்களுக்கு 30 சதவீத இடஒதுக்கீடு; பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் தனிச் சட்டம்; 1996இல் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு; முதல் தலைமுறையாக தொழில் முனையும்

மகளிர்க்கு மானிய உதவி; தொழில் வளாகங்களில் தொழில்மனை ஒதுக்கீட்டில் மகளிர்த் தொழில் முனைவோர்க்கு முன்னுரிமை என்பனபோல பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பெண்கள் பல வழிகளிலும் முன்னேற்றம் அடைந்து வருவதை நினைவு படுத்திட விரும்புகிறேன்.

இந்தியத் திருநாட்டின் குடியரசுத் தலைவர் பதவிக்கு திருமதி பிரதிபா பாட்டீல் அவர்கள் அறிவிக்கப்பட்டபோதும், அதன்படி அவர் முதலாவது பெண் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் அவரை வரவேற்றுப் போற்றிப் பாராட்டிய உணர்வோடு கழக அரசு பெண்களுக்கு அளித்துவரும் முன்னுரிமைக்குச் சான்றாக இன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளராகவும், காவல் துறை தலைமை இயக்குநராகவும் மகளிர் மாமணிகள் இருவர் திகழ்வதை நீ அறிவாய்; இந்த நாடும் நன்கறியும்! இந்நிலையில் மகளிர் முன்னேற்றத்திற்காக இந்த அரசு தொடர்ந்து அளித்து வரும் ஊக்கத்தையும், உதவிகளையும் நினைவு படுத்திடும் நோக்கில் இந்தக் கடிதத்தைத் தொடர்கிறேன்.

திருமண நிதியுதவித் திட்டங்கள்

பெண்கள் அனைவரும் கல்விபெற ஊக்கமளித்திட வேண்டும் எனும் நோக்கில் 8ஆம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிய மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் 1989ஆம் ஆண்டில் கழக ஆட்சியில் அறிமுகப்படுத்தப் பட்டது. பின்னர் பெண்கள் அனைவரும் குறைந்தது 10ஆம் வகுப்பு வரையாவது படிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இத்திட்ட நிதியுதவி 1996இல் 10 ஆயிரம் ரூபாய் என உயர்த்தி வழங்கப்பட்டது. ஆயினும், 2001இல் பொறுப்பேற்ற அ.தி.மு.க. அரசு இத்திட்டத்தை முடக்கி வைத்து, ஏழை எளிய பெண்கள் பயனடைவதைத் தடுத்தது. அந்நிலையில், 2006இல் பொறுப்பேற்ற இந்த அரசு மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தை மீண்டும் நடைமுறைப் படுத்தியதுடன், நிதியுதவி 10 ஆயிரம் ரூபாய் என்பதை 15 ஆயிரம் ரூபாய் எனவும் உயர்த்தியது. பின்னர், 20.3.2008 அன்று இத்திட்ட நிதியுதவியை 20 ஆயிரம் ரூபாய் என்றும், அதனைத் தொடர்ந்து 1.4.2010 முதல் 25 ஆயிரம் ரூபாய் என்றும் மேலும் உயர்த்தி வழங்கி வருகிறது. இப்போது வெளியிடப்பட்ட கழகத் தேர்தல்

அறிக்கையிலே கூட, இந்த 25 ஆயிரம் ரூபாயையும், 30 ஆயிரம் ரூபாயாக புதிய ஆட்சி மலருமேயானால் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 2006க்குப்பின் 4 இலட்சத்து 64 ஆயிரத்து 756 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 880 கோடியே 55 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டு, ஏழைக் குடும்பங்கள் கடந்த ஐந்தாண்டுகளாகப் பயனடைந்துள்ளன.

ஏனைய திருமணத் திட்டங்களின் நிதியுதவிகளும் 1.4.2010 முதல் 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகின்றன.

அஞ்சுகம் அம்மையார் நினைவு
கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி, மணம்புரியும் தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினராகவும் மற்றொருவர் வேறு இனத்தைச் சார்ந்தவராகவும் இருந்தால் 20 ஆயிரம் ரூபாய் எனவும், மணம்புரியும் தம்பதியரில் ஒருவர் பிற்படுத்தப்பட்ட அல்லது மிகவும் பிற்படுத் தப்பட்ட இனத்தைச் சார்ந்தவராகவும் மற்றொருவர் முற்பட்ட இனத்தைச் சார்ந்தவராகவும் இருந்தால் 15 ஆயிரம் ரூபாய் எனவும் உயர்த்தப்பட்டது. இத்திட்ட நிதியுதவி 1.4.2010 முதல் இரண்டு திட்டங்களுக்கும் 25 ஆயிரம் ரூபாயாக மேலும் உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் 11 ஆயிரத்து 383 தம்பதியருக்கு 20 கோடியே 89 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு
விதவை மறுமண நிதியுதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் கடந்த ஐந்து ஆண்டுகளில் 910 ஏழை விதவைப் பெண்களின் மறுமணம் செய்துகொள்ள 1 கோடியே 72 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு

விதவைத் தாய்மார்களின் மகள்

திருமண நிதியுதவித் திட்டம்

ஈ.வெ.ரா.மணியம்மையார் நினைவு விதவைத் தாய்மார்களின்

மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் ஐந்தாண்டுகளில் 16,365 பெண்களின் திருமணங்களுக்கு 30 கோடியே 32 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய் திருமண நிதியுதவியாக வழங்கப் பட்டுள்ளது.

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம்

அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஐந்தாண்டுகளில் 2220 பெண்களின் திருமணங் களுக்கு 4 கோடியே 58 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆக, பல்வேறு திருமண நிதியுதவித் திட்டங்களின்கீழ், 5 ஆண்டுகளில் 4 இலட்சத்து 95 ஆயிரத்து 634 ஏழைப் பெண்களின் திருமணங்களுக்காக மொத்தம் 937 கோடியே 50 இலட்சத்து 87 ஆயிரம் ரூபாய் அதாவது சற்றேறக்குறைய ஆயிரம் கோடி ரூபாய் ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம்.

அரவாணிகள் என்று சொல்லப்படும் திருநங்கையர்களும் இந்தச் சமுதாயத்தின் அங்கம் என்பதால் அவர்களின் நலனை உறுதி செய்வதற்காக, "தமிழ்நாடு அரவாணிகள் நல வாரியம்" 15.4.2008 அன்று கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையில் அவர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இவ்வரசு வழங்கி வருகிறது.

அரவாணிகள் நலவாரியத்தின் மூலம், இதுவரை 3878 அரவாணிகள் கணக்கெடுக்கப்பட்டு, 2328 அரவாணிகளுக்கு அடையாள அட்டைகளும், 1238 பேருக்குக் குடும்ப அட்டைகளும், 133 பேருக்குத் தொகுப்பு வீடுகளும், 100 பேருக்குத் தையல் இயந்திரங்களும், 482 பேருக்கு வீட்டுமனைப்பட்டாக்களும், 585 பேருக்கு கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மருத்துவ அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன.

2010-2011ஆம் ஆண்டில் அரவாணிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் வகையில் வாரியத்திற்கென 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

அரசு குழந்தைகள் காப்பகம்

திருநெல்வேலி, தர்மபுரி, ஈரோடு, நீலகிரி, தூத்துக்குடி, சேலம் ஆகிய மாவட்டங்களில் அரசுக் குழந்தைகள் காப்பகங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு 4 கோடியே 33 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

அரசுக் குழந்தைகள் காப்பகங்களில் பயன்பெற்று வரும் 4072 குழந்தைகளுக்கு உணவூட்டு செலவினத்திற்காகக் கடந்த ஐந்தாண்டுகளில் 5 கோடியே 23 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

அரசுச் சேவை இல்லம்

சமுதாயத்தில் விதவையர், கணவனால் கைவிடப்பட்டவர், ஆதரவற்ற ஏழைப் பெண்கள் ஆகியோர் தங்கள் கல்வித் தரத்தை உயர்த்திக் கொண்டு தொழில் கல்வி, தையல், கணிப்பொறி மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சிகளுடன் பாதுகாப்பான உறைவிடமும் பெறும் பொருட்டு சேவை இல்லங்களை இந்த அரசு நடத்தி வருகிறது.

அனைத்து சேவை இல்லங்களிலும் உள்ள பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 670 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 31.6 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து கணினி பயிற்சி மற்றும் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

அரசுச் சேவை இல்லங்களில் பயன்பெறும் 670 பயனாளிகளுக்கு உணவூட்டுச் செலவினமாக 1 கோடியே 7 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

அரசுக் குழந்தைகள் மற்றும் சேவை இல்லங்களில் பயன் பெறும் உள்ளுறை வோர்களுக்கான மாதாந்திர உணவூட்டுச் செலவினம் 225 ரூபாயிலிருந்து 450 ரூபாயாகக் குழந்தை களுக்கும்; 300 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக பெரியவர் களுக்கும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம்

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாத்தல் சட்டப்படி பெண்களின் பாதுகாப்பிற்காக மாவட்ட சமூகநல

அலுவலர்கள் தற்காலிகப் பாதுகாப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

31 மாவட்டங்களில் முழு நேர அலுவலர்களாக 31 பாதுகாப்பு அலுவலர்கள் மற்றும் 31 இளநிலை உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்;

மேலும் சேவை பங்களிப்பாளர் 31 மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2 கோடியே 61 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் பாதுகாப்பு அலுவலர் மற்றும் தட்டச்சர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

98 குறுகியகால பாதுகாப்பு இல்லங்கள் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் வகையில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன.

சமூகப் பாதுகாப்பு திட்டங்கள்

தமிழக அரசு, இந்திரா காந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் என்ற திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள கடும் அல்லது 80 சதவீதம் உடல் உறுப்புகள் குறைபட்ட பலதரப்பட்ட ஊனமுடைய, 18 வயது முதல் 64 வயது வரை உள்ளோர் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுவர். இத்திட்டம் 31-3-2010 முதல் நமது மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு மாதம் 500 ரூபாய் வழங்கப்படுகிறது. இதில் 200 ரூபாய் மத்திய அரசின் பங்காகவும், 300 ரூபாய் மாநில அரசின் பங்காகவும் வழங்கப்படுகிறது.

ஆதரவற்ற மாற்றுத்திறனுடையோர் ஓய்வூதியத்திட்டம் மாநில அரசினால் வாய்பேச முடியாதவர்களுக்கும் 19-3-2010 முதல் நீட்டிக்கப்பட்டு, செயல்படுத்தப்படுகிறது.

1-6-1975இல் இருந்து செயல்படுத்தப்பட்டு வரும் ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டத்துடன் தமிழக அரசு, 40 முதல் 64 வயதுவரை உள்ள மற்றும் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள விதவைகளுக்கென இந்திரா காந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் என்ற திட்டத்தை 31-3-2010 முதல்

செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் பயனாளிகளுக்கு மாதம் 500 ரூபாய் வழங்கப்படுகிறது. இதில் 200 ரூபாய் மத்திய அரசின் பங்காகவும் 300 ரூபாய் மாநில அரசின் பங்காகவும் வழங்கப்படுகிறது.

1-7-2008 முதல் 50 வயது மற்றும் அதற்கு மேலாகியும் திருமணம் ஆகாத, வறுமையில் வாடும் ஏழைப் பெண்களுக்குத் தமிழக அரசு புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 14 ஆயிரத்து 270 ஏழைப் பெண்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்ட 400 ரூபாய் தற்போது 500 ரூபாய் என மாநில அரசினால் உயர்த்தி வழங்கப்படுகிறது.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும், 'முதியோர் ஓய்வூதியம்' பெறத் தகுதியான ஆதரவற்ற முதியோர்கள் எண்ணிக்கை அதிகமாகி வருவதால், தகுதியிருந்தும் ஓய்வூதியம் பெற இயலாதவர்களை இத்திட்டத்தின்கீழ் கொணர இவ்வரசு எடுத்த முயற்சியின் காரணமாக, தற்போது 2010-2011ம் நிதி ஆண்டில் செப்டம்பர் மாதம் வரை, 9 இலட்சத்து 78 ஆயிரத்து 677 பேர் பயனடைந்துள்ளனர்.

இதுகாறும், மாநில அரசு நடைமுறைப்படுத்தி வந்த ஆதரவற்ற முதியோர் ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மாநில நிதியிலிருந்து வழங்கி வந்த ஓய்வூதியமான 200 ரூபாயை 1.9.2006 முதல் 400 ரூபாயாக உயர்த்தி வழங்கிய இந்த அரசு, 1.12.2010 முதல் இந்த ஓய்வூதியத்தை மாதம் 500 ரூபாய் என மேலும் உயர்த்தி வழங்கி வருகிறது.

ஆதரவற்ற, வறுமைக் கோட்டுக்குகீழ் உள்ள, வயது முதிர்ந்தோருக்கு ஆண் வாரிசு எவரேனும் இருப்பின் அவருக்கு முதியோர் ஓய்வூதியம் கிட்டாத நிலை இருந்தது. அதை மாற்றிடும் வகையில் ஆதரவற்ற, வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள, ஆதரவற்ற முதியோர்களுக்கு ஆண் வாரிசுகள் எவரேனும் இருந்தாலும் அம்முதியோர்களுக்கு ஆதரவற்ற முதியோர் ஓய்வூதியம் வழங்கலாம் என்று அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் உரிய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

65 வயதினை எட்டிய, ஆதரவற்ற அரவாணிகளையும் ஆதரவற்ற முதியோர் ஓய்வூதியத்திட்டத்தின்கீழ் சேர்த்து, அவர்களுக்கு மாதமொன்றிற்கு 400 ரூபாயை ஓய்வூதியமாக வழங்கிடலாம் என்று 4-4-2008இல் அரசு ஆணையிட்டது. தற்போது இந்த ஓய்வூதியம் மாதம் 500 ரூபாய் என வழங்கப்படுகிறது.

அன்புள்ள,

மு.க.

21-3-2011

3549. வருக! வருக!
வரிப்புலி வரிசையே வருக!

உடன்பிறப்பே,

தேர்தல்களம் புகுந்திட பல்வேறு கட்சிகளின் பாசறைகள் ஏறத்தாழத் தயார் நிலையில் அமைக்கப்பட்டுவிட்டன. எதிர் வரிசையில் நிற்கக்கூடிய அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படையை உற்றுப் பார்க்கிறேன். எதிர் வரிசையில் இந்திரஜித்தனைக்காண முடியாத காரணத்தை உணர்ந்து கொண்டவுடன் - களத்தில் அந்த யோசனைக்கு இடமளிப்பது நமது குறியைக் குலைத்துவிடும் என்பதால் அதைப்பற்றி அதிகமாக கவலைப்படாமல், ஒருசில நிமிடங்கள் அதுபற்றிய சிந்தனையிலே ஈடுபட்டேன்.

5000 ஆண்டுக்கு மேலான வரலாறு கொண்ட திராவிட உணர்வு பட்டுப் போகாமல் காப்பாற்றி வந்த பெரியாரெனும் பேருருவில் - பிரிவுக்கணைகள் புகுந்து - இரு இயக்கமானோம். அவற்றில் ஓர் இயக்கம் அண்ணா தலைமையில் இன உணர்வு பகுத்தறிவு இயக்கமாகவும் - பிறிதொரு இயக்கம் பகுத்தறிவு கவலையின்றி; ஆனால் பண்பாடு காத்திடும் இயக்கமாக அருமை நண்பர் எம்.ஜி.ஆர். தலைமையிலும் இயங்கிய ஏற்றமிகு நிலைகண்டு - அதன் எழிலைக் குறைத்திட எத்தனையோ சதிகள், சாகசங்கள்! அத்தனைக்கும் ஈடு கொடுத்து ஒன்றை ஒன்று வென்றும் - ஒன்றால் ஒன்று வீழ்ந்தும் - அவ்விரு திராவிட இயக்கங்களும் தேசத்தை ஆளும் சக்தியாக செழித்து வளர்ந்தது கண்டு - அவ்விரண்டையும் அழித்தொழிக்க ஐதீகப் படை திரண்டது. இரு படைகளும் ஒரு படையாய் இருந்து - செறு பகை வீழ்த்திட அணி வகுப்போம் வாரீர் என்று வடக்கிருந்து பறந்து வந்த சமரசப் புறாவையும் - அதன் சிறகொடித்து விரட்டிவிட்டனர் சதிகாரர்கள். அதன் பிறகும் அமைதியில்லை - சகோதரயுத்தம் தொடரட்டுமென்றும் - அப்போதுதான்

சர்க்கரை தம் வாய்க்கு நிறைய கிடைக்குமென்றும் எண்ணியோர் கண்ணியம் துறந்த காரியத்தில் ஈடுபட்டதால் - திண்ணியராம் திராவிடத் தலைவர்கள் உருவாக்கிய இயக்கம், சிதைந்து சிதறுண்டு போக சிலந்திகள் வலைபின்னத் தொடங்கின. அந்த வலையில் சிக்காத இயக்கம்தான் அண்ணா உருவாக்கிய தி.மு.க. எனும் இந்தத் தீரர்கள் மிகு இயக்கம். அதனால்தான் வலை அறுந்திடவும் இல்லை - விலை போகவும் இல்லை - நிலை குலையாத நேர்மை, நியாயம், நீதி, உண்மை, உறுதி, வாய்மை அனைத்தும் கொண்டு வலிமை சேர் இயக்கமாக அறப்போர் வாள் தூக்கி அணி வகுப்பில் முந்தி நிற்கிறது. எந்தவொரு இயக்கமும் ஜனநாயக வழித் தடத்தில் தேர்தலைச் சந்திக்க களம் இறங்கிவிட்டால் - ஜனநாயகத்தைக் கட்டிக் காக்க வேண்டிய பொதுமக்கள் மாத்திரமல்லாமல் அந்தப் பொதுமக்களிடத்திலே - தமது கட்சிக்காக ஆதரவு திரட்டக்கூடிய தொண்டர்கள், தோழர்கள் அணி வகுத்துக் குவிந்திடுவது இயல்பேயாகும். அவர்கள் எந்த வரிசையின ராயினும் நம் வரிசையினர் என்றே போற்றிப் புகழ்வோம். எதிரெதிர் அணியிலே அவர்கள் நிற்க நேரிட்டாலும் அவர்களும் நாமும் சேர்ந்து ஜனநாயகக் கோயில் திருப்பணியை நடத்தவே - நடத்தி முடிக்கவே - அதில் எழிலும் ஏற்றமும் கண்டுகளிக்கவே - நாம் சேர்ந்துள்ளோம் இந்த இயக்கத்தில் என்ற நினைப்போடு பணியாற்றினால் மாண்பு காத்திட - மனித நேயம் போற்றிட - நாம் பிறந்த மண்ணின் புகழ் பெருக்கிட - நம்மை நாமே அர்ப்பணித்துக் கொண்டவர்களாவோம்.

நம் வியர்வையால் கிடைக்கும் வெற்றியைப் போற்றிடவும் - நமது அயர்வினால் அதனை விடுத்து அதற்காக ஜனநாயக மாண்பினையே தாக்கிடவுமான நிலைக்கு நம்மை நாமே தள்ளிக் கொள்ளாமல் இருக்கத்தான் - காற்றடிக்கும் நேரத்திலேயே பதர் போக்கி - பயன் விளைக்கும் தானிய மணிகளைக் குவித்து வைத்ததுபோல் நமது படையின் வீரர்களை அணி வகுத்து வைத்திருக்கிறோம்.

சோர்வறியாத படை -
சோடை போகாத படை -
சொர்க்கம் அழைக்கிறது வா என்றாலும், அதில்
சொக்கிப் போய் சொன்னது ஒன்று
செய்வது ஒன்றாக -

போரீடுவது போன்ற
போலிப்படையல்ல இப்படை;
"இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும்?"
என நம் அண்ணா அடிக்கடி சொல்வாரே
அப்படையே இப்படையாம்!

பெரியாரை விட்டுப் பிரியாமல் இருந்திருந்தால் - இடையில் இப்படை பெறும் வெற்றிதான் இமாலய வெற்றியாகும் - இமாலயத்தை வளைக்கும் வெற்றியாகும்.

எனினும் "என் தலைவர் இருந்த நாற்காலி காலியாகவே இருக்கிறது" என மொழிந்து - பெரியாரின் தொண்டனாக - அவரின் சீடனாக - அவரின் கொள்கை நாதமாக விளங்கிய அண்ணா -

நமையெல்லாம் ஒருங்கிணைத்து - பொருதடக்கை வாள் கொடுத்து - "ஜனநாயக அறப்போரில் வென்றிடுக தம்பிகாள்!" என்று அனுப்பி வைத்தார். அவர்களில் ஓரிரு தம்பிமார்கள் எங்கெங்கோ சிதறிப் போயினர் என்றாலும் - அங்கெல்லாம் அலைந்து திரிந்து அவர்களையும் ஒன்றிணைக்க - அரும்பாடு பட்டவனின் கரம்தான் இந்தக் கரம்.

இந்தக் கரம் தழுவும் உணர்விலே கட்டுண்டு - வாரீர் அனைவரும் ஒருங்கிணைந்து களம் காண்போம் என்றழைக்கும் வேளை இது!

திராவிடர்கள் நெல்லிக்காய் மூட்டை என எதிரிகள் துள்ளிக் குதிக்கும் நிலைதனை மாய்ப்போம்.

விடுபட்டோர் -

விரட்டப்பட்டோர் -

துரத்தப்பட்டோர் -

விலை போகாது வெங்குருதி தனிற் கமழ்ந்த எங்கள் வீர மூச்சு - தமிழ் மூச்சு எனத் தடந்தோள் தட்டி வந்திடுவீர் வாகை சூட என்று கண் மூடி தவம் இருக்கும் துறவிகளைப் போல் - தூய ஞானிகளைப் போல் - நான் தவம் இருக்கின்றேன் - படை பலம் போதாது என்பதால் அல்ல! இருக்கின்ற படை இன்னும் வலிமையாய் - உறுதியாய் - நிச்சயம் வாகை சூடுவதாய் அமைய வேண்டும் என்பதற்காக!

என்னரும் உடன்பிறப்புக்காள்!
என் உயிரினும் இனியோரே!
இன்ப முடிவினை எல்லோரும் சேர்ந்து சுவைப்போம்!
வருக! வருக! வரிப்புலி வரிசையே வருக!

அன்புள்ள,
மு.க.
22-3-2011

3550. தேவர் திருமகனின் பொன்மொழி என்ன?

உடன்பிறப்பே,

14வது சட்டப்பேரவை பொதுத்தேர்தலுக்கான பணிகளில் தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளும் ஈடுபட்டுள்ளன. கூட்டணிக் கட்சிகள் எல்லாம் தோழமைக் கட்சிகளோடு கலந்து பேசி தொகுதிகளையும், வேட்பாளர்களையும் நிச்சயம் செய்து அறிவித்து, வேட்பு மனு தாக்கல் செய்வதும் தொடங்கிவிட்டது. ஏப்ரல் 13ஆம் தேதியன்று தமிழ்நாட்டு மக்கள், அடுத்த ஐந்தாண்டுகளுக்கு தங்களை ஆள வேண்டியவர் யார் என்பதைத் தேர்ந்தெடுக்க தங்களது வாக்குகளை அளிக்கவிருக்கிறார்கள்.

இதுவரை நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் வாக்குப் பதிவு முடிவுற்ற இரண்டொரு நாட்களில் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டுவிடும். ஆனால் தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத ஒரு முடிவாக ஏப்ரல் 13ஆம் தேதி வாக்குப் பதிவு நடைபெற்ற போதிலும், மே திங்கள் 13ஆம் நாள்தான் வாக்குகள் எண்ணிக்கை நடைபெறவுள்ளது. எதற்காக இந்த இடைவெளி? ஏன் ஒரு மாதத்திற்கு முன்பாகவே அரசியல் கட்சிகளுக்கு நேரம் கொடுக்காமலே அவசரம் அவசரமாக தேர்தலை நடத்துகிறார்கள்? எல்லாம் தேர்தல் ஆணையத்தின் முடிவு. அவர்களுக்கு எதிராக யாரும் வாய் திறக்கக் கூடாது. அரசியல் கட்சிகள் சார்பில் வாக்குப் பதிவு செய்யும் நாளை சற்று தள்ளி வைக்க வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டபோது தேர்தல் ஆணையம் அதனை ஏற்க முடியாதென்று தள்ளிவிட்டது.

தேர்தல் ஆணையத்தின் உத்தரவு என்று சொல்லி மற்றும் ஒரு கொடுமையும் கடந்த சில நாட்களாக தமிழ்நாட்டிலே கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. தமிழ்நாட்டில் யாரும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பணம் எடுத்துச் செல்லக்கூடாது.

இதைப்பற்றி அன்றாடம் ஏடுகள் ஒவ்வொரு செய்தியைத் தாங்கி வெளிவருகின்றன. ஏன், மாலை இதழ் ஒன்றில் நேற்று வந்த செய்தியிலே கூட - "தேர்தல் கமிஷன் கெடுபிடி - வாகன சோதனையில் "காமெடி" காட்சிகள் - ஆடு, கொலுசுகளைக் கூட விடவில்லை" என்று கொட்டை எழுத்துக்களில் செய்திகள் வந்துள்ளன.

அந்தச் செய்தியில் "தேர்தல் என்றாலே தெருவுக்குத் தெரு, வீதிக்கு வீதி வேட்பாளர்கள் மற்றும் கட்சிக்காரர்கள் மாறி மாறி கார்களில் வந்து பிரச்சாரம் செய்தபடி இருப்பார்கள். எங்கு பார்த்தாலும் ஒலிபெருக்கியில் பிரச்சாரச் சத்தம் காதைப் பிளந்த வண்ணம் இருக்கும். அரசு சுவர்கள், தனியார் சுவர்களில் சின்னங்கள் தேர்தல் வாசகங்கள் எழுத முன் கூட்டியே இடம்பிடித்து விடுவார்கள். வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டதும் பெயர் எழுதுவது வாசகம் எழுதுவது மும்முரமாக இருக்கும். தேர்தலுக்கு ஒரு மாதத்துக்கு முன்பே திருவிழா போல ஊரெங்கும் களை கட்டி விடும். ஆனால் இந்தத் தேர்தலில் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு தேர்தல் கமிஷன் கிடுக்கிப் பிடி உத்தரவுகளைப் போட்டுள்ளது. சுவர்களில் வரையப்பட்டிருந்த சின்னம், தலைவர்களது படங்கள் எல்லாம் அழிக்கப்பட்டுவிட்டன. சென்னை நகரில் ஒரு இடத்தில் கூட சின்னத்தைப் பார்க்க முடியவில்லை. சிலைகளைக்கூட விட்டுவைக்கவில்லை. அண்ணா, காமராஜர், ராஜீவ்காந்தி, எம்.ஜி.ஆர். சிலைகளையும் தேர்தல் முடியும் வரை மூடவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இதனால் சிலைகளை துணியால் சுற்றி மூடி வைத்துள்ளனர். கொடி தோரணங்களும் கண்ணில் படவில்லை. பொது இடங்களில் இருந்த கட்சிக் கொடி கம்பங்களும், கொடிகளும் அகற்றப்பட்டு வருகின்றன. போஸ்டர்கள், டிஜிட்டல் பேனர்களும் எங்கும் காணப்படவில்லை. தேர்தலுக்கு முன்பே தொடங்கும் ஆரவாரம் தம்பட்டம் எதுவும் இன்றிகளை இழந்த கோவில் விழா போல் காட்சி அளிக்கிறது.

இதற்கெல்லாம் மேலாக வாகன சோதனை, வியாபாரிகளையும் பல்வேறு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்களையும் முடக்கிப்போட்டு விட்டது. நகைக்கடைக்காரர்கள் அல்லது தொழில் நிறுவனங்கள் நடத்துவோர் அன்றாடம் வசூல் ஆகும் வியாபார பணத்தை வங்கியில் கட்ட எடுத்துச் செல்வார்கள்.

இப்போது அவர்கள் உரிய ஆவணம் இல்லாமல் எடுத்துச் செல்ல முடியவில்லை. வாகன சோதனையில் சிக்கினால் அதிகாரிகள் பறிமுதல் செய்து விடுகிறார்கள். இது போல் நிலம் வாங்க - விற்க எடுத்துச் செல்லும் பணமும் பறிமுதல் செய்யப்படுகிறது. இதுவரை நடந்த சோதனையில் எந்த அரசியல் பிரமுகரிடமும் பணம் சிக்கவில்லை என்பதுதான் வேடிக்கை" என்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

மாலை இதழிலேயே இவ்வாறு செய்தி வந்திருக்கிறது என்றால் இவை அனைத்தும் உண்மை. தேர்தல் ஆணையத்தின் பெயரால் என்னென்ன நடைபெறுகின்றன என்பதைத்தான் அந்த இதழ் தெரிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத்தின் வாகனச் சோதனைக்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் 29ஆம் தேதியன்று கடை அடைப்பு நடத்த வணிகர்கள் முடிவு செய்திருப்பதாக தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புத் தலைவர் திரு. ஏ.எம். விக்கிரமராஜா அறிக்கை கொடுத்திருக்கிறார். அவர் கொடுத்துள்ள அறிக்கையில் தேர்தல் ஆணைய உயர் அதிகாரிகள் 22ந்தேதிக்குள் அவர்களை அழைத்துப்பேசி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்றும், இல்லாவிட்டால் 24ஆம் தேதி வணிகர் சங்கப் பிரதிநிதிகள் ஒன்று கூடி சென்னையில் தேர்தல் ஆணையத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவார்கள் என்றும், அதன் பின்னரும் இந்தப் பிரச்சினை நீடித்தால் வரும் 29ஆம் தேதி கடையடைப்பு நடத்துவார்கள் என்றும், அதற்கும் பலன் இல்லாவிட்டால் வணிகத் துறையினர் தேர்தலையே புறக்கணிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆங்கில நாளிதழ் ஒன்றில் வந்த செய்தியில் "The Election Commission has banned the display of statues of political leaders erected in public places and has instructed the authorities and political parties to cover such statues till the end of the April 13 elections" என்று கூறப் பட்டுள்ளது.

"விடுதலை" நாளிதழில் வெளிப்பட்ட செய்தியில் - "தேர்தல் கமிஷன் சுதந்திரமாகத் தேர்தல் நடப்பதைக் கண்காணிப்பதில் யாரும் குற்றம் சொல்ல முடியாது என்றபோதிலும் கூட, அதீதமான நடவடிக்கைகளை அதன் அதிகாரிகள் பலர், மகாராஜாவை மிஞ்சும்

ராஜவிசுவாசிகளாக மாறி ஏதேதோ செய்வதும், சட்டத்தை அவர்கள் கையில் எடுத்துச் செயல் படுவதும் சட்டப்படி "துஷ்பிரயோகம்" ஆகும் என்பதைச் சுட்டிக் காட்ட வேண்டியது அரசியல் கட்சி அல்லாத நம்மைப் போன்றவர் கடமையாகும். திண்டுக்கல்லில் தலைவர்கள் சிலைகளை துணிபோட்டு மூடி வைப்பது தேவையா? மறைந்த தலைவர்களின் படத்தைப் போட்டு சுவரொட்டி அடித்து ஒட்டுகிறார்கள். அதை என்ன செய்வது? தலைவர்கள் சிலைக்கும், வாக்களிப்பதற்கும் என்ன சம்பந்தம்? திருமண மண்டபங்களை சோதனையிட உரிமை உண்டு. அதைப்பூட்டி சாவியை எங்களிடம் கொடுங்கள் என்று கேட்க உரிமை உண்டா? ஏற்கனவே திருமணம் ஏற்பாடானவர்கள் கதி என்னவாகும்? இதற்குரிய வாடகையை தேர்தல் கமிஷன் கொடுக்குமா? கொடுக்க வேண்டாமா? நஷ்ட ஈடு தராமல் நிலத்தைக் கூட கையகப்படுத்த முடியாதே சட்டப்படி. அப்படி இருக்கையில் திருமண மண்டபங்களைப் பூட்டி சாவியை எடுத்துக் கொள்வது சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவதல்லவா? தனி மனித உரிமை போன்ற பலவற்றைப் பறிப்பதற்கு ஓர் எல்லை இல்லையா? உடனே சிலைகளை மூடுவதை நிறுத்த வேண்டும், இல்லையேல் பற்பல இடங்களில் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை அதுவே ஏற்படுத்தக்கூடும். உடனே தேர்தல் கமிஷன் அதிகாரிகள் இதுபற்றி இணக்கமாக சிந்திக்க வேண்டுகிறோம்" - என்று எழுதியுள்ளது.

இதிலே இன்னும் வேடிக்கை! வாகன சோதனையில் ஆடு, கோழிகளைக் கூட விட்டு வைக்கவில்லை. வாக்காளர்களுக்கு பிரியாணி போடுவதற்காக மொத்தமாக கொண்டு போவதாக கற்பனை செய்து கொண்டு ஆடுகளையும், கோழிகளையும் ஏன் பீடிகளையும் கூட பறிமுதல் செய்துள்ளார்கள். விற்பனைக்காக எடுத்துச்சென்ற கொலுசுகளையும், நகைகளையும் கைப்பற்றியிருக்கிறார்கள்.

மதுரையில் ஒரு அரசியல் கட்சியினரின் வெங்காய கிடங்கில் பணம் பதுக்கி வைத்திருப்பதாகக்கூறி சோதனை நடத்தியிருக் கிறார்கள்.

தேர்தல் ஆணையத்தின் இந்தக் கெடுபிடிகளை எதிர்த்து தேனி மாவட்டம், ஜக்கம்பட்டியைச் சேர்ந்த தில்லை நடராஜன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் பொது

நல வழக்கு ஒன்றையே தாக்கல் செய்துள்ளார். அதில் தேசிய நெடுஞ்சாலைகளில் தேர்தல் ஆணைய அதிகாரிகள் வாகனங்களைச் சோதனையிட்டு பணத்தை பறிமுதல் செய்து வருகின்றனர், இதுபோல பணத்தை பறிமுதல் செய்ய தேர்தல் கமிஷனுக்கு சட்டப்படி அதிகாரம் இல்லை, திருமணத்துக்கு நகை வாங்கி வந்தாலும் அதையும் பறிமுதல் செய்கிறார்கள். இதனால் பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது, இதற்கு தடை விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார். நீதிபதிகள் வழக்கு விசாரணையை தள்ளிவைத்திருக்கிறார்கள். விசாரணை தொடருகிறது.

தேர்தல் ஆணையம் தனது செயல் பாட்டினை இந்த அளவோடு நிறுத்திக் கொள்ளவில்லை. இதுவரை எந்தத் தேர்தலிலும் இல்லாத அளவிற்கு போலீஸ் டி.ஜி.பி. முதல் மாவட்டக் கலெக்டர்கள், உயர் போலீஸ் அதிகாரிகள் பல பேரை தேர்தல் கமிஷன் மாற்றம் செய்து ஆணை பிறப்பித்துள்ளது. தமிழ்நாட்டில் நேர்மையாகப் பணி புரிந்து கொண்டிருந்த பல அதிகாரிகளை அ.தி.மு.க.வினர் குற்றம் சாட்டினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அதிலே உண்மை இருக் கிறதா என்பதைப் பற்றிக்கூட விசாரிக்காமல் - தமிழக அரசிடம் கேட்காமல் கூட தன்னிச்சையாக மாற்றி ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதிகாரிகள் அளவிலே மட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே சாதாரண மாகப் பணியாற்றும் மக்கள் தொடர்பு அதிகாரி களைக்கூட மாறுதல் செய்து உத்தரவிட்டிருக் கிறார்கள்.

இன்று காலையில் வெளிவந்த "தினத்தந்தி" நாளிதழிலே கூட, "தற்காலிக அலுவலகங்கள், பிரச்சார வாகனங்களில் கட்சிக்கொடி கட்டுவதற்கும், தேர்தல் அதிகாரியின் அனுமதி பெற வேண்டும் - தேர்தல் ஆணையத்தின் கூடுதல் விதிமுறைகள் அமலுக்கு வந்தன" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள செய்தியில், "தமிழக சட்டசபை தேர்தலையொட்டி தேர்தல் ஆணையம் தினமும் புதிது புதிதாக வெளியிட்டு வரும் உத்தரவுகளினால் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்கள் பிரச்சாரத்தை எப்படி தொடங்குவது, செலவுக் கணக்கை எப்படிக் காட்டுவது என்று தெரியாமல் விழி பிதுங்கிய நிலையில் காணப்படுகிறார்கள். இந்த நிலையில் தேர்தல் ஆணையம் கூடுதல் விதிமுறைகளை நேற்று அறிவித்துள்ளது. இந்த விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு

வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது" என்று எழுதி தேர்தல் ஆணையத்தின் கூடுதல் கெடுபிடிகள் எல்லாம் கூறப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணையம் இந்த முறை இந்த அளவிற்கு அதிகக் கெடுபிடிகள் செய்ய என்ன காரணம்? தேர்தல் ஆணையம் கெடுபிடியில் ஈடுபட்டிருப்பதாக நாம் குற்றம் சாட்டவில்லை. நாளேடுகள் பல அதைப்பற்றி அன்றாடம் செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. அதைப்பற்றி தேர்தல் ஆணையம் ஏதாவது கவலைப்படுகிறதா? "மங்கை சூதக மானால் கங்கையில் மூழ்கலாம் - கங்கையே சூதகமானால் எங்கே மூழ்குவது?" என்று தேவர் திருமகன் அடிக்கடி கூறிய பழமொழிதான் நினைவிற்கு வருகிறது!

அன்புள்ள,

மு.க.

23-3-2011

3551. நாடு வாழ நாம் புரிந்த சாதனைகள்!

உடன்பிறப்பே,

ஜெயலலிதா தனது தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தமிழக மக்கள் பல்வேறு பிரச்சினைகளைத் தான் சந்தித்து வருகிறார்கள், எந்த நன்மையும் செய்யப்படவில்லை, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த கருணாநிதி ஏதாவது நடவடிக்கை எடுத்தாரா என்றெல்லாம் கேட்டதாக ஏடுகளிலே செய்தி வந்துள்ளது. எனவே கடந்த ஐந்தாண்டு கால தி.மு. கழக ஆட்சியில் தமிழக மக்களுக்காக என்னென்ன செய்யப்பட்டது என்பது குறித்தும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பது பற்றியும் விளக்கிடுகிறேன்.

ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வீதம் மாதம் 20 கிலோ அரிசி ஏழையெளிய மக்களுக்கு வழங்கப்பட்டு அதன் மூலமாக மாதந்தோறும் 1 கோடியே 85 இலட்சம் குடும்பங்கள் பயனடைகிறார்கள்.

மாதந்தோறும் குறைந்த விலையில் பாமாயில் எண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம்பருப்பு, ரவை, மைதா செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு அத்தியா வசிய பொருள்கள் அரசின் சார்பில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகிறதே, இது மக்களுக்கு செய்யப்பட்ட நன்மை இல்லையா? விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் நிறைவேற்றிய திட்டம் இல்லையா?

"மானிய விலையில் மளிகைப் பொருள்கள்" என 50 ரூபாய்க்கு 10 சமையல் பொருள்கள் ரேஷன் கடைகள் மூலமாக வழங்கப்படுகின்றன.

22 இலட்சத்து 40 ஆயிரத்து 739 விவசாயக் குடும்பங்களுக்கு **7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி** கடந்த ஐந்தாண்டு காலத்தில் செய்யப்பட்டிருக்கிறதே, ஜெயலலிதாவுக்கு இது மக்களுக்கு செய்யப்பட்ட நன்மையாகத் தெரியவில்லையா?

விவசாயிகளுக்கான பயிர்க்கடன் வட்டி 2005-2006இல் 9 சதவீதம்; 2006-2007 கழக அரசில் 7 சதவீதம்; 2007-2008இல் 5 சதவீதம்; 2008-2009இல் 4 சதவீதம்; 2009-2010இல் பயிர்க்கடன் வட்டி அறவே ரத்து; 2006க்குப்பின் இதுவரை **35 இலட்சத்து 54 ஆயிரத்து 721 விவசாயிகளுக்கு 8 ஆயிரத்து 477 கோடியே 56 இலட்சம் ரூபாய்** பயிர்க்கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இவைகள் எல்லாம் கடந்த ஐந்தாண்டு காலத்தில் கழக அரசில் செய்யப்பட்ட நன்மைகளா இல்லையா?

2005-2006இல் நெல் கொள்முதல் குவிண்டாலுக்கு விலை ரூபாய் 600; 2010-2011 இல் சாதாரக நெல் விலை 1050 ரூபாய்; சன்னரக நெல் விலை 1100 ரூபாய்;

உழவர்களும், வாங்குவோரும் பயனடைய மீண்டும் புதுப்பொலிவுடன் **117 உழவர் சந்தைகள்;** மேலும் புதிதாக 45 உழவர் சந்தைகள் அமைப்பு;

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 2006இல் 50 சதவீத காப்பீட்டுத் தொகையை அரசே மானியமாக வழங்கி, ஊக்கப்படுத்தியதால் 2005-2006இல் ஒரு இலட்சம் விவசாயிகள் பயனடைந்த நிலையில்; 2009-2010 ஆம் ஆண்டில் 9 இலட்சத்து ஓராயிரத்து 643 விவசாயிகள் அரசின் மானிய உதவி பெற்றுப் பயிர்க் காப்பீடு செய்தனர். இதுவரை 9 இலட்சத்து ஆயிரத்து 643 விவசாயிகளுக்கு 974 கோடி ரூபாய் இழப்பீடுத் தொகை வழங்கப்பட்டுள்ளது; இது மக்களுக்குச் செய்யப்பட்ட சாதனையா இல்லையா?

கரும்பு விவசாயிகளுக்கு 2005-2006இல் டன் ஒன்றுக்கு வழங்கப்பட்ட விலை ரூ.1014; தற்போது டன் ஒன்றுக்கு ரூ.2000 வழங்கப்படுகிறது.

ஆதிதிராவிட விவசாயிகள் **'தாட்கோ'** நிறுவனத்தின் மூலம் 31.3.2006 வரை பெற்ற **கடன்** தொகை வட்டியுட்பட 5 கோடியே 25 இலட்சம் தள்ளுபடி;

நில அடமானத்தின்மீது தொழில்புரிய வழங்கப்பட்ட **பண்ணைசாராக் கடன்களுக்கு** வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்யப்பட்டு; வாங்கிய கடன் அசல் தொகையை செலுத்தினால் கடன் ரத்து;

மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் புரட்சிகரமான திட்டத்தின்கீழ் 189 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **காவிரி - குண்டாறு இணைப்புத் திட்டம்;**

369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **தாமிரபரணி - கருமேனியாறு - நம்பியாறு இணைப்புத் திட்டம்;**

கழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் சலுகைகளால் உணவு தானிய உற்பத்தி 2005 - 2006இல் 61 இலட்சம் டன்; 2008-2009இல் 91 இலட்சம் டன் என உயர்வு.

விவசாயிகளைச் சுயஉதவிக் குழுக்களாக ஒருங்கிணைத்து சுழல்நிதி வழங்கும் திட்டத்தின்கீழ் 27 ஆயிரத்து 294 குழுக்கள் அமைக்கப்பட்டு, 27 கோடியே 29 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் சுழல்நிதியாக வழங்கப்பட்டு, 32 ஆயிரத்து 940 குழுக்களுக்கு 402 கோடியே 56 இலட்சம் ரூபாய் பயிர்க் கடனாகவும் அளிக்கப் பட்டுள்ளது. ஜெயலலிதாவுக்கு இவைகள் எல்லாம் கடந்த ஐந்தாண்டு காலத்தில் செய்யப்பட்ட சாதனைகளாகத் தோன்ற வில்லையா?

1 இலட்சத்து 5 ஆயிரத்து 494 கைத்தறி நெசவாளர்களுக்கும், 90 ஆயிரத்து 547 விசைத்தறி நெசவாளர்களுக்கும், சிறப்புத் தொகை செலுத்தி மின் இணைப்பு பெற்ற 2 இலட்சத்து 39 ஆயிரத்து 511 விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்; மேலும், 2 இலட்சம் பம்ப் செட்களுக்கும் இலவச மின்சார இணைப்பு படிப்படியாக வழங்கிட ஆணையிடப்பட்டு வழங்கப்படுகிறது.

விவசாயத் தொழிலாளர் நல வாரியம் உட்பட 34 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்களில் 2 கோடியே 11 இலட்சத்து 55 ஆயிரத்து 525 உறுப்பினர்கள் சேர்ப்பு;

20 இலட்சத்து 75 ஆயிரத்து 512 அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு 995 கோடியே 78 இலட்சத்து 48 ஆயிரத்து 815 ரூபாய் உதவித் தொகை;

3742 கோடியே 42 இலட்சத்து 59 ஆயிரம் ரூபாய்ச் செலவில் ஒரு கோடியே 72 இலட்சத்து 80 ஆயிரம் குடும்பங்களுக்கு **இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்** வழங்க முடிவு செய்யப்பட்டு, இதுவரை ஒரு கோடியே 62 இலட்சத்து 59 ஆயிரத்து 526 குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

661 கோடி ரூபாய்ச் செலவில் 29 இலட்சம் குடும்பங்களுக்கு **எரிவாயு இணைப்புடன் இலவச எரிவாயு அடுப்புகள்** வழங்கப்பட்டு உள்ளன;

1 இலட்சத்து 79 ஆயிரம் **நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு** 2 இலட்சத்து 12 ஆயிரத்து 995 ஏக்கர் **இலவச நிலம்;**

8 இலட்சத்து 29 ஆயிரத்து 236 ஏழைக் குடும்பங்களுக்கு **இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் ;**

காமராஜர் பிறந்த நாளில் **"கல்வி வளர்ச்சி நாள்"** என பள்ளிகளில், கல்வி விழா;

2 வயது முதல் 15 வயது வரை உள்ள 73 இலட்சம் குழந்தைகள், மாணவ மாணவியருக்கு சத்துணவுடன் வாரம் 5 நாட்களும் முட்டைகள்; முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப் பழங்கள்;

தமிழ் வழியில் பயிலும் 50 இலட்சத்திற்கு மேற்பட்ட **மாணவ மாணவியர்க்கு அரசுப் பள்ளிகளிலும், அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் சிறப்புக் கட்டணங்களும்,** 11 இலட்சம் மாணவ, மாணவியருக்கு 10, 12ஆம் வகுப்புகளின் **அரசுத் தேர்வுக் கட்டணங்களும் ரத்து.**

பட்டப்படிப்பு பயிலும் 3 இலட்சத்து 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட **கலை அறிவியல் கல்லூரி மாணவ மாணவியரின் படிப்புக் கட்டணங்கள் ரத்து;** 2010-2011 முதல் எம்.ஏ., எம்.எஸ்சி. வகுப்புகளுக்கும் படிப்புக் கட்டணங்கள் ரத்து.

படிப்பைத் தொடர இயலாமல் இடையில் நிறுத்திய ஏழை மாணவர்களில் ஆண்டுக்கு 10 ஆயிரம் பேர் வேலை வாய்ப்புகளுக்கேற்ற தொழிற் பயிற்சிகளைச் சமுதாயக் கல்லூரிகள்

மூலம் பெற, ஒரு கோடி ரூபாய் செலவில் திறந்த நிலைப் பல்கலைக் கழகம் மூலம் தலா ஆயிரம் ரூபாய் உதவித் தொகை;

ஆண்டுதோறும் 24 இலட்சத்து 82 ஆயிரம் **பள்ளி மாணவர்களுக்கும்**, 4 இலட்சத்து 35 ஆயிரம் **கல்லூரி மாணவர்களுக்கும் இலவச பஸ் பாஸ்;**

ஏழை மகளிர்க்கு பட்டப்படிப்பு வரை வழங்கப்பட்ட இலவசக் கல்வி, முதுகலைப் பட்டப் படிப்பு வரை நீட்டிப்பு.

தொழிற்கல்வி படிப்புகளுக்கான **நுழைவுத் தேர்வு ரத்து.**

பட்டதாரிகள் இல்லாக் குடும்பங்களிலிருந்து தொழிற் கல்லூரிகளில் சேரும் முதல் மாணவர் அல்லது முதல் மாணவிக்கு கல்விக் கட்டணம் 20 ஆயிரம் ரூபாய் ரத்து;.

சென்னை, கோவை, திருச்சி, நெல்லை, மதுரை ஆகிய இடங்களில் **5 புதிய அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள்;** 2006க்குப்பின், ஓரத்தநாடு, பெரம்பலூர், வால்பாறை, சுரண்டை, குளித்தலை, லால்குடி, மேட்டூர், புதுக்கோட்டை, தேனி, திருவண்ணா மலை, விழுப்புரம், பென்னா கரம், திருப்பத்தூர் (வேலூர்), வேதாரண்யம் ஆகிய **14 இடங்களில் அரசின் புதிய கலை அறிவியல் கல்லூரிகள்;**

"மாவட்டத்திற்கொரு மருத்துவக் கல்லூரி" கோட்பாட்டின்படி விழுப்புரம், திருவாரூர், தருமபுரி, சிவகங்கை, பெரம்பலூர், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் **6 புதிய மருத்துவக் கல்லூரிகள்;** அரசு பொறியியல் கல்லூரிகள் இல்லா திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, அரியலூர், திருக்குவளை, இராமநாதபுரம், திருவண்ணா மலை, தஞ்சாவூர், திண்டுக்கல், தூத்துக்குடி, கன்னியா குமரி, காஞ்சிபுரம் ஆகிய 12 **மாவட்டங் களில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள்.**

பத்தாம் வகுப்புவரை பள்ளிகளில் **தமிழ் மொழி கட்டாயப் பாடமென சட்டம்;**

நூறாண்டுக் கனவை நனவாக்கிச் **"செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்" சென்னையில் அமைப்பு.**

அருந்தமிழ்ச் சான்றோர் 113 பேரின் **நூல்கள் நாட்டுடைமை;** 7 கோடியே 61 இலட்சம் ரூபாய் பரிவுத் தொகை;

நலிந்த கலைஞர்களுக்கான நிதியுதவித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட நிதியுதவி மாதம் 500 ரூபாய் என்பது 1.9.2006 முதல் 1000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படுகிறது. 2006க் குப்பின் புதிதாக 2500 நலிந்த கலைஞர்களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்க அனுமதிக்கப்பட்டு இதுவரை 9 ஆயிரத்து 563 கலைஞர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற்றுள் ளனர். இவர்களில், தற்போது 5 ஆயிரத்து 41 கலைஞர்கள் நிதியுதவி பெறுகின்றனர்.

தமிழறிஞர்கள் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் 999 தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் 15 ரூபாய் மருத்துவப் படியும், 528 தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு மாதம் 1500 ரூபாய் குடும்ப ஓய்வூதியமும் 15 ரூபாய் மருத்துவப் படியும் வழங்கப்படுகிறது.

4724 திருக்கோவில்களில் 523 கோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் செய்து **குடமுழுக்கு விழாக்கள்** நடத்தப்பட்டுள்ளன;

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம் உட்பட அனைத்துத் திருமண உதவித் திட்டங்களின் நிதியுதவி 10 ஆயிரம் ரூபாய் என்பது 25 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டு; 4 இலட்சத்து 67 ஆயிரத்து 419 ஏழைப் பெண் களுக்கு 882 கோடியே 6 இலட்சம் ரூபாய் நிதியுதவி;

ஏழைக் கர்ப்பிணிப் பெண்களுக்குத் தலா 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவி திட்டத்தின்கீழ் 25 இலட்சத்து 76 ஆயிரத்து 612 **ஏழை மகளிர்க்கு** மொத்தம் 1389 கோடியே 42 இலட்சம் ரூபாய் **நிதியுதவி;**

50 வயது கடந்து திருமணமாகாமல் வறுமையில் வாடும் 12 ஆயிரத்து 904 **ஏழைப் பெண்களுக்கு மாதம் 500 ரூபாய் உதவித் தொகை;**

"வருமுன் காப்போம் திட்டம்" மீண்டும் செயல்படுத்தப்பட்டு 18 ஆயிரத்து 742 மருத்துவ முகாம்களில் ஒரு கோடியே 77 இலட்சத்து 5 ஆயிரத்து 85 பேர் ஏழை எளியோர் பயன்;

தமிழகத்தில் உள்ள 1,421 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும்; புதிதாக உருவாக்கப்பட்ட 116 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும்

தலா மூன்று செவிலியர்களைப் பணியமர்த்தி 24 மணி நேரமும் மருத்துவ சேவை அளிப்பதால், அங்கு 2005-2006இல் நடைபெற்ற மகப்பேறுகளின் எண்ணிக்கை 82 ஆயிரத்து 532 என்பது,

2009-2010இல் 2 இலட்சத்து 98 ஆயிரத்து 853 ஆக, மூன்று மடங்கு உயர்ந்து கிராமப்புற மகளிர் மகிழ்ச்சியாக இருக்கிறார்களே, அது ஐந்தாண்டு கால சாதனையாக அம்மையாருக்குத் தெரிய வில்லையா?

குழந்தைகள் உயிர் காத்திட மூடிய அறுவை சிகிச்சைக்கு 20 ஆயிரம் ரூபாய்; **சாதாரண திறந்த அறுவை சிகிச்சைக்கு** 50 ஆயிரம் ரூபாய்; **கடினமான திறந்த அறுவை சிகிச்சைக்கு** 1 இலட்சம் ரூபாய் என அரசு நிதி உதவி வழங்கப்படுகிறது. 21.11.2007இல் தொடங்கப்பட்ட **இளம் சிறார் இருதய அறுவை சிகிச்சைத்** திட்டம், 3.6.2008இல் தொடங்கப் பட்ட **பள்ளிச் சிறார் இருதய அறுவை சிகிச்சைத்** திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களின்கீழ் 3264 சிறார்க்கு 17 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் புகழ்வாய்ந்த 28 தனியார் மருத்துவ மனைகளின் மூலம் இருதய அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டு, குழந்தைச் செல்வங்களின் அரிய உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

கிராமப்புற ஏழைகளுக்கும் உடனடி மருத்துவ வசதி கிடைக்கச் செய்திட இ.எம்.ஆர்.ஐ. நிறுவனத்துடன் இணைந்து 15.9.2008இல் தொடங்கப்பட்ட 445 ஊர்திகளுடன் கூடிய அதிநவீன **"அவசர கால மருத்துவ ஊர்தி 108 சேவைத் திட்டம்"** தமிழகம் முழுவதும் நடை முறை; 8 இலட்சத்து 8 ஆயிரத்து 907 பேர் பயன்;

அரசு ஊழியர்களுக்கு நான்காண்டுகளில் 2 இலட்ச ரூபாய் வரை மருத்துவ உதவி வழங்கும் புதிய **"மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்"**;

"உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்" 2009 ஜூலை முதல் நடைமுறை; 1 கோடியே 34 இலட்சம் குடும்பங்கள் பதிவு; இதுவரை 2 இலட்சத்து 55 ஆயிரத்து 744 ஏழை மக்களுக்கு 667 கோடி ரூபாய்ச் செலவில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன;

ஏறத்தாழ 2 இலட்சத்து 35 ஆயிரத்து 464 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 62 ஆயிரத்து 349 கோடி ரூபாய் முதலீட்டிலான 27 புரிந் துணர்வு ஒப்பந்தங்கள்; **24 அரசாணைகள்** மூலம் 51 **புதிய தொழிற்சாலைகள்** அமைக்க மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகளில் இதுவரை 12 **தொழிற்சாலைகள் புதிதாக திறக்கப்பட்டுள்ளன.**

4 இலட்சத்து ஓராயிரத்து 704 படித்து **வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு** 284 கோடி ரூபாய் **உதவித் தொகை** வழங்கப்பட்டுள்ளது;

ஏறத்தாழ 5 இலட்சத்து 5 ஆயிரத்து 314 இளைஞர்களுக்கு **அரசு அலுவலகங்களில் புதிய வேலைவாய்ப்புகள்** வழங்கப்பட்டுள்ளன;

ஆதரவற்ற முதியோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 1.9.2006 இல் 400 ரூபாய் எனவும், 24.11.2010 முதல் 500 ரூபாய் என மேலும் உயர்த்தப்பட்டு, மொத்தம் 23 இலட்சத்து 71 ஆயிரத்து 370 பேர் மாதம் 500 ரூபாய் வீதம் உதவித்தொகை பெறுகின்றனர். இந்த உதவித் தொகை மாதம் 750 ரூபாயாக உயர்த்தப்படும் என தற்போது தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடுமையாக பாதிக்கப்பட்ட **மாற்றுத்திறனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித் தொகை** மாதம் 200 ரூபாய் என்பது 500 **ரூபாய்** என உயர்த்தப்பட்டு, 2006 **முதல்** ஆண்டுதோறும் 10 **ஆயிரம் கடும் மாற்றுத் திறனாளிகள் பயன்;**

1989இல் தருமபுரி மாவட்டத்தில் கழக அரசு தொடங்கிய **மகளிர் திட்டத்தின்மூலம்** இதுவரை உருவாக்கப்பட்டுள்ள **மகளிர் சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை 5,54,538.** இக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்த கடன் 9 ஆயிரத்து 32 கோடி ரூபாய்.

2006**க்குப்பின் 26 இலட்சத்து 94 ஆயிரம் மகளிர் உறுப்பினரைக் கொண்ட 1 இலட்சத்து 75 ஆயிரத்து 493 புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு;** 1068 கோடி ரூபாய் அளவுக்கு பொருளாதாரக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது.

2,81,883 மகளிர் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள **சுழல் நிதி 281 கோடியே 88 இலட்சம் ரூபாய்.**

மகளிர் சுய உதவிக் குழுக்களைப் போலவே 2006க்குப்பின் 19 ஆயிரத்து 885 இளைஞர் சுயஉதவிக் குழுக்களும், 30 ஆயிரம் நகர்ப்புற சுயஉதவிக் குழுக்களும், 11 ஆயிரத்து 155 விவசாயிகள் கூட்டுப் பொறுப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டு நிதியுதவிகள் வழங்கப் படுகின்றன.

சுய உதவிக் குழு உறுப்பினர்களாகிய 56,748 இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

2,549 கோடி ரூபாய் செலவில் 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளில் **அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ்** அடிப் படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள்;

அதேபோல, **அனைத்துப் பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ்** 280 கோடி ரூபாய்ச் செலவில் 561 பேரூராட்சிகளில் கட்டமைப்புப் பணிகள்;

நிதிநிலையில் நலிந்த 30 நகராட்சிகளிலும் தலா 75 இலட்சம் ரூபாய்ச் செலவில் அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன;

மாநகராட்சி, நகராட்சிகளின் நிதிநிலை மேம்பட்டு மக்களுக்கு வசதிகள் செய்திட அவை அரசுக்குச் செலுத்தவேண்டிய 793 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி;

உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதிப் பகிர்வு 2006-2007இல் 8 விழுக்காடு; அதாவது 2112 கோடி ரூபாய்; 2007-2008இல் 9 விழுக்காடு; அதாவது 2734 கோடி ரூபாய்; 2008-2009இல் 9 விழுக்காடு; அதாவது 2959 கோடி ரூபாய்; 2009-2010இல் 9.5 விழுக்காடு; அதாவது 3316 கோடி ரூபாய்;

2010-2011இல் 10 விழுக்காடு என மேலும் உயர்த்தி, 4030 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

12 ஆயிரத்து 94 கோடி ரூபாய்ச் செலவில் 57 ஆயிரத்து 787 கிலோ மீட்டர் நீளச் சாலைகளில் மேம்பாட்டுப் பணிகளும் பராமரிப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டன;

4 ஆயிரத்து 730கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் இருவழித் தடங்களாக அகலப்படுத்தப்பட்டுள்ளன;

தமிழகத்தில் உள்ள சாலைகளில் 1046 பாலங்கள் மற்றும் 3800 மிகச் சிறுபாலங்கள் 881 கோடி ரூபாய்ச் செலவில் கட்டப்பட்டுள்ளன;

தமிழகத்தில் உள்ள 4,676 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளில் 3,226 கி.மீ நீளச் சாலைகள் 4 வழிச்சாலையாக மாற்றப்பட்டு உள்ளன;

தலவரி, தலமேல்வரி, தண்ணீர்த் தீர்வை அனைத்தும் ரத்து; நிலவரி, ஏக்கர் ஒன்றுக்குப் புன்செய் நிலங்களுக்கு 15 ரூபாய் என்பது 2 ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு 50 ரூபாய் என்பது 5 ரூபாய் என்றும் பெயர் அளவிற்கு மட்டுமே வசூலிக்க அரசு ஆணை;

ஈரோடு, திருப்பூர், வேலூர், தூத்துக்குடி ஆகிய 4 நகராட்சிகள் **மாநகராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன.**

அரியலூர், திருப்பூர் புதிய மாவட்டங்கள் உதயம்;

இஸ்லாமியர் சமுதாயம் மேன்மைபெற 3.5 **விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு;**

அருந்ததியர் சமூகத்தின் அவலம் தீர 3 **விழுக்காடு தனி உள் ஒதுக்கீடு ;**

சமத்துவ சமுதாயம் காணும்நோக்கில் **அனைத்துச் சாதியாரும் அர்ச்சகராகும் சட்டம்** நிறை வேற்றப்பட்டு பல்வேறு சாதிகளையும் சார்ந்த 216 பேருக்கு அர்ச்சகர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.

அனைத்து சாதியினரும் ஒரே இடத்தில் வசிக்க ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள 145 **பெரியார் நினைவு சமத்துவபுரங்களுடன் மேலும் 95 சமத்துவ புரங்கள் அமைத்து 240 சமத்துவபுரங்களையும் தந்தை பெரியார் திருவுருவச் சிலைகளுடன் நிர்மாணிக்கும் திட்டம் நடைமுறை;** 95 சமத்துவ புரங்களில் இதுவரை 65 சமத்துவ புரங்கள் திறப்பு; 30 சமத்துவபுரங்கள் அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

சென்னை கோட்டூர்புரத்தில் உலகத்தரத்திலான 181 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான "அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்" 15.9.2010இல் திறப்பு;

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் **புதிய சட்டமன்ற - தலைமைச்செயலக வளாகம் திறந்து சாதனை;**

100 கோடி ரூபாய்ச் செலவில் **அடையாறு தொல்காப்பியர் பூங்கா திட்டம்;**

சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் 8 கோடி ரூபாய்ச் செலவில் உலகத்தரத்திலான **"செம்மொழிப் பூங்கா"** 24.11.2010இல் திறப்பு;

சென்னை மாநகர் குடிநீர் பற்றாக்குறையை முற்றிலும் தீர்த்திட, **வட சென்னை மீஞ்சூரில் "கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்"** நிறைவேற்றப்பட்டு, 31.7.2010இல் திறப்பு;

மத்திய அரசு அனுமதித்துள்ள 908 கோடி ரூபாய் நிதியுதவியுடன் தென் சென்னையில் நெம்மேலியில் **"கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்;"** உருவாகிவருகிறது.

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி நிதி உதவியுடன் 14 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **"மெட்ரோ ரயில் திட்ட"** அமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன;

1929 கோடி ரூபாய் மதிப்பீட்டில், **"ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;"**

630 கோடி ரூபாய்ச் செலவில், **"இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறை வேற்றம்;"**

சென்னைத் துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரை 1,655 கோடி ரூபாய் மதிப்பீட்டில், **"பறக்கும் சாலைத் திட்டம்;"** பிரதமரால் அடிக்கல் நாட்டப்பட்டு வேகமாக உருவாகி வருகிறது.

மத சுதந்திரம் பேண - **"கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் ரத்து;"**

"மூன்றாவது காவல் ஆணையம்" மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி ஆர்.பூர்ணலிங்கம் தலைமையில் அமைக்கப்பட்டு, அது வழங்கிய 444 பரிந்துரைகளில் இதுவரை 278 பரிந்துரைகள் நடைமுறை;

2 இலட்சத்து 12 ஆயிரத்து 981 **சத்துணவுப் பணியாளர்கள் பயன்பெற கால முறை ஊதியம்; ஓய்வூதியம்;**

டெஸ்மா, எஸ்மா சட்டங்களை நீக்கி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு **பறிக்கப்பட்ட சலுகைகள் மீண்டும் வழங்கப்பட்டு,** 1.1.2006 முதல் தமிழகத்தில் ஆண்டுக்கு 5 ஆயிரத்து 155 கோடியே 79 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவில் 6வது ஊதியக்குழு பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதன்காரணமாக, 11 ஆயிரத்து 93 கோடி ரூபாய் **அரசு ஊழியர் ஆசிரியர்களுக்கு நிலுவைத் தொகையாக அனுமதிக்கப்பட்டு புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது.**

ஏறத்தாழ 2 இலட்சம் **அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் 200 கோடி ரூபாய் கூடுதல் செலவில் ஒரு நபர் குழு பரிந்துரை** 1.8.2010 முதல் நடைமுறை;

ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளை நீக்கி 163 கோடி ரூபாய்ச் செலவில் கூடுதல் சலுகைகள்; 2.73 இலட்சம் **ஆசிரியர்கள் பயன்.**

அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத அலுவலர்கள், அரசு நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களில், மாற்றுத் திறனாளிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் ஊர்திப்படி 300 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக 1.10.2010 முதல் உயர்த்தி வழங்கிட ஆணை;

21 இலட்சம் குடிசை வீடுகளை 6 ஆண்டுகளில் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் **"கலைஞர் வீடு வழங்கும் திட்டம்"** என்னும் புரட்சிகரமான திட்டம் இவ்வாண்டில் நடை முறை. நடப்பாண்டில் ஒரு வீட்டிற்கு 75 ஆயிரம் ரூபாய் மானியம் வீதம் 2,250 **கோடி ரூபாய்ச் செலவில் 3 இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு,** 15.8.2010 முதல் பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்குரிய பணி ஆணைகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின்கீழ் முதல் வீடு கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே வல்லம்படுகை கிராமத்தில் 9.10.2010 அன்று பயனாளிக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இதுவரை 75 ஆயிரம் கான்கிரீட் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

31.3.2011க்குள் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் கான்கிரீட் வீடுகளும், 15.4.2011க்குள் 2 இலட்சம் கான்கிரீட் வீடுகளும் கட்டி முடிக்கப்படும். இதுவரை இத்திட்டத்திற்கு 1082 கோடி ரூபாய் அரசு செலவிட்டுள்ளது. மேலும் 12 இலட்சம் பயனாளிகளுக்கு தகுதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக மேலும் 3 இலட்சம் குடிசைகள் இத்திட்டத்தின்கீழ் கான்கிரீட் வீடுகளாகக் கட்டப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டு 2011 பிப்ரவரியில் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான அரசு மானியம் 75 ஆயிரம் ரூபாய் என்பது ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, இன்னும் துறைவாயிலாக கழக அரசின் ஐந்தாண்டு காலச் சாதனைகளையும் பட்டியலிடுவதென்றால் இடம் போதாது என்பதால் அந்தப் பட்டியலை நிறுத்தி விட்டேன். தற்போது கடந்த ஐந்தாண்டுகளில் எந்தச் சாதனையும் செய்யப்படவில்லை என்று தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசப் படுவதால் ஒட்டுமொத்த சாதனைகள் சிலவற்றை அவர்களுக்கும், நாட்டு மக்களுக்கும் ஞாபகப்படுத்துவதற்காக இதனைத் தொகுத்து வெளியிட்டுள்ளேன். செய்த சாதனைகளைச் சொல்லியிருக்கிறேன். இந்தச் சாதனைகளை அன்றாடம் அனுபவித்து வரும் தமிழ்நாட்டு மக்கள் காட்டப்போகும் நன்றியினை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

அன்புள்ள,

மு.க.

28-03-2011

3552. பாரா உஷார்!

பதுங்கி வருகிறது பணநாயகம்!

உடன்பிறப்பே,

உஷார்! உஷார்!!

தோல்வி பயமும் - வெற்றி கை கூடாதோ என்ற சந்தேகமும் ஜெயலலிதா கும்பலுக்கு ஏற்பட்டு;

எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று பணத்தை மூட்டைக் கட்டிக் கொண்டு -

காரிலும் - வண்டிகளிலும் - வேன்களிலும் ஆட்கள் மூலமாகவும் -அனுப்பப்படுவதாக நம்பகமான செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன.

எப்படியும் இந்தத் தேர்தலில் என்னையும், பேராசிரியரையும், ஸ்டாலினையும் மற்றும் சில கழகத்தின் முக்கிய தளபதிகளையும் தோற்கடித்தே தீர வேண்டுமென்று ஜெயலலிதா கங்கணம் கட்டிக்கொண்டு - சேகரித்த பணத்தையெல்லாம் செலவிடத் துணிந்து விட்டாராம்!

நாட்டில் அரசியல் அமைப்பிலும் மற்ற சகல அமைப்புகளிலும் பறிபோய்விட்ட பதவி அதிகாரத்தை மீண்டும் பற்றிக்கொள்ள வேண்டுமென்பதற்காக - ஒரு தொகுதிக்கு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் பத்து கோடி ரூபாய் வரையில் செலவு செய்யத் தயார் என்று அம்மையார் சவால்விட்டு பணம் ஊர்வலம் நடத்தத் தயாராகி விட்டார்.

உடன்பிறப்பே, பதுங்கிப் பதுங்கியோ பலத்த காவலுடனோ தேர்தல்களத்தில் குதித்து ஜனநாயகத்தை விலை பேசிக் கொண்டே பண நாயகத்திற்குப் பகைவர்போல் பாசாங்கு செய்யும் அம்மையார் கும்பல் ஆட்களை அடையாளம் காணத்

தவறாதீர்கள்! அவ்வாறு கார்களிலும், வேன்களிலும் பணத்தைக் குவித்து வைத்துக் கொண்டு வாக்குகளை விலை பேசுவோரைக் கையும் களவுமாக காவலர்களிடம் பிடித்துக் கொடுக்க வேண்டிய கடமை உணர்வும் நமக்குள்ளது.

வண்டி வாகனங்களில் வருவார்கள் - ஒண்டிக் கட்டை போல் திரிவார்கள் - ஏழைகளை விலைக்கு வாங்கி ஜனநாயகத்தை ஏலம் போடத் துணிவார்கள் - உற்றுப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் - ஒருக்கணமும் உறங்காமல் காவல் காத்திட வேண்டும் - இல்லாவிட்டால் எதிரிகள் ஏமாற்றி விடுவார்கள். மாதக் கணக்கில் விவசாயி உழைத்து, வியர்வையைச் சிந்தி வளர்த்த பயிரின் மொத்த விளைச்சலை இரவோடு இரவாக களவாடிச் சென்றிட எத்தர்கள் முயலுவார்கள். ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டோர் புலி வேடம் போடுகிறார், அவர்களின் பொய் வேடத்தைக் கலைத்திட முயலுவதுதான் உன் பணியாக இருக்க வேண்டும். திருவிழா கூட்டத்தில் பணத்தைத் திருடிக்கொண்டு செல்பவன் துரத்திச் செல்பவர்களோடு தானும் சேர்ந்து ஓடிக் கொண்டே "திருடன், திருடன்" என்று குரல் கொடுப்பதைப் போல - நல்லவர்கள் போல மக்களிடம் மீண்டும் நடிக்கப் புறப்பட்டு விட்டார்கள். மக்களின் ஞாபக மறதியை மூலதனமாக வைத்துக் கொண்டு - யாரோ எழுதிக் கொடுத்ததை பக்கம் பக்கமாக படித்து விட்டு, பதவியேற்பு எப்போது என்று துடியாய்த் துடிக்கிறார்கள். அவர்களை நம்பிக் கெட்டோர் நாட்டிலே கண்ணெதிரே இருக்கும்போதே, உண்மை சொரூபத்தைப் புரியாமல் இன்னும் சிலர் உடன் சென்று கொண்டுதான் இருக்கிறார்கள்.

உடன்பிறப்பே, ஐந்தாண்டு காலமாக நாம் சாதனைகளைச் செய்து விட்டுத்தான் தற்போது மக்கள் முன்னால் நிற்கிறோம். ஆனால் அவர்கள் ஆண்ட ஐந்தாண்டு காலத்தில் தமிழ்நாட்டு மக்கள் எந்தத் தரப்பினரையாவது நிம்மதியாக வாழ விட்டார்களா? அரசு ஊழியர்கள் பட்ட பாடு எத்தனை? எஸ்மா, டெஸ்மா சட்டங்களின் மூலமாக அரசு அலுவலர்கள் இரவோடு இரவாக கைது செய்யப்பட்ட கொடுமைகளையெல்லாம் மக்கள் மறந்து விட்டார்களா? சாட்டையால் அடித்து அரசு அதிகாரிகளிடம் வேலை வாங்குகிறேன் என்று சட்டமன்றத்திலே அம்மையார் முழங்கியதுதான் மறக்கக் கூடிய வார்த்தைகளா? ஒன்றிரண்டு பேர் மறந்துவிட்டோ, மீண்டும் தப்பித் தவறி அவர்கள் வந்துவிட்டால்

நாம் முந்திக் கொள்ளலாம் என்ற நினைவோடோ பாதை தவறி நடக்க முயற்சிக்கலாம்.

அவர்கள் வழியில் அவர்கள் செல்லட்டும். நாம் நம் வழியிலே செல்வோம். நாளையதினம் (30-3-2011) என்னுடைய இரண்டாவது கட்டச் சுற்றுப் பயணத்தை கோவையில் தொடங்குகிறேன். என்னுடைய சுற்றுப் பயணத்தையும், எதிர்க்கட்சித் தலைவரின் சுற்றுப் பயணத்தையும் ஒப்பிட்டு எழுதிய ஒரு ஆங்கில நாளிதழ் நான் சாதனைகளைச் சொல்லி வாக்குகளைக் கேட்பதாகவும், ஆனால் அம்மையார் என்னையும், என் குடும்பத்தினரையும் வேகமாகத் தாக்கிப் பேசுவதாகவும் எழுதியுள்ளது. அவர்களுக்கு நம்மைத் தாக்கிப் பேசுவதைவிட வேறு செய்திகள் பேசுவதற்கு இல்லை என்கிறபோது என்ன செய்வார்கள்? அவர்கள் தாக்கிப் பேசிட, பேசிட அவர்களைப் பற்றி மக்களே நன்கு உணர்ந்து கொள்வார்கள். அவர்கள் எப்படியும் வெற்றி பெறமுடியாத நிலையில்தானே குவித்து வைத்துள்ள நிதியைக் கொண்டு பணத்தை அடித்து வெற்றி பெற நினைக்கிறார்கள். அந்த நினைப்புக்கு இடம் கொடுக்காமல் ஜாக்கிரதையாக நீ பணியாற்ற வேண்டியது முக்கியம். நாம் நம் வழி ஜனநாயக வழியில் நடப்போம் - அவர்கள், அவர்களுக்கு மட்டுமே தெரிந்த பணநாயக வழியில் நடக்கட்டும்.

அன்புள்ள,

மு.க.

30-3-2011

3353. "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை"!

உடன்பிறப்பே,

ஓய்வுக்கு ஓய்வு கொடுத்துவிட்டு - கடுமையான வெயிலிலும் - கொடுமையான குளிரிலும் மாறி மாறிப் பயணம் செய்து - நமது கூட்டணியின் வெற்றிப் பதாகையைத் தூக்கிப் பிடிக்க ஆங்காங்கு நிறுத்தப்பட்டிருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழக - காங்கிரஸ் - பாட்டாளி மக்கள் கட்சி - விடுதலைச் சிறுத்தைகள் - இந்திய யூனியன் முஸ்லிம் லீக் - கொங்குநாடு முன்னேற்றக் கழகம் - மூவேந்தர் முன்னேற்றக் கழகம் - பெருந்தலைவர் மக்கள் கட்சி ஆகியவற்றின் வேட்பாளர்களையெல்லாம் அறிமுகப்படுத்தவும் - அவர்கள் ஆற்றி வரும் சமுதாயப் பணிகளை நினைவுபடுத்தி அப்பணி தொடரவும் -அவர்களை மூல பலமாகப் பெற்றுள்ள நமது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்கு ஈட்டி முனைகளாக இருந்து இடையறாது பணியாற்றிடுவீர் என்று அணியின் செயல்வீரர்களைக் கேட்டுக் கொள்ளவும் - அவர்தம் வேண்டுகோளையும், என் வேண்டுகோளையும் ஏற்று வெற்றிக் கொடியேற்றிட வாரீர், வாரீர் என - உடன்பிறப்பாம் உங்களுக்கெல்லாம் அழைப்பு வேண்டுகோள் விடுக்கின்ற இந்த நேரத்தில் - என் சுற்றுப்பயணத்தின் களைப்பு நீங்கி - மேலும் சுறுசுறுப்பாக உங்களோடு இணைந்து ஓடியாடி உழைக்கும் திறனை மென்மேலும் வளர்ப்பதற்குப் பதிலாக - ஆங்காங்கு உடன்பிறப்புக்களாம் உங்களிடையே களத்தில் ஏற்படும் கவலை தரும் நிகழ்வுகள் என் பயணத்தைச் சற்று தயக்கமுறச் செய்து வருவதை, கழகத்தின் தற்கால நலன் கருதியும், எதிர்கால வளர்ச்சிக் கருதியும் வெளிப்படையாகவே கூற விரும்புகிறேன்.

அப்படிக் கூறுவது என் சிறு கவலைக்குக் கூட அருமருந்தாகும் என்ற நம்பிக்கையினால் இதை எழுதுகின்றேன்.

எந்தவொரு இயக்கத்திலும் கருத்து வேறுபாடுகள் - அவற்றால் விளையும் கசப்புணர்வு - அலைகளிடையே நுரைகளின்

தொகுப்பாக வெளிப்படுவது இயற்கை. ஆனால் அவற்றால் கடல் அலைகள் ஓய்ந்து விடுவதுமில்லை - கடலே முற்றாக காய்ந்து விடுவதுமில்லை.

கடல் -
அலை -
நுரை -
இவை நிரந்தரமானவை. அதற்காக

கடலையோ -
அலையையோ -
நுரையையோ -

வெறுத்து விடுபவர்களும் இல்லை - வேண்டாமென்று ஒதுக்கி விடுபவர்களும் இல்லை.

இதை மனத்திற்கொண்டு சிந்தித்து செயல்படுவதே செயல் வீரர்களாம் இந்தக் கூட்டணியின் அனைத்துக் கட்சிச் செயல் வீரர்களுக்கும் நான் விடுக்கும் அன்பான அறைகூவலாகும்.

கேள்விப்படுகிறேன் -
ஏன் நேரிலும் கண்டு வந்தேன் -
யாரும் சொல்லாமலே உணர்ந்தும் வந்தேன் -

இந்தச் சுற்றுப் பயணம் பல்லாயிரக் கணக்கான வாக்காளப் பெருமக்களை - இயக்கங்களின் ஈடற்ற உழைப்பாளிகளைக் காண்பதற்குப் பயன்பட்டதென்றாலும் - பளபளப்பானப் பட்டாடையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக - சிக்கிச் சீர்குலைக்கும் சிறு சிறு மனத்தாங்கல்கள் - என் கண்ணையும் கருத்தையும் உறுத்திடத் தவறவில்லை.

"இவரை வெற்றிபெறச் செய்தால், நமக்கென்ன இலாபம்? செய்ததால்தான் கிடைப்பது என்ன இலாபம்?" என்று நெஞ்சில் ஒரு கோணல் ஏற்படுமேயானால் - உங்கள் எல்லோரையும் இணைத்து - நான் நெய்திட விரும்பும் பட்டாடைக் கிடைத்திடுமா? அதைப் பக்குவமாய் படைத்திடத்தான் இயலுமா? என்ற கலக்கம் என்னை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றது.

இந்தக் கூட்டணியில் யார் பெறுகிற வெற்றியானாலும் அது நமது நாட்டுக்கே ஏற்றமும் வெற்றியும் வழங்குவதல்லவா? என்ற

உணர்வுதான் மகத்தானது; மரியாதைக்குரியது எனும் பரந்த மனப்பான்மையோடுதான் உலகக் கோப்பை வெற்றியில் 11 பேர்தான் கோப்பையைப் பெற்று மகிழ்ந்து கொண்டாடினார்கள் என்றாலும் - இந்த உலகில் உள்ள இந்தியர்கள் அனைவரும், ஏன் குறிப்பாகத் தமிழர்கள் அனைவரும் குதூகலித்து கொண்டாட்டம் போடுகிறார்களே; அந்த வெற்றியில் தமக்குக் கிடைத்த பங்கு என்ன என்று கருதிப் பார்த்தா அல்லது கணக்குப் பார்த்தா இப்படிக் களிப்பில் ஆடுகிறார்கள்?

இல்லை - இல்லவே இல்லை! ஓர் உணர்வு - உயிரினும் மேலான உணர்வு - அந்த 11 பேர் பெற்ற வெற்றியை - அந்த 11 பேர்தானே பெற முடியும் - பார்த்தோர், ரசித்தோர் என பல்லாயி ரக்கணக்கானவர் பெறமுடியுமா? எனினும், ஒவ்வொருவரும் அந்த வெற்றியைப் பெற்றதாகத்தானே மகிழ்கிறார்கள்.

அஃதேபோல் 234 தொகுதிகளில் வெற்றி பெறுவோரின் எண்ணிக்கை 234 தானே இருக்க முடியும்? நாம் இல்லாத அந்தக் குழுவில் யார் வெற்றிபெற்றால் என்ன என சிந்திப்போர் - சிடுசிடுப்போர் - சீறிடுவோர் யாராயினும் அவர்கள் நாட்டுப்பற்றின் மேன்மை அறியாதவர்கள் என்றுதானே கருதப்படுவர்.

விளையாட்டுக் களத்தில் பெறவேண்டிய வெற்றிக்கு ஒவ்வொரு இடத்தில் இருந்தும் ஓடியும், உதவியும், உற்சாகப் பண்பாடியும், ஒருவருக்கொருவர் ஊக்கம் தந்தும் - வெற்றி யின் மொத்த வடிவத்தைத் தூக்கி நிறுத்துவது போலத்தான் - ஜனநாயகம் காத்திட நடைபெறும் தேர்தல் களத்தில் ஓரணியில் நிற்போர் அனைவரும் ஒத்துழைத்து வெற்றி வாகை சூடுவதில் "நான் முந்தி - நீ முந்தி" என்று போட்டிபோட வேண்டுமே தவிர - வேகமாக அடிக்கப்பட்டு உயரப் பறந்தோடி வரும் பந்தினைப் பிடித்தால் - அதன் பெருமை பந்தை வீசுபவருக்குத்தானே கிடைக்கும் என்று எண்ணி - பந்தைப் பிடிப்பவர் அந்தப் பந்தைப் பிடிக்காமல் விட்டுவிட்டால் - அது அந்த அணிக்கே பிணியாகிவிடும் அல்லவா?

உலகக் கோப்பை கிரிக்கெட் வெற்றியைப் பெற்றுள்ள இந்த நேரத்தில் உடன்பிறப்புகள் பலருக்கும் இது உள்ளத்தில் பதியும் என்பதற்காக இதை உதாரணமாகக் குறிப்பிடுகிறேன்.

இதில் ஒளிந்து கிடக்கும் உண்மையின் துடிப்பையும் - உரசிக் கொண்டு செல்லும் பொய்மையின் நடிப்பையும் என் உயிரினும் மேலான உடன்பிறப்புகள் அனைவரும் இங்கொன்றும் அங்கொன்றுமாக உணர்ந்திருப் பதை நானும் உணருகிறேன். அதனால் மனம் சற்று உடையினும், மலை போல் நிமிர்ந்து நிற்கிறேன்.

இந்த வலிமைக்குக் காரணம் ஊர் பல சுற்றி உலா வந்தபோது என் உடன்பிறப்புகளும் அவர்தம் உடன் பிறந்த அண்ணன் தம்பிகளும் - அக்காள் தங்கைகளும் - உற்றார் உறவினரும் - அவர்கள் அனைவரையும் பெற்றெடுத்த தாய்மார்களும், தந்தையரும் - வழி நெடுக வாழ்த்திப்பாடி - என்னைப் பார்த்து "ஏழைகளின் பசி போக்க அரிசி கொடுத்து, வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வடலூர் வள்ளலாரின் வழி வந்தவனே!" என்று வாழ்த்தியதும் - "நம்பிக்கையாகப் போ - வெற்றிதான் நமக்கு" என வீரமொழி பொழிந்ததையும்தான் நான் மறக்க இயலுமா?

எனக்கோ நலமில்லாத உடல் - பலமும் இல்லை பயணம் செய்வதற்கு - இருந்தாலும் உன்னையும் என் தமிழ் மக்களையும் கண்டிட ஓடோடி வருகிறேனே, ஏன்?

அவர்கள் எல்லாம் நன்றி மறவாதவர்கள் - நானும் அவர்களுக்கு தொடர்ந்து நன்மை செய்ய மறவாதவன்.

என்னை எங்கே உட்கார வைத்தாலும் - "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற அண்ணாவின் வரிகளைத் தேடிக் கண்டு பிடித்து - திக்கற்றோர் வாழ்ந்திட - அந்த வரிகளை வான விளிம்பில் வண்ணமாய்ச் செதுக்கி - காணும் விழிகளில் எல்லாம் ஏழைபாழைகள் களி நடனம் புரிந்திட, வாழும் வழி நிலையாகத் திறக்கப்படும் வரை - நாம் வாழினும், வீழினும் போரிடுவோம் - என்ற சூளுரையை நெஞ்சில் பதித்து நிமிர்ந்து நின்று போராட வா என் கண்மணியே! என்று வாஞ்சையுள்ள உடன்பிறப்புகளே உங்களையெல்லாம் அழைக்கின்றேன்.

"நரிக்கு நாட்டாண்மை கொடுத்தால், அது கெடைக்கு எட்டு ஆடு கேட்கும்" என்ற பழமொழியை வாக்காளப் பெருமக்களுக்கு எச்சரிக்கையாக்கி; - "பொறுத்தார் பூமியாள்வார்" என்ற பழமொழியை நமது அணியினருக்குப் போர்க் கருவியாக

வழங்கி - நடக்கின்ற இந்த ஜனநாயக அறப்போரில் - வலிவான தாயகம் - வளமான தமிழகம் என்ற முழக்கத்தோடு வெற்றி நடை போடுவோம், வா! வா! "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்ற அண்ணாவின் கருத்துப் புதையலைப் படித்திருப்பாயே; அது இன்றைய என் கடிதத்திற்கும் பொருந்தும் என்று உணர்ந்து எழுந்து வா!

அன்புள்ள,

மு.க.

5-4-2011

3554. மதிப்பிற்குரிய மதிப்பெண் என்ன?

உடன்பிறப்பே,

இன்று தேர்தல் நாள்! 13-4-2011. உனக்கு இந்தக் கடிதத்தைப் படிக்கவே நேரம் இருக்காது! ஓடியாடி உழைத்துக் கொண்டிருப்பாய்! இந்த நேரத்தில் உனக்கொரு கடிதம்! ஆம், கடைசிநேர வேண்டுகோள் கடிதம்! ஏனென்றால் இன்று தமிழ்நாட்டு மக்கள் நாம் கடந்த ஐந்தாண்டுகளில் ஆற்றிய பணிக்கு மதிப்பெண் அளிக்கின்ற நாள். பள்ளியில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்குவார்கள், ஆனால் மாணவர்கள் ஆசிரியருக்கு மதிப்பெண் போடுவதில்லை. ஆனால் அரசியலில் தங்களை ஆட்சி செய்தவர்கள் கடந்த ஐந்தாண்டுகளில் முறையாக, ஒழுங்காக, சீராக தேர்வு எழுதினார்களா என்பதைக் கண்ட பொதுமக்கள் அதற்காக மதிப்பெண் அளிக்கின்ற நாள்தான் இன்று! ஓராண்டு முழுதும் வயலையே சுற்றிச் சுற்றி வந்து, உரமிட்டு, நாற்று நட்டு, களையெடுத்து பயிரை பராமரித்த விவசாயி அதற்கான அறுவடையைச் செய்து "கண்டு முதல்" செய்கின்ற நாள்தான் இன்று!

உடன்பிறப்பே, கடந்த ஐந்தாண்டுகளில் நாம் எந்த அளவிற்கு தமிழ்நாட்டு மக்களுக்காக உழைத்திருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் நமக்குப் பெருமையாகத்தான் இருக்கின்றது. ஆட்சியில் இருந்தபோது என்ன செய்து கிழித்தார்கள் என்று நம்மைப் பார்த்து யாரும் கேட்க முடியாது! வாக்குகேட்டுச் சென்று மக்களைப் பார்த்தபோது அவர்கள் யாரும் முகத்தைத் திருப்பிக்கொள்ளவில்லை. ஆண்களை மிஞ்சும் வகையில் இந்த முறை தாய்மார்கள் நம்மை வரவேற்ற காட்சி நினைத்து நினைத்துப் பெருமிதம் கொள்கின்ற அளவிற்குத்தான் இருந்தது. கடலூரில் திரண்ட மாபெரும் மக்கள் சமுத்திரத்தைச் சந்தித்துவிட்டு, இரவே சிதம்பரம் வந்து தூக்கம் என்ற பெயரால் ஒரு சில மணி நேரம் படுத்துப் புரண்டுவிட்டு, மறுநாள் காலையில் நான்

போட்டியிடும் திருவாரூர் நோக்கி எங்கள் "வேன்" புறப்பட்டது. கொள்ளிடத்திற்கும் சீர்காழிக்கும் இடையே ஒரு கிராமத்தில் மக்கள் வழிமறித்து வரவேற்றார்கள். ஒரு சிறுமி! பத்து வயதுதான் இருக்கும்! கறு நிறம்! கையிலே ஒரு சால்வை! கூட்டத்திற்குள் புகுந்து வேன் அருகே எப்படி வந்தாள் என்றே தெரியவில்லை. வேனின் கண்ணாடி வழியாக தன் முகத்தை நீட்டி "தாத்தா! ஆறாவது முறையாக நீங்கள் வெற்றி பெற்று இந்த வழியாக வருவீர்கள்! அப்போதும் நான் உங்களுக்கு இதே இடத்தில் சால்வை அணிவிப்பேன்" என்று கணீர் குரலில் கூறியபோது அந்த வண்டியிலே இருந்த எங்கள் அனைவருக்கும் மெய் சிலிர்த்தது. அந்த மழலை இன்னமும் என் கண்களை விட்டு நீங்கவில்லை!

மேலும் பத்துகல் அந்தப் பெண்ணைப் பற்றியே பேசிக்கொண்டு மக்களின் வரவேற்பைப் பெற்றுக்கொண்டே சென்றபோது மயிலாடுதுறை அருகிலே ஒரு கிராமம். சாலையோரத்தில் மீண்டும் வேன் நின்றபோது, அந்தக் கூட்டத்தில் ஒரு பெரியவர் தன் பேரனுடன் நின்று கொண்டிருந்தார். மற்றவர்கள் எல்லாம் போட்டிபோட்டுக் கொண்டு சால்வைகளைக் கொடுத்துக் கொண்டிருந்தனர். அப்போது அந்தப் பெரியவர் என்னிடம் "அய்யா, கடந்த ஆண்டு 75 ஆயிரம் ரூபாய் நீங்க கொடுத்த அரசு நிதியாலத்தான் இதோ என் பேரன் ஆப்பரேஷன் செய்யப்பட்டு இன்றளவும் உயிரோட இருக்கான். உங்களையும் பாக்கிறான். நீங்க நன்றாக இருக்கணும்" என்று வாழ்த்திய போது, அதைவிடப் பெரு மகிழ்ச்சிக்குரிய ஒன்று இருக்க முடியுமா?

இந்தச் சுற்றுப் பயணத்தில் இதுபோன்ற காட்சிகள் பல! நேற்று தேர்தல் பிரச்சார கடைசி நாள் அல்லவா? தம்பி டி.ஆர்.பாலுவும், திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பூண்டி கலைவாணனும், திருவாரூரில் எனக்காகத் தேர்தல் பணியாற்றிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் செயலாளர் தம்பி சண்முகமும், மாநிலங்களவை கழக உறுப்பினர் தம்பி செல்வகணபதியும் அமர்ந்து நான் மூன்று நாள் பயணம் செய்ய வேண்டியதை ஒரே நாளில் வகுத்துக்கொண்டு என்னை அழைத்துச் சென்றார்கள். அவர்கள் எதிர்பார்த்ததற்கும் மாறாக வழி நெடுக மக்கள் கடலில் நான் நீந்திச் செல்ல வேண்டி நேரிட்டதால் ஒருசில ஊர்களுக்குச் செல்லமுடியாமலே போய்விட்டது. குறிப்பாக திருவாரூர் தொகுதியிலே உள்ள ஓடாச்சேரி, புத்தூர்,

ஆமூர், வடகுடி போன்ற கிராமங்களுக்கும், திருவாரூர் நகரிலே உள்ள பல தெருக்களுக்கும் செல்ல முடியாமையால் மாவட்டக் கழகச் செயலாளரை அங்கே சென்று அங்குள்ளவர்களுக்கு சமாதானம் கூறச் சொல்லியிருக்கிறேன்.

இந்த நிலையில் நாம் மதிய உணவுக்காக திருவாரூர் இல்லம் திரும்பி சாப்பிட்டுவிட்டு ஓய்வெடுத்துக்கொண்டு பொதுக்கூட்ட மேடைக்குச் செல்ல வேண்டுமென்றால் நேரம் இல்லை. எனவே வழியிலே கொரடாச்சேரியில் மாவட்டச் செயலாளரின் சிறிய அலுவலகம் ஒன்று உள்ளது. அங்கே ஏதாவது மதிய உணவு அருந்திவிட்டு, பயணத்தைத் தொடரலாம் என்று தயங்கித் தயங்கி பூண்டி கலைவாணன் கேட்டார். அவர் தயக்கத்திற்குக் காரணம் என்னுடைய உடல் நிலைதான். கடந்த ஆண்டுதான் என்னுடைய முதுகிலே மிகப்பெரிய அறுவை சிகிச்சை நடைபெற்றது என்பதை நீ அறிவாய். என்னுடைய வயது 87 என்பதும் உனக்குத் தெரியும். அந்த அறுவை சிகிச்சை செய்து கொண்ட இடத்தில் அவ்வப்போது எனக்கு எப்படிப்பட்ட வலி எடுக்கிறது என்பதை என்னுடன் இருப்பவர்கள்தான் அறிவார்கள். சில நேரங்களில் வாய்விட்டே கத்தி விடுகிறேன். இந்த உடம்போடு அந்த தள்ளு வண்டியிலே பயணம். அந்த வண்டியிலே நீ உட்கார்ந்து பார்த்தால்தான் தெரியும்! உடலை அப்படி இப்படி அசைக்க முடியாது. அதிலே பயணம் செய்யும் போது, எனது வலியின் கொடுமையை மறைத்துக் கொண்டு, மகிழ்ச்சியோடு குரல் கொடுக்கின்ற மக்கள் முன்னால் சிரித்துக் கொண்டே கையை காட்டவேண்டும். ஒரு சிறிய கிராமத்தில் மக்கள் நின்று கொண்டிருப்பார்கள். உடனே என்னோடு பயணம் செய்த முரசொலி செல்வம், என் மகள் செல்வியும் கையைக் காட்டுங்கள் என்று குரல் கொடுப்பார்கள். கையோ தூக்க வேண்டுமா என்று பரிதாபமாக என்னைப் பார்த்துக் கேட்கும். இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் கையைத் தூக்கி காட்டும்போது அந்த மக்கள் காட்டுகின்ற அன்புப் பொழிவில் அந்த வலி குறையும். அதற்குள் என் பின்னால் அமர்ந்திருக்கும் மனைவி தயாளு "என்னங்க, இந்தப் பக்கம் பாருங்க, எவ்வளவுபேரு கையை காட்டுறாங்க!" என்று கூற - நான் இரண்டு புறமும் மாறி மாறி கையை ஆட்டும்போது தெரியாத வலி, இப்போதுதான் தெரிகிறது!

இந்த நிலையில் கொரடாச்சேரியில் உள்ள மாவட்டக் கழகச் செயலாளரின் சிறிய அலுவலகத்திற்கு நுழைந்து, சாப்பிட்டுவிட்டு,

அங்கிருந்து புறப்பட்டு, கண்கொடுத்த வனிதம், எருக்காட்டூர், கமலாபுரம், குளிக்கரை, அம்மையப்பன், தண்டலை, விளமல் கிராமங்களில் வாக்குகளைக் கேட்டுவிட்டு, நேராக மேடைக்கு வரவே 4.15 மணி ஆகிவிட்டது.

இந்த அளவிற்கு சிரமத்தைத் தாங்கிக் கொள்ளும் எனக்கு கெலிகாப்டரிலோ, விமானத்திலோ பறந்துவந்து, ஆங்காங்கு எழுதிக் கொடுத்த பேச்சினை ஒருசில நிமிடங்கள் பார்த்துவிட்டு ஓய்வெடுத்துக் கொள்ள சென்னை சென்றுவிடலாம் என்ற நிலையில்லையே என் செய்வது? எப்போதுமே மக்களுக்காக உழைக்கின்ற நேரத்தில் நான் என்னுடைய துன்பங்களைப் பெரிதாக கருதியதில்லை. ஏனென்றால் நான் ஓய்வெடுப்பதற்காக பிறந்தவன் அல்லவே! வாக்குகளைக் கேட்பதற்காக மட்டுமே மக்களைச் சந்திப்பவனும் இல்லையே! கடனுக்காக - பதவிக்கு வந்தே ஆக வேண்டுமென்ற வெறியில் மக்களைச் சந்திப்பவர்கள் வேண்டுமானால் - சகலவிதமான ஆடம்பரங்களோடு கெலிகாப்டரிலும், விமானத்திலும் வந்து கூட்டத்திலே மட்டுமே மக்களைச் சந்திக்கலாம். ஆனால் சாலையோரத்தில் உள்ள மக்களைச் சந்திப்பதையே கடமையாகக்கொண்ட எனக்கு எப்போதும் ஓய்வெடுக்கத் தெரிந்ததில்லையே! என்னுடைய மனைவியரும், பிள்ளைகளும், பெண்களும் ஒருநாள் பயணத்தைக் குறைத்துக்கொண்டு கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டு பயணம் புறப்படுங்களேன் என்று கேட்பார்கள். ஆனால் எனது நிகழ்ச்சி நிரலை வகுத்தவர்களிடம், நான் என்ன, ஒருசில மணி நேரங்களை வீணடித்துவிட்டீர்களே, அந்த நேரத்திலும் என்னைப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாமே என்றுதான் கேட்டிருப்பேனே தவிர - நான் ஓய்வெடுத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்ததில்லை. அதனால் தான் அனைவரும் ஆறாவது முறையாக நான் முதலமைச்சராக வரவேண்டுமென்று கூறுகின்றபோது, அது எனக்குப் பதவி அளிப்பதற்காக அல்ல, மக்களுக்கு பணிவிடை செய்ய தகுந்த வேலைக்காரன் நான்தான் என்ற அளவிலேதான் எடுத்துக்கொள்கிறேன் என்று கோவை கூட்டத்திலே தெரிவித்தேன்.

எதற்கோ ஆரம்பித்து, கடிதம் எப்படியெப்படியோ நீண்டு கொண்டிருக்கின்றது. இந்த நாள் இருதரப்பினரும் கடந்த காலத்தில் எப்படியெப்படி நடந்து கொண்டார்கள் என்பதை

அனுபவ பூர்வமாக எண்ணிப் பாருங்கள். மக்களுக்கு நன்மைகளை, சாதனைகளை, சலுகைகளை செய்த ஆட்சி எது? அதே நேரத்தில் கொடுமைகளை, சித்திரவதைகளை, துன்பங்களைத் தந்த ஆட்சி எது? இரண்டையும் சீர்தூக்கிப் பாருங்கள்! வாக்களிக்கும் முன் ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள்! மக்களுக்கு செய்யப்பட்ட சாதனைகளுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் விதத்தில் செயல்பட்ட ஆட்சி எது? அவ்வாறு நிறுத்தப்பட்ட சாதனைகளை மக்களுக்கு மீண்டும் அளித்த ஆட்சி எது? 2006ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே சொன்ன எந்த உறுதிமொழியையும் நிறை வேற்றாத ஆட்சி எது? தேர்தல் அறிக்கையிலே சொன்ன அத்தனை சாதனைகளையும் செய்ததோடு, மேலும் மக்களுக்காக புதிய புதிய சாதனைகளைக் குவித்த ஆட்சி எது? தேர்தல் அறிக்கையிலே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்குவோம் என்று அறிவித்தோம். அதனை நடத்த முடியாத காரியம் என்று அப்போது ஜெயலலிதா அறிவித்தார். ஆனால் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்குவோம் என்று கூறி அதனை இன்றளவும் தந்துவரும் ஆட்சி தி.மு.கழக ஆட்சி அல்லவா? கொரடாச்சேரியில் நான் பத்து நிமிடம் தங்கியிருந்தபோது, அந்த நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு.எஸ்.எம்.வி. நடராசன் என்பவர் என்னைச் சந்தித்து நன்றி கூறினார். எதற்கு நன்றி என்றபோது சட்டையைத் திறந்து காட்டினார். கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்துகொண்டு மார்பிலே போடப்பட்ட கட்டுக்களுடன் வந்திருந்தார். நீங்கள் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கா விட்டால் இன்றைக்கு நான் இல்லை அய்யா என்று கூறினார். இப்படி ஒவ்வொரு ஊரிலும் உங்களால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் என்று ஒவ்வொருவரும் கூறியபோது எனக்கு நானே மதிப்பெண் போட்டுக்கொண்டேன். ஆனால் நீங்கள் மதிப்பெண் வழங்க வேண்டிய நாள் இன்று அல்லவா? எங்கே புறப்பட்டு விட்டீர்கள்? மதிப்பெண் வழங்கவா? நன்றி, நன்றி.

அன்புள்ள,

மு.க.

13-4-2011

3555. அன்றைக்கே எழுதியது; இன்றைக்கும் பொருந்துகிறதே!

உடன்பிறப்பே,

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் 3-3-2011 அன்று **"ஆணையத்தின் ஆணை பிறந்து விட்டது!"** - எனும் தலைப்பிலே ஒரு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் -

"இன்னும் இரண்டு மாதங்களுக்கு நாம் ஒவ்வொருவரும் இடைவிடாமல் பணியாற்ற வேண்டிய காலம்! ஓய்வு கொள்ளாமல் உழைக்க வேண்டிய நேரம்! கடந்த ஐந்தாண்டு காலமாக கழக அரசு தமிழக மக்களுக்காக ஆற்றிய அளவற்ற அரும் பணிகள் - தமிழ்நாட்டு மக்களால் எந்த அளவுக்கு கருதப்படுகிறது, போற்றப்படுகிறது என்பதற்கான முடிவினைத் தெரிந்து கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. இன்னும் இடையிலே 42 நாட்கள்தான் உள்ளன, தமிழ் நாட்டு மக்கள் வாக்களிக்கப் போவதற்கு! வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு இன்னும் 17 நாட்கள்தான்! அதற்குள் தோழமைக் கட்சிகளுக்குள் தொகுதிகளின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட வேண்டும். பின்னர் ஒவ்வொரு கட்சிக்கும் எந்தெந்த தொகுதிகள் என்று பேசி முடிவெடுக்கப்பட வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு கட்சிகளின் சார்பில் யாரை வேட்பாளராக நிறுத்துவது என்பதை - வேட்பு மனு தாக்கல் செய்தவர்களையெல்லாம் ஒவ்வொரு கட்சியும் அழைத்துப் பேசி - முடிவு செய்து அறிவிக்க வேண்டும். தேர்தல் அறிக்கை எழுதப்பட வேண்டும். வேட்பாளர்களாக கட்சிகளின் சார்பில் அறிவிக்கப்படுவோர், தங்களது வேட்பு மனுவினைத் தாக்கல் செய்திட வேண்டும். அதன் பின்னர் வாக்காளப் பெருமக்களைச் சந்தித்து வாக்களிக்க வேண்டுமென்று

தங்கள் தங்கள் தொகுதிகளில் கேட்டுக் கொள்ள வேண்டும். கட்சிகளின் தலைவர்களும், முக்கியப் பிரச்சாரகர்களும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். இதற்கெல்லாம் 17 நாட்கள்தான் உள்ளன"

- என்று எழுதியிருந்தேன். நான் எழுதியவாறே கட்சிகள் எல்லாம் அல்லும் பகலும் உழைத்து தேர்தல் வாக்குப் பதிவும் நடைபெற்று முடிந்து விட்டது. ஆனால் வாக்கு எண்ணிக்கை நடைபெற இன்னும் ஒரு மாத காலம் இடைவெளியினை தேர்தல் ஆணையம் நமக்கெல்லாம் அளித்துள்ளது. அதைப்பற்றிக்கூட நான் முதலில் எழுதிய கடிதத்திலே குறிப்பிட்டிருந்தேன். அது வருமாறு :-

> "வாக்குகளை அளித்த பிறகு வாக்கு எண்ணிக்கை நடைபெற ஒரு மாத காலம் காத்திருக்க வேண்டும். ஏன் இப்படிப்பட்ட இடைவெளி! தேர்தல் ஆணையத்தின் முடிவு அப்படி! வாக்குகளை அளிக்க வேண்டிய நாள் ஏப்ரல் 13! அந்த வாக்குகளை எண்ணப் போகின்ற நாள் மே 13! ஒரு மாத கால இடைவெளி ஏன்? மேற்கு வங்கத்தில் ஆறு கட்டமாகத் தேர்தல் நடைபெற்று முடிந்த பிறகுதான் அந்த மாநிலத்திலே வாக்குகளை எண்ணும் போது இங்கேயும் எண்ணப்பட வேண்டுமாம்; அது தேர்தல் விதிமுறை. ஆனால் எதற்காக ஒரு மாத காலம் இடைவெளி விட்டு, அவசர அவசரமாக ஏப்ரல் 13ந்தேதியே அனைவரையும் சிரமத்திற்கு ஆளாக்கி தேர்தல் வாக்கெடுப்பை நடத்துகிறார்கள். என்ன காரணமோ தெரியாது! தேர்தல் ஆணையம் மாநில அரசுகளை கலந்து கொண்டுதானே தேர்தல் தேதியை அறிவித்திருக்கும் என்ற சந்தேகம் ஏற்படலாம். அப்படி அல்ல! ஏனென்றால் தேர்தல் ஆணையம் யாருடைய கட்டுப்பாட்டிற்கும் உரியதல்ல! சுதந்திரமான அமைப்பு. யாரையும் கேட்க வேண்டிய அவசியமில்லை.
>
> தற்போது அறிவித்துள்ள முடிவின்படி தேர்தல் நடைபெறப் போகின்ற நாள்

ஏப்ரல் 13. அதற்குப் பின்னர் வாக்குகளை எண்ணப் போகின்ற நாள் மே 13. மே 13ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டால், வாக்கு எண்ணிக்கை முடிய ஒரு நாள் ஆகும். முடிவுகள் மே 14ந் தேதிதான் தெரியும். ஆனால் தற்போதுள்ள சட்டமன்றம் முடிவுற்று, அடுத்த சட்டமன்றம் மே 17ந் தேதியே தொடங்கப்பட வேண்டும். ஏனென்றால் தற்போதுள்ள சட்டமன்றத் தின் காலம் மே 16ந்தேதியோடு முடிவடைகிறது. எனவே மே 17ந்தேதிக்குள் தமிழகத்திலே ஒரு புதிய அமைச்சரவை உருவாகியாக வேண்டும். மே 14ஆம் தேதியன்று யார் யார் சட்டப்பேரவை உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பது அறிவிக்கப்பட்டு - அதிலே எந்தக் கட்சி பெரும்பான்மை பெற்றுள்ளது என்பது முடிவாகி, அந்தக் கட்சியின் சார்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டி, தங்கள் சட்டமன்றக் கட்சித் தலைவராக, அதாவது முதல் அமைச்சராக ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவர் ஆளுநரைச் சந்தித்து, ஆளுநர் அவர்களை அமைச்சரவை அமைக்கச் சொல்லிக் கேட்டு - அதன் பின்னர் அமைச்சர்கள் அறிவிக்கப்பட்டு - அந்த அமைச்சர்கள் ஆளுநர் முன்னிலையிலே பதவிப் பிரமாணம் செய்து கொண்டு - புதிய சட்டப் பேரவையை மே 17ந் தேதிக்குள் கூட்டியாக வேண்டும். இதற் கெல்லாம் இருக்கின்ற நாட்கள் மே 15,

மே 16 ஆகிய இரண்டு நாட்கள்தான். அதற்குள் இத்தனை பணிகளையும் முடிக்க முடியுமா? ஆனால் முடித்தாக வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது! தேர்தல் ஆணையம் இதனையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் இருந்திருக்குமா என்றால் நிச்சயம் எண்ணிப் பார்த்திருக்கும். எண்ணிப் பார்த்து விட்டுத்தான் இந்தத் தேர்தல் தேதிகளை அறிவித்திருக்கின்றது.

மே திங்கள் 17ந்தேதியன்றுதான் புதிய சட்டப்பேரவை கூட்டப்பட வேண்டும் என்றால், எதற்காக அவசர அவசரமாக ஏப்ரல் 13ந்தேதியே தேர்தலை நடத்த வேண்டும். மேலும் சில நாட்கள் தேர்தலில்

போட்டியிடுபவர்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் கால அவகாசம் கொடுத்து ஏப்ரல் மாதக் கடைசியிலோ அல்லது மே மாதத்தில் முதல் வாரத்திலோ - அனைவரும் எதிர்பார்த்ததைப் போல தேர்தல் தேதியை அறிவித்திருக்கலாம் அல்லவா? ஏப்ரல் மாதம் 13ஆம் தேதியே அவசர அவசரமாக தேர்தல் தேதியை நிர்ணயம் செய்ய வேண்டிய கட்டாயம் என்ன? தேர்தல் ஆணையம் யாராலும் கேள்வி கேட்க முடியாத அமைப்பு என்றாலும் - சீசரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும் அல்லவா?"

உடன்பிறப்பே,

நான் இவ்வாறு எழுதியவாறே, தமிழ்நாட்டு மக்கள் அளித்த தீர்ப்புகள் - மே திங்கள் 13ஆம் தேதி வரை அறைகளிலே பத்திரமாகப் பூட்டி வைக்கப்பட்டு மூன்றடுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதுவரை அரசின் சார்பில் எந்தவிதமான முக்கிய முடிவுகளும் எடுக்கப்பட மாட்டாது. அல்ல, அல்ல, எடுக்கப்படக்கூடாது. திடீரென ஏதாவது ஒரு முக்கிய முடிவு, கொள்கை முடிவு எடுக்கப்பட வேண்டிய நெருக்கடி ஏற்பட்டு விட்டால் அப்போது என்ன செய்வது? தேர்தல் ஆணையத்திற்கே வெளிச்சம்! அதிகாரிகளின் நிலை என்ன? திரிசங்கு சொர்க்கம் என்பார்களே, அந்த நிலைதான்! இப்போதே பத்திரிகைகள் எல்லாம் தலைமைச் செயலகம் வெறிச்சோடிக் கிடப்பதாகவும் - அதிகாரிகள் எல்லாம் குடும்பத்துடன் விடுமுறையில் செல்லவிருப்பதாகவும் செய்திகளை வெளியிட்டுள்ளன.

அது மாத்திரமல்ல, அரசின் சார்பில் நாட்டில் நடைபெற்றாக வேண்டிய முக்கியமான பணிகள் எல்லாம் நிறைவேற்றப்பட வேண்டிய நேரம் இது. அந்தப் பணிகள் எல்லாம் முறையாக நடைபெற்றால்தான் ஜூன் மாதத்தில் தொடங்க விருக்கும் தென்மேற்குப் பருவக் காற்று காலத்தின் போது வேளாண்மைப் பணிகளை ஒழுங்காகச் செய்திட முடியும். அதிகாரிகள் பராமரிப்புப் பணிகளை ஆய்வுகூட செய்யக்கூடாது என்று தேர்தல் ஆணையம் அறிவுரை கூறியுள்ளதாம்! அதனால் அடிப்படைப் பணிகளைக்கூட நிறைவேற்ற முடியாத நிலைமை உள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் அரசும் அதன் அமைச்சர்களும் ஐந்தாண்டு காலத்திற்கு, அதாவது மீண்டும் அவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்படும் வரை அவர்களது பொறுப்புகளை நிறைவேற்ற தகுதி படைத்தவர்கள். ஆனால் அவர்களின் பணிகளை நிறை வேற்ற முடியாமல் தடுப்பது எந்தவகையில் நியாயமோ? சட்டம் படித்தவர்களும், தேர்தல் ஆணையமும்தான் இதற்கெல்லாம் ஒரு முறையான தீர்வினைக் காண வேண்டும்!

அன்புள்ள,

மு.க.

17-4-2011

3556. பார்த்தும் மறந்தாரே "காரத்"!

உடன்பிறப்பே,

சாதியில் தங்களை உயர்ந்தவர்கள் என்று கருதிக் கொண்டு அந்த இழிவான எண்ணத்தை மெய்ப்பிப்பதற்காக கடும் முயற்சியிலே ஈடுபட்டு அதற்காக பூணூலை உருவிக் கொண்டு போர்க் குரல் கொடுத்த கூட்டத்தை எதிர்த்து அய்யா பெரியாரும் - அறிஞர் அண்ணாவும் அறப்போர் ஆயுதங்களை ஏந்தி ஆயிரக்கணக்கான இளைஞர்களை தம் அணியில் திரட்டி, தன்மான இயக்கத்தின் விரிவாக்கம் கண்ட போது வர்ணாஸ்ரம வெறி கொண்ட வைதீகப் புரியினர் வெகுண்டெழுந்து பெரியார் மீதும், அண்ணா மீதும் கடுங்கணைகளை - காதால் கேட்க முடியாத சுடுமொழிகளை வீசித் தாக்கி வந்த காலந்தொட்டு - நானும் கவனித்து வருகின்றேன்; உன் போன்றோரும் கவனிக்கத் தவறியிருக்க மாட்டீர்கள் என்ற நம்பிக்கையும் கொண்டுள்ளேன். அருவருக்கத்தக்கதும் - ஆபாசமானதுமான அர்ச்சனைகளை உயர் வர்க்கத்தார் எனக் கருதிக் கொண்டிருப்பவர்கள் அன்றும் சரி - இன்றும் சரி - நம்மீது பொழிவதை நிறுத்திக் கொள்ளவில்லை. அவற்றுக்கு மறுப்புக் கருத்தாக நாம் எழுதியோ - பேசியோ அவர்களுக்கு விளக்கம் அளிக்கும்போது எந்தவொரு நிலையிலும் - தரம் தாழ்ந்து அவர்களை விமர்சிக்கும் முறையை கையாண்டதில்லை.

எதிர் தரப்பினரின் எரியீட்டிகள் பாயும் போதெல்லாம் எவ்வளவு பவ்வியமாக - பக்குவமாக - பண்பாடு கெடாமல் பழைய உறவுக்கு எந்தப் பங்கமும் ஏற்பட்டு விடாமல் துடிக்கும் இளமை வாய்ந்த வாலிபனாக நான் விளங்கிய காலத்திலிருந்து - இன்று வரை மாற்றுக் கட்சித் தலைவர்களை - மாற்று முகாமிலே உள்ள நண்பர்களை - மதிக்கும் போக்கினை துளியளவும் கைவிடாமல் கடைப்பிடித்திருக்கிறேன் என்பதும் - இன்னமும் கடைப்பிடித்து

வருகிறேன் என்பதும் என் இயல்பு மட்டுமல்ல - என்னை ஆளாக்கிய பெரியார் - அண்ணா ஆகிய இருவரின் வழியில் நடந்து நாம் பெற்றுள்ள வளர்ச்சியுமாகும்.

எதிர் வரிசை இயக்கங்களில் குறிப்பாக கம்யூனிஸ்ட் இயக்கங்களின் மீது - அதன் தலைவர்கள் எனப்படுவோர் சிலர் மீது - எத்துணை வருத்தங்கள் அல்லது கோபங்கள் ஏற்பட்டாலும், அவற்றை வெளிப்படுத்தும் போது - அவர்கள்பால் கொண்டிருக்கும் அன்பையும் - பழைய நட்பையும் என்றைக்கும் நான் மறந்தவனல்லன்!

அண்ணன் ஜீவானந்தம் என்றும் - பெரியவர் மணலி என்றும் - மரியாதை கலந்த அன்பு வைத்தே அவர்களிடம் பழகியிருக்கிறேன். இன்னமும்

திரு.நல்லகண்ணு போன்றவர்கள் அந்த வரிசையில்தான் என் உள்ளத்தில் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்த உண்மையும், உயிர்நாடிகளில் ஒன்றாக நாம் ஏற்றுக் கொண்டுள்ள "கம்யூனிசம்" என்ற கொள்கையும் - என்னை இயக்கிக் கொண்டிருக்கிற குன்றாத குருதியோட்டமாகவே திகழ்வதை அக்கட்சிகளின் நண்பர்கள் பலரும் அறிவார்கள். அத்தகைய நண்பர்களில் ஒருவராகத்தான் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பிரகாஷ் காரத் அவர்களை நான் கருதியிருக்கிறேன்.

அவர் எனக்கு அறிமுகமான காலத்திலிருந்து இடையிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் எங்கள் நட்பை என்றைக்கும் பாதித்ததில்லை.

திராவிட இயக்கத்தை - பெரியாரை - அண்ணாவை; விபூதி வீரமுத்துக்கள் போன்ற நாராச நடையினர் விமர்சித்துத் தாக்கிய காலத்தை நாம் மறந்து விட முடியாத அளவுக்கு பாண்டியன்களும், ராம கிருஷ்ணன்களும் நரகல் நடையில் நம்மை இழித்தும் பழித்தும் பேசுகிறார்களே என எண்ணும் போது கூட, தோழர் பிரகாஷ் காரத் போன்றவர்கள் - எச்சூரி போன்றவர்கள் அந்த அணியில் இருக்கிறார்களே என்பதை நினைத்து - இவர்களது ஏச்சுப்பேச்சுக்களை தரக்குறைவான தாக்குதல்களை நான் பொருள்படுத்தாமல் இருந்து விடுவதுண்டு.

காரணம் இவர்களையெல்லாம் விட கம்யூனிசக் கொள்கை மீது என்னைக் கவர்ந்த அம்சங்கள் பல இருப்பதுதான் என்பதை

நானே அவ்வப்போது வெளிப்படுத்தியிருக்கிறேன். ஆனால் நான் வியப்படைந்து, விழி கலங்கும் நிலையில் படித்த ஒரு செய்தி திரு. பிரகாஷ்காரத் அவர்கள் பெயராலேயே "தீக்கதிர்" ஏட்டில் வெளி வந்திருப்பதைப் பார்த்து, திகைத்துத் திடுக்கிட்டேன்.

"தீக்கதிர்" ஏட்டில் என்னைப் பற்றியும் - என் தலைமையில் உள்ள கழகத்தைப் பற்றியும் இழிமொழிகள், ஏசல் மொழிகள் வெளி வருவது வழக்கம் தான் என்றாலும், அந்த வழக்கத்திற்கு மாறாக இந்தச் செய்தியின் கர்த்தாவாக நண்பர் பிரகாஷ்காரத் இருப்பது தான் என்னைத் திடுக்கிடச் செய்த ஒன்றாகும்.

> **"மாநில சுயாட்சி மற்றும் மத்திய-மாநில உறவுகளுக்குக் குரல் கொடுத்த கட்சிகளில் முன்னோடியாக விளங்கியது தி.மு.க. அத்தகைய பாரம்பரியம் கொண்ட ஒரு கட்சி மிகவும் தரம் தாழ்ந்து இன்றைய தினம் ஒரு குடும்ப முன்னேற்றக் கழகமாக மாறி, கொள்ளையடித்த பணத்தைத் தேர்தலிலும் பயன்படுத்தி, ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முயல்வதைப் பார்க்கும்போது, மிகவும் பரிதாபமாக இருக்கிறது"**

இந்த வரிகள் திரு. பிரகாஷ் காரத் அவர்களால் கூறப்பட்டவை. அவரது இந்தக் கூற்றுக்குப் பதில் சொல்ல ஆரம்பித்து குடுமி பிடி சண்டையில் ஈடுபட நான் விரும்பவில்லை. ஏனெனில் மூன்றாண்டுகளுக்கு முன்பு கூட அவரும், அவருடன் சில கம்யூனிஸ்ட் கட்சி தளபதிகளும் சென்னையில் என் வீட்டிற்கே வந்து கொள்கை அடிப்படையிலான பல கருத்துக்களையும் - இந்திய தேசிய அடிப்படையிலான பல கருத்துக்களையும் - காங்கிரஸ் கட்சியுடன் உறவு உண்டா இல்லையா - இனியும் நீடிக்குமா - என்பன போன்ற பல கருத்துக்களையும் - அமெரிக்காவுடன் அணு ஒப்பந்தம் போன்ற கருத்துக்களையும் மணிக்கணக்கில் உரையாடி விவாதித்திருக்கிறோம்.

ஆனால் அந்தச் சமயங்களில் என் இதயத்தில் நல்லதோர் இடத்தைப் பெற்றிருந்த அந்த நண்பர் காரத் இப்போது ஏன் இத்தகைய நச்சு நினைப்பினர் ஆனார் என்பது தான் எனக்குப் புரியவில்லை - என்றாலும் நாம் கட்டிக் காத்து வரும் அண்ணா வழி - பெரியார் வழி - பண்பாட்டுச் சங்கிலியில் ஒரு கரணை

கூட தேய்ந்து அறுந்து விடாத அளவுக்கு அந்த நண்பரோடு பழகி வந்திருக்கிறேன். ஆனால் கம்யூனிஸ்ட் ஏட்டில் இந்த வாசகங்கள் அவர் பெயரால் வெளி வந்த பிறகு "அவரா இவர்?" என்ற கேள்விக்கு பதில் காண முடியாமல் துடித்துத்தான் போகிறேன்.

அவர் எழுப்பியுள்ள "குடும்ப முன்னேற்றக் கழகம்" என்ற குற்றச்சாட்டுக்கு அவரோடு இணைந்து இயக்கப் பணியாற்றும் திருமதி பிருந்தாகாரத் அவர்களே விடையாகவும் விளக்கமாகவும் விளங்கும்போது அந்தக் குற்றச்சாட்டைத் தவிர்த்து - "ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள முயல்வதைப் பார்க்கும்போது மிகவும் பரிதாபமாக இருக்கிறது" - என்று அவர் கூறியுள்ள குற்றச்சாட்டுக்கு மாத்திரம் பதில் சொல்ல விரும்புகிறேன்.

ஆட்சியை தக்க வைத்துக் கொள்ள கருணாநிதி முயலுவதைப் பார்க்கும் போது மிகவும் பரிதாபமாக இருக்கிறது என்கிறார் அந்த நண்பர். கொள்கை அடிப்படையில் நானும், என் தலைமையில் உள்ள கழகமும் விடாப்பிடியாக இருந்து இலங்கை பிரச்சினையிலும் - மத்திய மாநில உறவுகள் பிரச்சினையிலும் - "நெருக்கடிக் கொடுமைக்கு ஈடு கொடுத்து இந்தியாவிலேயே சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் இடம் தமிழ்நாடுதான்" என்று தோழர் ஈ.எம். எஸ். நம்பூதிரிபாட் அவர்களே சென்னை கூட்டத்தில் பாராட்டிய அளவுக்கு - நானும், என் தலைமையிலே உள்ள கழகமும் நிமிர்ந்து நின்ற போது அதைப் பார்க்காமல் இருந்து விட்டாரே - அல்லது பார்த்தும் இப்போது அதை மறந்து விட்டாரே ''காரத்'' என்பதை நினைக்கும்போது தான் எனக்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது!

அன்புள்ள,

மு.க.

21-4-2011

3557. பொது மன்னிப்பு கேட்க வேண்டியவர் யார்?

உடன்பிறப்பே,

"இலங்கையில் நடந்த இனப் படுகொலையை வேடிக்கை பார்த்ததற்காக, கருணாநிதி பொது மன்னிப்பு கேட்க வேண்டும்" - ஆணை பிறப்பித்திருப்பவர் யார் தெரியுமா? "சாட்சாத்" ஜெயலலிதாதான்! எங்கிருந்து இந்த வார்த்தை முத்துக்களை அவர் சிந்தியிருக்கிறார் ... தெரியுமா? கோடைவாசஸ்தலமான கொடை நாடு எஸ்டேட்டில் தங்கியிருந்து கொண்டு, பாவம் அங்கும் என் மீது வசைமாரி பொழிய ஏதாவது கிடைக்காதா என்ற நினைவோடு, ஓய்வெடுக்க முடியாமல் இலங்கைத் தமிழர்களுக்காக மனம் வருந்தி, என்னை பொது மன்னிப்பு கேட்கச் சொல்லுகிறார்!

யாரை மன்னிப்பு கேட்கச் சொல்லுகிறார் ஜெயலலிதா?

1956ஆம் ஆண்டிலே சிதம்பரம் தி.மு.கழகப் பொதுக் குழுவிலே அறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையில் இலங்கைத் தமிழர்களுக்கான தீர்மானத்தை முன்மொழிந்த என்னைத்தான் ஜெயலலிதா பொது மன்னிப்பு கேட்கச் சொல்லுகிறார்.

24-8-1977 அன்று சென்னையிலே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக ஐந்து இலட்சம் பேர் கலந்துகொண்ட பேரணியை நடத்தியவன் நான். 1981ஆம் ஆண்டு இலங்கையிலே தமிழர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்ற செய்தி கிடைத்த அன்றைய தினமே, ஆம் ஆகஸ்ட் 13ஆம் தேதியன்றே - "கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் இலங்கையின் கிழக்கிலும் தெற்கிலும் கலவரங்கள் பரவி வருகின்றன என்று தெரிவிக்கின்றன. அங்குள்ள அரசே கலவரத்தை ஊக்குவிப்பதாகத் தோன்றுகிறது. வட கொழும்பில் தமிழர்களின் இல்லங்கள் தாக்கப்படுகின்றன, யாழ்ப்பாணம் ரயில்கள் தாக்கப்படுகின்றன, அதில் இருந்த தமிழ்ப் பயணிகள் கொள்ளையடிக்கப்பட்டு வண்டியை விட்டு வழியில்

தூக்கியெறியப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க மனிதாபிமான அடிப்படையில் உதவிட வேண்டுகிறேன்" என்று பிரதமருக்கு தந்தி கொடுத்த கருணாநிதி பொது மன்னிப்பு கேட்க வேண்டுமாம்!

அதே 1981ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் இலங்கைத் தமிழர்களுக்கான பிரச்சினையில் அன்றிருந்த அ.தி.மு.க. அரசினால் கைது செய்யப்பட்ட கருணாநிதி பொது மன்னிப்பு கேட்க வேண்டுமாம்!

25-7-1983 அன்று வெலிக்கடை சிறைச் சாலைக்குள் சிங்களவர் நுழைந்து தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் போன்ற 35 தமிழர்களை படுகொலை செய்தபோது தமிழகத் தலைநகரிலே 7 மணி நேர அவகாசத்தில் 8 இலட்சம் பேரைத் திரட்டி பேரணி நடத்திய நான் பொது மன்னிப்பு கேட்க வேண்டுமாம்!

மத்திய, மாநில அரசுகள் ஈழத் தமிழர் பிரச்சினையில் போதிய கவனம் செலுத்திட வலியுறுத்தி 10-8-1983 அன்று நானும், கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் எங்கள் சட்ட மன்ற உறுப்பினர் பதவிகளையே ராஜினாமா செய்தோம்.

16-5 1985 அன்று காஞ்சிபுரத்தில் நடை பெற்ற மறியல் போராட்டத்தில் நானும் கலந்து கொண்டு கைதானேன்.

23-8-1985 அன்று சந்திரஹாசன், பாலசிங்கம், சத்தியேந்திரா ஆகியோரை நாடு கடத்த உத்தரவிட்டதைத் தொடர்ந்து சென்னையில் பேரணி நடத்தி, நாடு கடத்தும் காரியம் நிறுத்தப்படாவிட்டால் போராட்டம் தொடரும் என்று நான் அறிவித்து, அதனையொட்டி நாடு கடத்தல் உத்தரவு திரும்பப் பெறப்பட்டது.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், அவர்களிடையே சகோதர யுத்தம் கூடாதென்பதற்காகவும், 1986ஆம் ஆண்டு மே திங்களில் மதுரையில் பொதுச் செயலாளர் பேராசிரியர், தமிழர் தலைவர் கி. வீரமணி, தம்பி முரசொலி மாறன், தம்பி வைகோ, நெடுமாறன் உள்ளிட்டோர் கலந்து கொண்ட "டெசோ" அமைப்பின் சார்பில் அனைத்திந்தியாவில் உள்ள பல்வேறு கட்சி களின் தலைவர்களையெல்லாம் அழைத்து இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டினை நடத்திய கருணாநிதி பொது மன்னிப்பு கேட்க வேண்டுமாம்!

3-6-1986 அன்று என்னுடைய பிறந்த நாள் விழா ரத்து செய்யப்பட்டு, அன்று உண்டியல் மூலம் வசூலான நிதியினை போராளி இயக்கங்களுக்காகப் பகிர்ந்து கொடுத்தவன் நான்.

1987ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் தேதி தி.மு.க. சார்பில் பேரணி நடத்தினோம்.

16-10-1987 அன்று தளபதி கிட்டுவைக் காணச் சென்ற வைகோ கைது செய்யப்பட்டதற்காக கண்டன அறிக்கை விடுத்தவன் நான்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக எட்டு மாநில முதல் அமைச்சர்களுக்கும் இந்தியாவில் உள்ள எதிர்க் கட்சித் தலைவர்களுக்கும் தந்தி கொடுத்தவனும் நான்தான்.

6-11-1987 அன்று சென்னையில் ஈழத் தமிழர் உரிமை பாதுகாப்பு கூட்டமைப்பின் சார்பாக பல்வேறு கட்சியினர், தமிழ்ப் புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், மாணவர்கள், மகளிர் கலந்து கொண்ட மனிதச் சங்கிலியை நடத்தியவனும் நான்தான்.

15-3-1989 அன்று டெல்லியில் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களை இரண்டு முறை சந்தித்து ஈழத் தமிழர் பிரச்சினைக்காக விவாதித்தவனும் நான்தான்.

15-6-1989 அன்று சென்னை விமான நிலையத்தில் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்து இலங்கைப் பிரச்சினை குறித்து பேசியவனும் நான்தான்.

1991ஆம் ஆண்டு ஜனவரியில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தி.மு. கழக ஆட்சியே கலைக்கப்பட்டபோது, முதலமைச்சராக இருந்ததே நான்தான்! 1997ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போது, இலங்கைத் தமிழர் பிரச்சினை எழுந்த நேரத்தில் தற்போது என்னை பொது மன்னிப்பு கேட்கச் சொல்லுகிற ஜெயலலிதா என்ன சொன்னார் தெரியுமா?

“சட்டம் ஒழுங்கைச் சீர்குலைக்க கருணாநிதி முயல்கிறார் – விடுதலைப் புலிகள் தமிழகத்தில்

மீண்டும் தலை தூக்கி விட்டார்கள்" என்று அறிக்கை அல்லவோ ஜெயலலிதா விடுத்தார்.

5-11-1989 அன்றும் 6-11-1989 அன்றும் தமிழ்நாட்டில் பேசிய ராஜீவ் காந்தி

"இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காண்பதில் கடந்த பல மாதங்களாக ஒத்துழைப்பு வழங்கி வரும் திமுக அரசுக்கும் முதலமைச்சர் மு.கருணாநிதிக்கும் நன்றி" என்று கூறினார். இவ்வாறு இளந்தலைவர் ராஜீவ் காந்தி அவர்களால் பாராட்டப்பட்ட நான் பொது மன்னிப்பு கேட்க வேண்டுமாம்!

23-4-2008 அன்று தமிழக சட்டப் பேரவையில் - இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக, அங்கே மோதலில் ஈடுபட்டு வரும் இரு பிரிவுகளுக்கு இடையே பேச்சுவார்த்தைகளுக்கு இந்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முறையானதொரு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்காக பயனுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசு முன் வரவேண்டுமென இப்பேரவை வலியுறுத்துகிறது" என்ற தீர்மானத்தை முன்மொழிந்த நான் பொது மன்னிப்பு கேட்க வேண்டுமாம்.

6-10-2008 அன்று காலையில் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு - புது டெல்லியில் உள்ள இலங்கைத் தூதரை மத்திய அரசு உடனடியாக அழைத்து, நிராயுதபாணியாக உள்ள இலங்கைத் தமிழர்களை கொல்வது குறித்து இந்தியாவின் மன வருத்தத்தைத் தெரிவிக்க வேண்டும் என்றும், இலங்கை அரசின் ராணுவ நடவடிக்கையும் இனப் படுகொலையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்ட நான் பொது மன்னிப்பு கேட்க வேண்டுமாம்! சொல்பவர் எப்படிப்பட்டவர் தெரியுமா?

"இலங்கை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை உடனடியாக இலங்கை அரசு கைது செய்து, இந்திய அரசிடம் ஒப்படைப்பதற்கு மத்திய அரசு உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று இச்சட்டப் பேரவை வற்புறுத்துகிறது. மேலும், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த எந்த ஒருவரையும்

இந்தியத் திருநாட்டிற்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது என்றும் மத்திய அரசை இப்பேரவை வற்புறுத்துகிறது" என்று தமிழகச் சட்டப் பேரவையில் 16-4-2002 அன்று தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றிய ஜெயலலிதாதான் என்னைப் பொது மன்னிப்பு கேட்கச் சொல்லுகிறார்.

இலங்கையில் ராஜ பக்ஷேயின் சிங்களப் படையினர் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்தபோது, அதனைக் கண்டித்து தமிழகத்தில் ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்ற போது, "இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை ராணுவம் எண்ணவில்லை. ஒரு யுத்தம் - ஒரு போர் நடக்கும் போது அப்பாவி மக்கள் கொல்லப்படுவார்கள். இதில் எந்த நாடும் விதிவிலக்கல்ல. எங்கே யுத்தம் - போர் நடந்தாலும் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள். ஆனால் இன்று இலங்கையில் என்ன நடக்கிறதென்றால், இலங்கைத் தமிழர்களை பாதுகாப்பான இடத்திற்குச் செல்லவிடாமல் விடுதலைப் புலிகள் அவர்களை பிடித்து வைத்து கொண்டு வலுக்கட்டாயமாக ராணுவத்தின் முன்னால் அவர்களை ஒரு கேடயமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்" என்று 17-1-2009 அன்று அறிக்கை விடுத்த ஜெயலலிதா என்னை பொது மன்னிப்பு கேட்கச் சொல்கிறார் என்றால் இதைவிட வெட்கக்கேடு வேறு எதாவது இருக்க முடியுமா?

அது மட்டுமா? இலங்கையில் தமிழ் இனப் படுகொலையைக் கண்டித்து போர் நிறுத்தம் உடனே அறிவிக்கப்பட வேண்டுமென்று தமிழகத்தில் அனைத்து கட்சிக் கூட்டத்தில் ஒருமனதா தீர்மானம் நிறைவேற்றிய போது - இதே ஜெயலலிதாதான் "விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக கருணாநிதி செயல்படுகிறாரோ என்ற சந்தேகம்தான் தமிழக மக்கள் மனதில் எழுந்துள்ளது. இலங்கையில், தற்போது நடக்கும் உள் நாட்டுப் போரை நிறுத்துவததற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை" என்று கூறியதோடு இலங்கையில் நடக்கும் யுத்தம் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் என்னும் பயங்கரவாத இயக்கத்திற்கு எதிரான யுத்தம் என்றும் - அதனால்தான் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர்கள் இறந்ததற்கு கருணாநிதி இரங்கற்பா எழுதுகிறார் என்றும் அறிக்கை விடுத்து -

அந்த அறிக்கையை இன்றைக்கு ஜெயலலிதாவின் அறிக்கையை வெளியிடுகின்ற சில ஏடுகளே வெளியிட்டனவே!

இலங்கையில் வாழுகின்ற ஈழத் தமிழர்களின் உரிமைகளுக்காகவும் - இரண்டாம் நிலை குடிமக்கள் என்று ஒதுக்கப்படுவதிலிருந்து அந்த மக்கள் இலங்கையில் - எல்லா உரிமைகளையும் பெற்று சமத்துவமாகவும், சாந்தியும் பெற்று வாழும் வகை வருத்தப்பட வேண்டும் என்றும், அதற்காக 1956 முதல் குரல் கொடுத்து வரும் தி.மு.கழகத்தையும் - அந்தக் கழகத்தின் தலைவனாக இருக்கின்ற என்னையும் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே குறை கூறுவதற்கு ஜெயலலிதா தகுதி படைத்தவர்தானா?

தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து அரசின் சார்பில் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக கலந்தாலோசனை நடத்திய நேரத்தில், ஜெயலலிதா அதனையும் "கபட நாடகம்" என்றுதான் வர்ணித்தார். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதும் - நம்பி வந்தவர்களை நட்டாற்றில் கை நழுவ விடுவதும் - பதவியிலே இருக்கும் போது மிரட்டுவதும், பதவி கோரும்போது கெஞ்சுது வதும் - யாரையும், எவரையும் மதிக்காமல் தன்னை மீறி எதுவுமில்லை என்ற ஆணவப் போக்கோடு நடப்பதும் ஜெயலலிதா போன்ற "கபட வேடதாரி"களுக்குத்தான் கை வந்த கலையே தவிர - உழைப்பு: அறப்போராட்டம், தியாகம், அரவணைப்பு, நாகரிகம், பண்பாடு, சுயமரியாதை என்பனவற்றை மதித்து நடக்கும் நான் பொது மன்னிப்பு கேட்கின்ற நிலை என்றைக்கும் வராது! உண்மையில் இலங்கைத் தமிழர்களுக்காக பொது மன்னிப்பு கேட்க வேண்டியவர் ஜெயலலிதாதான்.

அன்புள்ள,
மு.க
24-04-2011

3558. திரைப்படத்துறையும் - தி.மு.க.வும்!

உடன்பிறப்பே,

முதுபெரும் எழுத்தாளர்களில் ஒருவரும் என்னுடைய மனம் கவர்ந்த கருத்தாளர்களில் ஒருவருமான “சோலை” அவர்கள் எதை எழுதினாலும் - அதனை விருப்பு வெறுப்பின்றி ஒரே சீரான மனோநிலையில் நான் படிப்பது பொக்கம். படிப்பது மட்டுமல்ல, நிந்தனைக்கு இடமின்றி - சிந்தனையில் அதனை அசை போட்டு; பாலும் நீரும் கலந்த கலவையில், தனக்கு வேண்டியதை மாத்திரம் எடுத்துக் கொள்ளும் அன்னப்பறவை போன்ற நிலையினின்று - என்றைக்கும் தடுமாறாதவன் நான். ஆதலால் தமிழகத் திரைப்படத் துறை குறித்து அவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையை ‘நக்கிரன்’ வார இதழில் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

தொண்டாற்றியும் தொடர்ந்து தியாகங்கள் செய்தும் - இயக்கத்தின் தருக்களாக வளர்ந்துள்ள என் பிள்ளைகள் - அழகிரி, ஸ்டாலின், தமிழரசு ஆகியோரும் அவர்களுடைய பிள்ளைகளும் திரையுலகிலும் பொருளீட்டி புகழ் ஈட்டுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிலர் எனக்கு நண்பர்களாக இருந்து கொண்டே நச்சுக்கணைகள் பாய்ச்சுவதை நாட்டுக்கு உணர்த்தி - ‘பாட்டுக்கு பாட்டெடுப்பேன்’ என்ற பாணியில் இல்லாமல் - பகுத்தாய்ந்து; தெளிந்திடுக எனும் வேண்டுகோளோடு இந்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

1945 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் 75க்கு மேற்பட்ட திரைப்படங்களுக்கு - திரைக்கதை வசனம் எழுதியிருக்கிறேன். நான் திரைக்கதை வசனம் எழுதிய முதல் படங்களான அபிமன்யூ ராஜகுமாரி ஆகியவற்றில் எனது அருமை நண்பர் எம்.ஜி.ஆர். கதாநாயகனாகத் தோன்றியிருக்கிறார். அவரையடுத்து, எனது அன்பு நண்பர் சிவாஜி “பராசக்தி” படத்தில் கதாநாயகனாக நடித்துப் பெரும் புகழ் பெற்றார். இப்படி எனக்கும் திரைப்படக் கலைஞர்கள், இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், இசைவாணர்கள், கவிஞர்கள்,

தொழிலாளர்கள் ஆகியோருக்கும் இருந்த தொடர்புகளையும் இருக்கின்ற தொடர்புகளையும் திரையுலகைத் தெளிவாகப் புரிந்தவர்கள் மறந்திருக்க முடியாது.

எழுத்து நடையின் வேகத்தில் சோலை அவர்கள் யாரோ ஒருவர், பெரியதோர் தயாரிப்பாளர் கோபத்தின் உச்சத்தில் இந்த ஆட்சி மாறினால்தான் சினிமாத்துறைக்கு விடிவு காலம் என்று ஆதங்கப்படுவதாகக் குறிப்பிட்டு, அவர் பெயரையும் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் அந்தப் பெயரைவெளியிட நான் விரும்பவில்லை.

தயாரிக்கப்பட்ட திரைப்படங்களை வெளியிட தியேட்டர்களே கிடைக்கவில்லையென்று சினிமா வட்டாரத்தில் விமர்சிக்கிறார்கள் என்று சொல்லவும் சோலை தவறவில்லை.

என் செய்வது? படம் எடுப்பதற்கு ஆள் இல்லாமல், ஸ்டுடியோக்களையும், திரையரங்குகளையும் மூடிவிட்டு, அந்த இடங்களை திருமண மண்டபங்களாகவும், ஓட்டல்களாகவும், கிடங்குகளாகவும் மாற்றிடும் நிலைமை ஏற்பட்டது ஒரு காலம். தற்போது படங்களை வெளியிட தியேட்டர்களே கிடைக்கவில்லை என்று அலைகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் எழுதி வெளிவந்துள்ள ‘‘பொன்னர் - சங்கர்” திரைப்படத்துக்கும் எங்கும் தியேட்டர்கள் கிடைக்கவில்லை - அலையாய் அலைந்துதான் தியேட்டர்களைப் பிடிக்க முடிந்தது என்று அதன் தயாரிப்பாளர்கள் கண்ணீர் விட்ட நிகழ்ச்சியெல்லாம் எனக்குத் தெரியும்.

கடலூரில் ஒரு தியேட்டரில் ‘‘பொன்னர் சங்கர்” திரைப்படம் திரையிடப்பட்டு அரங்கம் நிறைந்த காட்சிகளாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே - இரண்டாம் நாளே அந்தத் திரைப்படத்தை கட்டாயப்படுத்தி எடுத்து விட்ட செய்திகள் எல்லாம் சோலை அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் ஒரு மூதாட்டி “கருணாநிதியின் பேரன் பேத்திகள் எல்லாம் சினிமா படம் எடுக்கிறார்களே, எப்படி” என்று கேட்டதாக சோலை எழுதியிருக்கிறார். பாவம் அந்தப் பாட்டிக்கு ஏ.வி.மெய்யப்ப செட்டியார் திரைப்படம் எடுத்து - பின்னர் அவருடைய மகன்கள் ஏ.வி.எம் முருகன், ஏ.வி.எம்.குமரன், ஏ.வி.எம்.பாலசுப்ரமணியம்,

ஏ.வி.எம்.சரவணன், அவருடைய மகன் குகன், மருமகள் நித்யா போன்றவர்கள் எல்லாம் திரைப்படத் துறையிலே இருப்பதும் - நடிகர் திலகம் சிவாஜிக்குப் பிறகு அவருடைய மகன்கள் ராம்குமார், பிரபு அவருடைய மகன் துஷ்யந்த் போன்றவர்கள் திரைப்படத் துறையில் பாடுபட்டதும் -சூப்பர்ஸ்டார் ரஜினி, அவருடைய அன்பு மகள் ஐஸ்வர்யா, மருமகன் தனுஷ் ஆகியோர் திரைப்படத் துறையில் இருப்பதும் - கலைஞானி கமல், அவருடைய சகோதார் சாருஹாசன், மகள் ஸ்ருதி, மற்றும் சுகாசினி, மணிரத்னம், அனுஹாசன் போன்றவர்கள் எல்லாம் இந்தத் துறையியே ஈடுபட்டிருப்பதும் - தயாரிப்பாளர் ஆர்.பி. சவுத்ரி மற்றும் அவருடைய பிள்ளைகள் ஜீவா, ஜித்தன் ரமேல் போன்றவர்கள் இருப்பதும் - குணச்சித்திர நடிகர் சிவக்குமார், அவருடைய பிள்ளைகள் சூர்யா, கார்த்தி போன்றவர்கள் திரைப்படத்துறையில் ஈடுபட்டிருப்பதும் ரெட்டியார் சத்திரம் மூதாட்டிக்குத் தெரியாமல் போனதுதான் வேடிக்கை. அது மாத்திரம் அல்ல, கடந்த காலத்தில் எத்தனை படத்தயாரிப்பாளர்கள் படங்களைத் தயாரித்து அதனை முடிக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார்கள், எத்தனை பேர் படம் எடுத்த காரணத்தினாலேயே ஓட்டாண்டியாக ஆகி தெருவிலே நின்றார்கள் என்பதையெல்லாம் என் நண்பர் கவிஞர் கண்ணதாசன் எழுதி புத்தகமாக வெளியிட்டார். அதை நக்கீரன் இதழ் வாங்கி வெளியிடுமானால் நன்றாக இருக்கும்

என் குடும்பத்திலே என்னுடைய பிள்ளைகளோ, பெண்களோ, பேரர்களோ அரசியலிலே ஈடுபட்டால் வாரிசு அரசியல் என்பதற்கும் - திரைப்படத் துறையிலே ஈடுபட்டால் அதற்கு அர்த்தம் கற்பிப்பதற்கும் என்னதான் காரணமோ? ஏன்தான் இந்த நெஞ்செரிச்சலோ?

ஆட்சி மாற வேண்டுமென்று துர்வாச முனிவரைப்போல கோபப்பட்ட தயாரிப்பாளருக்கு நான் நினைவூட்ட விரும்புவது - ஏன் அவரே பல முறை கொஞ்ச காலத்திற்கு முன்பு வரையில் பல மேடைகளில் சொல்லியதுதான் அவை வருமாறு :

> குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு அவை வெளியிடப்பட்டது முதல் 4 வாரங்கள் வரை கேளிக்கை வரியில் இருந்து விலக்கு அளிக்கும் திட்டம் முதன் முதலாக 12.12.1996

அன்று கழக அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் அதற்கு முன்பு இருந்த ஆட்சியில் கேளிக்கை வரி வசூலிக்கப்பட்டுத்தான் வந்தது.

புதிய படங்களுக்குக் கேளிக்கை வரியை 54 விழுக்காட்டில் இருந்து 40 விழுக்காடாக 1989ஆம் ஆண்டில் குறைத்த கழக அரசு, 1.8.1998 முதல் 40 விழக்காட்டில் இருந்து 30 விழுக்காடாகவும், 2000இல் 25 விழுக்காடாகவும் குறைத்தது.

10 ஆண்டுகளுக்கு முன்வந்த திரைப்படங்களுக்குக் கேளிக்கை வரியை

40 விழுக்காட்டில் இருந்து 20 விழுக்காடாக 1.8.1998 அன்று குறைத்ததுடன்;

மொழிமாற்றுப்படங்களுக்கான கேளிக்கை வரியையும் பிற தமிழ்ப்படங்களுக்குக் குறைக்கப்பட்டது போல் குறைத்தது கழக அரசு. இதேபோல, இணக்க வரி விதிப்புகளும் அதற்கேற்றாற்போல் குறைக்கப்பட்டன.

இந்த வரிக்குறைப்புகளின் மூலம் ஆண்டிற்கு 60 கோடி ரூபாய் அளவிற்கான வரிச் சலுகைகளைத் தமிழ்த்திரைப்பட வரலாற்றில் இல்லாத அளவில் 1996ஆம் ஆண்டிலேயே கழக அரசு வழங்கியது. விற்பனை வரிச் சட்டத்தின்படி, திரைப்படங்களுக்கான உரிமை மாற்றம் மீது 1.4.1986 முதல் 11.11.1999 வரை செலுத்த வேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததுடன், உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12.11.1999 முதல் 11 விழுக்காட்டில் இருந்து 4 விழுக்காடாகவும் குறைத்தது கழக அரசு. 1.4.2000 முதல் திரைப்படங்கள் குத்தகை மீதான 4 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது

திரைப்படங்களுக்கு தமிழ்ப் பெயர்கள் வைக்கப்படுமானால், அதற்கு முழு கேளிக்கை வரி முழுமையும் ரத்து செய்யப்பட்டிருப்பதும் இந்த ஆட்சியிலேதான்.

தொல்பொருள் ஆய்வுத் துறையின்கீழ் உள்ள மற்றும் கலைச் சின்னங்கள் உள்ள இடங்களுக்குச் செலுத்தி

வந்த படப்பிடிப்புக் கட்டணம் ஓரிடத்திற்கு ஒரு நாளைக்கு 5000 ரூபாய் என்பதை 1000 ரூபாய் எனவும், ஏனைய இடங்களுக்கு 2500 ரூபாய் என்பதை 500 ரூபாய் எனவும் 1996இல் குறைத்தது கழக அரசு.

இராஜாஜி மண்டப படப்பிடிப்பு வாடகை கழக ஆட்சியில் - 1 நாளைக்கு ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 2003இல் 1 இலட்சமாக உயர்த்தியது ஜெயலலிதா அரசு. 2004 நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. தோல்விக்குப்பின் அது 25 ஆயிரம் ரூபாயாகக் குறைக்கப்பட்டது. அது 25.6.2006. அன்று கழக அரசினால் 10 ஆயிரம் ரூபாயாக

மேலும் குறைக்கப்பட்டுள்ளது. படப்பிடிப்பு நடத்தப்படும் இடங்களில் வகை-1 என்ற பிரிவில் குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு ஜெயலலிதா ஆட்சியில் 10 ஆயிரம் ரூபாய் என்று விதிக்கப்பட்ட கட்டணம் 5 ஆயிரம் ரூபாயாகவும், வகை-2இன் கீழ்வரும் இடங் களுக்கு முந்தைய அ.தி.மு.க ஆட்சியில் 5 ஆயிரம் ரூபாய் என்று விதிக்கப்பட்ட கட்டணம் 3 ஆயிரம் ரூபாயாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

சின்னத் திரைக்கான படப்பிடிப்புக் கட்ட ணங்கள் பெரிய திரைக்கான கட்டணங்களில் 50 சதவீதம் மட்டுமே செலுத்தினால் போதும் எனவும் 25.6.2006 அன்று ஆணையிட்டது கழக அரசு.

தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள் சண்டைக் காட்சியின்போது உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு 1 இலட்ச ரூபாயும், செயல்பட முடியாத அளவிற்குக் காயம்பட்டு ஊனமடைய நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவி வழங்கும் திட்டத்தை 1996இல் அறிமுகப்படுத்தி தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறது கழக அரசு.

திரைப்படக் கலைத்துறை, சின்னத்திரை சார்ந்த தயாரிப்பாளர்கள், கலைஞர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், தொழிலாளர்கள் அனைவருக்கும் வீடுகள் கட்டுவதற்காக காஞ்சிபுரம் மாவட்டம்

சிறுதாவூருக்கு அருகில் பையனூரில் 96 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

திரைப்படத்துறையின் உழைப்பாளிகள் நலன்களைக் காத்திட திரைப்படத் துறையினர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

9.7.2008 அன்று "உளியின் ஓசை" படத்தின் மூலம் எனக்குக் கிடைத்த கதை வசனத்துக்கான ஊதியம் 25 இலட்ச ரூபாயில் வருமான வரி போக 18 இலட்சம் ரூபாய் திரைத் துறையின் பல்வேறு தளங்களிலும் பணியாற்றும் மூத்த கலைஞர்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டது.

உடன்பிறப்பே, நண்பர் சோலை அவர்கள் திரைப்படத் துறையிலே உள்ள ஒரு சிலரின் எண்ணத்தை தன் கட்டுரையின் வாயிலாக தெரிவித்திருப்பதையொட்டி இந்த விளக்கத்தை அவர்களுக்கெல்லாம் தெரிவித்திட உதவியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டு திரையுலகத்திற்கு கழக ஆட்சியிலே செய்யப்பட்ட ஒருசில சாதனைகளை இங்கே சொல்லியிருக் கிறேன். இதையெல்லாம் செய்த குற்றத்திற்காகத்தான் இந்த ஆட்சி மாற வேண்டுமென்று திரைப்படத் துறையிலே உள்ள ஒரு சிலர் எண்ணுவார்களானால், அவர்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பு என் நண்பர் சோலை அவர்களுக்குத்தான் உண்டு. கலைத் துறை, இலக்கியத் துறை இரண்டையும் என் அரசியல் இலட்சியப் போராட்டத்திற்குத் தேவையான போர்க்கருவிகளாக நான் கருதுகிறேன். சில பேர் இலட்சியப் போரின் பக்கம் அடியெடுத்து வைக்காமல், தலைவைத்துப் படுக்காமல் கலைத்துறை, இலக்கியத் துறைகளால் மட்டுமே ஈர்க்கப்பட்டு செயல்படுகிறார்கள். காரணமின்றி அவர்களில் சிலருக்கு என் மீது அழுக்காறும், அசூயையும் ஏற்படுவது இயல்பு தான். அதற்காக நான் என்னுடைய இலட்சியத்தை புதைத்து விட்டு, இலட்சங்களைத் தேடி அலைய மாட்டேன்.

அன்புள்ள,

மு.க.

30-04-2011

3559. கத்தியைத் தீட்டாதே; புத்தியைத் தீட்டு!

உடன்பிறப்பே,

உலக நாடுகளில் அதிர்வையும், அச்சத்தையும் ஏற்படுத்தி - உலக வல்லரசுகளில் ஒன்றான அமெரிக்காவுக்கே பெரும் சவாலாக இருந்துவந்த ஒசாமா பின்லேடன் எனும் உசாமா பின் முகமது பின் அவாத் பின் லாடின் இன்று இல்லை. ஆம்; 40 நிமிடங்களில் அவரது கதை முடிந்து விட்டது. அமெரிக்கப் படையினரால் அவர் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டார். தொடர்ந்து 10 ஆண்டுகளாக அமெரிக்க நாட்டின் கண்களை மண்ணைத் தூவி மறைத்துவிட்டு, எந்தவித சல்லடைத் தேடலுக்கும் சிக்காமல், உலகத்தின் தலைசிறந்த உளவு அமைப்பு என்று கருதப்படும் அமெரிக்காவின் சி.ஐ.ஏ.யையே ஏமாற்றி, அதன் பரந்து விரிந்த வலைகளில் மாட்டிக் கொள்ளாமல், தான் ஏற்றுக்கொண்ட சித்தாந்தத்தையும், அதன் அடிப்படையில் தான் உருவாக்கிய அமைபபையும் காபபாறறுவதறகாக, தலைமறைவு வாழககை வாழ்ந்து வந்த ஒசாமா பின்லேடனின் பயங்கரவாதச் சரித்திரம் முடிவுக்கு வந்துவிட்டது.

சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில் 1957ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10ந்தேதியன்று; சவுதி அரச குடும்பத்துடன் நெருங்கிய நட்பு கொண்ட மிகப்பெரும் செல்வந்தர் குடும்பத்தில் பின்லேடன் பிறந்தார். கோடீசுவராராகவும், பிரபல தொழில் அதிபராகவும் விளங்கிய முகமது பின்லேடனுக்கும், அவரது 11ஆவது மனைவியான அமிதியா அல் அட்டாசுக்கும், 17ஆவது குழந்தையாகப் பிறந்தவர் பின்லேடன். ஜெட்டா நகரில் பள்ளிப் படிப்பை முடித்த பின்லேடன், கிங் அப்துல் அஜீஸ் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரம், வணிக மேலாண்மை ஆகிய பிரிவுகளில் படித்துத் தேர்ச்சி அடைந்தார். 1974ல், அதாவது தனது 17ஆவது வயதில் நஜ்மா கனீம் என்பவரைத் திருமணம் செய்துகொண்ட பின்லேடன், அதற்குப் பிறகு நான்கு பெண்களை

மணந்து 26 குழந்தைகளைப் பெற்றெடுத்தார். பின்லேடனின் கல்லூரிப் பேராசிரியர் அப்துல்லா அஜாம் என்பவர், பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் தங்கியிருந்தார். அந்த நேரத்தில், அதாவது 1979ஆம் ஆண்டில், ஆப்கான் மீது சோவியத் யூனியன் கடும் தாக்குதல் நடத்தியது. அவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்திய முஜா கி தீன் கொரில்லாப் படையினருக்கு அஜாம் ஆதரவளித்தார். சோவியத்திற்கு எதிரான தாக்குதலை தனது கல்லூரிப் பேராசிரியர் தீவிரப்படுத்தி வந்ததைக் கண்ட பின்லேடன், அவருக்கு ஆதரவாக இறங்கினார். 1984ஆம் ஆண்டில் அஜாமும், பின்லேடனும் இணைந்து 'மக்தாப் அல் கடாமத்' என்ற அமைப்பைத் தொடங்கினர். இந்த அமைப்பின் நோக்கம், பணம் படைத்த இஸ்லாமிய நாடுகளிடம் இருந்து பணம், ஆயுதம் பெற்று, புனிதப் போரில் ஈடுபடுபவர்களுக்குக் கொடுப்பதாகும். மதச் சட்டங்கள் கடுமையாகக் கடைப் பிடிக்கப்பட வேண்டும் - அதை மீறுபவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பின்லேடன், தனது நண்பர்களுடன் சேர்ந்து 1988-89ல் 'அல் கய்தா' என்ற அமைப்பைத் தொடங்கினார். சவுதி அரேபிய அரசு அவருக்குத் தடை விதிக்கவே, சூடானில் அடைக்கலம் புகுந்தார் பின்லேடன். நைரோபி, கென்யா, தான்சானியா உள்பட பல இடங்களில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களிலும், அமெரிக்காவிலும் 'அல் கய்தா' அமைப்பு குண்டு வெடிப்பை நடத்தியது. சூடானில் இருந்தும் நாடு கடத்தப்பட்ட பின்லேடன், ஆப்கானிஸ்தானில் தஞ்சம் அடைந்து, அமெரிக்காவுக்கு எதிராகப் புனிதப்போர் என அறிவித்தார்.

''பாலஸ்தீனுக்கு எதிராகவும், இஸ்ரேலுக்கு ஆதரவாகவும் அமெரிக்கா செயல்படக் கூடாது. இஸ்லாமிய நாடுகளில் நிறுத்தியிருக்கும் இராணுவப் படைகளை அமெரிக்கா உடனே திரும்பப் பெறவேண்டும். அப்படி செய்யாத வரையில் அமெரிக்க இராணுவத்தினரையும், அந்த நாட்டினரையும் கொன்று குவிக்க வேண்டும் என்று 'அல் கய்தா' இயக்கம் 1996ஆம் ஆண்டு அறிவித்தது. அதற்குப் பின்னர்தான், 2001ஆம் ஆண்டு, செப்டம்பர் 11ஆம் தேதியன்று உலகத்தின் ரத்தத்தையே உறைய வைத்த பயங்கரவாதத்தை 'அல் கய்தா' இயக்கம் அமெரிக்காவில் அரங்கேற்றியது. நியூயார்க் நகரில் உள்ள 111 மாடிகள் கொண்ட இரட்டை கோபுரக் கட்டிடம் பின்லேடனின் சதித்திட்டத்தால் தகர்த்தெறியப்பட்டது. அப்பாவிகளான 3000 பேர் அதில்

பலியானார்கள். இதுதான், அமெரிக்காவின் தீராக் கோபத்திற்கு காரணமானது. பின்லேடனை தங்களிடம் ஒப்படைக்கும்படி அமெரிக்கா கோரியது. இதற்கு ஆப்கானிஸ்தான் மறுக்கவே, அந்த நாட்டின் மீது அமெரிக்கா தொடர்ந்து விமானத் தாக்குதலை நடத்தியது. இறுதிக் கட்டமாக, ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில், அபோதாபாத் நகரில் மறைந்திருந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு, அமெரிக்கப் படையினால் அவரது 55ஆவது வயதில் சுட்டுக் கொல்லப் பட்டார். சுட்டுக் கொல்லப்பட்ட பின்லேடனின் உடல், எத்தனையோ சாம்ராஜ்யங்களையும், இலட்சக்கணக்கான மனித உயிர்களையும் விழுங்கிவிட்டு, எப்போதும்போல் அலைகளை எழுப்பிக் கொண்டிருக்கும் கடலில் மூழ்கடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்லேடனைச் சுட்டுக் கொன்றது எப்படி என்பது குறித்து அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர், ''ஒசாமாவைக் கொல்ல இரண்டு அமெரிக்க ஹெலிகாப்டர்கள் அனுப்பப்பட்டன. ஒசாமாவுடன் மூன்று ஆண்கள், ஒரு பெண் ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அனைத்து நடவடிக்கைகளும் 40 நிமிடத்தில் முடிந்து விட்டன. ஆனால், அமெரிக்கப் படையினர் யாருக்கும் எந்தக் காயமும் ஏற்படவில்லை'' என்று விளக்கியிருக்கிறார்.

பின்லேடனின் முடிவை உலக நாடுகளில் பெரும்பாலானவை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளன. அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா ''ஒசாமாவை சுட்டுக் கொன்றதில் நீதி நிலை நாட்டப்பட்டது. அமெரிக்க மக்கள் நினைப்பதை நிறைவேற்றுபவர்கள் என்பதை, இதன் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தப் போராட்டத்துக்கு அமெரிக்கா அதிக விலை கொடுத்துள்ளது. இதை அமெரிக்கர்கள் புரிந்து கொள்வர். நம் பாதுகாப்பு, அச்சுறுத்தலுக்கு உள்ளாவதைக் கண்டு நாம் பொறுத்துக் கொள்ள மாட்டோம்; நம் மக்கள் கொல்லப்படும் போது சும்மா இருக்க மாட்டோம். நாம் என்ன நினைக்கிறோமோ, அதைச் செய்து காட்டுவோம் என்பதை, இப்போது மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளோம். அதுதான் நம் வரலாறு'' என்று பெருமிதத்தை வெளியிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில், சோவியத் படைகளுக்கு எதிராக கலகம் செய்ய வேண்டும் என்பதற்காகவே, தாலிபான்களை அமெரிக்கா ஊக்குவித்தது. இன்றைக்கு அதே தாலிபான்களை ஒடுக்குவதற்காக, ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள்

குவிக்கப்பட்டுள்ளன. அமெரிக்காவால் ஊக்குவிக்கப்பட்ட தாலிபான்களுக்கு உதவுவதற்காகவே, பின்லேடன் ஆப்கானிஸ்தான் வந்தார் என்பதை செய்திகள் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன.

பயங்கரவாதிகள் என்பதற்கு, ''பயங்கரவாதிகள் சமூகத்திலிருந்து தம்மை தனிமைப்படுத்தி உணர்வார்கள். தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகக் கருதுவார்கள். பெரும் பாலானோர் நிராதரவாக்கப்பட்டவர்களே. அரசியல்ரீதியான அல்லது மதரீதியான தங்களுடைய கொள்கைகளுக்காக, தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள். தங்கள் வன்முறைச் செயலை, குற்றச் செயலாக எப்போதும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் சிறந்த விசுவாசிகளாகவும், சூழ்ச்சி கொண்டவர்களாகவும், இரக்கத் தன்மையற்ற கொடியவர்களாகவும் இருப்பார்கள்'' என்று பொருள் சொல்லப்படுகிறது. பயங்கரவாதி என்பதற்கான இந்த வரையறைகள் எந்த அளவுக்கு ஒசாமா பின்லேடனுக்குப் பொருந்துகின்றன என்பதை, அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளை ஊன்றி, பகுத்து ஆய்பவர்களுக்குத் தெரியும்.

தேசிய பயங்கரவாதம், மத பயங்கரவாதம், இடதுசாரித் தீவிரவாதம், வலதுசாரி பயங்கர வாதம், அரசையே அழிக்கும் பயங்கரவாதம்; அணு பயங்கரவாதம், இரசாயன பயங்கரவாதம், நுண்ணுயிரியல் பயங்கரவாதம், போதை பயங்கரவாதம் என்று பயங்கரவாதம் எந்த உருவெடுக்க முனைந்தாலும்; அதனை முளையிலேயே கிள்ளி எறிவதும், முகிழ்த்து விடாமல் எச்சரிக்கை கடைப்பிடிப்பதும், அறிவுடையோர் கடமையாகும்.

''வரலாறு தனது வரிகளை இரத்தத்தால் தவிர வேறு எதனாலும் எழுதுவதில்லை. புகழ் எனும் உயர்ந்த மாளிகை மண்டை ஓடுகளால் தவிர வேறு எதனாலும் கட்டப்படுவதில்லை. கௌரவத்திற்கும், மதிப்பிற்கும், உடைந்த எலும்புகளாலும், பிணங்களாலும் தவிர வேறு எதனைக் கொண்டும் அடித்தளம் இடப்படுவதில்லை'' என்று பின்லேடனின் ஆசிரியர் தந்த போதனையை அப்படியே உணர்ச்சிப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, அதை நிலைநிறுத்துவதற்கு வாழ்நாள் முழுவதும் முயற்சி செய்த ஒசாமா பின்லேடன், தன் கையில் எடுத்த கருவிதான் ''பயங்கரவாதம்''. ஒசாமா பின்லேடன் பின்பற்றிய பயங்கரவாதத்திற்கு, ''இஸ்லாமிய பயங்கரவாதம்'' என்ற

லேபிளை ஒட்ட எத்தனையோ பேர் எத்தனிக்கிறார்கள். அதனை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. 'இஸ்லாம்' என்ற சொல்லுக்கு மற்றொரு பொருளே 'சமாதானம்' என்பதாகும். ''இஸ்லாம் ஒரு சமாதான, சகிப்புத் தன்மை கொண்ட மதம் என்றும்; ஒரு முஸ்லிம், இறைவனுடனும், மனிதனுடனும் சமாதானமாக இருத்தல் வேண்டும்" என்பதும், முகம்மது தோற்றுவித்த 10 அம்சங்களில் ஒன்று என்பதை நாம் மறந்துவிட முடியாது.

எல்லா மதங்களைச் சார்ந்தவர்கள் மத்தியிலிருந்தும் பயங்கரவாதிகள் உருவாவதை சரித்திரம் நமக்குச் சான்றுகளோடு எடுத்துக் காட்டுகிறது. தனி நபர்களையும், அப்பாவிகளையும் கொல்லும் பயங்கரவாதம்; கண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும், தண்டிக்கப்பட வேண்டும் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. எந்தவித நியாயமான குறைகள் அல்லது கோபம் யார் மீது இருந்தபோதிலும், பயங்கரவாதத்தை யாரும் நியாயப்படுத்துவதற்கான அடிப்படை அறவே கிடையாது.

''கத்தியைக் கையில் எடுத்தவன்; கத்தியாலேயே அழிவான்" என்பது பழமொழி. அந்த பழமொழிக்கான பாடம்தான் ஒசாமா பின்லேடனின் வாழ்க்கை. ''கத்தியைத் தீட்டாதே; புத்தியைத் தீட்டு'' என்ற அண்ணாவின் அன்புமொழியை அனைவரும் நெஞ்சில் நிறுத்திக் கொள்வோமாக!

அன்புள்ள,

மு.க.

4-5-2011

3560. மேலோர் பாராட்ட; கீழோர் பழிக்கின்றாரே!

உடன்பிறப்பே,

13.5.2006 அன்று ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், கடந்த ஐந்தாண்டுக் காலம் முழுதும், ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்பதையே மூச்சாகக் கொண்டு, ஒவ்வொரு நொடியும் தமிழக மக்களின் நல்வாழ்வுக்கும், தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்கும் என்னென்ன பணிகள் ஆற்ற வேண்டுமென்று எண்ணி எண்ணிப் பார்த்து, மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது பாடுபட்டிருக்கிறோம். 2006 பொதுத் தேர்தலின்போது, கழகத்தின் தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றி இருக்கிறோம். தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதிகள் மட்டுமல்லாமல், சொல்லாத திட்டங்களையும் நிறைவேற்றி இருக்கிறோம். விவசாயிகளின் கூட்டுறவுக் கடன் 7 ஆயிரம் கோடி ரூபாயை ரத்து செய்தது முதல், கலைஞர் வீடுவழங்கும் திட்டம் வரை எண்ணிலடங்காத் திட்டங்களை நிறைவேற்றி வைத்திருக்கிறோம்.

மக்களுக்கான மகத்தான பணிகளில் நாம் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டிருக்கும்போது; நமது மனதைச் சோர்வடையச் செய்து, கவனத்தை திசை திருப்பிடும் தீயநோக்கத்தோடு; ஆதிக்க சக்திகள் சில, நமது பணிகளின் சிறப்பையும், சாதனைகளின் தரத்தையும் வேண்டுமென்றே குறைத்தும், திரித்தும் மதிப்பிட்டு விமர்சனம் என்ற பெயரில், ஏடுகளிலும், ஊடகங்களிலும் வெளியிட்டு வருகிறார்கள். அவற்றில் ஒன்றுதான், இரண்டு நாட்களுக்கு முன்பு தமிழ் நாளேடு ஒன்றில் (தினமலர்-1.5.2011) 'ரிவர்ஸ் கியரில் போகிறது தமிழ்நாடு' என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையாகும். இந்தக் கட்டுரையை எழுதியவர் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு அடிப்படையாக இருந்திட வேண்டிய நடுநிலைப் போக்கு, சமுதாய நோக்கு, ''நல்லது செய்தல் ஆற்றீராயினும்; அல்லது செய்தல் ஓம்புமின்'' என்ற பண்பு, ஆகியவற்றில் மூன்றில் இரு பங்கு அல்லது மூன்றில் ஒரு பங்குகூட; கட்டுரை எழுதியவரின் கருத்தில் இல்லை என்பதுதான் வருத்தமளிப்பதாகும். விமர்சனம் என்ற பெயரில், நடுநிலை நாளேடு என்ற ''பேனரில்'', எதையாவது எழுதி, பொதுமக்களின் எண்ணத்தைக் குழப்பி, கழக ஆட்சியின் பெருமையையும், புகழையும் சிதைத்துக் காட்ட வேண்டு மென்பதுதான் அவர்களது நோக்கமாகும்.

அந்தக் கட்டுரையில், கழக அரசின் ஏழை எளியோர்க்கான இலவசத் திட்டங்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளன. அத்துடன், தமிழகத்தை ஒரு பின்தங்கிய மாநிலமாக சித்திரித்துக் காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கப்படுவது கழக ஆட்சியில்தான் - தமிழகத்திலே மட்டும்தான். கழக ஆட்சியில் நடுத்தர வர்க்கத்தினர், ஏழை எளியோர், நலிந்த பிரிவினர் ஆகியோருக்குத் தேவையான பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. உணவுப் பாதுகாப்புக்கு - ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி; மானிய விலையில் மளிகைப் பொருள்கள், 50 ரூபாய்க்கு 10 சமையல் பொருள்கள்; மாதந்தோறும் குறைந்த விலையில் ''பாமாயில்'' எண்ணெய், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, மைதா, கோதுமை மாவு வழங்கப்பட்டு வருகின்றன. மருத்துவப் பாதுகாப்புக்கு - உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்; அழைத்ததும் வந்து அவசர சிகிச்சைக்கு ஆவன செய்திடும் 108 ஆம்புலன்ஸ் திட்டம்; வருமுன் காப்போம் திட்டம்; இளம்சிறார் இருதய அறுவை சிகிச்சைத் திட்டம் ஆகிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. உறையுள் பாதுகாப்புக்கு - மத்திய அரசின் இந்திராகாந்தி நினைவு குடியிருப்புத் திட்டம்; குடிசைகளே இல்லாத கிராமங்களை உருவாக்கிடும் நோக்கில் கலைஞர் வீடுவழங்கும் திட்டத்தின் கீழ், 6 ஆண்டுகளில் அனைத்துக் கிராமங்களிலும் 21 இலட்சம் கான்கிரீட் வீடுகள்; ஐந்தாண்டுகளில் பேரூராட்சிப் பகுதிகளில் இரண்டரை இலட்சம் கான்கிரீட் வீடுகள்; வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான

1,100 ஏக்கர் நிலப்பரப்பில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினரின் வாங்கும் திறனுக்கேற்ப குடியிருப்புகள், மனைகள்; நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் அனைத்து ஏழைக் குடும்பங் களுக்கும் பாதுகாப்பான வீடுகள் என இவை அனைத்தும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

விவசாயத் தொழிலாளர் நலவாரியம் உட்பட, 33 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்கள் உருவாக்கப்பட்டு; 20 இலட்சத்து 3 ஆயிரம் அமைப்பு சாரா தொழிலாளர் குடும்பங்களுக்கு, 957 கோடியே 48 இலட்ச ரூபாய் உதவித் தொகை. 1 கோடியே 58 இலட்சத்து 82 ஆயிரம் குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள். 28 இலட்சத்து 34 ஆயிரம் குடும்பங்களுக்கு எரிவாயு இணைப் புடன் இலவச எரிவாயு அடுப்புகள். 73 இலட்சம் குழந்தைகள், மாணவ, மாணவியர்க்கு சத்துணவுடன் வாரம் ஐந்து நாட்களும் முட்டைகள், வாழைப்பழங்கள். பள்ளிக் கல்வியிலும், கல்லூரிக் கல்வியிலும் ஏராளமான சலுகைகள். 4 ஆயிரத்து 20 திருக்கோயில்களில், 387 கோடி ரூபாய்ச் செலவில் திருப்பணிகள் செய்து, குடமுழுக்கு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ், 4 இலட்சத்து 53 ஆயிரம் ஏழைப் பெண்களுக்கு 936 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி உதவி. ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு தலா 6 ஆயிரம் ரூபாய் நிதியுதவித் திட்டத்தின்கீழ், 20 இலட்சத்து 75 ஆயிரம் ஏழை மகளிர்க்கு, 1052 கோடியே 83 இலட்சம் ரூபாய் நிதி உதவி. கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்,

2 இலட்சத்து 56 ஆயிரம் ஏழை மக்களுக்கு, 667 கோடி ரூபாய்ச் செலவில் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள். ஆதரவற்ற முதியோர், விதவைகள், மாற்றுத் திறனாளிகள் 22 இலட்சத்து 27 ஆயிரம் பேர், மாதம் 500 ரூபாய் வீதம் உதவித் தொகை. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 281 கோடியே 88 இலட்சம் ரூபாய் சுழல்நிதி. 5 இலட்சத்து 5 ஆயிரம் இளைஞர்களுக்கு அரசு அலுவலகங்களில் புதிய வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தொண்டறம் பேணும் அமைப்புக்களின் துணையுடன்; மாநிலங்களவை உறுப்பினர் கவிஞர் கனிமொழி, அந்தந்த மாவட்ட அமைச்சர்களோடும், மாவட்ட ஆட்சியர்களோடும், தொழில் நிறுவனங்களுடனும் இணைந்து, வேலை வாய்ப்பினைத்

தேடித் தரும் முகாம்களை நடத்தியதன் மூலமாக,

1 இலட்சத்து 33 ஆயிரத்து 998 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. 2 இலட்சத்து 33 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும், 60 ஆயிரத்து 55 கோடி ரூபாய் முதலீட்டிலான, 28 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொழில் துறையில் செய்யப்பட்டுள்ளன. 12 ஆயிரத்து 618 கிராம ஊராட்சிகளில், 2 ஆயிரத்து 549 கோடி ரூபாய்ச் செலவில் அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.

14 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் 'மெட்ரோ ரயில் திட்டம்'.

910 கோடி ரூபாய்ச் செலவில், சென்னை-ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் ''புதிய சட்டமன்ற-தலைமைச்செயலக வளாகம்''. சென்னை-கோட்டூர்புரத்தில் 181 கோடி ரூபாய்ச் செலவில் அண்ணா நூற்றாண்டு நூலகம்.

1929 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். 630 கோடி ரூபாய்ச் செலவில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். அரசு ஊழியர் - ஆசிரியர்களுக்கு 11 ஆயிரத்து 93 கோடி ரூபாய் நிலுவைத் தொகை. இப்படி இந்த ஐந்தாண்டு காலத்தில் எண்ண எண்ண இனித்திடும் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி, சாதனைகள் படைத்திருக்கிறோம்.

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் காரணமாகத்தான்; 2005-2006ல் 61.17 இலட்சம் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி, 2010-2011 ல் 96.08 இலட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது.

கழக அரசு ஏழை எளியோர்க்கு உதவிடும் வகையில் செயல்படுத்தி வரும் பொது விநியோகத் திட்டம், உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம், கலைஞர் வீடுவழங்கும் திட்டம் போன்ற எண்ணற்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் பயனாகவும், பொருளாதார வளர்ச்சியின் விளைவுகள் பரவலாக பலதரப்பு மக்களையும் சென்றடைந்துள்ளதன் காரணமாகவும், 2005-2006ஆம் ஆண்டில் 39 ஆயிரத்து 692 ரூபாயாக இருந்த தனிநபர் வருமானம், 2009-2010ஆம் ஆண்டில் 69 ஆயிரத்து 377 ரூபாயாக உயர்ந்துள்ளது.

இந்த விபரங்களெல்லாம், தமிழ்நாடு, 'ரிவர்ஸ் கியரில்' பின்னோக்கிச் செல்வதையா காட்டுகிறது? சமூக, பொருளாதார நிலைகளில் வேகமாக முன்னேறி வருவதை அல்லவா காட்டுகிறது? இதனை மனசாட்சி உள்ளோர் நிச்சயமாகப் புரிந்து கொள்வர். கழக ஆட்சியில், தமிழகம் எந்த அளவுக்கு அனைத்து முனைகளிலும் முன்னேறி வருகிறது என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ள ஏதுவாக, அதுகுறித்து தகுதியுடையோர் விளக்கியதையும், உலகப் புகழ்பெற்ற நிறுவனங்களும், ஏடுகளும் எழுதியதையும் எடுத்துச் சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

9.4.2011 அன்று கோவையில் உரையாற்றிய இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள், ''முதலமைச்சர் கலைஞர் தலைமையிலான தமிழக அரசு நீண்டகாலக் கண்ணோட்டத்துடன் செயல்படுத்தி வரும் பல்வேறு வகையான திட்டங்கள், தமிழகத்தை பல வழிகளிலும் - குறிப்பாக, ஊரக வளர்ச்சியிலும், வேளாண்மைச் சீரமைப்பிலும் - ஒரு மாதிரி மாநிலமாக மாற்றி அமைத்திருக்கிறது. அண்மையில் பொருளாதார நிபுணர்கள் சிலர் தயாரித்தளித்த அறிக்கை ஒன்றைப் பார்த்தேன். அந்த அறிக்கையில், தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக அறிவித்திருக்கிறார்கள்'' என்று பாராட்டியிருக்கிறார்.

தமிழகத்தின் நிதிநிலை குறித்து மத்திய நிதி அமைச்சர் திரு.பிரணாப் முகர்ஜி அவர்கள் விளக்கிச் சொல்லியிருப்பது நம் அனைவருக்கும் நிறைவளிப்பது மட்டுமல்ல; நினைவிலே கொள்ளத்தக்கதுமாகும். 9.4.2011 அன்று சென்னையில் அவர் தமிழகத்தின் நிதி நிலை பற்றி பின்வருமாறு விளக்கியிருக்கிறார் :

''13வது நிதி ஆணையம் அண்மையில் தாக்கல் செய்த அறிக்கையில், எந்த மாநிலமும் 2011-12ஆம் ஆண்டில் அதன் ஒட்டுமொத்த மாநில உற்பத்தியில் 3 முதல் 3.5 சதவிகிதத்திற்குமேல் கடன் வாங்கக் கூடாது என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் கடன் அளவு, பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட மிகவும் குறைவாகவே உள்ளது.

இந்தியாவில் நிதி ஒழுங்கையும், நிலைத் தன்மையையும் திருப்திகரமாகக் கடைப்பிடித்துவரும்

ஒரு சில மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும். 2011ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதிய நிலவரப்படி, தமிழக அரசின் ரொக்கக் கையிருப்பு 13 ஆயிரத்து 537 கோடி ரூபாயாகும். இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து ஒருநாள் கூட தன் கணக்கில் பணம் இல்லாமல், கூடுதல் வரைவுத் தொகையைத் (over draft) **தமிழக அரசு பெற்றதில்லை. ஆனால், பல மாநிலங்கள் கூடுதல் வரைவுத் தொகையைப் பெற்றுள்ளன''**

சி.என்.என்.-ஐ.பி.என். என்னும் முன்னணி செய்தி நிறுவனம், 2008ஆம் ஆண்டு முதல் தேசிய அளவில் வளர்ச்சி, சட்டம்-ஒழுங்கு, அடிப்படை கட்டமைப்பு போன்ற பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் தகுந்த நடுவர்கள் மூலம் அனைத்து மாநிலங்களையும் மதிப்பீடு செய்து, சிறந்த மாநிலங்களைத் தேர்வு செய்து, அம்மாநிலங்களுக்கு ''வைர மாநில விருதுகள்'' வழங்கி வருகிறது. 2010ஆம் ஆண்டில், தமிழ்நாடு - இந்திய அளவில் பெரிய மாநிலங்களில் சிறந்த மாநிலம் என்ற சிறப்பு விருதினையும்; குடிமக்கள் பாதுகாப்பு, குடிநீர் மற்றும் சுகாதாரம், மகளிர் மேம்பாடு ஆகிய 3 பிரிவுகளில் சிறந்த மாநிலத்திற்கான வைர மாநில விருதுகளையும் பெற்றுள்ளது.

பிரபல இதழான 'இந்தியா டுடே' கடந்த சில ஆண்டுகளாக தேசிய அளவில் பெரிய மற்றும் சிறிய மாநிலங்களின் வளர்ச்சியைக் குறித்து ஆய்வு செய்து, அவற்றின் செயல்திறன் அடிப்படையில் தரவரிசைப்படுத்தி விருது வழங்கி வருகின்றது. 2010ஆம் ஆண்டிற்கான 'இந்தியா டுடே' விருதினை வழங்கிட ஏதுவாக, மாநிலங்களைத் தரப்படுத்த ஒவ்வொரு மாநிலத்திலும், தற்போது உள்ள வளர்ச்சி மற்றும் நிதிநிலை, சட்டம்-ஒழுங்கு, சுகாதாரம், கல்வி, நுகர்வோர் சந்தை, விவசாயம், உள்கட்டமைப்பு, முதலீடு ஆகிய எட்டு தலைப்புகளின்கீழ் பல்வேறு பொருள்கள் குறித்து ஆய்வுகளும், மதிப்பீடுகளும் செய்யப்பட்டு, அவற்றின் அடிப்படையில், 20 பெரிய மாநிலங்களின் ஒட்டு மொத்த வளர்ச்சி அடிப்படையிலான வரிசைப் பட்டியலில், தமிழ்நாடு மூன்றாம் இடம் பெற்றுள்ளதை ஒட்டி, 19.11.2010 அன்று புதுதில்லியில் நடந்த விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் அவர்களால் 'இந்தியா டுடே விருது' தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்டது.

தமிழக அரசு ஏழை எளிய மக்களிடையே வறுமையை

ஒழிக்கவும், சமூக ஏற்றத்தாழ்வுகளைக் களையவும், செயல்படுத்திவரும் திட்டமான ‘‘வாழ்ந்து காட்டுவோம் திட்டம்” குறித்து, உலக வங்கியின் முன்னாள் செயலாக்கத் தலைவர் திருமதி.மீனா முன்ஷி அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில், ‘‘‘வாழ்ந்து காட்டு வோம் திட்டம்’, 2006ஆம் ஆண்டின் இடைப் பகுதிக்குப் பிறகு வேகமாகச் செயல்படத் தொடங்கி, மிகப் பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது என்றும்; தமிழக அரசு இத்திட்டத்தைத் தொடர்ந்து கண்காணித்து, திட்டப் பணியாளர்களுக்கு அவ்வப்போது தக்க அறிவுரைகள் வழங்கியதன் பயனாக, களத்தில் இத்திட்டம் மிகுந்த வரவேற்பினைப் பெற்று தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் மகத்தான வெற்றி கண்டுள்ளது’’ என்றும் பாராட்டியுள்ளார்.

இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில், மத்திய அரசின் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டச் செயல்பாட்டில் நடைபெறுவதாக தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டின் மீதான விசாரணை மேற்கொண்டு அளித்த தீர்ப்பில், உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு.கே.ஜி.பாலகிருஷ்ணன் மற்றும் நீதிபதிகள் திரு.தீபக் வர்மா மற்றும் திரு.பி.எஸ்.சவ்யான் ஆகியோர், இத்திட்டச் செயலாக்கத்தில் தமிழ்நாடு மற்றும் மேகாலயா ஆகிய இரு மாநிலங்கள் அதிக அக்கறையுடன் செயல்படுவதாகப் பாராட்டி, மற்ற மாநிலங்களும் இவ்விரு மாநிலங்களின் வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றி திறம்பட செயல்பட வேண்டும் என கருத்து தெரிவித்துள்ளார்கள்.

“Wall Street Journal” தனது 2010, ஜூலை 8ஆம் நாளிட்ட இதழில், கழக அரசின் செயல்பாடுகளை பெரிதும் பாராட்டியிருக்கிறது. அந்த இதழில் ‘‘தமிழ்நாடு வாகன உற்பத்தித் தொழிற்சாலைகளுக்குத் தேவையான நிலங்கள், சாலைகள் ஆகிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில், மற்ற இந்திய மாநிலங்களைவிடச் சிறப்பாக செயல்படுகிறது. தொழில் தொடங்கவும், விரிவாக்கம் செய்யவும், 12க்கும் மேற்பட்ட அரசுத் துறை சார்ந்த அனுமதிகளை ஒற்றைச்சாளர முறையில் ஒரே இடத்தில் வழங்குகிறது’’ என்றும் கூறிப் பாராட்டியுள்ளது.

“Oxford Analytica (ஆக்ஸ்போர்ட் அநலிட்டிகா)” என்ற ஒரு பன்னாட்டு தனியார் ஆலோசனை நிறுவனம், ‘‘இந்தியா டீகன்ஸ்ட்ரக்டட்’’ (India Deconstructed) என்ற ஒரு ஆய்வை

நடத்தியது. அந்த ஆய்வின்படி, ''தமிழகம் அந்நிய முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியாவிலேயே முதன்மையாக விளங்குகிறது'' என்று கூறி, அதற்கு தமிழ்நாட்டின் தரமான உள்கட்டமைப்பு மற்றும் ஆளுமை ஆகியவையே காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளது. இந்தியாவிலுள்ள 28 மாநிலங்களையும் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களையும் பகுப்பாய்வு செய்து, ''தமிழ்நாடே மிகச் சிறந்தது'' என்று அறிவித்துள்ளது.

3.5.2011 அன்றுகூட தமிழகத்தில் மகப்பேறு நலத் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது என்று உலக வங்கி பாராட்டியிருப்பதை 'இந்து' நாளிதழ் "Maternity Health Scheme commended" என்று தலைப்பிட்டு வெளியிட்டுள்ளது. தமிழக அரசு மகப்பேறு நலத் திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்தி, குழந்தை இறப்பு விகிதத்தைப் பெருமளவுக்குக் குறைத்திருப்பதை உலக வங்கி பாராட்டியிருக்கிறது.

இந்த மதிப்பீடுகளையெல்லாம் கண்ட பிறகாவது, ஏனோ தானோ என்று விமர்சனம் செய்து, கழக அரசின் செயல்திறனையும், மக்கள் நலப் பணிகளையும், சாதனைகளையும் இன்னமும் குறைத்து மதிப்பிடுவோர்; தமது அணுகுமுறையைத் திருத்திக் கொண்டு, ஆத்திரத்தையும், அலட்சியத்தையும் குறைத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். எவர் போற்றினாலும், புகழ்ந்தாலும்; புழுதிவாரித் தூற்றினாலும், பொருள்படுத்தாமல் போனாலும்; நமது இலட்சியப் பயணமும், தமிழகத்துக்கும் - தமிழ் மொழிக்கும் - தமிழர்களுக்குமான நமது பணிகளும், ஓய்வில்லா உழைப்பும், இன்றுபோல் என்றும் தொடரும்!

அன்புள்ள,

மு.க.

5-5-2011

3561. உனக்கும், எனக்கும் - உலகத் தமிழர்க்கும் பொன்னாள்!

உடன்பிறப்பே,

டெல்லி நீதிமன்றத்தில் என் இளைய மகள் கனிமொழி நிறுத்தப்பட்டுள்ள இந்த நேரத்தில், உனக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

புலவர்களின் செந்நாவில் புரண்டு, புயலாகவும், பூந்தென்றலாகவும், புறப்பட்ட தமிழ் - மூவேந்தர்களாம் சேர, சோழ, பாண்டியர்களின் அரண்மனையில் எதிரொலித்த இனிய தமிழ் - சங்கம் வளர்த்துச் சங்கநாதம் செய்த தமிழ் - வேங்கடம் முதல் குமரி வரை விதைகளைத் தூவி, வியப்புறு தருக்களை வளர்த்த தமிழ் - மலை தாண்டி, கடல் தாண்டி, மண்ணுலகின் முதன்மை மொழி என வலம் வந்த தமிழ் - மாளிகைகளில் மட்டுமே மணம் வீசிக் கொண்டிருந்த நிலையினை மாற்றி, அறிஞர் அண்ணா அவர்களால், மண் குடிசைகளுக்கெல்லாம் கொண்டு செல்லப்பட்டு; குன்றிலிட்ட விளக்காய் வெளிச்சக் கதிர் பரப்பிய தமிழ் - எழுத்து, சொல், பொருள் என மூன்றிலும், மற்றெம்மொழியையும் விஞ்சி நிற்கும் தமிழ் - இன்றைக்கு (6.5.2011) டெல்லி மாநகரில், 'ராஷ்டிரபதி பவன்' எனப்படும் இந்தியக் குடியரசுத் தலைவர் மாளிகைக்குள், 'ராஜ உபசாரத்தோடு' கம்பீரமாய் நுழைகிறது. ஆம்; மத்திய அரசின் சார்பில், சென்னையில் உள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் வழங்கிடும் செம்மொழி விருதுகளைப் பெறுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது தமிழ் அறிஞர்கள், டெல்லிக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

திருமதி.சோனியாகாந்தி அவர்களின் வழி காட்டுதலிலும், டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் தலைமையிலும் இயங்கிவரும் மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, கழகம்

தொடர்ந்து வலியுறுத்தியதால், 12.10.2004 அன்று, தமிழைச் செம்மொழி எனப் பிரகடனம் செய்து, அறிவிக்கை வெளியிட்டது. அதனையொட்டி - இதுவரை சமஸ்கிருதம், பாலி, ப்ராக்ருதம், அராபிக், பாரசீகம் ஆகிய மொழிகளில் விருதுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர்கள் மட்டுமே; இந்தியக் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு அழைக்கப்பட்டு, மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் கௌரவிக்கப்பட்டு வந்த பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக; முதல்முறையாக, இன்று (6.5.2011) காலை 11.30 மணிக்கு, குடியரசுத் தலைவர் மாளிகையில், நமது தமிழறிஞர்கள் கௌரவிக்கப்படுகிறார்கள் என்ற செய்தி உலகெங்கும் பரவிக்கிடக்கும் தமிழர்களின் செவிகளில் இன்பத்தேனாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது.

நமது இடையறாத முயற்சிகளின் காரணமாக, தமிழ் 'செம்மொழி' என்று மத்திய அரசால் பிரகடனப்படுத்தப்பட்டதற்குப் பிறகு, நமது வேண்டுகோளை ஏற்று, மறைந்த எனது அருமை நண்பர் மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.அர்ஜுன் சிங் அவர்கள் மத்திய அரசின் சார்பில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வாயிலாக, ஆண்டு தோறும், 5 இலட்சம் ரூபாய் சிறப்புப் பரிசுடன் "தொல்காப்பியர் விருது", 5 இலட்சம் ரூபாய் சிறப்புப் பரிசுடன் "குறள்பீட விருது", ஒரு லட்சம் ரூபாய் சிறப்புப் பரிசுடன் ஐந்து "இளம் அறிஞர் விருதுகள்" ஆகியவற்றை வழங்குவதற்கு

முன்வந்தார். அதனையொட்டி, செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் தலைவர் என்ற முறையில், எனது தலைமையில், இந்த விருதுகளுக்குரிய அறிஞர் பெருமக்களைத் தேர்ந்தெடுப்பதற்காக முனைவர் வா.செ. குழந்தைசாமி, முனைவர் மா.நன்னன், எழுத்தாளர் - இனிய நண்பர் ஜெயகாந்தன் ஆகியோரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு; 2005-2006ஆம் ஆண்டு முதல் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் நிகழ்ச்சியில் 2005 - 2006, 2006-2007, 2007-2008 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான விருதுகள் வழங்கப்படுகின்றன.

2005-2006ஆம் ஆண்டுக்கான 'தொல்காப்பியர் விருது' - 100 வயதைக் கடந்தவரும், விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்தவரும், மயிலம் தமிழ்க் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றத்

தொடங்கி, சென்னைப் பல்கலைக் கழகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகப் பணியாற்றி, தமிழ் மொழிக்கு அருந்தொண்டு புரிந்தவரும்; செம்மொழித் தமிழ் குறித்து 100க்கும் மேலான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டவரும்; 65 நூல்களை எழுதியவரும்; பல்வேறு நிறுவனங்களின் பரிசுகளையும், விருதுகளையும் பெற்றவருமான பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

பேராசிரியர் அடிகளாசிரியர் அவர்கள், 'தொல்காப்பியர் விருதைப்' பெற்றுக் கொள்வதற்கு, சென்னையிலிருந்து டெல்லிக்கு 'ஏர் இந்தியா' விமானத்தில் சென்றிருக்கிறார். அவரது

வாழ்நாளிலேயே இதுதான் முதல் விமானப் பயணம். அவரையும், மற்ற தமிழறிஞர்களையும் சென்னை விமான நிலையத்தில் 'ஏர் இந்தியா' நிறுவனத்தின் துணைப் பொது மேலாளர் திரு ஆர்.ராதாகிருஷ்ணன், முதுநிலை மேலாளர் திரு எம்.பி.மேனன் ஆகியோர் வழியனுப்பி வைத்திருக்கின்றனர்.

2006-2007ஆம் ஆண்டுக்கான 'குறள்பீடம் விருது' - அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவரும்; கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பல்லாண்டுக் காலம் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவரும்; தமிழ் மற்றும் வடமொழி ஆகிய இரு மொழி இலக்கியங்களையும் முறையாகக் கற்றுத் தேர்ந்தவரும்; ஐரோப்பியச் செம்மொழிகளான இலத்தீனம், கிரேக்கம் ஆகிய இருமொழி இலக்கியங்களையும் விரிவாகக் கற்றுத் தேர்ந்தவரும்; தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளின் இலக்கியங்களை மூல மொழியிலேயே விரிவாகக் கற்றவருமான **பேராசிரியர் ஜார்ஜ் எல்.ஹார்ட்** அவர்களுக்கு வழங்கப்படுகிறது. குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சியில், உடல்நிலை காரணமாக அவர் கலந்துகொள்ள இயலவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2005-2006ஆம் ஆண்டுக்கான 'இளம் அறிஞர் விருதுகள்'; விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆர்.அரவிந்தன், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் ஒய்.மணி கண்டன், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் எஸ்.கலைமகள், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர்

வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர், புதுச்சேரியைச் சேர்ந்த முனைவர் கே.பழனிவேலு ஆகியோர்க்கும்;

2006-2007 ஆம் ஆண்டுக்கான 'இளம் அறிஞர் விருதுகள்'; மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் எஸ்.சந்திரா, அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் அரங்க.பாரி, அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் மு.இளங்கோவன், திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் எம்.பவானி, நாகை மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் ஆர்.கலைவாணி ஆகியோர்க்கும் ;

2007-2008 ஆம் ஆண்டுக்கான 'இளம் அறிஞர் விருதுகள்'; திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் ஏ.செல்வராசு, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் பி.வேல்முருகன், சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் ஏ.மணவழகன், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் எஸ்.சந்திர சேகரன், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த முனைவர் எஸ்.சைமன் ஜான் ஆகியோர்க்கும்; இன்று குடியரசுத் தலைவர் மாளிகையில் வழங்கப்படுகின்றன.

தமிழ் உலகம் நீண்ட நெடுங்காலமாகவே மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ''செம்மொழி விருதுகள்'' வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது. நிகழ்ச்சி நடைபெறும் இந்த நாளில்; எனது நினைவுகளில் பல்வேறு நிகழ்ச்சிகள் தோன்றி பளிச்சிடுகின்றன.

முதன்முதலில் தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரியவர் சூரிய நாராயண சாஸ்திரியார் எனும் பரிதிமாற் கலைஞர் அவர்கள் ஆவார்கள். ''தமிழ் செம்மொழி என்பது திண்ணம். இதுபற்றி யன்றே தொன்று தொட்டுத் தமிழ் மொழி செந்தமிழ் என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று. ஆகவே தென்னாட்டின்கட் சிறந்தொளிராநின்ற அமிழ்தினுமினிய தமிழ் மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும், உயர் தனிச் செம்மொழியேயாம் என்பது நிச்சயம்" என்று 'தமிழ் மொழியின் வரலாறு' என்ற தமது நூலில், 100 ஆண்டுகளுக்கு முன்பே அறுதி யிட்டு உறுதியாகச் சொன்னவர் பரிதிமாற் கலைஞர்.

மதுரை-விளாச்சேரியில் பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த இல்லம் கழக ஆட்சியில் அரசுடைமையாக்கப்பட்டு; 8 இலட்சம் ரூபாய்ச் செலவில் புதுப்பிக்கப்பட்டு ; இல்லத்தின் முகப்பில் அவரது மார்பளவுச் சிலை நிறுவப்பட்டு; 31.10.2007 அன்று என்னால் திறந்து வைக்கப்பட்டது. அங்கு வைக்கப்பட்டிருந்த பார்வை யாளர் புத்தகத்தில், ''தமிழுக்குச் செம்மொழித் தகுதி கோரி குரல் கொடுத்த முதல் தமிழன் பரிதிமாற் கலைஞர் புகழ் வாழ்க!'' என நான் எழுதிக் கையெழுத்திட்டேன்.

தமிழ் மொழி 'செம்மொழி' என முதல் குரல் கொடுத்த தமிழர் பரிதிமாற்கலைஞர் என்றால்; தமிழ் மொழி 'செம்மொழி' என்று முதலில் சொன்ன வெளிநாட்டவர் அறிஞர் இராபர்ட் கால்டுவெல் அவர்கள் ஆவார்கள். ''திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்'' என்ற உயர் பெரும் நூலில் அறிஞர் கால்டுவெல் அவர்கள், ''திராவிட மொழிகள் அனைத்திலும், உயர் தனிச் செம்மொழியாய் நிலைபெற்று விளங்கும் தமிழ், தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்து விட்டு உயிர் வாழ்வதோடு, அவற்றின் துணையை ஒருசிறிதும் வேண்டாமல் வளம் பெற்று வளர்வதும் இயலும்'' என்று நிறுவிக் காட்டி இருக்கிறார். அந்த சிறப்புக்குரிய இராபர்ட் கால்டுவெல் அவர்கள் தமிழகத்தில், நெல்லை மாவட்டத்தில், இடையன் குடியில் வாழ்ந்த இல்லம், 20 இலட்சம் ரூபாய்ச் செலவில் அரசுடைமையாக்கப்பட்டு; புதுப்பிக்கப்பட்டு, அவரது சிலை அங்கே நிறுவப்பட்டு; அந்த நினைவில்லத்தையும், சிலையினையும் 17.2.2011 அன்று சென்னையில் இருந்து 'காணொலிக் காட்சி' வாயிலாகத் திறந்து வைத்தேன்.

அந்த நிகழ்ச்சியில் நான், ''தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் கிறித்தவ அறிஞர்கள் ஆற்றியிருக்கும் அரிய பணியை இந்த இனிய வேளையில் நினைவு கூர்வது எனது கடமையாகும்'' என்று சுட்டிக்காட்டி; ''தமிழ் மொழியைப் பொறுத்தவரை, கிறித்தவர்கள் ஆற்றிய பணி பலவகைப்பட்டதாகும். தமிழ்நாட்டுக் கலைச் செல்வத்தை மேலை நாட்டினர்க்குக் காட்டினர் சிலர். தமிழ் இலக்கியத்தின் பண்புகளைப் பாட்டாலும், உரையாலும் விளக்கியருளினர் சிலர். இலக்கண வாயிலாக ஆராய்ந்து, தமிழின் தொன்மையையும், செம்மையையும் துலக்கினர் சிலர். மேலைநாட்டு முறையில் தமிழ் அகராதியைத் தொகுத்து உதவினர்

சிலர். தெள்ளுதமிழ் வசன நடையில் அறிவு நூல் இயற்றித் தொண்டாற்றினர் சிலர்'' என்று சொல்லின் செல்வர் பேராசிரியர் ரா.பி.சேதுப் பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளதை எடுத்துக் காட்டி உரையாற்றினேன்.

மைசூரில் இயங்கி வந்த செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தைக் கழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி, சென்னைக்கு மாற்றியமைத்தது. நல்லெண்ணத்தின் அடிப்படையிலும், நம் மீதும், நமது மொழியின் மீதும் கொண்ட பற்றின் காரணமாகவும், மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறையின் முன்னாள் அமைச்சர் திரு.அர்ஜூன்சிங் அவர்கள், செம்மொழி நிறுவனத்தைச் சென்னைக்கு மாற்றியமைத்ததற் காக, அவருக்கு சென்னை யில் 18.8.2007 அன்று தமிழக அரசின் சார்பில், என் தலைமையில் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

சென்னை-காமராசர் சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித் துறையின் பாலாறு இல்லத்தில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் அலுவலகத் திறப்பு விழா 30.6.2008 அன்று நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள் தலைமையில் நடைபெற்று; அலுவலகத்தைத் திறந்து வைத்து நான் உரையாற்றிய போது, "செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழகத்தில் காலூன்றுகின்ற நாள், பரிதிமாற்கலைஞர் அவர்கள் 150 ஆண்டு களுக்கு முன்பு கண்ட கனவு - அந்தக் கனவு நனவாக வேண்டுமென்று 50 ஆண்டுகளுக்கு முன்பே நான் கொண்ட நினைவு இன்று செயலாக்கம் பெறுகின்றது. இதையொட்டி எனக்கென்று உள்ள சொந்தப் பணத்திலிருந்து ஒரு கோடி ரூபாயை - இந்த நிறுவனத்தின் பொறுப்பில் - 'கலைஞர் கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை' ஒன்றினை நிறுவிட வழங்குகின்றேன். இந்த ஒரு கோடி ரூபாயிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு, தமிழக வரலாற்றுப் பயன்மிக்க கல்வெட்டுகளை ஆய்வு செய்பவர்களுக்கு அறக்கட்டளையின் சார்பில் விருதுகளும், பொற்கிழிகளும் வழங்கப்படும்" என்று நான் அறிவித்து ; அதன்படி, 2009ஆம் ஆண்டுக்கான முதல் விருது - "கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது" - பின்லாந்து நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அஸ்கோ பர்ப்போலா அவர்களுக்கு; கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் 10 இலட்ச ரூபாய் பொற்கிழி, மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு

ஆகியவை, மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டன.

2006-2007ஆம் ஆண்டுக்கான 'குறள்பீடம் விருது'க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அமெரிக்க நாட்டுப் பேராசிரியர் முனைவர் ஜார்ஜ் எல்.ஹார்ட் அவர்கள் என்மீது அளவிடற்கரிய அன்பும், ஆழமான நட்பும் பாராட்டுபவர். அவரது பெயரைக் கேட்கும்போதெல்லாம்; கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் ''தமிழ் இருக்கை'' உருவாக்கப்பட்டதன் 10ஆவது ஆண்டு விழாவின்போது வெளியிடப்பட்ட; எனது இலக்கியப் படைப்புகள் அடங்கிய 'கலைஞர் களஞ்சியம்' என்னும் நூலுக்கு அவர் வழங்கிய முன்னுரையில், ''கலைஞர் புதினம், கட்டுரைகள், திரைக்கதைகள், சிறுகதைகள், வரலாற்றுப் புதினங்கள், அறிஞர்கள் கூறும் கருத்துகள் எனப் பலவிதங்களில் இலக்கியப் படைப்புகளை அளித்துள்ளார். தமிழர்களிடம் அவர்களின் பழம் பெருமையைச் சிறந்த முறையில் உணர்த்தியிருப்பவர் கலைஞர். கலைஞர் இலக்கியத்திலும், அரசியலிலும் ஆழ்ந்த அறிவுடையவர். அவர் வாழ்நாள் முழுவதும் தமிழ்மொழி, தமிழர் வாழ்வின் உயர்வுக்காகப் பாடுபட்டுள்ளார்'' என்று குறிப்பிட்டுள்ளதை என்னால் மறந்திட இயலாது.

சென்னை-செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் முன்னர் சட்டப்பேரவை நடைபெற்று வந்த மன்றத்தில், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ''பாவேந்தர் செம்மொழித் தமிழாய்வு நூலக''த்தை மாற்றி அமைப்பதென்று கழக அரசு முடிவு செய்ததையொட்டி; அந்த நூலகம் 2.6.2010 முதல், ஆய்வுக்குப் பயன்படும் பல்லாயிரக்கணக்கான நூல்களுடன், வெகு சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இப்படி இன்னும் எத்தனையோ நினைவுகள், இன்று ஒவ்வொன்றாக வந்து என் இதயத்தை நிரப்பிக் கொண்டிருக்கின்றன. எல்லாவற் றையும் எடுத்துச் சொல்ல காலமும், இடமும் தான் போதவில்லை. எனது எண்ணங்கள் எல்லாம் குடியரசுத் தலைவர் மாளிகையில் குழுமியுள்ள தமிழறிஞர்களைத்தான் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. அவர்கள் அனைவரையும் இங்கிருந்தவாறே மனமார வாழ்த்தி மகிழ்கின்றேன்! குடியரசுத் தலைவர் மாளிகையில் தமிழறிஞர்கள் முதல்முறையாகச் சென்று, விருதுகள் பெறும் நிகழ்ச்சியை

எண்ணி, குவலயத் தமிழர்கள் அனைவருமே வாழ்த்துகிறார்கள்! நீண்டநாள் கனவு நிறைவேறுகிறது!

உடன்பிறப்பே, இந்நாள் உனக்கும், எனக்கும், உலகத் தமிழர் அனைவர்க்கும் பொன்னாள்தானே!

அன்புள்ள,

மு.க.

7-5-2011

3562. "சில நேரங்களில் சில மனிதர்கள்!"

உடன்பிறப்பே,

இதோ ஒரு கடிதம்!

இதை நீ படிக்கத் தொடங்குவதற்குமுன்; இதனை யார் எழுதியது? எப்போது எழுதிய கடிதம் என்பதை இப்போது நான் உனக்கு விளக்கிட இருக்கிறேன்.

என் வாழ்க்கையில் எத்தனையோ இனிய நண்பர்கள் - அரசியல் ஈடுபாடு காரணமாக - கலை, இலக்கிய தொடர்பு காரணமாக என்னுடன் பழகியிருக்கிறார்கள். அவர்களில் சிலர் என் மீது எந்தக் குற்றமும் இல்லாமல், புராணீகர் மொழியிலே சொல்ல வேண்டுமென்றால் - விதி வசத்தாலோ அல்லது கால வித்தியாசத் தாலோ தோழமை உணர்வைத் துண்டித்துக் கொண்டார்கள் - நட்புச் சங்கிலியை அறுத்துக் கொண்டது மட்டுமல்லாமல் எதிர் முனையில் போய் நின்றுகொண்டு ஏசியும், பேசியும் எதிர்ப்புக் கணைகளை வீசியும் மகிழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நட்பாக இருந்தபோது - அவர்கள்மீது கொண்டிருந்த பாசத்தை - நேசத்தை - பல்லாயிரம் முறை, பல கோடி முறை நினைத்து நினைத்து நெகிழ்ந்து போயிருக்கிறேன். இப்பொழுதும் அப்படித்தான்; நான் எப்பொழுதுமே அப்படித்தான்!

நட்பு அறுந்து போய்விட்டது என்பதற்காக - நாராச மொழிகளில் நான் அவர்களை அர்ச்சித்தது கிடையாது. ஆனால் அவர்கள் எப்படியெல்லாம் பேசினார்கள்? எப்படியெல்லாம் எழுதினார்கள்? இப்பொழுதுகூட அந்த முறையைத்தான் தொடர்ந்து பின்பற்றி வருகிறார்கள். எப்படி இருந்தவர்கள் - என் மீது எவ்வளவு அன்பு செலுத்தியவர்கள் - இப்போது காரணமின்றி நம் மீது சேறு வாரி வீசுகிறார்களே என்று எண்ணிக் கொண்டே

- நான் படித்து முடித்த - புத்தக அடுக்குகளைப் பிரித்துப் பார்க்கும்போது - அதில் உள்ள ஒரு கடிதத்தைக்கண்டு, வியப்பு மேலிட்டவாறு - அதைப் படிக்கத் தொடங்கினேன்.

அதைத்தான் நீயும் படி என்று உன்னிடம் காட்டுகிறேன். இதோ அந்தக் கடிதம்! என் ஆருயிர்க் கண்மணி தம்பி முரசொலிமாறன் உடல் நிலை கேடுற்ற நிலையில் இருந்தபோது இந்தக் கடிதம் எனக்கு ஒரு சிறைச்சாலையிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது. எந்தச் சிறைச்சாலை? யார் எழுதியது? என்பதை யெல்லாம் நீயே படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்!

"அன்பு கனிந்த தலைவர் கலைஞர் அவர்கட்கு,

வணக்கம். சிறை வாழ்க்கையின் தனிமையும் வெம்மையும் எத்தகையது என்பதை என்னிலும் நன்குணர்ந்தவர் தாங்கள் என்பதால் "தொல்காப்பியப் பூங்கா"வையே சிறைக்குள் அனுப்பி தமிழ் மணம் நுகர்ந்து மகிழச் செய்த தங்களின் உழுவலன்பு கண்டு நெகிழ்ந்தேன்.

மருத்துவமனையில் நான் இருந்த போது தம்பி இள. புகழேந்தி என்னைச் சந்தித்து தங்கள் சார்பில் உடல் நலம் உசாவியதோடு "தொல்காப்பியப் பூங்கா" நூலினை அளித்தபோது பெரும் புதையல் கிடைத்த மகிழ்ச்சியடைந்தேன். நூலினைப் படிக்கப் படிக்க நோயும் மறைந்தது, தனிமையும் பறந்தது.

மதிப்பிற்குரிய நண்பர் திரு. மாறன் அவர்களின் உடல் நிலை பற்றிய கவலை ஒரு புறம் வாட்ட, தமிழ் மீது தாங்கள் கொண்டுள்ள கரை காணாக் காதல் மறுபுறம் தூண்ட, தொல்காப்பியப் பூங்காவைப் படைத்தளித்தப் பாங்கினைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை.

முதுகலைப் பட்ட வகுப்பில் எனது பேராசிரியர் திரு.தெ. பொ.மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தொல்காப்பியம் - எழுத்து - நச்சினார்க்கினியமும், தங்களின் ஆசிரியராக விளங்கியவரும் எனக்கும் ஆசிரியராக இருந்தவருமான மகாவித்வான் திரு.ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் தொல்காப்பியம் - சொல் - சேனாவரையமும் - பேராசிரியர் திரு.மு.அண்ணாமலை அவர்கள் தொல்காப்பியம் -

பொருள் - இளம்பூரணமும் கற்பித்தனர். ஆனாலும் தொல்காப்பியம் படிக்கப் புகும்போதே இனம் புரியாத அச்சமும், தயக்கமும் மாணவப் பருவத்தில் என்னை வாட்டியதுண்டு. பெரும் பேராசிரியர்கள் பாடம் நடத்தி ஒருவாறாக அச்சத்தைப் போக்கினர்.

அந்த நாளிலேயே நீங்கள் "தொல்காப்பியப் பூங்கா" நூலை எழுதியிருந்தால் தேவையற்ற அச்சமும், தயக்கமும் என்போன்றவர்களுக்கு ஏற்பட்டிருக்காது.

கற்றறிந்த புலவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய நூல் "தொல்காப்பியம்" என்ற நிலைமையை மாற்றி அனைத்துத் தமிழர்களும் விரும்பிச் சுவைத்துப் படிக்கும் சூழலை ஏற்படுத்தியிருக்கிறீர்கள்.

தொல்காப்பியத்தின் சிறப்பை அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக, தங்களுக்கே உரிய அழகுத் தமிழில், உருவகக்கதைகளாக வடித்துத் தந்துள்ள தங்களின் இந்தத் தொண்டு தமிழர்களால் என்றென்றும் நன்றியோடு நினைவுகூரப்படும் என்பதில் ஐயம் இல்லை.

நூலினைத் திரும்பத் திரும்பப் படித்துச் சுவைத்தபோது நூறு மலர்களோடு நிறுத்திவிட்டீர்களே என்ற ஏக்கம்தான் ஏற்பட்டது.

சிறையிலிருந்தாலும் நினைவு கூர்ந்ததோடு தங்களின் பேரன்பினைப் பொதித்து நூலினை அனுப்பியமைக்கு என்றும் கடப்பாடுடையேன்.

தங்களை வாழ்த்தும் வயது எனக்கில்லை. தமிழன்னைக்கு மேலும் பல மலர்களைப் படைக்க வேண்டிக் கொண்டு, தங்களுக்குப் பல்லாண்டு! பல்லாண்டு! கூறுகிறேன்.

திரு. மாறன் அவர்கள் பூரண நலம் பெற்றுத் தாயகம் திரும்பி, தனது பணியில் தொடர விழைகிறேன்.

மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களுக்கும், தம்பி ஸ்டாலின் அவர்களுக்கும் எனது அன்பைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மீண்டும் எனது நன்றி!

அன்புள்ள,
பழ. நெடுமாறன்.

கடலூர் - சிறை,
14-2-03.

உடன்பிறப்பே,

யார் எழுதிய கடிதம்? எப்போது எழுதிய கடிதம் என்பதை இப்போது நீ புரிந்து கொண்டிருப்பாய்! இதைப்போல இன்னும் எத்தனையோ நண்பர்கள் எனக்கு உண்டு. ஆனால் அவர்களுக்கு நான் கனவில்கூட தீங்கு எண்ணாத நேரத்தில், அவர்கள் ஏன் தான் என் மீது ஒரு வெறுப்பை வளர்த்துக் கொண்டார்களோ, எனக்குத் தெரியாது! தேவையில்லாமல் என்னைத் திட்டி எழுதுகிறார்கள், பேசுகிறார்கள்! ஆனாலும் நான் முதலில் எழுதியபடி அவர்கள் மீது துவேஷத்தை வளர்த்துக் கொள்ளவில்லை. எப்படி இருந்தவர்கள், இப்படி மாறி விட்டார்களே, அதற்கு என்ன காரணம் என்று புரியாமல் இருக்கிறேன். இப்படிப்பட்டவர்களை நினைத்துத்தான் "சில நேரங்களில் சில மனிதர்கள்" என்று என் நண்பர் ஜெயகாந்தன் எழுதினாரோ?

அன்புள்ள,
மு.க.

13-5-2011

3563. இறுதிப் போரில் நாம் வெல்வது திண்ணம்!

உடன்பிறப்பே,

என்னைப் பற்றியும் - என் குடும்ப வாழ்க்கை மற்றும் பொது வாழ்க்கை ஆகியவைப் பற்றியும் - நேரம் வரும்போதெல்லாம் பலமுறை உனக்கும், உன் வாயிலாக ஊராருக்கும் சொல்லியிருக்கி றேன். இப்பொழுது சொல்லப் போவது அதைப் போன்ற "சுய புராணம்" அல்ல. சுய புராணத்தைத் தான் "நெஞ்சுக்கு நீதி" என்ற தலைப்பில் ஐந்து பாகங்கள் எழுதி முடித்திருக்கிறேனே! இப்பொழுது நான் எழுதப் போவதை அடுத்த பாகத்தின் முன்னுரை என்று கருதிக் கொண்டாலும் சரி - அதற்கிடையே எழுந்துள்ள "மன ஓலம்" என்று எண்ணிக் கொண்டாலும் சரி - இந்தச் சூழலில் இவற்றை நான் ஞாபகப்படுத்தியே தீர வேண்டும்.

நான் உயிரினும் மேலாகக் கருதும் நமது கழகம், பெரும் தோல்வியைச் சந்தித்து ஆட்சியை இழந்திருக்கும் கால கட்டம் இது. அந்த இழப்புக்கு எது காரணம்? இணைந்த கட்சிகளுக்கு வழங்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையா? அல்லது அவர்கள் வலியுறுத்தி வாங்கிக் கொண்ட தொகுதிகளின் கணக்கா? தமிழ்நாட்டிற்கென்றே தனியான "ஜபர்தஸ்து"களை - ஜனநாயக விரோதச் செயல்களை - சாட்டைகளாகக் கொண்டு - சர்வாதிகார "பாட்டை" வகுத்துக் கொண்ட தேர்தல் கமிஷன் எனும் பிரம்ம ராஷச பூதமா? என்ற கேள்விகளுக்கெல்லாம் நான் போக விரும்ப வில்லை. ஆனால் இந்தியாவிலேயே அல்லது தமிழ்நாட்டிலேயே அதிகாரச் செல்வாக்கைப் பெருக்கி - "ஆயிரம் கோடி, பத்தாயிரம் கோடி, இலட்சம் கோடி சம்பாதித்து மூட்டைகளாகக் கட்டி வைத்திருக்கிற குடும்பம், கருணாநிதியின் குடும்பம்" என்று தேர்தல் நேரத்தில் பிரச்சாரம் செய்தவர்கள், மழை விட்டும் தூறல் விடவில்லை என்பதைப் போல - இப்போதும்கூட அந்தப் பிரச் சாரத்தை ஏடுகள் வாயிலாக - ஏனைய ஊடகங்களின் வாயிலாக

கூறிக் கொண்டிருக்கிறார்களே, அவற்றை பொய்யுரை என்றும், புனைந்துரை என்றும், புளுகு மாயப் புழுதி மாயம் என்றும், என் தமிழ் மக்களுக்குப் புரிய வைக்க வேண்டும் என்பதற்காக சிலவற்றைத் தொகுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நான் பலமுறை கூறியுள்ளபடி செல்வச் செழிப்பான பெரும் தனவந்தர் குடும்பத்தில் நான் பிறந்தவன் அல்லன்! தஞ்சை மாவட்டத்தில் (தற்போது நாகை மாவட்டத்தில்) திருவும் வளமும் கொண்ட திருக்குவளை கிராமத்தில் - சுற்றிலும் சூழ்ந்திருந்த வயல்களில் கிடைத்த பயிரையும், நெல்லையும், அரிசியையும் பயன்படுத்திக் கொண்டு - ஒரு ஓட்டுவில்லை வீட்டில் விவ சாயியாகவும் - இசை மேதைகளில் ஒருவராகவும் இருந்த - முத்துவேல நாதசுரக்காரருக்கு மூன்றாவது பிள்ளையாக பிறந்தவன் நான்.

நான் உருண்டும் புரண்டும் தவழ்ந்தும் தள்ளாடி நடந்தும் பின்னர் திருவாரூர் பள்ளியில் பயின்றும் - அங்கு பெற்ற அறிவால் அந்த இளமையிலேயே அண்ணாவையும், பெரியாரையும் முறையே அரசியல் இயக்கத்திற்கும், அறிவு இயக்கத்திற்கும் வழிகாட்டிகளாக ஏற்றுக் கொண்டும் - சூடு தணியாத சுயமரியாதை உணர்வோடு பொது வாழ்க்கையைத் தொடங்கியவன் நான்.

பதினான்கு வயதிலேயே "பனகல் அரசரை"ப் படித்து - "படிக்க முடியாது கட்டாய இந்தியை" என்று மொழிப் போரில் புகுந்து - அதற்கு அடுத்தடுத்த தொடர்களங்கள் பலவற்றைச் சந்தித்து - ஐந்து முறை முதல் அமைச்சராகவும் - 12 முறை தமிழகச் சட்டப் பேரவை உறுப்பினராகவும் வெற்றி பெற்று - பொன் விழாக்கள், பவள விழாக்கள் கொண்டாடியும் கூட - இலக்கிய வேந்தர், கலைவேந்தர் என வேந்தர் பட்டங்களைப் பெற்றாலுங்கூட - விளைநிலங்களுக்குச் சொந்தக்காரன் என்றோ - வான் தொடும் மாளிகைகளுக்கு உரிமையாளன் என்றோ - அடுக்கி வைத்த பணப்பெட்டிகளுக்கு அதிபர் என்றோ என்னை நான் என்றைக்குமே ஆக்கிக் கொள்ள நினைத்ததும் இல்லை; அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டதும் இல்லை. அவற்றைத் தேடிக் கொள்ள திருட்டு வழியை தேடிக் கொண்டவனுமல்ல!

அப்படியானால் இத்தனை ஆண்டுக் காலம் கட்சிக்குப் பொருளாளராக - 42 ஆண்டுக் காலம் கட்சிக்குத் தலைவராக - 19

ஆண்டுக் காலம் ஆட்சிக்கு முதல்வராக இருந்த கால கட்டங்களில் எதுவுமே சம்பாதிக்கவில்லையா என்ற கேள்விக்கு நான் தரும் பதில் - ஆம்; சம்பாதித்தேன் - "தமிழுக்குத் தொண்டு செய்வோன்" - "தமிழ் வாழ தலையும் கொடுக்கத் துணிவோன்" - என்ற பட்டப் பெயர்களை, புகழுரைகளை நிரம்ப நான் சம்பாதித்தேன்.

என் எளிய வாழ்க்கையை நான் நடத்திட பொருளீட்டியதே இல்லையென்று புளுகிடும் துணிவு எனக்கில்லை - பொருளீட்டியது உண்டு - அந்தப் பொருளில் பெரும் பகுதியை வாழ்வின் இருளில் இருந்தோர்க்கு வழங்கியது உண்டு.

நான் முதலில் எழுதி, நானும் நடித்த "சாந்தா அல்லது பழனியப்பன்" எனும் நாடகத்தை - 1940களில் நூறு ரூபாய்க்கு விற்று - அந்தப் பணத்தை என் குடும்பச் செலவிற்கு மட்டுமல்லாமல், அடுத்த நாடகத்திற்கான முன் செலவுகளுக்கும், ஆரூர் நடிகர் கழக அமைப்புக்கும் அளித்தேன். அதைத் தொடர்ந்து கோவை ஜூபிடர் பிக்சர்ஸ் தயாரித்த "ராஜகுமாரி" படத்திற்கும் - சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்த "மந்திரி குமாரி", "தேவகி" போன்ற படங்களுக்கும் நான் வாங்கிய பணம் மாதச் சம்பளமாக இருந்ததால் - அந்த ஊதியத்தை, வருமான வரி போக மிச்சப் பணத்தைத்தான் தந்தார்கள்.

பின்னர் "பராசக்தி" - "மனோகரா" - "மலைக் கள்ளன்" - "இருவர் உள்ளம்" - "மருதநாட்டு இளவரசி" - "திரும்பிப் பார்" - "பணம்" - "நீதிக்குத் தண்டனை" - "இளைஞன்" என்றெல்லாம் தொடர்ந்து தற்போது "பொன்னர் - சங்கர்" வரையில் 76 படங்களுக்கு கதை வசனம் எழுதியிருக்கிறேன். சில படங்களுக்கு பாடல்களும் எழுதியிருக்கிறேன்.

திரு. பிரசாத் அவர்கள் இயக்கத்தில் உருவான "தாயில்லா பிள்ளை" மற்றும் "இருவர் உள்ளம்" படங்கள் - நூறு நாள் ஓடினால் மேலும் பத்தாயிரம் ரூபாய் தருவதாக - திரு. பிரசாத் அவர்கள் வாக்களித்து, அவ்வாறே நூறு நாள் அந்தப் படம் ஓடியதற்காக அவர்கள் தந்த பத்தாயிரம் ரூபாயைக் கொண்டு - என்னைப் பெற்றெடுத்த திருக்குவளையில் - "முத்துவேலர், அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி" கட்டி - அந்நாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்களைக் கொண்டு திறப்பு விழா நடத்தினேன்.

அப்பொழுது நான் எழுத்தாளர் மட்டுமல்ல - சட்டமன்ற உறுப்பினரும் கூட (எதிர்க்கட்சித் துணைத் தலைவராகவும்

இருந்தவன்). இதே போல நான் எழுதிய படங்கள் அனைத்திலும் பெற்ற ஊதியத்தில் - திருவாரூருக்கு அடுத்த காட்டூரில் சிறிதளவு நஞ்செய்நிலம் வாங்கவும் பயன்படுத்திக் கொண்டது போக மிச்சத்தை நலிந்தோருக்கே வழங்கினேன். காட்டூரில் ஆரம்பப் பள்ளிக் கூடக் கட்டிடத்திற்கு அப்போதே நிதியளித்து அந்தக் கிராமப் பகுதியில் கல்வி வளர்ச்சிக்கு உதவி புரிந்தேன்.

கட்சிக்குப் பொருளாளராக இருந்தபோது அண்ணா அவர்களின் ஆணைப்படி, தமிழகத்தில் ஊர்தோறும், நகர்தோறும், பட்டிதொட்டி, குக்கிராமம் என - செல்லாத இடமில்லை என்ற அளவிற்குச் சென்று - கழகக் கொடியேற்ற - கழகத்தினர் இல்லத்தில் உணவருந்த - என்பதற்கெல்லாம் கட்டணம் விதித்து - சென்னை விருகம்பாக்கம் கழக மாநாட்டில் அண்ணா அவர்களிடத்தில், மூதறிஞர் ராஜாஜி, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத், சிலம்புச் செல்வர் ம.பொ.சி., பொதுவுடைமை வீரர் பி. ராமமூர்த்தி, பார்வர்ட் பிளாக் இயக்கத்தைச் சேர்ந்த பி.கே. மூக்கையா தேவர் ஆகியோர் முன்னிலையில் 11 இலட்சத்தை தேர்தல் நிதியாக அளித்தேன்.

வெள்ள நிவாரண நிதி - புயல் நிவாரண நிதி - கைத்தறியாளர் கண்ணீர் துடைக்க நெசவாளர் நல்வாழ்வுக்காக நிதி - இப்படி எத்தனையோ நிதிகள் வழங்கியும் - வசூலித்து தந்தும் தொண்டாற்றியவன்தான் நான்.

2004-2005 ஆம் ஆண்டில் "மண்ணின் மைந்தன்" திரைப்படத்திற்காக 11 இலட்சம் ரூபாயும், "கண்ணம்மா" திரைப்படத்திற்காக 10 இலட்சம் ரூபாயும் - கிடைத்ததை - சுனாமி நிவாரணத் தொகையாக - அப்போதிருந்த முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் தம்பி மு.க. ஸ்டாலின் மூலமாக நேரடியாகக் கொடுக்கச் செய்தேன்.

9-7-2008இல் "உளியின் ஓசை" திரைப்படத்திற்காக எனக்குத் தரப்பட்ட 25 இலட்சம் ரூபாயில் ஏழு இலட்சம் ரூபாய் வருமான வரி போக - மீதத் தொகை 18 இலட்ச ரூபாயை - அன்று கலையுலகைச் சேர்ந்த நலிந்த கலைஞர்களுக்கு உதவி நிதியாக - கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் நேரடியாக வழங்கினேன்.

17-9-2009இல் "பெண் சிங்கம்" திரைப்படத்திற்காக எனக்கு 50 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. அந்தத் தொகையினை அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவித்

தொகையாக வழங்குவேன் என்று அறிவித்ததையொட்டி - அப்படி வழங்கப்பட வேண்டிய தொகை 61 இலட்சம் ரூபாய் என்று கூறிய போது - என்னுடைய சொந்த கையிருப்பு நிதி 11 இலட்சம் ரூபாயையும் சேர்த்து உதவி நிதியாக 29-10-2009 அன்று வழங்கினேன்.

27-4-2010 அன்று "இளைஞன்" திரைப்படத்துக்காக வருமான வரி போக 45 இலட்சம் ரூபாய் எனக்கு வழங்கப்பட்டது. அந்தத் தொகையினை முதலமைச்சர் நிவாரண நிதியிலே சேர்த்து - பிறகு மாற்றுத் திறனாளிகள் நல்வாழ்வுக்காக அந்தத் தொகை உதவி நிதியாக வழங்கப்பட்டது.

"பொன்னர் - சங்கர்" திரைப்படத்திற்காக 8-9-2009இல் 10 இலட்சம் ரூபாயும் - 6-6-2010இல் 12.5 இலட்சம் ரூபாயும் எனக்கு வழங்கப்பட்டது. இந்தப் படத்திற்காகத் தரப்பட வேண்டிய 25 இலட்சம் ரூபாயில் வரியாக 2.5 இலட்சம் ரூபாய் போக எஞ்சியத் தொகை 22.5 இலட்சம் ரூபாயாகும். இந்தத் தொகையிலிருந்து காவல் துறையிலே விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு பதக்கம் பெற்ற வீரர்களுக்கு வழங்கச் செய்தேன்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் திரு. தொல். திருமாவளவன் வழங்கிய 50 ஆயிரம் ரூபாய் நிதியினை முதலமைச்சர் பொது நிவாரண நிதியில் சேர்த்துள்ளேன்.

கழகத்தை தோற்றுவித்த தலைவர்கள் - தோன்றா துணைவர்களாக இருந்த தலைவர்கள் - உயிரினும் மேலான உடன்பிறப்புகளாம் தொண்டர்கள் - ஆகியோருக்கு குடும்ப நிதியாக - நல வாழ்வு நிதியாக அள்ளித் தந்தது ஆயிரம் ஆயிரம். அவை இன்றைக்கும் என்னுடைய பெயரால் அமைந்துள்ள அறக் கட்டளைகளின் சார்பில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

என்னுடைய ஒவ்வொரு பிறந்த நாள் நிகழ்ச்சிகளிலும், மாலைக்குப் பதிலாகவும், பொன்னாடைகளுக்குப் பதிலாகவும் வழங்கப்பட்ட நிதியினையும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலே சேர்த்திருக்கிறேன்.

ஈழத் தமிழர் நிவாரணத்திற்காக தமிழக அரசின் சார்பில் நிதி திரட்டப்பட்ட போது என்னுடைய சொந்தப் பொறுப்பில் 10 லட்சம் ரூபாயினை நன்கொடையாக வழங்கியிருக்கிறேன்.

"சன்" தொலைக்காட்சி நிறுவனத்தில் பங்குதாராராக இருந்த என் மனைவி தயாளு அம்மையார் அதிலிருந்து பிரிந்து வந்த வகையில் கிடைக்கப் பெற்ற 100 கோடி ரூபாயில் எனக்குக் கிடைத்த 10 கோடி ரூபாயில் ஐந்து கோடி ரூபாயினை பங்கீட்டுத் தொகையாக செலுத்தி, தி.மு.கழகத்தின் சார்பில் "கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை" ஒன்றினை கழகத்திலே உள்ள நலிந்தவர்களுக்கு உதவி செய்வதற்காக தொடங்கப்பட்டது.

11-1-2007 அன்று நடைபெற்ற 30வது புத்தகக் கண்காட்சி விழாவில் நான் பேசும்போது - இந்த 5 கோடி ரூபாயிலிருந்து - தென்னிந்திய புத்தக விற்பனையாளர்-பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் நன்கொடையாக வழங்கப்படும் என்று அறிவித்து - அவ்வாறே அந்தச் சங்கத்துக்கு அந்தத் தொகை வழங்கப்பட்டது. அந்தத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு - அந்தச் சங்கத்தின் சார்பில் - ஆண்டுதோறும் நல்ல புத்தகங்களை, சமுதாய சீர்திருத்த கருத்துகள் தாங்கிய புத்தகங்களை எழுதும் சிறந்த எழுத்தாளர்கள், வெளியிடும் பதிப்பாளர்கள் ஐந்து பேரை தேர்வு செய்து, தலா ஒரு இலட்சம் பொற்கிழி வழங்கிடக் கூறியுள்ளேன். இந்த ஒரு கோடி ரூபாய் நிதியைக் கொண்டு - "கலைஞர் மு. கருணாநிதி பொற்கிழி அறக்கட்டளை" என்ற பெயரில் அறக் கட்டளை ஒன்று பதிப்பாளர் சங்கத்தின் சார்பில் நிறுவப்பட்டு - இதுவரை 17 அறிஞர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் பொற்கிழிகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

தி.மு. கழகச் சார்புடைய "கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை"க்கு நான் கொடுத்ததில் எஞ்சிய நான்கு கோடி ரூபாய்க்கு மாதந்தோறும் கிடைக்கின்ற வட்டித் தொகையிலிருந்து - கழகத்திலே உள்ள நலிந்தவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2005 நவம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு மே மாதம் வரை 2337 பேருக்கு மொத்தம் 2 கோடியே 1 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளன. இந்த உதவித் தொகை தற்போதும் ஒவ்வொரு மாதமும் தரப்பட்டு வருகிறது.

"சன்" தொலைக்காட்சியிலிருந்து எனக்கென்று கிடைத்த 10 கோடி ரூபாயில் - "கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை"க்கு அளித்த 5 கோடி ரூபாய் போக - எஞ்சிய 5 கோடி ரூபாய்

வங்கியில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டுள்ளது. அந்த வைப்பு நிதிக்கு கிடைத்த வட்டித் தொகையிலிருந்து ஒரு கோடி ரூபாயை நன்கொடையாக தமிழ்ச் செம்மொழி நிறுவனத்திற்கு 26-7-2008 அன்று வழங்கி - அந்தத் தொகையிலிருந்து கல் வெட்டியல், தொன்மையியல், நாணயவியல் ஆகிய பிரிவுகளில் ஆராய்ச்சி செய்யும் சான்றோர்களுக்கு விருது வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிறேன்.

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் போது - முதன்முறையாக இந்த விருது - பின்லாந்து நாட்டு தமிழ் அறிஞர் - அஸ்கோ பர்போலா அவர்களுக்கு - பத்து இலட்ச ரூபாய் பொற்கிழியாக - நன்கொடையுடன் வழங்கப்பட்டது.

இதற்கெல்லாம் மேலாக சென்னை கோபாலபுரத்தில் நான் தற்போது வாழ்ந்து வரும் என்னுடைய வீட்டைக் கூட ஏழையெளியோர்க்குப் பயன் படும் வகையில் ஒரு மருத்துவமனையாக மாற்றி அளிப்பேன் என்றும் அறிவித்து, அதற்கான முறையான பத்திரப் பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன.

"சன்" தொலைக்காட்சி நிறுவனத்தில் திருமதி தயாளு அம்மாள் பங்குதாராராக இருந்து பிரிந்ததையொட்டி 18-10-2005 அன்று "சன்" தொலைக்காட்சி நிறுவனத்தால் தரப்பட்ட தொகை 100 கோடி ரூபாயில் - 22.5 கோடி ரூபாய் வருமான வரியாக முறைப்படி செலுத்திய பின் எஞ்சிய தொகையான 77.5 கோடி ரூபாய் பகிர்ந்து கொள்ளப்பட்ட போது - என் இளைய மகள் கனிமொழி தனக்குக் கிடைத்த 2 கோடி ரூபாயை பங்குத் தொகையாக செலுத்தி, கலைஞர் தொலைக் காட்சியில் ஒரு பங்குதாராராக இருக்கச் சொல்லி நான்தான் வலியுறுத்தினேன். கனிமொழி அதை விரும்பாவிட்டாலுங்கூட, அப்பா சொல்கிறாரே என்று அதற்கு ஒப்புதல் அளித்த ஒரு குற்றத்தைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. எந்த ஒரு நிறுவனத்திலும் பங்குதாரர்களாக இருப்பவர்கள் இலாபமோ, நட்டமோ அந்த இரண்டில் ஒன்றுக்கு பங்குதாராராக ஆகி விடுவது பொதுவான விஷயம். ஆனால் அந்த நிர்வாகத்தின் ஒவ்வொரு நாள் நடவடிக்கைக்கும் அனைத்துப் பங்குதாரரும் பொறுப்பாக ஆவதில்லை.

டெல்லி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் கனிமொழிக்காக வாதாடிய பிரபல வழக்கறிஞர் திரு. ராம் ஜெத்மலானி அவர்கள் ஒரு நிறுவனத்தில் நடை பெறுகிற வரவு செலவு - கொடுக்கல் வாங்கல் - இவற்றில் எல்லாம் அந்த நிர்வாகத்தின் பங்குதாரர்கள் பொறுப்பேற்க வேண்டியவர்கள் என்று விதிமுறை இல்லை என்பதை தெளிவாகச் சுட்டிக் காட்டிய பிறகும் கூட; - கலைஞர் தொலைக்காட்சி நிர்வாகத்தின் நிர்வாகி தம்பி சரத் குமாரையும் - என் மகள் கனிமொழியையும் ஜாமீனில் விட மறுத்து சிறைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

என் மீதும், என் குடும்பத்தினர் மீதும் வஞ்சம் தீர்த்துக் கொள்ளும் படலத்தை வஞ்சனையாளர்கள் சிலர் கூடி - வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ள போதிலுங்கூட - அத்துடன் நிம்மதி அடையாது, நாங்கள் வாழ்ந்த இடம், வாழும் இடம், நம் இரு வண்ணக் கொடி பறக்கும் இடம் அனைத்தும் தரை மட்டமாகி - புல் முளைத்த இடமாகப் போக வேண்டும் என்று - அதுவும் "தர்ப்பைப் புல்" முளைத்த இடமாகப் போக வேண்டு மென்று - குமரி முனையிலிருந்து இமயக் கொடு முடி வரையிலே உள்ளவர்கள் தவம் கிடக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாமல் இல்லை.

உடன்பிறப்பே,

உனக்கும் இந்த உண்மைகள் தெரிய வேண்டும் என்பதற்காகத்தான் - உன் தமையன் நான் "சுயபுராணம்" இது என்றாலும் - சுயமரியாதைப் புதினமாக இதைக் கருதி - இந்தக் கடிதத்தின் தொடக்கத்திலிருந்து முடிவு வரையில் ஒவ்வொரு வரியாக நீ படித்து - சிந்தித்து - புரிந்து கொண்டு - செயல்படுத்துவாயானால் தன்மானக் கழகமாம் தமிழர் நலம் தேடும் இந்தப் பாசறை - அறப்போர்க் கணைகளை ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் வடிவில் - தம்பி தங்கையர் உருவில் - நடமாட விடுவார்கள் என்பது என் எண்ணம் - அந்த அறப்போர் இறுதிப் போராகி - நாம் வெல்வது திண்ணம்.

அன்புள்ள,

மு.க.

22-5-2011

3564. “ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை!”

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடந்த காலங்களில் பல இலவசத் திட்டங்களை நடைமுறைப்படுத்திய போது, அதன் காரணமாக மக்களின் வாழ்க்கையையே பாழாக்குகிறார் என்றும், மக்களைத் தாங்களாக முன்னேற விடாமல் சோம்பேறி யாக்குகிறார் என்றும் சில எதிர்க்கட்சியினரும் ஏடுகள் நடத்தும் சிலரும் கண்டனக்கணைகளை என் மீது பொழிந்தார்கள். ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா இலவசமாக இருபது கிலோ அரிசி வழங்குகின்ற திட்டத்தைத் தொடங்கும்போது அதைப் போற்றுகிறார்கள், பாராட்டுகிறார்கள்.

தேர்தலுக்கு முன்பு அப்போது முதலமைச்சராக இருந்த என்னிடம் கடந்த மார்ச் திங்கள் இறுதியில் சி.என்.என். ஐ.பி.என் சார்பில் பேட்டி கண்டபோது, தேர்தல் அறிக்கையில் அறிவித்த இலவசத் திட்டங்களைப் பற்றி ஒரு கேள்வி கேட்டார்கள். “தேர்தல் அறிக்கையில் பல இலவசத் திட்டங்களை அறிவிக்கின்றீர்கள். 2006ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் இலவசக்கலர் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினீர்கள். தற்போது லேப்டாப், கிரைண்டர் போன்றவைகளை தேர்தல் அறிக்கையில் இலவசமாக வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். தேர்தலில் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பது இலவசச் சலுகைகளை அளிப்பதாக வாக்குறுதி கொடுப்பதுதான் என்று கூறப்படுவதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?” என்று கேட்டபோது நான் அளித்த பதிலில், “இலவச சலுகைகள் என்பது வாக்குகளைப் பெறுவதற்காக அல்ல - ஏழையெளிய மக்கள் தமிழகத்தில் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களை வாழ வைக்க வேண்டும் என்ற குறிக்கோள் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு இன்று

நேற்றல்ல - இந்த இயக்கத்தைத் தொடங்கியதே அந்த ஏழைகளை வாழவைப்பதற்காகத்தான். "ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்" என்பதுதான் எங்கள் தலைவர் அண்ணா அவர்களுடைய முழக்கம். அந்தச் சிரிப்பைக் காண்பதற்காகத்தான் - ஏழைகளின் முகங்களிலே அந்தச் சிரிப்பைக் காண்பதற்காகத்தான் - நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற முயற்சிகளில் இந்த இலவசத் திட்டங்களும் ஒன்றாகும்" என்று கூறினேன்.

"ஈயத்தைப் பார்த்து இளித்ததாம்....." என்ற தலைப்பில் "தினமணி" 25-3-2011 அன்று வெளியிட்ட தலையங்கத்தில், "சாலையோரம் கடை விரித்த ஒருவர், "ரெண்டு வாங்கினா ஒண்ணு இலவசம்" என்று கூவி நுகர்வோரைக் கவர முயன்றால், எதிரே அதே பொருள்களைக் கடை விரித்திருக்கும் மற்றொருவர் "ஒண்ணு வாங்கினா ஒண்ணு இலவசம்" என்று கூவினால் எப்படி இருக்கும்? அது போலத்தான் இருக்கிறது அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கை! அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையைப் பற்றிச் சொல்வதென்றால், தி.மு.க. தேர்தல் அறிக்கையில் முதல்வர் கருணாநிதி சொல்லியிருப்பதை விட அதிகமாக நான் இலவசங்களை அள்ளித்தருகிறேன் என்று ஜெயலலிதா சொல்லியிருக்கிறார் என்று ஒரே வரியில் முடித்து விடலாம்.

2006 தமிழகச் சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. வின் தேர்தல் அறிக்கை இலவச டி.வி., சமையல் எரிவாயு பற்றிக் குறிப்பிட்ட போது, இத்தகைய இலவசங்களை முழுமையாக எதிர்த்தவர் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா. ஆனால், அந்தத் தேர்தலில் அவர் தோல்வியைச் சந்திக்க நேர்ந்தது" என்று ஜெயலலிதாவும் இலவசங்களை எதிர்த்தவர்தான் என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது. அந்த ஜெயலலிதா தான் தற்போது ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக இலவச அரிசி திட்டத் தொடக்க விழாவிலே கலந்து கொண்டிருக்கிறார்.

தினமணி நாளிதழில் வெளிவந்துள்ள ஒரு கட்டுரையில் இலவசத் திட்டங்களை தி.மு. கழக அரசு நிறைவேற்றுவதற்காக அதிக அளவில் கடன் வாங்குவதாக எழுதியிருந்தது. தமிழக அரசு வாங்கியிருக்கின்ற கடன்கள் பற்றி நான் முதல்வர் பொறுப்பிலே இருந்தபோதே பல முறை விளக்கமாக எழுதியிருக்கிறேன்.

பேரவையிலும் நிதி அமைச்சர் பேராசிரியர் நிதிநிலை அறிக்கைக்கு பதிலளித்தபோது தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார். இருந்தும் தி.மு. கழக அரசாங்கத்தைக் குறை கூறும் நோக்கத்தோடு தினமணி தாக்கி கட்டுரை வெளியிட்டிருந்தது. ஆனால் அதே ஏடு அ.தி.மு.க. அரசு அறிவிக்கும் இலவசத் திட்டங்களைப் பற்றி தற்போது வாயைத் திறக்கவில்லை என்பதை தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

ஓர் அரசாங்கத்திற்கு எப்படியாவது கடன் வாங்கியே தீரவேண்டும் என்பது நோக்கமல்ல. தி.மு. கழகம் பொறுப்பிலே இருந்தபோதுள்ள நிதி சூழ்நிலையில், அரசாங்கம் மக்களுக்காக நல்லபல திட்டங்களைத் தீட்ட வேண்டுமேயானால், கடன் வாங்கித்தான் அந்தத் திட்டங்களைத் தீட்ட வேண்டிய நிலையிலே இருந்தது என்பதுதான் உண்மை. மேலும் தமிழக அரசைப் பொறுத்தவரையில் இலவசத் திட்டங்களுக்காக கடன் வாங்கவில்லை என்றும், கட்டுமானப் பணிகள் போன்ற மூலதனச் செலவுகளுக்காக மட்டுமே கடன் வாங்கியது என்றும், அதுவும் எந்தெந்த திட்டங்களுக்காக எவ்வளவு கடன் யார் யாரிடமிருந்து வாங்கப்பட்டுள்ளன என்ற விவரங்களை யெல்லாம் நான் விரிவாகவும், விளக்கமாகவும் அப்போது எழுதியதை; "தினமணி" போன்ற நாளிதழ்கள் படிக்காமலேயே பொத்தாம் பொதுவில் கழக அரசைத் தாக்கி எழுதி யிருந்தது.

மேலும் கழக ஆட்சியில் மத்திய அரசு கூறியுள்ள அந்தக் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் கடன் வாங்கப்பட்டது, அதுவும் அத்தியாவசியப் பணிகளுக்காகத்தான் வாங்கப்பட்டுள்ளது என்பதை அந்தக் கட்டுரையாளர் புரிந்து கொள்வது நல்லது.

மேலும் ஜெயலலிதா பொறுப்புக்கு வந்தவுடன் எதற்கெடுத்தாலும் தி.மு. கழக அரசு ஒரு இலட்சம் கோடி கடனை வைத்துள்ளது, அதனை சரி செய்ய வேண்டும் என்றெல்லாம் தொடர்ந்து சொல்லி வந்தார். ஆனால் நிதித்துறை பொறுப்பிலே உள்ளவர்கள் அதற்கான விளக்கத்தை அளித்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

ஏழை எளிய மக்கள், ஆதரவற்றவர்கள், முதியோர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு அரணாக இருந்து செயல்பட பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தும்

பொறுப்பு மக்கள் நலன் மீது அக்கறை கொண்ட அனைத்து அரசுகளுக்கும் உண்டு. வளர்ச்சி அடைந்த ஐரோப்பிய நாடுகளில் கூட இலவசக் கல்வி, முதியோர் பென்ஷன், வேலைவாய்ப்பற்றவர்களுக்கு உதவித் தொகை, உணவுக் கூப்பன், தேசிய சுகாதாரப் பாதுகாப்பு போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சில நாடுகளில் ஏழைகளுக்கு நேரடியாகவே பணமாகவும் உதவிகள் வழங்கப்படுகின்றன.

இதன் அடிப்படையில்தான் தமிழ்நாட்டிலும் தி.மு. கழக அரசு, உணவுப் பாதுகாப்பை அளிக்கும் வகையில் ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு இலவச வேட்டி சேலை, உணவு உற்பத்தியைப் பெருக்கும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், முதியோர் மற்றும் ஆதரவற்றவர்களுக்கு ஓய்வூதியம், ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகை, ஏழைகளுக்கு உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டம், குடிசையில் வாழும் மக்களுக்கு கான்க்ரீட் வீடுகள், பள்ளிகள் கல்லூரிகள், தொழிற்கல்வி வரை இலவசக் கல்விக் கட்டணம் போன்ற எண்ணற்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வந்தது.

தி.மு. கழக அரசு நடைமுறைப்படுத்தி வந்த ஒரு சில திட்டங்களைத்தான் தற்போது அ.தி.மு.க. அரசு சற்று விரிவாக்கம் செய்து நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது. குறிப்பாக தி.மு. கழக அரசு 2006ஆம் ஆண்டு ஏற்பட்ட போதுதான் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் என்று அறிவித்து, தொடங்கி பிறகு சில மாதங்களுக்குப் பின் அந்தத் திட்டத்தையே மேலும் விரிவுபடுத்தி ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கப்படும் என்று அறிவித்து நடைமுறைப்படுத்தி வந்தது. அந்தத் திட்டத்தையேதான் தற்போது ஜெயலலிதா அரசு ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் வீதம் ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு 20 கிலோ அரிசி 20 ரூபாய்க்கு வழங்கப்பட்டதற்கு மாறாக தற்போது அதே 20 கிலோ அரிசியை 20 ரூபாய் வாங்காமலே இலவசமாக வழங்குவதாக அறிவித்திருக்கிறார்.

தி.மு. கழக அரசு ஆட்சியிலே இருந்தபோது இதே முறையில் 20 கிலோ அரிசியினை இலவசமாக மக்களுக்கு வழங்கலாமா என்று அதிகாரிகளுடன் கலந்தாலோசித்த போது, ‘‘ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் வீதம் வழங்கும் போதே, எதிர்க்கட்சிகள் எல்லாம்

கண்டித்துப் பேசுகின்ற நேரத்தில் இலவசமாகவே அரிசியை வழங்குவது நல்லதல்ல" என்று கருத்து தெரிவித்தார்கள் என்பதை மனச்சாட்சியுள்ள அந்த அதிகாரிகள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கான திருமண உதவித் திட்டமும் தி.மு. கழக அரசின் திட்டம்தான். அந்தத் திட்டத் தொகையைத்தான் அ.தி.மு.க. அரசு அதிகமாக்கி தற்போது அறிவித்திருக்கிறார்கள்.

இது தவிர, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் திட்டங்களான இலவச சமையல் எரிவாயு திட்டம், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களும் தி.மு. கழக அரசால் செயல்படுத்தப்பட்டு வந்தன. இத்திட்டங்களையெல்லாம் இலவசத் திட்டங்கள் என்றும் இவை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு விளைவிப்பவை என்றும் கண்டித்துப் பேசியவர்கள் எல்லாம் தற்போது இந்தத் திட்டங்களை நடைமுறைப்படுத்த முன்வந்திருப்பதைப் பார்க்கும்போது, எப்படியோ தி.மு. கழக அரசு செய்யத் தொடங்கிய சாதனைகள் நல்லவேளை நிறுத்தப்பட்டு விடாமல் தொடருகிறதே என்று அந்த இலவச உதவிகளைப் பெறுவோர் எண்ணிப் பார்ப்பார்கள் என்று நம்பலாம்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தொடக்கத்திலேயே பயன்தந்துவிடும் எனக் கருத முடியாது. பல்வேறு சமூகநலத் திட்டங்கள் மூலம் உதவிகள் வழங்கப்படுவதால்தான் ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தில் உள்ள இடைவெளி குறைக்கப்பட்டு ஏழைகளும், பொருளாதார முன்னேற்றம் பெறுவதற்கு ஒரு வாய்ப்பு அவர்களுக்கு ஏற்படுகிறது. உதாரணமாக தி.மு. கழக அரசு இலவசக் கல்வியை முதல் தலைமுறை மாணவர்களுக்கு தொழிற்கல்வி வரை நீட்டித்ததால் 2005-2006 ஆம் ஆண்டில் கல்லூரிகளிலும் பாலிடெக்னிக்குகளிலும் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 2.85 இலட்சத்திலிருந்து 2010-2011 ஆம் ஆண்டில்

6.9 இலட்சமாக உயர்ந்தது. கழக அரசு வழங்கி வந்த ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி மற்றும் மானிய விலையில் பருப்பு, எண்ணை போன்ற பொருள்களுக்கு ரூபாய் 4000 கோடி

செலவிட்டதால்தான் ஏழைக் குடும்பங்கள் விலைவாசி உயர்வின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு உணவுப் பாதுகாப்பைப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன், பட்டினிச் சாவு தமிழகத்தில் கழக ஆட்சியிலே இல்லை என்ற நிலை உருவாகியிருந்தது.

அதேபோல் கடந்த 5 ஆண்டுகளில் தி.மு. கழக ஆட்சியில் ஏழைப் பெண்களின் திருமண உதவித் திட்டத்திற்கு ரூபாய் 922 கோடியும், பல்வேறு ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூபாய் 4251 கோடியும் என பல திட்டங்களின் வாயிலாக வழங்கப்பட்ட இந்த நிதியுதவி ஏழை மக்களைச் சென்றடைந்துள்ளது. சுமார் 2 இலட்சத்து 62 ஆயிரம் ஏழைகள் உயர் சிகிச்சையை இலவசமாகப் பெற்றுள்ள காப்பீட்டுத் திட்டம், பல உயிர்களைக் காத்துவரும் 108 ஆம்புலன்ஸ் திட்டம் போன்ற திட்டங்களை எல்லாம் அ.தி.மு.க. அரசு முன்பிருந்த அதே வேகத்தோடு நடத்தப் போகிறார்களா? அல்லது அதையும் தலைமைச் செயலகத்தைப் போல தமிழ்ச் செம்மொழி மையத்தைப் போல - சமச்சீர் கல்வித் திட்டத்தைப் போல நிறுத்தப் போகிறார்களா என்பதெல்லாம் இனிமேல்தான் தெரியும்.

இத்தகைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைப் புறக்கணித்துவிட்டு வளர்ச்சித் திட்டங்களை மட்டும் ஒரு அரசு செயல்படுத்தினால் ஏழை எளிய மக்களின் நலனைப் புறக்கணிக்கும் அரசாகவே அந்த அரசு இருக்கும்.

இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதால் தான் அரசுக்குக் கடன் சுமை ஏறியுள்ளது என்ற வாதமும் சரி அல்ல. ஒரு அரசு அதன் வளர்ச்சித் திட்டங்களுக்கும், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் கடன் வாங்குவது என்பது ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே பல முறை தெளிவுபடுத்தப்பட்டுள்ளபடி அமெரிக்கா போன்ற நாடுகளும், ஐரோப்பிய நாடுகளும் கூட கடன் பெற்று திட்டங்களைச் செயல்படுத்துகின்றன. இந்தியாவில் பிற மாநிலங்களும் கடன் பெற்றுத்தான் வளர்ச்சித் திட்டங்களையும், சமூகநலப் பாதுகாப்புத் திட்டங்களையும் செயல்படுத்துகின்றன. பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டிற்கு உள்ள கடன் பொறுப்பு மிகக் குறைவானது என்பது பலமுறை தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசு நிர்ணயித்த அளவுப்படி ஒரு மாநிலத்தின் கடன் பொறுப்பு அந்த மாநிலத்தின் உற்பத்தி மதிப்பில் 25 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டின் கடன்

பொறுப்பு 19.58 சதவீதம் அளவிற்கே உள்ளது.

மேலும், அரசு பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை 2006-2007 முதல் தொடர்ந்து செயல்படுத்தி வந்தாலும் 2008-2009 வரை மாநிலத்தின் வருவாய் வரவு வருவாய் செலவை விட அதிகமாகவே இருந்தது. 2009-2010 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் வருவாய் பற்றாக்குறை ஏற்படக் காரணம் வரி வருவாய் குறைந்ததும், அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட திருத்திய சம்பள விகிதமும்தான். அதுவும் வரும் ஆண்டுகளில் மீண்டும் வருவாய் உபரியை எட்டும் நிலையில் தமிழக அரசின் நிதி நிலை வலுவாகவே அமையும். எனவே, இலவச திட்டங்களால் தான் தமிழக அரசின் கடன் சுமை ஏறிவிட்டது என்ற ஒரு பொய்ப் பிரச்சாரம் ஏழை மக்களுக்கு இத்தகைய நலத்திட்ட உதவிகளை அரசு வழங்குவதற்கு ஒரு இடையூறு ஏற்படுத்தும் முயற்சியாகவே உள்ளது.

"தினமணி" நாளிதழ் தனது தலையங்கத்தில் "ஒரு புறம் உபரி, மறுபுறம் கடன்" என தி.மு. கழக ஆட்சியிலே இருந்த நிதி நிலைமை பற்றி விமர்சனம் செய்தது. தமிழக அரசின் கடன் பொறுப்புகள் பற்றி இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பக்கம் 55 பத்தி 4-ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. **அ.தி.மு.க. ஆட்சியில் 31.3.2006 ஆம் நாளன்று தமிழக அரசின் மொத்த கடன் பொறுப்பு ரூபாய் 57457 கோடி என்பது அப்போதைய மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 22.29 சதவீதம் ஆகும். 2010-11 ஆம் ஆண்டில் அரசின் மொத்த கடன் பொறுப்பு ரூபாய் 101541 கோடியாக உயர்ந்திருந்தபோதிலும், இது மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 19.58 சதவீதம் மட்டுமே எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.**

மத்திய நிதிக் குழுவும், மத்திய அரசும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதன் மொத்த உற்பத்தியில் 25 சதவீதம் வரை கடன் பொறுப்புகளை வைத்துக் கொள்ளலாம் என அனுமதித்துள்ளது. எனவே தமிழக அரசின் கடன் பொறுப்பு மத்திய அரசால் அனுமதிக் கப்பட்ட அளவிலேயே உள்ளது.

தமிழக அரசால் பெறப்பட்ட கடன்கள் எதுவும் ஊதாரித்தனமாக செலவிடப்படவில்லை. இவை அனைத்தும் மூலதனப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளன. 2006-07 ஆம்

ஆண்டு முதல் 2010-11 ஆம் ஆண்டு வரை இந்த மாநில அரசின் கடன் தொகை ரூபாய் 44083 கோடியாகும். இதே காலகட்டத்தில் தி.மு. கழக அரசு மூலதனப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை ரூபாய் 44666 கோடியாகும். கடன் பெற்று இலவசத் திட்டங்களை தி.மு.க. அரசு செயல்படுத்துகிறது என்பது தவறான கருத்து. அ.தி.மு.க ஆட்சியிலிருந்தபோது அதாவது 2001-02 முதல் 2005-06 வரை மொத்தமாக பெறப்பட்ட கடன் ரூபாய் 28721 கோடி. இதே காலகட்டத்தில் அ.தி.மு.க. அரசால் மூலதனப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை ரூபாய் 15613 கோடிதான்.

தி.மு.கழக அரசு உலக வங்கியிடமிருந்து கடன் பெற்று ரூபாய் 2442 கோடி மதிப்பீட்டில் சாலைகள் அபிவிருத்தி திட்டம், ரூபாய் 1224 கோடி மதிப்பீட்டில் சுகாதாரத் திட்டம் போன்ற மூலதனப் பணிகளை மேற்கொண்டது. அதேபோல் ஜப்பான் நாட்டு நிதியுதவி பெற்று ரூபாய் 1928 கோடியில் ஒகனேக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம், நபார்டு வங்கியின் மூலம் ஊரக சாலைகள், நீர்பாசன நிலைகள் அபிவிருத்தி, அடிப்படை கட்டமைப்பு வசதிகள் போன்ற பணிகளுக்காக கடந்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 4113 கோடியும் கடன் பெற்று மூலதனப் பணிகளைத்தான் கழக அரசு மேற்கொண்டுள்ளது. எனவே பொறுப்போடுதான் கடனைப் பெற்று தி.மு. கழக அரசு மூலதனப் பணிகளுக்காக செலவு செய்து வருகிறது என்பதை அனைவரும் புரிந்து கொள்ளலாம்.

தமிழகத்தின் நிதிநிலை குறித்து மத்திய நிதி அமைச்சர் திரு.பிரணாப் முகர்ஜி அவர்கள் 9.4.2011 அன்று சென்னையில் கூறும்போது

‘‘13வது நிதி ஆணையம் அண்மையில் தாக்கல் செய்த அறிக்கையில், எந்த மாநிலமும் 2011-12ஆம் ஆண்டில் அதன் ஒட்டுமொத்த மாநில உற்பத்தியில் 3 முதல் 3.5 சதவிகிதத்திற்குமேல் கடன் வாங்கக் கூடாது என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. தமிழக அரசின் கடன் அளவு, பரிந்துரைக்கப்பட்ட அளவைவிட மிகவும் குறைவாகவே உள்ளது.

இந்தியாவில் நிதி ஒழுங்கையும், நிலைத் தன்மையையும் திருப்திகரமாகக் கடைப்பிடித்துவரும் ஒருசில மாநிலங்களுள் தமிழகமும் ஒன்றாகும்.

011ஆம் ஆண்டு மார்ச் 24ஆம் தேதிய நிலவரப்படி, தமிழக அரசின் ரொக்கக் கையிருப்பு 13 ஆயிரத்து 537 கோடி ரூபாயாகும். இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து ஒருநாள் கூட தன் கணக்கில் பணம் இல்லாமல், கூடுதல் வரைவுத் தொகையைத் (over draft) தமிழக அரசு பெற்றதில்லை. ஆனால், பல மாநிலங்கள் கூடுதல் வரைவுத் தொகையைப் பெற்றுள்ளன''

என்று தெரிவித்திருப்பதையும் கவனித்தால் தி.மு. கழக ஆட்சியில் அளவுக்கு மீறி கடன் வாங்கவில்லை என்பதையும், கடன் வாங்கி கழக அரசு இலவசத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றவில்லை என்பதையும் புரிந்து கொள்ளலாம்.

அன்புள்ள,

மு.க.

3-6-2011

3565. இன்று நடப்பது; அன்றே நடந்ததுதான்!

உடன்பிறப்பே,

10.6.2011 அன்று மாலையில் அண்ணா அறிவாலயம், முரசொலிமாறன் வளாகத்தில் கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பத்து தீர்மானங்களின் நகல்கள் எடுக்கப்பட்டு, கழக அமைப்புச் செயலாளர் மூலமாக செய்தியாளர்களுக்கு உடனடியாக வழங்கப்பட்டுவிட்டன. கூட்டம் முடிந்து புறப்படுகின்ற நேரத்தில் செய்தியாளர்கள் காத்திருக்கிறார்கள். பார்க்கிறீர்களா என்று கேட்டபோது, தீர்மானங்களைக் கொடுத்து விட்டீர்கள் அல்லவா, பிறகு எதற்காக என்று நான் திரும்பக் கேட்டேன். பத்திரிகையாளர்கள் உங்களிடம் சில கேள்விகளைக் கேட்பதற்காக காத்திருக்கிறார்கள் என்று சொன்னவுடன், நான் அதற்குச் செவிசாய்த்து செய்தியாளர்கள் அறைக்குச் சென்றேன். எப்போதும் கலந்து கொள்கின்ற செய்தியாளர்களைப்போல இரண்டு மடங்கு கூட்டம் அங்கே! அந்தச் செய்தியாளர்கள் கூட்டத்தில் எப்போதும் வராத ஒருசில செய்தியாளர்களும் வந்திருப்பதைப் பார்த்ததும், எதற்கோ அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

“நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டுள்ளன. அதில் ஏதாவது, அந்தத் தீர்மானங்களைப் பற்றியோ அல்லது அவற்றின் தொடர்பாகவோ ஏதாவது கேட்கவேண்டுமென்றால் கேளுங்கள், பதில் கூறுகிறேன்” என்று சொன்னேன்.

அதைத் தொடர்ந்து அந்தச் செய்தியாளர்கள் கூட்டத்தில் 31 கேள்விகள் கேட்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் நான் அளித்த பதில் ஏடுகளில் வந்துள்ளது. அந்த 31 கேள்விகளில் ஒருசிலவற்றை மட்டும் நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

1. மத்திய அரசு, சி.பி.ஐ. நிறுவனத்தை ஒரு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

2. திருவாரூரில் நீங்கள் பேசும்போது கனிமொழி மீது போடப்பட்டுள்ள வழக்கு மத்திய அரசால் போடப்பட்ட வழக்கு என்று சொன்னீர்களே, அதைப்பற்றி உங்கள் தீர்மானத்தில் ஏன் சொல்லவில்லை?

3. "கூடா நட்பு" என்று சொன்னீர்களே, அதை யாரைப் பற்றி?

4. உங்கள் கட்சியிலே உள்ள பெரும்பான்மையான தொண்டர்கள் காங்கிரஸ் கட்சியுடன் உறவைத் தொடரக் கூடாது என்று விரும்புகிறார்களே?

5. உங்கள் பொதுக்குழுவில் காங்கிரஸ் கட்சியோடு தி.மு.க. கொண்டுள்ள உறவு தொடருமா, தொடராதா என்ற முடிவினை எடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கலாமா?

6. காங்கிரஸ் கட்சியுடன் உறவு தொடர வேண்டுமா என்ற கேள்வி தொண்டர்கள் மத்தியில் இருக்கிறதே, அதற்கு என்ன பதில்?

7. காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகை ஒன்றில் 2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம் தான் தேர்தல் தோல்விக்குக் காரணம் என்று எழுதியிருக்கிறார்களே?

8. ஸ்பெக்ட்ரம் பிரச்சினை இந்தத் தோல்விக்குக் காரணமா; இல்லையா?

9. பா.ஜ.க. வுடன் நீங்கள் செல்லப் போவதாக டெல்லியில் சொல்கிறார்களே?

10. சி.பி.ஐ. மூன்றாவது குற்றப்பத்திரிகையில் தயாநிதி மாறன் பெயர் இடம் பெறப்போவதாகச் செய்தி வந்திருக்கிறதே?

11. தயாநிதிமாறன் பதவி விலக வேண்டுமென்று சொல்கிறார்களே?

12. தயாநிதிமாறனை நீங்கள் ஆதரிக்க வில்லையே?

13. வெங்கைய நாயுடு நெருக்கடி நிலை மீண்டும் வரும் என்று சொல்லியிருக்கிறாரே, அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

14. நீங்கள் ஜூலையில் கூட்டுகின்ற பொதுக் குழு மத்திய அரசுக்கு நீங்கள் வைத்துள்ள காலக் கெடு என்று எடுத்துக் கொள்ளலாமா?

15. காங்கிரஸ் கட்சி தி.மு.க.வை என்றைக்கும் மதித்ததில்லை என்று கூறுவீர்களா?

16. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலே உங்கள் சுயமரியாதை காப்பாற்றப்படுகிறது என்று நினைக்கிறீர்களா?

17. 2ஜி விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி எந்த விதத்திலும் உங்களுக்கு உதவி செய்யவில்லை என்ற வருத்தம் இருக்கிறதா?

18. ஆ.ராஜாவும், கனிமொழியும் சிறையிலே இருக்கக் காரணம் காங்கிரஸ் கட்சிதான் என்று உங்கள் தொண்டர்கள் பேசுகிறார்களே?

19. 2ஜி வழக்கிலே சி.பி.ஐ.யின் செயல்பாடு எவ்வாறு உள்ளது?

20. சி.பி.ஐ.யை நீங்கள் தீர்மானத்தில் கண்டித்திருக்கிறீர்கள். அதனால் பிரதமரையே தாங்கள் கண்டித்ததாக எடுத்துக் கொள்ளலாமா?

21. எக்காரணம் கொண்டும் காங்கிரசுடன் உங்கள் கூட்டணியில் சிக்கல் இல்லை என்று கூறுவீர்களா?

22. டெல்லியில் குலாம் நபி ஆசாத், 2 ஜி வழக்கில் தங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லியிருக்கிறாரே?

உடன்பிறப்பே, மொத்தம் 31 கேள்விகளில் 22 கேள்விகள் காங்கிரஸ் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள உறவை எப்படியாவது துண்டிக்கவேண்டும், காங்கிரஸ் கட்சியை விமர்சித்து நான் ஏதாவது கூறி அதைப் பெரிதுபடுத்தி இருவருக்குமிடையே கலகத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு கேட்கப்பட்ட கேள்விகளா; அல்லவா? விருப்பு, வெறுப்பின்றி, நடுநிலையோடு செய்திகளைச் சேகரித்து, கலப்படமில்லாமல் மக்களுக்குக்கொண்டு சேர்த்திட வேண்டிய செய்தியாளர்களுக்கு ஏன் இந்த அக்கறை? அவசரம்? துடிப்பு? ஒன்றிரண்டு கேள்விகள் இந்தப் பொருளைப் பற்றிக் கேட்டிருந்தால் அதன் உள்நோக்கத்தை நாம் புரிந்து

கொள்ளலாம். ஆனால் 31 கேள்விகளில் 22 கேள்விகள் காங்கிரஸ் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே சிண்டு முடியும் குணம் கொண்டவை என்பதைக் கவனித்தால் பத்திரிகாதர்மத்தைக் குலைக்கும் செயலிலே செய்தியாளர்களே ஈடுபடலாமா என்று நினைக்கத் தோன்றுகிறது அல்லவா?

உயர்நிலை செயல்திட்டக் குழுவிலே பத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானங்கள் அனைத்துச் செய்தியாளர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தத் தீர்மானங்களைப் பற்றி எந்தவொரு கேள்வியையும் கேட்காமல், திட்டமிட்டு, பேசி, தீர்மானித்துக் கொண்டதைப்போல ஒரு சில குறிப்பிட்ட செய்தியாளர்கள், தி.மு.க. - காங்கிரஸ் உறவு பற்றியே கேள்விகளை எழுப்பினார்கள் என்றால்; எந்த அளவிற்கான ஒரு சூழ்நிலையில் வருங்காலத்தில் நாம் செயல்பட வேண்டியுள்ளது என்பதை நினைத்துப்பார்!

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் ஆளுநர் உரையாக இருந்தாலும், நிதி நிலை அறிக்கையாக இருந்தாலும் அவைகளைத் தயாரிக்கும்போது பத்திரிகையாளர்களின் நலன்களும் இடம்பெற வேண்டுமென்று ஒவ்வொரு முறையும் எண்ணிப் பார்த்து, அவற்றை இடம் பெறச் செய்தவன் நான் என்பது மட்டுமல்ல - பத்திரிகையாளர்கள் சொந்த இல்லங்களில் குடியிருக்கவேண்டும் என்பதற்காக சென்னையிலும், மற்ற பிற நகரங்களிலும் குறைந்த செலவில் மனைகளை ஒதுக்கிட ஆணைகளைப் பிறப்பித்தவன் நான் என்ற அடிப்படையிலும் - இந்த அளவிற்கு பத்திரிகையாளர்களின் நலன்களுக்காகப் பாடுபட்டோமே; ஆனால் அவர்கள் இந்த அளவிற்கு மாறுபட்ட மனத்தோடும், குணத்தோடும் நம்மிடம் பழகுகிறார்களே என்ற வருத்தம்தான் எனக்கு ஏற்பட்டது.

ஆனால் அந்தக் கேள்விகளைக் கேட்டவர்கள் அங்கே செய்தியாளர்கள் கூட்டத்தில் அமர்ந்திருந்த ஐம்பதுக்கு மேற்பட்ட அனைவரும் அல்ல. குறிப்பாக ஐந்தாறு பேர், ஒன்று சேர்ந்து அமராமல், ஆங்காங்கு அமர்ந்து கொண்டு இந்தக் கேள்விகளையெல்லாம் அவர்களே மாற்றி மாற்றி கேட்டதையும், அதற்கு நான் பதில் அளித்ததையும், அந்தச் செய்தியாளர்கள் கூட்டத்திலே அமர்ந்திருந்த மற்றச் செய்தியாளர்கள் புரிந்து கொண்டு தானிருப்பார்கள். இருந்தாலும் அவர்களால் இந்த ஐந்தாறு பேர்களின் எரிச்சல் கக்கும் கேள்விகளை அமைதியாகக்

கேட்டுக் கொண்டிருக்கத்தான் முடிந்ததே தவிர; வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

செய்தியாளர்கள் சந்திப்பின்போது கேள்வி கேட்டது மாத்திரமல்ல, 12-6-2011 தேதிய "தினமணி" நாளிதழில் ஒரு பெரிய கட்டுரை! அதன் தலைப்பே "தி.மு.க. தயங்குவது ஏன்" என்பதாகும். அந்தக் கட்டுரையில் காங்கிரசுடன் உறவை முறித்துக்கொள்ள கருணாநிதி தயாராக இருப்பதாகவும், ஆனால் நாடாளு மன்ற உறுப்பினர்களும், மத்திய அமைச்சரான மு.க.அழகிரியும்தான் கூட்டணி முறிவைத் தள்ளிப்போட விரும்புவதாகவும் எழுதி, எந்த அளவிற்கு இந்தக் கூட்டணியை முறிக்க முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். அதே 12ஆம் தேதிய "தினமலர்" நாளிதழில் வந்துள்ள பெரிய கட்டுரையின் தலைப்பு "கருணாநிதியின் முடிவால் அதிர்ச்சியான தொண்டர்கள்" என்பதாகும். அந்தக் கட்டுரையை முடிக்கும்போது, "எவ்வளவு அடித்தாலும் தாங்குவோம் என்று நினைக்குமளவுக்கு நிலைமை மோசமாகியுள்ளதாக தி.மு.க. தொண்டர்கள் குமுறத் தொடங்கி யுள்ளனர்" என்று எழுதப்பட்டுள்ளது.

எந்தத் தி.மு.க. தொண்டர்களும் குமுறவில்லை. ஆனால் "தினமணி", "தினமலர்" நாளேடுகள் தான் கழகத்தின் முடிவினால் கதறுகிறார்கள், குமுறுகிறார்கள். தங்கள் எண்ணம் நிறைவேற வில்லையே என எண்ணி கட்டுரை தீட்டுகிறார்கள். செய்தியாளர்கள் சந்திப்பின்போது கேள்வி மேல் கேள்வி எழுப்புகிறார்கள். பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுடைய முதலாளிகள் கேட்கச் சொன்னதையும், எழுதச் சொன்னதையும் செய்கின்றார்கள். அவர்களின் முதலாளிகள் ஏன் அப்படிச் சொல்கிறார்கள்? அப்போதுதானே விளம்பரம் என்ற "கொழுக் கட்டை" அவர்களுக்கு கிடைக்கும். அவர்களின் வாழ்க்கை சிறக்கும். வாழ்க மனு தர்மம்! - வாழ்க பத்திரிகா தர்மம்!

அன்புள்ள,

மு.க.

11-6-2011

3566. அதுவே ஓர் ஆறுதல்தான்!

உடன்பிறப்பே,

இலங்கை மீது பொருளாதார தடை கோரி தமிழகச் சட்டப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தி.மு. கழகத்தின் சார்பில் அந்தத் தீர்மானத்தை வரவேற்றும், சட்டப்பேரவையிலே உள்ள எல்லா கட்சிகளும் ஒன்றுபட்டு தீர்மானத்தை ஆதரித்திட வேண்டுமென்றும் தி.மு. கழக சட்டமன்றக் கட்சியின் துணைத் தலைவர் தம்பி துரைமுருகன் அவையில் பேசியிருக்கிறார். ஆனால் அந்தத் தீர்மானத்தின் மீது அவையிலே பேசிய சிலர் தி.மு. கழகத்தையும், என்னையும் வாய்க்கு வந்தபடி தரக்குறைவாக விமர்சித்து, அதற்குப் பதில் கூற சட்டப் பேரவை மரபுகளின்படி தி.மு. கழகத்திற்கு வாய்ப்பு அளிக்காத காரணத்தால் வெளி நடப்பு செய்திருக்கிறார்கள். தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்கள், அதற்குக் காரணமான இலங்கை அரசு பற்றியும் அதிபர் ராஜபக்சேவின் போர் வெறி பற்றியும் விமர்சிக்காமல், தேவையில்லாமல் எதற்காக தி.மு. கழகத்தைப் பற்றியும், என்னைப் பற்றியும் தாக்கிப் பேசி, பேரவையின் நேரத்தை வீணாக்கி நாட்டு மக்களைத் திசை திருப்பிட வேண்டும் என்று தமிழகத்திலே உள்ள நடுநிலை நாளேடுகள் என்று சொல்லிக் கொள்பவைகூட எழுத வில்லை.

இலங்கைத் தமிழர் பற்றிய தீர்மானத்தில் பேசிய தே.மு.தி.க. தலைவர் காவிரிப் பிரச்சினையிலே தி.மு.க. வஞ்சித்து விட்டது என்று வேண்டுமென்றே பேசி விஷத்தைக் கக்க வேண்டிய அவசியம் என்ன?

தி.மு. கழகம் பொறுப்பிலே இருந்தபோது இலங்கைத் தமிழர்களுக்காக அனைத்துக் கட்சிக் கூட்டம், சட்டப்பேரவைக் கட்சித் தலைவர்கள் கூட்டம், தமிழ்நாடு சட்டப் பேரவையில்

தீர்மானம், மனிதச் சங்கிலி போராட்டம், பிரதமருக்கு தந்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமா என்ற அறிவிப்பு, ராஜினாமா கடிதங்களைதானே பெற்றுக் கொண்டது, இறுதி எச்சரிக்கை என்ற அறிவிப்பு என்றெல்லாம் நடத்தியதாகவும், ஆனால் அவைகள் எல்லாம் என்னால் நடத்தப்பட்ட நாடகங்கள் என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையிலே முழங்கியிருக்கிறார். நாம் எதைச் செய்தாலும் அதை உடனடியாக "கபட நாடகம்" என்று கற்பித்து அறிக்கை விடுவது என்பது ஜெயலலிதாவின் வாடிக்கை.

இலங்கைத் தமிழர்களுக்காக நான் உண்ணாவிரதம் இருக்க முடிவு செய்து தன்னந் தனியனாக அண்ணா நினைவிடத்திற்கு காலை 6 மணிக்கெல்லாம் என் வீட்டாரிடம் கூடச் சொல்லாமல் அங்கே சென்று உண்ணா விரதத்தைத் தொடங்கினேன். ஆனால் காலைச் சிற்றுண்டியை வீட்டில் முடித்து விட்டு தலைமைச் செயலகம் செல்லும் வழியில் உண்ணாவிரதம் இருக்கச் சென்றேன் என்று முதலமைச்சராக இருப்பவர் புளுகுகிறார் என்றால், முதலமைச்சர் இருக்கையில் அமர்ந்த பிறகும் அந்த இருக்கைக்கு உகந்த வகையில் அவர் தன்னைத் திருத்திக் கொள்ளவில்லையே என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. நான் உண்ணாவிரதம் இருந்தால் அது "கேலிக் கூத்து" - அவர் உண்ணாவிரதம் இருந்தால் அது "அன்னா ஹஸாரே" நடத்துகின்ற உண்ணா விரதம் போன்றதா?

யார், எதைப் பற்றி பேசுவது என்றே இல்லாமல் எல்லாம் நிலை குலைந்து போய்விட்டது! 1956ஆம் ஆண்டிலேயே சிதம்பரம் தி.மு. கழகப் பொதுக்குழுவிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையில் இலங்கைத் தமிழர்களுக்கான தீர்மானத்தை முன்மொழிந்தவனே நான்தான்! அந்த ஆண்டிலே பிறந்தார்களோ, பிறக்க வில்லையோ அவர்கள் எல்லாம் இன்று கைகோத்துக் கொண்டு, நான் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலே "கேலிக் கூத்து", "கபட நாடகம்" நடத்துவதாக கீழ்த்தர விமர்சனம் செய் கிறார்கள்!

24-8-1977 அன்று சென்னை மாநகரிலே ஒரேநாள் அறிவிப்பில் ஐந்து இலட்சம் பேரைத் திரட்டி இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக பிரம்மாண்டப் பேரணி நடத்தியது தி.மு.க.! 1981ஆம் ஆண்டு இலங்கையிலே தமிழர்கள்

பாதிக்கப்படுகிறார்கள் என்ற செய்தி ஏடுகளில் வந்ததும், 13-8-1981 அன்று இந்தியப் பிரதமருக்கு "கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் இலங்கையின் கிழக்கிலும் தெற்கிலும் கலவரங்கள் பரவி வருகின்றன என்று தெரிவிக்கின்றன. அங்குள்ள அரசே கலவரத்தை ஊக்குவிப்பதாகத் தோன்றுகிறது. தமிழர்களின் இல்லங்கள் தாக்கப்படுகின்றன. தமிழ்ப் பயணிகள் கொள்ளை அடிக்கப்பட்டு ரயிலை விட்டு தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையை தீர்க்க மனிதாபிமான அடிப்படையில் உதவிட வேண்டும்" என்று கேட்டு தந்தி அனுப்பிய நான் தற்போது "நாடகம்" நடத்துகிறேனாம்! சொல்வது யார் தெரியுமா? தமிழக முதல் அமைச்சரும், எதிர்க்கட்சித் தலைவரும்தான்! இதே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக 81ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் அன்று தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த அ.தி.மு.க. அரசினால் கைது செய்யப்பட்ட நான் இப்போது நாடகம் நடத்துகிறேனாம். அன்று என்னைக் கைது செய்த அ.தி.மு.க. வின் இன்றைய தலைவி பேரவையில் முழங்குகிறார்!

25-7-1983 அன்று வெலிக்கடை சிறைச் சாலைக்குள் நுழைந்து தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் போன்ற 35 தமிழர்களை படுகொலை செய்தபோது சென்னை மாநகரில் 7 மணி நேர அவகாசத்தில் 8 இலட்சம் பேரைக் கூட்டி மாபெரும் பேரணி நடத்தியது; நாம். மத்திய மாநில அரசுகள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டிட வேண்டுமென்பதற்காக 10-8-1983 அன்று நானும், பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களும் எங்களுடைய சட்டப் பேரவை உறுப்பினர் பதவிகளையே ராஜினாமா செய்தோம். 16-5-1985 அன்று காஞ்சிபுரத்தில் இலங்கைத் தமிழர்களுக்காக நடைபெற்ற மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டு கைது செய்யப்பட்டேன். அதே ஆண்டு ஆகஸ்ட் 23ந்தேதியன்று சந்திரஹாசன், பாலசிங்கம், சத்தியேந்திரா ஆகியோரை நாடு கடத்த உத்தரவிட்டதை அடுத்து சென்னையில் ஊர்வலம் நடத்தி, அந்த உத்தரவு ரத்து செய்யப்படாவிட்டால் போராட்டம் தொடருமென்று அறிவித்து, அதன் தொடர்ச்சியாக நாடு கடத்தும் உத்தரவைத் திரும்பப் பெறச் செய்தவர்களும் நாமேதான்!

இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டி 1986ஆம் ஆண்டு மே திங்களில் மதுரையில் "டெசோ" அமைப்பின்

சார்பில் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டினை நடத்தியது யார்? நான் தான். இப்படி தொடர்ந்து சொல்லிக் கொண்டே போகலாம்; அயர்ந்து விடாமல் அடுக்கடுக்கான நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொண்டவர்கள் நாம்!

1989ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இலங்கைப் பிரச்சினைக்கு எப்படியாவது ஒரு தீர்வு காண வேண்டுமென்று விரும்பி, அன்றைய பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களிடம் கலந்து கொண்டு அவர் தெரிவித்த யோசனையின் பேரில், பல்வேறு போராளிக் குழுவினரையும் தனித்தனியாகச் சந்தித்து உரையாடிவிட்டு, 19-12-1989 அன்று டெல்லியில் பிரதமரைச் சந்தித்து விவரங்களைக் கூறினேன்.

1990ஆம் ஆண்டு ஜூன் திங்களில் நான் டெல்லியில் முகாமிட்டு, பிரதமரிடம் வலியுறுத்தியதன் தொடர்பாக, 19ஆம் தேதி மாலையில் பிரதமர் வி.பி. சிங் தனது இல்லத்தில் ஓர் அவசர ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினார். அந்தக் கூட்டத்தில் மேற்கு வங்க முதல்வராக இருந்த ஜோதிபாசு, கேரள மாநில முதல்வராக இருந்த நாயனார், ஒரிசா முதல்வராக இருந்த பிஜூ பட்நாயக், அஸ்ஸாம் மாநில முதல்வராக இருந்த மகந்தா, இமாசலப் பிரதேச முதல்வராக இருந்த சாந்தகுமார், சிக்கிம் மாநில முதல்வராக இருந்த பண்டாரி, புதுவை முதல்வராக இருந்த

டி. ராமச்சந்திரன், மத்திய அமைச்சர்கள் அருண் நேரு, முப்தி முகமது சயீத், தம்பி முரசொலி மாறன், குருபாதசாமி, தினேஷ் கோசுவாமி, உபேந்திரா, உன்னிகிருஷ்ணன், மற்றும் இந்தியத் தலைவர்களான அத்வானி, ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத், வாஜ்பாய், சிட்டபாசு எம்.பி., சாமர் முகர்ஜி எம்.பி., இந்திரஜித் குப்தா, பரூக்கி ஆகியோர் வந்திருந்தனர். இலங்கைப் பிரச்சினை குறித்து அனைத்து விவரங்களையும் அவர்களிடம் நீண்ட நேரம் விளக்கிவிட்டு, தமிழ்நாடு இல்லத்திற்கு திரும்பியபோது தான் சென்னையிலிருந்து தொலைபேசியில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தைச் சேர்ந்த பத்மநாபாவும் மற்றும் பத்து பேரும் சுடப்பட்டு கொல்லப்பட்டு விட்டார்கள் என்ற செய்தி வந்தது.

இலங்கைத் தமிழர்களுக்காக தற்போது சட்டமன்றத்தில் தீர்மானத்தை முன்மொழிந்த இதே ஜெயலலிதா; 1997ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது, “சட்டம்

ஒழுங்கைச் சீர்குலைக்க கருணாநிதி முயலுகிறார், விடுதலைப் புலிகள் தமிழகத்தில் மீண்டும் தலைதூக்கி விட்டார்கள்" என்று கண்டன அறிக்கை விடுத்ததை மறந்துவிட முடியுமா?

இலங்கைத் தமிழர்களுக்காக தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது மத்திய அரசை வலியுறுத்தி எதுவுமே செய்யவில்லையாம்!

23-4-2008 அன்று தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போதுதான் - தமிழகச் சட்டப் பேரவையில் - "இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்காக, அங்கே மோதலில் ஈடுபட்டு வரும் இரு பிரிவுகளுக்கிடையே பேச்சு வார்த்தைகளுக்கு இந்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்; இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முறையானதொரு அரசியல் தீர்வு எட்டப்படுவதற்காக பயனுள்ள பேச்சுவார்த்தைகளுக்கு ஏற்பாடு செய்ய மத்திய அரசு முன் வரவேண்டுமென்று இப்பேரவை வலியுறுத்துகிறது" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை அவையின் நடவடிக்கை குறிப்பினை எடுத்துப் பார்த்தாலே நன்கு தெரிந்து கொள்ளலாம்.

தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியதோடு நின்று விடவில்லை. 6-10-2008 அன்று இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களை தொலைபேசியிலே தொடர்பு கொண்டு - புது டெல்லியிலே உள்ள இலங்கைத் தூதரை மத்திய அரசு உடனடியாக நேரில் அழைத்து, நிராயுதபாணியாக உள்ள இலங்கைத் தமிழர்களைக் கொல்வது குறித்து, இந்தியாவின் மன உளைச்சலை தெரிவிக்க வேண்டுமென்றும், இலங்கை அரசின் ராணுவ நடவடிக்கையும், இனப் படுகொலையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதை ஜெயலலிதா வசதியாக மறந்துவிட்டு அல்லது வேண்டுமென்றே மறைத்துவிட்டு தற்போது குற்றஞ்சாட்டுவது சரிதானா என்பதை தமிழ் நாட்டு மக்கள்தான் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்!

இலங்கையிலே ராஜபக்ஷேயின் சிங்களப் படையினர் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்தபோது, அதனைக் கண்டித்து தமிழகத்தில் கண்டன ஊர்வலங்களும், பொதுக் கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடந்த போது, "இலங்கைத் தமிழர்களைக் கொல்ல வேண்டுமென்று இலங்கை

ராணுவம் எண்ண வில்லை; போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது சகஜம்தான்" என்று கொஞ்சமும் இரக்கமின்றி அறிக்கை விட்ட ஜெயலலிதா; தற்போது ஈழத் தமிழர்களின் மீது மிகுந்த அக்கறை கொண்டவரைப் போல தீர்மானத்தை முன்மொழிந்து விட்டால், இங்கேயுள்ள ஒருசிலர் "ஆகா"வென அதனைப் பாராட்ட முன்வரலாம்; ஆனால் உண்மையான தமிழ் நெஞ்சத்திற்குரியவர்களுக்கு நாடகம் நடத்துவது யார் என்பது புரியாமலா போய் விடும்?

இலங்கையில் தமிழ் இனப் படுகொலையைக் கண்டித்து, போர் நிறுத்தம் உடனே அறிவிக்கப்பட வேண்டுமென்று தமிழகத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியபோது, ஜெயலலிதா விடுத்த அறிக்கையில், "விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக கருணாநிதி செயல்படுகிறாரோ என்ற சந்தேகம்தான் தமிழக மக்கள் மனதில் எழுந்துள்ளது, இலங்கையில் தற்போது நடக்கும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை" என்று தெரிவித்து மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்கியவர், தற்போது நடத்துவதுதான் கேலிக் கூத்தே தவிர நான் எந்தக் காலத்திலும் கேலிக் கூத்தாடியவன் இல்லை. இதை இலங்கைத் தமிழர்களும் நன்கறிவார்கள், உலகம் முழுவதும் இருக்கின்ற தமிழர்களும் நன்குணர்வார்கள். அன்றைக்கு இலங்கையிலே நடக்கும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை என்று நம்மைப் பார்த்துச் சொன்னவர்; தற்போது அதே இந்திய அரசுக்குப் பரிந்துரை செய்து பேரவையில் தீர்மானத்தை முன் மொழிந்திருப்பதைப் பார்க்கும்போதாவது எது போலி, எது உண்மை என்பதை தமிழகம் உணராதா என்ன?

2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மாத்திரம் 7-12-2006 அன்றும், 23-4-2008 அன்றும், 12-11-2008 அன்றும், 23-1-2009 அன்றும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக பேரவையில் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். குறிப்பாக 23-4-2008 அன்று பேரவையில் இலங்கைத் தமிழர்களுக்காக தி.மு. கழகம் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியது. அதைத் தொடர்ந்து திரு. எம்.கே. நாராயணன் என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்திய அரசு இலங்கை தூதுவர்களை அழைத்து அன்று பிற்பகலிலேயே பேசி விட்டதாகவும், பிரதமர்

அவர்கள் இந்தத் தகவலை எனக்குத் தெரிவிக்கும்படி கூறினார் என்றும் சொன்னார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவராக இருந்த தமிழ்ச் செல்வன் மறைந்த போது 4-11-2007 தேதிய முரசொலியில் நான் ஒரு இரங்கல் கவிதை எழுதினேன். அது,

எப்போதும் சிரித்திடும் முகம்
எதிர்ப்புகளை எரித்திடும் நெஞ்சம்!
இளமை, இளமை, இதயமோ;
இமயத்தின் வலிமை, வலிமை!
கிழச் சிங்கம் பால சிங்கம் வழியில்
பழமாய்ப் பக்குவம் பெற்ற படைத் தளபதி!
உரமாய்த் தன்னையும் உரிமைப் போருக்கென உதவிய
உத்தம வாலிபன் - உயிரனையான் -
உடன்பிறப்பனையான்;
தமிழர் வாழும் நிலமெலாம் அவர்தம் உளமெலாம்
தன்புகழ் செதுக்கிய செல்வா; எங்கு சென்றாய்?

இவ்வாறு இறந்த ஒருவருக்கு இரங்கல் தெரிவித்ததைக் கூட, ஜெயலலிதாவினால் பொறுத்துக்கொள்ள முடியாமல், அவர் வெளியிட்ட அறிக்கையில், புலிகளுடன் கருணாநிதிக்கு ரகசியத்தொடர்பு இருக்கின்றது என்பதற்கு இதுவே சான்று, அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்றும் தெரிவித்தவர்தான் ஜெயலலிதா.

14.10.2008 அன்று இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினேன். 15.10.2008 அன்று பிரதமருக்கு இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து கடிதம் எழுதினேன். 13.11.2008 அன்று உணவுப் பொருட்கள், துணிவகைகள் மற்றும் மருந்து பொருட்களை இலங்கைத் தமிழர்களுக்காக கப்பல் மூலம் அனுப்பி வைத்தோம்.

2009ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களுக்காக சட்டப் பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது - இலங்கையிலே தமிழ் ஈழம் மலரும் என்றால், அதற்காக ஆட்சியை இழக்கக் கூட நாங்கள் தயார் என்று அறிவித்தவன்

நான் என்பதை உண்மையிலேயே இலங்கைத் தமிழர்களுக்காகப் பாடுபடுபவர்கள் நிச்சயம் உணருவார்கள். அதனால் தான் ஈழத் தந்தை செல்வா அவர்களின் அன்பு மகன் சந்திர ஹாசன் அவர்கள் அப்போது எனக்கெழுதிய கடிதத்தில், "ஈழத் தமிழர் இன்னல், அதையொட்டித் தமிழ்நாட்டில் கொந்தளிப்பு இவையெல்லாம் தங்களைப் பாதிக்கும் என்பதை அறிவோம். ஆயினும் தாங்கள் ஆட்சியில் இருப்பதால்தான் இலங்கையில் சிங்களப் பேரினவாதம் ஓரளவுக்கேனும் அடக்கி வாசிக்கிறது. உலகத் தமிழர்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளியிட முடிகின்றது" என்று எழுதினார் என்றால், எந்த அளவுக்கு எனது உள்ளத்தின் அடியாழ உணர்வுகளை அவர் புரிந்து கொண்டிருந்தார் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்!

ஆனால் ஜெயலலிதா தற்போது ஆட்சியிலே அமர்ந்ததும் இலங்கைத் தமிழர்களுக்கு தீர்மானம் நிறைவேற்றியதும், அதற்கு லாலி பாடி, அதனை வரவேற்று, பாராட்டி பலரும் பேசுவதிலும், அறிக்கை விடுவதிலும் நமக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அவர்கள் அப்படி ஜெயலலிதாவைப் பாராட்டுகின்ற நேரத்தில், தேவையில்லாமல் நம்மீது விழுந்து பிறாண்டி திருப்தி அடைய நினைக்கிறார்களே, அது சரி தானா? உண்மையில் நடந்தது என்ன என்பதை உலகத்திற்கு நினைவுப் படுத்தத்தான் இந்த விவரங்களையெல்லாம் இங்கே தொகுத்துக் கூறியிருக் கிறேன். மனசாட்சி உள்ள ஒரு சிலராவது இந்த உண்மைகளைப் புரிந்து கொள்வார்களானால்; அதுவே எனக்கு ஓர் ஆறுதல்தான்!

அன்புள்ள,

மு.க.

13-6-2011

3567. எடுகள் சில ஏங்குகின்றன; கோடுகள் வராதா என்று!

உடன்பிறப்பே,

10.6.2011 அன்று மாலையில் அண்ணா அறிவாலயம், முரசொலிமாறன் வளாகத்தில் கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் களின் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பத்து தீர்மானங்களின் நகல்கள் எடுக்கப்பட்டு, கழக அமைப்புச் செயலாளர் மூலமாக செய்தியாளர் களுக்கு உடனடியாக வழங்கப்பட்டுவிட்டன. கூட்டம் முடிந்து புறப்படுகின்ற நேரத்தில் செய்தியாளர்கள் காத்திருக்கிறார்கள். பார்க் கிறீர்களா என்று கேட்டபோது, தீர்மானங் களைக் கொடுத்து விட்டீர்கள் அல்லவா, பிறகு எதற்காக என்று நான் திரும்பக் கேட்டேன். பத்திரிகையாளர்கள் உங்களிடம் சில கேள்வி களைக் கேட்பதற்காக காத்திருக்கிறார்கள் என்று சொன்னவுடன், நான் அதற்குச் செவிசாய்த்து செய்தியாளர்கள் அறைக்குச் சென்றேன். எப்போதும் கலந்து கொள்கின்ற செய்தியாளர்களைப்போல இரண்டு மடங்கு கூட்டம் அங்கே! அந்தச் செய்தியாளர்கள் கூட்டத்தில் எப்போதும் வராத ஒருசில செய்தி யாளர்களும் வந்திருப்பதைப் பார்த்ததும், எதற்கோ அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

"நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டுள்ளன. அதில் ஏதாவது, அந்தத் தீர்மானங்களைப் பற்றியோ அல்லது அவற்றின் தொடர்பாகவோ ஏதாவது கேட்கவேண்டுமென்றால் கேளுங்கள், பதில் கூறுகிறேன்" என்று சொன்னேன்.

அதைத் தொடர்ந்து அந்தச் செய்தியாளர்கள் கூட்டத்தில் 31 கேள்விகள் கேட்கப்பட்டு, ஒவ்வொன்றிற்கும் நான் அளித்த பதில்

ஏடுகளில் வந்துள்ளது. அந்த 31 கேள்விகளில் ஒருசிலவற்றை மட்டும் நான் இங்கே ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

1. மத்திய அரசு, சி.பி.ஐ. நிறுவனத்தை ஒரு அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?

2. திருவாரூரில் நீங்கள் பேசும்போது கனிமொழி மீது போடப்பட்டுள்ள வழக்கு மத்திய அரசால் போடப்பட்டு வழக்கு என்று சொன்னீர்களே, அதைப்பற்றி உங்கள் தீர்மானத்தில் ஏன் சொல்லவில்லை?

3. கூடா நட்பு" என்று சொன்னீர்களே, அதை யாரைப் பற்றி?

4. உங்கள் கட்சியிலே உள்ள பெரும்பான்மையான தொண்டர்கள் காங்கிரஸ் கட்சியுடன் உறவைத் தொடரக் கூடாது என்று விரும்புகிறார்களே?

5. உங்கள் பொதுக்குழுவில் காங்கிரஸ் கட்சியோடு தி.மு.க. கொண்டுள்ள உறவு தொடருமா, தொடராதா என்ற முடிவினை எடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கலாமா?

6. காங்கிரஸ் கட்சியுடன் உறவு தொடர வேண்டுமா என்ற கேள்வி தொண்டர்கள் மத்தியில் இருக்கிறதே, அதற்கு என்ன பதில்?

7. காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வமான பத்திரிகை ஒன்றில் 2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரம்தான் தேர்தல் தோல்விக்குக் காரணம் என்று எழுதியிருக்கிறார்களே?

8. ஸ்பெக்ட்ரம் பிரச்சினை இந்தத் தோல்விக்குக் காரணமா; இல்லையா?

9. பா.ஜ.க. வுடன் நீங்கள் செல்லப் போவதாக டெல்லியில் சொல்கிறார்களே?

10. சி.பி.ஐ. மூன்றாவது குற்றப்பத்திரிகையில் தயாநிதி மாறன் பெயர் இடம் பெறப்போவதாகச் செய்தி வந்திருக்கிறதே?

11. தயாநிதிமாறன் பதவி விலக வேண்டு மென்று சொல்கிறார்களே?

12. தயாநிதிமாறனை நீங்கள் ஆதரிக்க வில்லையே?

13. வெங்கைய நாயுடு நெருக்கடி நிலை மீண்டும் வரும் என்று சொல்லியிருக்கிறாரே, அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

14. நீங்கள் ஜூலையில் கூட்டுகின்ற பொதுக் குழு மத்திய அரசுக்கு நீங்கள் வைத்துள்ள காலக் கெடு என்று எடுத்துக் கொள்ளலாமா?

15. காங்கிரஸ் கட்சி தி.மு.க.வை என்றைக்கும் மதித்ததில்லை என்று கூறுவீர்களா?

16. ஐக்கிய முற்போக்குக் கூட்டணியிலே உங்கள் சுயமரியாதை காப்பாற்றப்படுகிறது என்று நினைக்கிறீர்களா?

17. 2ஜி விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி எந்த விதத்திலும் உங்களுக்கு உதவி செய்யவில்லை என்ற வருத்தம் இருக்கிறதா?

18. ஆ.ராஜாவும், கனிமொழியும் சிறையிலே இருக்கக் காரணம் காங்கிரஸ் கட்சிதான் என்று உங்கள் தொண்டர்கள் பேசுகிறார்களே?

19. 2ஜி வழக்கிலே சி.பி.ஐ.யின் செயல்பாடு எவ்வாறு உள்ளது?

20. சி.பி.ஐ.யை நீங்கள் தீர்மானத்தில் கண்டித்திருக்கிறீர்கள். அதனால் பிரதமரையே தாங்கள் கண்டித்ததாக எடுத்துக் கொள்ளலாமா?

21. எக்காரணம் கொண்டும் காங்கிரசுடன் உங்கள் கூட்டணியில் சிக்கல் இல்லை என்று கூறுவீர்களா?

22. டெல்லியில் குலாம் நபி ஆசாத், 2 ஜி வழக்கில் தங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று சொல்லியிருக்கிறாரே?

உடன்பிறப்பே, பொத்தம் 31 கேள்விகளில் 22 1 கேள்விகள் காங்கிரஸ் கட்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள உறவை எப்படியாவது துண்டிக்கவேண்டும், காங்கிரஸ் கட்சியை விமர்சித்து நான் ஏதாவது கூறி அதைப் பெரிதுபடுத்தி இருவருக்குமிடையே கலகத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தோடு கேட்கப்பட்ட கேள்விகளா; அல்லவா? விருப்பு, வெறுப்பின்றி, நடுநிலை யோடு செய்திகளைச் சேகரித்து, கலப்பட மில்லாமல் மக்களுக்குக்கொண்டு சேர்த்திட

வேண்டிய செய்தியாளர்களுக்கு ஏன் இந்த அக்கறை? அவசரம்? துடிப்பு? ஒன்றிரண்டு கேள்விகள் இந்தப் பொருளைப் பற்றிக் கேட்டிருந்தால் அதன் உள்நோக்கத்தை நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் 31 கேள்விகளில் 22 கேள்விகள் காங்கிரஸ் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இடையே சிண்டு முடியும் குணம் கொண்டவை என்பதைக் கவனித்தால் பத்திரிகா தர்மத்தைக் குலைக்கும் செயலிலே செய்தியாளர்களே ஈடுபடலாமா என்று நினைக்கத் தோன்றுகிறது அல்லவா?

உயர்நிலை செயல்திட்டக் குழுவிலே பத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, அந்தத் தீர்மானங்கள் அனைத்துச் செய்தியாளர் களுக்கும் அளிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தத் தீர்மானங்களைப்பற்றி எந்தவொரு கேள்வி யையும் கேட்காமல், திட்டமிட்டு, பேசி, தீர்மானித்துக் கொண்டதைப்போல ஒரு சில குறிப்பிட்ட செய்தியாளர்கள், தி.மு.க. - காங்கிரஸ் உறவு பற்றியே கேள்விகளை எழுப்பினார்கள் என்றால்; எந்த அளவிற்கான ஒரு சூழ்நிலையில் வருங்காலத்தில் நாம் செயல்பட வேண்டியுள்ளது என்பதை நினைத் துப்பார்!

தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் ஆளுநர் உரையாக இருந்தாலும், நிதி நிலை அறிக்கையாக இருந்தாலும் அவைகளைத் தயாரிக்கும்போது பத்திரிகையாளர்களின் நலன்களும் இடம்பெற வேண்டுமென்று ஒவ்வொரு முறையும் எண்ணிப் பார்த்து, அவற்றை இடம் பெறச் செய்தவன் நான் என்பது மட்டுமல்ல - பத்திரிகையாளர்கள் சொந்த இல்லங்களில் குடியிருக்கவேண்டும் என்பதற் காக சென்னையிலும், மற்ற பிற நகரங்களிலும் குறைந்த செலவில் மனைகளை ஒதுக்கிட ஆணைகளைப் பிறப்பித்தவன் நான் என்ற அடிப்படையிலும் - இந்த அளவிற்கு பத்திரிகை யாளர்களின் நலன்களுக்காகப் பாடுபட்டோமோ ஆனால் அவர்கள் இந்த அளவிற்கு மாறுபட்ட மனத்தோடும். குணத்தோடும் நம்மிடம் பழகுகிறார்களே என்ற வருத்தம்தான் எனக்கு ஏற்பட்டது.

ஆனால் அந்தக் கேள்விகளைக் கேட்டவர்கள் அங்கே செய்தியாளர்கள் கூட்டத்தில் அமர்ந்திருந்த ஐம்பதுக்கு மேற்பட்ட அனைவரும் அல்ல. குறிப்பாக ஐந்தாறு பேர், ஒன்று சேர்ந்து ஆமைல், ஆங்காங்கு அமர்ந்து கொண்டு இந்தக் கேள்விகளையெல்லாம் அவர்களே மாற்றி மாற்றி கேட்டதையும், அதற்கு நான் பதில் அளித்ததையும், அந்தச் செய்தியாளர்கள்

கூட்டத்திலே அமர்ந்திருந்த மற்றச் செய்தியாளர்கள் புரிந்து கொண்டு (தானிருப்பார்கள். இருந்தாலும் அவர்களால் இந்த ஐந்தாறு பேர்களின் எரிச்சல் கக்கும் கேள்விகளை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கத் தான் முடிந்ததே தவிர, வேறு எதுவும் செய்ய முடியவில்லை .

செய்தியாளர்கள் சந்திப்பின்போது கேள்வி கேட்டது மாத்திரமல்ல, 12-6-2011 தேதிய "தினமணி" நாளிதழில் ஒரு பெரிய கட்டுரை! அதன் தலைப்பே "தி.மு.க. தயங்குவது ஏன்" என்பதாகும். அந்தக் கட்டுரையில் காங்கிரசுடன் உறவை முறித்துக்கொள்ள கருணாநிதி தயாராக இருப்பதாகவும், ஆனால் நாடாளு மன்ற உறுப்பினர்களும், மத்திய அமைச்சரான மு.க. அழகிரியும்தான் கூட்டணி முறிவைத் தள்ளிப்போட விரும்புவதாகவும் எழுதி, எந்த அளவிற்கு இந்தக் கூட்டணியை முறிக்க முயற்சிகளை மேற்கொண்டிருக் கின்றார்கள், அதே 12ஆம் தேதிய "தினமலர்" நாளிதழில் வந்துள்ள பெரிய கட்டுரையின் தலைப்பு "கருணாநிதியின் முடிவால் அதிர்ச்சியான தொண்டர்கள்" என்பதாகும். அந்தக் கட்டுரையை முடிக்கும்போது, "எவ்வளவு அடித்தாலும் தாங்குவோம் என்று நினைக்கு மளவுக்கு நிலைமை மோசமாகி யுள்ளதாக தி.மு.க. தொண்டர்கள் குழுறத் தொடங்கியுள்ளனர்" என்று எழுதப்பட்டுள்ளது

எந்தத் தி.மு.க. தொண்டர்களும் குமுறவில்லை . ஆனால் "தினமணி", "தினமலர்" நாளேடுகள் தான் கழகத்தின் முடிவினால் கதறுகிறார்கள், குமுறுகிறார்கள். தங்கள் எண்ணம் நிறைவேற வில்லையே என எண்ணி கட்டுரை தீட்டுகிறார்கள். செய்தியாளர்கள் சந்திப்பின்போது கேள்வி மேல் கேள்வி எழுப்புகிறார்கள். பாவம் அவர்கள் என்ன செய்வார்கள்? அவர்களுடைய முதலாளிகள் கேட்கச் சொன்னதையும், எழுதச் சொன்ன தையும் செய்கின்றார்கள். அவர்களின் முதலாளிகள் ஏன் அப்படிச் சொல்கிறார்கள்? அப்போதுதானே விளம்பரம் என்ற கொழுக் கட்டை" அவர்களுக்கு கிடைக்கும். அவர் களின் வாழ்க்கை சிறக்கும். வாழ்க மனு தர்மம் - வாழ்க பத்திரிகா தர்மம்!

அன்புள்ள,

மு.க.

14-06-2011

3568. வென்றவர் சொல்வதெல்லாம் வேதம் ஆகுமா?

உடன்பிறப்பே,

கச்சத் தீவை திரும்பப் பெற உச்சநீதிமன்றத்தில் ஜெயலலிதா தொடர்ந்த வழக்கில் தமிழக அரசின் வருவாய்த் துறை இணைந்து கொள்ள வேண்டுமென முடிவு செய்து, அதற்காக சட்டப்பேரவையிலே ஒரு தீர்மானத்தை ஜெயலலிதா கொண்டு வந்து

9-6-2011 அன்று ஒருமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது. தமிழக அரசின் வருவாய்த் துறை என்பது, தமிழக அரசின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள ஒரு துறைதான். அந்தத் துறையின் சார்பில் ஒரு வழக்கிலே இணைந்து கொள்ள தமிழக அரசே ஒரு தீர்மானத்தைச் சட்டப்பேரவையில் கொண்டு வரவேண்டுமா? அந்தத் தீர்மானம் இல்லாமலே தமிழக நலன் சார்ந்த அந்த வழக்கிலே தமிழக அரசின் வருவாய்த் துறை இணைந்து கொண்டு வாதாட முடியாதா ; சுற்றோட்டத்தில் உத்தரவு பெற்று ஆணை வழங்கினால் போதாதா; என்பது பற்றி யெல்லாம் வழக்கறிஞர்களும், தலைமைச் செயலக நடைமுறைகள் பற்றி அறிந்துள்ள மூத்த அதிகாரிகளும்தான் கூற வேண்டும். எது எப்படியோ? கச்சத் தீவுக்காக பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தது பற்றி நமக்கு மகிழ்ச்சிதான். ஆனால் அந்தத் தீர்மானத்தை முன் மொழிந்த இன்றைய முதல் அமைச்சர் ஜெயலலிதாவும், அந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய எதிர்க்கட்சியினரும் தேவையில்லாமல் “கருணாநிதி ஆட்சியில் இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்ட” என்று ஆரம்பித்து, கச்சத் தீவினை நான்தான் மத்திய அரசிடம் கூறி இலங்கைக்கு வழங்கும்படி கூறியதைப் போல எண்ணிக் கொண்டு என்மீது வசைமாரி பொழிந்திருக்கிறார்கள். வேறு சிலர் தமிழகத்தின் அழிவுக்கே நான்தான் காரணம், காவிரிப் பிரச்சினைக்கும் நான்தான் காரணம் என்றெல்லாம் வீராவேசமாக

முழங்கியிருக்கிறார்கள். இதிலிருந்து கச்சத்தீவு தீர்மானம் கொண்டு வரப்பட்டதே; என் மீது விமர்சனக் கணைகள் வீசத்தான் என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

கச்சத் தீவு மத்திய அரசினால் திராவிட முன்னேற்றக் கழக அரசின் எதிர்ப்பையும் மீறி இலங்கைக்கு வழங்கப்பட்டது பற்றியும், அதனை வழங்கும்போது 1974ஆம் ஆண்டு ஒப்பந்த ஷரத்திலே இருந்த உரிமைகள்கூட, 1976ஆம் ஆண்டு தமிழகத்திலே குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்ற போது பறிக்கப்பட்டுவிட்டன என்பது குறித்தும் நான் பல முறை விளக்கமளித்திருக்கிறேன். அந்த 1976ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்த ஆண்டு வரையிலான 34 ஆண்டுகளில் சுமார் 22 ஆண்டுகள் அ.தி.மு.க.வும், 12 ஆண்டுகள் தி.மு.க.வும் தமிழகத் திலே ஆளுங்கட்சியாக இருந்திருக்கின்றன. கச்சத்தீவை தி.மு.க. தாரை வார்த்து விட்டது என்று; தகவல்கள் எதையும் ஆரம்பம் முதல் அறிந்து கொள்ளாமல், தொண்டை கிழிய தொடர்ந்து முழங்கிக் கொண்டிருக்கும் அ.தி.மு.க. தாங்கள் ஆட்சி செய்த 22 ஆண்டுகளில் கச்சத் தீவை ஏன் மீட்கவில்லை?

1991ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்த ஜெயலலிதா தனது சுதந்திர தின விழா உரையில் "நம் தாயகத்துக்குச் சொந்தமான கச்சத் தீவை இலங்கை அரசுக்குத் தாரைவார்த்த காரணத்தால் நம் மீனவர்கள் தங்கள் வலைகளைக்கூட உலர்த்திக்கொள்ள அந்தத் தீவின் அருகில் நெருங்க முடியாத நிலை உள்ளது. எனவே, கச்சத்தீவைத் திரும்பப் பெற மத்திய அரசுடன் வாதாடவும், தேவை ஏற்பட்டால் போராடவும் இந்த அரசு தயாராக உள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இது எங்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த ஒரு வாக்குறுதியாகும்" என்று கூறியதோடு 3-10-1991 அன்று - அதற்கான தீர்மானத்தையும் பேரவையிலே முன்மொழிந்து ஒருமனதாக நிறைவேற்றினார்கள்.

20-4-1992 அன்று தமிழகச் சட்டப்பேரவையில் அம்மையார் ஜெயலலிதா பேசும்போது, "கச்சத் தீவை மீட்க வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பினோம். ஆனால், கச்சத் தீவை மீட்பது என்பது விரைவில் நடக்கக்கூடிய, நடைபெறக்கூடிய ஒன்றாகத் தெரியவில்லை" என்று கூறியிருக்கிறார்.

9-6-2011 அன்று பேரவையில் பேசிய ஜெயலலிதா; தான் முதல் அமைச்சராக இருந்தபோது கச்சத் தீவை திரும்பப் பெறுவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டதாகவும், ஆனால் தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, குறிப்பாக நான் முதலமைச்சராக இருந்தபோது கச்சத் தீவை மீட்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் பேசி யிருக்கிறார்.

அவர் என்ன முயற்சி மேற்கொண்டார் என்று அவரே சொல்லியிருக்கிறார். அதாவது மத்திய அரசையும், பாரதப் பிரதமரையும் நேரிலும், கடிதம் மூலமாகவும் வற்புறுத்தியதாகவும்; ஆனால் மத்திய அரசு எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்றும் கூறுகிறார். நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பேசியிருக்கிறாரே, அது உண்மையா?

தி.மு. கழகத்தைப் பொறுத்து மாத்திரமல்ல, தி.மு.கழக ஆட்சியைப் பொறுத்தும் மத்திய அரசிடம் பல நேரங்களில் கச்சத் தீவு பிரச்சினையை எழுப்பி கச்சத் தீவை மீட்டுக் கொடுங்கள் என்று கேட்கத் தவறியதும் இல்லை. கச்சத்தீவிலே மீனவர்களுக்கு உள்ள உரிமை பாதிக்கப்படுவதை எடுத்துக் காட்டி அந்தப் பாதிப்பை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்கவும் கழக அரசு தவறியது இல்லை.

2009ஆம் ஆண்டு தி.மு.கழகம் ஆளுங்கட்சியாக இருந்தபோது ஜூன் திங்கள் 18ஆம் தேதியன்று கச்சத் தீவு தொடர்பாக அ.தி.மு.க., காங்கிரஸ், பா.ம.க., மார்க்சிஸ்ட், இந்தியக் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகளின் சார்பில் கச்சத்தீவு பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டு மென்று ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தபோது, பேரவைத் தலைவரால் அனுமதிக்கப்பட்டு - மாண்புமிகு உறுப்பினர்கள் ஜெயக்குமார் அவர்களும், ஞானசேகரன் அவர்களும், கோ.க.மணி அவர்களும், மகேந்திரன் அவர்களும், சிவபுண்ணியம் அவர்களும், ரவிக்குமார் அவர்களும் பல்வேறு கருத்துக்களை அவையில் எடுத்துச் சொன்னார்கள். அத்தகைய கருத்துக்களின் மொத்தத் தொகுப்பு என்ன வென்றால் கச்சத்தீவு மீண்டும் இந்தியாவிற்குத் தரப்பட வேண்டும் என்பதாகும். அதனையொட்டி தமிழகச் சட்டப் பேரவையில் நான் உரையாற்றியபோது, கச்சத் தீவினை தாரைவார்க்க தி.மு.க. ஒப்புக் கொள்ளவும் இல்லை; ஒருபோதும்

உடன்படவும் இல்லை; அனைத்துக்கட்சியினரும் ஆதரிக்கத் தயாரென உறுதியளித்தால் கச்சத் தீவை திரும்பப் பெற அவையிலேயே தீர்மானம் கொண்டுவரத் தயாராக இருக்கிறேன் என்று கூறினேன்.

பேரவையில் 9-6-2011 அன்று பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா கச்சத்தீவு இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்டதின் காரணமாக இதுவரை நூற்றுக்கணக்கான மீனவர்கள் பலியாகியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அவரே முன்பொரு முறை இதைப்பற்றிக் கூறும் போது "மீனவர்கள் இண்டர்நேஷனல் பவுண்டரி லைனைக் கடந்து சென்று கச்சத் தீவு அருகில் உள்ள கடல் பகுதியில் மீன் பிடித்தால்தான் அவர் களுக்குப் போதிய அளவு நல்ல வகை மீன்கள் கிடைக்கின்றன. நம்முடைய இந்தியக் கடல் எல்லைக்குள் மீன் பிடிக்கச் சென்றால், அவர்களுக்குத் தேவையான அளவு நல்ல ரக மீன்கள் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ பல முறை இண்டர்நேஷனல் பவுண்டரிலைனைக் கடந்து செல்லும்போது இலங்கை கடற்படையினர் அவர்களுடைய படகுகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி, அவர்கள் பிடித்து வைத்திருக்கின்ற மீன்களை எல்லாம் கைப்பற்றிக் கொண்டு, அவர்களுடைய படகுகளை எரித்து, இப்படிப்பட்ட சம்பவங்கள் எத்தனையோ நடந்திருக்கின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் மீனவர்கள் காணாமல் போகும் நிலைமை ஏற்பட்டது என்று கூடச் சிலர், எல்லாவற்றையும் தெரிந்து வைத்திருப்பதைப் போலப் பேசியிருக்கிறார்கள். ஒரு கணக்கெடுத்துப் பார்த்தால் 1986இல் மீனவர்கள் நான்கு பேர் மீன் பிடிக்கச் சென்றவர்கள் காணாமல் போனார்கள். 1987இல் நான்கு பேர் காணாமல் போனார்கள். 1988இல் எட்டு பேர் காணாமல் போய் இருக்கிறார்கள். 1993இல் ஐந்து பேர் காணாமல் போய் இருக்கிறார்கள். 1995இல் இரண்டு பேர் காணாமல் போய் இருக்கிறார்கள். 2002இல் 22 பேர் காணாமல் போய் இருக்கிறார்கள். 2003இல் ஆறு பேர் காணாமல் போய் இருக்கிறார்கள். 2004இல் நான்கு பேர் காணாமல் போய் இருக்கிறார்கள். 2007இல் 12 பேர் காணாமல் போய் இருக்கிறார்கள். இந்தக் கணக்கு விவரம், ஒப்பீடு - இது எப்போதும் நடைபெறுகின்ற ஒன்று தான் - குறிப்பிட்ட

அந்த ஆட்சியிலேதான் நடைபெற்றது; இந்த ஆட்சியிலே நடைபெறவில்லை என்பதற்காகச் சொல்லவில்லை, பொதுவாக ஜெயலலிதா அம்மையார் குறிப்பிட்டதைப் போல - அந்த பவுண்டரி லைனைத் தாண்டிச் சென்றால், நல்ல வகை மீன் கிடைக்கும் என்று வரம்புமீறி எண்ணுகின்ற சில மீனவ மக்களால், அவர்கள் தங்களுடைய உயிரை இழக்க நேரிடுகிறது என்ற விபரீதமான உண்மை வெளிப்படுவதை நாம் மறந்துவிடக் கூடாது.

இதைப்பற்றிப் பேசிய சிலர் கச்சத் தீவை தி.மு.க. ஆட்சி தாரை வார்த்து விட்டது என்று திரும்பத் திரும்ப சொல்லியிருக்கிறார்கள். அப்படி தாரை வார்த்த எந்தச் சம்பவமும் 1974 ஆம் ஆண்டில் நடைபெறவில்லை. அந்த ஆண்டில் கச்சத் தீவை இலங்கைக்குத் தருவதென்ற முடிவை மத்திய அரசு எடுத்தபோது, அன்றைய தமிழகத்திலே இருந்த மாநில அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு, அதற்கு பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தது. இருந்த போதிலும், மத்திய அரசால் கச்சத் தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டு விட்டது. அப்படி வழங்கப்பட்ட நேரத்திலே கூட, கச்சத் தீவிலே மீன் பிடிக்கும் உரிமை, யாத்திரை செல்கின்ற உரிமை, மீன் வலைகளை காய வைப்பதற்கான உரிமை இவைகள் எல்லாம் மீனவ மக்களுக்கு உண்டு என்கிற ஷரத்து ஒப்பந்தத்திலே சேர்க்கப்பட வேண்டுமென்று அன்றைய தமிழக தி.மு.க. அரசு வலியுறுத்தியதின் பேரில், அந்த ஷரத்து அதிலே சேர்க்கப்பட்டது. ஆனால் அதற்குப் பிறகு வந்த நெருக்கடி நிலை காலத்தில், இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இல்லாத சூழ்நிலையில் தமிழகத்திலே கவர்னர் ஆட்சி நடைபெற்ற நேரத்தில், அந்த ஷரத்துக்கள் எப்படி அந்த ஒப்பந்தத்திலிருந்து விலக்கப்பட்டன என்றே தெரியாத அளவிற்கு, அந்த ஷரத்துக்கள் பறிபோய் விட்டன. அதற்குப் பிறகு அந்த ஷரத்துக்களையாவது சேர்க்க வேண்டுமென்று நாம் மத்திய அரசோடு தொடர்ந்து வாதிட்டுக் கொண்டிருக்கிறோம்.

கச்சத் தீவை தாரை வார்க்க தி.மு.க. ஒப்புக் கொள்ளவும் இல்லை, தாரை வார்க்க உடன்படவும் இல்லை. பாராளு மன்றத்திலேயே இந்தத் தீர்மானம் வந்தபோது, வெளிநடப்பு செய்திருக்கிறது தி.மு.க. என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒன்றைச் சொல்ல வேண்டுமேயானால் - 30-9-1994இல் தமிழக முதலமைச்சராக இருந்த அம்மையார் ஜெயலலிதா, அப்போது பிரதமராக இருந்த திரு. நரசிம்மராவ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதில் "The ceding of this tiny island to the Island Nation had been done by the Government of India in the interest of better bilateral relations" அதாவது, "தீவு நாடான இலங்கைக்கு, இந்தச் சின்னஞ்சிறிய தீவினை (கச்சத் தீவை) இந்திய அரசு பிரித்துக் கொடுத்தது, இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலே நல்லுறவு நிலவிட வேண்டும் என்பதற்காகத்தான்" - என்று அன்றைய முதலமைச்சர், அம்மையார் குறிப்பிட்டிருக்கிறார். அதே பாடத்தைத்தான் இன்னமும் மத்தியிலே உள்ள அமைச்சர்கள் கூறி வருகிறார்கள். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பல பிரச்சினைகள் இருந்தாலும் இரு நாடுகளுக்கிடையே நல்லுறவு வேண்டும் என்பதற்காகத்தான் கச்சத் தீவு அளிக்கப்பட்டது என்று ஜெயலலிதா அம்மையார் சொன்னதைப் போலவே, சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஜெயலலிதாவும் அன்று தந்த விளக்கத்தை மறந்து, இன்று வீராவேசமாகப் பேசுகிறார்!

ஜெயலலிதா 9 ஆம் தேதியன்று பேரவையில் பேசியபோதுகூட, தனது உரையில் கச்சத் தீவு பற்றியோ, அதைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பற்றியோ பேசாமல் நீண்ட நேரம் என்னைப் பற்றியும், என்மீது பழி போடுவதைப் பற்றியும் உரையாற்றியதில் இருந்தே விஷயம் புரிந்தவர்கள் எந்தெந்த விபரங்களையெல்லாம் மறைத்திட முயற்சிக்கிறார்கள் என்ற உண்மையைப் புரிந்து கொண்டிருப்பார்கள். கச்சத்தீவை காவு கொடுப்பதற்கு ஒப்புதல் அளித்துவிட்டு, கண்துடைப்பு நாடகமாக அவையிலே தீர்மானத்தை முன் மொழிந்தவன் நான் என்று ஜெயலலிதா பேரவையிலே சொல்லியிருக்கிறார். தி.மு. கழகம் தேர்தலிலே தோற்றிருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் தி.மு. கழகத்தின் தாயகப்பற்றையும் என்னுடைய தமிழ்ப் பற்றையும் நன்கறிவார்கள். வெற்றி பெற்றவர்கள் எல்லாம் தமிழ்நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்களுமல்ல - தோல்வி அடைந்தவர்கள் எல்லாம் தமிழ்நாட்டுப் பற்றற்றவர்களும் அல்ல. வென்றவர்கள் சொல்வதெல்லாம் "வேதமும்" அல்ல!

அன்புள்ள,

மு.க.

15-6-2011

3569. வருமா; எதிர்காலத்தில் மின் பற்றாக்குறை?

உடன்பிறப்பே,

ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்கு பதிலளித்த தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதா நீண்ட நேரம் மின் தட்டுப் பாட்டைப் பற்றி பேசியிருக்கிறார். தான் ஆட்சியில் இருந்தபோது மேற்கொண்ட முயற்சிகளை தி.மு. கழக அரசு தொடர்ந்திருந் தால் தமிழகத்தில் மின் தட்டுப்பாட்டை தவிர்த்திருக்கலாம் என்றும், ஜூலை மாதம் முதல் தமிழ்நாட்டில் தற்போதுள்ள 3 மணி நேர மின்வெட்டினை 2 மணி நேரமாகக் குறைப்போம் என்றும், கழக ஆட்சிக் காலத்தில் மின் உற்பத்தியை அதிகப்படுத்த எதுவுமே செய்யவில்லை என்றும் புள்ளி விவரங்களை அள்ளித் தெளித்திருக்கிறார். ஆட்சிப் பொறுப்பில் கடந்த ஐந்தாண்டுகள் முதல்வராக நான்தான் இருந்தேன் என்ற அடிப்படையில் அவரது குற்றச்சாட்டுகளுக்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன்.

2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு மின் உற்பத்திக்காக என்னென்ன செய்யப்பட்டது என்று விளக்குகிறேன்.

எண்ணூர் அனல் மின் நிலைய இணைப்பு மூலமாக 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று 8-12-2006இல் 3 ஆயிரத்து 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டது; அதன் உற்பத்தி 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் தொடங்கும்.

மேட்டூர் அனல் மின் நிலையத்தில் - 3 ஆயிரத்து 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய ஒரு திட்டம் 2-5-2007இல் தொடங்கப்பட்டது; அதன் உற்பத்தி 2011ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் இயக்கத்திற்கு வரும்.

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய வகையில் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் ஒரு திட்டம் 26-6-2007இல் தொடங்கப்பட்டது; இதன் உற்பத்தி 2011 மே திங்களில் நடைமுறைக்கு வந்திருக்க வேண்டியது, தற்போது செப்டம்பரில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உடன்குடியில் பி.எச்.ஈ.எல்., மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் இணைந்து கூட்டுத் திட்டத்தின்கீழ், ஒவ்வொன்றும் 800 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய இரண்டு திட்டங்கள் 15-10-2007இல் 8 ஆயிரத்து 362 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்டன. இதில் ஒரு அலகு 2013ஆம் ஆண்டு மார்ச் திங்களிலும்; மற்றொரு அலகு 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலும் நடைமுறைக்கு வந்து உற்பத்தியைத் தொடங்கும்.

வடசென்னை அனல் மின் நிலையத்திலேயே மேலும் 600 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கக் கூடிய ஒரு திட்டம் 2 ஆயிரத்து 475 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 14-7-2008இல் தொடங்கப்பட்டது. இதன் உற்பத்தி 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல், நடைமுறைக்கு வரும்.

ஆயிரத்து 126 கோடி ரூபாய் செலவில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளிலிருந்து, 183 மெகாவாட் இணை மின்சாரம் தயாரிக்கக்கூடிய திட்டம், 14-12-2009இல் தொடங்கப்பட்டது. இதன் உற்பத்தி 2011ஆம் ஆண்டு ஜூலை முதல் இயக்கத்திற்குக் கொண்டுவரப்படும். மொத்தம் 4183 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்டன. 2006இல் தி.மு. கழக ஆட்சி அமைந்த பிறகு, வருங்காலத் தேவையை கருத்தில்கொண்டு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக 2010-2011இல் 1400 மெகாவாட் மின்சாரமும், 2011-2012இல் 3316 மெகாவாட் மின்சாரமும், 2012-2013இல் 1222 மெகாவாட் மின்சாரமும், 2013-2014இல் 1860 மெகாவாட் மின்சாரமும் - ஆக மொத்தம் 7798 மெகாவாட் மின்சாரம் பல்வேறு மின் திட்டங்களின் மூலமாகக் கிடைக்க வழிவகை செய்யப்பட்டது.

இந்தப் புள்ளி விவரங்கள், தி.மு. கழக ஆட்சியில் புதிதாக மின்சாரத்தை உற்பத்திச் செய்யக் கூடிய திட்டங்கள் எதையும் தொடங்கவில்லை என்ற குற்றச் சாட்டிற்குத் தேவையான திடமான விளக்கமாக அமையுமென்று கருதுகிறேன்.

2006ஆம் ஆண்டு தமிழகத்திலே திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி அமைந்த பின்னர் பல்வேறு புதிய தொழிற்சாலைகள் ஆங்காங்கு தொடங்கப்பட்டதால் மின் தேவை அதிகமாயிற்று. 2006ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு டிட்கோ நிறுவனத்தின் முயற்சியினால் 27 தொழில்கள் தொடங்கப்பட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

24 அரசாணைகள் மூலம் 24 தொழில்கள் தொடங்கப்பட அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் இதுவரை மோட்டோரோலா தொழிற்சாலை 27-4-2008 அன்றும், அப்போலோ ரேடியல் டயர்ஸ் தொழிற்சாலை 10-2-2011 அன்றும், சாம்சங் இந்தியா 13-11-2008 அன்றும், சான்மினா (எஸ்.சி.ஐ.) கார்ப்பரேஷன் 2007 டிசம்பரிலும், ஹூண்டாய் மோட்டார் தொழிற்சாலையின் இரண்டாம் பிரிவு 2-2-2008 அன்றும், டெல் கம்ப்யூட்டர்ஸ் 22-4-2008 அன்றும், குரோத்லிங் தொழிற் சாலை 16-7-2008 அன்றும், நோக்கியா சீமென்ஸ் தொழில் நிறுவனம் 16-10-2008 அன்றும், ஹேன்சன் டிரான்ஸ்மிஷன்ஸ் இண்டர்நேஷனல் நிறுவனத் தொழிற்சாலை 24-1-2010 அன்றும், போர்டு விரிவாக்கத் தொழிற்சாலை 5-2-2010 அன்றும், நிசான் இந்தியா கார் தொழிற்சாலை 17-3-2010 அன்றும், ஏ.டி.சி. டயர்ஸ் தொழிற்சாலை என மொத்தம் 12 தொழிற்சாலைகள் திறக்கப்பட் டுள்ளன. இது தவிர சிப்காட் மூலமாகவும், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலமாகவும் புதிய புதிய தொழில்களைத் தொடங்கத் தேவையான உதவிகள் செய்யப்பட்டு அதன் காரணமாகவும் தமிழகத்தில் தொழில்கள் பெருகி, அதற்குத் தேவையான மின்சாரத்தை வழங்க வேண்டிய சூழ்நிலைக்கு தமிழகம் உள்ளாகியது. தமிழகத்தின் உத்தேசமான உச்ச கட்ட மின் தேவை 11 ஆயிரம் மெகாவாட். ஆனால் கழக ஆட்சியிலே மின் உற்பத்தி சுமார் 7300 மெகாவாட்டாக இருந்தது. எனவே பற்றாக்குறை 3700 மெகாவாட். இந்தப் பற்றாக்குறையை சமாளிக்க, கழக ஆட்சியிலே அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. மின் உற்பத்தியாளர்களிடமிருந்து 2200 மெகாவாட் மின்சாரம் கொள்முதல் செய்யப்பட்டது. மின் சந்தையிலிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டது.

நிலக்கரி மூலம் இயங்கும் அனல் மின் நிலையங்களை தனியார் வணிக மின் திட்டங்களாக நிறுவுவதற்கு தமிழக

அரசு ஊக்கமளித்தது. அதன் காரணமாக தமிழகத்தில் 18,140 மெகாவாட் அளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்ய பத்து கடலோர அனல் மின் திட்டங்கள் அமைக்க தனியார் நிறுவனங்கள் முன்வந்தன. அவற்றில் தனியார் நிறுவனம் ஒன்று 1200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய பூர்வாங்க பணிகளை தொடங்கியது. அது 2011-2012ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையெல்லாம் அனுசரித்துத்தான் கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே எதிர்காலத் தேவையைக் கணக்கிட்டு இந்த அளவிற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்குமானால், தற்போது தேவையான மின் உற்பத்தி தொடங் கப்பட்டிருக்கும், தமிழகத்திலே பற்றாக்குறை வந்திருக்காது என்று விளக்கம் தரப்பட்டது.

அனல், புனல், அணு, எரிவாயு மற்றும் காற்றாலை மின் உற்பத்தியைத் தவிர தமிழகத்தில் இணை மின் உற்பத்தி மூலமும், தாவர சக்தி மூலமும் தன் பயன் உற்பத்தி நிலையங்கள் மூலமும் மின் உற்பத்தி செய்யப் படுகின்றது. குறிப்பாக இணை மின் உற்பத்தி மூலம் 487 மெகாவாட்; தாவர சக்தி மூலம் மின் உற்பத்தி 127 மெகாவாட்; தன் பயன் உற்பத்தி மூலம் 851 மெகாவாட்; கழக ஆட்சியில் மின்சாரம் கிடைத்தது. இது தவிர மத்திய அரசு தொகுப்பிலிருந்து 2350 மெகா வாட் மின்சாரம் கேட்டுப் பெற்றோம். உச்ச நேரத் தேவையை சமாளிப்பதற்காக என்று 75 மெகாவாட் மின்சாரம் கூடுதலாக 26-3-2008 முதல் பெறப்பட்டது. மின் கட்டமைப்பில் உள்ள காற்றாலைகளின் மொத்தக் கொள்திறன் அப்போது 4888 மெகாவாட். தனியார் காற்றாலைகள் மூலமாக 2006-2007ஆம் ஆண்டில் 578 மெகாவாட்; 2007-2008ஆம் ஆண்டில் 381 மெகாவாட்; 2008-2009ஆம் ஆண்டில் 431 மெகாவாட் மற்றும் 2009-2010ஆம் ஆண்டில் 600 மெகாவாட்; என்ற அளவிற்கு மின் கட்டமைப்பில் இணைக்கப்பட்டிருந்தது.

"2006 முதல் 2011 வரையிலான கால கட்டத்தில், அதாவது தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எந்தவிதமான விருதையும் இந்த அனல் மின் நிலையங்கள் பெறவில்லை" என்பதும் ஜெயலலிதா அம்மையாரின் குற்றச்சாட்டு!

தூத்துக்குடி அனல் மின் நிலையம், தூத்துக்குடி துறைமுகம் வழியாக அதிக இறக்குமதியின் பேரில் சிறந்த போக்குவரத்திற்கான

விருதை 2006-2007, 2007-2008 மற்றும் 2008-2009 ஆகிய ஆண்டுகளுக்கு இந்திய அரசிடம் பெற்றுள்ளது. மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நான்காம் அலகு 1-10-2009 வரையில் தொடர்ந்து 300 நாட்கள் மின் உற்பத்தி செய்து, மூன்றாவது அலகின் முந்தைய சாதனையான 272 நாட்களை விஞ்சியது, தி.மு. கழக ஆட்சியிலேதான். வடசென்னை அனல் மின் நிலையத்தின் முதலாவது அலகு 2006 மற்றும் 2007ஆம் ஆண்டுகளில் தொடர்ந்து 214 நாட்கள் மின் உற்பத்தி செய்தது.

அடுத்து ஜெயலலிதா தனது முந்தைய ஆட்சிக் காலத்தில் வல்லூர், வட சென்னை அனல் மின் நிலையங்களைப் பற்றிக் குறிப்பிட்டு; தனது அரசு மேற்கொண்ட முயற்சிகளை தி.மு.க. அரசு தொடர்ந்திருந்தால் மின் தட்டுப்பாடு வந்திருக்காது என்றும் கூறியிருக்கிறார். வல்லூர் அனல்மின் நிலையத் திட்டத்திற்கான மொத்த மதிப்பு 8 ஆயிரம் கோடி ரூபாயாகும். இந்தத் திட்டத்தின் அலகுகள் ஒன்று மற்றும் இரண்டிற்கான வேலைகள் - 13-8-2007 அன்று கழக ஆட்சியில் தொடங்கப்பட்டன. அலகு மூன்றிற்கான வேலைகள் 28-7-2009 அன்று தொடங்கப்பட்டது. அலகு ஒன்றுக்கான கொதிகலன் நிறுவப்பட்டு சுழலியின் நிறுவு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முக்கிய இயந்திர சாதனம் தவிர, இதர சாதனங்களை அமைக்கும் வேலைகள் இரண்டு அலகுகளுக்கும் நடைபெற்று வருகின்றன. அலகு மூன்றுக்கான முக்கிய இயந்திர சாதனங்களை வாங்கும் ஒப்பந்தமும் பாரத மிகு மின்கழகத்திற்கு வழங்கப்பட்டு, அதற்கான வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அலகுகள் 1, 2, மற்றும் 3 முறையே ஆகஸ்ட் 2011, அக்டோபர் 2011, செப்டம்பர் 2012இல் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு; அக்டோபர் 2011, டிசம்பர் 2011 மற்றும் நவம்பர் 2012இல் செயலாக்கத்திற்கு கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரை, முக்கிய இயந்திர சாதனங்களுக்கான ஒப்பந்தம், பாரத மிகு மின் கழகத்திற்கு 28-1-2009 அன்று கழக ஆட்சியிலேதான் வழங்கப்பட்டது. ஆகஸ்ட் 2012இல் இத்திட்டம் செயலாக்கத்திற்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 8700 கோடி ரூபாய் மதிப்புடைய உடன்குடி அனல் மின் நிலையத்தின் முதலாவது அலகு மார்ச் 2013லும், இரண்டாவது அலகு செப்டம்பர் 2013லும் செயலாக்கத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆக, கழக ஆட்சியில் எண்ணிப் பார்த்து, திட்ட அறிக்கைகள் தயாரித்து, செயலாக்கத்திற்குப் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை அனுசரித்து, பின்னர் மின் திட்டங்கள் உற்பத்தி நிலையை அடையும்போது, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்திருக்கிறது. மின் தடை தமிழகத்திலே மட்டும்தான் இருக்கிறதா? மற்ற மாநிலங்களில் மின் தடையே இல்லையா?

மராட்டியத்தில் 5200 மெகாவாட் - உத்தரப் பிரதேசத்தில் 2384 மெகாவாட் - கொல்கத்தாவில் 1200 மெகாவாட் - பஞ்சாப்பில் 1500 மெகாவாட் - கர்நாடகாவில் 1120 மெகாவாட் - ஆந்திராவில் 964 மெகாவாட் - கேரளாவில் 364 மெகாவாட் - அரியானாவில் 880 மெகாவாட் - ராஜஸ்தானில் 800 மெகாவாட் மின்பற்றாக்குறை இருப்பதாகவும், தமிழ்நாட்டில் 1178 மெகாவாட் மின்சாரம் மின் பற்றாக்குறை உள்ளதாகவும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஆந்திராவில் நாள் ஒன்றுக்கு 4 மணி நேரத்திற்கு சுழற்சி முறையில் மின்தடை உள்ளது. கர்நாடக மாநிலத்தில் நாள் ஒன்றுக்கு 3 மணி நேரத்திற்கு சுழற்சி முறையில் மின்தடை உள்ளது. தமிழகத்திலும் நாள் ஒன்றுக்கு 3 மணி நேரத்திற்கு சுழற்சி முறையில் மின் தடை செய்யப்படுகிறது.

விவசாயத்திற்கு என்று எடுத்துக் கொண்டால் ஆந்திராவில் மும்முனை மின்சாரம் மொத்தம் 7 மணி நேரம் நாள் ஒன்றுக்கு தரப்படுகின்றது. கர்நாடகாவில் மும்முனை மின்சாரம் நாள் ஒன்றுக்கு 6 மணி நேரம் தான் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் மும்முனை மின்சாரம் நாள் ஒன்றுக்கு மொத்தம் 9 மணி நேரம் வழங்கப்படுகிறது. தொழிற்சாலைகளுக்கு என்று எடுத்துக்கொண்டால் ஆந்திராவில் பொதுவாக மாதத்தில் 8 நாட்களுக்கு மின் தடை - நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 28 மில்லியன் யூனிட் அளவுக்கு மின்தடை. கர்நாடகாவில் தொழிற்சாலைகளுக்கு அன்றாடம் 3 மணி நேரம் மின் தடை உள்ளது; நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 28 மில்லியன் யூனிட் அளவுக்கு மின் தடை. தமிழ்நாட்டில் உயரழுத்த தொழிற்சாலைகள் மற்றும் வணிக பயனீட்டாளர்களுக்கு மின் தேவை மற்றும் பயனீட்டளவில் 30 விழுக்காடு மட்டுமே மின்வெட்டு; நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய

20 மில்லியன் யூனிட் அளவிற்கு மட்டுமே மின் தடை. எனவே மின் பற்றாக்குறை என்பது தமிழ்நாடு போன்ற ஒருசில

மாநிலங்களில் மட்டுமே இருந்து வந்ததற்கு மாறாக; இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களும் மின் பற்றாக்குறையினால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில் அந்த மாநிலங்களிலிருந்தும் தமிழகத்திற்குத் தேவையான மின்சாரத்தைப் பெற இயலாத நிலைமை ஏற்பட்டது.

2001 முதல் 2006 வரையிலான தனது ஆட்சிக் காலத்தில், தமிழ்நாடு மின் வெட்டே இல்லாத மாநிலமாக இருந்தது என்று ஜெயலலிதா சொல்லி பெருமைப்பட்டுக் கொள்கிறார். 1991 முதல் 1996ஆம் ஆண்டு வரை ஜெயலலிதா ஆட்சிக் காலத்திலே 16-10-1992 வரை தமிழ்நாட்டில் மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா? இல்லையா? அது போலவே 3-10-1982 முதல் 26-7-1984 வரை அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மின் கட்டுப்பாட்டு முறை இருந்ததா இல்லையா? 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு அதிகத் தொழிற்சாலைகளை தமிழகத்திலே தொடங்காமல் இருந்திருந்தால் மின் கட்டுப்பாட்டு முறை வந்திருக்காதுதான். அதற்காக தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்காமல் ஓர் அரசு இருக்க முடியுமா?

அ.தி.மு.க. ஆட்சியிலே மின் உற்பத்தி திட்டங்களை அதிகமாகத் தொடங்காத காரணத்தால் கழக ஆட்சியிலே மின் பற்றாக்குறை ஏற்பட்டது. ஆனால் தி.மு.கழக ஆட்சியில் மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கியதன் பயன் நிச்சயமாக வருங்காலத்தில் மின் பற்றாக்குறையை தமிழகத்தில் இல்லாமல் செய்திடும் என்று உறுதியாக நம்பலாம். அ.தி.மு.க. ஆட்சியினர் தங்கள் திறமையால்தான் தமிழகத்திலே மின் பற்றாக்குறை இல்லாத நிலையை ஏற்படுத்தியதாக தற்பெருமை கொள்ளலாம். எப்படியோ; மக்களுக்கு மின்சாரம் கிடைத்தால் போதும்! தடையில்லாத, தரமான மின்சாரம் என்னருந் தமிழ் மக்களுக்குக் கிடைக்குமானால், எல்லார்க்கும் எப்போதும் மகிழ்ச்சிதான்!

அன்புள்ள,

மு.க.

18-6-2011

3570. நம்பிக்கையின் ஒரு துளிதான் இந்தக் கடிதம்!

உடன்பிறப்பே,

சுதந்திரம் மலர்ந்திடவும், நாட்டு மக்களின் வாட்டம் போக்கிடவும், அவர்கள் உரிமைகளைப் பெற்று உயர்ந்திடவும், தமது உடல், பொருள், ஆவி என அனைத்தையும் ஈந்த பழம்பெரும் தேச பக்தர்கள், தியாகிகள் - அவர்கள் காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் - அவர்களை மதித்துப் போற்றியும் - அவர்தம் நினைவு என்றும் நிலைத்திடவும் - ஆவன அனைத்தும் செய்து பழக்கப்பட்டவன் என்ற முறையில் - தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் மறந்து விட்ட ஒரு பெரியவரை "தாடியில்லாத ராமசாமி நாயக்கர்" என்றெல்லாம் மாற்றுக் கட்சிக்காரர்களாலேயே புகழப்பட்ட ஒருவரை; ஆம்; "ஓமந்தூரார்" எனப்படும் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களை - புதிய சட்டமன்ற மாளிகையும், அதையொட்டிய வளாகமும் உருவாக்கப்பட்ட போது - அவருடைய நினைவைப் போற்றும் வகையில், அந்தப் பகுதிக்கு - "ஓமந்தூரார் வளாகம்" எனப் பெயரிட்டு - அந்த வளாகத்தில் அமையும் சட்டமன்றப் பேரவை, மேலவை - அவற்றையொட்டி தலைமைச் செயலகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலகங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கும்; நவீன மயமான வகையில் கலைவாணர் அரங்கத்தை உருவாக்கிடவும்; முனைந்து - ஏறத்தாழ 86 ஆயிரத்து 450 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட "ஏ" பிளாக் என்ற கட்டிட வளாகத்தில் சட்டப்பேரவை கூட்ட அரங்கம் - பேரவைத் தலைவர் அலுவலகம் - மேலவை அரங்கம் - சட்டமன்ற நூலகம் - கூட்ட அரங்கு - மேதகு ஆளுநர் அலுவலகம் - முதலமைச்சர் அலுவலகம் - முதல் அமைச்சரின் செயலகம் - எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் - அமைச்சர்களின் அலுவலகங்கள் - அமைச்சரவை கூட்ட அரங்கம் - தலைமைச் செயலாளர் அலுவலகம் - சட்டமன்றத் துறை - பொதுத்துறை

- நிதித்துறை - உள் துறை - சட்டத்துறை - திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை ஆகிய ஆறு முதன்மையான துறைகளுக்குரிய அலுவலகங்கள் அமையுமாறு அழகுறக் கட்டி முடிக்கப்பட்டது.

இப்புதிய சட்டமன்றப் பேரவை மற்றும் தலைமைச்செயலக வளாகத்தில் 100 அடி உயரம் கொண்ட சட்டமன்றப் பேரவைக் கட்டிடத்தின் மேல் 120 அடி விட்டமும், 100 அடி உயரமும் கொண்ட - இரும்பினால் ஆன குவிமுகக் கோபுரம் அமைக்கப்பட்டு - பிரம்மாண்டமான இக்கட்டிடத்திற்கு மேலும் அழகு சேர்க்கப்பட்டது.

தங்க நிற முலாம் பூசப்பட்ட அலுமினியத் தகடுகளாலும் மெருகேற்றப்பட்ட கருங்கல் பலகையினாலும் இக்கட்டிடத்திற்கு கூரை வேயப்பட்டுள்ளது. இவ்வளாகத்திற்கு பொது மக்கள் தடையின்றி வந்து செல்வதற்காக வரவேற்புக் கட்டடம் ஒன்றும் தனியாக கட்டப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் "பப்ளிக் பிளாசா" என்று அழைக்கப்படும் அந்தப் பகுதியை சென்னை வாலாசா சாலையில் செல்வோர் பார்த்து வியந்து பாராட்டும் காட்சி வர்ணிக்கவே இயலாத ஒன்றாகும். அந்த "ப்ளாசா" வில் தான் நீண்டதொரு தண்ணீர் தொட்டியும் அமைக்கப்பட்டு - நூற்றுக்கணக்கான வண்ண வண்ண மீன்கள் அந்தத் தொட்டியில் நீந்தி விளையாடுவதை - அந்தப் பகுதிக்கு வரும் பள்ளிச் சிறார்களும், ஆண்களும், பெண்களும் கண்டுகளிக்கும் காட்சி அந்தக் கட்டிடத்திற்கே தனிப் பெரும் மாட்சியாக விளங்கியது.

பிரதமர் மன்மோகன் சிங் அவர்களால் திருமதி சோனியா காந்தி அவர்கள் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்ட இந்தப் பெரிய கட்டிடத்தின் வெளிப்புற கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விட்டன என்பதையும் உள்புறக் கட்டுமானப் பணிகளில் பேரவைக் கூட்ட மண்டபப் பணிகள் முடிவடைந்து பேரவையின் கூட்டத் தொடர்கள் நடைபெற்றன என்பதையும்; கட்டிடத்தில் பிற உள் பகுதிகளில் நிறைவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதையும் முழுமையாக எல்லாப் பணிகளுமே ஜூன் 30ந்தேதிக்குள் முடிவடையும் என்பதையும் அரசின் சார்பிலேயே அறிவிக்கப்பட்டது.

ஓமாந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகக் கட்டிடம் என்னுடைய சொந்தப் பணத்திலே கட்டப்பட்டது

அல்ல. அதைக் கூட சில பத்திரிகைகளில் 1200 கோடி ரூபாய் செலவழித்துக் கட்டப்பட்ட கட்டிடம் என்று எழுதுகிறார்கள். தற்போது கட்டி முடிந்துள்ள கட்டிடத்திற்காக திட்டமிடப்பட்ட தொகை 623 கோடியே 99 லட்சம் ரூபாய். அதிலே செலவு செய்யப்பட்டது 479 கோடியே 50 லட்சம் ரூபாய். கட்டப்பட்டு வருகிற பிளாக் "பி" கட்டிடத்திற்கான மதிப்பு 279 கோடியே 56 லட்சம் ரூபாய். இதிலே செலவாகியுள்ள தொகை 72 கோடியே 30 லட்சம் ரூபாய். எனவே 1200 கோடி ரூபாய் செலவழிக்கப் பட்டதாகக் கூறுவது தவறு! தவறு!

செயின்ட் ஜார்ஜ் கோட்டையில்தான் ஏற்கனவே தலைமைச் செயலகம் இயங்கி வந்தது. இந்த இடத்தில் இந்திய ராணுவமும் இருப்பதால் பாதுகாப்பு காரணமாக பொதுமக்கள் எளிதில் வந்து செல்ல முடியாத ஒரு நிலை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. மேலும், அங்கே உள்ள கட்டிடங்களில் ஏதாவது மாறுதல் செய்ய நேரிட்டால்கூட, - ஏன், அங்கே இருக்கும் புல்லைச் செதுக்கி அகற்றுவதற்குக் கூட - இந்திய அரசின் ஒப்புதலைப் பெற வேண்டியிருக்கிறது. வேறு சில அரசு அலுவலகங்கள் நகரின் வெவ்வேறு இடங்களில் இயங்கி வருவதால் அதன் காரணமாக "வாடகை" என்ற பெயரில் கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்கு தொடர்ந்து செலவு ஏற்படுகிறது என்பதாலும்; அனைத்து அலுவலகங்களும் அமையக் கூடிய விதத்தில் புதிய இடத்தை அ.தி.மு.க. அரசு முதலில் தேடி வந்தது. சென்னை கோட்டூர்புரத்தில் தலைமைச் செயலகம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான அடிக்கல் நாட்டு விழா பூஜை - புனஸ்காரங்களோடு நடைபெற்று, அன்றைய முதல் அமைச்சரான ஜெயலலிதாவே அதிலே கலந்து கொண்டார். சென்னை கடற்கரை சாலையில் உள்ள ராணி மேரி கல்லூரி வளாகத்தில் புதிதாக தலைமைச் செயலகம் கட்டுவதற்கு ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த போது முடிவெடுத்தார். நிதி நெருக்கடி அரசுக்கு இருந்தாலும், தொலை நோக்குப் பார்வையோடு புதிய தலைமைச் செயலகத்தை ராணி மேரி கல்லூரி வளாகத்தில் அமைப்போம் என அப்போது அ.தி.மு.க. அரசு தெரிவித்தது. சட்டப் பேரவையில் ஜெயலலிதாவால் அப்போது அறிவிக்கப்பட்டபோதே, "தற்போதைய தலைமைச் செயலகம் தகுதி வாய்ந்ததாக இல்லை. ராணி மேரி கல்லூரி கட்டிடங்கள் மோசமான நிலைமையில் உள்ளன. அதை இடிக்க

வேண்டும். புதிய தலைமைச் செயலக வளாகம் அவசியம்." என்றெல்லாம் கூறப்பட்டது.

அந்தக் கருத்துக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் - தி.மு. கழக ஆட்சியில் கட்டி 14-8-1975 அன்று திறந்து வைக்கப்பட்ட - நாமக்கல் கவிஞர் மாளிகையில், பல இடங்களில் விரிசல் விழுந்துள்ளது என்றும், கசிவு ஏற்படுகிறது என்றும், எனவே கோட்டையில் இருந்து உடனடியாக தலைமைச் செயலகத்தை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்றும் அப்போது ஜெயலலிதா கூறினார். அதையெல்லாம் மனதிலே கொண்டு தி.மு.கழக ஆட்சியிலே புதிய தலைமைச் செயலகம் உருவாக்கப்பட்டது. ஆனால் தற்போது ஜெயலலிதா அந்தப் புதிய தலைமைச் செயலகத்தைப் புறக்கணித்து விட்டு, பழைய தலைமைச் செயலகத்திலேயே தான் இருப்போம், நாமக்கல் கவிஞர் மாளிகையை புனருத்தாரணம் செய்யப் போகிறோம் என்றெல்லாம் ஆரம்பித்திருப்பது விதண்டாவாதம்; வெறுப்பினாலும், காழ்ப்புணர்ச்சியாலும் ஏற்பட்ட விளைவு; என்பதைத்தான் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது புதிய தலைமைச் செயலகம் கட்டப்பட்டு - திறப்பு விழாவும் நடைபெற்று - சட்டப் பேரவைக் கூட்டத் தொடர்களும் நடைபெற்று - ஏழு முறை அமைச்சரவை கூட்டங்களும் நடைபெற்று - முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் எல்லாம் புதிய தலைமைச் செயலகத்திற்கு இடம் மாறிய பிறகு; தலைமைச் செயலகத்தை, பழைய இடத்திலேயே தொடர்ந்து நடத்துவோம் என்றும்; புதிதாக கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தைப் பயன்படுத்தமாட்டோம் என்றும் கூறி, அங்கே வைக்கப்பட்ட பெயர்ப் பலகைகளை எல்லாம் பெயர்த்தெறிகின்ற பணியிலே "ஜெயா" அரசு ஈடுபட்டுள்ளது.

கழக ஆட்சியிலே உருவாக்கப்பட்ட ஓமந்தூரார் வளாகத்திலே உள்ள தலைமைச் செயலகத்திலேதான்; திரிபுரா ஆளுநர் என்னைச் சந்தித்து கட்டிடத்தைப் பார்வையிட்டு, பெரிதும் பாராட்டி முதலமைச்சர் அறைக்கே வந்து அந்த அறையையெல்லாம் சிலாகித்துக் கூறிவிட்டு "இந்தியா கேட்" மாதிரியிலான நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கிச் சென்றார்.

இந்தியக் கிரிக்கெட் குழுவின் தலைவரான மகேந்திர சிங் டோனி அவர்களுக்கு; உலகக் கோப்பையை வென்றதற்காக தமிழக அரசின் சார்பில் சிறப்பு பரிசு புதிய தலைமைச் செயலகத்திலே உள்ள முதலமைச்சர் அறையிலேதான் வழங்கப்பட்டது. பரிசினைப் பெற்றுக்கொண்ட டோனியும் அவரோடு வந்த சுரேஷ் ரெய்னா, அஸ்வின் போன்றவர்களும் தலைமைச் செயலகத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு, வெகுவாகப் புகழ்ந்து சென்றார்கள்.

அதுமட்டுமல்லாமல்; மத்திய அரசின் அமைச்சர்கள், திரு.ப.சிதம்பரம், திரு. ஜி.கே. வாசன், திரு. நாராயணசாமி போன்றவர்களும்; தமிழக ஆளுநர் மேதகு சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும், புதிய தலைமைச் செயலக வளாகத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு பாராட்டி இருக்கின்றார்கள்.

ஏன்; புதிய தலைமைச் செயலகத்திலே உள்ள சட்டப் பேரவை அரங்கிற்கு ஜெயலலிதாவின் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பல நாட்கள் வந்திருந்து கலந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் ஒரு முறை கூட அந்த வளாகத்திற்கே வராமல் இருந்த ஜெயலலிதா, அந்தத் தலைமைச் செயலகத்தை புறக்கணித்துவிட்டு, தமிழகத்திலே உள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் வலியுறுத்திய பிறகும், அந்தக் கட்டிடத்தைப் புறக்கணித்து, பழைய தலைமைச் செயலகத்திலே இயங்கி வந்த "பாவேந்தர்" செம்மொழித் தமிழாய்வு நூலகத்தை இரவோடு இரவாக வெளியே போகச் சொல்லிவிட்டு; அங்கே மீண்டும் சட்டப் பேரவையை நடத்தி முடித்திருக்கிறார். இதிலிருந்து ஓமந்தூரார் வளாகத்திலே உள்ள கட்டிடம் தி.மு.கழக ஆட்சியிலே கட்டப்பட்டது என்பதுதான் அவரது வெறுப்புக்கு ஒரே காரணமாக இருக்க முடியுமென்றும், நிர்வாக வசதி இல்லை என்றெல்லாம் கூறுவது அவரது உள்மனதில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் உணர்வை மறைப்பதற்காகத்தான் என்பதும் நன்றாகப் புலனாகிறது.

தி.மு. கழக ஆட்சியிலே கட்டியதுதான் காரணம் என்றால், தி.மு. கழக ஆட்சியிலே எழுப்பப்பட்ட நாமக்கல் கவிஞர் மாளிகையை மட்டும் புனருத்தாரணம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாமா?

தமிழகத்திலே உள்ள பல மேம்பாலங்கள் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் தானே உருவாக்கப்பட்டன. அந்த மேம்பாலங்களின் வழியாகத்தானே அம்மையார் ஜெயலலிதாவின் கார் செல்லுகிறது!

கருணாநிதி கட்டிய மேம்பாலம், அதிலே நான் பயணம் செய்யமாட்டேன் என்று நிறுத்தி விட்டாரா என்ன? இன்னும் சொல்லப் போனால் கடந்த வாரம் டெல்லி சென்றபோது அவசர அவசரமாக டெல்லி தமிழ்நாடு இல்லத்தை சீர்படுத்தி அங்கே சென்று தங்கினாரே; அந்தத் தமிழ்நாடு இல்லம் எப்படி வந்தது?

ஒருமுறை நானும், முரசொலி மாறனும் டெல்லியில் பேசிக்கொண்டிருந்தபோது, பெரிதாக அமைந்துள்ள ஆந்திர பவனை மாறனிடம் சுட்டிக்காட்டி, ஆந்திர மாநில அரசு டெல்லியிலே அவ்வளவு எழிலாக தனது விருந்தினர் இல்லத்தைக் கட்டியிருக்கும்போது, தமிழ்நாடு இல்லத்திற்கு அப்படியொரு இடம் வேண்டாமா என்று நான் கேட்டு - அதன் பிறகு முரசொலி மாறனும், நமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் முயற்சியெடுத்து, தற்போதுள்ள இடத்தைத் தேர்வு செய்து, அதிலே கட்டிடம் கட்டியபோது நானே நான்கைந்து முறை நேரில் சென்று பார்வையிட்டு, எழும்பிய மாளிகைதானே தற்போது உள்ளது. அம்மையார் ஜெயலலிதா அங்கேதானே சென்று தங்கினார். தி.மு. கழக ஆட்சிக்காலத்தில் நான் முயற்சி எடுத்துக் கட்டிய கட்டிடம் என்பதற்காக அங்கே போகாமலா இருந்துவிட்டார். கோபம் என் மீதுதானே தவிர; நான் கட்டிய புதிய தலைமைச் செயலகக் கட்டிடம் என்ன "பாவம்" செய்தது?

எனவே முதலமைச்சர் பொறுப்புக்கு மூன்றாவது முறையாக வந்துள்ள ஜெயலலிதா அவர்கள் இனியாவது, அரசியலில் பக்குவப்பட்ட ஒரு தலைவராக தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். தி.மு.கழக ஆட்சி செய்ததையெல்லாம் நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று பிடிவாதம் பிடிப்பது என்பது அவர் இருக்கும் பதவிக்கு அழகல்ல. எந்தவிதப் பெருமையையும் சேர்க்காது. மக்களின் வரிப் பணத்தைச் செலவழித்து கட்டப்பட்ட கட்டிடங்களை வேண்டாமென்று கூறுவது தன்னிச்சையான போக்கு மட்டுமல்ல; மக்களையே அவமதிப்பதாகும். அவர்களே கூறிய கசிவு ஏற்பட்டுள்ள, விரிசல் உள்ள கட்டிடத்திற்கு தலைமைச் செயலகத்தை மாற்றி, அதன் பிறகு அங்கே ஏதாவது அசம்பாவிதம் நடைபெற்றால், அதற்கு முழு பொறுப்பையும்

புதிய ஆட்சியாளர்கள்தான் ஏற்க வேண்டும். சட்டப்பேரவை மண்டபத்தை மீண்டும் மாற்றுவதால் செம்மொழி ஆய்வு மையத்தின் நூலகத்தை தேவையில்லாமல் மாற்றியிருக்கிறார்கள். இது தமிழுக்குச் செய்யப்பட்ட நன்மையல்ல. புதிய அரசு நிறைவேற்றப்பட வேண்டிய பல்வேறு நலத் திட்டங்கள், மக்களுக்கு ஆற்றிட வேண்டிய முக்கிய பணிகள் ஏராளமாக இருக்கும்போது தலைமைச் செயலகத்தை மாற்றுவதில் அரசு இயந்திரத்தின் முழுக் கவனத்தையும் செலவழிப்பது வீண் வேலை, தனி மனிதர் ஒருவரின் பிடிவாதத்திற்காக அரசு நிர்வாகத்தைத் திசை திருப்பும் செயலாகும்.

புதிய தலைமைச் செயலகம் தமிழக அரசுக்குச் சொந்தமான இடம். அனைத்து அலுவலகங்களையும் ஒரே இடத்தில் அமைத்திட முடியும். ஆனால் பழைய தலைமைச் செயலகம் மத்திய அரசுக்குச் சொந்தமானது. காலத்தின் மாற்றத்திற்கேற்ற நிர்வாகத் தேவைகளை அங்கே நிறைவு செய்திட முடியாது. தமிழக அரசுக்குச் சொந்தமான புதிய இடத்தை விட்டு விட்டு, வேண்டுமென்றே பழைய இடத்திற்கு போவது என்பது முறையான நிர்வாகச் செயல்பாடு அல்ல. ஆட்சிகள் மாறும்போது சில திட்டங்கள், சட்டங்கள் மாறலாமே தவிர; அடிப்படையில் முந்தைய ஆட்சி செய்த மக்கள் நலத் திட்டங்களையெல்லாம் புறந்தள்ள வேண்டும் என்பது ஓர் ஆட்சி மாற்றத்தின் நெறிமுறையாக இருக்க வேண்டிய அவசியமில்லை. இத்துடன் நிறுத்துகிறேன். இதற்கு மேல் நான் எதுவும் எழுதத் தேவையில்லை என்று கருதுகிறேன். பகுத்தறிந்து பார்க்கும் - பழக்கமும் தெளிவும் தமிழ் மக்களுக்கு அறவே அற்றுப்போய் விட்டதாக நான் கருதவில்லை. அந்த நம்பிக்கையின் ஒரு துளிதான் இந்தக் கடிதம்.

அன்புள்ள,

மு.க.

19-6-2011

3571. ஒன்று போதுமே; உதாரணம்!

உடன்பிறப்பே,

"புதிய தலைமைச் செயலகக் கட்டுமானம் குறித்து எழுந்துள்ள புகார்கள் பற்றி விசாரிப்பதற்காக நீதிபதி தங்கராஜ் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையம் ஒன்றை தமிழக அரசு அமைத்துள்ளது" என்று ஏடுகளில் செய்தி வந்துள்ளது. புதிய தலைமைச் செயலகக் கட்டுமானம் குறித்து இதுவரை யாரும் புகார்கள் கொடுத்ததாக எந்தச் செய்தியும் ஏடுகளிலே வரவில்லை. தமிழக அரசினரே தங்களுக்குத் தாங்களே புகார் வந்ததாக செயற்கையாகக் கூறிக்கொண்டு, அந்தப் புகார்களை விசாரிப்பதற்காக விசாரணை ஆணையம் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ள அந்த புதிய தலைமைச் செயலகத்தில் வந்து குடிபுகாமல் இருப்பதற்காக - தமிழக அரசின் சார்பில் கட்டப்பட்ட அந்த மாளிகையைப் பயன்படுத்தாமல் இருப்பதால் தன்னை பொதுமக்கள் இழித்துரைக்கக் கூடும் என்பதை நன்குணர்ந்த ஜெயலலிதா; அந்தக் குற்றச் சாட்டிலிருந்து தப்பிப்பதற்காகத்தான் திட்டமிட்டு வேண்டுமென்றே இப்படியொரு விசாரணைக் கமிஷனை அமைத்துள்ளார் என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்றாகவே உணர்வார்கள். இதற்காகவே ஒரு புகார் பட்டியலை இவர்களாகவே தயாரித்துக் கொண்டு, அதன் மீது இந்த விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்கான வரையறைகளாக கட்டுமானத் தரத்தில் குறைகள் - கட்டுமானப் பணியை முடிக்கத் தேவையில்லாத கால தாமதம் - கட்டுமானத்தின்போது பல முறைகேடுகள் - தேவையில்லாத செலவினங்கள் என்றெல்லாம் இட்டுக்கட்டி கூறப்பட்டுள்ளன. தேவையில்லாத செலவினங்கள் என்று விசாரணையாம்! விசாரணை வைத்திருப்பவர்கள் யார் தெரியுமா? முதலமைச்சர் ஜெயலலிதா டெல்லிக்குச் சென்று ஒரு நாள்

பிரதமரை மரியாதைக்காக சந்திக்கச் சென்றார் என்பதற்காக முதல் அமைச்சர் தங்கும் அறையே மாற்றம் செய்யப்பட்டது, சாலையே புதிதாக போடப்பட்டது; இதற்காக தனியாகச் செலவழிக்கப் பட்டது எவ்வளவு? தி.மு.கழக ஆட்சியில் கட்டப்பட்ட தலைமைச் செயலகத்தைப் பயன்படுத்த மறுத்து; மீண்டும் செம்மொழி தமிழாய்வு நூலகத்தை அப்புறப்படுத்திவிட்டு, அங்கே சட்டமன்றப் பேரவையை உருவாக்குவதற்காக செய்யப்பட்ட செலவு எவ்வளவு? பழைய தலைமைச் செயலகத்திலேயே தொடர்ந்து செயல்படுவதற்காக செய்யப்பட்ட செலவுகள் எவ்வளவு? சாதாரண பயணிகள் செய்யும் விமானத்தைப் பயன்படுத்தாமல் தனியார் விமானத்தை முதலமைச்சர் கையாளுவதால் ஏற்படும் செலவுகள் எவ்வளவு? இந்த வீண் செலவுகளைப் பற்றியெல்லாம் விசாரணைகள் வேண்டாமா?

விசாரணை ஆணையத்திற்கு தலைமையேற்கப் போகிறவர் யார்? நீதிபதி தங்கராஜ் அவர்கள். இவரைப் பற்றிய வரலாற்றை தமிழ்நாடு மறந்திருக்கக்கூடும். எனவே அதை மீண்டும் நினைவூட்டுகிறேன்.

தமிழக அரசின் தொழில் துறைக்குச் சொந்தமான தமிழ்நாடு சிறு தொழில்கள் கழகத்திற்கு அதாவது டான்சி நிறுவனத்திற்கு உரிய வார்ப்படத் தொழிற்சாலை ஒன்று 1985ஆம் ஆண்டு மூடப்பட்டது. 1991ஆம் ஆண்டு ஜூன் மாதம் தமிழக முதலமைச்சரான ஜெயலலிதா, தொழில் துறையையும் தன் பொறுப்பில் வைத்துக் கொண்டார். 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் அமைச்சராக இருந்த ஜெயலலிதாவும், அவரது உடன்பிறவாச் சகோதரி சசிகலாவும் ஜெயா பதிப்பகத்தின் பங்குதாரர்கள் என்ற வகையில், கிண்டியில் உள்ள டான்சிக்குச் சொந்தமான அந்த மதிப்புமிக்க நிலத்தை வாங்குவதற்காக டான்சியின் நிர்வாக இயக்குனருக்கு விண்ணப்பித்தனர்.

அந்த நிலம் 3.0786 ஏக்கர் அல்லது 12.462 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. அங்கு கட்டப்பட்ட கட்டிடத்தின் அளவு 30,196 சதுர அடி. அரசு மதிப்பின்படி அந்த நிலம் ரூ. 4.43 கோடி. பொதுப்பணித் துறை மதிப்பீட்டின்படி அந்தக் கட்டிடம் மற்றும் இயந்திரங்களுடன் சேர்ந்து அதன் மொத்த மதிப்பு ரூ. 4.93 கோடி. ஜெயா பதிப்பகம் அதை ரூ. 1.82 கோடிக்கு ஏலம் கேட்டு, பின்னர்

வாங்கிக் கொண்டது. தொழில் துறைக்கு பொறுப்பேற்றவர் என்ற முறையில் ஜெயலலிதாவே அந்த நிலத்தை விற்பவர் - ஜெயா பதிப்பகத்தின் பங்குதாரர் என்ற முறையில் ஜெயலலிதாவே அந்த நிலத்தை வாங்குபவர். இது இந்தியத் தண்டனைச் சட்டம் 169வது பிரிவின்படி குற்றமாகும். வெகு சில விளக்கங்களுடன் மிகக் குறைந்த அளவே வெளியாகும் தமிழ்ப்பத்திரிகை ஒன்றில் ஒரே ஒரு முறை விளம்பரம் செய்யப்பட்டு, அதற்கான விற்பனை முடிவானது.

அரசின் கணக்குப்படி அந்த நிலத்திற்கு 57.58 இலட்ச ரூபாய் பத்திரப் பதிவிற்காக வாங்கியிருக்க வேண்டும். ஆனால் மிகக் குறைந்த விலைக்கு வாங்கிய காரணத்தால், 24.36 லட்ச ரூபாய்தான் பத்திரப் பதிவுக்கான கட்டணமாக வாங்கப்பட்டது.

இந்த வழக்கிற்கான ஆதாரங்களைப் பரிசீலித்த தனி நீதிமன்றம் இதை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. பின்னர் குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கிற்கு பதில் அளிப்பதற்குப் பதிலாக சென்னை உயர் நீதிமன்றத்தில் ஜெயலலிதா மேல் முறையீடு செய்தார். அந்த முறையீட்டை ஏற்றுக் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதி அந்த வழக்கை தனி நீதி மன்றத்தில் தொடர்ந்து நடத்த தகுந்த அடிப்படை ஆதாரங்கள் எதுவும் இல்லை என்று கூறினார்.

அவ்வாறு தீர்ப்பு கூறிய உயர்நீதிமன்ற நீதிபதிதான் மேதகு எஸ். தங்கராஜ் அவர்கள். அப்போதே அந்தத் தீர்ப்பு பலத்த சர்ச்சையைக் கிளப்பியது. பெரும்பாலான ஏடுகளும், சட்ட நிபுணர்களும் அந்தத் தீர்ப்பு சரியல்ல என்று கருத்து வெளியிட்டார்கள். வார இதழ் "கல்கி" ஏடு "ஜெயலலிதா நீங்கலான அனைத்து இந்தியர்களையும் ஆச்சரியத்தில் மூழ்க வைத்த தீர்ப்பு இது" என்று கூறியது. அவரைத்தான் தற்போது தமிழக அரசின் தலைமைச் செயலகக் கட்டிடத்திற்கான விசாரணை ஆணையத் தின் தலைவராக தமிழக அரசு தேடிப் பிடித்து நியமித்துள்ளது.

பின்னர் இந்த வழக்கு உச்ச நீதி மன்றம் வரை சென்றதும், அங்கே இந்த நிலத்தை ஜெயலலிதா, அரசுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பு கூறியதும் அனைவரும் அறிந்த உண்மை என்பதால் அதுபற்றி யெல்லாம் நான் விவரித்திட விரும்பவில்லை.

மற்றொரு நிகழ்ச்சி. சென்னை திருமங்கலத்தைச் சேர்ந்தவர் பிரபல தொழிலதிபர் வேலுச்சாமி. இவரிடம் அண்ணா நகரைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் அதிபர் எஸ்.கே. கிருஷ்ணமூர்த்தி தனது வீட்டை ரூபாய் பத்து இலட்சத்துக்கு அடமானம் வைத்தார். பிறகு அந்த வீட்டை கிருஷ்ணமூர்த்தி மலேசியா வில் உள்ள தொழிலதிபர் ஜெயபால் என்பவருக்கு விற்றுவிட்டார். இதனால் வேலுச்சாமி பணத்தைத் திருப்பிக் கேட்டார். கிருஷ்ணமூர்த்தி பணத்தைத் திருப்பிக் கொடுக்காமல் ஏமாற்றி வந்தார். இந்த நிலையில் கிருஷ்ணமூர்த்தி மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து அடமானம் வைத்த வீட்டை ஏலத்துக்குக் கொண்டு வர வேலுச்சாமி ஏற்பாடு செய்தார். இதை யறிந்த கிருஷ்ணமூர்த்தி நேராக வேலுச்சாமி அலுவலகத்துக்குச் சென்று வீட்டு அடமான பத்திரத்தைக் கேட்டு தகராறு செய்தார். அப்போது துப்பாக்கி யைக் காட்டி மிரட்டினார். உடனே வேலுச்சாமி சத்தம் போட்டார். இந்தச் சத்தத்தைக் கேட்டதும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் ஓடி வந்தனர். அதற்குள் கிருஷ்ணமூர்த்தி ஆட்டோவில் தப்பி ஓடி விட்டார்.

இதைப்பற்றி வேலுச்சாமி திருமங்கலம் போலீசில் புகார் கொடுத்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து கிருஷ்ணமூர்த்தியை கைது செய்தனர். அவர் வீடியோ கடையில் சோதனை போட்டனர். அங்கிருந்த ஆபாச சி.டி.க்கள், கேசட்டுகளை கைப்பற்றினர். அவரது வீட்டில் சோதனை போட்டபோது போலி துப்பாக்கி, முக்கியமான தஸ்தாவேஜ்கள் சிக்கியது. இதனால் கிருஷ்ண மூர்த்தியை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி நான்கு நாட்கள் போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தார்கள்.

கிருஷ்ணமூர்த்தி போலீசாரிடம் கூறிய விவரம் – "நான் ரியல் எஸ்டேட் வீடியோ கடை வைத்து நடத்தி வருகிறேன். ரியல் எஸ்டேட் தொழிலில் ஈடுபட்டதால் அரசியல் கட்சி பிரமுகர்கள், நீதிபதிகள், போலீஸ் அதிகாரிகள் உட்பட பலரிடம் பழக்கம் ஏற்பட்டது. மலேசியாவில்கூட நண்பர் உண்டு. கடந்த 16-10-1999ந்தேதி ஏர் இந்தியா விமானத்தில் நான், உயர்நீதி மன்ற நீதிபதி தங்கராஜ், வழக்கறிஞர் செல்வராஜ், ஓய்வு பெற்ற போலீஸ் சூப்பிரெண்ட் செல்வரத்தினம் ஆகியோர் மலேசியாவுக்குச் சென்றோம். அங்கு தொழிலதிபர் ஜெயபால் ஏற்பாடு செய்த நட்சத்திர ஓட்டலில் பத்து நாட்கள் தங்கியிருந்து விட்டு, 26-

10-99ந்தேதி திரும்பி வந்தோம்.” இவ்வாறு அவர் கூறியதாக அப்போது ஏடுகளிலே பரபரப்பாகச் செய்தி வந்தது. அப்படிப்பட்ட குற்றவாளி கிருஷ்ண மூர்த்தியுடன் பத்து நாட்கள் மலேசியா சென்று தங்கியிருந்து விட்டு வந்ததாக சொல்லப்பட்டவர்தான் நீதிபதி தங்கராஜ். அவர்தான் தற்போது தலைமைச் செயலகக் கட்டிடத்தைப் பற்றி விசாரிக்கப் போகிறார். நீதியரசர் மலேசியாவில் எடுத்துக்கொண்ட புகைப்படங்கள் எல்லாம்கூட அப்போதே வெளிவந்தன. எந்த அளவுக்குப் பொருத்தமானவரை விசாரணை ஆணையத்தின் தலைவராக அ.தி.மு.க. அரசு தேடிப்பிடித்து நியமித்திருக்கிறது என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதாதா?

அன்புள்ள,

மு.க.

30-6-2011

3572. “100” கருணாநிதிகளால் முடியாதுதான்!

உடன்பிறப்பே,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் தா. பாண்டியன் அவர்கள், தி.மு. கழகத்தோடு உறவு நிலையில் இருந்த காலத்திலேயே அந்தக் கட்சியைச் சேர்ந்த தொண்டர்களும், தலைவர்களும் நம்மோடு ஒன்றுபட்டு தோழமை உணர்வோடு இருந்த போது கூட - தோழர் தா. பாண்டியன் அவர்கள் ஒருவித “அலர்ஜி”யோடுதான் பழகுவார். பொதுத் தேர்தலுக்கு முன்பே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அ.தி.மு.க. வோடு உறவு கொள்ள வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடும், ஆர்வத்தோடும் செயல்பட்டவரும் அவர்தான் என்பதை அந்தக் கட்சியிலே உள்ள தொண்டர்களும், முன்னணியினரும் நன்றாகவே அறிவார்கள். ஆனால் எந்தவொரு கருத்திலும் எந்த அளவிற்கு அவர் உறுதியோடு இருப்பார் என்பது கேள்விக்குரியது. கடந்த வாரத்திலே கூட ஒரு நிகழ்ச்சியிலே பேசும்போது புதிய அ.தி.மு.க. அரசிலே அமைச்சர்கள் மாற்றத்தைத் தவிர வேறு எதுவும் நடை பெறுவதில்லை என்று அவர் பேசி, அது அவருடைய கட்சியின் அதிகாரப்பூர்வ ஏடான “ஜனசக்தி” முதல் ஆங்கில ஏடுகள் வரையிலே வெளிவந்ததை நான் எடுத்துக்காட்டியிருந்தேன். அந்த என்னுடைய கருத்துக்குப் பதிலாக “ஜனசக்தி”யின் செய்தியாளர் அவருடைய அந்த நிகழ்ச்சிக்கே வரவில்லை என்றும், வேறு ஏடுகளில் வந்த செய்தியைப் பார்த்து வெளியிடப்பட்டுவிட்ட பேச்சு அது என்றும் மறுப்பு தெரிவித்திருந்தார். அவருடைய பேச்சு அ.தி.மு.க. வின் ஆதரவு வார இதழான “துக்ளக்” கிலும் வெளிவந்து, அதற்கும் தா. பாண்டியன் மறுப்பு வெளியிட்டிருந்தார். ஆனால் தா. பாண்டியன் கலந்துகொண்டு பேசி விட்டுச் சென்ற பிறகு, அதே நிகழ்ச்சியில் பேசிய அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் - ஜெயலலிதா

அமைச்சர்களை மாற்றியதில் எந்தக் குற்றமும் இல்லை என்று தா. பாண்டியனுக்கு பதில் கூறியதும் "துக்ளக்" இதழிலே வெளிவந்து, தா. பாண்டியன் பேசியது உண்மையா இல்லையா என்பதை தெள்ளத் தெளிவாக உலகத்திற்குக் காட்டிவிட்டது.

ஜெயலலிதா அரசு பொறுப்புக்கு வந்த இரண்டு மாதங்களுக்குள்ளேயே 4200 கோடி ரூபாய் அளவிற்கு வரிகளை விதித்துள்ளது. அதைப்பற்றி அனைத்துக் கட்சியினரும் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தா. பாண்டியன் அதைப் பற்றி ஒரு பேட்டியில் பதில் கூறியதாக சில ஏடுகள் வெளியிட்டுள்ளன.

குறிப்பாக "தினத்தந்தி"யில், "தமிழக அரசுக்கு ரூ. 98 ஆயிரம் கோடி கடன் இருப்பதாக முந்தைய அரசு அறிவித்தது. ஆனால் தமிழக அரசுக்கு ரூ. 1 லட்சத்து 25 ஆயிரம் கோடி கடன் இருப்பது தெரிய வந்துள்ளது. இதற்கு அசல் மற்றும் வட்டியை அரசு செலுத்த வேண்டியது உள்ளதால் பொருள்களின் மீது வரி விதித்திருப்பது தவிர்க்க முடியாதது" என்று பொதுமக்கள் மீது 4200 கோடி ரூபாய்க்கு வரிகள் விதிக்கப்பட்டதற்கு நியாயம் கற்பித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் கூறியிருக்கிறார்.

நல்லவேளையாக "ஜனசக்தி" இதழில் இந்தப் பேட்டியினை வெளியிடும் போது, இந்த வரிகளில் எவையெவை எந்தெந்த உற்பத்தி தொழில்களைப் பாதிக்கும் என்பவற்றைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து, அதைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம் என்றும் அவை முழுமை அடைந்ததும் அந்தக் கட்சி அறிவிக்கும் என்றும் கூறியதாக விளக்கம் தந்துள்ளது.

வார இதழ் ஒன்றுக்கு - ஜெயலலிதா அரசு திடீரென்று விதித்துள்ள வரி விதிப்புகள் குறித்து பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளனவே என்ற கேள்விக்கு விடையளித்துள்ள தா.பாண்டியன், "முன்னாள் முதல்வர் கருணாநிதி வாங்கிய கடனுக்கு வட்டி கட்டுவதற்காகப் போடப்பட்டுள்ள வரிகள் அவை. கடந்த ஆட்சியில் 1.25 லட்சம் கோடி ரூபாய்க்கு கடன் சுமையை கருணாநிதி ஏற்றி வைத்துள்ளார். அதனைத் தீர்க்க நிலைமையைச் சீராக்க இந்த வரி உயர்வு கூட போதாது. இன்னும் கருணாநிதி மீதும் வரி போட வேண்டும். கடந்த முறை அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோதும் இதே போலத்தான் தமிழகத்தைப் பெரிய கடன்

பள்ளத்தில் தள்ளி இருந்தார் கருணாநிதி. இந்தப் பள்ளத்தை நிரப்பி சீர் செய்யவே, அ.தி.மு.க. அரசுக்கு ஒரு வருடம் பிடிக்கும். அதனால், வரி உயர்வு பற்றிப் பேச கருணாநிதிக்கு யோக்கியதையே கிடையாது" என்று பதில் சொல்லியிருக்கிறார்.

கேள்வி கேட்டவர், பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளனவே, அது பற்றி என்ன கூறுகிறீர்கள் என்று வினவினால், தேவையில்லாமல் என் மீது பாய்ந்து பிறாண்டியதோடு, தி.மு. கழக ஆட்சியிலே கூட அல்ல, நானே கடன் சுமையை அ.தி.மு.க. அரசு மீது சுமத்தியிருப்பதாகப் பதில் கூறி, அதற்காக புதிதாக வரி விதித்ததில் தவறில்லை என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் சொல்லியிருக்கிறார். அ.தி.மு.க. அரசு 4200 கோடி ரூபாய்க்கு வரிகளை விதித்திருப்பதில் தவறில்லை என்பது போல தா. பாண்டியன் கூறியது தங்களுக்கும் ஒத்தக்கருத்து தானா என்பதை அந்தக் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் நல்லகண்ணு, கோபு, சிவபுண்ணியம், சுப்பராயன் போன்றவர்கள்தான் சொல்ல வேண்டும்.

அது மாத்திரமல்ல; தமிழக அரசின் கடன் விவரங்கள் பற்றி அரசின் சார்பில் பலமுறை விளக்கம் தரப்பட்ட பிறகும், தா. பாண்டியன் நான் ஏதோ 1.25 லட்சம் கோடி ரூபாய் கடன் சுமையை அரசுக்கு ஏற்றி வைத்து விட்டதாகச் சொல்லுகிறார். இதே குற்றச்சாட்டினை அ.தி.மு.க. வின் முதலமைச்சர் ஜெய லலிதாவும் கூறி நான் அதற்கு 1-7-2011 அன்று விளக்கமாகப் பதில் கூறியிருக்கிறேன். அதற்கு முன்பே தா. பாண்டியன் அவர்களும் இதே குற்றச்சாட்டினைக் கூறி அதற்கும் 13-2-2011 அன்று விளக்கமான பதிலை அளித்திருக்கிறேன். அதையெல்லாம் தா. பாண்டியன் படித்தாரா, படிக்கவில்லையா என்று தெரிய வில்லை. இருந்தாலும் அவர் இப்போதாவது புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக மீண்டும் ஒரு முறை தெரிவிக்கிறேன். இந்த ஆட்சியினர் மீது 1.25 லட்சம் கோடி ரூபாய் கடன் சுமையை தி.மு.கழக அரசு ஏற்றி வைத்து விடவில்லை. 31-3-2006 அன்றே, அதாவது தா. பாண்டியனின் அபிமானத்திற்குரிய ஜெயலலிதா ஆட்சி புரிந்த ஐந்தாண்டு காலத்திற்கு பிறகு தமிழக அரசின் மொத்தக் கடன் பொறுப்பு 57 ஆயிரத்து 457 கோடி ரூபாயாகும்.

இது ஜெயலலிதா, தி.மு. கழக அரசின் மீது ஏற்றி வைத்துவிட்டுச் சென்ற கடன் சுமை. அந்தக் கடன் சுமையைக் குறைக்க தி.மு. கழக அரசு எந்த வரியையும் ஜெயலலிதா மீதும் விதிக்கவில்லை, தா. பாண்டியன் மீதும் விதிக்கவில்லை.

மேலும் தா. பாண்டியன் அளித்துள்ள பேட்டியில், தமிழக அரசுக்கு ரூ. 98 ஆயிரம் கோடி கடன் இருப்பதாக முந்தைய அரசின் சார்பில் நிதியமைச்சர் பேராசிரியர் கூறியிருந்தார், ஆனால் தமிழக அரசுக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இருப்பது தெரிய வந்துள்ளது என்று தி.மு. கழக ஆட்சியிலே ஏதோ பெரிய பொய் ஒன்றினைக் கூறிவிட்டதைப் போலக் கற்பனை செய்து கொண்டு சொல்லியிருக்கிறார்.

தி.மு. கழக அரசின் சார்பில் 5-2-2011 அன்று பேரவையில் வைக்கப்பட்ட இடைக்கால நிதி நிலை அறிக்கை - பக்கம் 55இல், "சேம நல நிதி முதலிய பொறுப்புகளை உள்ளடக்கிய மாநில அரசின் மொத்தக் கடன் 31-3-2006 அன்று ரூபாய் 57,457 கோடியாக இருந்தது. இது 31-3-2011இல் ரூபாய் 1,01,541 கோடியாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது" என்று சொல்லப்பட்டிருப்பதை தா.பாண்டியன் இப்போதாவது எழுத்துக் கூட்டியாவது படித்துப் பார்த்து தெளிவு பெறலாம். எனவே 98 ஆயிரம் கோடி கடன் இருப்பதாக தி.மு. கழக அரசில் யாரும் தவறாகக் கூறி விடவில்லை. 10-2-2011 அன்று இடைக்கால நிதி நிலை அறிக்கை மீதான விவாதத்திற்குப் பதில் கூறும்போது கூட, அன்றைய நிதியமைச்சர் பேராசிரியர் அவர்கள், அ.தி.மு.க. அரசு வைத்து விட்டுப் போன கடன் 56 ஆயிரம் கோடி ரூபாய். அதுதான் தற்போது ஏறத்தாழ 1 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது என்று தெரிவித்தார். எனவே தவறான புள்ளி விவரம் எதையும் கழக அரசின் சார்பில் யாரும் தந்து விடவில்லை.

இன்னும் கூற வேண்டுமேயானால், 2005-2006ஆம் ஆண்டின் இறுதியில் ஜெயலலிதா ஐந்தாண்டுகள் ஆட்சி செய்த பிறகு மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 22.29 சதவிகிதமாக இருந்த கடன் பொறுப்புகளின் அளவு; 2010-2011ஆம் ஆண்டில் தி.மு. கழக அரசின் ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகு 19.58 சதவிகிதமாகக் குறையும் என்று தி.மு.க.வின் இடைக்கால நிதி நிலை அறிக்கையிலேயே தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இறுதியாக அந்த வார இதழின் சார்பாக தா. பாண்டியனிடம் "உங்கள் மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள்..... சமச்சீர் கல்வி நிலைப்பாட்டில் ஆளும் கட்சியின் அத்தனை நடவடிக்கைகளும் திருப்திகரமாக இருக்கின்றனவா?" என்று கேட்டிருக்கிறார்கள். தி.மு. கழக ஆட்சியில் பல குழுக்களை நியமித்து, பல மாநிலங்களுக்குச் சென்று அங்கெல்லாம் சமச்சீர் கல்வி எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றெல்லாம் ஆய்ந்து; மூன்றாண்டுகள் பல்வேறு கட்டக் கலந்தாலோசனைகள் முடிந்து; அதன் பிறகும் அவசரம் காட்டாமல் படிப்படியாக நடைமுறைப்படுத்தலாம் என்று முதல் ஆண்டில் 2 வகுப்பு களுக்கு மட்டுமே சமச்சீர் கல்வி கொண்டு வரப்பட்டது. ஆனால் அ.தி.மு.க. அரசில் முதல் நாள் அறிவித்துவிட்டு, மறுநாள் பேரவையில் திருத்தச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றி னார்கள். நீதி மன்றமே ஏன் இந்த அவசரம் என்று கேட்டது. ஆனால் தா. பாண்டியன் அளித்த பதிலில், "தி.மு.க. மாதிரி அவசர கதியில் அரைகுறைச் சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கொண்டு வர ஜெயலலிதா விரும்பவில்லை. எனவே இந்த விஷயத்தில் அ.தி.மு.க. வின் நிலைப்பாடுதான் சரியானது" என்று கூறியதோடு; 100 கருணாநிதிகள் ஒன்று சேர்ந்தாலும், ஒரு ஜெயலலிதா ஆக முடியாது என்று முடித்திருக்கிறார். உண்மை தான்! இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளரையே இந்த அளவிற்கு ஜெயலலிதா பேட்டி கொடுக்க வைத்துள்ளாரே; ஆம், சட்டப் பேரவையில் ஒரு முறை ஜெயலலிதா, இந்த நாட்டில் "தகர டப்பா" கண்டுபிடித்ததே கம்யூனிஸ்ட்கள் உண்டியல் குலுக்குவதற்காகத்தான் என்று பேசினாரே; அப்படிப்பட்ட வசை மாரி பொழியும் ஜெயலலிதாவாக உருவெடுக்க 100 கருணாநிதிகளாலும் முடியாதுதான்!

அன்புள்ள,

மு.க.

19-7-2011

3573. அல்லல் நீங்கும்; தொல்லை குறையும்!

உடன்பிறப்பே,

"ஆரம்பமாகி விட்டன அரூபத்தின் லீலைகள்!"

என்று "மனோகரா" படத்தில் ஒரு உரையாடல் கேட்டிருப்பாய்!

அதைத் தொடர்ந்து வருகின்ற வசந்த சேனையின் அட்டகாசங்களையும் பார்த்திருப்பாய்!

எதுவுமே அறியாமல் அவள் மடிதான் தனக்குச் சொர்க்கலோக மெத்தை என்று கூறிக் கொண்டு சொக்கிக் கிடக்கும் புருசோத்தம மன்னனையும் கண்டிருப்பாய்!

இப்படி அந்தக் கதையில் வரும் பாத்திரங்கள் - மனோகரனாலும் - அவனைப் பெற்றெடுத்த பத்தினித் தங்கமாம் பத்மாவதியின் சாபத்தினாலும் - எப்படியெல்லாம் பட்டொழிந்தார்கள்; கெட்டுத் தொலைந்தார்கள் என்ற முடிவையும் ரசித்து மகிழ்ந்திருப்பாய்!

இது நாடகத்தில் - திரைக் காவியத்தில் படமாக மட்டுமல்ல; பாடமாகவும் உன் நெஞ்சில் பதிய வைக்கப்பட்ட பம்மல் சம்மந்தனார் எழுதிய பழைய சரித்திரத்தின் ஒரு புதிய பொன்னேடு!

அந்த ஏடு - இதோ மீண்டும் திரும்புகிறது என்பதற்கு அடையாளமாக தமிழகத்தில் ''கள்ளி''யாகப் படர்ந்துள்ள புதிய அரசு - "பழைய கள், புதிய மொந்தை" என்ற பழ மொழிக்கேற்ப, தன்னுடைய அராஜக ஆட்டத்தை இதோ மீண்டும் தொடர்ந்திருக்கின்றது.

குற்றங்கள் -

தவறுகள் -

கொள்ளைகள் -

கொலைகள் -

எங்கே நடைபெற்றாலும் - அதை யார் நடத்தினாலும் - அவர்கள் மன்னிக்கப்பட வேண்டியவர்கள் என்று சொல்லுகின்ற இமாலயத் தவறினை நாம் என்றைக்கும் செய்திடமாட்டோம்.

அப்படிச் செய்பவர்களை மன்னிக்கவும் தயாராக இருக்க மாட்டோம்.

இதோ! இரண்டொரு மாதங்களுக்கு முன்பு ஏமாந்த தமிழ்நாட்டு மக்களால் - அவர்கள் தோளில் ஏறிக் கொண்டு ஆட்சிக்கு வந்துள்ள ஒரு கட்சி, அராஜகத்தை தன்னுடைய ஆபரணமாகவும் - அடக்குமுறையை தனது போர் வாளாகவும் - "இம்" என்றால் சிறைவாசம் - "ஏன்" என்றால் வனவாசம் என்ற ஜார் மன்னனின் இரக்கமற்ற கூச்சலை இசைப் பாடலாகவும் ஆக்கிக் கொண்டு -

"எதிர்க்கட்சிகளை குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தினரை - அவர்கள் குற்றம் செய்திருந்தாலும், அந்தக் குற்றத்தின் பக்கமே தலை காட்டாமல் இருந்திருந்தாலும் - எல்லோரையும் சகட்டு மேனிக்கு குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவேன்; சட்டத்தின் பெயரைச் சொல்லி சவுக்கடி கொடுப்பேன்; மனைவி, மக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் என்று எல்லோரிடமிருந்தும் அவர்களைப் பிரித்து தனிமைப்படுத்தி-

முடிந்தால், தணலில் வேண்டுமானாலும் போட்டுப் பொசுக்குவேன்" - என்று ஆங்காரக் கூச்சலிட்டு - ஓங்கார முழக்கம் செய்து - தன் முதுகிலே இருக்கிற புண்ணுக்கு மருந்து தடவிடவும் மறந்து விட்டு - நாட்டையே சுடுகாடாக ஆக்கி; "மாகாளி" நர்த்தனம் ஆடுவேன் என்று - தன் காலடியில் உள்ள காவல் துறை உள்ளிட்ட எல்லா துறைகளையும் வாயில் நுரை பொங்க வாட்டி வதைத்து -

"இதோ வந்தேனடா எங்கும் காண முடியாத பத்ரகாளி" என்று பல்லைக் கடித்து - நாக்கை நீட்டி - ரத்தப் பலி வரையிலே கேட்பேன் - என்று நித்தம் உரைக்கின்ற காட்சியை நாம் காணுகிறோம்!

நினைத்ததை முடிப்பேன் என்று நினைத்த படியெல்லாம் திட்டங்களை அறிவித்து - பள்ளிச் சிறார், துள்ளித் திரியும் பருவத்தினர் - எள்ளி நகையாட - எல்லா அறிவிப்புக்களுமே மக்கள் மன்றத்தில் - நீதிமன்றத்தில் தூள்தூளாக நொறுங்கிப் போவது

கண்டு மேலும் மேலும் எரிச்சல் மிகக் கொண்டு - "எங்கிருக்கிறான் எதிர்க்கட்சித் தோழன்? எங்கிருக்கிறது அவன் குடும்பம்? எங்கே போய் விடுவார்கள் என் வஞ்சக வலையில் சிக்காமல்?" என்று பொய்த் திரை போட்டு -

இந்தப் புவியில் வாழ்வோர் கண்களை இருட்டாக்கி - இன்னும் எத்தனை காலம் இங்குள்ளவரை ஏமாற்ற நினைத்திடுவார் என்ற முழக்கம் எங்கெங்கு திரும்பினும் கேட்குதடா! எட்டுத் திசையும் ''இனி தொலைவாய்'' என்ற முழக்கமடா!

இதுதான் இன்றைய தமிழ்நாட்டு நிலை.

இந்த நிலை மாற்ற நெருப்பின் பொறிகளே!

நீங்கள்தான் தேவையென்று திராவிட இன இளைஞர்களை அன்று தட்டி எழுப்பிய பெரியாரும், அண்ணாவும் இதோ ஒன்றாக ஓரணியில் நின்று உங்களை அழைக்கின்றார்கள்!

அறப்போர் குறித்து ஆயிரம் சாதனைகளைப் படைத்த
அண்ணன், தம்பிகளே!
ஆருயிர் உடன்பிறப்புகளே!

அதோ; தெரிகிறது வெளிச்சம் -
அதை நோக்கி விரைந்து நடந்து வாருங்கள்!

அல்லல் நீங்கும்!
தொல்லை குறையும்!

அன்புள்ள,
மு.க.
21-7-2011

3574. அமைதி வழி - அறவழி - அதுவே அண்ணா வழி!

உடன்பிறப்பே,

திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியிலே இருந்தபோது சமச்சீர் கல்வித் திட்டத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்து விட்டதைப் போலவும், அதனால் சமச்சீர் கல்விக்கான பாடப் புத்தகங்களின் தரத்தை உயர்த்தவும், உயர் மட்டக் குழு அமைத்து, அதுகுறித்து ஆராய அவகாசம் தேவைப்படுவதாலும் இந்த ஆண்டு தமிழகத்தில் சமச்சீர் கல்வி கொண்டு வருவதற்கான சாத்தியம் இல்லை என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் வாதிட்டுள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சமச்சீர் கல்வித் திட்டம் அவசர அவசரமாகக் கொண்டு வரப்படவில்லை. 2006ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கிடும் சமச்சீர் கல்வி முறையை தமிழக மக்கள் அனைவருக்கும் வழங்கிட வழி அமைப்போம் என்று அறிவித் திருந்தோம். அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று, ஆட்சிக்கு வந்தவுடன் சமச்சீர் கல்வித் திட்டத்தை தனது முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டம் இயற்றி அறிவித்து விடவில்லை.

சமச்சீர் கல்வித் திட்டம் பற்றி அரசுக்கு பரிந்துரைகளைத் தருவதற்காக 8.9.2006 அன்று பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எஸ். முத்துக்குமரன் அவர்கள் தலைமையில் கல்வியாளர்களைக் கொண்ட ஒரு குழுவினை தமிழக அரசு அமைத்தது. அந்தக் குழு இதைப் பற்றி நன்கு ஆய்வு செய்து தனது ஆய்வறிக்கையை அரசின் பரிசீலனைக்காக அளித்தது. அவ்வாறு அந்தக் குழு பரிந்துரைகளை அளித்தவுடன் தமிழக அரசு அப்படியே அவற்றை ஏற்றுக் கொண்டு சமச்சீர் கல்வித் திட்டத்திற்காக சட்டம் கொண்டு வந்து விடவில்லை.

அந்தக் குழுவின் பரிந்துரைகளை மீண்டும் ஆய்வு செய்து அரசுக்கு ஆலோசனைகள் வழங்க திரு. எம்.பி. விஜயகுமார், இ.ஆ.ப., (ஓய்வு) அவர்களை ஒரு நபர் குழுவாக தமிழக அரசு நியமித்தது. முனைவர் எஸ். முத்துக் குமரன் ஆய்வறிக்கையினை அந்த ஒரு நபர் குழு பரிசீலனை செய்து - சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகளை அரசுக்கு வழங்கியது.

அதன் பின்னரும் தமிழகத்தில் சமச்சீர் கல்விமுறையை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆய்ந்து பரிசீலிக்க, பிற மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் பாடத்திட்டங்கள், தேர்வுமுறைகள் ஆகியவற்றைக் குறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க அதிகாரிகளைக் கொண்ட கல்வியாளர்கள் குழு ஒன்று அரசினால் 30.10.2008-ன்படி அமைக்கப்பட்டது. அந்தக் கல்வியாளர்கள் குழு கர்நாடகா, குஜராத், கேரளா, மகாராஷ்டிரா மாநிலங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து அறிக்கையினை அரசுக்கு வழங்கியது.

இந்தக் குழுக்களையெல்லாம் அமைத்து அவர்கள் பல மாதங்கள் ஆய்வு செய்து பரிந்துரைகளையெல்லாம் அளித்த பிறகுதான், அதாவது சுமார் நான்காண்டுகள் பரிசீலனை செய்த பின்னர்தான் 2010ஆம் ஆண்டில், சமச்சீர் கல்வித் திட்டத்தை தமிழ்நாட்டில் நடை முறைப்படுத்துவதற்கு ஏதுவாக அதற்கான சட்டம் 1.2.2010 அன்று தமிழக சட்டப் பேரவையில் இயற்றப்பட்டது.

சட்டம் இயற்றப்பட்டதற்குப் பிறகும் அன்றைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 1.3.2010 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கல்வியாளர்களின் அறிக்கைகள் மற்றும் பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு சமச்சீர் கல்விச் சட்டத்தின்படி 2010-2011ஆம் கல்வி ஆண்டில் தமிழ்நாட்டில் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்த வேண்டிய வழிமுறைகள் விரிவாக ஆராயப்பட்டன. சமச்சீர் கல்வி முறையை இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தலாம் என்றும், முதற்கட்டமாக 2010-2011ஆம் கல்வி ஆண்டில் முதல் வகுப்பு மற்றும் 6ஆம் வகுப்புகளுக்கும், அதனைத் தொடர்ந்து 2011-12ஆம் கல்வியாண்டில் பிற எஞ்சிய அனைத்து வகுப்பு களுக்கும் நடைமுறைப்படுத்தப்படலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

சமச்சீர் கல்விச் சட்டத்தினை தள்ளுபடி செய்யக் கோரி ஒரு சில தனியார் பள்ளிகள் மற்றும் சங்கத்தினரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்குகளில் 30.4.2010 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணையில் தமிழக அரசு பிறப்பித்த சட்டம் செல்லத்தக்கது என நிலைநிறுத்தம் செய்யப்பட்டது.

சமச்சீர் கல்விக்குச் சாதகமான சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பாணைக்கு இடைக்காலத் தடை வழங்கக் கோரி புதுடெல்லி, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்குகள் தொடரப்பட்டு அந்த வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

முதற்கட்டமாக 2010-2011ஆம் கல்வி யாண்டில் முதல் வகுப்பு மற்றும் 6ஆம் வகுப்புகளுக்கு பாடத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு, பாடப் புத்தகங்கள் தயார் செய்யப்பட்டு தமிழ்நாடு பாட நூல் கழகத்தால் முதலாம் வகுப்புக்குத் தேவையான 61 இலட்சம் பாடப் புத்தகங்களும் ஆறாம் வகுப்புக்குத் தேவையான 84 இலட்சம் பாடப் புத்தகங்களும் அச்சிடப்பட்டு அவைகள் முறையே மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, அவர்களும் கடந்த ஆண்டு அந்தப் புத்தகங்களைப் படித்து முடித்துள்ளார்கள்.

அரசின் கொள்கை முடிவின்படி 2011-2012ஆம் கல்வி ஆண்டு முதல் சமச்சீர் கல்வி முறையை மேலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக எஞ்சிய 2, 3, 4, 5, 7, 8, 9 மற்றும் 10-ஆம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்கள் 200 கோடி ரூபாய்ச் செலவில் அச்சிடப்பட்டு, மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டும் விட்டன. இந்த வகுப்புகளுக்கான பாடத் திட்டம் கல்வி வல்லுநர்களால் தயார் செய்யப்பட்டு பொதுமக்கள், பெற்றோர் மற்றும் மாணவர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் பள்ளிக் கல்வித் துறை வலைதளத்தில் வெளியிடப்பட்டது.

எல்லாவற்றிலும் சமமாக இருக்க வேண்டும் - அனைவருக்கும் சம உரிமை தரப்பட வேண்டும் - என்றெல்லாம் பேசப்படுகின்ற இந்தக் காலக் கட்டத்தில் கல்வியிலும் சமத்துவம் நிலைநாட்டப் பட வேண்டுமென்பதுதான் தி.மு. கழகத்தின், ஏன் தமிழகத்திலே உள்ள பெரும்பாலான கல்வியாளர்களின் நிலை. அதனை நடை முறைக்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகத்தான், எடுத்த எடுப்பிலேயே தான்தோன்றித்தனமாக அதனை அறிவித்துவிடாமல், அதற்காக வல்லுநர்கள் குழு, கல்வியாளர்கள்

குழு, அதிகாரிகள் குழு என்றெல்லாம் நியமித்து, அந்தக் குழுக்களைக் கொண்டு வெளி மாநிலங்களுக்கெல்லாம் சுற்றுப்பயணம் செய்யச் செய்து, அதன் பிறகுதான் படிப்படியாக சமச்சீர் கல்வி முறை நடைமுறைக்கு கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்டு, அது அனைத்துத் தரப்பினராலும் வரவேற்கப்பட்டுள்ளது.

சமச்சீர் கல்வித் திட்டம் குறித்து அ.தி.மு.க. அரசு கொண்டுவந்த திருத்தச் சட்டத்தை எதிர்த்து வழக்கறிஞர் திரு. கே. சியாம் சுந்தர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பொது நல மனுவின் மீது நீதியரசர்கள் திரு. எஸ். ராஜேஸ்வரன், திருமதி கே.பி.கே. வாசுகி ஆகியோர் கூறும்போது, "சமச்சீர் கல்விச் சட்டத்தின் நோக்கம் மிகத் தெளிவானது. சிறந்த வல்லுநர்களைக் கொண்ட ஆய்வுக் குழு விரிவாக ஆராய்ந்து சமச்சீர் கல்வி முறையை அமல்படுத்த பரிந்துரை செய்துள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளை எளிதாகப் புறக்கணித்துவிட முடியாது. இது தவிர, ஏற்கனவே பெரும் தொகை செலவிடப்பட்டுள்ள நிலையில், மேலும் பெரும் தொகையைச் செலவிடுவது அவசியம்தானா? இவை பற்றியெல்லாம் அட்வகேட் ஜெனரல் அரசுக்கு தக்க ஆலோசனைகளை வழங்க வேண்டும்" என்று தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு சார்பில் மேல் முறையீடு செய்த போது, நீதியரசர்கள் பி.எஸ். சவுகான், சுதந்திரகுமார் அளித்த தீர்ப்பில்

> "1 மற்றும் 6ம் வகுப்புகளுக்கு கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட சமச்சீர் கல்வி தொடர்ந்து அமல்படுத்தப்பட வேண்டும். அதை இடையில் நிறுத்தினால் குழப்பம் ஏற்படும். 2 முதல் 5ஆம் வகுப்பு வரையும், 7ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரையும் இந்த ஆண்டே சமச்சீர் கல்வியை அமல்படுத்த வேண்டும். அந்தப் பாடத் திட்டத்தில் குறைபாடுகள் இருப்பின் அது குறித்து ஆராய நிபுணர் குழு நியமிக்கப்பட்டு, அந்த நிபுணர் குழு தனது அறிக்கையை 2 வார காலத்தில் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டும். ஐகோர்ட் இந்த வழக்கின் முக்கியத்துவம் கருதி தினமும் விசாரணை

நடத்தி ஒரு வார காலத்துக்குள் தீர்ப்பளிக்க வேண்டும்."

என்று கூறியது.

இந்தத் தீர்ப்பின்படி அ.தி.மு.க. அரசு கல்வியாளர்கள் குழு ஒன்றினை அமைத்தது. அந்தக் குழுவில் சமச்சீர் கல்விக்கு எதிரானவர்களே இடம் பெற்றிருக்கிறார்கள் என்ற கருத்து பலராலும் சொல்லப்பட்டது. அதைப் பற்றியெல்லாம் ஆட்சியாளர்கள் கவலைப்படாமல், அந்தக் குழுவினைக் கொண்டே அறிக்கை ஒன்றினைத் தயார் செய்து, அந்த அறிக்கை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அந்தக் குழுவினர் தந்த அறிக்கை பற்றியெல்லாம் விளக்கமாக எடுத்துக் கூறி உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியும், மற்றொரு நீதிபதியும் அளித்த தீர்ப்பில் -

"We have no hesitation to hold that the State has exceeded in its powers in bringing the Amending Act to postpone an enactment which is already come into force" - மாநில அரசு அதனுடைய அதிகார வரம்பை மீறியுள்ளது என்று கூறுவதற்கு எங்களுக்கு எந்தவிதத் தயக்கமும் இல்லை - என்றே தெரிவித்ததோடு முதல் வகுப்பு மற்றும் 6ஆம் வகுப்புகள் தவிர மற்ற வகுப்புகளுக்கும் தேவையான சமச்சீர் பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு கணிசமான பணிகள் முடிந்து விட்டன. அவை இணைய தளத்திலும் வெளியிடப்பட்டுவிட்டன. இந்த நிலையில் சமச்சீர் கல்விச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது, மாணவர்களின் நலனைப் பாதிக்கும். எனவே அந்தச் சட்டத்தின் 3ஆம் பிரிவைத் திருத்தி, தமிழக அரசு கொண்டு வந்த சட்டத் திருத்தம் செல்லாது. அதை ரத்து செய்கிறோம் என்றும், சமச்சீர் சட்டத்தின்கீழ் வரும் கல்விக்கான பாடப் புத்தகத்தை மாணவர்களுக்கு உடனடியாக வழங்க வேண்டும் என்றும் எனவே மாணவர்களின் எதிர்காலத்தையும், நாட்டின் நலனையும் கருத்திலே கொண்டு, சமச்சீர் கல்வியை அமல்படுத்த, மாநில அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்று நம்புகிறோம் என்றும் தெரிவித்த பிறகும் - தமிழக அரசு அதனை மதிக்காமல் - தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் தமிழக அரசு உச்சநீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யாமல் மாணவர்களின் நலன் கருதி உயர் நீதிமன்றத் தீர்ப்பினை நடைமுறைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்ட தையும் அலட்சியப்படுத்திவிட்டு உச்ச நீதி மன்றம் சென்றிருக்கிறார்கள்.

உச்சநீதிமன்றம் தனது இடைக்கால உத்தரவில் சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்புக்கு தடை விதிக்க முடியாதென்றும், ஆகஸ்ட் 2ஆம் தேதிக்குள் சமச்சீர் பாடப் புத்தகங்களை விநியோகிக்க வேண்டுமென்றும் தெரிவித்து ஐந்து நாட்கள் ஆகிய போதிலும் தமிழக அரசு அந்த உத்தரவையும் மதித்து இதுவரை சமச்சீர் பாடப் புத்தகங்களை மாணவர்களுக்கு விநியோகிக்கும் பணியைத் தொடங்கவே இல்லை. மாறாக தமிழக அரசு சார்பில் வாதாடிய வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத் தீர்ப்புக்கு மாறாக, சமச்சீர் கல்வியை நடப்பு ஆண்டிலேயே அமல்படுத்து வதற்கான சாத்தியங்கள் இல்லை என்று கூறியிருக்கிறார் என்றால், தமிழக மாணவர்களின் நிலைமை பற்றி தமிழக அரசு கவலையே படவில்லை என்பது நன்கு தெரிகிறது.

பள்ளிகள் திறந்து இரண்டு மாதங்கள் ஆகியும் இந்த ஆண்டு தாங்கள் என்ன பாடப் புத்தகங்களைப் படிக்க விருக்கிறோம் என்பதே தெரியாத நிலையில் மாணவச் செல்வங்களும், அவர்களின் பெற்றோர்களும் தவித்துப் போய் இருப்பதைப் பற்றி தமிழக அரசு கவலையே படாமல் இதனை கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு நீதிமன்றங்களின் தீர்ப்பையும் மதிக்காமல், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்தையும் கேட்காமல், தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருக்கின்றது. அதனால்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 29-7-2011 வெள்ளிக் கிழமையன்று தமிழகத்தில் உள்ள பள்ளிகள், கல்லூரிகளை மாணவச் செல்வங்கள் புறக்கணித்து, தங்களுக்குள்ள எதிர்ப்பினைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

மாணவர்கள் நினைத்தால் எதிலும் வெற்றிதான் என்பதை நிரூபிக்கும் வகையில் இந்த அறப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திட அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைதி வழி - அறவழி! அதுவே அண்ணா வழி!

அன்புள்ள,

மு.க.

28-7-2011

3575. அந்த நாள் முதல் இந்த நாள் வரையில்...!

உடன்பிறப்பே,

பொய் வழக்கு போடுவதில் ஜெயலலிதாவை மிஞ்சுவதற்கு யாருமே இல்லை என்பதற்கு பல உதாரணங்கள் உண்டு. அவர் எப்போது ஆட்சிக்கு வந்தாலும் உடனடியாக தனக்குப் பிடிக்காதவர்கள் எவரையும் விடமாட்டார். காரணம் இருக்கிறதோ இல்லையோ காவல்துறையை ஏவி விட்டு அவர்கள் மீது பொய் வழக்கு புனைந்து நடவடிக்கை எடுக்கத் தவறமாட்டார்.

உதாரணமாக காஞ்சி சங்கராச்சாரியார்கள் எந்தக் கட்சியையும் சேராதவர்கள். அவர்களே நீதி மன்றத்தில் "தங்கள் மீது அ.தி.மு.க. ஆட்சியினரால் 2004ஆம் ஆண்டு போடப்பட்ட பொய் வழக்கு" என்று சில நாட்களுக்கு முன்னால் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வழக்கு கூட - செங்கற்பட்டு நீதி மன்றத்திலே விசாரணையை நடத்துவதற்குப் பதிலாக பாண்டிச்சேரி நீதிமன்றத்திலே நடத்தப்பட வேண்டுமென்று உச்சநீதிமன்றமே மாற்றியதாகும். அப்படி மாற்றப்படும்போது உச்ச நீதி மன்ற நீதியரசர்கள் ஆர்.சி. லகோதி, ஜி.பி. மாத்தூர் ஆகியோர் 26-10-2005 அன்று என்ன சொன்னார்கள் தெரியுமா?

"We have discussed above many facets of the case which do show that the State machinery in Tamil Nadu is not only taking an undue interest but is going to any extent in securing the conviction of the accused by any means and to stifle even publication of any article or expression of dissent in media or press, interview by journalists or persons who have held high positions in public life and are wholly unconnected with the criminal case. xxx

Taking into consideration the entire facts and circumstances of

the case and the material on record, we have no hesitation in holding that the petitioner and other co-accused of the case have a reasonable apprehension that they will not get justice in the State of Tamil Nadu xxxx"

தமிழகத்திலே உள்ள மாநில அரசு தேவையற்ற ஆர்வத்தை காட்டுவது மட்டுமன்றி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத் தருவதில் எந்த அளவிற்கும் செல்லத் தயாராக உள்ளது. இந்த வழக்கு தொடர்பான செய்திகள் அல்லது பேட்டிகளை வெளியிட்ட பத்திரிகைகள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களை அச்சுறுத்த தமிழக அரசு மேற்கொண்ட முயற்சி கண்டனத்திற்குரியது. குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும் அவர்களின் சார்பில் இந்த வழக்கில் ஆஜரான வழக்கறிஞர்களுக்கும் பல்வேறு தடைகளை அரசு நிர்வாகம் ஏற்படுத்தியுள்ளது. இதனால் இந்த வழக்கறிஞர்கள் கண்ணியத்துடன் தங்களது பணிகளைச் செய்ய முடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. (தினமணி - 27.10.2005)

உச்ச நீதிமன்றத்தின் இத்தகைய சான்றித ழுக்குச் சொந்தக்காரர்தான் ஜெயலலிதா. ஜெயலலிதாவிற்கு இன்றையதினம் ஆதரவாக இருக்கின்ற திரு. சோ போன்றவர்களும், திரு.குருமூர்த்தி போன்றவர்களும் கூட சங்கராச்சாரியார்கள் தெரிவித்துள்ள - அ.தி.மு.க. ஆட்சியில் அவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன என்ற கருத்தையும்; அந்த வழக்கினை உச்ச நீதிமன்றம் பாண்டிச்சேரி நீதி மன்றத்திற்கு மாற்றியபோது தெரிவித்த கருத்துக்களையும்; மறுப்பார்களா என்று தெரியவில்லை.

சங்கராச்சாரியார்கள் மீது ஜெயலலிதா இந்த அளவிற்கு அப்போது நடவடிக்கை எடுக்க என்ன காரணம் என்பதை அப்போதே சில ஏடுகள் வெளியிட்டன. அதாவது சென்னை புறநகரில் உள்ள ஒரு பெரிய மருத்துவ மனையை கையகப்படுத்துவது குறித்து ஜெயலலிதாவுக்கு சங்கராச்சாரியார்கள் மீது பகை இருந்ததாகவும், அதுதான் அந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்க காரணம் என்றும் எழுதியிருந்தன.

சங்கராச்சாரியார்கள் மீதே இந்த அளவிற்கு பழி வாங்கும் நடவடிக்கை என்றால் அரசியல் வாதிகள் அந்த அம்மையாருக்கு எம்மாத்திரம்? அரசியல்வாதிகள் மாத்திரமல்ல; அவரது பழி

வாங்கும் போக்கு காரணமாக யார் யார் மீது பொய் வழக்குகள் அவருடைய கடந்த கால ஆட்சியிலே தொடரப்பட்டன என்பதற்கு மேலும் சில உதாரணங்களைக் கூறலாமென்று கருதுகிறேன்.

சென்னை ஆற்காடு சாலையிலே உள்ள எம்.ஜி.ஆர். நினைவகக் காப்பாளர் முத்து - சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதியரசராக இருந்த ஒருவருடைய மருமகன் ஆகியோர் "கஞ்சா" வைத்திருந்ததாகவும் - ஜெயாவின் வளர்ப்பு மகன் வி.என். சுதாகரன் "ஹெராயின்" வைத்திருந்ததாகவும் - மதுரையைச் சேர்ந்த செரினா என்ற பெண் "கஞ்சா" வைத்திருந்ததாகவும் பொய் வழக்குகள் போட்டதைத் தமிழ்நாட்டு மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். செரினா என்ற பெண்ணை எதற்காக கைது செய்தார்கள், எதற்காக திருச்சி சிறைச் சாலையிலே வைத்தார்கள் என்பதைப் பற்றியும், ஜெயலலிதா ஆட்சியிலேயே அனைத்து ஏடுகளும் வெளியிட்டன.

2001ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஒரு மாத காலத்திலேயே 29-6-2001 அன்று நள்ளிரவில் என் படுக்கை அறை வரை காவல்துறையினரை நுழையச் செய்து, என்னைத் தாக்கி, கைது செய்வதாகக் கூறி என்னை எங்கே அழைத்துச் செல்கிறார்கள் என்று சொல்லாமலே இழுத்துச் சென்ற கொடுமையைச் செய்தது யார்? சாட்சாத் ஜெயலலிதா அம்மையார்தானே? எதற்காக அந்த பழிவாங்கும் தன்மை? நான் செய்த குற்றம் என்ன? சென்னையில் மேம்பாலங்கள் கட்டியதில் தவறு என்று கூறினார்களே! என்ன ஆயிற்று அந்த வழக்கு? நிரூபித்தார்களா? நிரூபிக்க முடிந்ததா? பொய் வழக்குதானே அது? என் மீது குற்றப் பத்திரிகையையாவது தாக்கல் செய்ய முடிந்ததா? சென்னையிலே உள்ள மேம்பாலங்களையெல்லாம் தோண்டித் துருவிப் பார்த்தார்களே? எந்தச் சான்றுகளை வைத்து என்னைக் கைது செய்தார்கள்? அவ்வாறு பொய் வழக்கு போட்டதற்காக அவர்கள் மீது என்ன வழக்கு போடுவது? என்னைக் கைது செய்து அந்த அளவிற்கு கொடுமைப்படுத்திய குற்றத்திற்காக அவர்களை என்ன செய்வது?

இதே மேம்பாலங்களைக் காட்டி சென்னை மாநகர மேயராக இருந்து சிறப்பாக பல காரியங்களைச் செய்த தம்பி மு.க. ஸ்டாலின் மீதும் அதேபோன்று பொய் வழக்கு சுமத்தி ஜெயலலிதா ஆட்சியிலே கைது செய்ய வில்லையா? நான் கைது

செய்யப்பட்ட அன்றே மத்திய அமைச்சர்களாக இருந்த தம்பி முரசொலி மாறனும், தம்பி டி.ஆர். பாலுவும் தாக்கப்பட்டதோடு கைதும் செய்யப்பட்டார்கள். மதுரை மாநகரில் மறியலில் ஈடுபட்ட பி.டி.ஆர். பழனிவேல்ராஜன், என் மகன் மு.க. அழகிரி போன்றவர்களும் அங்கே கைது செய்யப்பட்டு மதுரை சிறையிலே அடைக்கப்பட்டார்கள். இவை அனைத்தும் சட்டப்படியான நடவடிக்கை கள்தானா? பழி வாங்கும் போக்கின் பிரதிபலிப்புகள் அல்லவா?

1-7-2001 அன்று "இந்து" நாளேடு தனது தலையங்கத்தில் என்னை கைது செய்த விதம் அவமானகரமான பழிவாங்கும் செயல் என்று எழுதி தனது கண்டனத்தைத் தெரிவித்திருந்தது.

சென்னை ராணி மேரி கல்லூரி மாணவிகள் அவர்களுடைய கல்லூரியை இடித்து விட்டு, தலைமைச் செயலகம் கட்டப் போவதாக ஜெயலலிதா அறிவித்ததை எதிர்த்து, உண்ணா விரதம் இருந்தபோது - அவர்களைச் சமாதானப்படுத்த சென்ற தி.மு. கழகத்தினர், தம்பிகள் மு.க. ஸ்டாலின், கே. பொன்முடி, எ.வ. வேலு, ஜெ. அன்பழகன், புகழேந்தி ஆகியோரை காவல்துறையினரே கல்லூரிக்குள் அனுமதித்து; அவர்களும் அங்கே சென்று தங்கள் ஆதரவை மாணவிகளிடம் தெரிவித்து இல்லம் திரும்பிய பிறகு, நள்ளிரவில் காவல் துறையினரை இவர்களின் இல்லங்களுக்கு அனுப்பி கைது செய்து, அவர்கள் கல்லூரி கேட்டை உடைத்து உள்ளே சென்றதாக வழக்கு போட்டதோடு சிறையிலே அடைத்தார்கள். ஜெயலலிதா பொய் வழக்கு போட்டு, பழி வாங்குகிற தன்மைக்கு இதைவிட வேறு உதாரணம் தேவையா?

1995ஆம் ஆண்டு டான்சி ஊழல் தொடர்பான வழக்கில் ஜெயலலிதா மீது வழக்கு தொடர அன்றைய ஆளுநர் சென்னா ரெட்டி அனுமதி யளித்தார் என்பதற்காக; அவரை பழி வாங்குவதற்காக கவர்னருக்கு எதிராக உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் ஜெயலலிதா வழக்கு தொடுத்ததோடு, கவர்னர் சென்னா ரெட்டி அவர்களை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென்று மத்திய அரசைக் கோரி பேரவையிலேயே தீர்மானம் நிறைவேற்றினாரே இதே ஜெயலலிதா! கவர்னர் சென்னா ரெட்டி தன்னிடம் தவறாக நடந்து கொண்டார் என்று பேரவையிலேயே குற்றஞ்சாட்டினார். இது கடைந்தெடுத்த பொய் என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளவில்லையா?

2001ஆம் ஆண்டு ஜெயலலிதா பதவியேற்றதற்கு மறுநாளே கழகச் சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த தம்பி பரிதி இளம்வழுதி மீது ஜான் பாண்டியனை தாக்கியதாகக் கூறி கொலை முயற்சி வழக்கு பதிவு செய்தார். ஆனால் உண்மையில் தாக்கப்பட்டவர் பரிதி தான். "இந்து" நாளிதழே அப்போது 11-5-2001 அன்று "Ilamvazhuthi escapes armed gang attack on election office" என்று எழுதியதே!

கழகப் பொருளாளராக அப்போதிருந்த ஆற்காடு வீராசாமியின் தம்பியை 26-5-2001 அன்று ஜெயலலிதா அரசு கைது செய்தது. அதற்கடுத்த நாள் 27-5-2001 அன்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திருப்போரூர் பரசுராமன் மீது ஓர் பொய்யான குற்றச்சாட்டை சுமத்தி அவரும் கைது செய்யப்பட்டு, சிறையிலே அடைக்கப்பட்டார். தெய்வசிகாமணி என்ற ஓர் ஒப்பந்தக்காரர் கொடுத்த புகாரின் மீது அவர் கைது செய்யப் பட்டதாகக் கூறப்பட்டது. சட்டப்பேரவை உறுப்பினராக இருந்த புரசை ரெங்கநாதன் மீது ஒரு வழக்கைப் பதிவு செய்தனர். அவர் எழும்பூர் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் சரண் அடைந்து பின்னர் ஜாமீனில் விடப்பட்டவுடன், 30-5-2001 அன்று யாரோ ஒரு தியேட்டர் அதிபரை துப்பாக்கியைக் காட்டி அவர் மிரட்டியதாக மீண்டும் ஒரு வழக்கைப் பதிவு செய்து கைது செய்து சிறையிலே அடைத்தனர். அப்போது புரசை ரெங்கநாதன் த.மா.கா. ஜனநாயகப் பேரவை கட்சியிலே இருந்தார். சிறையிலே இருந்த அவரைப் பார்க்க அந்தக் கட்சியின் தலைவர் என்ற முறையிலும், மூத்த வழக்கறிஞர் என்ற முறையிலும் நண்பர் ப. சிதம்பரம் அவர்கள் சிறைக்குச் சென்றபோது, அவரைச் சந்திக்கக் கூட அனுமதி கொடுக்காமல் திருப்பி அனுப்பினர். இவை சட்டப்படி புனையப்பட்ட உண்மை வழக்குகளா? அனைத்தும் பொய் வழக்குகள்தானே!

அ.தி.மு.க.வில் நீண்ட காலம் இருந்த திருவில்லிப்புத்தூர் சட்டப் பேரவை உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் அம்மையாரின் போக்குப் பிடிக்காமல் தி.மு.க. வில் சேரப் போவதாக அறிவித்தார். அவர் மீது ஒரு புகாரை, அவருடைய மகனிடமிருந்தே பெற்று, தாமரைக்கனி கைது செய்யப்பட்டார். நீதி மன்றத்திற்குச் சென்று ஜாமீனில் வெளியே வர அனுமதி பெற்ற போதிலும், அவர் மற்றொரு வழக்கிலே கைது செய்யப்படுவதாகக் கூறி அவரை ஜாமீனில் விட மறுத்தது ஜெயலலிதா அரசு.

நீலங்கரை ஊராட்சி மன்றத் தலைவராக இருந்த கழகத்தைச் சேர்ந்த வி. எட்டியப்பன், துணைத் தலைவர் ரவி, ஒன்றியக் குழு உறுப்பினர்கள் வெங்கட்ராமன், எஸ்.கே. ரவி ஆகியோர் மீது அ.தி.மு.க. வினர் கொடுத்த புகார் மனுவின் அடிப்படையில் பொய் வழக்கு தொடர்ந்து அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டனர்.

ஜெயலலிதாவின் பழி வாங்கும் நடவடிக்கை யைக் கண்ட அன்றைய இண்டியன் எக்ஸ்பிரஸ் நாளேடு கூட 30-5-2001 அன்று "பழிவாங்கும் நாடகம், இரண்டாம் கட்டம்" என்ற தலைப்புட னும், "போயஸ் தோட்டத்தை விட தமிழ்நாடு பெரியது என்பதை எப்போது ஜெயா உணரப் போகிறார்?" என்ற துணைத் தலைப்புடனும் தலையங்கம் எழுதியதே.

தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்தபோது "அல்-உம்மா" இயக்கத்தைச் சேர்ந்தவர்களை சிறையிலே அடைத்ததாகக் கூறி அ.தி.மு.க. வைச் சேர்ந்த ப்ரீத்தி பாஸ்கர் என்பவர் ஒரு புகார் கொடுத்ததின் பேரில் என்மீதும், முன்னாள் டி.ஜி.பி. சர்மா, முன்னாள் உள்துறை செயலாளர் சாந்த ஷீலா நாயர், காவல் துறை அதிகாரி கே.வி.எஸ். மூர்த்தி ஆகியோர் மீதும் அ.தி.மு.க. ஆட்சியில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதிலே குற்றவாளியாக அ.தி.மு.க. அரசு சுட்டிக்காட்டிய திருமதி சாந்த ஷீலா நாயர் அவர்களைத்தான் திட்டக் குழுவின் துணைத் தலைவராகத் தற்போது இந்த அரசு நியமித்திருக்கிறது. இந்த வழக்கு பற்றி 27-6-2001 தேதியிட்ட "துக்ளக்"

> "கருணாநிதியை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தின் காரணமாகவே இந்தப் பிரச்சினை இந்த வகையிலே கையாளப்படுகிறது என்ற சந்தேகத் திற்கு இடம் உண்டு. மத விரோதங்களை கிளப்பிவிடக் கூடிய இம்மாதிரி விஷயத்தில் காட்டப்பட வேண்டிய பொறுப் புணர்வு மிக்க அணுகுமுறையை இந்த அரசு காட்டவில்லை. இது நல்லதல்ல"

என்று எழுதியது. வெகு விரைவில் நண்பர் சோ அவர்கள் இதைப் போலவே ஜெயலலிதா அரசைப் பற்றி தன்னுடைய விமர்சனங்களை எழுதத் தொடங்கிவிடுவார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

நான் மேலே சுட்டிக்காட்டியவாறு ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன், 100 கோடி ரூபாய் செலவில் ஜெயலலிதாவினால் திருமணம்

செய்து வைக்கப்பட்ட வி.என். சுதாகரன் 13-6-2001 அன்று ஜெயலலிதாவின் ஆட்சியில் திடீரென்று கைது செய்யப்பட்டு, கொலை முயற்சி உட்பட 12 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்து பாளையங் கோட்டை சிறையிலே அடைக்கப்பட்டாரே! அவருடைய தந்தை விவேகானந்தன் என்பவரும் கைது செய்யப்பட்டார். சுதாகரன் கைதாகி செல்லும்போது செய்தியாளர்களிடம், தன்னை திட்டம் போட்டு சதி செய்து உள்ளே தள்ளுகிறார்கள் என்றும், அனைத்தையும் ஆண்டவன் தட்டிக் கேட்பான் என்றும், தன் மீது போடப்பட்டிருக்கின்ற 12 வழக்குகளுமே திட்டமிட்டு ஜோடிக்கப்பட்டுள்ள பொய் வழக்குகள் என்றும், வீட்டில் எந்தச் சோதனையும் செய்யாமல் தன் வீட்டிலே ஹெராயின் இருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள் என்றும் கூறினார். அவர் கைது செய்யப்பட்டவுடன் சென்னை மத்திய சிறையிலே அடைக்கப்பட்டார். சில மணி நேரங்களில் வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து பாளையங்கோட்டை சிறைக்கு மாற்றப்பட்டார். அனைத் தும் 24 மணி நேரத்தில் நடைபெற்றன. இந்த அளவிற்கு பரபரப்பாக போடப்பட்ட வழக்கின் கதி என்ன? சசிகலாவின் குடும்பத்தினர் மீதே ஜெயலலிதா பொய் வழக்குகள் போட்ட பழைய கதையை யாரும் மறந்துவிடவில்லை!

18-6-2001 அன்று விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் மாநிலப் பொருளாளர் முடக்கத்தான் பாண்டியன் மதுரையிலே படுகொலை செய்யப் பட்டார். அதிலே சி.பி.ஐ. விசாரணை கோரி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவித்த நிலையில், அந்த இயக்கத் தலைவர் திருமாவள வனை 21-6-2001 அன்று கைது செய்தனர்.

ஜெயலலிதாவின் பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாக, தி.மு. கழக ஆட்சியில் நியமனம் செய்யப்பட்ட பத்தாயிரம் சாலைப் பணியாளர்களை 2002ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இரவோடு இரவாக வீட்டிற்கு அனுப்பினார்.

பத்திரிகையாளர், நக்கீரன் கோபால், ஜெயலலிதா அரசை விமர்சனம் செய்து எழுதினார் என்பதற்காக "பொடா" சட்டத்தின் கீழ் கைது செய்ததோடு திருப்தி அடையாமல், அவருடைய குடும்பத்தினரையெல்லாம் விசாரணை என்ற பெயரால்

கொடுமைப்படுத்தினார்கள். கோபாலின் மாமனார் தொடர்ந்து விசாரணைக்கு ஆட்படுத்தப்பட்ட காரணத்தால் 6-7-2003 அன்று மனம் புழுங்கி மறைந்தே விட்டார். "பொடா" சட்டத்தின் பெயரால் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டு மாதக்கணக்கிலே சிறையிலே அடைக்கப்பட்டார்.

இவ்வாறு எதிர்க்கட்சியினர் மீது பொய் வழக்கு போட்டு கொடுமைப்படுத்துவது என்பது ஜெயலலிதாவிடம் ஆழமாக ஊன்றி விட்ட பழக்கமாகும். அந்தக் குண விசேஷத்தைப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம். அதன் தொடர்ச்சியாகத்தான், தற்போது மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்துள்ள போதும் நில அபகரிப்பு என்ற கற்பனையான காரணத்தைக் காட்டி அதிலும் 2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை தி.மு. கழக ஆட்சியிலே நடைபெற்ற நில அபகரிப்புகள் மீது மட்டும் நடவடிக்கை எடுப்பதாகக் கூறி அதிலே கூட இந்த ஐந்தாண்டுகளில் அவரு டைய கட்சிக்காரர்கள் செய்த தவறுகளின் மீது நடவடிக்கை எடுக்காமல்; எதிர்க்கட்சியினரைப் பழிவாங்கிக் குற்றம் சுமத்திடும் பாதகச் செயலைத் தொடங்கியிருக்கிறார்.

நில அபகரிப்பு வழக்குகள் எவ்வாறு போடப்படுகின்றன என்பதற்கு ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல - "முரசொலி"யிலே அல்ல - "டைம்ஸ் ஆப் இந்தியா" என்ற ஆங்கில நாளிதழில் 15-7-2011 அன்று வெளி வந்த செய்தியினை தமிழில் மொழியாக்கம் செய்து இங்கே தருகிறேன்.

தி.மு. கழகத்தைச் சேர்ந்த ஒருசிலர் மீதும் ஒரு மூத்த காவல் துறை அதிகாரியின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு ஏடுகளில் எல்லாம் "நிலம் அபகரிப்பு - கொடைக்கானல் நகர் மன்றத் தலைவர் கைது" என்றெல்லாம் செய்தி வந்தது. ஆனால் இந்தப் புகாரை யார் கொடுத்தாரோ, அவருடைய தந்தையே எழுதிய கடிதத்தில் அந்தப் புகார் உண்மை அல்ல என்றும், தன்னுடைய ஒப்புதலோடுதான் அந்த நில பரிவர்த்தனை நடைபெற்றதாகவும் காவல் துறைக்கும் நீதி மன்றத்திற்கும் தெரிவித்திருக்கிறார். ஆனால் இந்த உண்மை தெரியா மல், புகார் கொடுத்தமாத்திரத்தில் - அதுபற்றி காவல் துறை விசாரித்து உண்மை அறியாமலேயே கொடைக்கானல் நகர் மன்றத் தலைவர், தி.மு.க.வைச் சேர்ந்த முகமது இப்ராகிம் மற்றும் சேகர் சபாஸ்டியன், தலீப் சிங் ஆகியோரை கைது செய்து காவலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

இவ்வாறு டைம்ஸ் ஆப் இந்தியா எழுதியிருக்கின்றது. எந்த அளவிற்கு தவறான தகவலின் பேரிலும் உண்மை தெரியாத நிலையில் காவல் துறை நடவடிக்கை எடுக்கிறது என்பதற்கும், கொடைக்கானல் நகர மன்றத் தலைவரை கைது செய்கின்ற அளவிற்கு எந்த அளவிற்கு பழி வாங்கும் தன்மையோடு நடந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்கும் இது ஒரு உதாரணம் ஆகும்.

இந்தச் செய்தி டெக்கான் கிரானிகல் ஆங்கில நாளிதழிலும் ஜூலை 20ஆம் தேதி வெளிவந்தது. ஆனால் தமிழ் நாளேடுகள் எதுவும் இதனை வெளியிடவே இல்லை.

இந்த வகையிலேதான் இந்த ஆட்சியிலே தி.மு. கழகத்தினர் மீது குறிப்பாக அமைச்சர்களாக இருந்த வீரபாண்டி ஆறுமுகம், கே.என். நேரு, ஐ. பெரியசாமி, மாவட்டக் கழகச் செயலாளர் மதுரை தளபதி, மற்றும் கழக முன்னணியினர் மீது பொய் வழக்குகளை போட்டு விசாரணை என்ற பெயரால் இழுத்தடிக்கிறார்கள். அதிலும் வீரபாண்டி ஆறுமுகம் உடல் நலம் பாதிக்கப்பட்டு - மருத்துவமனையிலே நீண்ட நாட்கள் அனுமதிக்கப்பட்டு தற்போதுதான் சற்றுத் தேறி வருகிறார். அவரையெல்லாம் மூன்று நாட்கள் விசாரணை என்ற பெயரால் வைத்து அதிலே இந்த ஆட்சியினர் இன்பம் காண முயலுகிறார்கள்.

ஜெயலலிதா, கழகத்தைப் பழிவாங்கத் தவறான ஆயுதத்தைக் கையில் எடுத்துள்ளார். அது இரண்டு பக்கமும் கூர் தீட்டப்பட்ட ஆயுதமாகும். ஜெயலலிதாவின் தற்போதைய நடவடிக்கைகள் - "பழி வாங்குவதற்காக பொய் வழக்குகள் புனைவதிலே அவர் கைதேர்ந்தவர்" - "பொய் வழக்குகளில் பழகிப் போனவர்" - "அதில் ஒரு வகை சுகம் காண்பவர்" - என்பதையே காட்டுகின்றன!

அன்புள்ள,

மு.க.

30-7-2011

3576. உலகப் புகழ் உத்தமத் தமிழச்சி, பாரீர்!

உடன்பிறப்பே,

"இலங்கை மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்கச் செய்து, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றிய உலகத் தமிழர்களின் தலைவர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்" - இப்படி பக்கம் பக்கமாக விளம்பரங்கள்! "போற்றி! போற்றி!" விளம்பரங்கள்! போலிப்புகழ் பாடும் விளம் பரங்கள்!

அடுத்து நம்முடைய நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் அரைப் பக்கத்தில் ஒரு விளம்பரம் கொடுத்துள்ளார். "நன்றி! நன்றி!! நன்றி!!! இலங்கை அரசு மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்க அயராது முயற்சி மேற்கொண்டு வெற்றி கண்ட அரசியல் சாணக்கியமே! உலகம் வாழ்த்தும் அருந்தவமே! உலகத் தமிழர்கள் போற்றிடும் ஓய்வறியா தலைவியே! வல்லரசுக்கு வழி காட்டிய வல்லாண்மையே! அம்மா அவர்களே, தங்கள் பொற்பாதங்களை பணிந்து வணங்குகிறேன்" என்பதுதான் விளம்பர வாசகங்கள்!

அடுத்து ஒரு அமைச்சர் - கே.ஏ. செங்கோட்டையன், வேளாண்மைத் துறை அமைச்சர் - அவரும் அரை பக்கத்தில் ஒரு விளம்பரம் - அதிலே உள்ள வார்த்தைகள் - அதே நன்றி! நன்றி! நன்றி! இத்தியாதி, இத்தியாதி.....

எதற்காக இந்த நன்றிகள்? அமெரிக்கா இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதித்திருக்கிறதா? அமைச்சர்களே விளம்பரம் கொடுத்திருக்கிறார்களே? இல்லாமலா கொடுப்பார்கள்? எல்லோருக்கும் சந்தேகம்!

பிரகாஷ் எம். ஸ்வாமி தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பத்திரிகையாளர் - தற்போது நியூயார்க்கில் இருக்கிறார் - தமிழகம் வரும்போது ஒவ்வொரு முறையும் என்னைச் சந்திக்க நேரம் கேட்டு ஓரிரு முறை சந்தித்துமிருக்கிறார். அப்போ தெல்லாம்

அவர் அமெரிக்காவிற்கு வரவேண்டும், உங்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கச் செய்கிறேன், விருது வழங்க ஏற்பாடு செய்கிறேன், தெருவுக்குப் பெயர் வைக்க ஏற்பாடு செய்கிறேன் என்றெல்லாம் கூறுவார். கடந்த முறை தி.மு. கழகம் ஆட்சியிலே இருந்த போதும் என்னைச் சந்திக்க நேரம் கேட்டபோது ஒரு முறை சந்தித்தேன்; அடுத்த முறை வாய்ப்பு வழங்க முடியவில்லை. தி.மு. கழக ஆட்சியில் அவருக்கு "கலைமாமணி" விருதே வழங்கப்பட்டது. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் போது கூட அமெரிக்க நாடு வாழ் தமிழர்களை யெல்லாம் ஒருங்கிணைத்து அழைத்துவரத் தனக்கு அதிகாரம் வழங்க வேண்டுமென்று கோரினார். அவர்தான் தற்போது "குமுதம்" வார இதழுக்கு அளித்த பேட்டியில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைப் பற்றி பாராட்டியிருக்கிறார்.

அந்தப் பாராட்டில், நியூயார்க்கில் ஜான் ஜே காலேஜ் ஆப் கிரிமினல் ஜஸ்டிஸ் என்றொரு கல்லூரி இருப்பதாகவும், அவர்களது பாடப் புத்தகத்தில் ஜெயலலிதாவின் சிந்தனையால் உருவான அனைத்து மகளிர் காவல் நிலையங்களை வெகுவாகப் பாராட்டி சில பக்கங்கள் வருகின்றன என்றும், அது போன்ற பல பிரமிப்பான செய்திகள் அமெரிக்காவின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டனை மிகவும் கவர்ந்திருந்ததால்தான், டெல்லியில் பிரதமரைச் சந்தித்தபின் நேராக சென்னை வந்து விட்டார் என்றும்-

அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் ஜெயலலிதா துணைப் பிரதமராகும் வாய்ப்பு உள்ளதாக யு.எஸ். அரசாங்கம் இந்தியாவைப் பற்றியதோர் அரசியல் கணக்குப் போடுவதால், அமெரிக்காவிற்கு நெருக்கமானவர் ஒருவர் டெல்லியில் இருந்தால் நல்லது என்று ஹிலாரி நினைக்கலாம் என்றும் - இலங்கை அரசை எதிர்த்து தமிழகச் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய ஜெ.யின் துணிச்சலும், அந்த மனதிடமும் ஹிலாரிக்கு மிகவும் பிடித்துப் போனதாகவும் பிரகாஷ் எம். ஸ்வாமி வியப்புடன் குமுதம் செய்தியாளரோடு தகவல்களைப் பகிர்ந்து கொண்டாராம்.

இதே பிரகாஷ் எம். ஸ்வாமி அவர்கள் 2-2-2010 என்று என்னைச் சந்தித்த செய்தி ஏடுகளில் அப்போதே வந்தது. அந்தச் செய்தியில் - "அமெரிக்காவில் உள்ள நியூயார்க் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் பிரகாஷ் எம். ஸ்வாமி, முதல் அமைச்சர் கலைஞர் அவர்களை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். கோவை தமிழ்ச் செம்மொழி மாநாட்டுக்கு நியூயார்க் தமிழ்ச்

சங்கத்தின் ஆதரவை தெரிவித்துக் கொண்ட அவர், இந்த மாநாட்டில் அமெரிக்காவைச் சேர்ந்த 100 தமிழறிஞர்கள் கலந்து கொள்ளவிருப்பதாகக் கூறினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிரகாஷ் எம். ஸ்வாமி, முதல்வர் கலைஞரின் சமுதாயச் சேவையைப் பாராட்டி, அமெரிக்க நாடாளு மன்றம் சார்பில் வழங்கப்படும் மிக உயரிய விருதான "அமெரிக்க காங்கிரஸ் மகாசபை விருது" வழங்கப்படவிருப்பதாகத் தெரிவித்தார். முதல் முறையாக இந்தியத் தலைவர் ஒருவருக்கு வழங்கப்படும் இந்த விருதை, கோவை தமிழ்ச் செம்மொழி மாநாட்டின்போது நியூயார்க் தமிழ்ச் சங்கப் பிரதிநிதிகள் நேரில் வழங்குகின்றனர்" என்றும் அவர் கூறினார்; அவ்வளவுதான்!

இந்தச் செய்திக்குக் காரணமான பிரகாஷ் எம். ஸ்வாமி தான் தற்போது இலங்கை அரசை எதிர்த்து தமிழகச் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றிய ஜெ.யின் துணிச்சலும் அந்த மனதிடமும் ஹிலாரியைக் கவர்ந்ததாகச் சொல்லியிருக்கிறார். இலங்கை அரசை எதிர்த்து ஜெயலலிதா மட்டும்தான் பேரவையிலே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறாரா? இதற்கு முன்பு தமிழகச் சட்டப்பேரவையில் இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானங்களே நிறைவேற்றப்படவில்லையா? வேறு சிலர் பேரவையில் ஜெயலலிதா தீர்மானம் நிறைவேற்றிய காரணத்தால் அமெரிக்கா இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதித்து விட்டதாகவே சொல்லுகிறார்கள், பாராட்டு தெரிவிக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு வெளிவந்த மாலை ஏடு ஒன்றின் போஸ்டரில் "இலங்கை மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை, ஜெயலலிதா முயற்சிக்கு வெற்றி" என்று அச்சிடப்பட்டிருந்தது. எவ்வளவு பெரிய பொய்யைத் திட்டமிட்டு இங்கேயுள்ள சிலர் உண்மையாக்கி ஊராரை மயக்குவதற்கு எவ்வளவு "பகீரதப் பிரயத்தனம்" செய்கிறார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணமாகும். இதுபோன்ற செய்திகளைப் பார்த்து விட்டு நண்பர் திருமாவளவன் கூட அவர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் அது உண்மையாக இருக்கலாமோ என்றெண்ணி வரவேற்றிருக்கிறார். அதைப் பார்த்தவுடன் இந்தியாவில் வாழ்கிற இலங்கைத் தமிழர்கள் சிலரிடம் விசாரித்த போது அப்படி எதுவும் அமெரிக்கா இதுவரை அறிவிக்கவில்லை என்று கூறினார்கள்.

அமெரிக்க நாடாளுமன்ற வெளியுறவுத் துறைக்கான குழு போர்க் குற்றங்களை அடுத்து இலங்கை அரசுக்கு அமெரிக்க உதவிகளை ஒரு வரையறைக்குள் நிறுத்துவதாக

வாக்களித்துள்ளது. இந்த நடவடிக்கை கூட உடனடியாக அமலுக்கு வராது. அடுத்த 2012, அக்டோபர் மாதம் துவங்கும் நிதியாண்டில் இலங்கைக்கான உதவி நிறுத்தம் பற்றிய இந்தக் குழுவின் பரிந்துரை, அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட், காங்கிரஸ் என்ற இரண்டு அவைகளிலும் வைக்கப்பட்டு, அவற்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னரே நடைமுறைக்கு வரும். இந்த ஆலோசனை கடந்த பல வாரங்களாக இக்குழுவின் உறுப்பினர்களால் விவாதிக்கப்பட்டு வந்துள்ளது. இதற்கும் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சரின் இந்தியச் சுற்றுப் பயணத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மற்ற நாடுகள் குறித்த விவகாரங்களை இந்திய அரசிடம் மட்டும்தான் விவாதிப்பாரே தவிர, இந்தியாவில் உள்ள ஒரு மாநில அரசிடம் விவாதிக்கமாட்டார்.

அமெரிக்க வெளியுறவுத் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஹிலாரி கிளிண்டனின் இந்தியச் சுற்றுப்பயணம் மற்றும் அவரது பேச்சுகள் விவரம் வெளிவந்தன. அதில் அண்ணா நூற்றாண்டு நூலகம், உழைக்கும் பெண்கள் அமைப்பு, தாஜ் ஓட்டலில் நடைபெற்ற சந்திப்பு ஆகிய மூன்று நிகழ்ச்சிகளும் அவற்றில் அவர் பேசிய விவரங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன. அமெரிக்க வெளியுறவுத் துறையின் உதவிச் செயலாளர் ஒருவர் இவர்களின் சந்திப்பு பற்றி செய்தியாளர்களிடம் கூறும்போதுகூட "அவர்கள் இலங்கை குறித்துப் பேசினார்கள், இலங்கையிலுள்ள நிலைமை பற்றி நமக்கு கவலைகள் உள்ளன என்பதை அவர்கள் இருவரும் ஏற்றுக் கொண்டனர் என்று நான் நினைக்கிறேன்" என்றுதான் கூறியிருக்கிறார். இந்தச் சந்திப்பு பற்றி தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பிலே கூட, "உள்நாட்டில் குடிபெயர்ந்துள்ள தமிழர்கள் போர் முடிந்த பிறகும் மீள்குடியமர்த்தப்படவில்லை" என்று ஜெயலலிதா கூறியதாகவும், அதற்கு ஹிலாரி ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி வருவதாகக் கூறினார் என்றுதான் இருக்கிறதே தவிர, இலங்கைப் போரின்போது அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டது பற்றியோ, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிப்பது பற்றியோ இருவரும் பேசியதாக எதுவும் இல்லை.

ஆனால் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில ஏடு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அமெரிக்கா தலையிட வேண்டும் என்று

ஜெயலலிதா வற்புறுத்தியதை அடுத்துத்தான்; அமெரிக்க நாடாளுமன்றக் குழு இந்தப் பொருளாதாரத் தடை முடிவு எடுத்துள்ளதாகவும், அதனால் ஜெயலலிதா உலகெங்கும் உள்ள தமிழர்களின் தலைவராக உயர்ந்துவிட்டார் என்றும் ஜெயலலிதாவை எப்படியாவது உச்சாணிக் கொம்பிலே உயர்த்தி ஏற்றி தூக்கி நிறுத்துவதற்கு படாதபாடுபட்டு எழுதியுள்ளது.

ஆனால் உண்மையிலே நடந்தது என்னவென்று தெரியாமல் அ.தி.மு.க. வின் தொண்டர்களோ "அம்மா" அவர்களின் முயற்சிக்கு வெற்றியோ வெற்றி என்று பக்கம் பக்கமாக கொடுக்கும் பாராட்டு விளம்பரங்கள் வேறு!

இப்படித்தான் கடந்த முறை ஜெயலலிதா ஆட்சியிலே இருந்தபோது ஐ.நா. மன்றம் ஜெயலலிதாவுக்கு கௌரவ விருது வழங்கப் போகிறது என்று ஒரு செய்தி வெளியிடப்பட்டது. அதற்காக பெரிய விழா - பக்கம் பக்கமாக விளம்பரங்கள் - புகழாரங்கள் அத்தனையும் நடைபெற்றது. ஆனால் பிறகு அது உண்மையல்ல என்று தெரிந்ததும், ஐ.நா. சபையல்ல, ஐ.நா. சபையின் ஆலோசனை அமைப்பு என்றும், மனித உரிமைப் பாதுகாப்புக் குழு என்றும் முகவரியை மாற்றினார்கள். கோபி அன்னான் அவர்களுக்கு அளிக்கப்பட்ட விருதுதான் எங்கள் அம்மாவுக்கு தரப் போகிறார்கள் என்றார்கள்.

அதன் பிறகுதான் ஐ.நா. சபையில் இந்திய நாடாளுமன்றத்தின் பிரதிநிதியாக உரையாற்றச் சென்ற ஆர். சண்முகசுந்தரம், எம்.பி., அவர்களும், அவருடன் சென்ற காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஆனந்த சர்மா அவர்களும் மற்றும் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும், பிரபல மலையாள ஏடான "மாத்ரு பூமி" இதழின் ஆசிரியர் மாதவன் குட்டி அவர்களும் அந்த விருது பற்றி விசாரித்து அந்த விருதுக்கும் ஐ.நா.வுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அறிவித்தார்கள். ஜெயலலிதாவுக்கு விருது வழங்கும் அனைத்துலக மனித உரிமைப் பாதுகாப்புக் குழு ஐ.நா. சபையின் அதிகாரப்பூர்வ அமைப்பு எனக் கூறப்படுவது சுத்தப் பொய் - ஐ.நா. சபையின் ஆலோசனைக் குழுவில் பங்கேற்க உலகில் 2531 அரசு சாரா அமைப்புகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. அந்த 2531 அமைப்புகளின் பட்டியலில் ஜெயலலிதாவுக்கு விருது வழங்கும் அமைப்பு இல்லவே இல்லை. அதைத்தான் அப்போது ஐ.நா. சபையின் "தங்கத் தாரகை விருது" என்றெல்லாம்

விளம்பரப்படுத்தினார்கள். அதைப்போலவே தான் இப்போதும் இலங்கை அரசை எதிர்த்து ஜெயலலிதா தீர்மானம் போட்டதால் அமெரிக்கா பயந்துகொண்டு இலங்கைக்கு பொருளாதாரத் தடை விதித்து விட்டதாக செய்தி பரப்ப முயலுகிறார்கள். அதிலும் அ.தி.மு.க. அமைச்சரவையிலே உள்ள மூத்த அமைச்சர்களே ஏடுகளில் அரைப்பக்க அளவிற்கு கொடுத்துள்ள விளம்பரங்களில் சொல்லியிருக்கிறார்கள் என்றால் அமெரிக்காவைப் பற்றி உண்மைக்கு மாறாக இப்படியெல்லாம் விளம்பரம் செய்யலாமா? அது ஒரு வெளிநாட்டுப் பிரச்சினை அல்லவா? மாலையில் ஏடுகளைப் பிரித்தால் பக்கம் பக்கமாக ஜெயலலிதாவும் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சரும் உட்கார்ந்திருக்கின்ற புகைப்படங்களை விதம் விதமாகப் போட்டு வார்த்தை ஜாலங்கள் தான். நேற்று மாலையில் வந்த முதல் பக்க விளம்பரத்திலே கூட "இனவாத இலங்கை அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்கச் சட்டமன்றத்தில் முதல் தீர்மானம் கொண்டு வந்து இலங்கை மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதிக்க வழிவகுத்த உலகத் தமிழர்களின் ஒளி விளக்கு அம்மா அவர்களே, தங்களின் மலர் பாதம் பணிந்து நெஞ்சம் நிறைந்த நன்றி" - இன்னும் இப்படி அடுக்கடுக்கான விளம்பரங்கள் மட்டுமல்ல. சென்னை மாநகரம் முழுவதும் "ஈழத்தின் எதிர்காலமே" என்றும் - "ஈழத்தின் விடியலே" என்றும் கட்-அவுட் காட்சிகள். தமிழகத்து மாணவச் செல்வங்கள் கடந்த மூன்று மாதங்களாக எந்தப் புத்தகத்தைப் படிப்பது என்று தெரியாமல் கலங்கி நிற்கின்றார்கள். அவர்களின் பெற்றோர்களும், ஆசிரியர்களும் எப்போது புத்தகம் வரும் என்று தெரியாமல் உச்ச நீதி மன்றத் தீர்ப்பினை எதிர்பார்த்திருக் கிறார்கள். இந்த இலட்சணத்தில் மாணவர்களை தன்னுடைய பிடிவாதம் காரணமாக இன்னலுக்கு ஆளாக்கிய ஜெயலலிதா அம்மையாரைப் பற்றி இப்படி இல்லாத செய்திகளையெல்லாம் வெளியிட்டு, அதிலே இன்பம் காணுகிறார்களே, பொய் சொல்வதற்கும் ஒரு எல்லை வேண்டாமா? ஈழ விடுதலைப் போராளிகளுக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றிய சாட்சாத் அதே ஜெயலலிதாவேதான்; இன்று பக்கம் பக்கமாக விளம்பரப் பஜனைப் பாடப்படுகிற உலகப் புகழ் உத்தமத் தமிழச்சி ஆகிவிட்டார்!

அன்புள்ள,

மு.க.

31-7-2011

3577. மூன்று மாத ஆட்சிப் பட்டியலே மூச்சு முட்டுகிறதே!

உடன்பிறப்பே,

தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் காவல் துறை ஏவல் துறையாகச் செயல்படுகிறது - சட்டம் ஒழுங்கே இல்லை - பொழுதுவிடிந்து பொழுது போனால் கொலையும், கொள்ளையும் நடைபெறுகிறது - சாலையில் பெண்கள் நடமாட முடியவில்லை - கழுத்தில் செயின் போட்டுக் கொண்டு சென்றால் அறுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள் - ஆட்சியினரால் இந்தக் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த முடியவில்லை என்றெல்லாம் தனது ஒவ்வொரு நாள் அறிக்கையிலும் கழகம் ஆட்சியில் இருந்தபோது, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா குறிப்பிட்டு எழுதியதையும், பேசியதையும் தமிழ்நாட்டு மக்கள் அவ்வளவு சீக்கிரத்தில் மறந்திருக்க முடியாது. ஆனால் இன்றைக்கு என்ன நிலைமை?

ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பேற்று இன்னும் மூன்று மாதங்கள் முடியவில்லை. இந்த மூன்று மாதங்களில் தமிழ்நாட்டில் அன்றாடம் நடைபெற்ற சட்டம், ஒழுங்கு சீர்குலைவு நிகழ்ச்சிகளை மட்டும் பொதுமக்களின் சிந்தனைக்குப் பட்டியலிடுகிறேன்.

மளிகைக்கடையில் வியாபாரம் செய்த பெண்ணிடம் பத்து பவுன் தாலி சங்கிலி பறிப்பு (தினத்தந்தி 17.5.2011)

வளசரவாக்கம் அருகே 2 வீடுகளில் பூட்டை உடைத்து 25 பவுன் நகை கொள்ளை (17.5.2011)

தோழிக்கு நகை கொடுத்ததைக் கேட்டு அடித்து உதைத்த போதை தந்தையை கத்தியால் குத்தி கல்லூரி மாணவி கொலை செய்தார். (18-5-2001 தமிழ் முரசு)

கேரளாவுக்கு கடத்த முயன்ற 300 கிலோ கஞ்சா பறிமுதல் - மூன்று பேர் கைது

பண்ருட்டியில் நள்ளிரவில் பயங்கரம் - அடகு கடை அதிபர் கொலை - 1 கோடி ரூபாய் நகை கொள்ளை.

நாங்குனேரி அருகில் கழுத்தை அறுத்து பெண் படுகொலை.

ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தவுடன், வழிப்பறி கொள்ளைக்காரர்கள் எல்லாம் ஆந்திராவிற்கு ஓடி விட்டதாகக் கூறினார். ஆனால்

சென்னையில் திரையரங்கு உரிமையாளர் கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் தங்கச் சங்கிலியைப் பறித்து வழிப்பறி (தினமணி 19.5.2011)

கொடுங்கையூர் கண்ணதாசன் நகரைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்ற வியாபாரிகள் சங்கத் தலைவர் மனைவியுடன் கோவிலுக்குப் போய் விட்டுத் திரும்பியபோது வழி மறித்து ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கச் சங்கிலி பறிப்பு. (தினமணி 19.5.2011)

கோவையில் நகைப் பட்டறையில் ஊழியர் களை கட்டிப் போட்டு 1 கிலோ தங்கம் கொள்ளை (தமிழ் முரசு 19-5-2011)

கொடுங்கையூரில் அ.தி.மு.க., - தே.மு.தி.க. மோதல் 4 பேருக்கு அரிவாள் வெட்டு (தமிழ் முரசு 19-5-2011)

பீர்க்கன்கரணையில் பயங்கரம் - காவலாளி கொலை - பணம் கொள்ளை (தமிழ் முரசு)

சென்னை போலீசார் என்று கூறி கோவையில் 18 லட்சம் தங்க நகைகள் கொள்ளை (தினமணி 20.5.2011)

நீலாங்கரையில் பெண் கொலை (21-5-2011 தினமணி)

காருடன் கட்டிட காண்ட்ராக்டர் உயிருடன் எரித்துக் கொலை - சென்னை கிண்டியில் பயங்கர சம்பவம் (22.5.2011)

ஈரோடு அருகே சூரம்பட்டி நகர பா.ம.க. செயலாளர் குத்திக் கொலை (22.5.2011 முரசொலி)

சென்னையில் வழக்கறிஞரிடம் 100 பவுன் நகை கொள்ளை வழக்குப் பதிவு செய்யாமலே போலீசார் அலைய வைத்தனர் (முரசொலி 23.5.2011)

ஓடும் பஸ்ஸில் துணிகரம் - தூக்கத்தில் இருந்த பயணிகளிடம் 16 லட்சம் நகை, பணம் திருட்டு.

பட்டப் பகலில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. பழ. கருப்பையா மனைவியிடம் 10 பவுன் தங்கச் சங்கிலி பறிப்பு.

கோயில் குருக்கள் வீட்டில் கீவளூரில் நகை கொள்ளை. (24.5.2011 முரசொலி)

திருச்சி சமயபுரம் அருகே இளம் பெண் கற்பழித்துக் கொலை. (தினத்தந்தி 23.5.2011)

தக்கலையில் மயக்க மருந்து பயன்படுத்தி பெண்ணிடம் 24 பவுன் சங்கிலி பறிப்பு.

சென்னை மெரினாவில் சி.பி.ஐ. போலீஸ் ஏட்டு மனைவியிடம் செயின் பறிப்பு.

ஆளுநர் மாளிகை பாதுகாப்பு வீரர் மாயம் (தினமணி 22.5.2011)

ராயப்பேட்டையில் கார் டிரைவர் வெட்டிக் கொலை (மாலை முரசு 25.5.2011) விருகம்பாக்கத்தில் வீட்டை உடைத்து 30 சவரன் கொள்ளை (25.5.2011) சாலை விபத்துகளில்

7 பேர் பலி - கள்ளக் குறிச்சி, வாணியம்பாடியில் (25.5.2011 மாலை முரசு)

மயிலை கபாலி கோயில் அர்ச்சகர் வீட்டில் கொள்ளை - (தமிழ் முரசு 25.5.2011)

சங்ககிரி அருகே இரண்டு வாலிபர்கள் எரித்துக் கொலை (தமிழ் முரசு 26.5.2011)

ஓமலூர் அருகே நெடுஞ்சாலை அதிகாரி வீட்டில் 57 பவுன் நகை, பணம் கொள்ளை.

சென்னையில் நள்ளிரவில் பயங்கரம் - ஐந்து பேரை கத்தியால் குத்தி பணம் நகை கொள்ளை; மர்ம நபர்களுக்கு போலீஸ் வலை.

பழவந்தாங்கலில் பட்டப் பகலில் பயங்கரம் - ஓட ஓட விரட்டி ரவுடி படுகொலை. (தமிழ் முரசு)

சைதாப்பேட்டையில் தீக்குளித்த பெண், குழந்தையுடன் பலி. (தமிழ் முரசு)

வளசரவாக்கத்தில் பெண்களிடம் 26 பவுன் கொள்ளை.

வில்லிவாக்கம் வாலிபர் அடித்து கொலை.

ஆவடியைத் தொடர்ந்து திருநின்றவூர் நகைக் கடையில் கொள்ளை.

அண்ணா நகரில் இன்ஸ்பெக்டர் மனைவியிடம் செயின் அபேஸ்.

ரோட்டில் நடந்து சென்ற வாலிபருக்கு சரமாரி வெட்டு ; 4 பேருக்கு போலீஸ் வலை (தினகரன்)

திருவான்மியூரில் ஓய்வு பெற்ற ஆசிரியையிடம் 15 சவரன் தங்கச் சங்கிலி வழிப்பறி.

திருவான்மியூர், திருவள்ளுவர் நகரைச் சேர்ந்த சான்தினி என்பவரின் 15 சவரன் தாலி செயினை பறித்துக் கொண்டு பைக்கில் தப்பினர்.

மைலாப்பூரில் காண்ட்ராக்டரைக் குத்தி பணம், வாகனத்தைப் பறித்த கும்பல்.

திருப்பரங்குன்றம் அருகே கல்லூரி மாணவி கொலை

பேராவூரணி - பனியன் கம்பெனி அதிபரைத் தாக்கி கொள்ளை - அண்ணன், தம்பி அடித்துக் கொலை

சென்னை ஐஸ் அவுசில் சினிமா கலைஞர் வீட்டில் 80 பவுன் நகை கொள்ளை (மாலை மலர்)

போலீஸ் நிலையத்தில் விசாரணை கைதி மர்மச் சாவு.

புளியந்தோப்பு பூங்காவில் வாலிபர் கொலை

சென்னையில் 2 பெண்களிடம் செயின் பறிப்பு - மோட்டார் சைக்கிளில் வந்து கைவரிசை (மாலை முரசு)

கோயம்பேட்டில் ஊராட்சி தலைவி கணவனுக்கு சரமாரி அரிவாள் வெட்டு. மன்னார்குடியில் விவசாயி கொடூர கொலை.

டிராபிக் போலீசாக நடித்து நகை பறிப்பு.

துபாயில் இருந்து விமானத்தில் 2.68 கோடி ரூபாய் தங்கம் கடத்தல்.

கடனைத் திருப்பிக் கேட்ட நண்பர் கொலை.

கோவையில் காந்தி சிலை தலை துண்டிப்பு.

மயக்க குளிர் பானம் கொடுத்து மூதாட்டியிடம் 8 பவுன் அபேஸ்

காஞ்சிபுரம் அருகே போனில் பேசி வரவழைத்து வாலிபர் வெட்டிக் கொலை.

பாண்டி பஜாரில் நடந்து சென்றவர்களிடம் கத்தி முனையில் நகை பறிப்பு. சென்னை அரசு ஆஸ்பத்திரி முன்பு பெண் படு கொலை - சாக்கு மூட்டையில் பிணம்

வாணியம்பாடியில் தி.மு.க. பிரமுகர் வெட்டி படுகொலை.

பூந்தமல்லியில் திருமண வீட்டில் சப் இன்ஸ்பெக்டரிடம் நகை, ரூபாய் மூன்று இலட்சம் கொள்ளை.

சேலத்தில் வாலிபர் அடித்துக் கொலை

வண்டலூர் எஸ்.ஐ.யிடம் 6 லட்சம் ரூபாய் கொள்ளை

சென்னை அருகே போலீஸ் எஸ்.ஐ.யிடம்

25 பவுன் நகை, 3 லட்சம் ரூபாய் கொள்ளை.

சென்னையில் நடந்து சென்றவர்களிடம் கத்தி முனையில் வழிப்பறி. சென்னை அடையாறில் மூதாட்டியிடம் 8 சவரன் தங்கச் சங்கிலி கொள்ளை.

அடுத்தடுத்து 3 இடங்களில் துணிகரம் - கம்ப்யூட்டர் இன்ஜினியர்களை கத்தியால் குத்தி நகை பறிப்பு

கேளம்பாக்கத்தில் போதையில் தகராறு; தந்தை குத்திக் கொலை. ஆண்டிபட்டி அருகே டிபன் பாக்ஸ் குண்டு வெடித்து பெண் படுகாயம். மேல்மருவத்தூர் அருகே அம்மன் கோயிலில் நகைகள், பணம் கொள்ளை. சென்னை பொறியாளர் பார்த்தசாரதி கடத்திச் சென்று எரித்துக் கொலை. மாதவரம்-மதுரவாயல் பைபாசில் கணவருடன் வந்த பெண்ணிடம் 16 பவுன் செயின் அபகரிப்பு.

ஆவடி அருகில் அண்ணன், தம்பிக்கு சரமாரி கத்திக் குத்து. திருநின்றவூரில் கத்தியால் குத்தி வாலிபர் கொலை.

பட்டிவீரன்பட்டி போலீஸ் நிலையம் அருகே விவசாயி வீட்டில் 125 பவுன் தங்க நகை கொள்ளை.

வாணியம்பாடி அருகில் நிலத் தகராறில் தந்தை சுட்டுக் கொலை.

அண்ணா நகரில் இளம் வக்கீல் கடத்திக் கொலையா?

5 லட்சம் ரூபாய் கேட்டு சென்னை மாணவி கர்நாடகத்துக்குக் கடத்தல்

30 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அலுமினிய கட்டியுடன் லாரி கடத்தல்.

இன்ஸ்பெக்டர் வீடு உட்பட 4 இடங்களில் கொள்ளை.

ஓட்டல் ஊழியர் தற்கொலை குடும்ப வறுமை.

ஊழியரை வெட்டி செயின் பறிப்பு.

ஓட்டலை மூடச் சொன்னதால் பிரச்சினை துணைக் கமிஷனருடன் அதிமுக பிரமுகர் மோதல்; போலீஸ் தடியடி - ஸ்டேஷனுக்கு அமைச்சர் வந்ததால் பரபரப்பு.

பென்னாகரத்தில் 3 குழந்தைகளை கிணற்றில் வீசிக் கொன்று தாய் தற்கொலை

மைலாப்பூரில் அம்மன் கோவில் கவசங்கள் திருட்டு.

மோட்டார் சைக்கிள் கொள்ளையர்கள் அட்டூழியம் - அரிவாளால் வெட்டி நகை பறிப்பு

வாரிய வீடு வாங்கித் தருவதாக தூர்தர்ஷன் ஊழியர்களிடம் 31 லட்சம் மோசடி.

கோவையில் மகளிர் குழுவிடம் 20 லட்சம் மோசடி.

கதவை உடைத்து செல்போன் கடையில் 3 லட்சம் ரூபாய் கொள்ளை.

சென்னையில் கடைகளில் பூட்டை உடைத்து பல லட்சம் பணம் திருட்டு.

நகை, பணத்துடன் ஏட்டு மகள் மாயம்.

ஆடிட்டர் மனைவியிடம் 14 பவுன் செயின் பறிப்பு.

வீட்டின் கதவை உடைத்து 80 பவுன் நகை, 3 கிலோ வெள்ளி கொள்ளை.

திருச்சியில் அழகு நிலைய பெண் கொடூர கொலை.

மணல் கடத்தல் பிரச்சினையில் மோதல்; இன்ஸ்பெக்டரின் துப்பாக்கி வெடித்து வாலிபர் மீது குண்டு பாய்ந்தது.

நிபந்தனை ஜாமீனில் வந்த தொழிலாளி அடித்துக் கொலை.

சென்னையில் வீடு புகுந்து ஒரு லட்சம் கொள்ளை.

கிழக்கு தாம்பரத்தில் மூதாட்டியைத் தாக்கி நகை பறிப்பு.

திருமுல்லைவாயிலில் மதுக்கடை அருகே ஆண் பிணம்.

வியாசர்பாடியில் ரேஷன் அரிசியைக் கடத்த முயன்ற இரண்டு ஊழியர்கள் கைது.

திருவொற்றியூரில் பட்டதாரி பெண் மர்ம சாவு.

பொன்னேரி சிறையில் இருந்து விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட கைதி தப்பியோட்டம்

செய்யூர் அருகே கழுத்தை அறுத்து பெண் கொலை.

பட்டுக்கோட்டையில் பட்டப் பகலில் பயங்கரம் - தலைமை ஆசிரியர் மனைவி கழுத்தை அறுத்துக் கொலை.

ஆரணியில் ஏரியில் மண் சரிந்து தொழிலாளி பரிதாப சாவு.

சென்னை எம்.ஜி.ஆர். நகரில் பயங்கரம் - வாலிபர் வெட்டிக் கொலை

சென்னையில் வியாபாரி ஓட ஓட வெட்டிக் கொலை

பட்டுக்கோட்டையில் டி.வி., கிரைண்டரை அலறவிட்டு, பெண் கழுத்தறுத்து கொலை 6 பவுன், 87 ஆயிரம் கொள்ளை.

ஆட்டோ டிரைவர் வெட்டிக் கொலை.

மணலி, புதுநகரில் குடிபோதை மறுவாழ்வு மையத்தில் வாலிபர் அடித்துக் கொலை.

ரயில்வே அதிகாரி வீட்டுக் கதவை உடைத்து 2 லட்சம் மதிப்பு நகை, பணம் திருட்டு.

சென்னையில் 4.8 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள் பறிமுதல்.

கூலித் தொழிலாளி வெட்டிக் கொலை.

மூதாட்டியைத் தாக்கி தங்க நகை வழிப்பறி

கடன் பிரச்சினை - தம்பதி தற்கொலை

மதுரையில் பட்டப் பகலில் பெண் கழுத்து நெரித்து கொலை; தங்க நகைகள் கொள்ளை.

ரேஷன் அரிசி கடத்தல் - 523 பேர் கைது.

லாரி டிரைவரை கொலை செய்து ரயில்வே டிராக்கில் வீசிய கொடூரம்.

வீரவநல்லூர் நகரக் கழகச் செயலாளர் வெட்டிக் கொலை.

3 இடங்களில் வழிப்பறி.

தனியாக இருந்த பெண்ணிடம் 5 சவரன் நகை பறிப்பு

ராயப்பேட்டையில் அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளில் திருட்டு; நகை, பணம் கொள்ளை.

திருவண்ணாமலை கூட்டுறவு கடன் சங்கத்தில் கொள்ளை முயற்சியில் காவலாளி கொலை.

வியாசர்பாடியில் போலீஸ்காரரிடம் கத்தி முனையில் செயின் மற்றும் செல்போனை பறிக்க முயற்சி.

புளியந்தோப்பில் தங்க நகை திருட்டு - மந்திரவாதிக்கு வலை.

சைதாப்பேட்டையில் இளம் பெண் கழுத்து அறுத்துக் கொலை.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கோயில்களில் அம்மன் தாலிகள் திருட்டு.

தாம்பரத்தில் தங்கையை கிண்டல் செய்த வாலிபர் குத்திக் கொலை. வியாசர்பாடியில் மனைவி, 2 குழந்தை கொலை.

மதுரையில் வறுமையின் கொடுமையால் குடும்பமே தீக்குளித்து உயிர் விட்டது.

ஊத்தங்கரை அருகே கோவில் பூட்டை உடைத்து 70 பவுன் நகை கொள்ளை.

தாம்பரத்தில் வாலிபர் படுகொலை.

திருத்துறைப்பூண்டி - முன்விரோதம் காரணமாக விவசாயி அடித்துக் கொலை.

சென்னைக் கடற்கரையில் 3 இடங்களில் வழிப்பறி.

காசிமேட்டில் பெண் அடித்துக் கொலை

ரயிலில் சென்ற பெண்ணிடம் நகை பறிப்பு.

திருவான்மியூர் கடற்கரையில் காதல் ஜோடியிடம் கொள்ளை.

சினிமா ஆர்ட் டைரக்டர் மனைவியை தாக்கிக் கொள்ளை.

அரசு அதிகாரி வீட்டில் பட்டப் பகலில் கொள்ளை.

அண்ணா நகரில் மருத்துவரிடம் சங்கிலி பறிப்பு

டாஸ்மாக் கடையில் அச்சரப்பாக்கத்தில் கொள்ளை.

ராயபுரத்தில் தாமிர கட்டிகள் திருட்டு.

பிறந்து 6 நாளே ஆன ஆண் குழந்தை தண்ணீரில் மூழ்கடித்து கொடூரக் கொலை.

திண்டிவனத்தில் லாரி மீது கார் மோதி சென்னை பேராசிரியர் பலி.

தருமபுரி பகுதியில் ஒரே மாதத்தில் 15க்கும் மேற்பட்ட வழிப்பறி சம்பவங்கள் - 48 பவுன் நகை கொள்ளை.

சென்னையில் காரில் வைத்திருந்த ஒரு இலட்சம் ரூபாய் நூதன கொள்ளை.

சென்னையில் ஒன்றரை வயது ஆண் குழந்தை கடத்தல் - 50 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை.

சென்னையில் குழந்தையைக் கடத்தி விற்பனை.

மூதாட்டியிடம் நகை வழிப்பறி

பெண்ணை மிரட்டி நான்கரை லட்சம்ரூபாய் நகை கொள்ளை.

பள்ளி மாணவி தற்கொலை.

வேளச்சேரி, ராம்நகரில் 27 சவரன் நகை பறிப்பு.

அதிமுக பிரமுகர் காரில் வைத்திருந்த ஐந்து லட்சம் ரூபாய் அபேஸ்.

அந்தமானுக்கு டன் கணக்கில் வெடி பொருள் கடத்தல்.

தஞ்சை அருகே கத்தியால் குத்தி விவசாயி கொலை.

சென்னையில் குழந்தையை கடத்தி விற்றதாக 3 பெண்கள் கைது.

கூடுவாஞ்சேரியில் பட்டப் பகலில் பெண்ணிடம் இருந்து 5 பவுன் நகையை அறுத்துச் சென்றனர்.

அச்சரப்பாக்கத்தில் கத்தியைக் காட்டி மிரட்டி செல்போன், கைகடிகாரம் துணிகரக் கொள்ளை.

தாம்பரம் அருகே பஸ் பயணியிடம் 5 லட்சம் ரூபாய் கொள்ளை.

பட்டாபிராமில் மாணவி கடத்தல்.

காஞ்சிபுரத்தில் காய்கறி வியாபாரி வெட்டிக் கொலை.

நாகையில் அண்ணனைக் கொன்ற தம்பி படுகொலை.

குமரி மாவட்டம் - செங்கல் சூளை தொழிலாளி சரமாரி குத்தி கொலை.

வாணியம்பாடியில் தொடர் கொலைகள் - காவல் துறை அலட்சியம்.

காஞ்சிபுரம், நாகூரில் ஒரே நாளில் 3 பேர் படுகொலை.

கொடுங்கையூரில் ஓட ஓட விரட்டி மூதாட்டி படுகொலை.

வேலூரில் பிளஸ் 1 மாணவிகள் 3 பேர் கடத்தல்.

திருவண்ணாமலையில் கல்லூரி மாணவர் வெட்டிக் கொலை.

பைக் மீது வேன் மோதி 2 நண்பர்கள் பலி.

தூத்துக்குடியில் மாணவர் மர்ம சாவு - நரபலியா?

நாச்சியார் கோவிலில் பட்ட பகலில் நகை கொள்ளை.

கிருஷ்ணகிரியில் வாகன தணிக்கையின் போது லாரி மோதி எஸ்.ஐ. பலி.

சேலம் அருகே கழுத்தை நெரித்து தந்தை படுகொலை.

திருவண்ணாமலையில் மனைவி எரித்துக் கொலை

ஆரணியில் கந்து வட்டி மிரட்டலால் தொழிலாளி தற்கொலை.

சென்னையில் பல்வேறு இடங்களில் தொடர்ந்து வழிப்பறி கொள்ளை - பொதுமக்கள் அச்சம், பீதி.

குன்றத்தூரில் வாலிபர் கழுத்தறுத்து கொலை.

ஈரோட்டில் வழிப்பறி கொள்ளை. பத்து நாளில் 35 பவுன் நகை, 3 லட்சம் ரூபாய் இழப்பு.

வியாசர்பாடியில் ஒரே இரவில் 3 வீடுகளில் நகை, பணம் கொள்ளை.

ஓடும் ரயிலில் தொடரும் நகை பறிப்பு - சென்னை ஆவடி மத்திய சிறப்பு காவல் படை குடியிருப்பைச் சேர்ந்தவர் நிர்மல். அவரது மனைவி ஆனந்தியிடம் அரக்கோணம் ரயில் நிலையத்தில் செயின் பறிப்பு.

பிரியா என்பவர் திரிசூலம் ரயில் நிலையத்தில் 5 சவரன் செயினை பறிகொடுத்தார்.

கடந்த மாதம் திருமுல்லைவாயில் ரயில் நிலையத்தில் ஒரேநாளில் நடந்த 2 சம்பவங்களில் பெண் காவலர் ஒருவர் நகையை பறி கொடுத்தார்.

கடற்கரையில் காதல் ஜோடிகளிடம் நகை பறிக்கும் வாலிபர்கள்.

தண்டையார்பேட்டையில் மின் பெட்டிக்குள் வாலிபர் சடலம்.

போலீஸ் நிலையத்தில் பிளேடால் கை, முகத்தை அறுத்து வாலிபர் தற்கொலைக்கு முயற்சி.

குண்டர் சட்டத்தில் ரவுடி கைது.

அரிசி கடத்திய ஐந்து பேருக்கு குண்டர் சிறை.

தாம்பரத்தில் நடந்த வாகன சோதனையில்

3 கொள்ளையர் சிக்கினர் - 2 லட்சம் நகை பறிமுதல்.

பேருந்தில் சென்றவரிடம் 50 ஆயிரம் அபேஸ்

வங்கி அதிகாரி வீட்டில் புகுந்து மூதாட்டியைக் கட்டிப் போட்டு நகை, பணம் கொள்ளை.

சென்னை புறநகரில் வழிப்பறி திருடர்கள் 3 பேர் பிடிபட்டனர்.

திருநின்றவூரில் நடந்து சென்ற பெண்ணிடம் நகை பறிப்பு.

சங்கரன்கோவில் அருகே பயங்கரம் - பஞ்சாயத்து தலைவரின் 2 மகன்கள் படுகொலை.

உளுந்தூர்பேட்டை அருகே ஓடும் பஸ்சில் கழுத்தை அறுத்து பாங்க் மேனேஜரை கொல்ல முயன்ற கேஷியர்.

நாங்குநேரி அருகே திருமணமான ஆறு மாதத்தில் கர்ப்பிணி அடித்துக் கொலை.

திருப்பெரும்புதூரில் வீட்டில் விபசாரம் - 9 பெண்கள் உட்பட 30 பேர் கைது.

திருத்தணி அருகே சென்னை வங்கி ஊழியர் அடித்துக் கொலையா?

குரோம்பேட்டையில் தூக்கிட்டு இளம்பெண் சாவு.

பட்டாபிராமில் வியாபாரி வீட்டில் 35 சவரன் கொள்ளை.

ஊரப்பாக்கத்தில் பைக் திருட்டு.

கோயில் அறையில் விபசாரம் - 2 பெண் களுடன் பூசாரி சிக்கினார்.

அசோக் நகர் உதவி கமிஷனரைக் கண்டித்து வக்கீல்கள் கோர்ட் புறக்கணிப்பு.

வாடிப்பட்டி அருகே காவலாளியை கட்டிப் போட்டு வங்கியில் கொள்ளை முயற்சி.

மதுரையில் 320 சவரன் நகை மோசடி.

உளுந்தூர்பேட்டையில் அரசு டாக்டர் வீட்டில் 5 லட்சம் நகை கொள்ளை.

100 பெண்களை சீரழித்த போதை சாமியார் நெல்லையில் கைது.

காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் மீனவர் வெட்டிக் கொலை.

பொன்னேரி அருகே அழுகிய நிலையில் பெண் பிணம்.

மோட்டார் சைக்கிளில் வந்து நகையை பறித்த சுடிதார் அழகி.

வெளிநாட்டில் வேலை வாங்கித் தருவதாக கூறி 18 லட்சம் ரூபாய் மோசடி.

எம்.ஜி.ஆர். நகரில் மனைவி உயிரோடு எரித்துக் கொலை.

சென்னையில் வழிப்பறி கொள்ளையர்கள் 3 பேர் கைது.

திருத்துறைப்பூண்டியில் டாக்டர் வீட்டில் 220 பவுன் கொள்ளை.

கடலூர் மாவட்டத்தில் நகைக் கொள்ளை கும்பல் சங்கிலி பறிப்பு வீடுகளில் கொள்ளை தொடர்கிறது.

நாகர்கோவிலில் வாலிபர் கொடூர கொலை - கழுத்தை நெரித்துக் கொன்று உடலை பெட்ரோல் ஊற்றி எரித்தனர்.

ஆவடியில் குழந்தையுடன் பெண் மாயம்.

ஆந்திராவில் இருந்து இரண்டரை லட்ச ரூபாய் போலி மதுபானம் கடத்தி வந்த வாலிபர் கைது.

பட்டுக்கோட்டையில் நிதி நிறுவன அதிபர் வீட்டில் 22 லட்ச ரூபாய் தங்கம் வெள்ளி நகைகள் கொள்ளை.

போலீஸ் ஏட்டுக்கு சரமாரி வெட்டு.

அண்ணா நகரில் 2 பெண்களிடம் கத்தி முனையில் நகை, பணம் கொள்ளை.

திருவையாற்றில் ராணுவ கேப்டன் வீட்டில் நகை, பணம் கொள்ளை.

ஓசூரில் 106 பவுன் நகையுடன் மந்திரவாதி ஓட்டம்.

ஆவடியில் நடந்து சென்ற பெண்ணிடம் நகை பறிப்பு.

கோவை - சாலையில் பட்டப் பகலில் ஒருவர் படுகொலை - போலீசார் வேடிக்கை.

கோவையில் பிளஸ் 2 மாணவி குத்திக் கொலை நகைகள் கொள்ளை.

கூடுவாஞ்சேரி அருகே 5 லட்சம் ரூபாய் கேட்டு வியாபாரி கடத்தல்.

பள்ளிப்பட்டில் டியூஷனுக்குச் சென்ற மாணவி கொலை.

எழும்பூரில் பயங்கர ஆயுதங்களுடன் 3 ரவுடிகள் கைது. ஆதம்பாக்கத்தில் தனியாக நடந்து சென்ற பெண்ணிடம் தங்க சங்கிலி பறிப்பு.

மதுரையில் பட்டப் பகலில் வீடு புகுந்து 32 பவுன் நகை கொள்ளை.

தென் சென்னையில் பெண்களிடம் செயின் பறித்த கொள்ளையர்கள் கைது.

கிழக்கு தாம்பரத்தில் மார்வாடியை கத்தியால் குத்தி ஒரு லட்சம் கொள்ளை.

கொருக்குப்பேட்டையில் போலீஸ்காரரைத் தாக்கி 2 பேர் கைது.சென்னையில் பட்டப் பகலில் வங்கி பெண் அதிகாரி படுகொலை நகைகளுடன் மர்ம ஆசாமி ஓட்டம்.

திருவொற்றியூரில் பட்டப் பகலில் 50 சவரன் நகை, பணம் கொள்ளை.

கடலூர் பா.ம.க. பிரமுகர் வெட்டிக் கொலை.

பட்டினப்பாக்கத்தில் தொழில் அதிபர் வீட்டில் 12 லட்சம் தங்க, வைர நகை கொள்ளை.

திருவண்ணாமலை அருகே பாலியல் பலாத்காரம் செய்து இளம்பெண் படுகொலை.

அதிகாலையில் லாரியை மறித்து, டிரைவரை கொலை செய்த பெண் வேடமிட்ட கும்பல் 40 ஆயிரம் ரூபாய் கொள்ளை.

அம்பத்தூரில் நள்ளிரவில் கம்ப்யூட்டர் நிறுவனத்தில் ஒன்றரை லட்சம் கொள்ளை.

கடந்த மாதத்தில் மட்டும் 178 கொள்ளை, திருட்டு - திருப்பூர் மாவட்டத்தில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கொள்ளை சம்பவங்கள்.

புதுக்கோட்டை பேருந்து நிலையத்தில் பெண்ணிடம் 7 பவுன் நகை திருட்டு.

மதுரை திருமங்கலம் அருகே தனியார் பள்ளி மாணவன் படுகொலை.

ரயிலில் பெண் பயணியிடம் 4 லட்சம் நகை திருட்டு.

ரேஷன் அரிசி கடத்தல் - இதுவரை 50 பேருக்கு குண்டாஸ்

கோவையில் தொழிலதிபர், வியாபாரி வீட்டில் 65 பவுன் 11 லட்ச ரூபாய் கொள்ளை.

பால் வியாபாரி வீட்டில் நகை, சிலிண்டர் திருட்டு.

பட்டப்பகலில் பெண்ணிடம் 4 சவரன் செயின் பறிப்பு.

கத்தி முனையில் மிரட்டி மூதாட்டியிடம் நகை பறிப்பு.

திருப்பூரில் இளம்பெண் கற்பழித்துக் கொலை.

சென்னை விமான நிலையத்தில் 37 லட்சம் தங்க நகைகள் பறிமுதல்.

ஆம்பூர் தொழிலதிபர் வீட்டில் 200 சவரன் திருட்டு.

திருவொற்றியூரில் வீட்டிற்குள் புகுந்து 10 சவரன் நகை, பணம் திருட்டு

செங்கற்பட்டு அருகே தே.மு.தி.க. தொண்டர் சரமாரி வெட்டிக் கொலை.

மின்சாரம் பாய்ச்சி கணவர் படுகொலை.

மீனம்பாக்கத்தில் உதவி ஆய்வாளர் மனைவியிடம் 10 சவரன் நகை திருட்டு.

சென்னை கோட்டூர்புரம் போலீஸ் பூத் அருகே தேமுதிக நிர்வாகி துடிக்கத் துடிக்க வெட்டிக் கொலை செய்யப்பட்டார். 14 வயது மகன் கண் முன்னே பயங்கரம்.

கார் மீது மணல் லாரி மோதி சினிமா டைரக்டர் மகள் உட்பட சாப்ட்வேர் இஞ்சினீயர் மூன்று பேர் ஈ.சி.ஆர் சாலையில் பலி.

நாகர்கோவிலில் பட்டதாரி பெண் எரித்துக் கொலை - குளியல் அறையில் கருகிக் கிடந்தார்.

ஆரணி அருகே பரிதாபம் - கார் லாரி மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தில் ஆறு பேர் பலி.

தேவாரத்தில் குண்டு வெடிப்பு பெண் உட்பட 2 பேர் உடல் சிதறி பலி.

மதுரையில் பா.ம.க. மாநில துணைப் பொதுச் செயலாளர் இளஞ்செழியன் கொடூரக் கொலை - 6 பேர் கும்பல் வெறிச் செயல்.

தூத்துக்குடி அருகே தங்கைக்கு ஆபாச எஸ்.எம்.எஸ். அனுப்பிய பெயிண்டர் கழுத்தை அறுத்து படுகொலை.

உசிலம்பட்டியில் நள்ளிரவில் பெண்ணை கட்டிப்போட்டு காண்ட்ராக்டரை கொலை செய்து ஐந்து லட்சம் ரூபாய் கொள்ளை.

குமரன் நகர் துணை ஆய்வாளரின் ரோந்து பைக் மாயம்.

சேலத்தில் தூங்கிக் கொண்டிருந்த கூலித் தொழிலாளி உயிருடன் எரிப்பு.

அசோக் நகரில் தம்பதி, குழந்தைகளைக் கட்டி போட்டு, நகை பணம் கொள்ளை.

இஞ்சினீயர் வீட்டில் நகை, பணம் அபேஸ்.

எம்.எல்.ஏ. காரில் 50 ஆயிரம் அபேஸ்

திருப்பூரில் தொழிலதிபர் வீட்டில் 147 பவுன் கொள்ளை.

தென்காசி அருகே போலீஸ் ஸ்டேஷனில் குண்டு வெடித்தது.

2 பெண்களிடம் தண்டையார்பேட்டையில் பத்து பவுன் மோசடி.

உடன்பிறப்பே, அ.தி.மு.க. ஆட்சி அமைந்து கடந்த இரண்டே மாதங்களில் நடந்த சம்பவங்கள் - சில நாளிதழ்களில் தலைப்புச் செய்தியாக வந்துள்ளவற்றை மட்டும் என் கண்ணிலே தென்பட்டவைகள் இங்கே தொகுத்துள்ளேன். சட்டம், ஒழுங்கைப் பற்றி தி.மு. கழக ஆட்சியின் போது குறை கூறி வாய் கிழியப் பேசி, அன்றாடம் அறிக்கை விட்ட அம்மையாரின் ஆட்சியிலே நடைபெற்ற இந்தக் கொலை, கொள்ளைகளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்? காவல் துறையினரைக் கேட்டால், "அ.தி.மு.க. ஆட்சியினர் அறிவுரைப்படி நாங்கள் தி.மு. கழகத்தினர் மீது பொய் வழக்குகளைப் போடுவதற்கே நேரம் போதவில்லை" என்பார்கள்! பொய் வழக்கு போடும் புனிதவதி இந்த உண்மைச் சம்பவங்களுக்கு விளக்கமளிப்பாரா?

அன்புள்ள,

மு.க.

3-8-2011

3578. உனக்கொரு நீதி; ஊருக்கொரு நீதியா?

உடன்பிறப்பே,

பழிவாங்கும் பொய் வழக்கு நடவடிக்கைகளில் அ.தி.மு.க. அரசு எந்த அளவிற்கு ஈடுபடுகிறது என்பதற்கு மற்றும் ஓர் உதாரணத்தை உனக்கு விளக்கிட விரும்புகிறேன். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் புலனாய்வுத் துறையில் கூடுதல் டி.ஜி.பி.யாகப் பணியாற்றியவர்தான் இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த திரு. ஜாபர் சேட், ஐ.பி.எஸ். அரசுக்கு எந்த அளவிற்கு உண்மையாக, விசுவாசமாக பணியாற்ற வேண்டுமோ அந்த அளவிற்கு அவர் பணியாற்றினார் என்பது உண்மை. ஆனால் தற்போதுள்ள ஆட்சியினர் நேர்மையாகவும், திறமையாகவும் பணி புரிந்ததையே ஒரு குற்றமாக எடுத்துக் கொண்டு, நீ எப்படி அரசுக்கு விசுவாசமாகப் பணியாற்றலாம்? அது தவறல்லவா? அதனால் நீ இருக்க வேண்டிய இடம் மண்டபம் முகாம்தான்! எனவே உன்னை அங்கே மாற்றுகிறேன் என்று தூக்கி அடித்ததோடு, பழி வாங்கிடும் நோக்கத்திற்குப் பால் வார்த்திடும் வகையில், அவர் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மேல் அதிகாரிகளிடம் இந்த அரசு பணித்தது. மேல் அதிகாரிகள், அவர் நல்ல ஓர் அதிகாரி, எந்தக் கட்சி அரசிலே இருந்தாலும், அந்த அரசுக்கு விசுவாசமாகப் பணியாற்றக் கூடியவர். அவரைப் போல பல அதிகாரிகள் இருக்கிறார்கள், எனவே அவர் மீது நடவடிக்கை எடுத்தால் காவல் துறையின் நெறிமுறைகள் சீர்குலைந்து போகும் என்று கூறியும் கேளாமல், "நீங்கள் எல்லாம் கருணாநிதிக்குத்தான் விசுவாசமாக இருப்பீர்களா, உடனடியாக ஜாபர் சேட் மீது ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும்" என்று கூறி, அதற்காகவே அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது; பழி வாங்கும் அஸ்திரம் பாய்ந்துள்ளது.

கூடுதல் டி.ஜி.பி. நிலையிலே பணியாற்றும் அந்த அதிகாரியின் மீதான குற்றச்சாட்டு தமிழக அரசின் வீட்டு வசதி வாரிய மனை

ஒதுக்கீட்டினைப் பெற்று அதன் மூலமாக பல கோடி ரூபாயைச் சம்பாதித்துவிட்டார் என்பதுதானாம்! இந்த வீட்டு வசதி வாரிய மனைகள் ஒதுக்கீடு என்பதில் - அரசு விருப்புரிமை அடிப்படையில் வழங்கலாம் என்று முடிவெடுத்ததே அ.தி.மு.க. ஆட்சியிலேதான். அதற்கான அரசாணை 25-1-1979இல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதல் முதலில் இதைத் தொடங்கிய போது 10 சதவிகித வீடுகள் அல்லது மனைகளைத்தான் விருப்புரிமை அடிப்படையிலே அரசு வழங்கலாம் என்று இருந்தது. ஆனால் அதற்குப் பிறகு 1991ஆம் ஆண்டு அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்த நேரத்தில் விருப்புரிமை 10 சதவிகிதம் என்பதை 15 சதவிகிதம் என்று உயர்த்தி வழங்கலாம் என்று முடிவெடுத்ததும் அவர்கள்தான். இவ்வாறு விருப்புரிமை அடிப்படையில் அரசு வீட்டு வசதி வாரிய மனைகளை ஒதுக்கீடு செய்தது பற்றி புகார் தி.மு.கழக ஆட்சியில் எழுந்தவுடன் கழக ஆட்சிக் காலத்திலேயே பல ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்து வந்த அரசின் விருப்புரிமையில் வீடுகள் மற்றும் மனைகள் ஒதுக்கீடு செய்யும் முறை ரத்து செய்யப்பட்டு ஆளுநர் உரையிலேயே அது அறிவிக்கப்பட்டது. தி.மு. கழக ஆட்சி இருந்த போதே இந்தக் குற்றச்சாட்டினை திரு. சுப்பிரமணியன் சுவாமி அவர்கள் கூறி, அதற்கு சட்டப் பேரவையில் விதி 110இன் கீழ் நான் விரிவாகவும், விளக்கமாகவும் பதில் கூறி, அது ஏடுகளிலும் வெளிவந்துள்ளது.

வீட்டு வசதி வாரியத்தின் வீடுகள் அல்லது மனைகளில் 85 சதவிகிதத்தை குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்வதும் - மீதியுள்ள 15 சதவிகிதத்தை அரசு, தனது விருப்புரிமையின் கீழ் ஒதுக்கீடு செய்வதும் தொடர்ந்து நீண்ட காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் முறையாகும். அரசு தனது விருப்புரிமை ஒதுக்கீடான 15 சதவிகித இடங்களை திருமணம் ஆகாத பெண்கள், கணவனால் கைவிடப்பட்டோர், கணவனை இழந்தோர், மாற்றுத் திறனாளிகள், சமூக சேவகர்கள், சமூகத்தில் சிறப்பு வாய்ந்தோர், தனியாக வசிக்கும் முதியோர், பொது நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களில் பணி புரிவோர், மத்திய அரசு மற்றும் மத்திய அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரிவோர், பத்திரிகையாளர்கள், தேசியமயமாக ஆக்கப்பட்ட வங்கிகளில் பணி புரிவோர், தேசிய மயமாக ஆக்கப்பட்ட ஈட்டுறுதி நிறுவனங்களில் பணி புரிவோர், தமிழ் நாட்டில் உள்ள அனைத்து

வாரியங்களில் (தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தைத் தவிர) பணி புரிவோர், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் நக ராட்சிகளில் பணி புரிவோர், இராணுவத்தினர், மற்றும் முன்னாள் ராணுவத் தினர், விடுதலைப் போராட்ட தியாகிகள், மொழிக் காவ லர்கள், அப்பழுக்கற்ற அரசு ஊழியர்கள் ஆகியோர்க்கு விருப்புரிமையைப் பயன்படுத்தி ஒதுக்கீடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும், அ.தி.மு.க. ஆட்சியிலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

அரசு விருப்புரிமை ஒதுக்கீட்டின்கீழ் தரப்படும் வீடுகள் அல்லது மனைகள் சலுகை விலையிலே தரப்படுவதில்லை. குலுக்கல் முறையிலே விற்கப்படுபவர்களிடம் பெறப்படும் அதே தொகை தான் - அதாவது சந்தை மதிப்பைத்தான் (Market Rate), விருப்புரிமை அடிப்படையில் பெறுபவர்களிடமும் வசூலிக்கப் படுகிறது. அதிலும் தற்போது தி.மு.கழக அரசின் ஆட்சிக் காலத்தில் விருப்புரிமை ஒதுக்கீட்டின்கீழ் வீட்டு மனை பெற்றவர்கள், அவர்கள் மனையின் விலையாகக் கட்ட வேண்டிய தொகை மிக அதிகமாக இருப்பதாகக் கூறி, அந்தத் தொகையை கட்ட முடியாத நிலையில் வீட்டு வசதி வாரியத்திற்கே மீண்டும் அந்த வீட்டு மனைகளை ஒப்படைத்து விட்டார்கள் என்பதற்கு பல எடுத்துக்காட்டுகள் உண்டு. எந்த விதிமுறைகளையும் மீறி இந்த வீட்டு மனைகள் கழக ஆட்சிக் காலத்தில் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அ.தி.மு.க. ஆட்சியிலே என்ன நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவோ, அவற்றில் ஒன்றைக் கூட கழக ஆட்சிக் காலத்திலே மாற்ற வில்லை. "விதிமுறைகளுக்கு உட்பட்டே அரசு ஒதுக்கீடு செய்யும். விதிமுறைகள் மீறப்பட்டிருந்தால் - குறிப்பிட்டுப் புகார் கொடுக்கப்பட்டால் - அரசு அதனைப் பரிசீலனை செய்து, அதில் உண்மை இருந்தால் நடவடிக்கை எடுக்கும்" என்று 7-12-2010 அன்று கழக அரசில் இந்தத் துறையின் அமைச்சராக இருந்த தம்பி ஐ.பெரியசாமி செய்தியாளர்களிடம்கூறி, அது ஏடுகளிலேயே வெளி வந்துள்ளது.

ஜெயலலிதா ஆட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் வீட்டு மனைகளை விருப்புரிமை அடிப்படையிலே பெற்றவர்கள் --

- தலைமைச் செயலாளராக இருந்த திரு. என். நாராயணன், ஐ.ஏ.எஸ்.க்கு 1993ஆம் ஆண்டு 4115 சதுர அடி.

- தற்போது அமைச்சராக உள்ள திரு. கே.ஏ. செங்கோட்டையன் மகன் கே.எஸ். கார்த்தீசனுக்கு பெசண்ட் நகர் பகுதியில் 1995ஆம் ஆண்டு 4535 சதுர அடி.
- முன்னாள் அமைச்சர் நாகூர் மீரான் துணைவியார் நூர் ஜமீலாவுக்கு கொட்டிவாக்கத்தில் 1993ஆம் ஆண்டு 2559 சதுர அடி.
- நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தம்பிதுரை மனைவி டாக்டர் பானுமதி தம்பிதுரைக்கு அண்ணா நகரில் 7 கிரவுண்ட் நிலம்.
- **அ.தி.மு.க.வின் தொழிற்சங்கப் பேரவைக்கு அண்ணா நகரில் 3 கிரவுண்ட் நிலம்.**
- அ.தி.மு.க.வைச் சேர்ந்த எஸ்.எம். வேலுச்சாமியின் மனைவி திருமதி பானுமதிக்கு கோவையில் 1993ஆம் ஆண்டு வீடு.
- அதிகாரிகள் என்று எடுத்துக் கொண்டால் காவல் துறை அதிகாரிகளிலேயே திருவாளர்கள் தேவாரம், கே.விஜயகுமார், ஆர்.நடராஜ், பி.காளிமுத்து, இக்பால் முகமது, ஏ.பி.முகமது அலி, கே.ராதா கிருஷ்ணன், வி.பாலசந்திரன், சி.சைலேந்திரபாபு, எஸ்.வி.கருப்பசாமி, சிற்றரசு, ஆர். திருநாவுக்கரசு. எப்.எம்.உசேன், ஜி. சம்பத் குமார், செந்தாமரைக் கண்ணன், கே.சண்முகவேல், பி. சின்னசாமி, சஞ்சய் அரோரா, தமிழ்ச் செல்வன், கோபாலகிருஷ்ணன், பெரியய்யா, அசோக் குமார் போன்றவர்கள் வீட்டு வசதி வாரிய வீட்டு மனைகளையோ வீடுகளையோ பெற்றிருக்கிறார்கள். ஆனால் இதில் எதையும் தி.மு.கழக ஆட்சியிலே தவறு என்று சுட்டிக் காட்டவில்லை.
- ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் என்று எடுத்துக் கொண்டால் திருவாளர்கள் மாலிக் பெரோஸ்கான், பி.ஏ. ராமையா, எஸ். கபிலன், ராகவன், சியாம் சுந்தர், சீனிவாசன், லால் ரெய்னா சைலோ, வி. ராமு, வி. வரப்பிரசாத ராவ், டி. நடராசன் (இவர் அம்மையார்

ஜெயலலிதாவிடம் துணைச் செயலாளராகப் பணியாற்றியவர் - கழக ஆட்சியில் இவர் வீட்டிற்குச் சென்று சோதனை செய்ய வில்லை), எம்.தேவராஜ், சையத் முனீர் ஹோடா போன்ற அதிகாரிகள் வீடு அல்லது மனை பெற்றிருக்கிறார்கள் (இதில் தேவ ராஜ், சையத் முனீர் ஹோடா இருவரும் அ.தி.மு.க. ஆட்சியில் வீட்டு மனை வாங்கியவர்கள் ஆயிற்றே என்று கருதாமல் நான் முதல்வராக இருந்த போது என்னிடம் செயலாளராகவே இவர்கள் பணியாற்றி னார்கள்)

- இவர்கள் தவிர அரசியல்வாதிகள் பட்டியல் வேறு உள்ளது. இரண்டு மனை பெற்றவர்களின் பட்டியலும் உளளது.

உடன்பிறப்பே,

இத்தனை பேர் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் - அதன் பிறகு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் அந்த ஆட்சிக் காலத்திலும் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு மனைகளைப் பெற்றிருக்கிறார்கள். இதில் குறி பார்த்து ஒருசிலர் மீது மட்டும் தற்போது ஜெயலலிதா அரசு நடவடிக்கை எடுப்பது என்பது பழி வாங்கும் செயலல்லவா? இந்த அதிகாரிகள் அந்த இடங்களைப் பயன்படுத்தி கூட்டுப் பொறுப்பில் வேறு சில தனியாரோடு சேர்ந்து பெரிய கட்டிடங்களாகக்கட்டி பிறருக்கு விற்று கோடிக் கணக்கிலே சம்பாதித்து விட்டார்கள் என்று ஏடுகளிலே செய்தி வெளியிடுகிறார்கள். இந்த வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளுக்காக வாரியம் குறிப்பிடும் தொகையை முழுவதுமாகக் கட்டி விட்டால் அந்த இடங்கள் அவரவர்களுக்குச் சொந்தமாகி விடும். சொந்தமாகி விட்ட அந்த இடங்களை இப்படி இப்படித்தான் பயன்படுத்த வேண்டுமென்று யாரும் கூற முடியாது; அதற்கு எவ்வித நிபந்தனைகளும் இல்லை. வீட்டு மனைக்குச் சொந்தக்காரர் விருப்பப்படி அதனைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் இந்த மனைகளின் விலைகள் சுமார் ஒரு கோடி ரூபாய் என்கிறபோது, அந்தத் தொகையைக் கட்டுவதற்கும், வீடு கட்டுவதற்கும் அரசு அதிகாரிகள் என்ன செய்வார்கள்? தனியார் நிறுவனத்தோடு சேர்ந்து கூட்டாக (Joint Venture) அந்த மனையில் வீடுகளைக் கட்டுவதென்பது வீட்டு

வசதி வாரியம் சாதாரணமாக அனுமதிக்கும் ஒன்றாகும். இதில் விதி மீறல் எதுவும் இல்லை. பலர் இந்த முறையைப் பின்பற்றி வீடுகள் கட்டியிருக்கிறார்கள். இதில் என்ன தவறு இருக்க முடியும்? அது மாத்திரமல்ல; கூடுதல் டி.ஜி.பி., ஜாபர் சேட் அவர்கள் இந்த மனையை முதலில் தன் பெண் பெயரிலே வாங்கிவிட்டு, பிறகு அதைத் திரும்ப ஒப்படைத்துவிட்டு, அதன் பிறகு தன் துணைவியார் பெயரிலே அதே மனையைப் பெற்றிருக்கிறார். ஒவ்வொருவர் பெயரிலும் ஒவ்வொரு மனையை வாங்கினால் தான் தவறு. இது ஒரே மனையை தன் குடும்ப சூழ்நிலை கருதி மற்றவர் பெயருக்கு மாற்றியதிலே என்ன பெரிய தவறு இருக்க முடியும்? மனைவி, மகள் பெயர்களையும் இதிலே இழுத்து வழக்கு தொடுக்கிறார்கள் என்றால்; அது வேண்டுமென்றே குடும்பத் தையே பழிவாங்குகின்ற செயல்தானே?

அந்த அதிகாரி மீது வழக்கு தொடுத்ததோடு மட்டுமல்லாமல் - நள்ளிரவிலே அவரைப் பணியிலிருந்து தற்காலிகப் பணி நீக்கம் செய்து அ.தி.மு.க. அரசு நடவடிக்கையும் எடுத்துள்ளது. அதிலும் பழிவாங்கும் எல்லைக்கு மற்றொரு உதாரணமும் கூறுகிறேன். இந்த அரசாங்கம் பழி வாங்கும் நடவடிக்கைக்கு உச்சக் கட்டமாகச் சென்று, இந்தக் குறிப்பிட்ட அதிகாரியைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்ததோடு, அவர் மண்டபம் முகாமிலேதான் பணி நீக்கக் காலத்திலே இருக்க வேண்டும், சென்னையிலே உள்ள அவரது குடும்பத்தினரோடு இருக்கக் கூடாது என்றால் அதற்கு என்ன பெயர்? அதிலும் சிறுபான்மை சமுதாயமான இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் அவர். தற்போது அவர்களுக்கு நோன்பு காலமாகும். இந்த நேரத்தில் அவர் குடும்பத்தினரைக் காணக் கூடாது என்றெல்லாம் உத்தரவிடுவது எந்த அளவிற்கு நெறிக்குட்பட்டது? ஏன் இப்படிப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகள்? அரசுக்கு விசுவாசமான அதிகாரிகளையெல்லாம் பழி வாங்கினால், மற்ற அதிகாரிகள் எல்லாம் ஒரு அரசுக்கு விசுவாசமாக நாம் பணியாற்றினால், அடுத்து வரும் ஆட்சியிலே தாங்கள் பழி வாங்கப்பட நேரிடும் என்று நினைத்தால், தங்கள் பணியினை முறையாகவும் நிறைவாகவும் ஆற்ற முடியுமா? ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளுக்கெல்லாம் சங்கங்கள் எல்லாம் இருப்பதாகச் சொல்கிறார்களே? அந்தச் சங்கங்கள் எல்லாம் இது போன்ற நடவடிக்கைகளை அனுமதிக்கிறதா? ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் எல்லாம் மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குரிய

அதிகாரிகள் என்று சொல்லப்படுகிறதே, அந்த மத்திய அரசாவது இதுபோன்ற நிலைமைகளில் கவனம் செலுத்துமா? இப்படிப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கைக்கு முற்றுப்புள்ளி எப்போது? பழிவாங்குவதிலே நிர்வாகத் திறனைக் காட்ட முயற்சிப்பதை, நிர்வாக வரலாறு நிச்சயமாக ஏற்காது!

அன்புள்ள,

மு.க.

5-8-2011

3579. வரியில்லா பட்ஜெட் என்பது வடிகட்டிய பொய்யல்லவா?

உடன்பிறப்பே,

ஜெயலலிதா அரசின் நிதியமைச்சர் திரு. பன்னீர்செல்வம் பேரவைக்கு அளித்த நிதி நிலை அறிக்கையில் இரண்டாவது பத்தியிலேயே "மாநில அரசு ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்குக் கூடுதலான கடன் சுமையில் மூழ்கியுள்ளது" என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து, மாநில அரசின் கடன் சுமையைக் குறைப்பதற்கு பல்வேறு வகையான திட்டங்களையும், யோசனைகளையும் நிதி நிலை அறிக்கையிலே தெரிவிப்பார் என்று எண்ணி அதை முழுவதும் படித்த போது - இறுதியாக இந்த 2011-2012ஆம் ஆண்டுக்கு அரசு பெறப் போகும் கடன் 17,261 கோடி ரூபாய் என்றிருப்பதைக் கண்டு நான் பெரும் ஏமாற்றமடைந்தேன். மாநில அரசின் கடன் சுமையைப் பற்றி ஏதோ திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியிலே இருந்த போது, கடன்களை வாங்கி அவற்றையெல்லாம் ஜெயலலிதாவின் தலையில் வைத்து விட்டுப் போய் விட்டதைப் போல ஆதங்கப்பட்டு அடிக்கடி சிலர் பேசி வந்த நிலையில் அவர்களும் ஏமாற்றமடைந்திருப்பார்களென்று எண்ணுகின்றேன்.

தமிழக அரசின் கடன் விவரங்கள் பற்றி அரசின் சார்பில் பலமுறை ஏற்கனவே விளக்கம் அளித்துள்ளேன். இந்த ஆட்சியினர் மீது 1.25 லட்சம் கோடி ரூபாய் கடன் சுமையை தி.மு.கழக அரசு ஏற்றி வைத்து விட்டதாகத் திரும்பத் திரும்பச் சொல்வது தவறு. 31-3-2006 அன்றே, ஜெயலலிதா ஆட்சி புரிந்த ஐந்தாண்டு காலத்திற்கு பிறகு தமிழக அரசின் மொத்தக் கடன் பொறுப்பு 57 ஆயிரத்து 457 கோடி ரூபாயாகும். இது ஜெயலலிதா, தி.மு. கழக அரசின் மீது ஏற்றி வைத்து விட்டுச் சென்ற கடன் சுமை. அந்தக் கடன் சுமையைக் குறைக்க தி.மு. கழக அரசு எந்த வரியையும் விதிக்க வில்லை. ஆனால் ஜெயலலிதா தான் ஆட்சிக்கு வந்த

மூன்று மாத காலத்திற்குள்ளாகவே சுமார் 4000 கோடி ரூபாய் அளவிற்கு - நிதி நிலை அறிக்கையை அவையிலே படிப்பதற்கு முன்பாகவே அவசரம் அவசரமாக - வரிகளை சுமத்தியிருக்கிறார். அவ்வாறு நிதி நிலை அறிக்கையைப் படிப்பதற்கு முன்பு வரிகளை சுமத்தி விட்டு, தற்போது வரிகளே இல்லாத பட்ஜெட் என்று வாய் நிறைய புகழ்ந்து கொள்வதிலே என்ன பொருள் இருக்க முடியும்?

நிதித் துறையின் செயலாளர், திரு. க. சண்முகம், ஐ.ஏ.எஸ்., அவர்கள் நிதி நிலை அறிக்கைக்குப் பிறகு அளிக்கும் வழக்கமான பேட்டியில், கலால் வரிகள் மூலமாக மாநில அரசுக்கு நடப்பு நிதியாண்டில் 10 ஆயிரத்து 191 கோடி ரூபாய் வரி வருவாய் கிடைக்கும் என்றும், மதுபானங்கள் மீதான வருவாய் நீங்கலாக விற்பனை வரிகள் மூலம் மாநில அரசுக்கு 7 ஆயிரத்து 755 கோடி ரூபாய் கிடைக்கும் என்றும், மதுபானங்கள் விற்பனை மூலம் கிடைக்கும் வரி வருவாயையும்

சேர்த்தால் 17 ஆயிரத்து 810 கோடி ரூபாய் கிடைக்கும் என்று சொல்லியிருக்க - இந்தச் செய்தியை வெளியிட்ட "தினமணி" நாளேடு அதன் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் "வரி விதிப்பு இல்லா உபரி பட்ஜெட்" என்று "போற்றி" பாடியிருப்பது சரிதானா?

இன்றைய "இந்து" நாளிதழிலே கூட - "State may have to go in for heavy borrowings this year" என்ற தலைப்பில், "The AIADMK Government's first budget presented to the Assembly on Thursday shows that it may have to go in for heavy borrowings this year to fund its ambitious social welfare programmes. The projection of net borrowings is Rs. 17,261 crore 2011-12 to fill the resource gap" என்று ஜெயலலிதா அரசின் கடன் வாங்க வேண்டிய நிலையை சுட்டிக்காட்டியுள்ள "இந்து" நாளிதழ் அந்தச் செய்தியிலேயே, , "When the State's public debt was projected to cross Rs. 1 lakh crore at the end of last fiscal, the AIADMK, then in the Opposition, had warned that the DMK regime was pushing the State into a debt trap" – அதாவது கடந்த நிதியாண்டின் இறுதியில் மாநில அரசின் கடன் அளவு ஒரு லட்சம் கோடி ரூபாயைத் தாண்டும் என்று குறிப்பிட்டு, தி.மு.க. ஆட்சி மாநிலத்தை கடன் வலையிலே மாட்டி விட்டது என்று அ.தி.மு.க. விமர்சனம் செய்ததை எடுத்துக்காட்டி, ஜெயலலிதாவின் கடந்த கால வாய்ச் சவடாலையும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜெயலலிதா அரசு பதவியேற்றவுடன் ஏழு கோப்புகளில் கையெழுத்திட்டதாக பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்டதோடு அந்தத் திட்டங்களையெல்லாம் நிதி நிலை அறிக்கையிலே மூன்றாவது பத்தியில் விரிவாக வெளியிட்டுள்ள நிதித்துறை அமைச்சர், அந்த ஏழு திட்டங்களிலே ஒரு திட்டமான மகப்பேறு கால விடுமுறை சலுகை ஆறு மாதங்களாக உயர்த்தப்படும் என்பதைக் குறிப்பிட மறந்து விட்டது ஏனோ?

தி.மு. கழக அரசு இலவசத் திட்டங்களை அறிவித்த போதெல்லாம், மக்களை ஏழைகளாகவே வைத்திருக்கும் திட்டங்கள் என்று கேலியும் கிண்டலும் செய்த ஜெயலலிதா தற்போதைய நிதி நிலை அறிக்கையிலே இலவச திட்டங்களை அறிவித்திருக்கிறார். இந்த இலவசத் திட்டங்களைத் தவிர நிதி நிலை அறிக்கையிலே உள்ள மற்ற திட்டங்கள் அனைத்தும் மத்திய அரசின் திட்டங்களாகவும், கழக அரசின் திட்டங்களாகவும் உள்ளன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மத்திய அரசின் திட்டங்களான தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய மீன் வளர்ச்சிக் கழக நிதித் திட்டம், ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புறப் புனரமைப்புத் திட்டம், ராஜீவ் வீட்டு வசதித் திட்டம், அனைவருக்கும் கல்வித் திட்டம், தேசிய இடைநிலைக் கல்வித் திட்டம், தேசிய ஊரக சுகாதார நலத் திட்டம், சொர்ண ஜெயந்தி வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களும், உலக வங்கித் திட்டங்களான நீர்வள நிலவளத் திட்டம், அணை பாதுகாப்புத் திட்டம், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம், ஜப்பான் நாட்டு உதவியுடன் பசுமைத் திட்டம் மற்றும் சென்னை மாநகர வெளிவட்டச் சாலைத் திட்டம் போன்ற திட்டங்களும் - ஜெர்மன் வளர்ச்சி வங்கி மூலம் குடிநீர், மழைநீர், பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற திட்டங்களுமாகும்.

கழக ஆட்சியில் தொடங்கிய பல்வேறு திட்டங்களின் பலனை அ.தி.மு.க. ஆட்சி தற்போது அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறது என்பதற்கு பல உதாரணங்களைச் சொல்லலாம். நிதிநிலை அறிக்கையில் பத்தி 6இல் "மின் ஆளுகை முயற்சிகளில் தமிழகம் முன்னணியில் உள்ளது" என்றும், பத்தி 50இல் "உலக அளவில் தமிழ்நாடு உற்பத்தி சார்ந்த தொழில் முதலீட்டிற்கு உகந்த மாநிலமாக கருதப்படுகிறது" என்றும், பத்தி 56இல்

"நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. குறு, சிறு, நடுத்தர தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க நிலம் ஒதுக்கீடு செய்ய சிட்கோ நிறுவனம் 25 இடங்களில் 2,256 ஏக்கர் நிலத்தை தேர்வு செய்துள்ளது" என்றும் கழக அரசுக்கு இந்த நிதி நிலை அறிக்கையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கழக அரசு தொடங்கிய நதி நீர் இணைப்புத் திட்டம், பொது விநியோகச் சிறப்புத் திட்டம், திறன் வளர்ப்புத் திட்டம் போன்றவையும் அ.தி.மு.க. ஆட்சியில் தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாத காரணத்தால் இந்தத் திட்டங்களையும் இந்த ஆட்சியிலே தொடர்ந்தாலும் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்ட நல்ல பல திட்டங்களுக்கு மூடு விழா நடத்துவதிலும் இந்த அரசு முனைப்பாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைக் கூற வேண்டுமேயானால், 2008ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் துறையின் பணிச் சுமையைக் குறைக்கவும், காவல் பணியைச் செம்மையாக்கவும், சென்னைப் புறநகர் காவல் ஆணையரகம் துவக்கப்பட்டது. ஆனால் தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் சென்னைப் புறநகர் காவல் ஆணையரகத்திற்கு மூடு விழா செய்யப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். இவ்வாறு செய்வதால், கமிஷனருக்கு பணிச் சுமை கூடும் என்றும், நிர்வாக சிக்கல்கள் ஏற்படும் என்றும், பணி மாற்றத்தின் போது போலீசார் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கு தூக்கி அடிக்கப்படும் பிரச்சினைகள் ஏற்படும் என்றும் "தினமலர்" நாளேடே இன்று கருத்து தெரிவித்துள்ளது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்திற்கும் மூடு விழா நடத்தியிருக்கிறார்கள். கழக ஆட்சியில் 3716 கோடி ரூபாய்ச் செலவில் 1 கோடியே 62 லட்சத்து 80 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்யப்பட்டு - ஒரு கோடியே 58 லட்சத்து 8 ஆயிரத்து 285 பெட்டிகள் விநியோகம் செய்யப்பட்டு விட்டன. தொலைக் காட்சி பெட்டி பெறாதவர்களுக்கும் அவைகளை வழங்கிட 249 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 லட்சம் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் கொள்முதல் செய்ய கழக ஆட்சியிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு தற்போது அ.தி.மு.க. அரசு மூடு விழா நடத்தி விட்டதால், அந்தத் தொலைக்

காட்சி பெட்டிகளைப் பெறுவதற்காக காத்திருந்தவர்களின் வயிற்றெரிச்சலை இந்த அரசு சம்பாதித்துத்தானாக வேண்டும்.

அதுபோலவே குடிசை வாழ் மக்களுக்காக - தமிழகத்திலே குடிசை வீடுகளே இருக்கக் கூடாது என்ற நல்ல நோக்கத்தோடு தொடங்கப்பட்ட திட்டத்திற்கு "கலைஞர் வீடு வழங்கும் திட்டம்" என்று பெயர் வைத்தபோதே, நான் அது கூடாது என்று கூறினேன். ஆனால் ஒரு சிலர் என் பேச்சைக் கேட்காமல் அந்தத் திட்டத்திற்கு என் பெயரை வைத்த காரணத்தால், அ.தி.மு.க. ஆட்சியினர் அந்தத் திட்டத்திற்கே முற்றுப் புள்ளி வைக்க முனைந்து, முதல் ஆண்டில் கட்ட முற்பட்ட 3 லட்சம் காங்கிரீட் வீடுகளில் ஒன்றரை லட்சம் வீடுகள் முற்றுப்பெற்றது போக எஞ்சியுள்ள ஒன்றரை இலட்சம் வீடுகளும் இன்று முற்றுப் பெறவேண்டிய நிலையில் காத்திருக்கின்றன. ஆனால் இந்த ஆட்சியிலே அதற்கான எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை என்று இந்த நிதிநிலை அறிக்கையிலிருந்து தெரிகிறது.

என் பெயரில் உள்ள திட்டத்தை ரத்து செய்து விட்டு, இந்த ஆட்சியிலே வேறு ஒரு திட்டத்தை தொடங்குவதாக அறிவித்து அதற்கு ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபாய் வீதம் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். தி.மு. கழக ஆட்சியில் இந்தத் திட்டத்திற்காக 75 ஆயிரம் ரூபாய் என்று அறிவித்ததால், வீம்புக்காக ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபாய் தரப் போவதாக அறிவித்திருக்கிறார்கள். கழக ஆட்சியிலே இந்தத் திட்டத்திற்கு 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியபோது, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பெரிதும் பயனடையும் இந்திரா காந்தி வீட்டு வசதி திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கும் மாநில அரசின் சார்பில் 75 ஆயிரம் ரூபாய் மானியமாக வழங்கப்படும் என்று அறிவித்தோம். ஆனால் அ.தி.மு.க. அரசு இந்திரா காந்தி வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்கும் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு மாறாக ஒரு இலட்சம் ரூபாய் மட்டுமே உதவி நிதியாகத் தரப்படும் என்று அறிவித்திருப்பது, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களின்பால் இந்த ஆட்சியினர் காட்டுகின்ற பாரபட்சமாக ஆகிவிடும்.

நிதி நிலை அறிக்கை பத்தி 65இல் "கடந்த ஐந்தாண்டுகளில் கூடியுள்ள புதிய உற்பத்தித் திறன் 206 மெகாவாட் மட்டுமே" என்று கூறிவிட்டு - பத்தி 68இல் 2011-2012ஆம் ஆண்டில்

புதிய திட்டங்களால் கிடைக்கும் மின் உற்பத்தித் திறன் 3,280 மெகாவாட் ஆக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று எழுதப்பட்டுள்ளது. இந்த 3,280 மெகாவாட் மின்சாரமும் கடந்த ஐந்தாண்டு கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்ட திட்டங்களால் கிடைக்கக் கூடியதே தவிர, அ.தி.மு.க. ஆட்சி இந்த மூன்று மாதங்களிலே உற்பத்தி செய்தது அல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மொத்தம் 4183 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் தொடங்கப்பட்டன. கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட இந்த மின்சார திட்டங்கள் அ.தி.மு.க. ஆட்சியினருக்குத்தான் பயனை அளிக்கப் போகின்றன என்பதே உண்மை.

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட "தொல்காப்பியர் பேரவை" போன்ற தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அரசாணையும் வெளியிடப்பட்டது. ஆனால் தற்போதைய நிதி நிலை அறிக்கையில் அது குறித்து எந்த அறிவிப்பும் இல்லை. "தமிழ் வளர்ச்சி" என்ற தலைப்பில் வெறும் 58 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மட்டுமே நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்து காட்டப்பட்டுள்ளதே தவிர, செம்மொழி மாநாட்டில் கூறப்பட்டிருந்த திட்டங்கள் நிறைவேற்றப்படுமா, அல்லது அந்தத் திட்டங்களுக்கும் பாவேந்தர் செம்மொழி தமிழாய்வு நூலகத்திற்கு அ.தி.மு.க. ஆட்சியில் நேர்ந்த கதிதானா என்று தெரியவில்லை.

நிதி நிலை அறிக்கை பத்தி 143இல் "மாநில அரசு பல்வேறு வகையான தொழிலாளர்களுக்காக 34 நல வாரியங்களை அமைத்துள்ளது. இவற்றுள் அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில் 17 நல வாரியங்களை தொழிலாளர் நலத் துறை நிர்வகித்து வருகிறது. இந்த 17 நல வாரியங்களில் 51.37 இலட்சம் தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது நாள் வரை 13.85 இலட்சம் பயனாளிகளுக்குத் திருமணம், மகப்பேறு, அறுவை சிகிச்சை, கல்வி, ஓய்வூதியம், விபத்து, இறப்பு நிவாரணம் போன்றவற்றிற்காக 356.59 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந்த நல வாரியங்கள் திறம்பட செயல்படாத நிலையில் உள்ளதால் இந்த அரசு இவ்வாரியங்களை சீரமைத்து அவற்றின்

செயல்பாடுகளை மேம்படுத்தும்" என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே உள்ள விவரங்களைப் படித்தாலே இந்த வாரியங்கள் செயல்பட்டிருக்கின்றனவா என்பதை அறியலாம். இருந்தாலும் இந்த வாரியங்கள் எல்லாம் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டன என்ற ஒரே காரணத்திற்காக அவைகளையெல்லாம் சீரமைத்து மேம்படுத்தப் போவதாக அறிவித்து விட்டு, அவைகளுக்கும் மூடு விழா நடத்தப் போகிறார்கள் என்பதுதான் நடக்கப் போகிறது.

எனவே அ.தி.மு.க. நிதி நிலை அறிக்கையைக் கண்ணை மூடிக் கொண்டு படித்துப் பாராட்டி மகிழலாம்! அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு.க.

6-8-2011

3580. பரவாயில்லை; ஆடும் வரை ஆடட்டும்!

உடன்பிறப்பே,

6-8-2011 நாளிட்ட "தினமணி" இதழ் "உண்மை சுடத்தான் செய்யும்!" என்ற தலைப்பில் ஆளுங் கட்சிக்கு வழக்கம் போல ஆதரவாக ஒரு தலையங்கம் எழுதியுள்ளது. அதில் "எதிர்க்கட்சியினர் மீது பொய் வழக்குப் போடுகிறது தமிழக அரசு என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்

மு. கருணாநிதி திரும்பத் திரும்பச் சொல்கிறார். ஒருவர் பொய் சொல்லலாம், இரண்டு மூன்று பேர் சேர்ந்தும் பொய் சொல்லலாம். ஊர் முழுவதும், மாநில முழுவதிலும் மக்கள் பெருவாரியாக வந்து பொய் சொல்வார்களா?" என்று தினமணி அதிலே கேள்வி கேட்டுள்ளது. நான் தினமணியாருக்கு ஒரு சில விளக்கங்களை அளிக்க விரும்புகிறேன்.

திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன் மீது ஜெயலலிதா அரசு ஒரு வழக்கினைப் பதிவு செய்து கைது செய்ய முன் வந்தது. அவர் என்ன குற்றம் செய்ததாக இந்த அரசு கூறியது? 29ஆம் தேதி சமச்சீர் கல்வித் திட்டத்தை ஆதரித்து நடைபெற்ற அறப்போரில் இலட்சக் கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டு பள்ளிகளைப் புறக்கணித்தனர். அதிலே கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் ஒருவருடைய மகனும் கலந்து கொண்டு, பின்னர் அவர் இல்லம் திரும்பும்போது அவர் சென்ற பேருந்து லாரி ஒன்றோடு மோதியதில் அந்தச் சிறுவன் இறந்து விட்டார். அதற்கும் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளருக்கும் என்ன தொடர்பு?

கலைவாணனை ஜாமீனில் விடுவிக்க நீதிமன்றத்தில் கோரியபோது அந்த மனுவினை விசாரித்த நீதிபதி திரு.சந்திரசேகர் அவர்கள், "இது அரசியல் காழ்ப்புணர்வுடன் போடப்பட்ட வழக்கு என பூண்டி கலைவாணன் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அசன் முகமது தெரிவித்த கூற்றை நீதிமன்றம் ஏற்றுக் கொள்கிறது,

நீதி மன்றமும் அவ்வாறே கருதுகிறது" என்று கூறி பூண்டி கலைவாணன் ஜாமீனில் வெளியே வர ஆணை பிறப்பித்தார். எனவே இது பொய்யான வழக்கு என்று நாங்கள் கூறவில்லை. ஒரு நீதிபதியே சொல்லி யிருக்கிறார்.

அடுத்து, 30-7-2011 அன்று காலை 10 மணி யளவில் திருத்துறைப்பூண்டியில் சொத்து மற்றும் பொருள்களை சேதப்படுத்தியதாக பூண்டி கலைவாணன் மீது 7 பிரிவுகளில் மற்றொரு வழக்கை அ.தி.மு.க. அரசு அவசரம் அவசரமாக பதிவு செய்து பாளையங்கோட்டை வரை காவல் துறையினர் சென்று ஜாமீனில் கலைவாணன் சிறையிலிருந்து வெளியே வந்தவுடன் அங்கேயே கைது செய்தார்கள். தினமணியார் இதை நியாயம் என்று கூறுகிறாரா?

இரண்டாவது முறையாக கலைவாணனை கைது செய்து நீதிமன்றத்தில் ரிமாண்ட் செய்ய முற்பட்டபோது, கலைவாணனே நீதிபதியிடம் 29-7-2011 அன்று இரவு சென்னையிலிருந்து விமானத்தில் திருச்சி வந்த கழகப் பொருளாளர் மு.க.ஸ்டாலினை வரவேற்க தான் சென்றிருந்த தாகவும், அன்றிரவு அவரோடு தஞ்சையிலே தங்கியிருந்ததாகவும், 30ஆம் தேதி காலையில் அவருடனேயே வேனில் புறப்பட்டு வந்து கொண்டிருந்தபோது காவல் துறையினர் வழியிலே மறித்து தன்னை கைது செய்து விட்டதாகவும், இரண்டாவது வழக்கிலே காவல் துறையினர் குறிப்பிட்டுள்ள அந்த நேரத்தில் தான் திருத்துறைப்பூண்டியிலேயே இல்லை என்றும் கூறியிருக்கிறார். இதையும் தினமணி மறுக்கிறதா? அவர் திருத்துறைப்பூண்டியில் சொத்துக்கு சேதம் விளைவித்ததாக அ.தி.மு.க. அரசு கூறியுள்ள புகாரை பொய் இல்லை என்று மறுக்கிறதா?

இதற்குப் பிறகும் அந்தக் கலைவாணன் மீது அ.தி.மு.க. அரசு குண்டர் சட்டத்தில் அவர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறது என்றால், இந்த ஆட்சியில் பொய் வழக்குப் போடவில்லை என்று "தினமணி" கூற முடியுமா?

அடுத்து, ஈரோட்டில் முன்னாள் அமைச்சரும், ஈரோடு மாவட்ட தி.மு.கழகச் செயலாளருமான என்.கே.கே.பி. ராஜா அவர்களை நள்ளிரவு 2 மணி அளவில் கைது செய்யச் சென்ற காவல் துறையினர், காம்பவுண்டு சுவர் ஏறிக் குதித்துத்தான்

உள்ளே சென்றிருக்கிறார்கள். நீதிபதியின் இல்லத்திற்கு அவரை அழைத்துச் சென்று தமிழகக் காவல் துறையினர் அவரை "ரிமாண்ட்" செய்யவேண்டுமென்று கோரி யிருக்கிறார்கள்.

ஆனால் ஈரோட்டில் உள்ள நீதிபதி அவர்கள், காவல் துறையினர் என்.கே.கே.பி. ராஜா அவர்களை கைது செய்து, ரிமாண்டில் வைப்பதற்கு எந்தச் சான்றுகளையோ, காரணங்களையோ தெரிவிக்கவில்லை என்று கூறி அவரை ரிமாண்டில் வைப்பதற்கு தான் ஒப்புதல் அளிக்க முடியாது என்று கூறிவிட்டார். இதிலிருந்தே ராஜா மீதான வழக்கு பொய் வழக்கு என்று தினமணியாருக்குத் தெரிகிறதா இல்லையா?

அடுத்து தென் சென்னை மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டப்பேரவை உறுப்பினருமான ஜெ. அன்பழகனை அவசர அவசரமாக அதிகாலையில் சென்று தூங்கிக் கொண்டிருந்தவரை எழுப்பி எட்டு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். அந்தப் புகாரைக் கொடுத்தவர் யார் தெரியுமா? 2009ஆம் ஆண்டு ஆகஸ்டில் நலிவடைந்த மில்களை வாங்கி, போலி ஆவணங்கள் மூலம் 250 கோடி ரூபாய்க்கு மேல் மோசடியில் ஈடுபட்டு கைதாகி, ஜாமீனிலே வெளிவந்த ஒருவர். இருபதுக்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பெயரில் போலி ஆவணங்கள் தயாரித்தவர். அவரும், அவரது நண்பர்களும் ஈடுபட்ட வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட மோசடிப் பேர்வழி செய்த புகாரை வைத்துக் கொண்டு, அன்பழகனை சென்னையிலே கைது செய்து, கோவைக்கு அழைத்துச் சென்று சிறையிலே அடைத்திருக்கிறார்கள் என்றால், அதனை உண்மை வழக்கு என்று தினமணியார் நம்புகிறாரா?

புரசையில் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் ரெங்கநாதன் இந்த ஆட்சியினரால் கைது செய்யப்பட்டார். அவர் மீது வழக்கு போடப்பட்டுள்ளது. அதன் கதி என்ன? ஏற்கனவே அதே வழக்கு நீதி மன்றத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் மீது இப்போது எதற்காக திடீர் நடவடிக்கை? பொய் வழக்குகள் என்பதற்கு ஒன்றிரண்டைக் கோடிட்டுக் காட்டினேன். அவ்வளவுதான்.

சேலத்தில் முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் ஜாமீனில் வெளியே வந்து காவல் நிலையத்திலே அன்றாடம்

கையெழுத்து போட வேண்டுமென்ற நிபந்தனையை நிறைவேற்றச் சென்றபோது, மேலும் அவர் மீது மற்றொரு வழக்கைப் பதிவு செய்து கைது செய்தார்கள்.

மதுரையிலே அவ்வாறே பல கழகத் தோழர்கள் மீது வழக்குகள் - ஜாமீனிலே வெளியே வர முடியாத அளவிற்கு குண்டர் சட்டங்கள்.

திருச்சியில் மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் ஒருவரை கைது செய்து, குண்டர் சட்டத்திலே அவரை காராக்கிருகத்தில் அடைத்தார்கள். ஆனால் அது என்னவாயிற்று? தற்போது அவர் வெளியே வந்துவிட்டார்.

ஆளுங்கட்சிக்கு ஆதரவான வார இதழ் ஒன்று, வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் முதல் பத்தியே "வாபஸ் பெறப்பட்ட புகாரின் மீது எப்.ஐ.ஆர். போட்டு சாதனை செய்துள்ளனர் கொடைக்கானல் போலீசார்" என்றுதான் தொடங்குகிறது. அந்தச் சம்பவத்தில் புகார் கொடுத்தவர்கள் ஆறு மாதங்களுக்கு முன்பே அதை வாபஸ் வாங்கிய பிறகும், காவல்துறையினர் அந்தப் புகார் மீது நடவடிக்கை எடுத்து கொடைக்கானல் நகர் மன்றத் தலைவர் உள்ளிட்ட தி.மு.க.வினர் சிலரை கைதே செய்துள்ளார்கள்.

இவைகளை பொய் வழக்கு என்று நான் கூறினால், தினமணியார் எல்லாமே பொய் வழக்குகளா என்று தலையங்கம் எழுதி பதில் கூறுகிறதே, இதற்கெல்லாம் தினமணி சொல்லப் போகும் பதில் என்ன? புகார் கொடுப்பவர் உண்மையானவராக இருந்து, புகாரில் உண்மைத் தன்மை இருப்பது உறுதி செய்யப்பட்டால்; அந்தப் புகாரின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதை யாரும் தடுக்க முடியாது; சட்டம் தன் கடமையைச் செய்கிறது என்று சமாதானம் அடைந்திட முடியும். ஆனால், தமிழகத்தில் கடந்த மூன்று மாதங்களாக நடப்பது என்ன? "அ.தி.மு.க. வினர் மீது நில அபகரிப்புப் புகார்கள் உண்மையாகவே வந்தாலும், காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்யாமல், சம்பந்தப்பட்ட அமைச்சரை அழைத்துப் புகார் கொடுக்க வந்தவர்களுடன் பேசி சமாதானம் செய்து அனுப்புகிறார்கள். ஆனால் நிலத்தை விற்றவர்கள் தி.மு.க. வினர் மீது புகார் கூறினால் அந்தப் புகார் உண்மையா? அல்லவா? என்று விசாரிக்காமலேயே

வழக்குப் பதிவு செய்து கைது செய்கிறார்கள்" என்று நான் ஏற்கனவே சொன்னதைத்தான் இப்போதும் வலியுறுத்துகிறேன். எனது இந்தக் கருத்தை எடுத்துக்காட்டியுள்ள "தினமணி" தலையங்கம், தொடர்ந்து, "அ.தி.மு.க. ஆளுங்கட்சி என்பதால் காவல் துறை இந்த அணுகுமுறையைக் கையாளக் கூடும்தான்; அதில் சந்தேகம் இல்லை" என்று சொல்லியிருக்கிறது. இப்படிச் சொல்வது "உண்மை சுடத்தான் செய்யும்" என்ற தலைப்புக்குப் பொருத்தமான கருத்துதானா?

ஆளும் அ.தி.மு.க.வினரின் இந்த அடாவடியைக் கடுஞ்சொற்களால் கண்டனம் செய்திட முன்வராமல்; நடப்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்பதைப்போல எழுதியிருப்பது "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்ற இலட்சியத்துக்குச் சாவு மணி அடிப்பதற்குச் சமமாகும். இந்தியத் தண்டனைச் சட்டம் அனைவருக்கும் பொதுவானதுதானே?

ஆளுங் கட்சிக்குத் தனிச் சட்டம், எதிர்க்கட்சிகளுக்கு தனிச்சட்டம் என்று; "வருண பேதங்கள்" மாதிரி இதிலும் வேறுபாடுகள் உண்டா?

திருவண்ணாமலையில் அ.தி.மு.க. மாவட்டப் பிரதிநிதி சி.மூர்த்தி என்பவர் அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர் மீது புகார் கூறியவுடன் அந்தப் புகார் காவல்துறை யினரால் பதிவு செய்யப்பட்டதா? நடவடிக்கை எடுக்கப்பட்டதா? யாராவது கைது செய்யப்பட்டார்களா? என்ன நடந்தது? மூத்த அமைச்சர் ஒருவர் அந்த மூர்த்தியை அழைத்து வந்து கொடுக்க வேண்டியதைக் கொடுத்து, சமாதானம் செய்து புகாரையே திரும்பப் பெறச் செய்யவில்லையா?

திருவாரூர் தியாகராசர் ஆலயச் சொத்தை மோசடி செய்து விற்பனை செய்திருக்கிறார்கள். மாவட்ட அ.தி.மு.க. பிரமுகர் உட்பட 7 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் குற்றச்சாட்டிற்கு உள்ளானவர்கள் கைது செய்யப்பட வில்லை. புகார் கொடுத்த ஆலய அலுவலர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். தினமணிக்கு இந்தச் செய்திகள் எல்லாம் தெரியாதா? இது ஒன்றல்ல, ஆளுங் கட்சியினர் மீது பல புகார்கள் கூறப்பட்டு, அவற்றில் எல்லாம் காவல்துறை நடவடிக்கையே எடுக்கவில்லை.

நில அபகரிப்பு தொடர்பான பிரச்சினைகளில் இப்போது ஜெயா அரசின் காவல் துறையினர் எப்படி நடந்து கொள்கிறார்கள்? சட்டம், ஒழுங்குக்குப் பொறுப்பு வகித்திடும் காவல் துறை கூடுதல் இயக்குநர் திரு. ஜார்ஜ், ஐ.பி.எஸ்., இது சம்பந்தமாக என்ன சொன்னார்?

"We have asked the Police to carefully scrutinise every petition. Verification is done at different levels and a decision to register a case is taken by the concerned Commissioner or Superintendent of Police" (ஒவ்வொரு புகாரையும் காவல் துறை ஆழ்ந்து பரிசீலித்திட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். புகாரை வெவ்வேறு நிலைகளில் தீவிரமாகச் சரி பார்த்ததற்குப் பின்னரே; சம்பந்தப்பட்ட காவல் ஆணையாளரால் அல்லது காவல் கண்காணிப்பாளரால் வழக்குப் பதிவு செய்வது பற்றிய முடிவு மேற்கொள்ளப்படுகிறது) என்று திரு. ஜார்ஜ் சொன்னபடி தான் புகார்கள் மீது விசாரணைகள் நடைபெற்று வழக்குகள் பதிவு செய்வது சம்பந்தமான முடிவுகள் மேற்கொள்ளப்படு கின்றனவா?

கழகத் தோழர்கள் புகாரே இல்லாமல் கைது செய்யப்படுகிறார்கள்; கைது செய்து விட்டு, காவல்துறையினர் புகார்களைத் தேடி அலைகிறார்கள்; ஒரு புகாரில் கைது செய்யப்பட்ட கழகத் தோழர்களுக்கு நீதிமன்றம் ஜாமீன் கொடுத்துவிட்டால், இன்னொரு புகாரைத் தயார் செய்து கைது செய்கிறார்கள். கழகத் தோழர்கள் மீதும், நீதிமன்றங்களின் மீதும் உள்ள கோபத்தின் காரணமாக கடைசியில் "குண்டர் சட்டம்" என்ற கொடுமையான அஸ்திரத்தை ஏவி விடுகிறார்கள். அதற்கான உதாரணங்களைத்தான் நான் மேலே எடுத்துக் காட்டியிருக்கிறேன்.

காவல்துறை கூடுதல் இயக்குநர் திரு. ஜார்ஜ் சொன்னபடி; புகார் தானாக வரட்டும் என்றா தற்போது காத்திருக்கிறார்கள்? புகார் வந்ததும், புகார் கொடுப்பவரின் நேர்மையை யும், புகாரின் உண்மைத் தன்மையினையும் ஆழ்ந்து பரிசீலித்திடத் தேவையான முதல் நிலை விசாரணைகளைச் செய்கிறார்களா? புகாரின் மீது வழக்குப் பதிவு செய்யலாம் என்ற முடிவு காவல் ஆணையாளரினாலா அல்லது காவல் கண்காணிப்பாளராலா மேற்கொள்ளப்படுகிறது? எங்கிருந்தோ வரும் கட்டளைகளைக் கேட்டு, கழகத் தோழர்களைப் பொறுத்தவரை மட்டும் அவசரம்

அவசரமாக இரவோடு இரவாக அள்ளித் தெளித்த கோலத்தில் அல்லவா காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

"நில அபகரிப்பு" என்று சொல்லி அதற்கு அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் அளித்து வரும் ஊக்கமும், முன்னுரிமையும் பின்வரும் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

- நிலம் தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகள் "சிவில் தாவா" சம்பந்தப் பட்டதால்; அவற்றில் தொடர்ந்து ஆர்வம் காட்டும் மனோ பாவம் காவல் துறையில் வளர்ந்துவிடும்.
- அதன் காரணமாக "கட்டப்பஞ்சாயத்துகள்" ஏராளமாக முளைக்கும். ஆட்சியாளர்கள் நினைத்தாலும், கட்டுப்படுத்த முடியாத எல்லைக்கு அவை சென்றுவிடும்.
- பொருள் கறக்கும் பேராசை காரணமாக பொய்ப் புகார்கள் புற்றீசல் போலத் தோன்றிவிடும்.
- "நில அபகரிப்பு" பிரச்சினைகளில் பல் வேறு காரணங்களுக்காகவும், உள் நோக்கங் களுக்காகவும் காவல் துறை அபரிமிதமான ஆர்வம் காட்ட முற்படும்போது; கொலை, கொள்ளை, செயின் பறிப்பு போன்ற குற்றங்கள் மலிந்து, அப்பாவிப் பொதுமக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும்.
- சமூக விரோதிகளின் கைக்கு "நில அபகரிப்புப் புகார்" என்ற மலிவான ஆயுதம் கிடைத்துவிடும்.
- "நில அபகரிப்பு" பிரச்சினைகள் சட்டத் தின் நியாயமான பார்வையிலிருந்து, காவல் துறையினரின் விருப்புரிமையின்கீழ் வந்து விடும்.
- எல்லாக் காலங்களிலும் அரசியல் கட்சிகளைப் பழிவாங்கிட எளிதாகப் பயன்படுத்தப்படும் ஆயுதமாக மாறிவிடுகிற ஆபத்து ஏற்பட்டு விடும்.

இப்படிச் சொல்வதால் "நிலஅபகரிப்பு" பிரச்சினைகளை அலட்சியப்படுத்த வேண்டும் என்பது பொருளல்ல. கொலை,

கொள்ளை போன்ற குற்றங்களைப் புலனாய்வு செய்வதைப் போல - அரசியல் கலப்பில்லாமல், ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியை மட்டும் குறி வைக்காமல் - தீர விசாரித்து, நில அபகரிப்புப் புகாரின் உண்மைத் தன்மையினை அறிந்து - சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள காவல் துறை அனுமதிக்கப்பட வேண்டும்.

"நில அபகரிப்பு" என்ற பொய்ப் புகார்களை வைத்துக் கொண்டு; காவல் துறையின் துணையோடு, கழகத் தோழர்களை நிலைகுலையச் செய்யலாம் என்று அ.தி.மு.க. ஆட்சியினர் கனவு காண்கிறார்கள். பழிவாங்கிடத் துடிக்கும் அவர்களது கனவு பகல் கனவாகிப் போகும். நிறைவேறப் போகாததை நினைத்து நெஞ்சத்தைப் புண்ணாக்கிக் கொள்வதை விட்டு விட்டு; தமிழ்நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றுவதே ஆட்சியாளர்களுக்கு அழகு! அ.தி.மு.க.வினரும், காவல் துறையினரும் மோசமான முன்மாதிரிகளை உருவாக்குவதில் நேரத்தையும் நினைப்பையும் வீணாக்குவது நல்லதல்ல! பரவாயில்லை; ஆடும் வரை ஆடட்டும்!

அன்புள்ள,

மு.க.

12-08-2011

3581. மந்தி அறியுமா;
மலர்மாலை மணமும் அழகும்!

உடன்பிறப்பே,

சமச்சீர் கல்வித் திட்டத்தை இந்த ஆண்டிலிருந்தே நடைமுறைப்படுத்த வேண்டுமென்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு "கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை" என்பதற்கேற்ப, தமிழக அரசு அதனை அமல்படுத்தப் போவதாக அறிவித்துள்ளது. அதையொட்டி கல்வித் துறை சார்பில் அனைத்து முதன்மைக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையில் சமச்சீர் கல்வி பாடப் புத்தகங்களில் நீக்கப்பட வேண்டிய பகுதிகளை ஸ்டிக்கர் ஒட்டி மறைத்து விட்டும் சில இடங்களில் கறுப்பு நிற மார்க்கர் பேனா கொண்டு அடித்துவிட்டும் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். கல்வித்துறை சார்பில் நீக்கப்பட வேண்டிய பகுதிகள் குறித்து அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவித்துள்ளவற்றில் என்னென்ன உள்ளன என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்திட விரும்புகிறேன்.

பொதுவாக எல்லா வகுப்புப் பாடப் புத்தகங்களிலும் இடம்பெற்றுள்ள செம்மொழி வாழ்த்தை ஸ்டிக்கர் ஒட்டி மறைக்க வேண்டுமாம். அப்படி அந்த வாழ்த்தை மறைக்க வேண்டிய அளவிற்கு அதிலே உள்ள வாசகங்கள் என்ன தெரியுமா?

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் –
பிறந்த பின்னர், யாதும் ஊரே, யாவரும் கேளிர்!
உண்பது நாழி உடுப்பது இரண்டே
உறைவிடம் என்பது ஒன்றேயென
உரைத்து வாழ்ந்தோம் –
உழைத்து வாழ்வோம்.

தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும்
நன் மொழியே நம் பொன் மொழியாம்!

போரைப் புறம் தள்ளி
பொருளைப் பொதுவாக்கவே
அமைதி வழி காட்டும்
அன்பு மொழி
அய்யன் வள்ளுவரின் வாய்மொழியாம்!

ஓரறிவு முதல் ஆறறிவு உயிரினம் வரையிலே
உணர்ந்திடும் உடலமைப்பை பகுத்துக் கூறும்
ஒல்காப் புகழ் தொல்காப்பியமும்
ஒப்பற்ற குறள் கூறும் உயர் பண்பாடு
ஒலிக்கின்ற சிலம்பும், மேகலையும்
சிந்தாமணியுடனே வளையாபதி குண்டலகேசியும்
செம்மொழியான நம் தமிழ் மொழியாம்!
கம்ப நாட்டாழ்வாரும்
கவியரசி அவ்வை நல்லாளும்
எம்மதமும் ஏற்றுப் புகழ்கின்ற
எத்தனையோ ஆயிரம் கவிதை நெய்வோர் - தரும்,

புத்தாடை அனைத்துக்கும்
வித்தாக விளங்கும் மொழி!
அகமென்றும் புறமென்றும் வாழ்வை
அழகாக வகுத்தளித்து
ஆதி அந்தமிலாது இருக்கின்ற இனிய மொழி -
ஓதி வளரும் உயிரான உலக மொழி -

நம் மொழி - நம் மொழி - அதுவே
செம்மொழி - செம்மொழி - நம் தமிழ் மொழியாம்!
வாழிய வாழியவே! வாழிய வாழியவே!

வாழிய வாழியவே!

இந்த வார்த்தைகளில் மாணவர்கள் படிக்கக் கூடாத - படித்தால் அவர்கள் எதிர்காலம் பாழாகிடக் கூடிய வார்த்தை ஏதாவது ஒன்று இருக்கிறதா? ஒரே குற்றம், இந்தச் செம்மொழி வாழ்த்துப் பாடலை எழுதியது நான் என்பது தான். நான் எழுதிய செம்மொழி வாழ்த்துப் பாடலையும் பாருங்கள்! அதே நேரத்தில்

ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்த போது அவர் தஞ்சையிலே நடத்திய உலகத் தமிழ் மாநாட்டுப் பாடலில் உள்ள பின்வரும் வார்த்தைகளையும் பாருங்கள்.

“என்றும் உள்ள தென் தமிழ் போல்
இனிக்கும் தமிழின் இலக்கியம் போல்
என்றும் மொழிக்கு புகழ் சேர்க்க
இனிய முதல்வர் வாழியவே”

“அவ்வை ஆண்டாள் அம்மையுமே
அழகுறப் பாடி தமிழ் வளர்த்தார்
அன்னை முதல்வர் ஜெயலலிதா
ஆட்சியில் இருந்து வளர்க்கின்றார்”

“பாரதத் தாயும் தமிழ்த் தாயும்
பாங்குடன் சேர்ந்து மிளிர்வது போல்
வாரா‌து வந்த மாமணியாம்
வாழ்க அன்னை ஜெயலலிதா”

உலகத் தமிழ் மாநாட்டு வாழ்த்துப் பாடலில் தமிழை வாழ்த்துவதற்குப் பதிலாக இவ்வாறு ஜெயலலிதாவின் புகழ் பன்மடங்கு பெரிதுபடுத்தப்பட்டுப் பாடப்பட்டது போல, தி.மு. கழக ஆட்சியில் நடத்தப்பட்ட செம்மொழி வாழ்த்துப் பாடலில் முதல் அமைச்சரைப் பாராட்டி ஏதாவது ஒரு வார்த்தை இடம் பெற்றுள்ளதா? ஆனாலும் அதனைக் கிழிக்க வேண்டும் என்கிறார்கள்!

முதல் வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் 69, 70, 79, 80 ஆகிய நான்கு முழுப் பக்கங்களையும் நீக்க வேண்டுமாம்! அந்தப் பக்கங்களில் என்ன உள்ளது தெரியுமா? 69ஆம் பக்கத்தில் “வண்ணம் தீட்டுவேன்” என்ற தலைப்பில் ஒரு ஆப்பிள் படம் போடப்பட்டுள்ளது. அதில் பாதிப் பகுதிக்கு சிகப்பு வண்ணம் பூசப்பட்டுள்ளது. மீதிப் பகுதிக்கு மாணவன் வண்ணம் தீட்ட வேண்டும். இந்தத் தாளினையே நீக்க வேண்டுமாம். என்ன காரணம் என்றால், கறுப்பு சிகப்பு தி.மு. கழகத்தின் வண்ணமாம். 70ஆம் பக்கத்தில் ஒளவை, கௌதாரி, பௌர்ணமி, வெளவால் படங்கள் உள்ளன. அவற்றில் ஒருவேளை இவர்கள் யாருடைய

படமாவது இருக்கிறதோ என்று தெரியவில்லை! இந்தப் பக்கத்தை ஏன் கிழிக்கச் சொல்லியிருக்கிறார்கள் என்று பள்ளிக் கல்வித் துறைக்குத்தான் வெளிச்சம். அதுபோலவே 79ஆம் பக்கத்திலும் எந்தப் பிரச்சினையும் இல்லை. என்ன காரணம் என்றும் தெரியவில்லை. 80ஆம் பக்கத்தில் தமிழ் மாதங்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. அந்த மாதங்கள் தை மாதம் முதல் தொடங்கியிருப்பதால் அந்த முழுப் பக்கத்தையும் கிழிக்கச் சொல்லிவிட்டார்கள்.

3வது வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் 67வது பக்கத்தில் "2 படங்கள் மற்றும் ஜூன் 23 - 27, 2010ல் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டு கலைநிகழ்ச்சி, ஊர்வலக் காட்சி ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட வேண்டும்" - என்று சுற்றறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. செம்மொழி மாநாட்டில் நடைபெற்ற கலை நிகழ்ச்சி, ஊர்வலக் காட்சி இரண்டின் படங்கள் சிறிதாக சிறுமிகள் நடனமாடுவதைப் போன்று அந்தப் பக்கத்திலே இடம் பெற்றுள்ளன. அதைத்தான் மறைக்க வேண்டும் என்று அரசு கூறுகிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை.

3வது வகுப்பு ஆங்கிலப் புத்தகத்தில் 26வது பக்கத்தில், கடைசி பத்தி நீக்கப்பட வேண்டுமாம். அதிலே என்ன இருக்கிற தென்றால், "உலகத் தமிழ் மாநாடு 2010 ஜூன் மாதம் 23ந்தேதி முதல் 27ந்தேதி வரை கோவையில் நடைபெற்றது" என்ற பகுதி அழிக்கப்பட வேண்டுமாம்.

அதே புத்தகத்தின் 27வது பக்கத்தில் "அந்த மாநாட்டுக்கு தலைவராக முதலமைச்சர் இருந்தார். மாநாட்டு கண்காட்சி பயனுள்ளதாக இருந்தது" என்ற பகுதி அழிக்கப்பட வேண்டுமாம். மாநாட்டுத் தலைவராக நான் இருந்தேன் என்றுகூட இல்லை, "முதலமைச்சர்" இருந்தார் என்றுதான் உள்ளது. ஆனாலும் அதனை அழிக்க வேண்டுமென்று தமிழக அ.தி.மு.க. அரசு கூறியிருக்கின்றது.

4வது வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் 74வது பக்கத்தில், "செம்மொழி மாநாட்டுப் படங்கள் மற்றும் அதற்குரிய விளக்கங்கள் மறைக்கப்பட வேண்டும். கவிபாரதி இடம் பெற்ற படம்தான் அந்தப் பக்கத்தில் இடம் பெற்றுள்ளது. அதை மறைக்க வேண்டுமென்கிறார்கள்.

75வது பக்கத்தில், முதல் பத்தி நீக்கப்பட வேண்டும். அதாவது "செவ்வியல் மொழிகளிலே செம்மாந்த மொழி நம் செந்தமிழ் மொழி என்று தொடங்கும் அந்தப் பத்தி முழுவதும் கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும்" - இது சுற்றறிக்கை. அந்தப் பத்தியில் உள்ள வாசகங்கள் என்ன தெரியுமா? "செவ்வியல் மொழிகளிலே செம்மாந்த மொழி நம் செந்தமிழ்மொழி. தமிழக அரசால் கோவையில் நடத்தப் பெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி முதல் மாநாட்டில் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில் "இனியவை நாற்பது" என்ற பெயரில் அலங்கார ஊர்திகள் இடம் பெற்றிருந்தன. அவை தமிழ் மொழியின் தொன்மையையும் பண்பாட்டுச் சிறப்பையும் வெளிப்படுத்தின" என்ற வார்த்தைகளில் ஏதாவது ஒரு வார்த்தை தி.மு. கழகத்தைப் பற்றியோ, என்னைப் பற்றியோ பெருமையாகக் கூறுவதாக இருக்கிறதா என்பதை தமிழ் மக்கள்தான் கூற வேண்டும்!

4-வது வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்தில் 111வது பக்கத்தில் சென்னை சங்கமம் பற்றிய பகுதி ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட வேண்டும். அதாவது நாட்டுப் புறக்கலைகள் மக்களுக்கு புத்துணர்ச்சி அளித்து கலை உணர்ச்சிக்கு விருந்தளிக் கின்றன. நாட்டுப்புறக் கலைகளை வளர்த்திட தமிழக அரசு ஆண்டுதோறும் சென்னை சங்கமம் நிகழ்ச்சிகளை நடத்தி நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு ஊக்கமளித்து வருகிறது என்ற பகுதி கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும் என்று கல்வித் துறை சார்பில் சொல்லியிருக்கிறார்கள். நாட்டுப்புற கலைஞர்களுக்கு ஊக்கமளிப்பது குற்றமா என்று தெரியவில்லை. இந்த வரிகளை அழிக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

5வது வகுப்பு சமூக அறிவியலில் 80-வது பக்கத்தில் 3வது படம் நீக்கப்பட வேண்டும். அதாவது புதிய தலைமைச் செயலகக் கட்டிடம் ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் படம் மிகவும் சிறிதாக புதிய தலைமைச் செயலகம் என்பது கூட தெரியாத அளவிற்கு உள்ளது. அதைக் கூட இந்தப் புத்தகத்தில் வெளிவந்துவிடக் கூடாது என்று நினைக்கிறார்கள் என்றால் எந்த அளவிற்கு அ.தி.மு.க. ஆட்சியாளரின் இதயத்தில் காழ்ப்புணர்ச்சி இடம் பெற்றுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

6வது வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில் பக்கம் 56இல் அப்துல் ரகுமானின் புதுக்கவிதை - தாகம் - முழு பக்கமும் ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும் என்கிறது அரசு உத்தரவு. அந்தக் கவிதையில், "வேலிக்கு வெளியே தலையை நீட்டிய என் கிளைகளை வெட்டிய தோட்டக்காரனே, வேலிக்கு அடியில் நழுவும் என் வேர்களை என்ன செய்வாய்? - அப்துல் ரகுமான்" என்று உள்ளது. இந்தக் கவிதையை எதற்காக ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. கவிக்கோ மீதுள்ள கோபமா?

அதே புத்தகத்தில் பக்கம் 129இல் "தமிழ்ப் புத்தாண்டுச் சிறப்பிதழ் - கவிதை - தைத்தமிழ்ப் புத்தாண்டே வருக" என்ற வார்த்தைகள் இடம் பெற்றதற்காக அந்தப் பக்கம் முழுவதையும் நீக்க வேண்டுமாம். அடுத்து 130வது பக்கத்தில் இலவசப் பயண அட்டை விண்ணப்பப் படிவம் என்ற தலைப்பில் மாணவன் பெயர், பள்ளியின் பெயர், புறப்படும் இடம், சேரும் இடம் என்ற விவரங்களைப் பூர்த்தி செய்யும் படிவம் உள்ளது. அந்தப் பக்கத்தையே முழுவதுமாக நீக்க வேண்டுமென்று எதற்காகச் சொல்லியிருக்கிறார்கள் என்று கண்டறிய முடியவில்லை.

6ஆம் வகுப்பு ஆங்கிலப் புத்தகம் பக்கம் 53இல் இரண்டாவது பத்தியில் உள்ள "தப்பாட்டம்" என்ற பகுதியை முழுவதுமாக நீக்க வேண்டுமாம். தப்பாட்டம் என்றால் என்ன என்பதையும், சிலப்பதிகாரகாலத்திலே அது இடம் பெற்றிருந்தது என்பதையும் அந்தப் பத்தியில் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்தப் பத்தியின் இறுதியில் "பொங்கல் விழாவின்போது சென்னை சங்கமம் நிகழ்ச்சியில் தப்பாட்டம் நடைபெறுவதைப் பார்த்திருக்கிறீர்களா?" என்று ஒரு வாக்கியம் இடம் பெற்ற காரணத்தால் அந்தப் பத்தி முழுவதையும் நீக்கச் சொல்லியிருக்கிறார்கள்.

6ஆம் வகுப்பு - அறிவியல் பாடப் புத்தகத்தில் 81ஆம் பக்கத்தில் உள்ள சட்டக்காந்தம் படம் மறைக்கப்படவேண்டுமாம். காரணம் அந்தப் படத்தின் வண்ணம் கறுப்பு, சிகப்பு போல இருக்கிறதாம்.

6ஆம் வகுப்பு - சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் - பக்கம் 11இல் "அண்மையில் தமிழக அரசு கொண்டு வந்துள்ள கலைஞர் உயிர்க் காப்பீட்டுத் திட்ட நிதி உதவியால் எங்குமுள்ள வசதியற்ற மக்களும் செலவு மிகுதியாகக் கூடிய உயர்ந்த மருத்துவ மனையில்

தரமான சிகிச்சை பெற்று வருகின்றனர்" என்பதை ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கவேண்டுமாம்!

பக்கம் 12இல் மூன்றாவது வரியில் உள்ள "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற வார்த்தைகளை நிரந்தர மார்க்கர் பேனா வைத்து அழிக்க வேண்டுமாம்! பக்கம் 17இல் "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்", "வாழ்ந்து காட்டுவோம் திட்டம்" என்ற வார்த்தைகளையும் நிரந்தர மார்க்கர் பேனா வைத்து அழிக்கவேண்டுமாம்! இவர்கள் ஆட்சியில் "அண்ணா" என்ற பெயரே ஆட்சேபணைக்குரியதா?

பக்கம் 24இல் "வருபவர் தமிழக முதல்வர் கலைஞர் என்பது குறிப்பிட வேண்டியதாகும்" என்ற வார்த்தைகளை அழிக்க வேண்டுமாம். புத்தகத்தில் என்ன உள்ளதென்றால், "கருவுற்ற தாய்மார்கட்கு நல்ல சத்துணவு கிடைத்திட வழிசெய்ய மகப்பேறுக்கு முன் மூன்று மாதத்திற்கும், பின் மூன்று மாதத்திற்குமாக, மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறாயிரம் ரூபாய் அரசே வழங்கும் நல்ல திட்டத்தை அறிவித்து நிறைவேற்றி வருபவர் தமிழக முதல்வர் கலைஞர் என்பது குறிப்பிட வேண்டியதாகும்" என்றிருக்கிறது. இதில் கடைசியாக உள்ள வார்த்தைகளை அரசின் அறிவுரைப்படி நீக்கி விட்டால் நிறைவேற்றி .. என்பதோடு வாக்கியம் முடியாமல் அப்படியே இருக்கும். அதைத்தான் மாணவர்கள் படிக்க வேண்டுமென்று இந்த அரசு கூறுகிறது.

பக்கம் 35இல் சூரிய கிரகணம் குறித்த படமும், பகல் இரவு படமும் வெளிவந்துள்ளன. சூரிய கிரகணம் படத்தை முழுவதுமாக அழிக்க வேண்டுமாம். காரணம் அந்தப் படத்தில் ஒரு பகுதி கறுப்பு சிகப்பு வண்ணம் போல இருப்பதால் அதை முழுமையாக அழிக்க வேண்டுமாம். பகல் இரவு படத்தில் சூரியன் படத்தை அப்படியே அழித்துவிட வேண்டுமாம். அ.தி.மு.க. ஆட்சியில் எந்தப் புத்தகத்திலும் சூரியன் படத்தை வெளியிடக் கூடாது என்று ஒரு ஆணையையே பிறப்பித்து விடலாம்!

பக்கம் 82இல் "தமிழக முதல்வர் கலைஞரின் கருத்தினை ஏற்று, கடந்த 2004ஆம் ஆண்டு மைய அரசு தமிழ் ஒரு செம்மொழி என்று அறிவித்துள்ளது. இதிலிருந்து தமிழின் இணையற்ற சிறப்பு விளங்கும்" என்ற வார்த்தைகளை அழிக்க வேண்டுமாம். இவற்றில்

என்ன தவறு என்பதை படிப்பவர்களே தெரிந்து கொள்ளலாம். அதே பக்கத்தில் தமிழ்நாடு படம் இருப்பதை மறைக்க வேண்டுமாம். காரணம் அதில் சோழர் வாழ்ந்த பகுதியை கறுப்பு வண்ணம் கொண்டும், சேரர் ஆண்ட பகுதியை சிகப்பு வண்ணம் கொண்டும், பாண்டியர் ஆண்ட பகுதியை நீல வண்ணம் கொண்டும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இந்த மூன்று வண்ணங்களில் கறுப்பு, சிகப்பு வண்ணங்கள் இடம் பெற்றிருப்பதால் அந்தப் படத்தையே மறைத்து விட வேண்டுமாம்!

7-வது வகுப்பில் 98-வது பக்கத்தில் தொ.பொ. கிருஷ்ணசாமி பாவலர், கந்தசாமி, என்.எஸ். கிருஷ்ணன், அறிஞர் அண்ணா, கலைஞர் மு. கருணாநிதி, டி.கே.எஸ். சகோதரர்கள், ஆர்.எஸ். மனோகர் முதலியோர் இவர்தம் அடியொற்றி நாடகக் கலை வளர உறுதுணை புரிந்தோராவர் என்ற பகுதி கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும் - என்று சுற்றறிக்கையிலே காணப்படுகிறது. "தமிழ் நாடக முன்னோடிகள்" என்ற தலைப்பில் பரிதிமாற்கலைஞர், சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்தனார் போன்றவர்களைப் பற்றி விரிவாக எழுதிவிட்டு இறுதியாக ஒரு பத்தியில் மேலே சொன்ன பெயர்களையெல்லாம் குறிப்பிட்டு இவர்களும் நாடகக் கலை வளர துணை புரிந்தோர்கள் என்று சொல்லும்போது என் பெயரையும் சேர்த்து விட்டார்களாம், அதற்காக அண்ணா, என்.எஸ். கிருஷ்ணன் போன்றவர்களின் பெயர்களையெல்லாம் சேர்த்து கறுப்பு நிற மார்க்கரால் அடிக்க வேண்டுமென்று அண்ணாவின் பெயரை வைத்துக் கொண்டுள்ள ஆட்சியிலே ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பது வெட்கக்கேடா அல்லவா?

9-வது வகுப்பு தமிழ்ப் பாடப் புத்தகத்தில், பக்கம் 203இல் "தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கவிழா" என்ற தொடர் கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்க வேண்டும் என்கிறது சுற்றறிக்கை. அதிலே என்ன இருக்கிறது என்றால், "தமிழர் திருநாளாம் பொங்கல் விழா; தைத்திங்கள் நாள் விழா; தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க விழா; தமிழினத்தின் தனிவிழா; பண்பாட்டுப் பெருவிழா" என்பதுதான் அதிலே உள்ள வார்த்தைகள். தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க விழா என்பதை கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்க வேண்டுமாம்.

பத்தாம் வகுப்பு தமிழ் பாடப் புத்தகத்தில் பக்கம் 17இல் "மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் நிறைவுற்றது" என்ற தொடர் கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும் என்று சுற்றிக்கையில் உள்ளது. என்ன காரணமாம்? "தமிழைச் செம்மொழி என அறிவிக்க வேண்டும் என்ற முயற்சி 1901இல் தொடங்கி, 2004 வரை தொடர்ந்தது. நடுவணரசு 2004ஆம் ஆண்டு அக்டோபரில் தமிழைச் செம்மொழியாக ஏற்பளித்தது. இத்தொடர் முயற்சி மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் நிறைவுற்றது" என்று உள்ளதில் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் நிறைவுற்றது என்பதை கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும் என்கிறார்கள்.

அதே புத்தகத்தில் 89வது பக்கத்தில் "அறிந்துகொள்வோம் என்ற பகுதி முழுவதும் நீக்கப்பட வேண்டும்" என்கிறது சுற்றறிக்கை. அந்தப் பகுதியில் நான் எழுதிய கவிதை ஒன்று இடம் பெற்றுள்ளது. அதனை முழுவதும் நீக்க வேண்டுமாம்.

100வது பக்கத்தில் "கலைஞரின் இனிய நடையை படித்தறிக. கொடிநாள்.....வெற்றி உங்களை தேடி வந்து மாலையிடும் என்ற பகுதி ஸ்டிக்கர் ஒட்டி மறைக்கப்பட வேண்டும்" - இது சுற்றறிக்கை. கொடிநாள் பற்றி நான் எழுதிய ஒரு உரைநடையை, நான் எழுதியது என்பதால் அதனை மறைக்கவேண்டுமென்று கூறியிருக் கிறார்கள்.

239வது பக்கத்தில் "பாவேந்தர் செம்மொழி தமிழாய்வு நூலகம் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வருகிறது என்ற தொடர் கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும்" இது சுற்றறிக்கை. சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வந்த பாவேந்தர் செம்மொழி தமிழாய்வு நூலகத்தை இரவோடு இரவாக அப்புறப்படுத்திய ஆட்சி என்பதால் அந்த வாசகங்களை நீக்கச் சொல்லியிருக்கிறார்கள் போலும்!

114-வது பக்கத்தில் தற்போது புதிய தலைமைச் செயலகம் 2010 மார்ச் 13ந்தேதி முதல் அண்ணா சாலை ஓமாந்தூரார் தோட்டத்தில் இயங்கி வருகிறது என்ற தொடர் கறுப்பு நிற மார்க்கர் கொண்டு அடிக்கப்பட வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.

பத்தாம் வகுப்பு ஆங்கிலப் புத்தகத்தில் 177-வது பக்கம் முழுமையாக நீக்கப்பட வேண்டுமாம். அந்தப் பக்கத்தில் என்ன இருக்கிறதென்றால், தஞ்சை பெரிய கோவிலில் என்ற பகுதி அழிக்கப்பட வேண்டுமாம்.

10ஆம் வகுப்பு சமூக அறிவியல் பாடப் புத்தகத்தில் இரண்டு இடங்களில் தி.மு.க. அரசு என்ற வார்த்தைகள் இடம் பெற்ற காரணத்தால், அதனை அழிக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதை அப்படியே ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இந்த அரசு மற்றப் பாடப் புத்தகங்களில் நீக்கியுள்ள பகுதிகள் எல்லாம் எத்தகையது என்பதை நீங்கள் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். இதைத்தான் பெரிதாக நீதி மன்றங்களில் அரசு தரப்பில் வாதாடிய வழக்கறிஞர்கள் தி.மு. கழகத்தைப் பற்றியும், என்னைப் பற்றியும் பக்கம் பக்கமாக பாராட்டி சமச்சீர் கல்விப் பாடப் புத்தகங்களில் இடம் பெறச் செய்து விட்டதாகக் கூறி, அந்தப் புத்தகங்களை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றார்கள். சமச்சீர் பாடப் புத்தகங்களில் அப்படி என்னதான் வார்த்தைகள் கடந்த கால அரசையும், என்னையும் பாராட்டி வந்துவிட்டன என்ற விவரம் அனைவருக்கும் தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் இங்கே தொகுத்துள்ளேன். இந்த விவரங்களை நீயும் மக்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் விளக்கிடுவாய் என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

13-8-2011

3582. இனிய விழா; நமது இனத்தின் விழா!

உடன்பிறப்பே,

கடந்த மே திங்களில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. வெற்றி பெற்று பொறுப்புக்கு வந்தது முதல், தி.மு. கழக ஆட்சியில் நடைபெற்ற முக்கிய திட்டங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கும் செயலில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள்.

தமிழக அரசின் தலைமைச் செயலகம் மற்றும் சட்டப்பேரவைச் செயலகத்திற்காக ஓமந்தூரார் வளாகத்தில் சுமார் 500 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடம் தரமாகக் கட்டப்படவில்லை என்று கூறி அதிலே தொடர்ந்து செயல்படமாட்டோம் என்றார்கள். பிறகு தற்போது அந்தக் கட்டிடத்தில் மருத்துவமனை அமைக்கப் போகிறோம் என்றார்கள்.

கழக அரசு அறிமுகப்படுத்திய சமச்சீர் கல்விச் சட்டத்தை ஏற்க மாட்டோம் என்று கூறி, திருத்தச் சட்டத்தை அவசர அவசரமாக பேரவையிலே கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அந்தப் பிரச்சினை உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரை சென்று, எதிர்க் கட்சிகள் எல்லாம் எடுத்துக் கூறியும் கேளாமல் அதிலே சரியாக குட்டுப்பட்டுக் கொண்டார்கள். அதனால் கோபமடைந்த ஜெயலலிதா மற்றொரு நடவடிக்கையாக தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தினத்தை மீண்டும் சித்திரை மாதம் முதல் தேதிக்கு மாற்றிட பேரவையில் மசோதா ஒன்றினை அறநிலையத் துறை அமைச்சர் மூலமாக தாக்கல் செய்து குரல் வாக்கின் மூலம் நிறைவேற்றியிருக்கிறார்.

23-1-2008 அன்று தமிழகச் சட்டப் பேரவையில் மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையிலே செய்த அறிவிப்பில், "பெரும் புலவரும், தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்று வித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில் ஐநூறுக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள், 1921ஆம் ஆண்டு சென்னை, பச்சையப்பன்

கல்லூரியில் ஒன்று கூடி, தமிழர்களுக்கென்று ஒரு "தனி ஆண்டு" தேவை என்று கருதி, அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு ஒன்றினைப் பின்பற்றுவதென்றும், அதையே "தமிழ் ஆண்டு" எனக் கொள்வதென்றும், திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 என்றும் முடிவெடுத்தார்கள். அந்தக் கருத்தினை, 37 ஆண்டுகளுக்கு முன்பே, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும், 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பித்தார்.

திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என அறிவித்து நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்தது. எனவே, பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாகக் கொண்டாடி வரும் தமிழ் நாட்டு மக்கள்; இனி - தமிழ்ப் புத்தாண்டு பிறந்த நாளாகவும் இணைத்து இந்நாளை இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், வாழை, மா, பலா என முக்கனித் தருக்களை நாட்டி; வண்ண வண்ணக் கோலங்களிட்டு; வரிசை விளக்குகளால் ஒளியுமிழ் இல்லங்கள் புது எழில் காட்டிட; புத்தாடை புனைந்து தமிழ் மானம், தன்மானம் போற்றிப் பாடியும், ஆடியும்; சமத்துவ உணர்வு பரப்பியும்; தமிழ்ப் புத்தாண்டு இதுவெனத் துள்ளும் மகிழ்ச்சியால் அன்பை அள்ளிப் பொழிவர்" என பலத்த கைதட்டலுக்கிடையில் அறிவித்தார்.

மறைமலை அடிகள் தலைமையில் தமிழ்த் தென்றல் திரு.வி. கல்யாண சுந்தரனார், தமிழ்க் காவலர் கா. சுப்பிரமணியப் பிள்ளை, சைவப் பெரியார் சச்சிதானந்தப் பிள்ளை, நாவலர் ந.மு. வெங்கடசாமி, நாவலர் சோமசுந்தர பாரதியார், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் உள்ளிட்ட அறிஞர் பெருமக்கள் எல்லாம் கலந்து கொண்ட அந்தக் கூட்டத்தில் அவர்கள் எடுத்த முடிவுகள் மூன்று :-

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது;

2. அதனையே தமிழாண்டு எனக் கொண்டாடுவது;

3. வழக்கத்தில் திருவள்ளுவர் காலம் கி.மு. 31ஐக் கூட்டினால் திருவள்ளுவராண்டு வரும் என்பதனை மேற்கொள்வது என்பனவாகும்.

அதன் பிறகு 1939ஆம் ஆண்டு திருச்சியில் அகில இந்திய தமிழர் மாநாடு சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. அதில், தந்தை பெரியார், கரந்தை தமிழ்ச் சங்கத் தலைவர் உமாமகேசுவரனார், பேராசிரியர்

கா. சுப்பிரமணியம், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், திரு.வி.க., மறைமலை அடிகளார், பி.டி. இராஜன், ஆற்காடு ராமசாமி முதலியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி உட்பட பலரும் பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் தீர்மானித்தது.

ஆளுநரின் அறிவிப்பு வெளிவந்த மறுநாளே தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் விடுத்த அறிக்கையில் "தொன்மைக் காலம் தொட்டே சமயம் சார்ந்தும், இயற்கை வாழ்வு சார்ந்தும், மண்ணும் மனிதர்களும் சார்ந்தும் விவசாய வாழ்வு சார்ந்தும் தைத்திங்கள் முதல் திருநாளே தமிழர் வாழ்வு சார்ந்த எழுச்சியும் மகிழ்ச்சியும் ஊட்டுகின்ற திருநாளாகும். மறைமலை அடிகளார் போன்ற மூத்த தனிப்பெரும் தமிழ் அறிஞர்கள் தைத் திங்கள் முதல் நாளைத் தொடக்கமாய்க் கொண்டு அய்யன் திருவள்ளுவர் பெயரில் தமிழ்ப் புத்தாண்டாய் அறிவித்ததை நடைமுறைப்படுத்த உள்ள முத்தமிழறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நன்றி, பாராட்டுக்கள்" என்று தெரிவித்திருந்தார்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் விடுத்த அறிக்கையில், "தைத்திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டின் தொடக்க நாள் என்று ஆளுநர் உரையில் கலைஞர் அரசு அறிவித்திருப்பது கண்டு உணர்வுமிக்க தமிழர்கள் கொண்டாடிக் கூத்தாடுகிறார்கள். எல்லா தேசிய இனங்களுக்கும் அழிக்க முடியாத சில அடையாளங்கள் உண்டு. தமிழர்களுக்கு நில அடையாளம் இருக்கிறது; இன அடையாளம் இருக்கிறது; ஆனால் கால அடையாளம் மட்டும் குழப்பத்தில் இருந்தது. அந்தக் குழப்ப இருள் உடைந்து விடிந்து இன்று வெளிச்சம் வந்திருக்கிறது. அய்யன் திருவள்ளுவரை

கருத்துலகத்தின் அளவுகோலாய்க் காட்டியது திராவிட இயக்கம். இன்று காலத்தின் அளவுகோலாகவும் திருவள்ளுவரைக் கருதச் செய்திருக்கிறது கலைஞர் அரசு. இது சரித்திரத்தைச் சரி செய்யும் சரித்திரமாகும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர், இளவல் வீரமணி அவர்களோ "தைத் திங்கள் முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் என்ற நமது நீண்ட நாள் கோரிக்கைக்கு வெற்றி கிடைத்துள்ளது. தமிழர் பண்பாட்டு வரலாற்றுத் திசையில் புதியதோர் மறுமலர்ச்சி அத்தியாயம் இது. பாராட்டுகிறோம், மகிழ்ச்சி அடைகிறோம்" என்று கூறினார்.

கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட இந்த நல் முயற்சிக்கு தற்போது ஒரு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டுச் சரித்திரத்திலே தமிழையே பகைத்துக் கொள்கிற - செம்மொழி என்றாலே வெறுக்கிற - ஒதுக்குகிற - புறக்கணிக்கிற ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. அந்தக் காலத்திலும் இப்படி தமிழையே வெறுக்கின்ற புலவர்கள் ஓரிருவர் இருந்திருக்கிறார்கள். இதோ ஒரு கதை!

நக்கீரன் காலத்திலே குயக்கொண்டான் என்று ஒருவர் தமிழ்ச் சங்கத்திலே நடைபெற்ற ஒரு பட்டிமன்றத்திலே "ஆரியம் நன்று, தமிழ் தீது" என்று சொல்ல - உடனே நக்கீரனுக்கு கோபம் வந்து, "தமிழ் தீதென்றும், வடமொழி நன்று என்றும் சொன்ன நீ, சாகக் கடவாய்" என்று அறம் பாடினாராம். உடனே குயக்கொண்டான் கீழே விழுந்து இறந்து விடுகிறார். உடனே அங்கேயிருந்த சிலர் நக்கீரனைப் பார்த்து குயக்கொண்டாரைப் பிழைக்க வைக்க கேட்டுக் கொண்டார்கள். அதைக் கேட்ட நக்கீரன், "ஆரியம் நன்று தமிழ் தீ தென் உரைத்த காரியத்தால் காலன்கோட் பட்டானைச் - சீரிய அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையினால் செந்தமிழை தீர்க்க சுவாகா!" என்று பாட, குயக்கொண்டான் உயிர் பெற்று எழுந்தானாம்.

தமிழக அரசின் அறிவிப்பு வந்த நேரத்திலேயே மிகச் சிறந்த தமிழ் ஆய்வாளரான ஐராவதம் மகாதேவன் அவர்கள், "இன்றைய பஞ்சாங்கங்களை வான நூல், பருவங்களின் சுழற்சி ஆகியவற்றின் தற்கால நிலையை அறிவியல் கண்ணோட்டத்துடன் - ஆராய்ந்துத் திருத்திக் கொள்ள நமக்குத் துணிவு இல்லையெனில், அறுவடை

நாளாகிய பொங்கல் திருவிழாவைப் புத்தாண்டு என்று கொண்டாடுவதில் என்ன தவறு? வரலாற்று ரீதியில் பார்த்தாலும், இந்தியாவில் இன்று நடை முறையில் உள்ள பல புத்தாண்டுகளில் இதுவும் ஒன்று என ஏற்றுக் கொள்ளலாமே" என்றார்.

ஆளுநர் உரையிலே செய்யப்பட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அதே ஆண்டில் 29-1-2008 அன்று 2008ஆம் ஆண்டு தமிழ்நாடு தமிழ்ப் புத்தாண்டு சட்ட முன் வடிவை பேரவை முன் நான் அறிமுகம் செய்தேன். 1-2-2008 அன்று இச்சட்ட மசோதா மீதான விவாதம் நடைபெற்று காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஈ.எஸ். எஸ். ராமனும், பா.ம.க. சார்பில் கி. ஆறுமுகமும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் சார்பில்

என். நன்மாறனும், இந்தியக் கம்யூனிஸ்ட் சார்பில் வை. சிவ புண்ணியமும், ம.தி.மு.க. சார்பில் மு. கண்ணப்பனும், விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் கு. செல்வமும் அந்த மசோதாவினை வரவேற்றுப் பேசி அது நிறைவேறியது.

இப்போது மலேசியா நாட்டில் தமிழர்கள் தை முதல் நாளையே புத்தாண்டாகக் கொண்டாடி வருகிறார்கள். டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், "முன் காலத்தில் வருடப் பிறப்பு சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல் நாளைத்தான் வருடப் பிறப்பாகப் பெரியோர்கள் கொண்டாடினார்கள். அந்த நாளில் புதிய ஆடைகளை வாங்கி உடுப்பார்கள். தெருவில் புது மண் போட்டு, செம்மண் இட்டு, ஒழுங்கு செய்வார்கள். ஊரெல்லாம் திருவிழா நடத்துவார்கள். இப்படி நகரங்களில் புத்தாண்டு பிறப்பாகப் பொங்கல் கொண்டாடுகிறார்கள்" என்று விளக்கியுள்ளார்.

இப்படியெல்லாம் போற்றப்பட்ட, பாராட்டப் பட்ட ஒரு முடிவு நடைமுறைப்படுத்தப்பட தி.மு. கழக ஆட்சியிலே சட்டமாகக் கொண்டு வரப்பட்டு 2008ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்தது. தி.மு. கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது என்றால் அது இருக்கலாமா என்று அதற்கு முடிவு கட்ட அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு மசோதா பேரவையிலே அறிமுகப்படுத்தப்பட்டு நிறை வேற்றப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பினை பா.ஜ.க. அவசர அவசரமாக வரவேற்றுள்ளது. அதிலிருந்தே இந்தத் தீர்மானத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளலாம். ஆனாலும் மசோதாவை அவையிலேயே இரண்டு கம்யூனிஸ்ட்களும் எதிர்த்தார்கள் என்ற

தகவலை செய்தியாளர்கள் என்னிடம் தெரிவித்து அதுபற்றி கருத்து கேட்டபோது, அவர்களின் தமிழ் உணர்வுக்கு தலை வணங்குகிறேன் என்று பதில் கூறினேன்.

பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில், அ.தி.மு.க. அரசின் இந்த முடிவு தமிழ் உணர்வாளர்களை வேதனைப்படுத்தும் வகையில் அமைந் துள்ளது என்றும் திடீரென்று தமிழ்ப் புத்தாண்டை மீண்டும் சித்திரை மாதத்துக்கு மாற்றுவது முறையல்ல என்றும் அது மிகப் பெரிய வரலாற்றுப் பிழையாக அமைந்துவிடும் என்றும் கூறியிருக்கிறார்கள். தமிழர் தலைவர் கி. வீரமணி அவர்களும் இந்த முடிவினை வன்மையாகக் கண்டித்து செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்திருக்கிறார். அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

அ.தி.மு.க. அரசு கொண்டு வந்த மசோதாவின் மீது பேசிய ஜெயலலிதா; கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட சட்டம்; தமிழ் மொழி மீதும், தமிழர்கள் மீதும் தனக்கு மட்டுமே அக்கறை இருப்பது போன்ற மாயத்தோற்றத்தை பொது மக்கள் மத்தியில் உருவாக்குவதற்காக, சுய விளம்பரத்திற்காக இயற்றப்பட்டது என்றும், சித்திரைமாதப் பிறப்பை தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடிக் கொண்டு இருக்கும் தமிழக மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் விதமாக அந்தச் சட்டம் அமைந்துள்ளது என்றும் திருவாய் மலர்ந்துள்ளார். அவரின் இந்தக் கருத்தைத் தமிழ்நாட்டு மக்களே சீர்தூக்கிப் பார்த்து என்ன உண்மை என்பதைப் புரிந்து கொள்ளட்டும்.

மேலும் ஜெயலலிதா தனது பேரவை உரையிலே கழக ஆட்சி நிறைவேற்றிய சட்டம் யாருக்கும் பயன் அளிக்காத ஒன்று என்றும், அந்தச் சட்டம் இயற்றப்பட்டதை அடுத்து சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கருணாநிதியின் "துதிபாடிகள்" அனைவரும் அதனைப் போற்றினர் என்றும் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகத்தான் தமிழ்ப் புத்தாண்டு தை முதல் நாள் என்று அறிவிக்கப்பட்டதென்றும் பேசியிருக்கிறார்.

"துதிபாடிகள்" என்று அம்மையாரால் வர்ணிக்கப்படும் பேறு பெற்றவர்கள் யார் யார் தெரியுமா? நமது பேராசிரியர் அன்பழகனார், அண்ணா பல்கலைக் கழகத்திலும், இந்திரா காந்தி திறந்தவெளி பல்கலைக்கழகத்திலும் துணைவேந்தராக இருந்து பெரும்புகழ்

பெற்ற வ.செ. குழந்தைசாமி, முனைவர் தமிழண்ணல், முனைவர் வ.அய். சுப்பிர மணியம், முனைவர் அகத்தியலிங்கம், முனைவர் அவ்வை நடராசன், முனைவர் இரா. நாகசாமி, தவத்திரு ஊரன் அடிகள், அமைச்சராக இருந்த துரைமுருகன், மத்திய இணை அமைச்சராக உள்ள ஜெகத்ரட்சகன், பேராசிரியர் கண. சிற்சபேசன், முனைவர் அ. அறிவொளி, முனைவர் சுதா சேஷையன், இலங்கை இ. ஜெயராஜ், முனைவர் சரசுவதி ராமநாதன், வழக்கறிஞர் த. ராமலிங்கம், பேராசிரியர் தி. ராசகோபாலன், முனைவர் இராம. சவுந்தரவல்லி, முனைவர் இரா. செல்வ கணபதி, புலவர் கோ. சாரங்கபாணி ஆகியோர் தான்!

நான் என்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகத்தான் அந்தச் சட்டத்தை நிறைவேற்றினேனாம்! விளம்பரத்தையே விரும்பாத ஜெயலலிதாவின் வகைவகையான புகைப்படங்களோடு 23-8-2011 அன்று மட்டும் அவர்களுடைய அதிகாரபூர்வமான "நமது எம்.ஜி.ஆர்." நாளிதழில் 45 முழுப்பக்க விளம்பரங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த லட்சணத்தில் அவர் என்னைப் பார்த்து விளம்பரப்படுத்திக் கொண்டேன் என்கிறார். பேரவையிலே ஜெயலலிதா "நாங்கள் எதைச் செய்தாலும் அதைச் சீரழிப்பதே தி.மு.க. வின் வேலை" என்று சொல்லியிருக்கிறார். அது தவறு; "தி.மு.க. எதைச் செய்திருந்தாலும், அதைச் சீரழிப்பதுதான் அ.தி.மு.க. வின் வேலை" என்பதே சரியாகும்!

அவர்கள் எப்படி வேண்டுமானாலும் செய்து விட்டுப் போகட்டும். நம்மைப் பொறுத்த வரையில் தைத் திங்கள் முதல் நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு தொடங்கும் நாள். அன்றையதினம் வாழ்விலோர் திருவிழா என்பார்களே, அதைப் போல தமிழகத்தின் ஏழையெளிய மக்களுக்கு - தமிழர்களாகப் பிறந்த மக்களுக்கு - திராவிடச் சமுதாயத்தை தனது இனமென தலை நிமிர்ந்து கூறுகின்ற மக்களுக்கு ஒரு இனிய விழா - இதய விழா - எழுச்சி விழா என்பதை மனதிலே கொண்டு அந்நாளை உவகைப் பொங்கிடக் கொண்டாடி மகிழ்ந்திடுவோம்.

அன்புள்ள,

மு.க.

25-08-2011

3583. அதிகாரம் இல்லை? அந்தநாள் ஞாபகம் இல்லையா?

உடன்பிறப்பே,

பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூவரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்து தமிழர்கள் எல்லாம் வாதாடி, சட்டமன்றத்தின் சார்பிலும் தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்ட நேரத்தில் பிடிவாதமாக அதை மறுத்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, இறுதியாக தமிழர்களின் எழுச்சியைக் கண்ட பிறகு பேரவையிலே அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார். அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய போது ஜெயலலிதா தனது உரையில், அரசியல் அமைப்புச் சட்ட விதி 161இன் கீழ் மாநில முதலமைச்சருக்கு இதில் அதிகாரம் இல்லை என்றும், மாநில கவர்னருக்கும் அதிகாரம் இல்லை என்றும் சொல்லியிருக்கிறார்.

ஆனால் தூக்குத் தண்டனை கைதிகளுக்காக உயர் நீதி மன்றத்தில் திரு. ராம்ஜேத்மலானி அவர்களோடு இணைந்து வாதாடிய மற்றொரு மூத்த வழக்கறிஞர் திரு. காலின் கன்சால்வஸ் (Colin Gonsalves) கூறியதாக "இந்தியன் எக்ஸ்பிரஸ்" வெளியிட்டுள்ள செய்தியில், "The Chief Minister has the power to reduce Capital Punishment to life in Jail, and it is the right time to convene a Meeting and take a Cabinet Decision; ..... Jayalalithaa can exercise her power to stay the death sentence under Article 161 of the Constitution .... said one of the three advocates, Colin Gonsalves, who appeared before the High Court for the convicts."

("மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதற்கான அதிகாரம் முதல் அமைச்சருக்கு இருக்கிறது, அது தொடர்பாக அமைச் சரவையைக் கூட்டி முடிவு எடுப்பதற்கான சரியான தருணம் இது ..... அரசியல் சட்டம் 161வது பிரிவின் கீழ் மரண தண்டனையை நிறுத்தி வைப்பதற்கான அதிகாரத்தை

ஜெயலலிதா செலுத்த முடியும்.....என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வாதாடிய மூன்று வழக்கறிஞர்களில் ஒருவரான திரு. காலின் கன்சால்வஸ் கூறியிருக்கிறார்.)

29-8-2011 அன்று 110வது விதியின் கீழ் சட்டப் பேரவையில் அறிக்கை படித்த முதலமைச்சர் ஜெயலலிதா, 19-4-2000 அன்று தி.மு. கழக ஆட்சி நடைபெற்ற போது நடந்த அமைச்சரவை கூட்டத்தில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும், மற்றவர்களின் கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் முடிவெடுக்கப்பட்டதைச் சுட்டிக்காட்டி, தன்னையும் அறியாமல் நளினியின் மரண தண்டனை, ஆயுள் தண்டனையாகக் குறைவதற்கு தி.மு. கழக அரசுதான் காரணம் என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார். உச்ச நீதிமன்றம் நளினி உள்ளிட்ட இந்த நால்வரின் தூக்குத் தண்டனையை 11-5-1999 அன்று உறுதி செய்தது. அதே உச்ச நீதி மன்றத்தில் அவர்கள் தாக்கல் செய்த மறு ஆய்வு மனுவும் 8-10-1999 அன்று நிராகரிக்கப் பட்டு விட்டது. 17-10-1999 அன்று ஆளுநர் அவர்களிடம் அளித்த கருணை மனுக்களை அவர் 27-10-1999 அன்று நிராகரித்து விட்டார். இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில்தான் 25-11-1999 அன்று ஆளுநரின் ஆணையை தள்ளுபடி செய்து விட்டு, அமைச் சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை வழங்கிட தீர்ப்பளித்தது. அந்தச் சூழ் நிலையில்தான் 19-4-2000 அன்று கழக அமைச்சரவை கூடி முடிவெடுத்தது.

ஜெயலலிதா படித்த அதே அறிக்கையில் - "இந்த மூன்று நபர்களும் மேதகு குடியரசுத் தலைவருக்கு அளித்த கருணை மனுக்களை தமிழ்நாடு அரசு 28-4-2000 நாளிட்ட கடிதத்தின் படி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது" என்றும் சொல்லி யிருக்கிறார். அவ்வாறு 28-4-2000 அன்று தி.மு. கழக அரசு மத்திய அரசுக்கு அந்த கருணை மனுக்களை அனுப்பி வைத்ததின் காரணமாகத் தான் அவர்கள் மூவரின் தூக்குத் தண்டனை நிறை வேற்றப்படாமல் இந்த 11 ஆண்டுக் காலமும் அவர்கள் சிறையில் நீடிக்க முடிந்தது என்பதை ஜெயலலிதாவே தனது அறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். அவ்வாறு அமைச்சரவையில் முடிவெடுத்து குடியரசு தலைவருக்கு அனுப்பிய மனு மீது

கடந்த 11 ஆண்டுக் காலமாக குடியரசுத் தலைவர் அலுவலகம் முடிவெடுக்காமல் இருந்த காரணத்தால்தான் தற்போது உயர் நீதிமன்றத்தில், அதையே ஒரு காரணமாக வழக்கறிஞர்கள் எடுத்துக் கூறி, நீதிமன்றம் தண்டனையை ஒத்தி வைத்திருக்கிறது.

நளினிக்கு தண்டனைக் குறைப்பு செய்ததைப் போல மற்றவர்களுக்கு கழக ஆட்சியில் தண்டனைக் குறைப்பு வழங்கிட ஏன் பரிந்துரை செய்யப் படவில்லை என்று கேட்கும் ஜெயலலிதா, 23-10-2008 தேதிய "நமது எம்.ஜி.ஆர்." இதழில் வெளியிட்ட அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?

"தமிழகத்தில் அமைதி நிலவ பயங்கரவாத இயக்கமான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட வேண்டும் என்று 1991ஆம் ஆண்டு நான் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு மத்திய அரசை வற்புறுத்தினேன். என்னுடைய பெருமுயற்சியின் காரணமாகத்தான் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் 14-5-1992 அன்று மத்திய அரசால் தடை செய்யப்பட்டது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில், நிர்ணயிக்கப்பட்ட நீதி மன்றத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளியாக வி. பிரபாகரன் அறிவிக்கப்பட்டுள்ளார். இப்படிப்பட்ட தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவான செயல்கள் தமிழ்நாட்டில் தற்போது மீண்டும் நடைபெற்று வருகின்றன. இலங்கைத் தமிழர் படுகொலையைக் கண்டித்து ராமேஸ்வரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் திரைப்பட இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் கலந்து கொண்டு இந்திய இறையாண்மைக்கு எதிரான பல ஆட்சேபகரமான, தேச விரோத கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்படி இந்திய இறையாண்மைக்கு எதிரான கருத்து களைத் தெரிவிப்பவர்கள் மீது கருணாநிதி இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.....தற்போது தமிழகத்தில் எனது தலைமையிலான ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தால், தடை செய்யப்பட்ட இயக்கங்களுக்கு ஆதரவாக பேசியிருப்பவர்களை நிச்சயமாக கைது செய்திருப்பேன். எனது ஆட்சிக்

காலத்தில் இது போன்று பேசியவர்கள் மீது பொடா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து அவர்களை சிறையில் அடைத்தேன். தற்போது பொடா சட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டது என்ற அசட்டு தைரியத்தில் சிலர் பகிரங்கமாகவே தேச விரோத கருத்துகளைப் பேச ஆரம்பித்து விட்டனர். பொடா இல்லாவிட்டாலும், தற்போதுள்ள சட்ட விரோதமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்திய இறையாண்மைக்கு எதிராக பேசுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் நடவடிக்கை எடுக்க மைனாரிட்டி திமுக அரசின் முதலமைச்சருக்கு மனமில்லை. எப் போதெல்லாம் கருணாநிதி ஆட்சிக்கு வருகி றாரோ, அப்போதெல்லாம் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவான பேச்சுக்கள் தமிழ் நாட்டில் பகிரங்கமாகவே நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்தை ஆதரிப்பது என்பது ஒரு தேச விரோதச் செயல். இதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடம் கிடையாது."

என்றெல்லாம் 2008ஆம் ஆண்டு அறிக்கை விட்ட ஜெயலலிதாதான் - தற்போது தி.மு. கழகம் ஆட்சியில் இருந்தபோது அமைச்சரவையில் 2000ஆம் ஆண்டில் தூக்குத் தண்டனை குற்றவாளிகளான பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தண்டனையைக் குறைக்க பரிந்துரை செய்யவில்லை என்று கூறி, அதை தவறு என்று சொல்கிறார்.

பேரவையில் ஜெயலலிதா தீர்மானம் நிறை வேற்றினாலும், தனக்கு அதிகாரம் இல்லை என்று கூறி பிரச்சினையை தட்டிக் கழிக்கத்தான் எண்ணுகிறார் என்று நினைக்கத் தோன்றுகிறது. ஏனென்றால் வழக்கறிஞர் காலின் கூறியது மட்டுமல்ல, ஏற்கனவே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்ட இருவர் கொடுத்துள்ள வாக்கு மூலங்களும் அதைத் தெளிவாக்குகிறது.

குறிப்பாக தோழர் தியாகு - தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் காப்பாற்றப்பட்ட இடதுசாரி இயக்கத் தோழர்களில் ஒருவர். அவர் கூறியதை அப்படியே சொல்கிறேன், "இடதுசாரி இயக்கப் பணிகளில் நாங்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்த காலம் அது. வர்க்க

எதிரிகளை அழித்தொழிப்பது என்பது நாங்கள் சார்ந்த கட்சி ஏற்றுக் கொண்ட கொள்கை. அந்த வகையில் கட்சி எடுத்த முடிவின்படி ஒரத்தநாடு பகுதியைச் சேர்ந்த முத்து தங்கப்பா என்பவர் 1970இல் படு கொலை செய்யப்படுகிறார். இதில் நான் உட்பட தோழர்கள் ரெங்கசாமி லெனின், குருமூர்த்தி ஆகிய மூவர் கைது செய்யப்பட்டு திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்படுகிறோம். எங்கள் மீதான வழக்கு செசன்ஸ் கோர்ட்டில் நடந்து 1972இல் எங்கள் மூவருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. இதனை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்கிறோம். ஆனால் உயர் நீதிமன்றமும் எங்களின் தூக்குத் தண்டனையை உறுதி செய்கிறது. அப்போது தமிழக முதல்வராக கலைஞர் இருந்தார். உயர் நீதி மன்றத்தின் தூக்குத் தண்டனையைக் குறைக்குமாறு ஆளுநரிடம் நாங்கள் விண்ணப்பித்தோம். ஆளுநரும் தமிழக அரசிடம் இது குறித்து கருத்துரு கேட்டார். அப்போது கலைஞர் தனது அமைச்சரவையைக் கூட்டி எனது கருணை மனு மீது விவாதித்து ஆயுள் தண்டனையாக குறைக்கலாம் என்று முடிவு செய்து அதை ஆளுநருக்குப் பரிந்துரைத்தார். அதன்படி ஆளுநர் எங்களின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனையாகக் குறைத்தார். இதன் மூலம் தூக்குக்கயிற்றை முத்தமிட இருந்த நாங்கள் காப்பாற்றப்பட்டோம். தேசத்தின் குடியரசு தலைவருக்கும் மாநிலத்தின் ஆளுநருக்கும் எத்தனை முறை வேண்டுமானாலும் கருணை மனுக்கள் அனுப்பலாம். குடியரசு தலைவரால் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டாலும் தண்டனையை குறைக்க குடியரசு தலைவரிடமோ, ஆளுநரிடமோ மாநில அரசு பரிந்துரைக்க முடியும். நமது அரசியல் சட்டத்தில் அதிகாரம் உண்டு, அதிகாரம் இல்லை என்கிற சர்ச்சைகள் எப்போதும் நடப்பது தான். அது தான் இப்போது நடக்கிறது. அதிகாரம் இருக்கிறது என்கிறோம் நாம். ஆனால் ஜெயலலிதாவோ தனக்கு அதிகாரம் இல்லை என்கிறார். "அதிகாரமிருந்தால் காப்பாற்றுவேன்" என இதில் அர்த்தம் தொனிப்பதால், அதிகாரம் இருக்கிற குடியரசு தலைவருக்கு மூவரையும் காப்பாற்றும்படி ஒரு வேண்டுகோளை ஜெயலலிதா விடலாமே? சட்ட அதிகாரமில்லை என்பவர் இதையாவது செய்யலாமே" என்று தோழர் தியாகு கூறி, அதனை "நக்கீரன்" வெளியிட்டுள்ளது.

தியாகுவைப் போலவே பெண்ணாடம் புலவர் கலிய பெருமாளின் தூக்குத் தண்டனையும் ரத்து செய்யப்பட்டது.

அவர் தற்போது உயிரோடு இல்லை. 2007இல் மறைந்து விட்டார். அவரது இளைய மகன் சோழநம்பியார் "நக்கீரன்" இதழுக்கு அளித்த பேட்டியில், "தமிழ்நாடு நக்சல் பாரி இயக்கமான மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட் மாநிலச் செயலாளராக இருந்தவர் என் அப்பா கலியபெருமாள். தீவிர தமிழ்ப் பற்றாளர். போலீஸ் இன்ஃபார்மர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில் அப்பா கலியபெருமாள், எனது சகோதரர் வள்ளுவன், நான் மற்றும் என் குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கைது செய்யப்படுகிறோம். வழக்கு விசாரணை கடலூர் அமர்வு நீதிமன்றத்தில் நடந்தது. 1971இல் அப்பா கலியபெருமாளுக்கும் அண்ணன் வள்ளுவனுக்கும் நீதிபதி சிங்காரவேலு தூக்குத் தண்டனை விதித்தார். மற்ற எங்கள்

5 பேருக்கும் ஆயுள் தண்டனை. அண்ணன் வள்ளுவன் மட்டும் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்ய உயர்நீதி மன்றமே அவரது தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. அப்போது தோழர் கல்யாணசுந்தரம் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்ததால், அவர் குடியரசு தலைவராக இருந்த வி.வி. கிரியைச் சந்தித்து கலியபெருமாள் பற்றி கூறிய போது, நீங்கள் மக்களிடம் கையெழுத்து வாங்கி அனுப்பி வையுங்கள் என்று ஒரு கருத்தை வெளிப்படுத்தினார் கிரி. அதன்படி பெண்ணாடத்தில் மாநாடு நடத்தி ஒரு லட்சம் கையெழுத்து பெற்று 1974இல் தமிழக ஆளுநருக்கு அனுப்பினோம். அவர் அதனை அப்போது முதல்வராக இருந்த கலைஞருக்கு அனுப்பினார். கலைஞர் தனது அமைச்சரவையில் இதனை விவாதித்து, மாநில அரசுக்கு உரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி புலவர் கலியபெருமாளின் தண்டனையைக் குறைக்கலாம் என்று சொல்லி அதன்படி முடிவெடுத்து ஆளுநருக்கு பரிந்துரைத்தார் கலைஞர். மாநில அரசின் பரிந்துரையை ஏற்று எனது அப்பாவின் தூக்குத் தண்டனையை ரத்து செய்து ஆயுள் தண்டனையாகக் குறைத்தார் ஆளுநர். எனவே மாநில முதல்வர் மனது வைத்தால் தூக்குத் தண்டனையிலிருந்து யாரையும் காப்பாற்ற முடியும், மாநில முதல்வருக்கு அப்படிப்பட்ட மனது இருக்கிறதா என்பதுதான் இப்போதைய கேள்வியாக இருக்கிறது" என்று விவரித்திருக்கிறார்.

இந்த இருவரின் கூற்றினை மனதிலே கொண்டுதான் நான் எனது முந்தைய கடிதத்தில் மரணத்தின் பிடியிலிருந்து சிலர் விடுவிக்கப்படுவதற்கு காரணமாக இருந்தவர்களில்

நான் ஒருவன் என்ற அடிப்படையில் மத்திய மாநில அரசுகளை வலியுறுத்துகிறேன் என்று குறிப்பிட்டிருந்தேன்.

இந்திய அரசியல் சட்டம் பிரிவு 161இன் கீழ் இந்த மூவரையும் காப்பாற்றிடத் தனக்கு அதிகாரம் இல்லை என்று யாரோ சொன்னதையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு ஜெயலலிதா

காலங் கடத்தாமல், இதில் தனக்கிருக்கும் அதிகாரத்தை இப்போதாவது உணர்ந்து கொண்டு தூக்கு மேடைக்கும் - தொடரும் வாழ்க்கைக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கும் பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகிய மூன்று பேர் உயிர்களையும் காப்பாற்ற முன் வரவேண்டும்.

அன்புள்ள,

மு.க.

1-9-2011

3584. அடிநாதமே; அறுக்கப்படுவதா?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சியில் தமிழக "சட்ட மன்றத்தில் ஜனநாயகம் படும்பாடு" என்ற தலைப்பில், மாநிலமெங்கும் பொதுக்கூட்டங்கள் நடத்தி மக்களைச் சந்தித்துப் பெருமளவுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறோம்.

வடசென்னை தங்கசாலையில் 25-8-2011 அன்று நடைபெற்ற பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில், "நம்முடைய கழக முன்னணியினர் 'தமிழக சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும்பாடு' என்ற தலைப்பிலே கண்டன முழக்கத்தை வெளியிட்டிருக்கிறார்கள். 'தமிழக சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும் பாடு' என்று சொல்லுகின்ற தலைப்பிலேயே ஒரு திருத்தம் காண விரும்புகின்றேன். தமிழக சட்ட மன்றத்தில் ஜனநாயகம் இருந்தால் அல்லவா, அது படும்பாடு பற்றி நாம் பேச முடியும்? ஜனநாயகமே இல்லாத ஒரு இடத்தில், எப்படி 'அது படும்பாடு' என்று நாம் வருத்தப்பட முடியும் என்பதால்தான், தலைப்பிலே ஒரு திருத்தத்தை இணைக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்" என்று நான் உரையாற்றினேன்.

ஜனநாயகத்தின் அடிநாதமே - எந்த முனையிலும் அச்சமில்லாத சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம், ஆரோக்கியமான கலந்தாலோசனை, விரிவான விவாதங்கள் என்பவைதான். இன்றைய தமிழக சட்டமன்றத்தில் இந்த அடிநாதம் அறுத்தெறியப்பட்டு, ஜனநாயகத்தின் உண்மை உருவம் கொஞ்சம் கொஞ்சமாகச் சீர்குலைக்கப்பட்டு வருவதை நாம் காணுகிறோம்; நாட்டினரும் அமைதியாகக் கண்டு வருகிறார்கள். அதனால்தான் ஜனநாயகமே இல்லாத இடமாக தமிழக சட்ட மன்றம் மாறி வருகிறது என்று நான் குறிப்பிட்டேன்.

இன்றைய தமிழக சட்டமன்றத்தில் உறுப்பினர்யாரும் பேச வேண்டுமென்றால்; ஒன்று, தி.மு.கழக ஆட்சியில் கொண்டு

வரப்பட்டு, மக்களின் அமோக ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட திட்டங்களைக் குறை சொல்லிப் பேச வேண்டும் அல்லது தமிழக சட்டமன்றத்தில் தொடர்ந்து உறுப்பினராக இருந்து பொன்விழா கண்ட - ஐந்து முறை ஆட்சிப் பொறுப்பேற்றுபத்தொன்பது ஆண்டுக்காலம் முதலமைச்ச ராக இருந்த என்னை ஏசிப் பேசவேண்டும் அல்லது "தாயே, அகிலாண்டேஸ்வரி" என்றெல்லாம் "போற்றிப் புராணம்" பாட வேண்டும். இந்த அடிப்படை அம்சங்களைப் பின்பற்றாதவர்களுக்கு அங்கே இடமில்லை. அதனால்தான் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் மன்றத்திற்கு வந்து, ஜனநாயகக் கடமையை ஆற்ற முடியாதவாறு வெளியேற்றப்படுகிறார்கள்; அப்படிச் செய்வதன் மூலம் சட்டமன்றத்திலிருந்து ஜனநாயகத்தையும் வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

முன்னர் ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்திலேயே, செயின்ட் ஜார்ஜ் கோட்டை வளாகத்திலுள்ள கட்டடங்கள், சட்டப்பேரவை - தலைமைச் செயலகம் ஆகியவற்றின் தேவைக்குப் போது மானவை அல்ல; பராமரிக்க இயலாத அளவுக்கு பழையதாகி, பழுதடைந்துவிட்டன என்று சொல்லி; வேறு வேறு இடங்களைப் பார்த்து, இறுதியாக கோட்டூர்புரத்தில் "பூமிபூஜை" எல்லாம் போட்டார்கள். சட்டப்பேரவை - தலைமைச் செயலகக் கட்டடங்களை இன்றைய மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்பவும், நவீன வசதிகளுடனும் கட்டியமைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு; அண்ணா சாலையில், ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் இடத்தேர்வு செய்து, 500 கோடி ரூபாய் அளவுக்கு அரசுப் பணத்தைச் செலவழித்து, உலகத் தரத்தில், நடுநிலையாளர்கள் அனைவரும் பாராட்டத்தக்க வகையில் கட்டிடங்களைக் கட்டி முடித்து, புதிய சட்டப்பேரவை - தலைமைச் செயலகம், திருமதி சோனியா காந்தி அவர்களின் முன்னிலையில், இந்தியத் திருநாட்டின் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு; தி.மு.க. ஆட்சியிலேயே அங்கு ஆளுநர் உரை நிகழ்த்தப்பட்டு, இடைக்கால நிதிநிலை அறிக்கை வழங்கப்பட்டு, முதலமைச்சர் - ஏனைய அமைச்சர்களின் அலுவலகங்கள் பணியாற்ற ஆரம்பித்தபோது தான், சட்டப்பேரவைக்கான தேர்தல்கள் வந்தன. தேர்தல்கள் முடிந்து அ.தி.மு.க. வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்னரேயே, யாரையும் கலந்தாலோசிக்காமல், கழக ஆட்சிக்

காலத்தில் கட்டப்பட்டது என்ற ஒரே காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, சட்டப்பேரவையையும் தலைமைச் செயலகத்தையும், பழைய செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலேயே அமைத்துக் கொள்வதாக அறிவித்தவர் ஜெயலலிதா! இவ்வளவு பெரிய கொள்கை முடிவினை மேற்கொள்வதற்கு முன்; அமைச்சரவையைக் கூட்டி, விரிவாக விவாதிக்க வேண்டாமா? தோழமைக் கட்சிகளுடனாவது கலந்தாலோசனை செய்து கருத்தறிய வேண்டாமா? இப்படி, ஆட்சிப் பொறுப்பேற்று சட்டமன்றத்தைத் தொடங்குவதற்கு முன்பே, ஜனநாயகத்துக்கு விடை கொடுத்தவர்கள்தான் அ.தி.மு.க. ஆட்சியினர்!

கிராமத்து மாணவர்கள் - நகரத்து மாணவர்கள், வசதி படைத்த மாணவர்கள் - வசதி இல்லாத ஏழை எளிய மாணவர்கள் அனைவரும் ஒரே தரமான சமமான கல்வியைப் பெறுவது தான் சோஷலிச சமுதாயம் என்ற நோக்கில்; கழக ஆட்சிக் காலத்தில் 2006ஆம் ஆண்டு "சமச்சீர் கல்வித் திட்டத்தை" தமிழகத்தில் அறிமுகம் செய்ய வேண்டும் என்ற இலட்சியத்தோடு, மிகச் சிறந்த கல்வியாளர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழுவின் பரிந்துரைகள் பெறப்பட்டு, அவசரப்படாமல், மீண்டும் ஒரு குழுவை அமைத்து - மற்ற மாநிலங்களுக்குச் சென்று, கலந்தா லோசனை செய்து, அந்தக் குழுவின் கருத்துரைகள் பெறப்பட்டு, சமச்சீர் கல்விக்கான சட்டத்தை நிறைவேற்றி, அதனைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தலாம் என்று முடிவு செய்து, தொடக்கத்தில் முதல் வகுப்பிலும் ஆறாம் வகுப்பிலும் 2010-11 கல்வி ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது. 2011-2012 கல்வி ஆண்டு முதல் மற்ற வகுப்புகளுக்கு விரிவுபடுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

இதற்கிடையில் சமச்சீர் கல்வித் திட்டத்தை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்திலும், உச்சநீதிமன்றத்திலும் வழக்குத் தொடுக்கப்பட்டு, அதன்பிறகே சமச்சீர் கல்வித் திட்டம் நிலை நிறுத்தப்பட்டது. இப்படி அனைத்து எச்சரிக்கை உணர்வோடும், நீதிமன்றங்களின் ஒப்புதலோடும் நிறைவேற்றப்பட்ட "சமச்சீர் கல்வித் திட்டத்தை" ஆட்சிக்கு வந்ததும் வராததுமாக, ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டே நாட்களில் சமச்சீர் கல்வித் திட்டத்தை ஜெயலலிதா அரசு ரத்து செய்தது. முதல்கூட்டத் தொடரிலேயே ரத்து செய்வதற்கான சட்டத் திருத்தத்தைக்

கொண்டு வந்து நிறைவேற்றியது. அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தும்கூட; விரிவான விவாதங்களுக்கு இடமளிக்காமல், சட்டத்திருத்தத்தை நிறைவேற்றிக் கொண்டது - சமம், சமத்துவம் என்பவற்றில் எல்லாம் சற்றும் நம்பிக்கையில்லாத அ.தி.மு.க.! இப்படி, அவசரம் அவசரமாக, சட்டமன்றத்திலிருந்து ஜனநாயகத்தை வெளியேற்றத் தொடங்கியவர்கள் அ.தி.மு.க. ஆட்சியினர்!

நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் வழங்குவதற்கான நாள் குறிப்பிட்டு, ஆளுநர் ஒப்புதல் பெற்று, அறிவிக்கை செய்ததற்குப் பிறகு, 4000 கோடி ரூபாய் அளவுக்கு பல்வேறு வரி விதிப்புகளை அ.தி.மு.க. ஆட்சியினர் அறிவித்தனர். சட்டப்பேரவை ஜனநாயகத்துக்கும், சட்டப்பேரவை நீண்ட நெடிய பாரம்பரிய மரபுகளுக்கும் மதிப்பளிப்பவர்கள், இந்த வரி விதிப்புகளை நிதிநிலை அறிக்கையிலேதான் இணைத்து அறிவித்திருக்க வேண்டும். அப்படி அறிவித்தால்தான் சட்டப்பேரவையில் பல்வேறு கட்சியினரும் கருத்து தெரிவித்து, விவாதிக்க வாய்ப்பாக இருந்திருக்க முடியும் என்று கூறிய தற்கு மாறாக; ஜனநாயக ரீதியில் வழங்கப்பட்டிருக்கின்ற வாய்ப்பை நசுக்கி, ஜனநாயகத்தின் கழுத்தை நெரித்தவர்கள் அ.தி.மு.க. ஆட்சியினர்!

கழக ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது தமிழ் நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச் சட்டம். இந்தச் சட்டத்தின்படி,

7-8-2006 அன்று விவசாயத் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்குமான பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக வருவாய்த் துறை அமைச்சரின் தலைமையில்

18-1-2007 அன்று விவசாயத் தொழிலாளர் நல வாரியம் தொடங்கப்பட்டது. இவ்வாரியத்தின் கீழ், 1 கோடியே 74 லட்சத்து 65 ஆயிரம் விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். கழக ஆட்சிக் காலத்தில் 8 லட்சத்து 73 ஆயிரம் விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் குடும்பங்களுக்கு 684 கோடியே 2 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்பட்டது. அ.தி.மு.க. ஆட்சியினர், விவசாயிகளுக்கும் விவசாயக் குடும்பங்களுக்கும் பாதுகாப்பும்

நலத்திட்டங்களும் வழங்கிடும் இந்தச் சட்டத்தை -கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட சட்டம் என்ற வெறுப் புணர்ச்சியோடு ரத்து செய்தனர். அறிமுக நிலையிலேயே, அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சிகளான கம்யூனிஸ்ட் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்தும் கூட, எந்தவிதமான விவாதத்திற்கும் கருத்துரைக்கும் சட்டமன்றத்தில் இடமளிக்காமல், ரத்து சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டனர். ஜனநாயக ரீதியான விவாதங்களுக்கு அ.தி.மு.க. ஆட்சியில் சட்டமன்றத்தில் இடமேது?

"பெரும்புலவரும், தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்தவருமான மறைமலை அடிகளார் தலைமையில், ஐநூறுக்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள், 1921ஆம் ஆண்டு சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் ஒன்று கூடி, தமிழர்களுக்கென்று ஒரு 'தனி ஆண்டு' தேவை என்று கருதி, அய்யன் திருவள்ளுவர் பெயரில் தொடராண்டு ஒன்றினை பின்பற்றுவ தென்றும், அதையே 'தமிழ் ஆண்டு' எனக் கொள்வ தென்றும், திருவள்ளுவர் பிறந்த ஆண்டு கி.மு. 31 என்றும் முடிவெடுத்தார்கள். அந்தக் கருத்தினை கழக ஆட்சியில் ஏற்றுக் கொண்டு, 1971ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசு நாட்குறிப்பிலும் 1972ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசிதழிலும் நடைமுறைப்படுத்திட ஆணை பிறப்பித்தது. திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத்திங்கள் முதல்நாள்தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது, ஒட்டு மொத்தமாக எல்லாத் தமிழறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால்; தைத் திங்கள் முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்று அறிவித்து நடைமுறைப் படுத்திட கழக அரசு முடிவு செய்துள்ளது" என்று 23-1-2008 அன்று தமிழக சட்டப் பேரவையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் அறிவித்ததற்கிணங்க,

1-2-2008 அன்று சட்டப்பேரவையில் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் இனத்திற்குரிய தகுதி மிக்க அடையாளங்களில் ஒன்றான, இந்தச் சட்டத்தை அ.தி.மு.க. ஆட்சியினர், எந்தவித விவாதமும் இன்றி, சட்டமன்றத்தில் ரத்து செய்தனர். அன்று, ஜனநாயகம் காற்றோடு காற்றாய்க் கலந்தது!

தமிழகச் சட்டமன்றத்திற்கென்று, சான்றாண்மை மிக்க மரபுகள் உண்டு. அந்த மரபுகளெல்லாம் இன்றைக்கு அ.தி.மு.க.

ஆட்சியில் ஒவ்வொன்றாய் விடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முதலமைச்சர் ஜெயலலிதா - பேரவைத் தலைவர் மீதே, மரபுகளுக்கு முரணாக, சட்டமன்றத்திலேயே குற்றம் சாட்டுகிறார். வினாக்களைத் தேர்வு செய்யும் போது, சாதகமான பதில்கள் அளிக்கக்கூடிய வகையில் தேர்வு செய்ய வேண்டுமாம்! இப்படி எந்த விதியில் உள்ளது என்று தெரியவில்லை. அப்படித் தேர்வு செய்ய பேரவைத் தலைவர் தவறிவிட்டாராம். அதற்குத்தான் அவர்மீது குற்றச்சாட்டு! பேரவைத் தலைவரே, பேரவையிலேயே எல்லோர் முன்னிலையிலேயும், ஜெயலலிதாவின் காலில் விழுந்து, ஆசீர்வாதம் பெற்ற வரலாறு மறந்துவிடுமா? ஜெயலலிதா பேரவைத் தலைவரின் ஆசனத்திலும் - உடன்பிறவாச் சகோதரி பேரவைத் துணைத் தலைவரின் ஆசனத்திலும் அமர்ந்து பெருமிதம் கொண்ட அ.தி.மு.க. சட்டப்பேரவை நிகழ்வினை, தமிழகம் மறந்துவிடுமா?

அன்புள்ள,

மு.க.

8-9-2011

3585. அய்யோ பாவம்!
அ.தி.மு.க. அமைச்சர்கள்!!

உடன்பிறப்பே,

தமிழகச் சட்டப்பேரவையில் ஒவ்வொரு நாளும், பல்வேறு துறைகள் குறித்த மானியக் கோரிக்கைகளின் மீது விவாதம் நடைபெற்று அந்தத் துறைகளின் அமைச்சர்கள் இறுதியாக விவாதத்திற்குப் பதிலுரை கூறி, தங்கள் துறைகளின் சார்பில் அறிவிப்புகளை வெளியிடுகின்றார்கள். இதிலே "இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம் பாட்டுத் துறை" பற்றிய விவாதம் கடந்த 25-8-2011 அன்று நடைபெற்று துறை அமைச்சரும் பதிலளித்து விட்டார். ஆனால் அந்தத் துறைக்கான முக்கிய சில அறிவிப்புகளையெல்லாம் முதலமைச்சர் ஜெயலலிதா பேரவையில் 6-9-2011 அன்று 110வது விதியின் கீழ் படித்திருக்கிறார். அது போலவே வீட்டு வசதித்துறை அமைச்சர் தனது மானியத்தின் மீதான விவாதத்தை 25-8-2011 அன்றே முடித்திருக்கும்போது, அந்தத் துறைக்கான அறிவிப்புகளை 8-9-2011 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா 110வது விதியின்கீழ் பேரவையில் படித்திருக்கிறார். ஏன் அந்தத் துறைக்கான அமைச்சர்கள் அந்தத் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்ட நேரத்தில் இந்த அறிவிப்புகளைச் செய்யவில்லை? இந்தத் துறையிலே மாத்திரமல்ல, ஒவ்வொரு துறை பற்றிய மானிய விவாதத்தின்போதும், உப்பு சப்பில்லாத ஒரு சில அறிவிப்புகளையும், தி.மு. கழகத்தைத் திட்டுவதையும் அந்தத் துறையின் அய்யோ பாவம், அமைச்சர்களிடம் விட்டு விட்டு, முக்கிய அறிவிப்புகளையெல்லாம் முதல் அமைச்சரே 110வது விதியின் கீழ் அவையிலே படிக்கிறார். முதலமைச்சர் 110வது விதியின்கீழ் இந்த அறிவிப்புகளைச் செய்கின்ற காரணத்தினால் தான், அவர் படித்தவுடன் அவையிலே உள்ள ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் ஒருவர் எழுந்து அந்த அறிவிப்புகளுக்கு வரிசையாக பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப்

பாராட்டுகளுக்காகத்தான் இந்தப் புதிய ஏற்பாடு போலும்!.

முன்பெல்லாம் 110வது விதியின் கீழ் அறிவிப்புகளைச் செய்தால் இப்படியெல்லாம் பாராட்டுகள் இருக்காது. ஆனால் சில நாட்களுக்கு முன்னால் முதல் அமைச்சர் ஜெயலலிதாவே; பேரவையில் 110வது விதியின் கீழ் அறிக்கை படித்தால் அதிலே கேள்விதான் கேட்கக்கூடாது, பாராட்டு கூறலாம், நன்றி தெரிவிக்கலாம் என்று கூறிய பிறகு; ஒவ்வொரு முறை 110வது விதியின் கீழ் அவர் அறிவிப்புகளைச் செய்யும்போதும் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும், இதையே பெரிய வாய்ப்பாகக் கருதி, வரிசையாக எழுந்து பாராட்டுரைகளை வழங்கிக் கொண்டிருக் கின்றார்கள்.

முதலமைச்சர், அவையிலே 110வது விதியின் கீழ் 6-9-2011 அன்று அறிக்கை படித்த; அந்தத் துறையின் "மானியக் கோரிக்கையின் விளக்கக் குறிப்பு" அந்தத் துறையின் அமைச்சர் சி.வி. சண்முகம் அவர்களால் தயாரிக்கப்பட்டு, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

அந்த 2011-12ஆம் ஆண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பின் முதல் பத்தி வருமாறு :-

> "மனிதவள மேம்பாட்டின் முக்கிய அங்கமாக திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களிடையே சுகாதாரம், தோழமை, நட்புடன் கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்து, அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்த தெளிவான தாக்கத்தை உண்டாக்கும்" என்பதாகும்.

2010-2011ஆம் ஆண்டுக்கான இந்த துறையின் கொள்கை விளக்கக் குறிப்பு தி.மு.க. அரசால் 13-5-2010 அன்று பேரவையில் வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பின் முதல் பத்தி வருமாறு :-

> "மனிதவள மேம்பாட்டின் முக்கிய அங்கமாக திகழும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு, இளைஞர்களிடையே சுகாதாரம், தோழமை, நட்புடன் கூடிய போட்டி மனப்பான்மை ஆகியவற்றை வளர்த்து, அவர்களது ஆளுமைத் திறனை மேம்படுத்த தெளிவான

தாக்கத்தை உண்டாக்கும்" என்பதாகும்.

அதாவது தி.மு.கழக ஆட்சியில் கடந்த ஆண்டுகளின் கொள்கை விளக்கக் குறிப்புகளில் என்ன எழுதப்பட்டிருந்ததோ, அதை அப்படியே "ஈயடிச்சான் காப்பி" என்பார்களே, அதைப்போல எழுத்து பிசகாமல் அப்படியே இந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின் கொள்கை விளக்கக் குறிப்பிலும் எடுத்து எழுதியிருக்கிறார்கள்.

இந்த முதல் வாக்கியம் மட்டுமல்ல; 2011-12ஆம் ஆண்டுக்கான கொள்கைக் குறிப்பின் அடுத்த வாக்கியம் "அனைத்து தரப்பு இளைஞர்களிடையே" என்று தொடங்கி "மலரச் செய்கின்றன" என்று முடிகின்ற வரையில், அப்படியே 2010-11ஆம் ஆண்டுக்கான கொள்கைக் குறிப்பில், தி.மு.கழக ஆட்சியில் என்ன எழுதப்பட்டிருந்ததோ அதை அப்படியே எடுத்து வெளியிட்டிருக்கின்றார்கள். அதற்கு அடுத்தபத்தி "நமது மாநிலம்" என்று தொடங்கி "கவனம் செலுத்தப்படும்" என்று முடிகிறது. கடந்த ஆண்டுகளில் தி.மு.கழக ஆட்சியில் அதே பத்தி அப்படியே இடம் பெற்றுள்ளது. அதற்கடுத்த பத்தி இன்னும் வேடிக்கை. கழக ஆட்சியின் கொள்கைக் குறிப்பில், "நாட்டு நலப் பணித் திட்டம் இந்திய நாட்டிலேயே அதிகமான தொண்டர்களைக் கொண்டிருப்பது தமிழ்நாடே (3,70,018 நபர்கள்). இம்மாநிலத்தில் 98,790 மாணவர் மற்றும் மாணவியர் தேசிய மாணவர் படையில் உள்ளனர்" என்று உள்ளது. இந்த ஆண்டு அமைச்சர் சி.வி.சண்முகம் அவர்களால் தரப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பிலும், "நாட்டு நலப் பணித் திட்டம் இந்திய நாட்டிலேயே அதிகமான தொண்டர்களைக் கொண்டிருப்பது தமிழ்நாடே (3,70,018 நபர்கள்). இம்மாநிலத்தில் 98,790 மாணவர் மற்றும் மாணவியர் தேசிய மாணவர் படையில் உள்ளனர்" என்றுதான் அந்த எண்ணிக்கைகளைக்கூட மாற்றாமல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இதே போல பல பத்திகள் கடந்த தி.மு.க. ஆட்சியில் தரப்பட்ட கொள்கைக் குறிப்புகளிலே உள்ளவைகளே இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலும் அப்படியே உள்ளன. இது அந்தத் துறையின் அமைச்சரின் சோம்பேறித் தனத்தால் - கொள்கைக் குறிப்பினையே பார்க்காமல் இருந்ததின் விளைவா அல்லது அதிகாரிகளின் தந்திரமா?

முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் 110வது விதியின் கீழ்படித்த அறிக்கையில் விளையாட்டுத்துறை சார்பில் என்னென்ன

செய்ய விருக்கிறோம் என்பதையெல்லாம் பட்டியலிட்டிருக்கிறார். இந்தத் துறையின் அமைச்சர் தனது பதிலுரையின்போது "கருணாநிதி ஆட்சிக் காலத்தில் இந்தத் துறையிலே எதுவுமே நடக்கவில்லை, கவியரங்கமும், சங்கமமும்தான் நடைபெற்றன" என்று கூறிய காரணத்தால் தி.மு.கழக ஆட்சியில் இந்தத் துறையின் சார்பாக எதுவும் நடக்காமல் இல்லை, என்னென்ன செய்யப்பட்டது என்பதைப்பற்றி ஒருசிலவற்றை மட்டும் இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த நான்காண்டுகளில் தி.மு.கழக ஆட்சியில் விளையாட்டு வீரர்களுக்காக ஊக்கத் தொகையாக மட்டும் வழங்கிய தொகை 3 கோடியே 71 லட்சத்து 67 ஆயிரத்து 655 ரூபாய். இது தவிர, சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் செயற்கை இழை தடகள ஓடுகளப்பாதை ரூ.240 இலட்சத்தில் புதுப்பிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சர்வதேச அளவிலான டென்னிஸ் போட்டிகள் சென்னையில் நடத்திட ஆண்டு தோறும் ரூ.1கோடி வழங்கப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரசின் பங்களிப்புடன் ரூ.60 இலட்சம் செலவில் புதிய நவீன நீச்சல் குளம் அமைக்கப்பட்டுள்ளது. இறகுப்பந்து உள் விளையாட்டரங்கம் தலா ரூ.20 இலட்சம் வீதம் ரூ.60 இலட்சம் செலவில் சென்னை கோயம்பேடு தெற்காசிய விளையாட்டுக் கிராமம், காஞ்சீபுரம் மாவட்ட விளையாட்டரங்கம், சென்னை சென்னாய்நகர் நீச்சல் குள வளாகம் ஆகிய மூன்று இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

திருச்சி, மதுரை மாவட்ட விளையாட்டு வளாகங்களில் விளையாட்டு வீரர்களுக்கான விடுதிகள் தலா ரூ.70 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தலா ரூ.70 இலட்சம் வீதம் இரண்டு நவீன நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மதுரை மாவட்ட ரேஸ் கோர்ஸ் விளையாட்டரங்கத்தில் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நவீன மின்னொளி அமைக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. சென்னை உள் விளையாட்டரங்க மேற்கூரை ரூ.131 இலட்சத்தில் நவீன முறையில் புதுப்பிக்கப்பட்டது. திருநெல்வேலியில் ரூ.70 இலட்சத்தில் புதிய விளையாட்டு விடுதி கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. சென்னை ஜவஹர்லால்

நேரு விளையாட்டரங்கில் ரூ.70 இலட்சத்தில் புதிய விளையாட்டு விடுதி கட்ட அனுமதிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

திருநெல்வேலி மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் தலா ரூ.1 கோடி திட்ட மதிப்பீட்டில் உள் விளையாட்டரங்கம் கட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் கட்டுமானப் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. தருமபுரி மாவட்டம் அரூரிலும், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியிலும் ரூ.60 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் சிறிய விளையாட்டரங்கம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் ரூ.70 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் நவீன நீச்சல் குளம் அமைத்திட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. திருச்சி அண்ணா விளையாட்டரங்கத்தில் செயற்கை இழை ஆக்கி மைதானம் அமைக்க ரூ.300 இலட்சம் அனுமதித்து பணிகள் நடைபெற்று வருகின்றன. பொருளாதாரத்தில் மிகவும் நலிவடைந்த விளையாட்டு வீரர்களுக்கு திருவண்ணா மலை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூ.310 இலட்சத்தில் விளையாட்டு விடுதி அமைக்கப் பட்டது. கிருஷ்ணகிரி விளையாட்டு விடுதியில் 75 மாணவர்களும், திருவண்ணாமலை விளையாட்டு விடுதியில் 75 மாணவிகளும் பயனடைந்து வருகிறார்கள். திருநெல்வேலி மாவட்டம் அண்ணா விளையாட்டரங்கத்தில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய்ச் செலவில் செயற்கை இழை ஓடுகளப் பாதை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டு, ரூ.134 இலட்சம் அரசு மான்யம் பெறப்பட்டு பணிகள் துவங்க துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் சர்வதேச தரத்திலான நீச்சல் குளம் ரூ.175 இலட்சத்தில் அமைக்க அரசு அனுமதித்து, நீச்சல் குளம் கட்ட துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி, தூத்துக்குடி, தஞ்சாவூர், சிவகங்கை, நாகப்பட்டினம், ஈரோடு, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, திண்டுக்கல், கரூர், அரியலூர், சென்னை ஆகிய 12 இடங்களில் 120 இலட்சம் ரூபாய்ச் செலவில் இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதில், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருவண்ணாமலை, நாகப்பட்டினம், சிவகங்கை ஆகிய இடங்களில் பணிகள் முடிவடைந்து பயன்பாட்டில் உள்ளது; பிற இடங்களில் துரிதமாக பணி நடைபெற்று வருகிறது.

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை, திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் நென்மேனிப்பட்டி-சாத்தூர், தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் மற்றும் நாமக்கல் மாவட்டம் ஆகிய இடங்களில் ரூ. 50 இலட்சத்தில் சிறு விளையாட்டரங்கம் அமைக்க பூர்வாங்கப் பணிகள் நடைபெறுகின்றன. அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் நீச்சல் குளங்கள் அமைத்திட தலா ரூ. 50 இலட்சம் வீதம் மானியமாக ரூ. 1 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் கட்டுவதற்கு ரூ. 50 இலட்சம் வீதம் மொத்தம் 1 கோடி ரூபாய் மான்யம் அனுமதிக்கப்பட்டு, உள் விளையாட்டரங்கங்கள் அமைக்கப்படுகின்றன. உலக ஸ்குவாஷ் போட்டிகள் சென்னையில் உள்ள நவீன ஸ்குவாஷ் விளையாட்டரங்கத்தில் சென்னை ஸ்குவாஷ் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு

2010-2011-ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வரும் 5 ஆண்டுகளுக்கு ஆண்டுதோறும் ரூ.1 கோடி வழங்க ஒப்புதல் அளித்து, 2010-2011-ம் ஆண்டுக்காக ரூ.1.கோடி வழங்கப்பட்டுள்ளது.

2011இல் நடைபெற்ற உலகக் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டியில் இலங்கையை எதிர்த்து கோப்பையை வென்ற திரு.எம். எஸ். தோனி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணிக்கு 3 கோடி ரூபாயும், அணியில் இடம் பெற்ற தமிழக சுழற்பந்து வீச்சாளர் ஆர். அஸ்வின் அவர்களுக்கு 1 கோடி ரூபாயும் சிறப்புப் பரிசாக வழங்கப்படும் என அறிவித்ததற்கேற்ப; 5.5.2011 அன்று முதலமைச்சராக இருந்த என்னால் அணிக்கு உரிய 3 கோடி ரூபாய் 14 வீரர்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டது. திரு.அஸ்வினுக்கு 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டது.

எனவே, உடன்பிறப்பே, இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து இந்தத் துறையின் அமைச்சர்; அவையில் கூறியதைப் போல தி.மு. கழக ஆட்சியில் கவியரங்கம், சங்கமமும் மட்டும் நடக்கவில்லை, அதுவும் நடந்தது, இது போன்ற எண்ணற்ற சாதனைகளும் செய்யப்பட்டன என்பதைப் புரிந்து கொள்ளலாம். செம்மொழி,

கவியரங்கம், சங்கமம் இவைகள் எல்லாம் அவர்களுக்குப் பிடிக்காத அம்சங்களாகும். அ.தி.மு.க. அமைச்சர்களில் இந்த அமைச்சர் ஒரு வித்தியாசமானவர் என்று நான் சற்று உயர்வாக இவரைப் பற்றி எண்ணியிருந்தேன். அவரும் அப்படித்தான் என்பதை இப்போது புரிந்து கொண்டேன்.

அன்புள்ள,

மு.க.

10-9-2011

3586. கழக அரசு கடைப்பிடித்த வழியில் காத்திடுக மூவர் உயிர்!

உடன்பிறப்பே,

"தமிழீழம்" அமைய வேண்டும் என்பது - என்னுடைய ஆசைகளில் ஒன்றாக இருந்த போதிலும், அந்த ஆசை உரிய நேரத்தில் நிறைவேற முடியாமல் போனதற்கான காரணத்தை அனுபவரீதியாக இங்குள்ள தமிழர்கள் - ஈழத் தமிழர்கள் உட்பட அனைவரும் அறிவார்கள்.

1989ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிந்து முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், எனக்கும் அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் இடையே அரசியல் மாச்சர்யங்கள் இருந்த போதிலும், முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு இந்தியப் பிரதமர் என்ற முறையில், ராஜீவ் காந்தி அவர்களைச் சந்தித்து மரியாதை செலுத்த வேண்டும் என்பதற்காக; நான் 9-2-1989 அன்று டெல்லி சென்றிருந்தேன். என்னுடன் தம்பி முரசொலி மாறனும் வந்திருந்தார். பிற்பகலில் சந்திப்புக்கு பிரதமர் அலுவலகத்தில் பத்து நிமிடம் நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. நான் ராஜீவ் அவர்களைச் சந்தித்தபோது, எங்களிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் அனைத்தும் மறைந்து போகிற அளவுக்கு அவருடைய இனிய வரவேற்பும், அன்பான வார்த்தைகளும் அமைந்திருந்ததைக் கண்டு நான் வியந்து போனேன். அதைவிட வியப்புக்குரியதும், ஆயிரம் வினாக்களை என் இதயத்தில் எழுப்பிடக் கூடியதுமான ஒரு வாசகத்தை அவர் வெளியிட்ட போது நான் அதிர்ந்து போனேன், அகமகிழ்ச்சியால் துள்ளிக் குதித்திருப்பேன். பிரதமருடைய அலுவலகம் என்ற காரணத்தால் அந்த மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவர் வெளியிட்ட கருத்துக்களில் கவனம் செலுத்தினேன். இதைப் பற்றி இப்போதல்ல; நான் எழுதிய "நெஞ்சுக்கு நீதி" புத்தகத்தில்

நான்காம் பாகத்தில் பக்கம் 25லேயே எழுதியிருக்கிறேன். அது வருமாறு :-

> "ஒரு முதலமைச்சர், ஒரு பிரதமரை மரியாதை நிமித்தம் சந்திப்பது - அதுவும் இரு வேறு கட்சிகளின் தலைவர்கள் என்கிறபோது; அந்தச் சந்திப்பு மரியாதை அளவில் ஒருசில நிமிடங்கள்தான் நீடிக்கும். ஆனால் ராஜீவ் காந்தி அவர்களோ; ஈழத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேச வேண்டும்; அதற்கு வாய்ப்பாக டெல்லியிலே நான் மேலும் இரண்டு நாள் தங்க வேண்டும் என்று வலியுறுத்தினார். ஈழத் தமிழர் பிரச்சினையில் ஒரு திருப்பம் ஏற்படக் கூடும் என்ற நம்பிக்கையோடு ராஜீவ் விருப்பப்படி டெல்லியில் மேலும் ஒரு நாள் தங்கப் போவதாக சென்னைக்கு அறிவித்துவிட்டு அங்கே தங்கினேன். மறுநாள் காலை ஏழு மணிக்கெல்லாம் டெல்லியில் நான் தங்கியிருந்த தமிழ்நாடு அரசு இல்லத்துக்கு ஈழத்தமிழர் பிரச்சினை குறித்த முழுமையான விபரங் களை எனக்கு விளக்கிட மத்திய அரசின் வெளி விவகாரத் துறை இணை அமைச்சராக இருந்த நட்வர்சிங் அவர்களை ராஜீவ் அனுப்பி வைத்துவிட்டார். அவருடனும் வெளியுறவுத் துறை அதிகாரிகளுடனும் நானும், தம்பி முரசொலி மாறனும் நீண்ட நேரம் விவாதித்தோம். மாலையில் மீண்டும் பிரதமர் ராஜீவ், நட்வர்சிங், முரசொலி மாறன் மற்றும் அதிகாரிகளுடன் ஒரு கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பிரதமருடன் நானும் மாறனும் மட்டுமே, ஈழப் போராட்டம் பற்றிய முக்கிய பிரச்சினைகள் குறித்துப் பேசினோம். அப்போது மனந்திறந்து பேசிய ராஜீவ், விரைவில் இலங்கைக்கு மாறனையும், வைகோவையும் அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளையும், பிரபாகரனைச் சந்தித்து பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரத் தேவையான வாய்ப்புகளையும் உருவாக்கிடத்தக்க வழிவகைகளை வகுத்துத் தருவதாகவும், சென்னைக்குச் சென்ற பிறகு மீண்டும் தொடர்பு கொள்வதாகவும் உறுதிபடக் கூறினார். அன்றைய தினம் டெல்லியில் மத்திய அரசும், தமிழக அரசும் இணைந்து கொடுத்த செய்தி

வெளியீட்டில் "இலங்கையில் நடக்கும் பாராளுமன்றத் தேர்தல் முடிந்த பிறகு, மீண்டும் சந்தித்து, இலங்கைப் பிரச்சினை குறித்து விவாதித்து, வன்முறைக்கு முடிவு காணுகிற சாத்தியக் கூறுகளைக் கண்டறிந்து நல்லிணக்கமும், முழு அமைதியும் ஏற்படுத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது" என்று அறிவிக்கப்பட்டது"

இப்படி ஈழத்திற்காக நானும் பாடுபடுவேன் என்று சொன்ன ராஜீவ் காந்தி தமிழகம் வந்தபோது கொல்லப்பட்டு விட்டார் என்பதும் - அதைத் தொடர்ந்து நடந்த விரும்பத்தகாத கொடிய வன்முறைச் சம்பவங்களும் - எத்தனையோ முறை நானும் நமது தமிழகத் தலைவர்களும், ஏன் இந்தியத் தலைவர்களும் கூட வேண்டிக் கேட்டுக் கொண்டும் ஈழ விடுதலைப் போராளிகளுக்கிடையே நடந்து கொண்டிருந்த சகோதர யுத்தங்களுக்கு முடிவே ஏற்படாமல் - "டெலோ" போராளிகள் இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரத்தினமும் அடுத்தடுத்து பத்மநாபா, முகுந்தன் போன்ற விடுதலைப் போராளிகள் இயக்கத் தளகர்த்தர்களும் கொல்லப்பட்டது மாத்திரமல்லாமல்; ஈழப் போரின் ஆரம்பகட்டமாக போராளிகளைத் தமிழகத்திற்கு அழைத்து வந்து இங்குள்ள தலைவர்களிடமெல்லாம் அறிமுகப் படுத்திய பண்பாளர் அமிர்தலிங்கமும் சகோதரயுத்தத்தில் சிக்குண்டு கொல்லப்பட்ட நிகழ்ச்சியும் - தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு தேக்க நிலையை ஏற்படுத்தி விட்டன என்பதை உணர்ந்து, தமிழீழ விடுதலையில், ஈழத் தமிழர் பெற வேண்டிய உரிமைகளில் அக்கறை கொண்ட என் போன்றோர் சலித்துத்தான் போக நேரிட்டது.

"மாவீரன் பிரபாகரனின் உடல் கடற்கரையில் ஒதுங்கிக் கிடக்கிறது" என்று கண்ணீரால் எழுதப்பட்ட கதை முற்றுபெறும் வரையில் ஈழ விடுதலைப் போர் நடைபெற்றதையும் - போரால் அடிபட்டு, மிதிபட்டு, வதைபட்டு வாடிய தமிழ் மக்கள் பூவும் பிஞ்சுமாக, இலையும் தளிருமாக - ஓட ஓட விரட்டப்பட்டு, அகதிகளாக, ஆதரவற்றோராக, அன்றாடம் வயிற்றுப் பசியை அடக்குவதற்கே வழியற்றவர்களாக - முள் வேலி முகாம்களில் முடக்கப்பட்டதும் - இன்றளவும் தீராமல் தொடருகின்ற துன்பத் தொடர்கதைகளாகவன்றோ - நிற்காமல் நீண்டு கொண்டே போகின்றன!

அந்த வேதனை ஒரு பக்கம் இன்னும் நம்மை வாட்டிக் கொண்டிருக்கின்றது. இன்னொரு பக்கமோ ராஜீவ்காந்தியின் கொலைக்குக் காரணமானவர் என்று தூக்குமேடைக்கு அனுப்பப்பட வேண்டியவர்களென மூவரின் பெயர் பட்டியல் நம் முன்னால் தொங்க விடப்பட்டிருக்கிறது. ஆம்; சாந்தன், பேரறிவாளன், முருகன், நளினி என்றிருந்த நால்வரில், நளினிக்கு தூக்குத் தண்டனையை தி.மு.கழக அரசு ஆயுள் தண்டனையாக மாற்றுவதற்கான முறையான ஏற்பாடுகளைச் செய்தது - இன்றைக்கும் நமக்கு மன ஆறுதலைத் தருகிறது. ஒரு பெண் என்பதால் - மற்றும் ஒரு குழந்தையின் தாய் என்பதால் - நளினிக்குக் கிடைத்துள்ள அந்தச் சலுகை விரிவுபடுத்தப்பட்டு - இருபதாண்டு காலத்திற்கு மேலாக ஏறத்தாழ ஆயுள் தண்டனை கைதிகளைப் போல சிறையிலே இருந்து வாடிய சாந்தன், பேரறிவாளன், முருகன் ஆகிய இவர்களை; தொடர்ந்து கைதிகளாகவே இருந்திடச் செய்யாமல் அவர்களை விடுவித்திடவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், கருணை காட்டப்பட வேண்டும், அவர்கள் மீதான குற்றம் மிகப் பெரியது என்ற போதிலும், அவர்கள் அனுபவித்த தண்டனைக் காலத்தை மனதிலே கொண்டு மனிதாபிமானத்தோடு இரக்கம் காட்ட முன் வர வேண்டும் என்று ஏற்கனவே நான் கூறியிருக்கிறேன். இப்பொழுதும் அதையே கூறுகிறேன்.

இதுபோன்ற நிகழ்வுகளில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கிட ஒரு மாநில அரசு எந்த விதிமுறைப்படி அவர்களின் மரண தண்டனையை மாற்றியமைக்க முடியுமோ அவ்வாறு தமிழகத்தில் தி.மு. கழக அரசு பொறுப்பில் இருந்தபோது மாற்றியமைத்து - அவர்களை வாழ விட்டிருக்கிறது என்பதற்கு கடந்தகால உதாரணங்களாக - தியாகு, கலிய பெருமாள் போன்றவர்கள் திகழ்கிறார்கள். இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தியாகு - நல்ல எழுத்தாளராக, கட்டுரையாளராக, புத்தகங்கள் வெளியிடுபவராக இந்தச் சமுதாயத்தில் இப்போது மதிப்புடன் உலவுவதைப் பார்த்தாவது சாந்தனுக்கும், முருகனுக்கும், பேரறிவாளனுக்கும் வாழ்வளித்து - அவர்கள் அறிவாற்றலை சமுதாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இது என்னவோ! ராஜீவ் காந்தி கொலைக்குக் காரணமானவர்களுக்கு அளிக்கும் பரிசு என்று யாரும் கருதாமல் - இதுதான் அவர்களுக்குரிய தண்டனை என்று நினைப்பதால் கேடு ஒன்றும் விளைந்திடாது.

இன்றைய தமிழக அரசும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதோடு கடமை முடிந்து விட்டதாகக் கருதாமல் - மனிதநேயத்தோடு பிரச்சினையை உண்மையிலேயே அணுக வேண்டுமானால் - அதற்குரிய விதிமுறைப்படி ஏற்கனவே கழக அரசில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைப்படி - உடனடியாக அமைச்சரவையைக் கூட்டி அதிலே இந்த மூவரின் தூக்குத் தண்டனையை ரத்து செய்வதற்கான தீர்மானத்தை நிறைவேற்றி - அந்தத் தீர்மானத்தை ஆளுநருக்கு அனுப்பி வைத்து, அவர்களை விடுவிக்க ஆவன செய்ய வேண்டும்.

அன்புள்ள,

மு.க.

12-9-2011

3587. மாமியார் உடைத்ததும்; மருமகள் உடைத்ததும்!

உடன்பிறப்பே,

"திருமழிசையில் 311 ஏக்கரில் குடியிருப்புகள் - சென்னை அருகே துணை நகர் - சட்ட சபையில் ஜெயலலிதா அறிவிப்பு"

இதுதான் தமிழகத்தின் அனைத்து ஏடுகளிலும் 9-9-2011 அன்று தலைப்புச் செய்தி. இந்த அறிவிப்பினை முதலமைச்சர் ஜெயலலிதாதான் பேரவையில் வழக்கம்போல 110வது விதியின் கீழ் படித்திருக்கிறார். அவர் படித்து முடித்தவுடன் வழக்கம்போல அவையிலே உள்ள அனைத்துக் கட்சிகளின் சார்பில் பாராட்டுரைகள் வழங்கப்பட்டுள்ளன. நம்மைப் பொறுத்த வரையில் திருமழிசையில் துணை நகரம் வரப் போவதில் நமக்கு மகிழ்ச்சிதான். ஏனென்றால் திருமழிசையில் இவர்கள் துணை நகரம் அமைக்கவுள்ள இடம் தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் வீட்டு வசதி வாரியத்தினால் கையகப்படுத்தப்பட்ட இடம்!

அம்மையார் அவர்கள் படித்த அறிக்கையில் "சென்னை மாநகரம் வெகு வேகமாக விரிவடைந்து வருகிறது, சென்னையில் வீட்டு மனை மற்றும் அடுக்கு மாடிக் குடியிருப்புகளின் விலை பெருமளவில் உயர்ந்திருக்கிறது, இந்த நிலையைக் கருத்திலே கொண்டு துணை நகரம் அமைக்கப் போவதாக" அவர் தெரிவித்திருக்கிறார். திருமழிசை துணை நகரத்தை 311 ஏக்கரில் உருவாக்கப் போவதாக ஜெயலலிதா பேரவையில் 9-9-2011 அன்று அறிவித்து அனைத்துக் கட்சி யினரும் உடனடியாக எழுந்து அதைப் பாராட்டியிருக்கிறார்கள் என்ற போதிலும், அதற்கு முன்பே 25-8-2011 அன்று பேரவையில் வீட்டு வசதித் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் வைத்த கொள்கை விளக்கக் குறிப்பிலேயே இத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பாவம்; அவர் அறிவித்தால் அதை யார் பொருட்படுத்துவார்கள்? "ஜெ" அறிவித்தவுடன்தான் அதற்கு பெரிய மவுசே ஏற்படுகிறது!

அப்போதே அமைச்சர் வைத்திலிங்கம் வைத்த கொள்கைக் குறிப்பு புத்தகத்திலேயே பக்கம் 8இல் "சென்னைப் பெருநகரில் பெருகிவரும் மக்கள் தொகையினால் முறையற்ற வகையில் உருவாகி வரும் கட்டிடங்களைத் தவிர்க்க, அடிப்படை வசதிகளாகிய வரையறுக்கப்பட்ட சாலைகள், தெரு விளக்குகள், மழை நீர் வடிகால், சிறு பாலங்கள், கழிவு நீர் அகற்றல் மற்றும் குடிநீர் வசதிகளுடன் தன்னிறைவு பெற்ற ஒருங்கிணைந்த புதிய நகரத்தை உருவாக்க வேண்டிய அவசியமுள்ளது. திருவள்ளூர் மாவட்டம், திருமழிசைக்கு அருகில் ஏற்கனவே வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட சுமார் 311 ஏக்கர் நிலப் பரப்பில் ஒருங்கிணைந்த நவீன நகரியத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. அணுகு சாலைக்காகத் தேவைப்படும் 12.87 ஏக்கர் சிறு நிலப்பரப்பு இவ்வருடத்தில் கையகப்படுத்தப்படும்" என்றுள்ளது.

எனவே கொள்கை விளக்கக் குறிப்பில் கடந்த மாதமே அறிவிக்கப்பட்ட ஒரு திட்டத்தைத்தான்

9-9-2011 அன்று முதலமைச்சர் ஜெயலலிதா ஏதோ புதிதாக அன்றுதான் அத்திட்டத்தை அறிவிப்பதைப்போல பேரவையில் 110வது விதியின் கீழ் அறிவித்திருக்கிறார்.

சென்னையையொட்டி துணைக்கோள் நகரம் அமைக்கும் இந்த யோசனை இப்போதல்ல; தி.மு. கழக ஆட்சியிலும் வந்தது. அதாவது; 2006ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும்

1-9-2006 அன்று பேரவையில் செய்யப்பட்ட அறிவிப்பில், "வண்டலூர் - கேளம்பாக்கம் சாலைக்கு தென் பகுதியில், பழைய மாமல்லபுரம் சாலைக்கும் 45ஆம் எண். தேசிய நெடுஞ் சாலைக்கும் இடையில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 30 ஆயிரம் ஏக்கர் நிலத்தை உத்தேசமாக சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் தேர்வு செய்துள்ளது. இப் பகுதியில் 13 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. 270 சதுர கிலோ மீட்டரில் உள்ள இந்நிலப்பரப்பு மாசற்ற, நல்ல சுற்றுப்புறச் சூழலில் இருக்கிறது. புதிய நகர அமைப்பிற்கு இது உகந்த பகுதியாகும். இப்பகுதியில் பெரும்பாலான நிலங்கள் பயிரிடப்

படாமல் தரிசாகவே உள்ளன. இவற்றைக் கையகப்படுத்தும் போது நீர்வளப் பகுதி, குடியிருப்புப் பகுதி, காடுகள் உள்ள பகுதி ஆகியவற்றை நீக்கி விட்டு தரிசாகவும், புஞ்சையாகவும் உள்ள நிலங்களே கையகப்படுத்தப்பட உள்ளன. நிலங்களைக் கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்களுக்கு நியாயமான மார்க்கெட் விலை வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் வசிக்கும் மக்கள் இடப்பெயர்ச்சி செய்யப்பட மாட்டார்கள். அவர்கள் அந்தந்த இடங்களிலேயே தொடர்ந்து வாழலாம். புதிய நகரம் அமையும்போது உருவாகும் வேலை வாய்ப்புகள் இப்பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு நல்ல பலனை வழங்கி அவர்கள் பொருளாதார ரீதியாக உயர்வடைய வழி வகுக்கும்" என்றெல்லாம் தெரிவிக்கப்பட்டது.

தி.மு.கழக ஆட்சியில் 31-8-2006 அன்று பேரவையில் இந்த அறிக்கை படிக்கப்பட்டதுதான் தாமதம் - மறுநாளே 1-9-2006 அன்று ஜெய லலிதா அவசர அவசரமாக ஓர் அறிக்கையினை வெளியிட்டார். அதில்,

"ஆணவம் கொண்ட அற்ப ஜீவராசிகளின் பொறுப்பில் ஆளும் அதிகாரம் சிக்கிக் கொண்டிருப்பதால், ஜனநாயக மக்கள் விரோத அலங்கோலங்கள், பாரம் பரியம் மிக்க தமிழகத்தில் தொடர் நிகழ்வு களாகிக் கொண்டிருக்கின்றன என்பதற்கு, சென்னையை ஒட்டி அமைக்க இருப்பதாக மைனாரிட்டி தி.மு.க. அரசின் முதலமைச்சர் கருணாநிதி அறிவித்திருக்கும் துணை நகர அறிவிப்பும் ஓர் உதாரணமாகிவிட்டது.

ஓர் முதலமைச்சருக்கு தொலைநோக்குப் பார்வை இல்லாதபோது இதுபோன்று தான்தோன்றித்தனமாகச் செயல்படுகின்ற நிகழ்வுகள் நெஞ்சை நடுங்க வைக்கும் நீசச் செயல்களாக அமைந்து விடுகின்றபோது அதற்கான விலையை கருணாநிதியும் அவரது கட்சியும் கொடுத்துத்தான் ஆக வேண்டும்.

கருணாநிதிக்கு "துணை" என்றால் மிகவும் பிடிக்கும் போலும், அதனால்தான் சென்னை மாநகருக்கும் ஒரு "துணை"யைத் தேடுகின்றார். தனது குடும்பத்தார்,

சுற்றத்தார் மற்றும் பேரன்கள் தயாநிதி மாறன், கலாநிதிமாறன் பயன்பெறவே சென்னை துணை நகரத் திட்டம் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட வுள்ளது என்ற செய்திகள் வந்து கொண்டேயிருக்கின்றன. சென்னை மாநகரத்தில் உள்ள மக்களின் இட நெருக்கத்தைக் குறைப்பதற்காக துணை நகரம் ஏற்படுத்த இருப்பதாக கருணாநிதி சொல்கின்றார். முதலில் அவர் வீட்டில் உள்ள பெண்டு பிள்ளைகள், பேரன் பேத்திகள், மறைந்த முதல் மனைவியின் உறவினர்கள், அவர்கள் வழி வந்த உறவினர்கள், இருக்கும் மனைவியின் உறவினர்கள், ஏற்படுத்திக் கொண்ட துணைவியின் வழி வந்த உறவுகள் ஆகியோர் முதலில் கோபாலபுரத்தை விட்டும், சி.ஐ.டி. காலனியை விட்டும் வெளியேறி ஜன நெருக்கத்தை மேற்படி பகுதிகளில் குறைக்கட்டும்"

- என்றெல்லாம் அந்த அறிக்கையில் ஜெயலலிதா; கூறியிருந்தார். ஆனால் தற்போது அவரே திருமழிசையில் துணை நகரம் அமைக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

இதிலே இன்னும் வேடிக்கை என்னவென்றால், ஜெயலலிதா எதிர்த்து அறிக்கை கொடுப்பதற்கு முன்பாகவே அப்போது எங்களுடன் தோழமையாக இருந்த பா.ம.க. சார்பில் டாக்டர் ராமதாஸ் அவர்கள் இந்த துணை நகரம் வருவதால் விவசாய நிலங்கள் எல்லாம் பாதிக்கும், அங்கே வசிக்கின்ற மக்கள் சிரமப்படுவார்கள் என்று நாகரிகமாகச் சொன்னதன் பேரில் இரண்டே நாட்களில், அதாவது

2-9-2006 அன்றே நான் விடுத்த அறிக்கையில், "தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும் நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டு சென்னையை ஒட்டிய துணை நகர அமைப்பு உருவாக்கப்படுமென நான் குறிப்பிட்டிருந்த திட்டம்; நல்லெண்ண அடிப்படையிலும் தோழமைக் கட்சி வழங்கிய அறிவுரையை சிந்தித்துப் பார்த்தும்; சில சுயநல தீய சக்திகள் திட்டமிட்டுள்ள பகிரங்க வன்முறை வெறியாட்டத்துக்கு அப்பாவிப் பொதுமக்கள் பலியாகிவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை உணர்வுடனும் கைவிடப்பட்டுள்ளது" என்று கூறிவிட்டேன்.

ஜெயலலிதாவின் அந்த அறிக்கை பற்றி 3-9-2006 அன்றே பா.ம.க.வின் அதிகாரபூர்வ ஏடான "தமிழ் ஓசை"யில், "ஜெயலலிதாவின் அறிக்கை - அநாகரிகத்தின் உச்சக்கட்டம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள்.

தற்போது அ.தி.மு.க.வுடன் தோழமைக் கட்சியாக உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஏடான "தீக்கதிர்", 4-9-2006 அன்று எழுதிய தலையங்கத்தில்,

> "சென்னை அருகே துணைநகரம் அமைக்கும் திட்டம் ரத்து செய்யப்படுவதாக முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார். நல்லெண்ண அடிப்படையில் தோழமைக் கட்சியினரின் உணர்வுகளை மதித்து இந்த முடிவை எடுத்திருப்பதாக முதல்வர் அறிவித்துள்ளார். ஆனால் ராணி மேரி கல்லூரியை இடித்துவிட்டு அந்த இடத்தில் தலைமைச் செயலகம் கட்ட முந்தைய (அதிமுக) ஆட்சி முயன்றபோது மாணவிகள் போராடினர். அனைத்துத் தரப்பு மக்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனாலும் ஆணவத்தோடு அந்தத் திட்டத்தை கைவிட அடாவடியாக மறுத்த ஜெயலலிதா அரசின் செயலோடு முதல்வரின் இந்த அறிவிப்பை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. துணை நகரத் திட்டம் கூடாது என்று ஜெயலலிதா விடுத்த அறிக்கை அரசியல் அநாகரிகத்தின் உச்சமாக இருந்தது வேதனையளிக்கிறது. அரசின் ஒரு திட்டத்தை எதிர்க்க எதிர்க்கட்சிகளுக்கு முழு உரிமை உண்டு. ஆனால் அதில் அரசியல் நாகரிகம் பேணப்பட வேண்டும். ஆனால் ஜெயலலிதாவின் அறிக்கையில் முதல்வர் கருணாநிதி குடும்பத்தினர் குறித்து அருவருக்கத்தக்க, அநாகரிகமான வார்த்தைகளை ஜெயலலிதா பயன்படுத்தி யுள்ளார். அவரது வன்மத்தையும், வக்கிரத்தையுமே இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது. இதனால் தான் சட்டமன்றத்தில் இந்த அறிக்கையை முதல்வர் (கலைஞர்) படித்துக் காட்டிய போது, அ.தி.மு.க. வினரால்கூட சகித்துக்கொள்ள முடியவில்லை போலும். சட்டமன்றமும், அரசியல் அரங்கமும் நாகரிகமான விவாதம் நடைபெற வேண்டிய இடங்களேயன்றி

ஆத்திரத்தையும் அவதூறையும் வெளிப்படுத்தும் இடங்கள் அல்ல. ஜெயலலிதாவோ, அவரது கட்சியினரோ மக்களின் தீர்ப்பிலிருந்து இன்னமும் பாடம் கற்றுத் திருந்தவில்லை என்பதையே அவர்களது வார்த்தைகளும் செயல்பாடுகளும் நிரூபிக்கின்றன"

- என்று எழுதியிருந்ததையும், தற்போது அதே மார்க்சிஸ்ட்கள் தோழமை உணர்வோடு நடந்து கொள்ள நேரிட்டிருப்பதையும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

நான் இதையெல்லாம் குறிப்பிட்டதால், ஜெயலலிதா உடனே நான் மாமல்லபுரம் அருகே துணை நகரம் அமைப்பதைத்தான் எதிர்த்தேன், தற்போது திருமழிசையில்தானே அறிவித்திருக்கிறேன் என்று சொல்லக்கூடும்! ஆனால் தி.மு. கழக ஆட்சிக் காலத்திலேயே திருமழிசையைச் சுற்றியுள்ள வெள்ளவேடு கிராமத்தில் 33.66 ஏக்கரும், நரசிங்கபுரம் கிராமத்தில 68.31 ஏக்கரும், பல்லவ ராஜபுரம் கிராமத்தில் 141.68 ஏக்கரும், குத்தம் பாக்கம் கிராமத்தில் 112.20 ஏக்கரும், செம்பரம்பாக்கம் கிராமத்தில் 97.63 ஏக்கரும் கையகப் படுத்தி அங்கே ஒரு துணை நகரம் அமைப்பதற்கான முயற்சிகளில் 2006ஆம் ஆண்டு பொறுப்புக்கு வந்ததும் தொடங்கினோம். 1695 ஏக்கர் நிலம் அதற்காக கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டு, 467 ஏக்கர் கையகப்படுத்தப்பட்ட நிலையிலே அந்தப் பகுதி மக்களும், விவசாயிகளும் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தார்கள். எனவே அவர்களின் கோரிக்கைகளை யேற்று, 21-12-2006 அன்று தமிழக அரசின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில், திருவள்ளூர் மாவட்டம் - குத்தம்பாக்கம், வெள்ளவேடு, பார்வதராஜபுரம் உள்ளிட்ட பகுதிகளில் துணை நகரம் அமைக்கும் திட்டத்திற்காக நஞ்செய், புஞ்செய் நிலங்களைக் கையகப்படுத்துவதில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு 2006ஆம் ஆண்டு தி.மு. கழகம்; துணை நகரத் திட்டத்தை அறிவித்தபோது இந்த ஜெயலலிதா அதனை எதிர்க்காமல் இருந்திருந்தால் இந்நேரம் துணை நகரமும் வந்திருக்கும், சென்னையின் இட நெரிசலும் குறைந்திருக்கும். ஆனால் அன்றைக்கு தி.மு.கழக அரசு துணை நகரத்தை அறிவித்தபோது எதிர்ப்பு கூறப்பட்டாலும், தற்போது ஜெயலலிதா அம்மையார் பேரவையில் 110வது விதியில் திருமழிசை துணை நகரத்தை அறிவித்தவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

உட்பட; பா.ம.க. உட்பட; அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் அதனை வரவேற்றிருக்கிறார்கள். இதைத்தான் "மாமியார் உடைத்தால் மண்சட்டி; மருமகள் உடைத்தால் பொன்சட்டி" என்கிறார்களோ?

அன்புள்ள,

மு.க.

13-9-2011

3588. கல்வி; கருகிடும் மொட்டாவுதா?

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. அரசு பதவியேற்ற இந்த நான்கு மாதங்களில் பள்ளிக் கல்வித் துறையைப் பாழடிக்கின்ற செயல் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. வந்ததும் வராததுமாக, சமச்சீர் கல்விச் சட்டத்தை ஏற்க மாட்டோம் என்ற ஒரு முடிவினை தன்னிச்சையாக எடுத்து, பாடப் புத்தகங்கள் எல்லாம் பல கோடி ரூபாய்ச் செலவில் தயாரான நிலையிலே, அவற்றையெல்லாம் விநியோகிக்கக் கூடாது என்று கூறி, சமச்சீர் கல்விச் சட்டத்திற்கு எதிராக திருத்தச் சட்டம் ஒன்றினை தங்களுக்குள்ள பெரும்பான்மை காரணமாக நிறைவேற்றிவிட்டு - புதிய பாடப் புத்தகங்களை அச்சடித்துக் கொடுக்கப் போகிறோம் என்று கூறி, அதற்கான டெண்டர்களை அவசர அவசரமாக அறிவித்து, மாணவர்கள் மூன்று மாத காலம் எதையுமே படிக்காமல் வீணடிக்கின்ற அளவிற்கு நடந்து கொண்டு அதன் மூலமாக மாணவர்களின் கல்வியைப் பாழடித்தனர். மாணவர்களின் மொத்தம் 200 வேலை நாட்களில் 60 வேலை நாட்கள் வீணாகியது.

உச்ச நீதி மன்றம் இந்த ஆண்டே 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டுமென்று தீர்ப்பு வழங்கியதால் - ஆத்திரமடைந்ததோடு, வேறு வழியின்றி வேண்டா வெறுப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளான இந்த அரசு, ஒட்டு மொத்தமாக மாணவர்களின் கல்வியிலேயே அக்கறையற்ற தன்மையோடு நடந்து கொள்கிறது. உச்ச நீதிமன்றம் ஏதோ தவறு செய்து விட்டதைப் போல முதலமைச்சரே பேரவையிலே தெரிவிக்கிறார். சமச்சீர் கல்வி பாடப் புத்தகங்களில் தவறு இருந்தால் அதனை அகற்றி விடலாம் என்று நீதிபதிகள் தெரிவித்ததை வைத்துக் கொண்டு, தவறுகளைத் திருத்தாமல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக தங்களுக்குப் பிடிக்காததையெல்லாம் கிழித்தார்கள், அடித்தார்கள்,

மறைத்தார்கள். ஆனால் உண்மையான தவறுகளைத் திருத்தாமல், பாருங்கள் இதோ தவறு என்று விளம்பரம் செய்தார்கள்.

பாடப் புத்தகங்கள் அச்சிடுவதிலும் விநியோகிப்பதிலும் ஏராளமான குளறுபடிகள் - இன்னும் கூட பல பள்ளிகளுக்கு குறிப்பாக மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு சமச்சீர் கல்விப் பாடப் புத்தகங்கள் விநியோகிக்கப்படாத நிலை உள்ளதாக பெற்றோர்கள் குமுறுகிறார்கள்.

10-9-2011 தேதிய "தினமணி" இதழில் திரு. வி.என். ராகவன் என்பவர் எழுதியுள்ள கட்டுரையில், "சமச்சீர் கல்விப் பாடத் திட்டம் அமல்படுத்தப்பட்டாலும், மாதிரி வினாத்தாள் இன்னும் வெளியிடப்படாததால் மாணவர்கள் மனரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். புத்தகங்கள் இன்னும் அனைத்து மாணவர்களுக்கும் கிடைத்த பாடில்லை. திருச்சி மாவட்டத்தில் ஒவ்வொரு பள்ளியிலும் புத்தகப் பற்றாக்குறை பிரச்சினை வெவ்வேறு மாதிரியாக நிலவுகிறது. குறிப்பாக ஒரு பள்ளியில் தமிழ்ப் புத்தகம் கிடைக்கவில்லை. ஆனால், மற்றொரு பள்ளிக்கு தமிழ்ப் புத்தகம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. ஆங்கிலப் புத்தகம் கிடைக்கப் பெறவில்லை. இதுபோல, வேறு சில பள்ளி மாணவர்களுக்கு கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்ற பாடப் புத்தகங்கள் விநியோகம் செய்யப்படவில்லை. ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு தமிழ்ப் பாடப் புத்தகம் முழுமையாகக் கிடைக்கவில்லை. இதே நிலை தான் மற்ற மாவட்டங்களிலும் நிலவுகிறது. நிகழாண்டில் ஏறத்தாழ இரண்டரை மாதங்கள் கடந்து புத்தகங்கள் விநியோகம் செய்யப்பட்டதால், பாடங்களை முடிப்பதிலும் சிரமம் நிலவுகிறது. எனவே, விடுமுறை நாள்கள் போக 180 நாள்களில் கற்பிக்க வேண்டிய பாடங்களை 90 நாள்களிலேயே முடிக்க வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது" என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய (13-9-2011) "தி டைம்ஸ் ஆப் இந்தியா" ஆங்கில நாளேட்டில்கூட இரண்டாம் மொழிப் பாடத்திற்கான புத்தகங்கள் மாணவர்களுக்கு இன்னும் கிடைத்தபாடில்லை என்று விரிவாகச் செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். சமச்சீர் கல்விப் பாடப்புத்தகங்கள் பல பள்ளிகளில் போதுமான அளவுக்கு வழங்கப்படவில்லை என்றும்; சில பள்ளிகளுக்கு பாடப் புத்தகங்கள் எதுவுமே வழங்கப்படவில்லை என்றும்;

தமிழகத்தில் சிறுபான்மை மாணவர்களுக்காக நடைபெறும் ஆயிரம் பள்ளிகளில், எந்தப் பள்ளிக்கும் மொழிப் பாடத்திற்கான பாடநூல்கள் வழங்கப்படவில்லை என்றும் செய்தி வெளிவந்துள்ளது.

காலாண்டுத் தேர்வுக்கு வினாத்தாளை எப்படி தயார் செய்வது என்பதில் குழப்பம் நிலவுகிறதாம். பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு வழக்கமான தேதியில் நடத்தப்படுமா? அல்லது தள்ளி வைக்கப்படுமா என்பதிலும் குழப்பம் நீடிக்கிறதாம். இந்தத் தேதி தெரிந்தால்தான் மாணவர்களுக்கான கற்பித்தலை திட்டமிட முடியுமாம்.

பாடங்களையே இப்போதுதான் நடத்தத் தொடங்குகிறார்கள். தரம் உயர்த்தப்பட்ட சமச்சீர் கல்வித் திட்டப் பாடங்களை நடத்துவதற்குரிய பணியிடைப் பயிற்சி ஆசிரியர்களுக்கு அளிக்கப் படவில்லை. அதனால் கற்பிப்புப் பணி பெயரளவிலேதான் தற்போது நடைபெற்று வருகின்றது. ஆனால் அதற்குள் காலாண்டுத் தேர்வு செப்டம்பர் 22 முதல் நடைபெறும் என்று அரசு அறிவிக்கின்றது.

"பேராசிரியர் முத்துக்குமரன் குழு செய்த அனைத்துப் பரிந்துரைகளையும் நாங்கள் நடைமுறைப்படுத்தப் போகிறோம்" என்று அ.தி.மு.க. அரசு அறிவித்தது. ஆனால் முத்துக்குமரன் குழு அளித்த முதல் வரிசை பரிந்துரைகளில் முக்கியமான பரிந்துரையான, முப்பது மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி இதுவரை இந்த அரசு கண்டு கொள்ளவே இல்லை. அந்தப் பரிந்துரையை நிறைவேற்ற வேண்டுமானால், இந்த ஆண்டிலேயே தமிழ்நாட்டில் 60 ஆயிரம் ஆசிரியர்களைப் புதிதாக நியமிக்க வேண்டும். அரசு 33 ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்கப் போவதாக ஓர் அறிவிப்பில் சொல்லியிருந்தாலும், அது நடைமுறைக்கு வந்தால்தான் நிச்சயம். மேலும் அரசின் சார்பில், முத்துக்குமரன் குழுவின் பரிந்துரைக்கு மாறாக 35 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்று கணக்கிட்டு - 16 ஆயிரத்து 549 ஆசிரியர்கள் மட்டுமே கூடுதலாகத் தேவை என்று சொல்கிறார்கள்.

முழு தகுதி வாய்ந்த ஆசிரியர்களை முழு நேர ஆசிரியர்களாக நியமிக்காமல், அவர்களை அரைநாள் பகுதி நேர ஆசிரியர்களாக

அதுவும் மிகக் குறைந்த ஊதியமாகிய 5000 ரூபாய் தொகுப்பூதியத்தில் நியமிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2001ஆம் ஆண்டு முதல் 2006 வரை ஆட்சியிலே இருந்த அ.தி.மு.க. அரசு பணி நியமனத் தடைச் சட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தபோது பட்டதாரிகள் எல்லாம் பாதிக்கப்பட்டனர். அப்போது ஏறத்தாழ 46 ஆயிரம் ஆசிரியர்களை மாதம் 3000 - 4000 ரூபாய் என்ற தொகுப்பூதியத்தில் - இட மாறுதல் கூட கேட்க மாட்டோம் என்று அவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு நியமனம் செய்தார்கள்.

ஆனால் 2006இல் பொறுப்பேற்ற தி.மு. கழக அரசு அந்த 46 ஆயிரம் ஆசிரியர்களுக்கும் 1-6-2006 முதல் காலமுறை ஊதியம் வழங்கி ஒவ்வொரு ஆசிரியரும்தாம் பெற்று வந்த ஊதியத்தை விட மூன்று மடங்கு அதிகம் பெற்று மகிழ ஆணையிட்டு நடைமுறைப்படுத்தியது. மேலும் கழக ஆட்சியில் 2006க்குப் பின் தொடக்கக் கல்வித் துறையில் 12 ஆயிரத்து 426 இடைநிலை ஆசிரியர்கள், 14 ஆயிரத்து 115 பட்டதாரி ஆசிரியர்கள் என 26 ஆயிரத்து 541 ஆசிரியர்களும்; பள்ளிக் கல்வித் துறையில் 70 இடைநிலை ஆசிரியர்கள், 17 ஆயிரத்து 45 பட்டதாரி ஆசிரியர்கள், 4 ஆயிரத்து 665 ஆசிரியர் பயிற்றுநர்கள், 3002 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், 525 தமிழாசிரியர்கள், 1131 சிறப்பாசிரியர்கள், 140 தொழில் ஆசிரியர்கள், 1666 கணினி ஆசிரியர்கள் என 27 ஆயிரத்து 739 ஆசிரியர்களும்;

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் 216 விரிவுரையாளர்களும், 32 முதுநிலை விரிவுரையாளர்களும் என மொத்தம் 55 ஆயிரத்து 53 ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப் பட்டனர். 2006ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் ஆசிரியர் கல்வித் தகுதி பெற்ற 1114 மாற்றுத் திறனாளிகள் முன்னுரிமை அடிப்படையில் ஆசிரியர் களாக அரசுப் பள்ளிகளில் நியமனம் செய்யப்பட்டனர்.

பணி நியமனங்களைப் பொறுத்தவரை 1991-1996 வரை ஜெயலலிதா முதல் அமைச்சராக இருந்தபோது ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு நடத்தி, தர வரிசைப்படி பணி நியமனம் வழங்கப்பட்டது. இடைநிலை ஆசிரியர்களும் அப்படியே தேர்வு செய்யப்பட்டனர். அதனால் பதிவு செய்து காத்திருந்த பட்டதாரிகள்

பெரும்பாலும் பாதிக்கப்பட்டனர். வேலை கிடைக்காமல், வயது முதிர்ந்து வேறு வேலையைப் பார்க்கத் தொடங்கினர்.

1996க்குப் பின் தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்ததும் பதிவு மூப்பு அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது.

2001இல் மீண்டும் ஜெயலலிதா பொறுப்புக்கு வந்ததும் பணி நியமனத் தடைச் சட்டம் கொண்டு வந்தார். அப்போதும் பட்டதாரிகள் எல்லாம் பாதிக்கப்பட்டனர்.

2006இல் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும், கடந்த ஐந்தாண்டுகளில் 55 ஆயிரம் ஆசிரியர்கள் பதிவு மூப்பு முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

தற்போது 14377 பேர் ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என்று பேரவையில் ஜெயலலிதா அறிவித்தார். பிறகு 110வது விதியின் கீழ் 13300 பட்டதாரி ஆசிரியர்களும், 16549 பகுதி நேர ஆசிரியர்களும் நியமிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இந்த ஆசிரியர் நியமனங்கள் பதவி மூப்பு அடிப்படையிலா அல்லது தேர்வு மற்றும் நேர்காணல் மூலமா என்று முதல்வரோ, பள்ளிக் கல்வித் துறை அமைச்சரோ இதுவரை அறிவிக்கவில்லை. அதற்கு நேரம் செலவழிக்க விரும்பாமல், அ.தி.மு.க. அமைச்சர்கள் எல்லாம் முன்னாள் அமைச்சர்கள் யார் யார் என்ன செய்தார்கள், பேரவையில் அவர்கள் மீது என்ன என்ன புகார்களைக் கூறி ஜெயலலிதாவை மகிழ்ச்சியில் ஆழ்த்தலாம் என்பதிலேயே ஆர்வம் காட்டுகிறார்களாம்!

ஆசிரியர்கள் ஆண்டுதோறும் மாறுதல் செய்யப்படுவதில் இந்த ஆண்டு பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. கழக ஆட்சியில் "கவுன்சலிங்" நடத்தி ஆசிரியர்கள் மகிழ்ச்சியடையத்தக்க விதத்தில், ஒளிவு மறைவின்றி வெளிப்படையான முறையில் மாறுதல்கள் நடந்தன. ஆனால் வேண்டியவர்களுக்கு மட்டும் மாறுதல் போட்டு முடித்து விட்டு; இப்போது "கவுன்சலிங்" நடத்தப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். பள்ளிகள் தொடங்கி, மூன்று மாதங்களுக்குப் பிறகு "கவுன்சலிங்" மூலம் மாறுதல் என்றால்; யாராவது அதில் விருப்பம் காட்டுவார்களா? மூன்று, நான்கு மாதங்களுக்குப் பிறகு மாறுதல் பெற்று, புதிய இடத்திற்குக் குடும்பத்தோடு செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள முடியுமா?

ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண்டுமேயானால், அ.தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு என்ன நடக்கிறதோ இல்லையோ, தமிழக மாணவச் செல்வங்களின் கல்வியைப் பாழடிக்கின்ற காரியம் கச்சிதமாகவே நடைபெறுகிறது. யார் படித்தால் என்ன, படிக்காமல் எக்கேடு கெட்டுப் போனால் என்ன என்ற எண்ணத்தோடு ஆட்சியாளர்கள் செயல்படுகிறார்கள். "எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் நிறை; எல்லோரும் இந்நாட்டு மன்னர்!" என்ற இலட்சியத்திலும்; சமம் - சமத்துவம் என்ற நெறிகளிலும்; கிஞ்சிற்றும் நம்பிக்கையற்ற ஜெயலலிதா அரசு; சமச்சீர் கல்வியை ஏனோதானோ என்ற முறையில் நடைமுறைப்படுத்திவருகிறது - சமச்சீர் கல்விக்கான பாடப் புத்தகங்கள் விநியோகம் இன்னும் சரியாக முழுமை பெறவில்லை - ஆசிரியர் பணியிடங்கள் ஏராளமாகக் காலியாக உள்ளன - ஆசிரியர்கள் நியமனத்திற்கான கொள்கை இன்னும் முடிவு செய்து அறிவிக்கப்படவில்லை - ஆசிரியர் மாறுதல்களில் பின்பற்ற வேண்டிய முறை எது என்பதில் குழப்பமே நீடித்து வருகிறது. குறைமனதான ஆட்சியாளர்களால் உருவாக்கப்படும் இத்தகைய குழப்பங்களாலும், குளறுபடிகளாலும் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயித்திடப் போகும் இன்றைய இள மொட்டுகளின் பள்ளிக் கல்வி; கண்டுகொள்ள வேண்டியவர்களின் பாரா முகத்தால் கருகிக் கொண்டுதானிருக்கிறது!

அன்புள்ள,

மு.க.

14-9-2011

3589. எத்தனை காலமோ; இந்த ஏட்டிக்குப் போட்டி?

உடன்பிறப்பே,

2006ஆம் ஆண்டு தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் சில இலவசத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டபோது, அதனைக் கடுமையாக எதிர்த்தவர் ஜெயலலிதா. மக்களை மேலும் ஏழைகளாக்கும் நடவடிக்கைதான் இலவசத் திட்டங்கள் என்று கூறினார். ஆனால் 2011ஆம் ஆண்டு அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை எப்படி இருந்தது என்றால், "ஒண்ணு வாங்கினா ஒண்ணு இலவசம்" என்று கூவினால் எப்படி இருக்குமோ, அதைப் போலத்தான் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை இருந்தது என்று 25-3-2011 அன்று "தினமணி" எழுதிய தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தது. அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலே அறிவித்ததையொட்டியும் - தி.மு. கழக அரசின் திட்டங்களை சற்று விரிவாக்கி செயல்படுத்துவதையொட்டியும் - கழக ஆட்சியில் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாய் வீதம் மாதந்தோறும் 20 கிலோ அரிசி வழங்கப்படும் என்பதை விரிவாக்கி, மாதம் அந்த 20 ரூபாயையும் தர வேண்டியதில்லை, அதையும் நாங்கள் இலவசமாகத் தருகிறோம் என்று கூறி, அதை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள். எனவே கழக அரசின் திட்டத்தை சற்று விரிவுப்படுத்திய திட்டம்தான் அத்திட்டம்.

ஏழையெளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு திருமண உதவித் திட்டம் தி.மு. கழக ஆட்சியில் கொண்டு வரப்பட்ட திட்டம். கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் 922 கோடி ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்ட திட்டம் இது. கர்ப்பிணிப் பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறு மாதங்களுக்கு 6000 ரூபாய் வழங்கும் திட்டமும் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டம். அந்தத் திட்டங்களைச் சற்று விரிவாக்கி, அதாவது உதவித் தொகையை அதிகப்படுத்தி

அ.தி.மு.க. அரசு அந்தத் திட்டங்களைத் தொடருவதாக அறிவித்திருக்கின்றது.

ஏழையெளியவர்களுக்கு இலவசமாக வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் தி.மு. கழக ஆட்சியில் தொடங்கப்பட்டு, 98 சதவிகிதம் பேருக்கு வழங்கப்பட்டு சுமார் பத்து இலட்சம் பேருக்கு மட்டுமே எஞ்சியிருந்த நிலையில், அவர்களுக்கும் அவைகளை வழங்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட நிலையில், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அ.தி.மு.க. அரசு அந்தத் திட்டத்தைத் தொடரப் போவதில்லை என்று அறிவித்ததோடு, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்காகக் காத்திருந்த அந்த பத்து இலட்சம் பேருக்கும் வழங்குவதில்லை என்று அவர்களெல்லாம் ஏமாற்றம் அடைந்திடும் வகையில் முடிவெடுத்துள்ளது. இது கழக அரசின் திட்டத்திற்கு மூடுவிழா நடத்தியதற்கான உதாரணமாகும். அதைப் போன்றதொரு மற்றொரு திட்டம்தான் இலவச சமையல் எரிவாயு திட்டம். அந்தத் திட்டத்தையும் அ.தி.மு.க. அரசு தொடர வில்லை.

தி.மு. கழக ஆட்சியின் வழியில் இலவசத் திட்டங்களை வழங்க முன்வந்த ஜெயலலிதா அரசு மிக்சி, கிரைண்டர், மின் விசிறி, லேப்டாப், ஆடு மாடுகள் என்று தாங்களும் இலவசமாக வழங்க முன்வந்துள்ளார்கள். எந்த அளவிற்கு அவற்றையெல்லாம் வழங்குகிறார்கள் என்பதை தமிழ்நாட்டு மக்கள் போகப் போகப் பார்த்துப் புரிந்து கொள்ளவிருக்கிறார்கள்.

சுமார் 2 லட்சத்து 62 ஆயிரம் ஏழைகள் பயன் பெற்ற உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான திட்டம், கழக அரசினால் தொடங்கப்பட்டு கிராம மக்கள் எல்லாம் மிகப் பெரிய தனியார் மருத்துவமனைகளில் அளிக்கப்படும் சிகிச்சை களைப் பெற்று உயிர் பிழைத்தார்கள். அந்தத் திட்டத்திற்கு என் பெயரை நான் எவ்வளவோ மறுத்தும் கேளாமல் அந்தத் துறையின் அமைச்சர் கழக ஆட்சியில் வைத்துவிட்டார். ஜெயலலிதாவிற்கு பொறுக்குமா மனம்? அந்தத் திட்டத்திற்கு மூடு விழா நடத்திவிட்டு, வேறு பெயரில் அத்திட்டம் தொடரும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன பெயர் இருந்தால் என்ன? தி.மு. கழக அரசின் அந்த நல்ல திட்டம் தொடர்ந்தால் போதும்!

அதுபோலவே கழக அரசின் மற்றொரு திட்டம், 108 ஆம்புலன்ஸ் திட்டம்! நான் வெளியூர் சென்றால் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒருவர் அல்லது இருவர் என்னைச் சந்தித்து, அந்தத் திட்டத்தின் காரணமாகத்தான் தாங்கள் உயிரோடு இருக்கிறோம், நீங்கள் நன்றாக இருக்க வேண்டுமென்று வாழ்த்துகிறார்கள். அந்தத் திட்டமும் இந்த ஆட்சியில் வேகமோ விறுவிறுப்போ இல்லாமல் வேண்டா வெறுப்பாக நடத்தப்படுகிறது.

அ.தி.மு.க. அரசு மூடுவிழா நடத்த முதலிலே முயற்சி எடுத்த திட்டம் சமச்சீர் கல்வித் திட்டம். அந்தத் திட்டத்தை எப்படியாவது ஒழிக்க ஜெயலலிதா எவ்வளவோ பாடுபட்டும் குறிப்பாக சட்டப் பேரவையில் அவசர அவசரமாக திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து தங்களுக்குள்ள பெரும்பான்மை காரணமாக நிறைவேற்றியும் கூட, நீதி மன்றங்களின் நெறி தவறாத தீர்ப்பின் காரணமாக அந்தத் திட்டம் தொடருகிறது. ஆனால் இந்த ஆட்சியாளர்களுக்கு அதிலே ஏற்பட்ட எரிச்சல் - கோபம் காரணமாக மாணவர்களின் எதிர்காலக் கல்வியிலே அக்கறையற்ற நிலைதான் நிலவுகிறது.

சமச்சீர் கல்வி பாடப் புத்தகங்களில் திருத்தம் செய்கிறோம் என்ற பெயரால் அ.தி.மு.க. ஆட்சியினர் செய்த மாறுதல்கள் எல்லாம் கழகத்தின் மீது கொண்ட காழ்ப்பினை உணர்த்துவதாகவே இருந்தன.

அடுத்து, அ.தி.மு.க. ஆட்சியினரின் கடுமை யான கோபத்திற்கு ஆளான மற் றொன்று, தி.மு. கழக ஆட்சியில் எழுப்பப்பட்ட தலைமைச் செயலகக் கட்டிடம், புதிய சட்டப் பேரவை வளாகம். ஜெயலலிதா அம்மையார் ஒருவருக்கு ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக தலைமைச் செயலகத்திலே உள்ள பணியாளர்கள், அதிகாரிகள் எல்லாம் இடப்பற்றாக்குறை காரணமாக இன்று அவதிக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் உட்பட, இந்த அம்மையார் ஒருவரின் பிடிவாதத்திற்காக சிறப்பாகக் கட்டப்பட்டு எழிலுற நிமிர்ந்து நிற்கின்ற கட்டிடத்தில் தங்கள் பணியினைத் தொடர முடியாமல், ஏற்கனவே உள்ள பழைய கட்டிடத்தில் இடப் பற்றாக்குறையில் அலுவலர்கள் பணியாற்ற வேண்டியுள்ளதே என்று தங்களுக்குள்ளாகவே மனம் நொந்து பேசிக் கொள்கிறார்கள்.

ஏன் அமைச்சர்களே, எதுவும் சொல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்தியா வின் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால், ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் வழி காட்டும் தலைவி சோனியா காந்தி முன்னிலையில் திறக்கப்பட்ட அந்தக் கட்டிடத்தையே அம்மையார் ஜெயலலிதா அவமானப்படுத்தியிருக்கிறார்.

ஒவ்வொருவருக்கும் தேவையான வசதி வாய்ப்புகளை மனதிலே கொண்டு உருவாக்கப்பட்ட அந்த மாளிகை, ஜெயலலிதா அம்மையாரின் பிடிவாதம் காரணமாக எந்தவிதமானப் பயன்பாட்டுக்கும் வாய்ப்பின்றி மிகப்பிரமாண்டமாக நின்று கொண்டுள்ளது. இதுபோன்ற கட்டிடங்கள் பயன்படுத்தப்படாமல் சில ஆண்டுகளுக்கு அப்படியே விடப்பட்டால் என்ன ஆகும்? தான் செய்துள்ள காரியம் பற்றி பலரும் குறை சொல்கிறார்களே என்பதால், அதற்கு ஏதோ ஒரு காரணம் சொல்லி விசாரணைக் கமிஷன் ஒன்றை தனக்கு வேண்டிய நீதிபதி ஒருவரைக் கொண்டு அமைத்திருக்கிறார். விசாரணைக் கமிஷனை அமைத்து விட்டால், அதன் அறிக்கை வரும் வரை எதுவும் செய்ய முடியாது என்று பரமக்குடி துப்பாக்கிச் சூட்டிற்கு பேரவையில் விளக்கம் சொன்ன ஜெயலலிதா, தலைமைச் செயலகம் குறித்து விசாரணைக் கமிஷனை அறிவித்து விட்டு, அவரே அந்தக் கட்டிடத்தில் உயர் சிகிச்சைக்கான மருத்துவமனையை நிறுவப் போவதாக அறிவித்திருக்கிறாரே, அதற்கு மட்டும் விசாரணைக் கமிஷன் பரிந்துரைக்காக ஏன் காத்திருக்கவில்லை? தலைமைச் செயலகம், சட்டப்பேரவை வளாகம், மேலவை, நூலகம் போன்றவைகளுக்காக எழுப்பப்பட்ட கட்டிடத்தில், உயர் நிலை மருத்துவமனையை நிர்மாணிக்க முடியுமா? மருத்துவமனை அமைக்க வேண்டுமென்றால், அந்தக் கட்டிடம் கட்ட ஆரம்பிக்கும் போதே, அதற்கான வசதிகள் எல்லாம் செய்திருக்க வேண்டாமா? ஒரு தவறைச் செய்துவிட்டு, அதை மறைக்க ஒன்பது தவறுகள் செய்வதா?

கழக அரசு காலத்தில் உருவாக்கப்பட்ட தலைமைச் செயலகத்திற்குப் போகக்கூடாது என்ற அம்மையாரின் பிடிவாதம் காரணமாக பாதிக்கப்பட்ட மற்றொன்று - செம்மொழி மைய அலுவலகம், பாவேந்தர் செம்மொழி தமிழாய்வு நூலகம் ஆகியவைகளாகும். அமைச்சரவையைக் கூட்டிக்கூட

முடிவெடுக்காமல், தன்னிச்சையாக பாவேந்தர் செம்மொழி ஆய்வு நூலகம் இயங்கி வந்த இடத்திலே சட்டப்பேரவையை நடத்திட ஜெயலலிதா இரவோடு இரவாக எடுத்த முடிவு காரணமாக, அங்கே வைக்கப்பட்டிருந்த அரிய ஆய்வு நூல்களும், பழைய சுவடிக் கருவூலங்களும் எடுத்தெறியப்பட்டன. இன்றளவும் அந்த பாவேந்தர் செம்மொழி ஆய்வு நூலகத்தின் கதி அ.தி.மு.க. ஆட்சியிலே என்ன ஆயிற்று என்றே தெரியாத நிலை!

அதுபோலவே கழக அரசு மத்திய அரசின் உதவியோடு சென்னை மாநகரில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு "மெட்ரோ ரெயில் திட்டம்" அறிவித்து பல இடங்களில் அதற்கான பணிகள் நடை பெற்று வருகின்ற நிலையில், ஜெயலலிதா "மோனோ ரெயில் திட்டம்" தான் சிறந்தது, அதனைத்தான் தொடரப் போகிறேன் என்று அறிவித்திருக்கிறார். இதுவும் ஏட்டிக்குப் போட்டியான திட்டம்தானே!

ஜெயலலிதா மூடு விழா நடத்திய கழக அரசின் மற்றொரு சிறந்த திட்டம் - கலைஞர் வீடு வழங்கும் திட்டம். குடிசைகளே இல்லாத தமிழகத்தை உருவாக்கிடும் மிகப் பெரிய நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட திட்டம் - குடிசை வாழ் மக்களால் குதூகலத்துடன் கொண்டாடப்பட்ட திட்டம் - அதற்கு அம்மையார் மூடு விழா நடத்திவிட்டார்கள். அதனால் பாதிக்கப்படப் போகின்ற 21 லட்சம் தமிழக குடிசைவாசிகளின் வயிற்றெரிச்சலும் கண்ணீரும் அ.தி.மு.க. ஆட்சியினரை சும்மா விடாது என்பது மட்டும் நிச்சயம்!

அ.தி.மு.க. அரசு மூடு விழா நடத்திய மற்றொரு திட்டம் - சட்டமன்ற மேலவை. பேரறிஞர் அண்ணா, மூதறிஞர் ராஜாஜி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., சிலம்புச் செல்வர், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, ஆர். வெங்கட்ராமன், டாக்டர் பி.வி. செரியன், குன்றக்குடி அடிகளார், டாக்டர் லெட்சுமணசாமி முதலியார் போன்றவர்கள் எல்லாம் இடம்பெற்ற மேலவையை மீண்டும் கொண்டுவர தி.மு. கழக அரசு எவ்வளவோ முயற்சிகளை மேற்கொண்டு, நாடாளுமன்றத்தினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மேலவைக்கு மூடு விழா நடத்திய பெருமை ஜெயலலிதாவையே சேரும்.

அதுபோலவே ராஜராஜனின் ஆயிரமாவது ஆண்டு விழா தஞ்சையில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டபோது, செம்மை நெல் சாகுபடி முறைக்கு "ராஜராஜன் 1000" என்று என்னால் பெயரிடப்பட்டது. அந்தப் பெயரைச் சூட்டியவன் நானல்லவா? அதனால் அந்தப் பெயரும் மாற்றப்பட்டுவிட்டது.

தி.மு. கழக ஆட்சியில் அனைத்து மாவட்டங்களிலும் அரசு பொறியியல் கல்லூரிகள் அமைக்கும் நோக்கத்துடன், 12 புதிய பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டதன் காரணமாக - தமிழகத்திலே உள்ள அரசு பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகமாகி, சென்னை யிலே உள்ள அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பணி பெருகிவிட்ட காரணத்தினாலும் - பொறியியல் தொழில் நுட்பவியல் ஆகியவற்றின் ஆய்வுப் பணிகள் பரவலாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும் - திருச்சி, கோவை, திருநெல்வேலி, மதுரை, சென்னை என்று ஐந்து இடங்களில் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்கள் புதிதாக தொடங்கப்பட்டன. ஆனால் தி.மு. கழக அரசு செய்த அனைத்து பணிகளையும் மாற்ற வேண்டு மென்ற தீய எண்ணத்தோடு சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தை பழைய நிலைக்கே கொண்டு வரும் மசோதாவைக் கொண்டுவந்து பேரவையிலே நிறைவேற்றியிருக்கிறது. இது மாணவர்களின் எதிர்காலத்தையும், உயர் கல்வியின் தரத்தையும், ஆராய்ச்சியின் அவசியத்தையும் நாசமாக்கி அழித்திடும் அ.தி.மு.க. அரசின் முயற்சியாகும்.

திருமழிசையில் துணை நகரம் ஒன்றினை அமைக்கப் போவதாக பேரவையில் ஜெயலலிதா வழக்கம் போல 110வது விதியின் கீழ் அறிவித்தார். அந்தத் திட்டம் பற்றியும், ஏற்கனவே கழக ஆட்சியில் துணை நகரம் அமைக்கப்படுவதற்கான முயற்சி தொடங்கப்பட்டது பற்றியும், அப்போது அதற்கெதிராக ஜெயலலிதா விடுத்த அநாகரிக அறிக்கை பற்றியும் நான் விவரமாக எழுதியிருக்கிறேன். அதைப் பார்த்ததும், அந்தத் துறையின் அதிகாரிகளை அழைத்து நான் எழுதியிருப்பதெல்லாம் உண்மைதானா என்று கேட்டறிந்த பிறகு எதுவும் பதில் கூறாமலேயே விட்டுவிட்டார்கள்.

தமிழக அரசின் சார்பாக ஐந்து வகையான திருமண உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மூவலூர்

ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம், ஏழை விதவைகளின் பெண் குழந்தைகளுக்கான ஈ.வெ. ரா.மணியம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், அனாதை பெண்களுக்கான அன்னை தெரசா நினைவு திருமண உதவித் திட்டம், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டம் ஆகிய திட்டங்கள்தான் அவை. இந்த ஐந்து திட்டங்களில் என்னுடைய அன்னையார் பெயரிலே உள்ள "அஞ்சுகம் அம்மையார் கலப்புத் திருமண உதவித் திட்டம்" என்பதை மட்டும் ஜெயலலிதா அவசர அவசரமாக மாற்றி, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத்துடன் இணைத்து விட்டார்.

கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட "தொல்காப்பியர் பேரவை" போன்ற தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காக 100 கோடி ரூபாய் கழக ஆட்சியில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணையும் பிறப்பிக்கப்பட்டுவிட்டது. ஆனால் அந்தத் திட்டத்தை ஏற்காமல், அதற்கு வேறு பெயரிடுவதற்கான முயற்சியில் இந்த ஆட்சியினர் ஈடுபட்டுள்ளார்கள்.

ஜெயலலிதா அரசு பொறுப்புக்கு வந்த பிறகு எடுத்த மற்றொரு முடிவு - தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தினத்தை மீண்டும் சித்திரை மாதம் முதல் தேதிக்கு மாற்றிட பேரவையில் மசோதா ஒன்றினை தாக்கல் செய்து, குரல் வாக்கின் மூலமாக நிறைவேற்றியிருக்கிறார்.

சேலத்தில் 100 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருந்த சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைக்கு மூடு விழா நடத்தி யிருக்கிறார்.

உடன்பிறப்பே, கடந்த நான்கு மாத கால அ.தி.மு.க. ஆட்சியில் இப்படித்தான் காரியங்கள் நடைபெற்று வருகின்றனவே தவிர, தாங்களாக சிந்தித்து செயலாற்ற வேண்டுமென்ற சிந்தனை ஆட்சியாளருக்கு இல்லை. காரணம், அவர்கள் சிந்திப்பதெல்லாம் கழக முன்னோடிகளையெல்லாம் பொய் வழக்கிலே எப்படி சிக்கவைப்பது, ஆதாரம் இருக்கிறதோ இல்லையோ அவர்களையெல்லாம் கைது செய்து சிறையிலே

அடைக்க வேண்டுமென்ற கொடூரமான எண்ணம்தான். எப்படியெல்லாம் பொய் வழக்குகளைப் போடுகிறார்கள், ஒரு வழக்கிலே நீதிமன்றம் ஜாமீன் வழங்கினால், வேறு ஏதாவது ஒரு வழக்கினை அவர்கள் மீது தொடுத்து தொடர்ந்து சிறையிலே வைப்பதற்கான முயற்சியிலே காவல் துறையினரின் துணையோடு செயல்படுகிறார்கள். வினையை இன்றைக்கு விதைப்பவர்கள் ஒரு நாள் வினையை அறுவடை செய்தே ஆக வேண்டும் என்பது மட்டும் உண்மை. காவல்துறையினருக்கும் சேர்த்துத்தான் இதைச் சொல்லுகிறேன்!

அன்புள்ள,

மு.க.

19-9-2011

3590. விரைந்தெழுவீர்; வெற்றிக்கனி பறித்திட!

உடன்பிறப்பே,

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக்கான நாட்கள் அறிவிக்கப்பட்டுவிட்டன! அக்டோபர் திங்கள் 17 மற்றும் 19ஆம் தேதிகளில் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. நமது கழகத்தின் வேட்பாளர்களுக்கான முதல் பட்டியல் அறிவிக்கப்பட்டு விட்டது. பொதுவாக அரசின் சார்பில் தேர்தல் நாளுக்கான அறிவிக்கை வெளிவந்து, அதற்கு ஒரு சில நாட்களுக்குப் பிறகுதான் வேட்பு மனு தாக்கலுக்கான நாள் தொடங்கும். ஆனால் இந்த முறை தேர்தல் அறிவிக்கை வெளிவந்த அடுத்த நாளே வேட்பு மனு தாக்கல் செய்வது தொடங்கி விட்டது. அது மாத்திரமல்ல; நான் ஏற்கனவே தெரிவித்தவாறு, இந்தத் தேர்தலில் எந்தெந்த தொகுதிகள் பொதுத் தொகுதிகள், எந்தெந்த தொகுதிகள் பெண்களுக்கான தொகுதிகள், எந்தெந்த தொகுதிகள் தனித் தொகுதிகள் என்ற அடிப்படை விவரங்கள் எதுவும் எதிர்க்கட்சிகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை. "சீப்பை ஒளித்து வைத்து விட்டால் திருமணம் நின்று விடுமாம்"! ஆளுங்கட்சியின் எதிர்பார்ப்பு இது! ஆனால் தவறிப் போய், தங்கள் கட்சியின் சார்பாக வேட்பாளர்களின் பட்டியலை, சாமர்த்தியம் என்று நினைத்துக் கொண்டு எப்போதும் அவர் காட்டுகின்ற அவசரம் காரணமாக ஜெயலலிதா வெளியிட்டு விட்டார். பொதுவாக நடைபெற வேண்டிய தேர்தலில், இவ்வாறு ஒரு கட்சிக்கு மட்டும் முன்கூட்டியே தகவலைத் தருவது ஜனநாயகமா? இதற்காகவே இந்த ஆட்சியினர் மீது ஒரு வழக்கு தொடரலாம்! ஆட்சியினர் இவ்வாறு தொகுதிகளை மறைத்து வைத்த காரணத்தால், இதுவரை பொதுத் தொகுதியாக இருந்து, பலரும் அங்கே போட்டியிட எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில், திடீரென்று அந்தத் தொகுதியை தனித் தொகுதி என்று அறிவித்த காரணத்தால் - அங்கே போட்டியிடுவதற்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதில்

அரசியல் கட்சிகளுக்கெல்லாம் நெருக்கடி. அது போலவே திடீரென்று பெண்கள் தொகுதியாக மாற்றப்பட்ட இடங்களில், இரண்டொரு நாட்களில் பெண் வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டிய அவசரமும் ஏற்பட்டது. ஆனால் ஆளுங்கட்சிக்கு முன்கூட்டியே எந்தெந்த தொகுதிகள் யார் யாருக்கு என்று தெரிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தால், ஓட்டப் பந்தயத்தில் ஓடுவதற்குத் தயாராகும்போது பந்தய நெறிமுறைகளை மீறி ஒரு சிலரை மட்டும் மற்றவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு முன்னால் கொண்டு போய் நிறுத்துவதைப் போல நிறுத்தி விட்டிருக்கிறார்கள்.

இதைப்பற்றி நான் கேள்வி எழுப்பிய பிறகு, அதற்குப் பதிலளிக்க வேண்டிய அரசின் சார்பில் எந்தவிதமான பதிலும் சொல்ல இயலாத நிலையில், செய்தியாளர்களை மாநில தேர்தல் ஆணையர் சந்தித்த போது, இதுபற்றிய கேள்வியை செய்தியாளர்கள் எழுப்பிய நேரத்தில், எந்தெந்த தொகுதிகள் யார் யாருக்கு என்று தேர்வு செய்து அறிவிக்க வேண்டியது என் பணி இல்லை என்று மட்டுமே சொல்லியிருக்கிறாரே தவிர; என்ன காரணத்தினால் இதுவரை எவையெவை யார் யாருக்கான தொகுதிகள் என்று அறிவிக்கப்பட வில்லை என்பது பற்றி அவர் வாயே திறக்கவில்லை. ஏனென்றால் அவ்வாறு செய்தது அரசின் தவறு என்று அவருடைய மனச்சாட்சியே சொல்லி யிருக்கிறது. எனவே அந்தப் பணி தன்னுடையது அல்ல என்று மட்டுமே மறுத்திருக்கிறார். எப்படியோ ஓரளவிற்கு நாமாகவே நமது முயற்சியில் தொகுதிகளைத் தெரிந்து கொண்டு வேட்பாளர்களை அறிவித்து விட்டோம்.

மாநிலத் தேர்தல் ஆணையர் செய்தியாளர்களிடம் கூறும்போது வேட்பு மனு வாங்குகின்ற இடத்திலே அது யாருக்கான தொகுதி என்று ஒட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். ஒவ்வொரு வேட்பாளரும் தாங்கள் வேட்பு மனு வாங்க வேண்டிய இடத்திற்குச் சென்று, அங்கே நோட்டீஸ் ஒட்டப்பட்டுள்ளதைப் பார்த்து தெரிந்துகொண்டு அதற்குப் பிறகு வேட்பு மனுக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாம்! வேட்பு மனு தாக்கல் செய்வதற்கான தேதி 22-9-2011 முதல் தொடக்கம் என்ற போதிலும், அந்தத் தேதியில் சென்று வேட்பு மனுக்களைக் கேட்டபோது, அந்த மனுக்கள் தேர்தல் ஆணையத்திலிருந்து

இதுவரை வந்து சேரவில்லை என்ற பதில்களே பல இடங்களில் கிடைத்துள்ளன. ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செய்திகளை வெளியிடும் "தினத்தந்தி" நாளிதழிலேயே முதல் பக்கத்தில்,

> "தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட மறு நாளே மனு தாக்கல் தொடங்கியதால், அதற்கான முன் ஏற்பாட்டில் யாரும் இல்லை, மேலும் வேட்பு மனு தாக்கல் செய்யும் இடங்களும் நேற்று மாலைதான் அறிவிக்கப்பட்டதால், எங்கு சென்று வேட்பு மனு தாக்கல் செய்வது என்று தெரியாமல் பலர் தவித்தனர்"

என்று வெளியிட்டுள்ளது. இதற்கு முன்பு நடைபெற்ற எந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல் களிலும் இப்படி நடைபெறவில்லை. அரசின் இந்தச் செயல்களால், பல தொகுதிகள் மாற்றப்பட்டுவிட்ட நிலையில் புதிய வேட்பாளர்களைத் தேர்வு செய்து அறிவித் திருக்கிறோம். எனவே பல பேருக்கு தாங்கள் வேட்பாளராக நிற்க முடியவில்லையே என்று வருத்தம் ஏற்பட்டிருக்கலாம். பல பேர் திடீரென்று வேட்பாளராக நிற்க வேண்டிய நிலை உண்டாகி யிருக்கலாம். அதையெல்லாம் எண்ணிக் கொண்டிருக்காமல், தேர்தலுக்குப் பிரச்சாரம் செய்ய, வாக்குகளைக் கேட்க, வீடு வீடாகச் சென்று மக்களிடம் முறையிட நேரம் இல்லாமல் இருக்கலாம், எனவே கழக உடன்பிறப்புகள் உடனடியாக தங்கள் பணிகளைத் தொடங்கிட வேண்டும். இது உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல் என்பதால் தேர்தல் பிரச்சாரத்திற்காக பெரிய கூட்டம் என்றெல்லாம் நேரத்தைச் செலவழிக்காமல், வீட்டிற்கு வீடு சென்று வாக்குகளைக் கேட்க வேண்டும்.

தி.மு. கழகம் உள்ளூர் பிரச்சினைகளில் எந்த அளவிற்கு கடந்த காலங்களில் செயல்பட்டுள்ளது என்பதையெல்லாம் வாக்காளர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். கடந்தமுறை அந்தப் பொறுப்பிலே இருந்தவர்களுக்கு இந்த முறை வாய்ப்பு கிடைக்காமல் வேறொருவருக்கு வாய்ப்பு சென்றிருக்கலாம். அவர்கள் தங்களுக்கு இந்த முறை வாய்ப்பு கிடைக்கவில்லையே என்று எண்ணிவிடக் கூடாது. வேறு சில இடங்களில் கடந்த முறை வாய்ப்பு பெற்றவர்களுக்கே இந்த முறையும் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கலாம். ஒவ்வொரு முறையும் இவருக்கே வாய்ப்பா என்றும் கோபப்படத் தேவையில்லை.

உடன்பிறப்பே, இந்த முறை உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் நாம் ஆட்சியினரை எதிர்த்துப் போட்டியிடவிருக்கிறோம். ஆட்சியினர் என்றால், கடந்த சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மிருக பலத்தோடு வெற்றி பெற்று, கர்வத்தின் உச்சியில் உள்ள ஒரு கட்சியை எதிர்த்துப் போட்டியிடுகிறோம். நமக்குள்ளே எழுந்த போட்டியின் காரணமாகவும் - நம்மவர்கள் சிலர் நடந்து கொண்ட செயல்பாடுகளின் காரணமாகவும் மிகப்பெரிய தோல்வியை சட்டமன்றத் தேர்தலில் நாம் அடைந்தோம். இந்த அரசியல் நிலையைப் பயன்படுத்திக்கொண்டு, சட்டமன்றத்திலே ஆளுங்கட்சி வரிசையிலே உள்ள முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் நம்மைப் பற்றி இழித்தும் பழித்தும் என்னென்ன பேசுகிறார்கள் என்பதற்கான ஒருசில உதாரணங்களை நான் எழுதியிருக்கிறேன். அவற்றையெல்லாம் எடுத்து ஒரு முறை படித்துப் பார்! சட்டமன்றத்திலே நமது கட்சியின் உறுப்பினர்கள் உள்ளே அமர்ந்து நேர்மையான ஜனநாயகப் பணியாற்றுவதற்குக் கூட அனுமதிக்காமல் ஆளுங்கட்சியினர் என்னென்னவோ பேசி, நம்மை ஏசி, வெளியே அனுப்புவதிலேயே குறியாக இருந்ததையெல்லாம் யோசித்துப்பார்! இந்தச் சூழ்நிலைகளிலிருந்தெல்லாம் நாம் எழுந்து நின்று வழக்கம் போல் மக்கள் பணியாற்றிட வேண்டு மென்றால், நமக்குள்ள அரிய வாய்ப்பாக வந்துள்ள இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை முறையாக நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் நாம் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதற்காகவே ஆளுங்கட்சி எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், நமது கழக முன்னணியினரை யெல்லாம் தேடிப் பிடித்து பொய் வழக்குகளைச் சுமத்தி சிறையிலே தள்ளி வேடிக்கை பார்க்கின்றது. ஒரு வழக்கில் நீதி மன்றம் சென்று ஜாமீன் பெற்றால், அதன்படி சிறையிலிருந்து வெளியே வருவதற்கே விடாமல், எங்கேயாவது தேடி, யாரையாவது பிடித்து அவர்களிடம் ஒரு புகார் மனுவினைப் பெற்று, அது உண்மையா, பொய்யா என்பதைப் பற்றி காவல் துறையினர் மூலமாக விசாரணை நடத்தாமல், புகார் வந்தவுடனேயே கைது, சிறைவாசம் என்று ஆளுங்கட்சியினர் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதை யெல்லாம் நாட்டு மக்களுக்கு அம்பலப்படுத்த வேண்டும். தேர்தலில் முன் நின்று பணியாற்ற, உழைக்க கழகத்தைச் சேர்ந்த முன்னணியினர் சிறையிலே இருந்தால், அதற்கடுத்த மட்டத்திலே உள்ள ஏனைய

கழகத்தினர் ஒவ்வொருவரும் தம்மை வேட்பாளராக எண்ணித் தேர்தல் பணிகளிலே ஈடுபட வேண்டும்.

சட்டமன்றத் தேர்தல்களில் பெரு வெற்றி பெற்று, ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள், அதைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இந்தத் தேர்தலில் அனைத்து விதமான முறைகேட்டிலும் ஈடுபடக் கூடும். ஏராளமாக பணத்தை வாரி இறைத்து, எப்படியாவது வெற்றி பெற முயற்சிப்பார்கள். பொறுப்பேற்றிருக்கின்ற காரணத்தினால், அவர்கள் மூன்று, நான்கு மாதங்களுக்குள்ளாகவே தங்களுடைய தோழமைக் கட்சிகளையே மதிக்காமல் அவமதித்து அலைக்கழிக்கின்ற செயலிலே ஈடுபட்டிருப்பதையெல்லாம் மக்களுக்குச் சொல்ல வேண்டும். சட்டமன்றத் தேர்தலில் பெற்ற பெரு வெற்றியின் காரணமாக இறுமாப்பு கொண்டு, யாரையும் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று சர்வாதிகார பாணியிலே பேசுகின்ற நிலையிலே உள்ளவர்களைத் திருத்துவதற்காவது இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் அவர்களுக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்க நாம் முயற்சிக்க வேண்டும். தப்பித்தவறி அவர்கள் மீண்டும் இந்தத் தேர்தலிலும் வெற்றி பெற்று விடுவார்களேயானால், பின்னர் நாட்டு மக்களைப் படாதபாடுபடுத்துவார்கள். இப்போதே யாரையும் மதிக்க முன் வராதவர்கள், பின்னர் தம்மைத் தட்டிக் கேட்க நாதியில்லை என்று எப்படிப்பட்ட கொடுமைகளையெல்லாம் கட்டவிழ்த்து விடுவார்கள் என்று கற்பனையே செய்ய முடியாது. கழகத்தின் சார்பில் எஞ்சியிருக்கின்ற முன்னணியினர் மீதும் ஏதாவது பொய் வழக்குகளைப் போடுவதற்கும், பொது மக்களைத் தொடர்ந்து வஞ்சிப்பதற்குமான முயற்சிகளையெல்லாம் மேற்கொள்வார்கள்.

மேலும் ஒரு செய்தியும் நமக்குக் கிடைத்துள்ளது. அதாவது நமது கட்சியின் சார்பில் போட்டியிடுபவர்கள், கடந்த முறை போட்டியிட்டிருந்தால் அவர்கள் தங்கள் தேர்தல் செலவு கணக்குகளைக் காட்டியிருக்க வேண்டும் என்றும், அவ்வாறு காட்டாதவர்களின் வேட்பு மனுக்களையெல்லாம் ரத்து செய்வதற்கான முயற்சியில் மாநில தேர்தல் ஆணையத்தின் உதவியோடு ஆளுங்கட்சியினர் ஈடுபட இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. எனவே அதிலும் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

பத்திரிகைகள், ஊடகங்கள் கண்ணை மூடிக் கொண்டு பத்திரிகா தர்மத்தை பறக்க விட்டு விட்டு ஆளுங்கட்சியை ஆதரிக்கின்றன. ஆளுங்கட்சி சார்பில் மாநகராட்சிமன்ற உறுப்பினர் வேட்பாளர்களின் பட்டியலைக் கூட முழுவதுமாக வெளியிடவும், முதல் பக்கத்தில் வெளியிடவும் தயாராக இருக்கின்ற நாளேடுகள், நாம் அறிவிக்கின்ற வேட்பாளர்களின் பெயர்களை ஏனோதானோவென்று ஏழாம் பக்கத்திலும், எட்டாம் பக்கத்திலும் வெளியிட்டு, எப்படியாவது முதலமைச்சரின் நேர் காணலுக்கான நேரமாவது ஒதுக்கப்படாதா என்று கண் விழித்துக் காத்துக் கிடக்கிறார்கள். இவைகளையெல்லாம் மீறித்தான் நாம் நமது பணிகளையாற்றிட வேண்டும். அந்தப் பணிகளையும் உடனடியாக ஒவ்வொரு கிராமந்தோறும் ஓடோடிச் சென்று ஆற்றிட வேண்டும். நாட்டு நிலைமைகளை வாக்காளர்களிடம் திண்ணை தோறும், தெருக்கள் தோறும் விளக்கிட வேண்டும். இருக்கும் நாட்களோ ஒரு சில; ஆற்ற வேண்டிய பணிகளோ மிகப் பல! உதவாதினி ஒரு தாமதம், உடனே புறப்படுவீர்! விரைந்தெழுவீர்; வெற்றிக்கனி பறித்திட!

அன்புள்ள,

மு.க.

24-9-2011

3591. அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்!

உடன்பிறப்பே,

பொய் வழக்கு போட்டு கைது செய்து சிறையிலே பூட்டும் இந்த ஆட்சியினரின் கொடுமைக்கு ஆளாகி கடைசியாக கைது செய்யப்பட்டுள்ள மற்றொரு முன்னாள் அமைச்சர் தம்பி கே.பி.பி. சாமி. மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். மாநிலமெங்கும் அந்தச் சமுதாய மக்களுக்காக அரும்பணியாற்றி வந்தார்.

"உள்ளாட்சித் துறைக்கான தேர்தல்கள் விரைவில் வரவிருக்கிறதே? கே.பி.பி. சாமி இருக்கலாமா? இருந்தால் தேர்தல் பணியாற்றுவாரே? உடனடியாக போடு! அவர் மீது ஒரு கொலை வழக்கு!" என்று அவரையும் அ.தி.மு.க. அரசினர் கைது செய்துவிட்டார்கள்.

அவர் மீனவர் அல்லவா? நில அபகரிப்பு வழக்கிலே அவரை கைது செய்வதற்கு வழியே இல்லை என்று காவல் துறையினர் மறுத்துப் பார்த்தும், கேட்காமல் அவர் மீது கொலை வழக்கே போட்டிருக்கிறார்கள். அதுவும் அவர் எந்தச் சமுதாய மக்களின் நலன்களுக்காகப் பாடுபட்டாரோ, அந்தச் சமுதாயத்தை சேர்ந்த இரண்டு பேரைக் கடத்திச் சென்று கொலை செய்ததாக வழக்கு! அந்த வழக்கிலே ஏற்கனவே அவருடைய தம்பிகள் உட்பட ஒன்பது பேரை காவல் துறையினர் கைது செய்துவிட்டார்கள். இவரது தம்பிகளை காவல் துறை தேடிக் கொண்டிருக்கின்றது என்று தெரிந்தவுடன், அவர்களாகவே 23-8-2011 அன்று காவல் துறையிடம் சரணடைந்திருக்கிறார்கள். அந்த அதிர்ச்சியின் காரணமாக அவர்களை வளர்த்த அண்ணியான கே.பி.பி. சாமியின் மனைவி திடீரென மாரடைப்பு ஏற்பட்டு 25-8-2011 அன்று மறைந்து விட்டார்கள். நல்லவேளை! தம்பிகள் கைதையே தாங்க முடியாமல் சாவின் முகட்டுக்குச் சென்றவர், கணவரின் கைதைக் கேட்டால் என்னவாகி யிருப்பார்? கே.பி.பி. சாமி; தம்பிகளின் கைதை நினைத்து அழுவாரா? அவருடைய மனைவி மறைந்தே

போய்விட்டதை எண்ணி கண்ணீர் விடுவாரா? ஆனால் அவரது கண்ணீர் காய்வதற்குள், ஜெயலலிதாவின் அரசு, அவரையே கைது செய்திருக்கிறது. அவர் மீதான வழக்கு, 2006ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சி அமைந்த சில நாட்களுக்குப் பிறகு சாமியும், அவருடைய தம்பிகளும், வேறு சிலரும் சேர்ந்து இரண்டு மீனவரைக் கடத்திச் சென்று கொன்று விட்டார்களாம்!

சாமியை கைது செய்து அழைத்துச் சென்ற போது, செய்தியாளர்களிடம் அவர், "தி.மு.க. வினரை குறி வைத்து அ.தி.மு.க. அரசு கைது செய்து வருவதை மக்கள் அறிவர். நடை பெறாத ஒரு சம்பவத்தை, நடந்ததாக போலீசார் சித்தரித்து, பொய் வழக்கு போட்டுள்ளனர். என் மீது இரண்டு மூன்று கொலைகள் என போலீஸ் தொந்தரவு செய்த அதிர்ச்சியில், என் மனைவி இறந்துவிட்டார். இரு தம்பிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். இதைச் சட்டப்படி சந்தித்து, நாங்கள் குற்றமற்றவர்கள் என நிரூபிப்போம்" என்று கூறியிருக்கிறார்.

இந்த நடவடிக்கை பற்றி செய்தி வெளியிட்ட நாளேடு ஒன்று, "திருவொற்றியூர் போலீசார் இந்தக் கொலை வழக்கை, சரியாகப் புலன் விசாரணை செய்யாமல், அலட்சியம் காட்டி வந்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதையடுத்து, திருவொற்றியூர் இன்ஸ்பெக்டர் பாஸ்கர், எஸ்.ஐ.க்கள் கற்பகமணி, கமலக் கண்ணன், ராஜராஜன், ஏட்டுக்கள் செந்தில் சரவணன், முருகன் என ஆறு பேர் கூண்டோடு மாற்றப்பட்டுள்ளனர். இன்ஸ்பெக்டர் வடக்கு மண்டலத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். மற்றவர்கள் போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றப்பட்டுள்ளனர். கடந்த 2006ஆம் ஆண்டு இந்த வழக்கை விசாரித்த, இன்ஸ்பெக்டர் உள்ளிட்டோர் மீது நடவடிக்கை இருக்கும் என கூறப்படுகிறது" என்றும் எழுதியிருக்கின்றது.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களுக்கான தேதி அறிவிக்கப்பட்டு - தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கின்ற நேரத்தில் இவ்வாறு காவல் துறையினரை ஒட்டுமொத்தமாக இந்த அரசு எவ்வாறு மாற்றியது? யாரைக் கேட்பது? மாநிலத் தேர்தல் ஆணையம் இருக்கிறதா? நாம் ஜனநாயக நாட்டிலேதான் இருக்கிறோமா? தி.மு.கழக ஆட்சியிலே அமைச்சராக இருந்ததே குற்றமா? ஏன் இந்த அரசு இப்படி வெறியாட்டம் போடுகிறது? இதே போன்றதொரு நிலை 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி

பதவியேற்ற போதும் நிலவியது. ஆம், அப்போது "பாலா! என்ன நடக்கிறது இந்த நாட்டில்?" என்ற தலைப்பில் 21-3-2002 அன்று முரசொலியில் நான் ஓர் உடன்பிறப்புக் கடிதம் எழுதினேன்.

யார் அந்த பாலா? அப்போது நான் எழுதிய கடிதத்தில் சில வரிகள்....

"கோயில் கொடி மரம் போல் நெடிதுயர்ந்த வடிவும், வைரம் பாய்ந்த தேக்கு மரமெனத் தேகமும், "காலா! உன்னைக் காலால் மிதிக்கிறேன் வாடா!" எனப் பாடிய பாரதிக்கு நிகராக நெஞ்சுரம் வாய்ந்த பாலா! எனப் பெருமை கொள்ளும் பாலன் எனும் பெயரும் பூண்டு; உறையிலிருந்து உருவியெடுத்த வாள் உயிர் பெற்று நடப்பது போல் கம்பீரமும் கொண்டு; கழகப்பணி புரிந்த காளையன்றோ நீ!

மூன்று மாத காலமாக உன்னைக் காணவில்லை; இதோ! அதோ! இன்று கண்டுபிடிப்போம்; நாளை கண்டுபிடிப்போம்! என்று காவல்துறை அதிகாரிகள் உறுதியளித்த வண்ணமிருந்தனர்.

மனைவி மக்கள் கதறினர், கண்ணீர் வடித்தனர். மூத்த மகன் செல்வன் மணிமாறன் நீதி மன்றத்தில் முறையிட்டுக் கொண்டான். அதற்குள்ளாகப் பழி; நீ உலவிய பாசறை மீதே போடப்பட்டது! யாரோ தெருவில் போவோர் வருவோர், போட்ட பழியல்ல! தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சித் தலைவியே கட்டிவிட்ட பொய்ப் பழி; இப்படியும் எண்ணத் தோன்றுகிறதென்று!

அதனால்தான் போலும்! நீ மறைந்தாய் என்றோர் சேதி இப்போது வந்துள்ளதெனினும், ஏழு நாட்களுக்கு முன்பே; அவை நடுவே 'மறைந்த பாலன்' என்ற வார்த்தை தெரிந்தோ தெரியாமலோ வெளிப்பட்டு; பின்னர் உள்ளுக்குள் போய்விட்டது!

பாலா! நாங்கள் இப்போது என்ன செய்வது?

தீயிட்டுக் கருக்கிச் சாம்பலாக்கி விட்டனர் உன்னை; என்ற தகவலை நம்பி அழுது சோர்வதா? இல்லை; உன் மகன் மணி மாறன் அடித்துச் சொல்வது போல் நீ இருக்கிறாய் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு ஆறுதல் பெற்று, தேடுதலைத் தொடர்வதா?

பாலா! நீ இன்னும் இருக்கின்றாய் என்ற நினைப்புடனே; உன் மனைவி; ஆம், அந்த சகோதரியின் மாங்கல்யம் அவர்

கழுத்திலே தொங்கிக் கொண்டிருக்கிறது! நீ இல்லை; போய் விட்டாய்; உன் உயிரைப் போக்கிவிட்டனர் உன்மத்தர்கள் என்று உறுதிபட எண்ணிடவும் என் இதயத்துக்கு வலிவு இல்லை! வருவாய் என் முன்னால்; வந்து வழக்கம் போல் குனிந்த தலை நிமிராமல் என்னிடம் பேசுவாய் என்று நம்பிக் கொண்டு நானுமிருக்கிறேன். சண்டாளர்கள் உன் மேனியைக் கொளுத்திச் சாம்பலாக்கி விட்டார்கள் என்றால்; அவர்களுக்கும், அவர்களை ஏவி விட்டவர்களுக்கும் அந்தச் சாம்பல் தூளே சகாரா பாலைவனப் புயலாக விளம்பி சமாதி எழுப்பட்டும். இந்தச் சாபத்திற்கெல்லாம் வேலையில்லாமல் சடுதியில் வரமாட்டாயா? வந்து எங்களைக் காண மாட்டாயா?"

என்று நான் அப்போது எழுதியிருந்தேன்.

அதிகாலை 5.30 மணியளவில் வீட்டிலிருந்து நடைபயணம் சென்ற கழகச் செயற்குழு உறுப்பினர் எம்.கே. பாலன், சிலரால் கடத்திச் செல்லப்பட்டு பிறகு அவர் கொல்லப்பட்டாரா என்ன ஆனார் என்றே தெரியாத அளவிற்கு அவரது மகனே நீதிமன்றம் சென்று வழக்கு தொடுத்தார். 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது எம்.கே. பாலன் போன்ற கழகக்காளைகள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் அடிக்கப்பட்டார்கள். 2011ஆம் ஆண்டில், அ.தி.மு.க. ஆட்சி வந்ததிலிருந்து 2006ஆம் ஆண்டு இரண்டு மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்டு கொல்லப்பட்டார்கள் என்ற வழக்கில் கழகத்தினரை, முன்னாள் அமைச்சரை கொலைக்குற்றம் சாட்டி கைது செய்திருக்கிறார்கள்.

ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் காணாமல் அடிக்கப்பட்ட அண்ணாநகர் ஜெயக்குமார் எங்கே? ஈரோடு மாவட்டத்தில் காவல் துறை அதிகாரியாகப் பணியாற்றியவரும், மாநிலங்களவை உறுப்பினர் கே.பி. ராமலிங்கத்தின் சகோதரருமான ஜோதி கிருஷ்ணன் ஆகியோரெல்லாம் என்ன ஆனார்கள்? அந்த வழக்குகள் என்னவாயிற்று? காணாமல் போன இரண்டு மீனவர்களை கொலை செய்ததாகக் கூறி கழகத்தினர் மீது நடவடிக்கை எடுப்பதில் முனைப்பு காட்டுகின்ற அ.தி.மு.க. அரசு - குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் என்றால் மட்டும் முனைப்பு காட்ட மறுப்பது ஏன்?

நேற்றையதினம் கூட சென்னை உயர்நீதி மன்றத்தில் - அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர் மீது கடந்த ஏப்ரல் மாதம் நில அபகரிப்பு புகார் ஒன்று காவல்துறைக்கு கொடுக்கப்பட்டதை பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்ததாகவும், ஆனால் போலீசார் அந்த உத்தரவை அமல்படுத்தவில்லை என்றும் தொடுத்த வழக்கில் - நீதிபதி திரு. சி.பி. செல்வம் அவர்கள், கடந்த ஐந்து மாதங்களாக போலீசார் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? நில அபகரிப்பு புகாரில் மற்றவர்கள் மீது மட்டும் போலீசார் வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைக்கிறார்கள். அ.தி.மு.க. பிரமுகர் மீது நடவடிக்கை எடுக்காதது ஏன்? வரும் திங்கள்கிழமை போலீசார் பதில் அளிக்க இறுதி கெடு விதிக்கிறேன். ஏற்கனவேயே மூத்த போலீஸ் அதிகாரிகளை நியமித்து இந்த வழக்கை விசாரிக்க போலீசாருக்கு கெடு விதித்தேன். அப்போதும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கண்டித்திருக்கிறார். எனவே சட்டம் எல்லோருக்கும் பொதுவானது. கழகத்தினர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மாத்திரம் அது பயன்படுத்தக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் தான் நடந்ததே; அப்போது இதைப் போல பொய் வழக்குகள் யார் மீதாவது திணிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்டா? ஆட்சிகள் வரலாம், போகலாம். ஆனால் பொறுப்பு வரும்போது அடக்கம் வேண்டும். அதனால்தான் அய்யன் வள்ளுவரும் "அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்" என்றார். ஆட்சியாளர்கள் இனியாவது வள்ளுவரின் இந்தக் குறள் வழி நடப்பார்கள் என்று நம்புவோமாக! வள்ளுவரின் உருவப்படமே பாடப் புத்தகங்களில் இருக்கக் கூடாது என்று நினைப்பவர்களா, அவர் எழுதிய குறளை நினைக்கப் போகிறார்கள்?

அன்புள்ள,

மு.க.

27-9-2011



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022